215215
to
215226

31

அசம்புதாமம்

4     ல
24     1

5-1-1939

1939

168

3/3/05.

Acc. nos.

168 pages

215269
215270
215271
215272
215273
215274
215275
215276

215265
215266
215267
215268

Bounded as one vol.

25/9/05

215215

30 JAN 1939
MADRAS
215265

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

| 4<br>24 | கும்பகோணம் கலி5039 பகுதான்ய-ஹு மார்கழி-மீ 21உ 1939-ஹு ஜனவரி-மீ 5உ | வா<br>1 |
|---|---|---|

உ
ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

வெளிவந்து விட்டது ! உயர்ந்த புஸ்தகம் !!

## ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

மூலம் நாகரத்திலும், தமிழிலும்,

ஸ்ரீமான் G. V. கணேசய்யர், B. A., B. L.,

எழுதிய தமிழுரையுடனும், விசேஷ குறிப்புகளுடனும் கூடியது

இதில் அடங்கியுள்ள விஷயங்கள்:—1. ஸ்ரீவித்யை. 2. ஸ்ரீபாஸ்கரராயரும் அவருடைய மஹிமையும். 3. ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷாச்லோகங்கள். 4. பெயர் குறிக்கப்பட்ட க்ரந்தங்கள். 5. பிழை திருத்தம். 6. ஸஹஸ்ரநாம பாஷ்யம் (பூர்வபாகம்). 7. ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம். 8. ஸஹஸ்ரநாமம் உத்தரபாகம் (பலச்ருதி). 9. அகராதி வரிசை. 10. ஸஹஸ்ரநாமம்—நாகரத்தில் மூலம்.

டிம்மி $\frac{1}{8}$ அளவில் சுமார் 1000 பக்கங்கள் கொண்டது
முழு காலிகோ பயிண்டு

ஸ்ரீஅம்பாள், ஸ்ரீபாஸ்கரராயர்,
ஸ்ரீ சக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ 4.] [ தபால் V.P.P. செலவு 0—14—0 தனி

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தந ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

# தேசிகன் தேன்மொழிகள்.

## மதப் பிரசாரம்.

### 3. லௌகிகர் கடமை.

அ:— இதற்காவது கொஞ்சம் பிரசாரம் செய்ய வேண்டியது அவசியமில்லையா?

ம:—அப்படித்தோன்றினல், செய்யுங்கள்,

அ:—நான் பிரசாரம் செய்வதில் என்ன பிரயோஜனம்? தாங்கள் பிரவிருத்தித்தால் கார்யம் ஸித்தியாகும்.

ம:—அப்படியல்ல மாற்றிச்சொல்கிறீர்கள். வைதிகர்கள் இது மாதிரி பிரவிருத்தியாரம்பித்தால், இவர்கள் வைதிக விருத்தியை வைத்துப்பிழைப்பார்கள். அவர்களுக்கு காலக்ஷேபம் நடக்க வேண்டியதற்காக நம்மை மதப்பற்று உள்ளவர்களாக்க உத்தேசிக்கிறார்கள்: ஆகையால் நமக்கு மதப்பற்று இருக்கவேண்டும் என்று அவர்கள் நினைப்பது தங்கள் ஸ்வய நலத்தைக்கருதியே என்று நீங்களே சொல்லவாரம்பித்து, அவர்களுடைய வார்த்தைக்கு மதிப்புக்கொடுக்காமல் உதாசினம்செய்து விடுவீர்கள். அதே கார்யத்தை நான் செய்ய வாரம்பித்தால், "இவர் ஆசார்யஸ்தானம் வஹிக்கிறபடியால் நம்மை மதப்பற்று உள்ளவர்களாக இருக்க சொல்லவேண்டியது அவருடைய கடமையைச்சேர்ந்தது. தன் ஸ்தான மரியாதைக்காக, பேருக்குச் சொல்கிறார்" என்று நினைத்து மறந்துவிடுகிறீர்கள். இப்படிக்கன்னியில், உங்களைப்போல் ஒரு சுத்த லௌகிகப் பிரபு உங்களிடம் வந்து தர்மானுஷ்டானம் செய்யுங்கள் என்று சொன்னால் "நமக்கு மதப்பற்று வேண்டுமென்று சொல்கிற இவருக்கு, நான் மதப்பற்றுள்ளவனாகயிருப்பதினால் ஒருவித லாபத்தையும் காணவில்லை. அவருக்கு லௌகிகமாக எவ்விதக் குறையுமில்லை. நான் மதப்பற்றுடனிருந்தால் அவருக்குப் பிழைப்பு என்பது இல்லை. நல்ல அந்தஸ்திலிருக்கிறார். நல்ல நவீன வாசிப்பும் பெற்றிருக்கிறார். தீக்ஷ்ணமான புத்தியும் வாய்ந்தவர். என்னை மதப்பற்றுள்ளவனாக செய்வதில், அவருக்கு எவ்வித ஸ்வய நல உத்தேசமும் இருக்க இடமில்லை. அனாவசியமாக வார்த்தை செலவழிக்கக்கூடியவருமில்லை. தன் நலம் கருதாது இவர் செய்யும் உபதேசத்தில் ஏதோ தத்வம் இருக்கவேண்டும்" என்று மனதில் பட்டு, காது கொடுத்துக் கேட்டு, அதன்படி நடக்கவும் ஸித்தமாவீர்கள். நடக்கவேண்டிய கிரமத்தை யோசித்தால், பிரசாரம் அவசியமென்றிருந்தால் அது உபயோகப்பட வேண்டுமென்றிருந்தால், உங்களைப்போலுள்ளவர்கள் தான் பிரவிருத்தி செய்வது உசிதமாகும்.

அ:—தாங்கள் சொல்வதின் தாத்பர்யம் தெரிந்துகொண்டேன். இருந்தாலும், நாங்கள் செய்யும் பிரவிருத்திக்குக் கூட, தங்கள் ஆதரவு இருப்பதாகத் தெரிந்தால், ஜனங்களுக்கு மதிப்பு ஜாஸ்தியிருக்கும் என்றே தோன்றுகிறது.

ம.—ஸாக்ஷாத்தாக ஈசுவரனே தன் ஆக்ஞைகளை அழிவற்ற வேத ரூபமாக வெளியிட்டிருந்தும், அவர் சொல்லியபடி கேட்க ஜனங்கள் தயாரில்லை. ஜனங்களின் ஸரியான நடத்தையை உத்தேசித்தே பிராசீனமாயுள்ள மஹரிஷிகள் ஸ்மிருதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும்கூட, அவைகளையும் ஜனங்கள் மீறியே நடக்கிறார்கள். இப்படியிருக்க, என் பெயரையும் சேர்த்துச் சொன்னதற்காக மாத்திரம் ஜனங்கள் அவ்வாக்ஞைகளின்படி நடப்பார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

அ:—ஈசுவரனும் மஹரிஷிகளும் தற்காலத்தில் அப்பிரத்தியக்ஷர்களே. ஜனங்களின் விச்வாஸத்திற்கு ஆஸ்பதமாயிருக்கிற தாங்கள் உருவெடுத்து முன் இருக்கிறீர்கள். ஆகையால், புஸ்தகங்களில் காணப்படும் வைதிக தர்மங்களைவிட, தாங்கள் சொல்லும் வார்த்தைக்கே அதிக கவனம் கொடுப்பார்கள்.

ம:— அப்படியே யிருக்கட்டும். இனிமேல் நீங்கள் எங்குபோனாலும் ஜனங்களிடத்தில் "ஈச்வராக்ஞா ரூபமான வேதங்கள் உங்களுக்கு இவ்விதம் கட்டளை யிடுகின்றன. அதே கட்டளைகளை மஹரிஷிகளின் ஸ்மிருதிகளும் ஆக்ஞை செய்கின்றன.' அதை சரியாய் நடத்தி அதன் பலனை யடையுங்கள். அப்படியே செய்யும்படி ஆசார்யரும் சொல்கிறார்கள்" என்று சொல்லுங்கள். சுருதி ஸ்மிருதிகளின் பிராமாண்யத்தை நானும் அனுவாதம் செய்கிறேன் என்று சொல்லாத குறையினால் ஜனங்கள் அதர்மத்தில் கிடக்க வேண்டாம். சுருதி ஸ்மிருதிகளை நான் தீவிரமாக அனுவதிக்கிறேன், அவைகளில் சொல்லியபடி நடக்க வேண்டியதே கடமை என்று நானும் சொல்கிறேன், என்று தாராளமாய் சொல்லுங்கள் என் ஆக்ஞைக்கு ஏதோ விசேஷ மகிமையிருப்பதாக கருதுகிறீர்களே!

அ:— இது போதுமா? தர்மப் பிரசாரத்திற்குத் தாங்களே முன் நின்று நடத்தினால் தான் நன்றாக இருக்கும்.

ம:—நான் முன்னமேயே சொல்லியிருக்கிறேன். இந்தக் கார்யம் அதர்மம் என்று தெரிந்திருந்தும் கூட, அந்த அதர்மக் கார்யத்தைச் செய்து வரும் ஜனங்களிடம் என்ன பிரசாரம், என்ன பலிக்கப் போகிறது? அந்தப்பிரசாரத்திற்கும் பலன் ஏற்படலாமென்று வைத்துக்கொண்டாலும், நல்ல அந்தஸ்து வஹிக்கிற உங்களைப்போலுள்ள லௌகிகர்கள் தான் முன் வரவேண்டும். மதமே இவர்களின் விருத்திக்கு ஸாதனம் என்று நினைக்கப்படுகிற எங்களால்பிரயோஜனமில்லை. மேலும், இது விஷயமாக விசேஷப் பொறுப்பை என்னிடம் ஏற்ற நினைக்கிறீர்களே, என்ன காரண மென்று தெரியவில்லை. இதற்கு முன் அதர்மப்பிரசாரத்தில் நான் ஒன்றும் பிரவிருத்திசெய்ததாகவில்லையே? அப்படி ஏதேனும் செய்திருந்தால், என்னால் உண்டான கெடுதலை சீர்திருத்த வேண்டிய பொறுப்பு எனக்கு ஏற்படலாம். வாஸ்தவத்தில், உங்களைப்போலுள்ளவர்கள் தான் ஜனங்களுக்கு லௌகிக ஸம்பத்தில் மோஹத்தை யுண்டு பண்ணி ஸன்மார்க்கத்திலிருந்து நழுவச் செய்திருக்கிறீர்கள். தர்மத்தின் பெருமையை இப்பொழுது அறிந்துள்ள நீங்கள்தான் மறுபடியும் அவர்களை ஸரியான மார்க்கத்தில் கொண்டு போக வேண்டும். ஆகையால் விசேஷப் பொறுப்பு உங்களுக்குத் தான் இருக்கிறது. ஸாமான்ய ஜனங்கள் தேசத்தில் சிரேஷ்டர்களாக உங்களைத் தான் எண்ணுகிறார்கள். கீதையில் பகவான் சொல்லியபடி சிரேஷ்டன் எது எதை அனுஷ்டிப்பானோ அதையே மற்றவர்களும் கைக் கொள்வார்கள்,

அ:-மிகவும் வாஸ்தவம். பகவான் சொன்ன அர்த்தத்தில் நான் சிரேஷ்டன் என்று சொல்லிக்கொள்ள எனக்கு எவ்வித யோக்கியதையுமில்லையென்பதை நன்கு உணர்வேன். இருந்தாலும், பால்யத்தில் புண்ட்ரதாரணம் ஸந்த்யா வந்தனம் முதலான கார்யங்களில் நான் அவ்வளவு கவனமில்லாத காலத்தில், என் கீழ் வேலை செய்துவந்த குமஸ்தாக்களும் இவ்விஷயங்களில் கொஞ்சம் கொஞ்சமாக சிரத்தைக் குறைவைக் காட்டி வந்தார்கள். இப்பொழுது வெளி வேஷத்திலாவது நான் கொஞ்சம் வைதிகன் மாதிரித் தோன்றும் காலத்தில், தங்கள் வீட்டில் எப்படியிருந்தபோதிலும் என் முன்வரும் போதாவது பிரகாசமாய் நெற்றிக்கு இட்டுக்கொண்டு வருகிறார்கள். என்னைப்போல் நடந்தால், என்னைத் திருப்தி செய்யலாமென்பது அவர்கள் எண்ணம்போலும்.

ம:—அவர்கள் உத்தேசம் எப்படிவேண்டுமானாலும் இருக்கட்டும் நீங்கள் மதசிரத்தையுடன் இருந்தால், கிரஹத்திலோ உத்தியோக முறையிலோ உங்களைப் பெரியவர் என்று நினைப்பவர் யாவரும் தாங்களும் மதசிரத்தையுடன் இருக்க ஆரம்பிப்பார்கள்.

அ:—வாஸ்தவம்.

ம:—மதசிரத்தையுடன் நீங்கள் இருந்து வந்தால், நீங்கள் உங்கள் சிரேயஸ்ஸை ஸம்பாதித்துக் கொள்கிறீர்கள் என்று மாத்திரமில்லாமல், மற்றவர்களுக்கு ஒரு நிதர்சனமாயிருந்துகொண்டு, அவர்களும் சிரேயஸ்ஸை யடைய தாங்களே காரணமாகிறீர்கள்.

அ:—வாஸ்தவம்.

ம:—இவ்விதமாக நீங்கள் மதசிரத்தையுடனிருப்பதில் இரண்டுவிதப் பிரயோஜனம் கிடைக்கிறது, சிரத்தையுட னிருப்பதால் ஸாக்ஷாத்தாக உங்களுக்கு அனுகூலம், மற்றவர்களை சிரத்தையுடன் இருக்கச் செய்தால் ஏற்படும் புண்யம், ஆக இரண்டும் கிடைக்கிறது.

அ:—வாஸ்தவம்.

ம:—மாற்றி கவனிப்போம். இதே மாதிரி, நீங்கள் மத சிரத்தையற்றிருந்தால் உங்களுக்கு இரண்டுவித நஷ்டம். மத சிரத்தையற்றிருப்பதால், ஸாக்ஷாத்தாக உங்களுக்கு ஏற்படுகிற தோஷம், உங்களை நிதர்சனமாக வைத்துக்கொண்டு இதரர்கள் மதப்பற்றற்று இருக்கும்படிச் செய்த பாபம், ஆக இரண்டும் ஏற்படும்.

அ:—நியாயம் தானே.

ம:—ஸாமான்ய ஜனங்கள் தாங்கள் செய்கிற கர்மாக்களின் பலன்களை மாத்திரம் அடைவார்கள். இதரர்களுடைய நடத்தையை மாறுபடுத்தக்கூடிய பெரிய அந்தஸ்திலுள்ளவர்களுக்கு இரட்டிப்புப் பொறுப்பும் தங்களுக்கு மாத்திரம் ஜவாப்தாரி என்றிராமல், மற்றவர்களுக்கும் பொறுப்பாளியாகிறார்கள். தர்ம மார்க்கத்தில் இருந்தால் எப்படிப் புண்யம் ஜாஸ்தியோ, அப்படியே அதர்மவழியிலிருந்தால் அவர்களுக்கும் பாபமும் ஜாஸ்தியே. இருவிதம் பொறுப்பையும் உங்களைப்போலுள்ளவர்கள் நன்கு உணர்ந்தார்களே யானால், தர்ம விஷயமான அஞ்ஞானத்திலிருந்து அஞ்சி, அந்தக்ஷணம் முதற்கொண்டே ஞான ஸம்பாதனத்திற்காகப் பிரயத்தினம்செய்து தங்கள் நடத்தையினாலும் உபதேசத்தினாலும் மற்றவர்களை நன்னடத்தையில் நிறுத்த உதவுவார்கள். அப்புறம் தர்மப் பிரசாரத்தைப்பற்றி தனித்து விசாரப்பட அவசியமே யிராது. இவ்விதமாக, நம் தேசத்தின் க்ஷேமமே வாஸ்தவத்தில் உங்களைப் போலுள்ளவர்கள் கையில் தான் இருக்கிறது. இதை நன்கு அறியுங்கள். நன்கு உணர்ந்தீர்களே யானால், அப்புறம் கவலைக்குக் காரணமே கிடையாது.

முகபஞ்சசதியின் முதல் பாகம்.
" ஆர்யா சதகம் "
Mr. G. V. கணேசய்யர், B.A., B.L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு விலை அணா 6.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்;
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.



## தர்ம[illegible]

### நெல்லூரில், ம-ம-ஸ்ரீ அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள் பிரஸங்கம்.

நெல்லூரில் ஸம்ஸ்கிருத காலேஜில் 27—12—38 செவ்வாய் கிழமையன்று கல்கத்தா யூனிவர்ஸிடி ஸம்ஸ்கிருத புரொபஸரான மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள் "தர்மாக்ஷணம்"என்ற விஷயத்தைப் பற்றி ஸம்ஸ்கிருதத்தில் ஓர் சிறந்த பிரஸங்கம் செய்தார். ஏராளமாக படிப்பாளிகள் அச்சமயம் அங்கு விஜயம் செய்திருந்தனர்.

பிரம்மஸ்ரீ சாஸ்திரியார் பேசியதாவது:—

பரலோக நம்பிக்கை.

தர்மத்தைப் பற்றி எனக்கு "ச்ருதம்" இருக்கிறதே யல்லது "மதம்" இல்லை. ப்ரவாஹ அநாதியாய் பரம்பரையாக நம் ஸதாசாரியர்களால் சொல்லப்பட்டு நம்மால் கேட்கப்பட்டவைகளே "ச்ருத" மெனப்படும். நம் மனதிற்கு தோன்றியதே மதம் எனப்படும். தர்ம விஷயத்தில் மதத்தைவிட ச்ருதமே உயர்ந்தது. பிராமாணிகமானது. ரிஷிகளுக்கு "மதம்" என்பது உண்டு. அந்த மதத்தைச் சொல்லவே நமக்கு அதிகாரம் உண்டு. பரலோகத்தை யாரும் பார்த்ததில்லை. பாபத்தால் பரலோக பயம் உண்டென்று நமக்கு 'ச்ருதம்' (கேள்வி) இருக்கிறது. பரலோகம் உண்டா இல்லையா என்பது நிர்ணயிக்க முடியாதது. ஆனால் இந்த ஸந்தேஹ நிலைமையில் ஆஸ்திகர்களுக்கு ஒரு வழியிருக்கிறது. பரலோகம் இருப்பதாக நம்பி நாம் தர்மத்தைச் செய்து வருவோம். உண்மையில் பரலோகமில்லையானால், நாம் அநுஷ்டித்த தர்மத்தால் நமக்கு எவ்வித தோஷமும் ஏற்பட்டுவிடாது. உண்மையில் பரலோக மிருந்துவிட்டால், அதை நம்பாமல் பாபம் செய்தவனுக்கு தண்டனை நிச்சயம் உண்டு. பரலோகம் இல்லையென்று நாஸ்திகன் எவனும் உறுதி கூற முடியுமா?

பயங்கரமான காட்டின் வழியாகப் போக வேண்டியவன் தன்கையில் ஆயுதம் கொண்டு போவதை உதாஹரணமாகக் கொள்ளவேணும். துஷ்ட மிருகம் இருந்தால் ஆயுதம் உபயோகப்படுகிறது. இல்லையானால் ஆயுதம் கொண்டுபோனதால் இவனுக்கு ஏற்பட்ட நஷ்டமொன்றுமில்லை. ஆயுதமில்லாமல் போய், துஷ்ட மிருகமும் இருந்துவிட்டால் இவன் அபாயத்திற்கு உள்பட வேண்டியவனே யல்லவா?

ரிஷிகள் வஞ்சகர்களல்ல.

அதர்மத்தை தர்மம் என்று பெயரளவில் மாத்திரம் மாற்றலாமே யல்லது, அதன் அர்த்தத்தை மாற்ற முடியாது. பலனையும் மற்ற முடியாது. நமது ரிஷிகள் வஞ்சகர்களல்ல. பூர்வபக்ஷம் செய்கிறவர்கள் ரிஷிகளை "தூர்த்தர்கள்" என்று பேசியிருக்கிறார்கள். ரிஷிகள் வஞ்சித்தார்களென்பது அஸம்பாவிதம். தாங்கள் உபதேசித்த தர்மங்களை தாங்களே அவர்கள் அநுஷ்டித்துக் காட்டியிருக்கிறார்கள். கிருச்ரம், உபவாஸம் முதலிய கடுமையான தபஸ்களைச் செய்து கிலேசங்களை அனுபவித்திருக்கிறார்கள். ஸ்வலாபத்தைச் சிறிதும் அவர்கள் கருதியவர்களல்ல.

அர்த்த சாஸ்திரத்தைவிட தர்மசாஸ்திரமே பெரிது.

நமது ரிஷிகள் யுக்தி மூலமான பற்பல நாஸ்திக ஆக்ஷேபங்கள் யாவற்றையும் பூர்வபக்ஷம் செய்துகொண்டு ஸமாதானம் சொல்லியிருக்கிறார்கள். முன்காலத்தில் வெளிவராத ஆக்ஷேபங்களைவிடப் புதிதாக ஒன்று கூட நவீன சீர்திருத்தவாதிகளால் சொல்ல முடியவில்லை. தர்மத்தை அநுஷ்டித்தால் சிரேயஸ் அடையலாம். அர்த்த சாஸ்திரமென்பது ஸ்தூலசரீர ரக்ஷணத்திற்கானவைகளையே போதிக்கிறது. ஸூக்ஷ்ம சரீரத்திற்கான "சிரேயஸ்ஸு"க்கு ஸாதனமானது தர்மமேயாகும். அர்த்த சாஸ்திரத்திற்கும் தர்ம சாஸ்திரத்திற்கும் விரோதமிருக்குமானால் தர்மசாஸ்திரத்தைத்தான் அனுஷ்டிக்க வேணும். அர்த்த சாஸ்திரமூலமான காரணங்களைக்கொண்டு தர்ம சாஸ்திரத்தை மாற்ற அர்ஹதையில்லை. மாற்றினால் ஏற்படக்கூடிய விபரீத பலன் களுக்கு 'பரிஷ்காரிகள்' உத்திரவாதியாக முன்வரமாட்டார்கள். அதர்மத்தை தர்மமென்று சொல்லி தார்மிகர்களை நிர்பந்திப்பது ந்யாயமல்ல. அதற்கு தார்மிகர்கள் இணங்கமுடியாது. பலாத்காரத்தால் சரீரத்தைத்தான் துன்பப் படுத்தலாம். ஜயிலில் போடலாம். மனஸ்ஸை ஜெயிலில் போடமுடியாது. நமது மனதை தர்மத்தில் உறுதியாய் வைப்பதை யாரும் தடுக்கமுடியாது.

ஜாதி வ்யவஸ்தை எங்கு இல்லை?

வேதத்தில் நம்பிக்கை வைப்பதும், ஜாதி வ்யவஸ்தையை ஒப்புக்கொள்ளுதலும் நமது மதத்தின் ஆணிவேரான தத்வங்களாகும். மற்ற மதஸ்தர்களும் ஜாதி வ்யவஸ்தையை ஒருவாறு அநுஷ்டித்துக் கொண்டு தான் வருகிறார்கள். கிறிஸ்தவனுக்குப் பிறந்தவனைத்தான் கிறிஸ்தவன் என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். அதே மாதிரி மஹம்மதிய ஸமூஹத்தில் பிறப்பவன் தான் மஹம்மதியனாகிறான். பிறப்பினால் மஹம்மதியன் என்று அழைக்கப்படுகிறவனே பின்னால் வயது வந்த பிறகு அந்த மதத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளுகிறான். ஆகையால் எந்த மத ஸமூஹமாயினும் ஸரி ஆரம்பத்தில் பிறப்பை ஆதாரமாகக்கொண்டே, தான் தன் ஸமூஹத்தில் உள்பட்டவர் யார், வெளிப்பட்டவர்யார் என்று தீர்மானிக்கிறது. கிறிஸ்தவர்களும் மஹம்மதியர்களும், தங்கள் ஜாதியை ஒரு ஜாதியாகவும், மற்ற மனிதர்களெல்லோரையும் வேறு ஜாதியாகவும் கருதுகிறார்கள். ஆகையால் அவர்களும் பிறப்பு ஜாதியை ஒப்புக்கொண்டவர்களே.

ஆகையால் நான்கு ஜாதிகளை ஒப்புக்கொள்ளும் ஹிந்துக்களை அவர்கள் தோஷம் சொல்ல நியாயமில்லை. ஆனால் ஒரு மதத்தில் பிறந்தவன் பின்னால் தனது மதத்தை மாற்றிக் கொள்ளலாமென்று சில மதஸ்தர்கள் சொல்லுகிறார்கள். ஹிந்துக்கள் அதை ஒப்புவில்லை. ஹிந்துவாகப் பிறந்தவன் ஹிந்து ஆவான். க்ஷத்திரியனாய்ப் பிறந்தவன் தான் க்ஷத்திரியன். ஆகையால் மற்றவர்களுடைய மத ஸமூஹங்களில் பிரவேசித்து மத மாற்றம் செய்யும் கார்யத்தை ஹிந்துக்கள் அநுஷ்டிக்கவில்லை

ஸ்வதர்மமேபெரிது

எவனாயிருந்தாலும் ஸ்வ தர்மத்தை அநுஷ்டிப்பதாலேயே சிரேயஸ்ஸை அடைய முடியும். யார் யாருக்கு எவ்வளவு தூரம் அதை அநுஷ்டிக்கமுடியுமென்பதற்கு அவனவனே ஜவாப்தாரி, காலம் மாறிவிட்டது. அதர்மங்களை ஆபத் தர்மங்களாக அநுஷ்டிக்கலாம் என்று அவ்யவஸ்தைக்காரர்கள் சொல்லுகிறார்கள். ஒருவனுக்கு ஆபத்து வந்திருப்பதாக மற்றொருவன் சொல்லக்கூடாது. எவ்வளவு கஷ்டமான தசையிலும் ஸ்வதர்மத்தை அநுஷ்டிக்கும் தீர புருஷர்கள் இருக்க முடியாதென்றாவது, இல்லையென்றாவது சொல்லமுடியாது. எங்கேயாவது யாராவது ஒரு வராவது இருக்கலாம். ஒரு சிலர் இருக்கலாம். அவர்கள் மூலமாக தர்மம் நிலை நிற்பதைத் தடுக்க ஒருவருக்கும் அதிகாரமில்லை. தர்மத்தை நாம் அனுஷ்டிக்கவில்லை, ஆகையால் ஒருவரும் அநுஷ்டிக்கமுடியாது, என்று நினைப்பது தவறு. ஸ்வதர்மத்தை அநுஷ்டிக்க முடியாமல் பிறர்களை நிர்ப்பந்திப்பதும் பலாத்காரம் செய்வதும் மிகவும் அநீதியான கார்யம்.

ஆள்கூட்டத்தாலோ, மெஜாரிடி அபிப்பிராயத்தைக் கொண்டோ, தர்மவரம்புகளை அழிப்பது ஸரியல்ல. வோட்டுக்கள் எடுத்து தர்மவ்யவஸ்தை பண்ணுவதை வைதிக மதஸ்தர்கள் ஒப்புக்கொள்ளமுடியாது. எந்த மதஸ்தர்களும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். தர்மத்தை ரக்ஷிப்பதற்கே ராஜ்யத்தின் அதிகாரமும், பலமும் உபயோகப் படவேணும் எவ்விதக் கஷ்டங்கள் வந்தாலும் தர்மத்தை உறுதியாய் கடைபிடித்து நிற்கும்படி ஸர்வலோக பாலகனான பகவான் உறுதியும் தைர்யமும் கொடுத்து அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்தித்து எனது உபன்யாஸத்தை முடித்துக்கொள்ளுகிறேன்."

## தென்னாற்காடு ஸநாதன தர்ம மஹாநாடு

### சிதம்பரம்.

தென்னாற்காடு ஜில்லா ஸநாதன தர்ம மஹாநாட்டின் முதலாவது கூட்டமானது சென்ற 1, 2 தேதி ஞாயிறு திங்கள்கிழமைகளில் சிதம்பரம் ஸ்ரீ நடராஜ ஸன்னிதி ராஜ ஸபா மண்டபத்தில் நன்கு நடைபெற்று.

சேலம் பிரபல அட்வகேட் ஸ்ரீமான் ஒய். கே. சேஷய்யாவர்கள் தலைமை வகித்தார்கள் ஏராளமாக ஆஸ்திக ஹிந்துக்கள் கூடியிருந்தனர் அநேக ஸ்ரீ மடங்களின் பிரதிநிதிகளும் கோவில் டிரஸ்டிகளும் வந்திருந்தனர். ஸ்ரீ காஞ்சிகாமகோடி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள், மஹாநாடு நன்கு நடக்கும்படி அநுக்ரஹித்து பிரஸாதம் அனுப்பி யிருந்ததுடன் ஸ்ரீமடத்தின் பிரதிநிதியாக, பிரம்மஸ்ரீ திருவாதி விச்வநாத சாஸ்திரிகளையும் அனுப்பியிருந்தார்கள். ஸ்ரீ ஜகத்குரு சிருங்கேரி ஆவணிமடம் பீடாதிகளும் மாயவரத்திலிருந்து பிரசாதம் அநுப்பியிருந்ததுடன் மடத்தின் பிரதிநிதியாக, பிரம்மஸ்ரீகளான கே கிருஷ்ண சாஸ்திரிகள் எஸ் ஸுப்பிரமண்ய சாஸ்திரிகள் இவர்களையும் அனுப்பியிருந்தார்கள். மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ தண்டபாணி தீக்ஷிதர் பிரம்மஸ்ரீ வித்வான் அக்னிஹோத்ரம் தாதாசாரியர், கும்பகோணம். சிவகாம ஸுந்தர தீக்ஷிதர் முதலான அநேக வித்வான்களும் கோவில் தீக்ஷிதர்களும் ஸபையில் விஜயம் செய்திருந்தனர்.

ஆரம்பத்தில், வேதம், தேவாரம் முதலியவைகளிலிருந்து மங்களாசரணம் நடந்தபின்பு உபசாரணைக்கமிட்டிக் கார்யதர்சியும் பிராம்மண ஸபை தலைவருமான ஸ்ரீமான் பாலஸுப்பிரமண்யஜடாவல்லபர் பிரதிநிதிகளை வரவேற்று உபசாரம் கூறினர். பிறகு மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ தண்டபாணி தீக்ஷிதர் அவர்கள் மஹாநாட்டை ஆரம்பித்து வைத்து மிக கம்பீரமாக ஓர் உபந்யாஸம் செய்தார்.

அதன் பிறகு கடலூர் பிரபல வக்கீலும் ஸநாதன தலைவருமான ஸ்ரீமான் டி. ஈ. சடகோபாசாரியார் அவர்கள் தமது வரவேற்பு பிரஸங்கத்தைச் செய்தார். கடலூர் அட்வகேட் ஸ்ரீமான் ஸுந்தர ராஜய்யரால் உபசாரம் கூறப்பட்டு அத்துடன் முதல் நாள் நடவடிக்கை முடிந்தன. மறுதினம் மஹாநாடு கூடி விஷயாலோசனைக் கூட்டத்தில் தயாரிக்கப்பட்ட முக்யமான பலதீர்மானங்களைநிறைவேற்றியது. விவரம் பிறகு: நமது நிருபர்.

(தலைவரின் பிரஸங்கம் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்யஹு மார்கழிமீ 21உ

## ஆர்யதர்மத்தின் 24—வது ஆண்டு.

நமது பத்திரிகையின் 24-வது ஆண்டு இன்று ஆரம்பமாவதை மிக்க மகிழ்ச்சியுடன் நமது நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். கால, தேச நிலைமையிலும், எதிர் கக்ஷியின் வியாபகத்திலும், நம்மவர்களின் அச்ரத்தை நிலையிலும் இவ்வளவு நீண்ட காலம் இப்பத்திரிகை தர்மத்திற்கு ஊழியம் செய்துவருவதைப்பற்றிப் பெருமை பேசுவதில் தவறு இல்லை. நவீன நாகரிகப் பெருங்காற்றினால் அவசியமாக இழுத்துக் கொண்டு போகப்படும் ஜனங்களின் தற்கால ருசிகளை பூர்த்திசெய்து வைக்க முடியாத நிலையிலுள்ள நமது பத்திரிகையானது தனக்கு ஆதரவு கொடுப்போர் அதிகரிக்க வேண்டுமென்று கோருவது இயற்கையானதே.

ஸநாதன தர்ம தத்வங்களை வெளியிட பிரசாரம் செய்யவேண்டியது அவச்யமா? அதற்குப் பத்திரிகையொன்றை நடத்தவேண்டியதும் அவச்யமா? நமது பிராசீன காலத்தில் இந்த முறை கையாளப்பட்டதா? சாஸ்திரங்கள் இந்த முறையை அங்கீகரிக்கின்றனவா? இத்யாதி பல பிரச்னங்கள் நமக்குத் தோன்றுவதும் இயற்கை. நமது முன்னோர்கள் தர்ம தத்வங்களை ஆசாரத்தினாலும், உபதேசத்தினாலும் அமைதியாக ஆர்ப்பாடமின்றிப் பரப்பிவந்ததாகவே தெரிகிறது. மதாசாரியர்களும், மற்றப் பெரியோர்களும் தங்களுடைய உறுதியான ஆசாரணையினாலேயே ஜனங்களுக்கு தர்மரஹஸ்யங்களை உணர்த்திவந்திருக்கிறார்கள். ஜனங்களும் பெரியோர்களுடைய ஆசாரங்களைப் பார்த்து அறிந்து ஆசரித்ததாகவே தெரிகிறது.

இந்த வழியைத் தவிர, உபதேச வழியும் ஒன்று இருந்தது. சிரத்தையுடனும், சாஸ்திரீய நியமங்களுடனும் ஆசார்யனை அண்டி அபேக்ஷித்தவர்களுக்கு உபதேச மூலமாக தர்மரஹஸ்யங்களைப் போதித்து வந்திருக்கிறார்கள். ஆதலால், முன்காலத்தில், ஆசாரம் உபதேசம், என்ற இரண்டு வழியாலேயே வைதிக தர்மம் பரப்பட்டு வந்திருப்பதாகத் தெரிவதால் இப்போது நாம் பத்திரிகை மூலமோ, சாதாரணக் கூட்டங்களில் உபந்யாஸங்கள் மூலமாகவோ பிரசாரம் செய்வதென்பது பிறதேசத்தவர்களின் முறையை அநுசரித்ததேயல்லது நமதல்லவென்று ஏற்படும். பிறரைப்போல் நாமும் பிரசாரம் தொடங்கினால், அதில் அவர்கள் அனுஸரிக்கும் பற்பல உபாயங்களையும் கொள்கைகளையும், தந்திரங்களையும் நாமும் கையாண்டாலன்றி பத்திரிகை பிரசார பலனை அடைய முடியாதென்றும் சொல்லக்கூடும்.

ஆயினும் நாம் இதில் ஓர் உண்மையை மறந்துவிடக்கூடாது. முன்னோர்கள் ஆசாரம் உபதேசம்என்ற இரண்டையும் தர்மரக்ஷணத்திற்குப் பிரதான உபாயங்களாக அனுஷ்டித்தார்களென்றாலும், அத்துடன்மட்டும் அவர்கள் திருப்தியடையவில்லை. ஜனங்களின் அந்தந்தக்காலத்திய புத்திப் போக்கையும், எதிரிகளின் பிரசார முறைகளையும் அநுஸரித்து நமது பெரியோர்களும் பலவித பிரசார முறைகளைக் கையாண்டிருக்கிறார்கள். இதற்கு நமது பெரியோர்களின் சரித்திரங்களில் வேண்டிய வளவு ஆதாரம் கிடைக்கக் கூடியது. ஸ்ரீ சங்கரர் ஸ்ரீராமனுஜர் போன்ற மஹான்களும், பிற்காலத்தில் அவதரித்த பெரியோர்களும் அவைதிக மதங்களை அகற்றக் கையாண்ட நியாயமான வழிகளுக்கு அளவுண்டா? இவற்றை ஒவ்வொன்றாக நாம் இங்கு விவரிக்கவேண்டியதில்லை. ஆகையால் பிரசார வழியிலும் தர்மஸ்தாபனம் செய்யும் வழக்கம் நமக்குப் புதிதென்று நினைக்க இடமில்லை.

தற்காலம் நமக்கு எதிரிகளாகத் தோன்றியுள்ளவர்கள் எந்தெந்த பிரசார வழியில் நமது ஜனங்களை மயக்கித் தப்புவழிகளில் இறக்கிவிட முயற்சிக்கிறார்களோ, அதற்கு எதிராக முயற்சிகள்செய்து நாமும் ஜனங்களைத் திருப்பவேண்டியது அவச்யமே. ஆனால் எதிரிகள் அனுஸரிக்கும் சிற்சில மட்டமான உபாயங்களையும் கொள்கைகளையும் நாம் கையாள முடியாது. அவை அர்ஹமல்லவைகளென்று நம்மால் தள்ளப்பட்டவை. திரவ்ய பலமோ, ஆள்கூட்டமோ அவர்களைப்போல் நமக்கில்லை.

அவர்களுடைய முறைகளை அநுஸரிக்கலாமென்று தோன்றினாலும் நமது அடிப்படையான கொள்கைகளுக்கு விருத்தமாக நாம் போகமுடியாது. நமது பிரசாரத்தினால் காக்கப்படவேண்டிய தார்மிக ஸமூஹம் இருக்கிறது. அது சிதறிக்கிடக்கிறது. அதைர்யமடைந்து நிற்கிறது. ஆதரிப்போர் இருக்கிறார்களாவென்று ஏங்கிக் கிடக்கிறது. அது சிறிய ஸமூஹமாயிருக்கலாம் அதற்கு தைர்யமூட்டி ஒன்றுபடுத்தி உறுதியுடன் ஸ்வதர்மத்தில் நிற்கும்படி செய்யவேண்டியதே நமது பிரசாரத்தின் முக்ய நோக்கமாகும். இதற்கு இப் பத்திரிகைபோன்ற ஸாதனம் இன்றியமையாததே. இந்த ஸங்கேதத்திற்கு உட்பட்ட யாவரும் இப்பத்திரிகையின் உபயோகத்தை அறிந்து ஆதரிக்க வேண்டியது அவர்களுடைய முதற்கடமையாயிருக்கிறது.

ஆகையால் இப் புதிய வருஷத்தில் இப் பத்திரிகைக்கு அபிமானிகள் அதிகரித்தும், ஏற்கனவே அபிமானித்தவர்கள் தொடர்ந்து அபிமானம் காட்டியும் நம் ஆர்யதர்மத்தை மேலோங்கச் செய்யவேண்டுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

## குறிப்புகள்.

### விவாஹரத்து மசோதாவுக்கு ஆதரவு உண்டா?

இந்தியா சட்டஸபையில் டாக்டர் தேஷ்முக என்பவரால் கொண்டு வரப்பட்டுள்ள விவாஹரத்து மசோதா விஷயமாக கவர்ன்மெண்டார் அபிப்பிராயம் சேகரித்திருப்பதில் 300 பேர்கள் வரையில் அந்த மசோதாவை ஆதரித்திருப்பதாயும் இரண்டொருவரே விவாஹரத்தை ஆக்ஷேபித்திருப்பதாயும் ரிபோர்ட் வெளியாகியிருக்கிறது. இதைக் கொண்டு தேசத்திலே பெரும் பாலோரான ஹிந்துக்கள் விவாஹரத்தை விரும்புவதாக முடிவுகட்டிவிடுவது விவேகமாகாது. உண்மையை நன்கு கவனித்தால் இந்த 300 பேர்களும் பெரும்பாலும் ஆசாரத்திருத்தக்காரர்களாகவே யிருப்பார்கள், இவர்கள் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லியிருப்பதில் அதிசயமிருக்க நியாயமில்லை. கோடிக்கணக்கான ஜனங்கள் இந்த விஷம மசோதாவை விரும்பவில்லையென்பதே உறுதியான உண்மை. குடும்பங்களில் வாழும் லக்ஷக்கணக்கான குலஸ்திரீகளுக்கு இந்த மசோதா வந்திருக்கும் ஸமாசாரமே இன்னும் தெரியாதென்பது மறுக்கமுடியாது. மேற்கண்ட 300பேர்கள் தானா 3 0 கோடி ஜனங்களுக்கும் பிரதிநிதிகள்? ஒருக்காலுமில்லை, மசோதா மீது அபிப்பிராயம் வாங்குவதென்பது இப்போது வெறும் நாடகமாகவே இருப்பதைப் பலரும் அறிவர், இது ஒரு சடங்காக நினைக்கப்படுகிறதேயல்லது, உண்மையில் மசோதாவால் பாதிக்கப்படுகிறவர்களுடைய அபிப்பிராயம் வாஸ்தவத்தில் வாங்கப்படுவதில்லை, மசோதாவைக்கொண்டு வந்தவரே, அபிப்பிராயம் கேட்கப்படவேண்டியவர்களின் ஜாப்தாவையும் தனக்கு ஸாதகமாயிருக்கும்படி தயாரித்து அந்த இலாகாதாரிடம் கொடுத்துவிடுவது வழக்கம். அந்த மாதிரியே டாக்டர் தேஷ்முக் என்பவரும் செய்திருக்கக்கூடும், தென்னிந்தியாவில் எவ்வளவோ மதஸ்தாபனங்களும், மதாசாரியர்களும் பண்டிதர்களும், ஆஸ்திகர்களும் இருக்கின்றனர். இவர்களில் ஒருவரிடமாவது இந்த மசோதாவைப் பற்றி ஸர்க்கார் அபிப்பிராயம் கேட்டதாகத் தெரியவில்லை, மேலும் நமது குடும்பங்களில் அமைதியாக வாழும் குலஸ்திரீகளிடமும் அபிப்பிராயம் வாங்கப்படவில்லையென்பது நிச்சயம். இப்படியிருக்கையில் மேற்படி 300 பேர் அபிப்பிராயம் சிறிதும் பிரயோஜனப்படத்தக்கதில்லை. குற்றவாளியே ஜட்ஜாக இருக்கலாமா? கவர்ன்மெண்டார் நிஷ்பக்ஷபாதமாக நடக்கவிரும்பினால் இந்த ஆசாரத் திருத்த வாதிகளாகிய 300 பேர்களின் விபரீத அபிப்பிராயத்தைக்கொண்டு மட்டும் ஒரு முடிவு செய்துவிடுவது பெரியவிபரீதமாகும். ஸரியான வழியில் அபிப்பிராயம் சேர்க்கப்பட்டால் இந்த மசோதாவிற்கு எதிராக 300 லக்ஷத்திற்குமேல் அபிப்பிராயம் கிடைப்பது நிச்சயம். ஆதலால் இந்தியா கவர்ன்மெண்டார் இந்த மசோதாவை மறுபடியும் ஸர்குலர் செய்து, பாதிக்கப்படுவோரின் அபிப்பிராயத்தை சேகரிக்கட்டும்.

### ஈ. வி. ரா. புதிய போக்கு!

சென்னையில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கக்ஷிக் கூட்டத்தில், ஜயிலிலிருந்தபடியே தலைமை வகித்த ஈ. வி. ராமஸாமிநாயகரின் பேச்சைப் பற்றி நாம் பொருள்படுத்தவேண்டிய அவச்யமில்லைதான். ஆயினும் அவர் வார்த்தையில் கூட ஏதோ சிறிது நல்ல அம்சமிருப்பது போல் தோன்றுவதை நம்மவர்கள் கவனிக்க வேண்டாமா? ஸமதர்மக் கொள்கையின்படி இந்தியாவில் ஜாதிமத வித்யாஸங்களை அடியோடு அழிக்கவேண்டுமென்பது அவரது தீவ்ரக் கொள்கையல்லவா? இன்றைக்கே இந்த சீர்திருத்தத்தைச் செய்துவிடவேண்டுமென்பதும் அவருடைய விருப்பமாயிருந்து வருகிறது. ஆயினும் மேற்படிக் கூட்டத்தில் அவர் தனது போக்குக்கு மாறாகப் புதிய வழியில் பேசியிருப்பது கவனிக்கத்தக்கதாயிருக்கிறது.

"ஒருவித ஆராய்ச்சி உணர்ச்சி ஏற்படும் வரையில் மத விஷயத்தில் ஒருவருக்கொருவர் பிரவேசிக்கவோ, பழக்க வழக்கங்களில் தலையிடவோ ஒருவருக்கும் உரிமையில்லை"

என்று அவர் பேசியதாகப் பத்திரிகைகளில் காணப்படுகிறது. ஜனங்கள் தாங்களாகவே மனமாறுதல் செய்துகொள்ளாதவரையில், அவர்களுடைய மதவிஷயத்திலும், பழக்க வழக்க விஷயத்திலும் பிரவேசித்துச் சட்டம் செய்ய உரிமை கிடையாதென்று இவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இதுதான் தத்காலம் ஸநாதனிகள் விரும்பும் பாதுகாப்பு. இதை இவரும் ஸ்பஷ்டமாக ஒப்புக்கொள்ளுவதிலிருந்து தார்மிகர் கக்ஷியிலுள்ள நியாயம் நன்கு புலப்படக்கூடியது.

பெரிய மத தர்ம விரோதியாக பதிக்கப்பட்ட இவருக்குக்கூட மேற்கண்ட சாந்தமான நியாயமான எண்ணம் உதித்ததன் காரணம் தற்போது எதுவாயிருப்பினும் இருக்கட்டும். அதைப்பற்றி நாம் விசாரிக்கவேண்டியதில்லை. விதண்டாவாதியாயிருப்பவனுக்கும் ஒரு ஸமயத்தில் நல்ல புத்தி ஏற்படுவது ஸஹஜமல்லவா?

ஈ. வி. ரா. செய்துவரும் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு மஹம்மதியர்களின் ஒத்தாசை வேண்டியிருக்கிறது. அது கிடைத்தும் வருகிறது. அந்தப் புதிய நண்பர்களின் அபிப்பிராயப்படி இவர் ஆடவேண்டாமா? மஹம்மதியர்கள் மதகணக்குமுள்ளவர்கள். அவர்களுடைய மதவிஷயத்திலோ, பழக்க வழக்கங்களிலோ பிரவேசித்தால் அனர்த்தம் வருமென்பது ஈ. வி. க்குத் தெரியும். ஆதலால் தமது ஸ. ம-க் கொள்கையைக் கூடவிட்டுக் கொடுத்து ஒரு ஆஸ்திகனைப்போல் பேசிவிட்டார். மஹம்மதியர்கள் இவரை விட்டுப் பிரிந்த பிறகுகூட இந்த அபிப்பிராயம் இவரிடம் நிலைத்திருக்குமானால் விசேஷம்தான். காங்கிரஸ் ஸர்க்காரை எதிர்ப்பதற்காக இந்தப் பேச்சு வெளிவந்திருந்தாலும்பிரயோஜனமில்லை. எப்படியும் மேற்கண்ட கொள்கையை உறுதியாகக்கொண்டு இவர் நமது மாகாண நிர்வாஹியாக வந்தால்கூட இவருக்கு ஆஸ்திகர்களின் ஆதரவு கிடைக்கும்.



### ஸமஷ்டியும், ஹிந்துக்களும்.

கல்கத்தாவில் கனம் வைஸ்ராய் ஸமஷ்டியைப்பற்றி பலமாக ஆதரித்துப் பேசியபின் இந்தியாவில் அந்த பிரஸ்தாபம் அதிகரித்துவிட்டது காங்கிரஸ்காரர்கள் தங்களது எதிர்ப்பை இன்னும் வலுவாகக் காட்ட முன் வந்திருக்கிறார்கள். ராஜீய உலகிலிருந்து இது காறும் மறைந்திருந்தவர்களைக் கூட தங்களுக்கு இவ்விஷயத்தில் உதவி செய்ய காங்கிரஸ் வாதிகள் அழைத்து வந்திருக்கிறார்கள். ஸமஷ்டியைக் கவிழ்த்துவிடப் போவதாகவும், சட்டமறுப்புச் செய்தாவது அதை எதிர்க்கப் போவதாயும் காங்கிரஸ் தாப்பில் பலமாகப் பேசப் படுகிறது.

கிறிஸ்த்மஸ் வாரத்தில் தேசத்தில் நடைபெற்ற பற்பல ராஜீயக் கூட்டங்களிலும் ஸமஷ்டியைப்பற்றித் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. ஹிந்து மஹா ஸபை ஒன்றைத் தவிர அனேகமாக எல்லா மஹாநாடுகளும் ஸமஷ்டி திட்டத்தை எதிர்த்தே தீர்மானம் செய்துள்ளன. ஹிந்து மஹா ஸபைமட்டும் ஹிந்துஸ்தானத்தின் க்ஷேமத்தின் பொருட்டு ஸமஷ்டி திட்டத்தை ஏற்று நடத்தவேண்டிய தவச்யமெனத் தீர்மானித்தது மிதவாதிகளும் ஸமஷ்டி திட்டத்தை ஆக்ஷேபித்தனராயினும் அதை பஹிஷ்கரிக்கக் கூடாதென்றும், ஏற்று நடத்திப் பார்க்கவேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

காசியில் கூடிய நமது அகிலஇந்திய வர்ணாச்ரம மஹாஸபையும் ஸமஷ்டியை எதிர்ப்பதாக ஒரு தீர்மானம் செய்துள்ளதென்று அஸோஸியேடட் நிருபர் வெகு சிரத்தையுடன் அறிவித்திருக்கிறார், காசி ஸபையைப் பற்றி ஒரு எழுத்துக்கூட விவரம் அறிவிக்காத அந்த நிருபர் இந்த ஒரு விஷயத்தை மட்டும் மறக்காமல் அலக்ஷ்யம் செய்யாமல் பத்திரிகைகளுக்கு அறிவித்தார். பத்திரிகைகளும் அதை விடாமல் பிரசுரித்தன. வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தார் எந்தக் காரணத்தின் மீது ஸமஷ்டியை எதிர்த்தார்களென்பது தெரியவில்லை. காங்கிரஸ் சொன்னதற்காக, அதை அநுஸரித்து வர்ணாச்ரமிகளும் பேசியிருப்பார்களென்று நினைக்க முடியவில்லை. காங்கிரஸும், முஸ்லீம்களும் எந்த நோக்கத்துடன் ஸமஷ்டியை எதிர்க்கிறார்களென்பது கவனிக்கவேண்டிய விஷயம். ஸமஷ்டியில் ஹிந்துக்கள் எப்படியும் மெஜாரிடியாக இருப்பார்கள். இதுமுஸ்லீம்களுக்குப் பிடிக்காது. அவர்களுக்கு திருப்தியுண்டாகும்படி ஸமஷ்டியில் பிரதிநிதித்வம் கொடுத்துவிட்டால் இன்றே அதை அவர்கள் நடத்திவைக்கத் தயார் என்பதில் ஸந்தேஹமில்லை. மஹம்மதியர்களின் தயவில் காலந்தள்ள விரும்பும் காங்கிரஸ் வாதிகளும் வேறு நோக்கத்துடன் ஸமஷ்டியை எதிர்ப்பதாக பாவனை செய்தபோதிலும் முஸ்லீம் மனம் கோணமலிருக்கவேண்டியும் இப்படிச் செய்வதாக நினைக்கவேண்டியிருக்கிறது.

எப்படியும் தேசம் தற்காலமிருக்கும் நிலைமையில் ஹிந்து மஹாஸபையின் தீர்மானம் ஹிந்து ஸமூஹத்திற்கு நன்மை பயக்காதாவென்பதை விவேகிகள் சிந்திக்கவேண்டியதவச்யம்.

### திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

#### அஹோபிலமடம் நாற்பதாவது பட்டத்து அழகிய சிங்கர் திருநாட் கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் 18–8–38உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை ஸ்ரீ அஹோபில மடத்து நாற்பதாவது பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கர் திருநாட் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் சங்கத் தலைவர் ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள் "ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்ய பாதுகா ஸேவகத்வம்" என்ற விஷயம்பற்றி அரியதோர் உபந்யாஸம் செய்தார். அனைவரும் கேட்டு அகமகிழ்ந்தனர். ப. ரெ. தி.

### சென்னையில் ஸமஷ்டி எதிர்ப்புக் கூட்டம்.

#### கனம். ஸி. ஆர். மீது கல்வீச்சு?

ஸமஷ்டி திட்டத்தை எதிர்ப்பதற்காக சென்னை கடற்கரையில் ஓர் கூட்டம் நடத்தப்பட்டது. ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்காரும், கனம் ராஜகோபாலசாரியரும் ஸமஷ்டியை எதிர்த்துப் பேசினார்கள். இருவரும் தாங்கள் பரஸ்பரம் நண்பர்களென்று சொல்லிக்கொண்டார்கள். மேற்படி கூட்டத்தில் ஓர் துஷ்டன் கனம் ஸி, ஆர். மீது கல் எறிய முயற்சித்தான் உடனே அவன் போலீஸாரால் பிடிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டான்.

### சென்னை மந்திரியின் மரணம்

#### கனம் ராமன் மேனன் காலமானார்.

சென்னை மந்திரி ஸபையில் கோர்ட், சிறை இலாகா மந்திரியாக இருந்து வந்த கனம் ராமன் மேனன் 2 மாதமாக அஸௌகர்யமாயிருந்து செவ்வாய் கிழமை இரவு காலமானார்.

### சந்தாதார்களுக்கு முக்ய அறிவிப்பு.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் 23வது வருஷம் பூர்த்தியாகி 24வது வருஷம் இன்று ஆரம்பமானதால் நமது சந்தாதார்கள் புதிய வருஷத்திற்கான சந்தாத்துகையை கூடிய சீக்கிரத்தில் நமக்கு அனுப்பி, எப்போதும்போல் பத்திரிகையை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.

### காந்திஜீ குருவாயூருக்கு வருவாரா?

மலையாள ஆலயப் பிரவேச மசோதாவுக்கு பொதுஜன ஆதரவு சேகரிக்கவேண்டியதற்காக ஸ்ரீமான் காந்தியை குருவாயூருக்கு வரும்படி சென்னை மந்திரி கார்யதரிசியாகிய ஸ்ரீமான் பாபிநீடு என்பவர் வார்தாவுக்கு நேரில்போய் காந்திஜியிடம் வேண்டிக்கொண்டாராம். ரெபரண்டம் விஷயமாக காந்திஜியுடன் அவர் ஆலோசனை செய்ததாயும் தெரிகிறது.

### மதமாற்றம் வேண்டாம்.

#### எம். ஸி. ராஜா எச்சரிக்கை.

ஸ்ரீமான் எம். ஸி. ராஜா சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில், தீண்டாதார் மஹம்மதிய, கிறிஸ்தவாதி மதங்களில் பிரவேசிப்பது கண்டிக்கத்தக்கதென்றும், அங்கு போனாலும் தீண்டாதார் ஒதுக்கியே வைக்கப்படுவதாயும், ஹிந்துமதத்திலிருந்து கொண்டே உரிமைகளுக்குப் போராட வேண்டுமென்றும் எச்சரித்தார்.

### ஓம் மண்டலியை ஒழிக்கத்தீர்மானம்.

ஸிந்து மாகாணம் ஹைதராபாத்தில் குடும்பஸ்திரீகளைக் கெடுக்க ஏற்பட்டிருக்கும் மேற்படி ஸபையை ஒழித்துவிட வேண்டுமென்று அத்தேச ஸ்திரீகள் பலர் கங்கணம் கட்டிக்கொண்டுவிட்டார்களாம். ஸமீபத்தில் ஒரு கௌரவம் வாய்ந்த குடும்பத்தின் பெண்ணை இந்த மண்டலி இழுத்துக்கொண்டு போய் மறைத்துவைத்திருக்கிறதாம்.

பாணி வீரீஸ் 26.

சங்கராந்தி பூஜை கோ பூஜை நல்ல காகிதத்தில் ஸம்ஸ்க்ருத உச்சரிப்புக்கிணங்க தமிழில் உள்ளது. ஒவ்வொரு கிருஹத்திலும் இருக்க வேண்டியது.

விலை அணு 2.

ஸ்ரீமத் ஆதித்ய ஹ்ருதயம்.
பதவுரை—பொழிப்புரையுடன்

விலை அணு 2.

வேண்டுவோர் கிரயத்திற்கும் தபால் செலவிற்கும் ஸ்டாம்பு அனுப்பவும்.

கிடைக்குமிடம்:—
ஜெனரல் டிரேடிங் கம்பெனி
565 பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

### ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

Nellore.

# தென்னாற்காடு ஜில்லா

# ஸநாதனதர்ம மஹாநாடு.

வரவேற்புத்தலைவர்
ஸ்ரீமான் டி. ஈ. சடகோபாசாரியாரின் பிரஸங்கம்.

ஆர்யஸஹோதரர்களே!

அருமை வாய்ந்த ஆர்யதர்மத்துக்கு இடையூறுவாராது காக்கவேண்டுமென்கிற உத்தமாபிப்ராயத்துடன் இங்கு விஜயம் செய்திருக்கும் ஆஸ்திக சிரோமணிகளனைவருக்கும் ஸத்கார ஸபையோரின் பிரதிநிதியாக நான் மனப்பூர்வமாய் வந்தனமளித்து நல்வரவு கூறுகிறேன். ஸ்தலத்தின் மஹிமை, ஸமயத்தின் மேன்மை, விஷயத்தின் பெருமை, முதலிய பல காரணங்களால் இந்த ஸதஸ்ஸானது மற்றெல்லாவற்றையும்விட சிறப்பு வாய்ந்ததென்பதுக்கு ஸம்சயமேயில்லை. இச்சிறப்புக் கநுகுணமாக நம் காரியங்கள் விக்னமின்றி நடைபெற்று நம்முடைய மாசற்ற மனோரதங்கள் பூர்த்தியாகும்படி அநுக்ரஹிக்க வேண்டுமென்று பகவானைப் பலமுறை வணங்கி பிரார்த்திக்கிறேன்.

தர்மத்துக்கிடையூறென்று முன் ப்ரஸ்தாவித்தேன். அதைப்பற்றிச் சற்று விவரிக்கவேண்டிய தவசியமாகிறது. தர்மமென்பது ஆர்யர்களின் இருப்பிடமாகிய பாரத வர்ஷமென்று வழங்கும் நமது தேசத்துக்கு அஸாதாரணமாயமைந்துள்ள விஷயங்களில் முதன்மையானது. இது காரணமாகவே நம் தேசத்துக்கு தர்மபூமியென்ற விலக்ஷணமான நாமதேய மேற்பட்டிருக்கிறது. இதை நாம் நன்கறிந்துகொண்டால் இக்காலத்தில் ஏற்பட்டுள்ள பலவிதக் குளறுபாடுகளின் தீமை நமக்குச் செம்மையாய் விளங்கும். நம்பெரியோர்கள் புருஷார்த்தங்களை அதாவது மனுஷ்யன் பிரயத்னப்பட்டு நாடும் விஷயங்களை நான்கு வகையாக வகுத்தார்கள். அதாவது தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று. தமிழில் அறம், பொருள், இன்பம், வீடு என்று கூறப்படும். இவற்றுள் அறம் எனப்படும் தர்மமானது மற்றை மூன்றுக்கும் ஸாதனமாயிருப்பதாலும் அவைகளை உத்தேசித்து மனுஷ்யன் முயற்சி செய்வதற்கு வேண்டிய யோக்யதையை அவனுக்கு ஏற்படுத்தித் தருவதாலும் முற்படக் குறிக்கப்பட்டிருக்கிறது. இத்தர்மமானது ஒரு கர்ம விசேஷம்; அதாவது மனுஷ்யன் புத்தி பூர்வமாய் செய்யும் கார்யங்களில் ஒரு வகுப்பில் சேர்ந்தது. நாம் செய்யும் கார்யங்கள் எல்லாம் தர்மம், என்றும் அதர்மமென்றும் அநுபயம் அதாவது இவ்விரண்டிலும் சேராததென்றும் மூன்று வகையாக வகுக்கப்பட்டிருக்கின்றன. தர்மா தர்மங்கள் புண்ய பாபமென்றும் கூறப்படுகின்றன. தர்மமென்கிற பதத்துக்கு தரிப்பது அல்லது தரிக்கச் செய்வது என்று பொருள். ஆகையால் நம்முடைய இருப்புக்கு அநுகூலமாய் நின்று நமக்கு சாச்வதமான நன்மையைத் தரும் கார்யங்கள் தர்மமென்று வகுக்கப்பட்டிருக்கின்றன. புண்யமென்கிற சப்தத்துக்கு பரிசுத்தமாக்குவது அல்லது நன்மையைத் தருவது என்று பொருள். இதனால் நமக்கு பரிசுத்தியையுண்டாக்கி நமது ஸ்வபாவ நிலைக் கநுகூலமாய் நின்று ஸர்வவிதத்திலும் நம் மேன்மைக் குறுப்பாகும் கர்மங்களெல்லாம் தர்மம் அல்லது புண்யமென்று கூறப்படுகின்றன. இதற்கு எதிர்த் தட்டில் சேர்ந்த கார்யங்கள் அதாவது நமக்கு அசுத்தியை உண்டாக்கி நம் ஸ்வபாவ நிலைமைக்கு ஒவ்வாமல் நம்மைக் கீழே தள்ளும்படியான கார்யங்கள் அதர்மம் அல்லது பாபம் என்று சொல்லப்படுகின்றன. நமது கர்மங்களில் பெரும்பான்மை இவ்விருவகுப்பிலும் அடங்கி நிற்கின்றன. இவைகளில் சேராத சிற்சில கார்யங்கள் அதாவது, களைத்தால் படுப்பது, பசித்தால் உண்பது, நோய் வந்தால் மருந்தருந்துவது, முதலிய வ்யாபாரங்கள் தேக அவச்யம் முதலிய காரணங்களை யொட்டி நடைபெறுவதால் அவைகள் மேற்கூறிய மூன்றுவது வகுப்பாகிய அநுபய வர்க்கத்தில் சேர்ந்தன. ஆனால் இக்கார்யங்களுக்கும் அநுஷ்டான விஷயமாக நியமங்கள் அதாவது எந்த காலத்தில் என்னவிதமாகச் செய்ய வேணுமென்று விதிகள் ஏற்பட்டிருந்தால் அப்படிப்பட்ட நியமங்களை அநுஸரித்து அவை அநுஷ்டிக்கப்பட்டால் அவை தர்ம வகுப்பில் சேரும். அவைகளைத் தவறிச் செய்தால் அதர்ம வகையில் சேரும். ஆகவே நன்கு பராமர்சித்தால் நாம் செய்யும் கார்யங்கள் எல்லாம் ஸாக்ஷாத்தாகவாவது பரம்பரையாகவாவது தர்மாதர்ம வகைகளில் ஒன்றைச் சார்ந்தே நிற்கும். இவற்றுள் தனக்கும் பிறர்க்கும் அநுகூலமான கார்யம் தர்மமென்றும் ப்ரதிகூலமானது அதர்மமென்றும் சுருங்கச் சொல்லலாம்.

ஆனால் இவ்விதமாய்க் கர்மங்களை தர்மமென்றும், அதர்மமென்றும் எந்த ஆதாரத்தைக்கொண்டு பிரிவினை செய்வதென்றால் இது விஷயத்தில் நம் பெரியோர்கள் முற்பட வேதத்தையும் பிறகு தர்ம சாஸ்த்ரங்களையும் பிறகு சான்றோரொழுக்கத்தையும் கொண்டு தர்மா தர்மங்களின் ஸ்வரூபம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று வழிகாட்டியிருக்கிறார்கள். இவ்விஷயத்தை நம் வைதிக மதத்தைச் சேர்ந்த ஸகலரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில் அவர்கள் வைதிக ஸித்தாந்தத்துக்கு வெளிப்பட்டவர்களென்றே கொள்ளவேண்டியதென்பதற்கு யாதொரு ஸம்சயமுமில்லை. வேத வரம்புக்குள்ளகப்பட்ட மதங்கள் மற்ற விஷயங்களில் ஏதாவது அபிப்ராய வேறுபாடுள்ளவைகளா யிருந்தபோதிலும் தர்மாநுஷ்டானத்தைக் குறித்தாவது அதற்குரிய ப்ரமாணங்களைக் குறித்தாவது அவைகளுள் வேறுபாடு எப்போதுமிருந்ததில்லை. இவ் வைதிக மதங்களுக்குள் பரஸ்பரம் உள்ள பேதங்களையும் உட்புகுந்து சரிவர தடஸ்த புத்தியுடன் பராமர்சித்தால் அவைகள் பெரும்பான்மை அவரவர்களுடைய ருசிபேதத்தால் ஏற்பட்டவைகளே தவிர தத்வ விஷயத்திலாவது தர்ம விஷயத்திலாவது பெயர் வேறுபாடு தவிரப் பொருள் வேறுபாடில்லையென்பது நன்கு விளங்கும். லோகத்தில் மனுஷ்யர்களுக்குள் பலவாறாக அவரவர்களுடைய ஜன்மாந்தர ஸம்ஸ்காரமடியாக ருசி பேதம் ஏற்பட்டிருப்பதுபற்றியே அதற்கநுகுணமாக அவரவர்களுக்கேற்பட்டிருக்கும் அதிகாரத்துக்குத் தக்கபடி அவர்கள் தன்னைப் பூஜித்து உஜ்ஜீவிக்க வேணுமென்று ஸங்கல்பங்கொண்ட பரமகிருபாளுவான பகவான் பற்பல ரூபங்களெடுத்து அவரவர் மனதுக் கிசைந்தபடி தோன்றி அவர்களால் ஆராதிக்கப்படுகிறார்.

ஆனால் இவ்விதம் பரமாத்வைப் பூஜிக்கும் மார்க்கங்களில் பேதமிருந்தபோதிலும் அவைகளெல்லாம் வேதத்தைச் சார்ந்தனவென்பதும் அவைகளின் முடிவான நோக்கம் பகவானை அடைவதே என்பதும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம். இதைக் காளிதாஸ மஹாகவி "பகவானை அடைவதற்காக அநுஷ்டிக்கப்படும் மார்க்கங்கள் அவ்வோ அதிகாரிக்குத் தக்கவாறு வேறுப்பட்டிருந்தும் கங்கையின் கிளைகள் பலவாறாகப் பிரிந்தும் கடைசியில் ஸமுத்ரத்தில் சென்று கலந்து வருவதுபோல் பரமாத்மாவினிடமே போய்ச் சேருகின்றன"வென்று வெகு அழகாய்க் கூறினார். இந்த உபமானத்தால் வைதிக மதங்களெல்லாம் பலவாறாக இருந்தும் கங்கையின் கிளைகள் கங்காநதியிலிருந்து உண்டாவதுபோல் வேதத்தையே தங்களிக்கு உத்பத்தி ஸ்தானமாகவுடையவையென்றும் அவைகளெல்லாம் முடிவில் ஸமுத்ரம்போல் அகண்டமாயும் ஸர்வவ்யாபியாயும் மாறுதலற்ற ஸ்வரூபமுடையவராய் எக்காலமும் நிலைபெற்று நிற்பவருமான பகவானிடமே கொண்டுவருகின்றனவென்பதும் தெளிவாய் விளங்குகிறது, கீதாசார்யனும் இவ்வபிப்ராயத்தை, "எவனெவன் எனது எந்தெந்த ரூபத்தைப் பூஜிக்க விரும்புகிறானோ அவனவனுக்கு அந்தந்த ரூபியாய் நான் உத்தேச ஸித்தியைத் தருகிறேன்" என்று மொழிந்தார். ஆகையால் மேல்பார்வைக்கு வெவ்வேறுபோல் தோற்றும் வைதிக மதங்களனைத்தும் ஒரு மரத்தின் பலகிளைகள்போல் நிற்பதால் இவைகளுக்கு வேதம் வேராகவும் பகவான் பலமாகவும் இருப்பதுபற்றி இவைகளுக்குள் அநுஷ்டான ப்ரகாரத்தில் சிறிது பேதமிருந்தபோதிலும் ஸ்வரூபத்தில் ஒத்துமையிருப்பதால் இவை ஒரு வகுப்பைச் சேர்ந்தனவென்றே தத்வ திருஷ்டிகளுக்குப் புலப்படும். கிளைகள் பலவாயிருந்தும் அடிமரம் ஒன்றே யிருப்பதுபோல் இம்மதங்கள் விதிக்கும் அநுஷ்டானங்கள் எல்லாத்துக்கும் ஆதாரமாய் நிற்பதான வர்ணாச்ரம தர்மங்களும் ஒருவகைப்பட்டதாகவேயிருக்கும். இவ்விதம் ஸர்வ வைதிக மதங்களுக்கும் அடிப்படையாயிருக்கும் வர்ணாச்ரம தர்மங்கள் எல்லோருக்கும் பொதுவாய் ஒரே வகையாய் எக்காலத்திலும் இருந்திருப்பது காரணமாகவே அவைகள் ஸநாதனங்கள் என்று பெயர் வழங்குகிறது.

(தொடரும்)



## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா.)

அர்த்தமற்ற செயல்! திருவாங்கூரில் யுவராஜாவாக வரும் குழந்தை ஸ்ரீபத்மநாபன் ஸன்னதியில்விடப்பட்டு பத்மநாபதாஸன் என பெயரிடப்பட்டது! அர்த்தமுள்ள தாயின் இந்த ராஜா கோவிலைத் திருத்தட்டும்?

சென்னையில் ஜலபஞ்சம்!! புழலேரியில் ஜலம்வற்றி 140-கிணறு வெட்டப்படுகிறது! உள்ள கிணற்றை தூர்த்தனர்! நவநாகரிகம் ஏற ஏற பஞ்சமதிகமாகிறது! ராம ராஜ்யமா இது?

கஞ்சி தொட்டி! தாராபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது! இந்த ராஜ்யத்தில் இத்தகைய கஷ்டமேற்பட்டது அவர்களது அதர்மத்தைக் காட்டுகிறது!

புத்தி தடமாட்டம்! விவாஹ ரத்து மசோதாவை ஆதரித்து சென்னை மாகாணத்தில் 300 மேதாவிகள் அபிப்ராயம் கொடுத்தனராம். இதில் மூவரே அதை ஆக்ஷேபித்தனராம்!

ஆண்களுக்கு சமயல் கற்பி! என பாம்பேயில் ஓர் பெண்மணி கூறுகிறாள், பெண்கள் உத்யோகம் செய்தால் யார் சமைப்பது? நியாயந்தானே! கலி மிகவிரைவாக பரவுகிறது!

பழயகலை சாகவில்லை! வைசிராய் வீட்டில் ஓர் சிங்கம் ஓர் யோகி சொற்படி 2-மணி சாந்தமாக படுத்திருந்ததாம். பின்னர் ஓர் குழந்தையினிடம் தன் ஸ்வரூபத்தைக் காட்டிற்றாம்! ப்ரணவமே அதற்கு சாட்டை!

பரோபதேச பாண்டித்யமா! வெள்ளையனை மணந்த ஓர் பிராமண ஸ்த்ரீ வெள்ளையரைக் குருட்டுத்தனமாக பின்பற்றலாகாதென கூறி சென்னை கண்காக்ஷி சாலையில் கப் அண்ட் ஸாஸர் செய்து வைத்ததை கண்டிக்கிறார்?

சாந்த ப்ரசாரம்! ஸ்ரீமான் தர்மவீர யு. பி. கிருஷ்ணமாசாரியார் கடக் அநந்தபூர் மகல் கோட் முதலிய விடங்களில் தர்ம ப்ரசாரம் செய்து வருகிறார்!

அர்த்தமில்லா சொல்! ஜஸ்டிஸ் கூட்டத்தில் ஒருவர் பிச்சை எடுத்து ஜீவிப்பவர் நிலவரியை அறிவாரா என்றார். ராஜ்ய சாஸ்த்ரம் பிராமணருக்கு தெரியாதென்பதுபேதமை சுக்ரநீதி காமாந்தக நீதி சாணக்யநீதி, இதா தர்மநூலியற்றியது யார்? என அறியார்!

திராவிட வஸ்த்ரமா? திராவிடர் நெய்த துணியை அணியவேண்டுமென ஷை கூட்டத்தில் ஓர் தீர்மானம் செய்யப்பட்டது!

சேற்றைப் பூசாதே! ஆணுடன் படிக்கும் ஓர் பெண் தன்னை ஓர் ஆண் ஆபாஸமாக பேசி அணுக, புத்தகத்தால் அவனை அடித்துவிட்டு கற்பை காக்க அஹிம்ஸை பயன்படுமா என கேட்கிறாள் காந்திஜியை. சேற்றில் காலை வைப்பானேன்? என்கிறோம்!!

கதர் மந்திரியாம்! யாருக்கோ யோகம்! பதினோராவது மந்திரி பதவி சென்னையில் ஏற்படுமாம்!

அநீதி! அநீதி! ஸ்தல ஸ்தாபன ஸபை ஓட்டளிக்காதவருக்கு 5 ரூ அபராதம் விதிக்கும்படி சட்டம் செய்யக் கோருகிறது!

தார்மிகர் வாழி! அன்னியூர் ஆலய தர்மகர்த்தாவான ஸ்ரீமான் ஜயராமய்யர் பல ஆலய திருப்பணி செய்ததுடன் சென்ற வாரம் அடியேனைக் கொண்டு ஆலய ஸேவை ஸ்ரீ கீதா மாஹாத்ம்யம் என இரு உபன்யாஸங்களை ஆலயத்தில் நடத்தினர். பல பக்தர் வந்து மிக ப்ரஸித்த தர்மகர்த்தாவான ஸ்ரீ ராயரைப்போலிவர் சிரஞ்சீவியாகதர்மம்செய்துவர வாழ்த்தினர்!

## ஆர்யதர்மம் புத்தாண்டு.

தமிழ்க் கடவுளான திரு ஆராவமுதன் எழுந்தருளியிருக்கும் திருக்குடந்தைத் திருப்பதியினின்றும் குருவாரந்தோறும் வெளியாகி நம்பாதகண்டத்தில் உலவிவரும் "ஆர்ய தர்மம்" இருபான் மூன்று ஆண்டுகள் நிறைவாகி நாலாம் ஆண்டிற் புகுகின்றான். இச்சீரிய தமிழகத்தே முந்தையோர் முறையினின்றும் வழுவாது நன்னெறியே சென்று அன்பர்கள் மனத்தை ஆனந்தக் கடலில் ஆழ்த்துபவன் இவன் ஒருவனே. ஒருவனைப்பற்றி ஓரகத்திரு என்பது முதுமொழி. அவதார ரஹஸ்யத்தை நன்குணர்ந்தவனாகையின் சிலகாலமாக பத்துப் பக்கங்களாகவே வாத்தன்னை அமைத்துக்கொண்டுள்ளான். அகில ஆரியரும் இவனை நன்கு போற்றுதிருப்பது கலியின் கோலாஹலம்போலும். ஆசிரியரின் கட்டுரைகள் மிக அழுத்தமாயும், பக்ஷபாதமின்றியும், சமயோசிதமாயும், இனிமையாயும், தர்மத்தைவிட்டு அகலாதனவாயும் இருப்பது நேயர் அறிந்ததே. 'வாரக் குறிப்புகள்' ஆணித்தரமாயும், வீராவேசத்தைப் புகட்டுவனவாயும், குறிப்புக்குத் தகுந்தவாறு சுருக்கமாயும் விளங்குகின்றன. "தேசிகன் தேன்மொழிகள்"; "யோகசாஸ்திர நிரூபணம்" முதலியன படிப்போர்க்கு இன்பமூட்டுவன.

ஆர்யதர்மத்தை அனைவரும் செவ்வனே ஆதரித்து அதன் "வெள்ளி விழாவை" சிறப்பாக நடத்தற்கு இசைந்து நிற்பாராக.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

## கும்பகோணம்.
## ஸ்ரீ ருக்மிணீ கல்யாண மஹோத்ஸவம்.

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளுடைய பரிபூர்ண அனுக்ரஹத்தை முன்னிட்டு, ஷை பரமாசார்யாள் மடத்தில் சுமார் 10 மாதகாலமாக விக்கிறபாண்டியம் ப்ரம்மஸ்ரீ கோபால சாஸ்திரிகளவர்களால் ஸ்ரீமத் பாகவதம் ஆதிமுதல் ஆரம்பித்து ப்ரதிதினமும் மாலை 6-மணிக்கு மேல் 8-மணி வரையில் உபன்யாஸம் செய்து வருவதில் நாளது பகுதான்ய-௵ மார்கழி-௴ 28-௳ (42—1—1939) குருவாரம் சித்ரா நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில், ஸ்ரீ ருக்மிணீ கல்யாண மஹோத்ஸவம் மாலை 6-மணிக்கு மேல் உபந்யாஸம் செய்யப்படுமாகையால் ஆஸ்திக ஜனங்கள் அனைவரும் விஜயம் செய்து கதாச்ரவணம் செய்து, ஷை மஹோத்ஸவத்தை ரொம்பவும் சிறப்பாயும் கௌரவமாகவும் நடத்திவைத்து ஸ்ரீ கோபாலக்ருஷ்ணனுடைய க்ருபைக்குப் பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கும்பகோணம் பக்த மஹா ஜனங்கள்.

**Freedom of conscience.**

'The golden rule of conduct, therefore,is mutual teleration, seeing that we will never all think alike and that we shall always see Truth in fragments and from different angles of vision. Conscienee is not the same thing for all. Whilst, therefore,it is a good guide for individual conduct imposition of that conduct upon all will be an insufferable interference with everybody else's freedom of conscience."

*Ghandiji in "Young India" 23-9-26.*

## பிரம்ஹ சப்த விசாரம்.

8-பக்கம் தொடர்ச்சி.

'தாதுஸ்வரூபம் நன்றாகத் தெரிவதற்காக....' என்று பேசுவதில்லை. இப்படிப் பேசினால் அது அநுகரணஸ்தலம். அப்பொழுது இங்கே குணத்துக்கு ப்ரஸக்தி எப்படி?

"भवतेः"

என்பதுபோல் பலவிடங்களிலும் தாதுவுக்கு குணாதிகளை காண்கிறோம். "बर्हति" என்று குணம் வைத்துச் சொன்னாலும் वृह தாது என்று அர்த்தமாகமாட்டாதா? மேலுள்ள वृंहयति யை அனுஸரித்து அர்த்தாநுகுண்யேந பரஸ்மைபதி वृह தாது என்று வியாக்யானிக்க முடியுமன்றோ?

(3) 4-ம் பக்கத்தில் अनुपाधिक .... कथ्यते என்கிற ச்லோகத்தில் सिद्ध........न्यायेन என்று டீகையில் சொல்லிய ந்யாயத்தை விளக்கி, அதன் ப்ரக்ருதோபயோகத்தையும் காட்டி ஒரு டிப்பணி எழுதியிருந்தால், உபகாரமாயிருக்குமல்லவா?

4வது பக்கத்தில் "न च वृहतिधातौ....नुमागम समन्वयः" என்று டீகாவாக்யம் இருக்கிறது. இங்கே சங்கை வருமாறு — वृहति யை எடுத்துக் கொண்டால், அதற்கு णिजन्त ரூபம் बर्हयति என்றல்லவா? நிருக்தி ச்ருதியில் बृंहयति என்று சொல்லலாமா? சுத்ததாதுவாக वृंहति என்று वृहि தாதுவை காட்டாமல் वृहति என்று वृह தாதுவைத் தானே காட்டி யிருக்கிறது. இது எப்படிப் பொருந்தும்?

இந்த ஆக்ஷேபத்துக்கு ஸ்ரீஸ்வாமி சொல்லியிருக்கிற ஸமாதானம் வருமாறு—वृह वृहि वृद्धौ என்பதுதாது பாடம். ब्रह्म சப்த நிஷ்பத்தி முன்காட்டியபடி वृहि தாதுவிலிருந்துதான். இரண்டு தாதுக்களுக்கும் அர்த்தம் ஒன்றாகையால் वृह தாதுவைக்கொண்டு சுத்தரூபத்தையும், वृहि தாதுவைக்கொண்டு ணிஜந்த ரூபத்தையும், நிருக்தி ச்ருதி காட்டிற்று. "பெரிது, பெரிதாக்குகிறது" என்கிற அர்த்தங்களில் தான் நோக்கு. ஒரே தாதுவையே இரண்டிடத்திலும் கொள்ள வேணும் என்று சப்த நிர்ப்பந்தமில்லை. वृहि தாது इदि த்தாகையால் ணிஜந்த ரூபத்தில் ப்ரும்ஹயதி என்று (நகாரம் வந்து அதற்கு) அநுஸ்வாரம் காணப்படுகிறது.

இந்த ஆக்ஷேப ஸமாதான பங்க்திகளிலிருந்து, ப்ரஹ்மசப்த நிஷ்பத்தி वृहि தாதுவிலிருந்து என்று ஸ்ரீஸ்வாமிக்குத் திருவுள்ளம் இருப்பதாகத் தெரிகிறதா? ஆக்ஷேபமும் ஸமாதானமும் போயிருக்கிற வழியேவேறு. ஸ்ரீஸ்வாமியோ वृहेरम् च என்று ஸ்பஷ்டமாகவேசொல்லியிருக்கிறார். ப்ரஹ்ம சப்தத்திற்கு वृहिधातु உபயோகப்படுவதானால் இதற்குத் தக்கபடியன்றோ ஸ்ரீஸ்வாமி உணாதி ஸூத்ரத்தைக் காட்டியிருக்கவேண்டும். விஷயம் இவ்வாறிருக்க, 4-ம்பக்கத்தில் இந்த இடத்துக்காகக் காட்டியிருக்கும்

बृंहेर्नोऽच्च इत्यनेन रूपसिद्धिः

என்ற டிப்பணி பொருத்தமுடையதா என்பதை விமர்சிக்கவேணும். ரூபஸித்தி என்றால் எந்த ரூபம். ப்ருஹ்ம ரூபமோ ஸ்ரீ ஸ்வாமியால் முன்பே ஸாதிக்கப்பட்டுவிட்டதே. டிப்பணி,மூலார்த்தத்தை விபரீதமாகவல்லவா காட்டுகிறது.

# பிரம்ஹ சப்தவிசாரம்.

### தத்வடீகை டிப்பணியில் தவறு.

(ஒரு மஹாமஹோபாத்யாயர் எழுதுகிறார்.)

சென்னை நாகரலிபிப்பதிப்பின் 3-ம் பக்கத்தில்

"निरतिशयबृहत्त्वं हि ब्रह्मशब्दार्थः । बृहतिधातोः "बृंहेरम् च,, इति मनिन्प्रत्यये अमागमे च ब्रह्मेति व्युत्पत्तेः, ........ इति, तद्गोबलीवर्दन्यायादिति न विरोधः। बृंहणत्वस्य बृहत्त्वविशेषत्वाच्च । ........ तेन अनवधिकातिशयबृहत्त्वमेव ब्रह्मशब्दार्थ इत्येके। अपरे तु बृहत्त्ववत् बृंहणत्वमपि अनवधिकातिशयं ब्रह्मशब्दार्थः ........ पृथगभिधानस्वारस्यात्, समुच्चयोपादानस्वारस्याच्चेत्याचक्षते । वयं तु ब्रूमः—उभयत्रापि विरोधाभावादुभयथापि आचक्ष्महे इति । अयमत्र संग्रहः—बृहत्त्वं ........। यद्वार्थो ब्रह्मशब्दस्य बृंहणत्वं बृहत्त्ववत् ॥ अथवा बृहत्त्वबृंहणत्वसमुच्चयो वा ।,,

(4-ம்பக்கம்) என்று டீகையின் வாக்யங்கள் காணப்படுகின்றன. ப்ரஹ்ம சப்தத்தில் ப்ருஹ தாது என்றும் ப்ருஹி தாது என்றும் அபிப்ராயபேதம் இருக்கின்றது. ஸ்ரீஸ்வாமியின் திருவுள்ளம் முதல்பக்ஷத்தில். बृहतेर्धातोस्तदर्थत्वात्" என்று ஸ்ரீ பாஷ்யத்திலும்

"बृहतेर्धातोरर्थानुगमात्"

என்று ஸ்ரீ சங்கரபாஷ்யத்திலும் காணப்படுகிறது. பஞ்சபாதிகை, பாமதீ, வார்திகம், பாஷ்யப்ரகாசிகை-இவைகள் ப்ருஹ தாதுவையும், ந்யாயநிர்ணயம், ரத்னப்ரபை, சிவார்கமணி தீபிகை—இவைகள் ப்ருஹி தாதுவையும் ஆதரிக்கின்றன.

ப்ருஹ தாதுவிலிருந்து ப்ரஹ்ம சப்தநிஷ்பத்தியை ஆதரிக்கும் பல ப்ராசீனர்களுடைய அபிப்ராயத்தை அநுஸரிக்கும் ஸ்ரீஸ்வாமி அதற்குள்ள ஸூத்ரத்தைக் காட்டியருளினர். இந்த உணாதி ஸூத்ரம் தத்காலம் காணப்படவில்லையாயினும் ஸ்ரீ ஸ்வாமி காலத்தில் இருந்திருக்கவேண்டும். ப்ராசீன க்ரந்தங்களில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் பல உணாதி ஸூத்ரங்கள் தத்காலத்தில் காணப்படுவதில்லை. ஒரே சப்தத்தை ஸாதிக்க ஒருவருஷத்தில் ஒரு ஸூத்ரத்தையும், மற்றொன்று மற்றொரு ஸூத்ரத்தையும் உபயோகிக்கின்றன, இவ்விஷயம் வ்ருத்திகளைப் பரிசீலிப்பவர்க்குப் புலப்படும்.

ப்ருஹி தாதுவிலிருந்து ஏற்படுவதாக எண்ணினவர்களின் ஸூத்ரம் "बृंहेर्नोऽच्च" என்பது. இது உஜ்ஜ்வலன், நாராயண பட்டன், பட்டோஜி இவர்களால் கையாளப்பட்ட ஸூத்ரம்.

"बृंहेरम् नलोपश्च"

என்று ச்வேதவனவாஸி வ்ருத்தி பாடம். இது, முன் காட்டிய பாடத்தையும் ஆதரித்திருக்கிறது. டீகாஸர்வஸ்வத்திலோ

"बृंहेरम् नलोपश्च" என்றே,

காணுகிறது. போஜராஜனுடைய ஸரஸ்வதி கண்டாபரணத்துக்குத் தண்ட நாதன் எழுதிய வ்ருத்தியிலும் ப்ருஹி தாதுவே எடுக்கப்பட்டிருக்கிறது. துர்க்கஸிம்மனுடைய வ்ருத்தியிலோ

"बृंहेः बमन्तश्च हापूर्वः"

என்று ஸூத்ரம் காணப்படுகிறது. ஆகையால் ஸ்ரீஸ்வாமி எடுத்துக் காட்டியபடி ப்ருஹ தாதுவிலிருந்து நிஷ்பத்தி சொல்லும் ஸூத்ரமும் ப்ராசீன வ்ருத்தி க்ரந்தங்களில் இருக்கக்கூடும். எது எப்படி யிருந்தாலும், ஸ்ரீஸ்வாமி ஸ்ரீபாஷ்யாதிகளை அநுஸரித்து ப்ருஹ தாதுவையே அங்கீகரிப்பதாகத் தெரியவருகிறது.

நிற்க. இனிப் பாடத்தையும் டிப்பணியையும் கவனிப்போம். "ப்ரும்ஹணத்வஸ்ய ப்ருஹத்த்வவிசேஷத்வாச்ச" என்கிற டீகையில் "ச" என்பதற்கு அர்த்தம் என்ன? அது எங்கே சேருகிறது? எதற்கு ஸமுச்சயகம்? முன்பு சொன்ன "கோபலீவர்த ந்யாய"த்திற்கு அவகாசத்தை யன்றோ இந்தப் பஞ்சம்யந்தம் காட்டுகிறது. இங்கே சகாரம் எதற்கு? இந்த ஸந்தேஹங்களை நீக்கும் ஒரு டிப்பணியை இங்கே எழுதியிருந்தால் உசிதமாயிராதா?

"बृंहणत्वेनापि बृहदिति ।" என்று தெலுங்கு லிபி புஸ்தகத்தில் காணும் ஒற்றைக் கோட்டை (।) எடுத்து விட்டால் இந்த "இதி" என்பது எங்கே எதோடு எப்படிச் சேருகிறதோ? நன்றாகப் புரியவில்லை.

"वयं तु ब्रूमः....आचक्ष्महे" என்பது "ஏகே" என்றும் "அபரேது" என்றும் முன் காட்டிய இரு பக்ஷங்களிலும் தமக்கு அருசியில்லை என்று ஸ்ரீஸ்வாமியின் திருவுள்ளத்தைக் காட்டுகிறதா? அல்லது தனித்தொரு மூன்றும் பக்ஷத்தைக் காட்டுகிறதா? கீழில் செய்திருக்கும் உபபாதனத்தையும் மேலில் காட்டியிருக்கும் ஸங்க்ரஹ ச்லோகத்தையும் பராமர்சித்தால், ப்ருஹத்த்வம் ப்ரஹ்ம சப்தார்த்தம், ப்ருஹத்த்வமும் ப்ரும்ஹணத்வமும் (சேர்ந்து) ப்ரஹ்ம சப்தார்த்தம் என்கிற இரு பக்ஷங்கள் தானே தேறுகின்றன. இப்படியானல்

बृहत्त्वं ब्रह्मशब्दार्थो बृंहणत्वं तु तद्विदः ।
यद्वार्थो ब्रह्मशब्दस्य बृंहणत्वं बृहत्त्ववत् ।
अथवा बृहत्त्वबृंहणत्वसमुच्चयो वा ,,

என்ற டீகாபங்க்தியின் கருத்து என்ன?

சுலோகத்தில் முன்பு சொன்ன இரு பக்ஷங்களையும் காட்டியதற்குப்பிறகு "அதவா.... ஸமுச்சயோ வா" என்பதின் கருத்தென்ன? ஆக மூன்று பக்ஷங்களா? ப்ரும்ஹணத்வ மாத்ரம் அர்த்தம் என்று ஒரு பக்ஷம் உண்டா? அவ்வாறானல் அந்தப் பக்ஷம், ஸங்க்ரஹ சுலோகத்துக்கு முன்பு காட்டப்படவேண்டாமா? "அபரேது ப்ருஹத்த்வவத் ப்ரும்ஹணத்வம் அபி .... சப்தார்த்த:" என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அபரேதுபக்ஷத்தில்தான் "ஸமுச்சயோபாதாநஸ்வாரஸ்யாச்ச" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே ஸமுச்சயபதம் அன்றோ இந்தப் பின்வாக்யத்திலும் காணப்படுகிறது.

"अत्र अथवेति पक्षान्तरद्योतकः,वेति समुच्चयपक्षस्य प्रथमपक्षेण विकल्पद्योतकः"

என்று ஒரு டிப்பணி காண்கிறது. இந்த டிப்பணியின் கருத்து நமக்கு நன்றாக விளங்கவில்லை. "அதவா"வுக்கு அர்த்தம் எழுத வேணுமா? பக்ஷாந்தரத்யோதக சப்தம் விகல்பத்யோதகம் தானே. இவற்றுள் பேதம் என்னவோ! "அதவா" என்பது எந்தப் பக்ஷத்தைக் காட்டிலும் வேறாக எந்த பக்ஷத்தைக் குறித்துக் காட்டுகிறது? இந்த டிப்பணி ப்ரகாரம் பக்ஷங்கள் எவ்வளவு? ஸங்க்ரஹ ச்லோகத்தின் உத்தரார்த்தத்தில் யத்வா என்று இருக்கிறதே, இது எதோடு விகல்பத்தைக் காட்டுகிறது? "யத்வா" என்று ஆரம்பித்த உத்தரார்த்தம் முடிந்த பின்பு "அதவா" என்று ஆரம்பிக்கும் வாக்யத்தில் உள்ள "அதவா" சப்தம் எந்த அர்த்தத்தை எதோடு சேர்த்து விகல்பத்தைக் காட்டும்? இந்த டிப்பணி எந்த சங்கையை எப்படிப் பரிஹரிக்கிறது? ஸங்க்ரஹ ச்லோகத்தின் உத்தரார்த்தத்தில் காட்டப்பட்ட பக்ஷமும், இந்த வாக்யத்தில் காட்டப்படும் பக்ஷமும், ஒன்றா, வெவ்வேறா? வயம் துப்ரூம:" என்று ஆரம்பித்து "ஆசக்ஷ்மஹே இதி" என்று முடிந்திருப்பது வாக்யசைலிக்கு அழகாக ஒத்துவருகிறதா? இவைகளையெல்லாம் விமர்சகர்கள் ஆலோசிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். क्षेम சப்த நிருபண ப்ரகரணத்திலுள்ள டீகா க்ரந்த பங்க்தியின் சைலியை நன்கு விமர்சித்தால், இங்குள்ள "யத்வா" "அதவா" "வா" என்பவற்றின் கருத்தை அறிந்து வாக்யார்த்த நிர்ணயம் பண்ணலாமென்று நினைக்கிறோம். இதனைப் பின்னர் வெளியிடுவோம்.

(2) தத்வடீகையில் ஸ்ரீஸ்வாமி சொல்லியிருக்கிற 'ப்ருஹதிதாதோ:' என்பதற்கு

धातुस्वरूपस्फुटप्रतिपत्तये संज्ञापूर्वको विधिरनित्य इति न्यायेन गुणाभाव आदृतः" என்று மூன்றும் பக்கத்தில் ஒரு டிப்பணி காண்கிறது.

எந்தவிடத்தில் गुण ம் வரவேணுமென்று சங்கிக் கப்படுகிறது? "बृहति बृंहयति" என்ற ஆதர்வணச்ருதியில் காணும் बृहति என்கிற விடத்திலா? இந்த தாது शब्विकरणि யாகையால் குணம் ஆபாதிக்கப்படுவது உசிதம் தான். இங்கு "गुणाभावश्छान्दसः" என்று சொல்லி விடலாமே. விகரணங்களை விதித்து விட்டு முடிவில் "व्यत्ययो बहुलम्" என்று ஸூத்ரம் பாணிநி எழுதியிருக்கிறார். சந்தஸ்ஸில் விகரணங்கள் மாறி வரலாம். शुष्मस्य भेदति என்று भिद தாதுவின் மீது சப் விகரணம் வந்திருப்பதுபோல ப்ருஹ தாதுவின் மேல் श விகரணம் வந்திருப்பதாகக் கொள்ளலாமல்லவா? அப்பொழுது குணம் வர இடமில்லை. இது ருஜுவான வழியல்லவா? இனி "बृहतिधातोः" என்கிற ஸ்ரீஸ்வாமி ஸூக்தியில் ஆசங்கை பண்ணலாமா என்று பார்ப்போம்.

முன் காட்டியபடி குணமில்லாமல் ஸூசப்தமான நிருக்தி ப்ருஹதியை அப்படியே ஸ்ரீஸ்வாமி எடுத்ததாகக் கொள்ளலாம். சாந்தஸரூபத்தை ப்ரயோகாநுஸாரேண லோகத்திலும் அங்கீகரிக்கலாமல்லவா! மேலும், ஸ்ரீஸ்வாமி வாக்யத்திலுள்ள ப்ருஹதி ரூபம் எப்படி ஏற்படுகிறதென்பதை ஆலோசிக்க வேணும். இங்கே, धातुनिर्देश த்தில் வரும் श्तिप् ப்ரத்யயமா? அப்படியானல் शप् வருமாகையால் குணத்துக்கு ப்ரஸக்தியுண்டு. श्तिप् என்று கொண்டால் बृहति என்பதற்கு बृहधातु என்று அர்த்தம் ஏற்படும். பிறகு धातु பதத்தோடு எப்படிச் சேரும்? "ஆம்ரவ்ருக்ஷோ வ்ருக்ஷ:" என்று ப்ரயோகிப்பதுண்டோ? ஆகையால் ப்ருஹதியும் தாதுவும் ஸமாநாதி கரணங்கள் என்று கொள்ள முடியாது. ச்ருதியில் காணும் ப்ருஹதி சப்தத்தின் அநுகரணமாகக்கொண்டு "ப்ருஹதி" என்கிற ரூபத்தில் உள்ள தாது என்றே அர்த்தம் கொள்ளவேணும். ஸ்ரீபாஷ்யாதிகளிலும் இவ்வாறுதான் அர்த்தம் கொள்ள வேணும். இப்பொழுது எந்தவிடத்தில் எப்படி குணத்துக்கு ப்ரஸக்தி? மேலும், ச்ருதியில் கீழ்காட்டியபடி குணாபாவம் ஸௌத்ரமாகவே ஏற்படுகையில், ந்யாயத்தைக் கொண்டு ஸாதிக்கப் புறப்படுவது உசிதமன்று. மேலும் அந்த ந்யாயம், மஹாபாஷ்யத்தில் காணப்படவில்லை என்றும், அப்ராமாணிகம் என்றும் நாகேசபட்டர் சொல்லியிருக்கிறார். மேலும், ஸ்வரூபம் நன்றாகத் தெரிவதற்காகக் காரியம் செய்யவில்லை என்று வையாகரணர்கள் சொல்வது சில அநுகரணங்களில்தான். अनुकार्यस्वरूपमनुभिया........என்பது அவர்கள் வழங்கும் பேச்சு

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)



# பிரணவ மஹிமை.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி)

[உரிமையுடையது]

ஓம் என்ற அக்ஷரமே பிரணவமாகும். அழியாத வஸ்துவை பிரணவம் பிரதிபாதிப்பதால் பிரணவத்திற்கு அக்ஷரம் (அழிவற்றது) எனப்பெயர் வந்ததாகும். அதன் மகிமையைவிளக்க உபநிஷத்துக்களில் பிரணவத்தை சப்தப்பிர்ம்மமென கொண்டாடப்படுகிறது. சர்வ சப்தங்களுக்கும் மூல காரணமாயுள்ள பிரணவ சப்தத்தைத் தழுவி உண்டான மற்ற எழுத்துக்களுக்கும் அக்ஷரம் என்ற பெயரையே சொல்லப்படுகிறது. சர்வ நிரிசிய வஸ்துக்களுக்கும் திருக் எனப்படும் பிர்ம்மமே அதிஷ்டானமாவதுபோல் சர்வ அக்ஷரங்களுக்கும் பிரணவத்தின் முதல் அம்சமான 'அ' காரமே அதிஷ்டானமாகும். இந்த உண்மையை,

"அகர முதலெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு"

என்று குறளாசிரியர் தனது நூலின் கடவுள் வணக்கத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

பிரணவ சப்தமானது இயற்கையாயுள்ளதாகையால் அது அகாதி. பிறந்த குழந்தைக்கு முதலில் 'அ' என்ற சப்தமும், சிலநாள் சென்று 'உ' என்ற சப்தமும், பின்னுஞ் சில நாள் சென்று 'ம்' என்ற சப்தமும் இயற்கைத் தோன்றி கடைசியில் குழந்தை 'அம்' என்ற சப்தமாய் அழுகிறது. அந்த சப்தம் நாள் செல்லச் செல்ல அம்+ஆ என்று நீட்டப்பெற்று 'அம்மா' என்றசொல் குழந்தையினிடம் முதலில் உண்டாகிறது. பின் கொஞ்சங் கொஞ்சமாய் மற்ற சப்தங்களில் குழந்தை பழகுகிறது. குழந்தையின் உணர்ச்சியில் என்றைக்கு பிரணவ சப்தமானது நீண்டு விரியத் தொடங்கிற்றோ அன்று முதலே அக் குழந்தை உலகக்கட்டுக்குள்பட்டதாகி விடும்.

பிரணவ சப்தமான ஓங்காரத்தை வேதோக்தமான சர்வ கர்மாக்களிலும் உச்சரிக்கப்படுகிறது. ஓம் என்று அக்ஷரத்தை முந்தி சேர்த்து உச்சரிக்காத மந்திரங்கள் கூட பலனற்றவையாகும்.

तस्मादोमित्युदाहृत्य

என்று ஸ்ரீமத் பகவத்கீதை 17வது அத்யாயம் 24வது சுலோகத்தில் ஓங்காரத்தை சர்வ கர்மாரம்பங்களிலும் சொல்லப் படுவதைப் பற்றி எடுத்துக் காட்டப்படுகிறது.

சர்வ வேதங்களுக்கும் ஒவ்வொரு பரிபாகியையும் பிர்ம்ம வஸ்துவை கிட்டச் செய்வதிலேயே அந்தரங்கநோக்கமாகையால், வேதோக்தமான ஒவ்வொரு கர்மாவிலும் ஒவ்வொரு மந்திரோபாஸனையிலும், ஒவ்வொரு பூஜாவிதியிலும், பிரணவாக்ஷரத்தை முந்தி உச்சரித்துச் செய்யும்படிவிதி ஏற்படுத்தியதாயுள்ளது. ஒவ்வொரு சுப காரியத்திலும் முந்தி செய்யப்படும் விநாயக பூஜையின் இரஹஸ்யமும் பிரணவத்தியானத்தையே முந்தி செய்வதாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. விநாயகபூஜையிலுள்ள தத்துவம் யாதெனில், ஆணவாதி மும்மலங்களையும் கழித்து, மதங்கொண்ட யானையைப்போல் தனக்கு எதிரீடியாதுமின்றி, தானே சர்வமுமாய் விளங்கும் பிரணவ ஸ்வரூபத்தை ஆணவாதி மும்மதங்களையும் பொழியும் கஜமுகாசுரனை அழிப்பதற்கு எழுந்த அத்திமுகனென்றும், சர்வ நிரிசியப் பொருள்களுக்கும் மூலகாரணமாய் விளங்கும் பிரணவ ஸ்வரூபத்தை சர்வகணங்களுக்கும் பதியான கணபதியென்றும், சுருதி, யுக்தி சுவாநுபவங்களால் சர்வ விபரீதபாவனையும் நசித்து சித்தி, முக்தி சிவானந்தங்களைத் தரும் பிரணவ ஸ்வரூபத்தை சர்வ விக்னங்களையும் நாசமாக்கி சர்வா பீஷ்டத்தையும் தந்தருளும் சித்திவிநாயக னென்றும் சர்வாதிஷ்டானமாயுள்ள பிர்ம்ம ஸ்வரூபத்தை பிரதிபாதிக்கும் பிரணவ ஸ்வரூபத்தை முழுமுதற் கடவுள் என்றும் காட்டி விநாயக பூஜை செய்யப் படுவதாகும்.

இவ்விதம் சைவ வைணவ, மாத்வ மதஸ்தர்களை யாவரும் ஒருவித வித்தியாசமின்றி தங்கள் தங்கள் சுபாசுப காரியங்களில் பிரணவ உச்சாரணையை முந்தி அனுஷ்டித்து, அவரவர்களுக்குரிய ஆசாரணையில் ஈடுபடுகிறார்கள். பிரணவ சப்தமான ஓங்காரத்தை உச்சரிக்காத இந்துவும், அதனின் உண்மையான உயர்வை ஒப்புக்கொள்ளாத இந்துவும் இல்லவேயில்லை. ஓங்காரத்தின் மஹிமையை கொண்டாடாதவனுக்கு இந்துமதத்தில் இடமும் கிடையாது.

பூர்வம் நம் பாத கண்டத்தில் பற்பல பெரியோர்கள் பந்த விடுதலைக்காக நிவிர்த்திமார்க்கத்தில் நின்று, இயம, நியம, பிராணாயாம, பிரத்தியாகார, ஆசன, தியான, தாரண, சமாதிகளான அஷ்டாங்கயோகத்தை அப்யசித்து, அத்தயோபலத்தால் அணிமா, (மிகவுஞ் சிறிய உயிர்கள்தோறும் பரமகாஷ்டையாய் சென்றிருத்தல்) மஹிமா, (மிகவும் உயர்ந்த மஹாமேருபோல் ஆகவேணுமென்றால் ஆகுதல்) இலகிமா, (மேருபர்வதத்தையொத்த யோகியை எடுத்தால் இலேசாயிருத்தல்) கரிமா, (அணுப்போலிருக்கும் யோகியை எடுத்தால் மேருபாரமாயிருத்தல் (பிராப்தி,) (எவ்வுலகத்திலும் தடையற சஞ்சரித்தல்) பிராகாம்யம், (பாகாயப் பிரவேசஞ் செய்தலும், அந்தர சஞ்சாரஞ் செய்தலும், இச்சித்த போகத்தை அனுபவித்தலும், மண்ணிலும் விண்ணிலுமுள்ள பொருள்களை அறிதலும், தனது திவ்ய தேஜோமயத்தால் திரிகாலங்களையும் உணர்தலுமாம்) ஈசத்துவம், (சர்வேசுவரனைப்போல் தனனிச்சையாய் முத்தொழிலுஞ் செய்து, சூரியன் முதலான கோட்கள் தன் ஏவல் கேட்கும்படி விளங்குதல்) வசித்துவம், (தேவர் முதலிய உயிர்களையும் தன் வசமாக்கிக் கொள்ளல்) என சொல்லப்படும் அஷ்டமசித்திகளைப் பெற்று, முனிகள் என்ற நாமமுற்று, பெருமையாய் வாழ்ந்தார்கள். இக்காலத்தில் பூர்வயுகங்கள்போல், ஷட்சக்கரங்கண்ட யோகீச்வரர்களைக் காண்பதரிது. இக்காலத்தில் அப்பெருமைகள் சித்திப்பதில்லை. பெருமையான சித்திகளால் ஐக்யமுக்தி சித்திப்பதற்கு வழியுமில்லை. பிர்ம்மாத்மைக்கிய மெனும் பதவியை அடையச் சாதனமில்லா அஷ்டாங்கயோகத்தை மெய்யற்வைமட்டும் விரும்பிய முமுக்ஷுக்கள் அப்யசிக்கமுன் வராததால் ஆச்ரயிப்பாரின்றி அவைகள் அநேகமாய் மறைந்துவிட்டதெனலாம். ஹடயோக மார்க்கத்தாலடையப்படும் சித்திகள் மோக்ஷசாதனமன்று என்பதை தாண்டவராய சுவாமிகள் தாமருளிய கைவல்ய நவநீதம் என்ற நூலில் "முனிவர்கள் சித்தி விநோதத்தை மாத்திரம் தரும் முக்தியைத் தாராவே" என்று நன்கு எடுத்துக்காட்டி யிருக்கிறார். வெகுப் பிரயாசகரமான ஹடயோகாதிகளால் அடையமுடியாத கைவல்யபதம் வெகு சுலபமான பிரணவத் தியானத்தால் அடையப்படுகிறதென்றால் பிரணவத்தின் மஹிமை எத்தன்மையானது! பிரணவத்தியானமே ராஜயோகமெனப்படும்.

(தொடரும்)

டி. ராமகிருஷ்ணய்யங்கார் எழுதியது.
ஆண்டாள் திருமணம். 0 8 0
கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்த்த அச்சுக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.

## கும்பகோணம் லலிதகலாவல்லப சதுர்பாஷி பிர்ம்மஸ்ரீ வாதிராஜ பாகவதர்.

நமது நகர் வாஸியான இப்பாகவதர் அவர்கள் வட இந்தியா யாத்திரை செய்து நம்மூர் திரும்பி நகரத்தில் சில ஹரிகதைகளைச் செய்து நற்கியாதி பெற்றுவருவது நமது பிராம்மண ஸமூகத்திற்கே அலங்காரமாகவிருக்கிறது. குத்தாலத்திற்கடுத்த காளி சிருநாங்கூரில் 29—12—38 வியாழக்கிழமை ராதாகல்யாண மகோற்சவத்தை முன்னிட்டு சுபத்ராபரிணயம் என்ற ஹரிகதையை பொருள் சுவை, ஹாஸ்யச்சுவை ததும்பும்படி நடத்தினர். அதில் ஈடுபட்ட நமது நகர் பிரபலஸ்தர்களான எஸ். குப்புசாமி அய்யர் ஷாப் ராகவேந்திரராவ், டி. எஸ். ஆர். அய்யங்கார் இன்னும் பல கனவான்களுடைய போஷணையைக் கொண்டு நாளது தை மாதத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீ சக்கிரபாணி ஸ்வாமி கோயிலில் ஷை கோவில் நந்தவன கைங்கரியத்தின் உதவிக்காக ஷை பாகவதரையும் அவருடைய புதக்கோஷ்டியுடனும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண ஸீரிஸ் ஒன்று ஆரம்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். நமது ஆர்யதர்மத்தில் ஏற்கனவே பிரசுரித்தபடி திருவாதிரை தினத்தன்று 5—1—39 வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கு ஸ்ரீ ஆதிகும்பேசுவரஸ்வாமி ஆலய மண்டபத்தில் "நந்தனர்" ஹரிகதை நடத்தப்படுவதற்கு பக்தகோடிகள் அனைவரும் விஜயம்செய்து ஈசுவர கிருபைக்குப் பாத்திரர்களாகுமாறு வேண்டப்படுகிறது.

ஒரு நிருபர்.

## சென்னை.

### ஸ்ரீராதா கல்யாணம்

மாம்பலம் பஜனை ஸபையின் அங்கத்தினரும மஹய்யதிய காலேஜ் உபாத்யாயருமான மகா-ா-ா-ஸ்ரீ வெங்கட்டராமய்யரவர்கள் கிருஹத்தில் சென்ற வெள்ளியன்று பிரும்மஸ்ரீ ராமசந்திர ஹரிஹரியின் தலைமையில் ஷை உத்ஸவம் மிகவிமர்சையாக நடந்தது. ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ வைதிக தர்மஸங்க தலைவர் ஸ்ரீபாதராஜ ஸ்வாமிகள் ஆதிமுதல் ப்ரஸன்னமாயிருந்தனர். பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவ சர்மா அவர்கள் பத்தாது பிரார்த்தனைக் கிணங்க நாரதர் யசோதையை நோக்கி பரபிரும்மம் உன்மடி மீதேற உன் வீட்டில் மண்ணில் புரண்டழ என்ன புண்யம் செய்தாய் என்று கேட்ட சுலோகத்தின் கருத்தை விளக்க ஸ்ரீகிருஷ்ணனது பெருமையை கூறி அரைமணி உபன்யஸித்தார்.

விவாஹ காலத்தில் பிரும்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகளவர்கள் விஜயம் செய்தார். விதிப்படி அஷ்டபதிகள்பாடி திவ்ய நாமஸங்கீர்த்தனத்துடன் ஸ்ரீராதா கல்யாணம் நடைபெற்றது. குழுமி யிருந்தபக்தர்களுக்கு அறுசுவை ஆராதனம் நடந்தது. மறுநாள் விடாயாத்தி உத்ஸவம் மிக விமர்சையாக நடைபெற்றது. கேட்பவர் மனமுருகி ஸ்ரீகிருஷ்ணன் திருவடியில் மனம் லயிக்கும் வண்ணம் பாவத்துடன் பாடிய ஸ்ரீஹரிஹரியின் பக்தியையும் முயற்சியையும் கொண்டாடாதாரில்லை!

நமது நிருபர்.

215265



13

## ஆலயப்பிரவேச மசோதா கண்டனம்

ஆலயப்பிரவேச மசோதாவானது சட்ட சபையில் சட்டமாகிவிட்டதை எல்லோரும் அறிவார்கள். முதன் முதலாக மலையாளத்தில் கொண்டு வருவதாகவும் ஏற்பாடாகி விட்டது. காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். 'நாங்கள் ஒவ்வொரு சட்டமும் பொதுஜன அபிப்பிராயத்தின் பேரிலேயேகொண்டு வருகிறோம். அல்லாமல் பலாத்காரமாக ஜனங்களுக் கிடையில் ஒரு சட்டத்தைப் புகுத்த எங்களுக்கு அபிப்பிராயம் கிடையாது.' என்று பரம தார்மிக முறையில் நடந்து கொள்ளுபவர்கள்போல், தங்களைக் காட்டிக் கொள்ளுகிறார்கள். வாஸ்தவமே. இவர்கள் ஒரு பெரிய நகரத்தில் கூட்டம் போட்டு அந்தக் கூட்டத்தில் எல்லோரும் கை தூக்கிவிட்டால் பொதுஜன அபிப்பிராயம் கிடைத்துவிட்டது, பாருங்கள் என்று சொல்லி காரியத்தைச் சாதிக்கிறார்கள்.

பொதுஜன அபிப்பிராயம் என்றால், போதிய அளவு கல்வியறிவு உலக அனுபவம் இவைகள் நிறைந்த ஜனங்களின் அபிப்பிராயம் தான் ஆகும். பாமரர்கள் நிறைந்த கூட்டத்தில் எல்லோரும் கை தூக்கிவிட்டால் பொதுஜன அபிப்பிராயம் ஆகாது. பொதுவாக நகரங்களில் கூடும் கூட்டங்களில் நூற்றுக்கு ஒருவர் அல்லது இருவர், படித்தவர்களாகவும் உலக அனுபவம் உள்ளவர்களாகவும் இருக்கலாம். பாக்கி உள்ளவர்கள் அறிவுவளர்ச்சி இல்லாதவர்கள். இவர்கள் கை தூக்கிவிட்டால் பொதுஜன அபிப்பிராயம் கிடைத்துவிட்டது மாதிரியாக ஆகவே யாகாது. பல படித்த பிரமுகர்கள் ஷை கூட்டங்களுக்குப் போகாமலேயே இருக்கிறார்கள், ஆகவே நகரக் கூட்டங்களில் ... எல்லோரும் கை தூக்கிவிட்டதினால் பொதுஜன அபிப்பிராயம் கிடைத்து விட்டதாக ஆகாது. தவிரவும் அநேக கிராமத்து ஜனங்களுக்கு ஷை விஷயங்கள் தெரியாமலே இருக்கிறது. இவர்கள் பொது ஜனங்கள் இல்லையா? இவர்களது அபிப்பிராயம் வேண்டாமா? ஆகையால் ஒவ்வொரு கிராமங்களிலும் கூட்டம் போட்டு அவர்கள் அபிப்பிராயத்தை அறிய வேண்டும்.

அல்லாமலும் வீடுகள் தோறும் சென்று சம்மதகையொப்பம் வாங்கவேண்டும். ஷை அத்தாட்சியின் பேரில் தான் ஷை சட்டத்தை அமுலுக்குக்கொண்டு வரவேண்டும் இந்த மாதிரி ஒவ்வொரு சட்டத்தையும்கொண்டு வரமுடியுமா என்று கேட்டால் ஷை சட்டமானது சமூகத்தில் எல்லோரையும் வெகுவாகப் பாதிக்கிறதாகையால் இவ்வாறு கட்டாயம் செய்யவேண்டியது அவஸ்யமே.

ஆலயப்பிரவேச மசோதாவானது யாது காரணம்பற்றிக்கொண்டு வரப்படுகிறதோ? தெரியவில்லை! ஒருபொது வஸ்துவானது எல்லோருக்கும் அனுபவிக்கப் பாத்தியம் உண்டு என்ற உரிமையின் பேரில் அவர்களுக்கு அந்த உரிமை இல்லாததினால் அந்த உரிமையை சர்க்கார் வாங்கிக்கொடுக்கிறார்களா? இது எப்படி இருக்கிறதென்றால் ஒரு வீட்டுக்கு ஒரு நாட்டுப்பெண் வருகிறாள் என்று வைத்துக் கொள்ளுவோம். வீட்டிற்குப் பொதுவான வஸ்துதாஸ- எல்லோருக்கும் பாத்தியம் உண்டு. எந்த எந்தவிதத்தில் உரிமை? புருஷனுக்கு இருக்கும் உரிமை அவன் தகப்பனுருக்கு உண்டா? அவன் தம்பிக்கு உண்டா? யார்யாருக்கு எம்மட்டில் உரிமையோ அம்மட்டில் தான் பாத்யதை கொண்டாடலாமே தவிர, எல்லோருக்கும் எல்லா உரிமையும் உண்டு என்பது எப்படியோ அப்படியே இருக்கிறது ஷை சர்க்காரின் இருக்கூற்று? என் அண்ணனுக்கு உள்ள உரிமை எனக்கு இல்லை என்று தம்பி தகப்பனாரிடம் முறையிட (கருணாநிதியான). தகப்பன் எப்படி எல்லாவித உரிமையும் இரண்டாவது பிள்ளைக்கு வாங்கித் தருவதற்கு பிரயத்னப் படுவனோ? அப்படியே இருக்கிறது இவர்கள் செய்கை?

சமீபத்தில் பொய்யாமணி என்னும் கிராமத்தில் இரண்டாவது காங்கிரஸ் மகாநாடு நடைபெற்றது பல பிரமுகர்கள் வந்திருந்தார்கள். காந்தியின் சமீபத்திலேயே இருந்து ஆறு வருஷம் சேவை செய்த சுப்பையா என்பவர் பேசுகையில் ஷை அபிப்பிராயத்தையே வெளியிட்டார் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுகிறேன். காலாகாலத்தில் சந்தியாவந்தனம் முதலியன அனுஷ்டிக்கவேண்டும் காந்திஜீ அப்படித்தான் செய்து வருகிறார் ஒரு சமயத்தில் தவறிவிட்டதால், தானே தன்னை தண்டித்துக் கொண்டார். மூன்று நாள் உபவாசம் இருந்தார், என்று குறிப்பிட்டார். இது ஏற்றுக் கொள்ள வேண்டியது தான். நம் சாஸ்திரங்களும் நித்யகர்மாவைச் செய்தால் பலன் கிடையாது ஆனால், செய்யாவிட்டால் பிர்த்யவாயம் உண்டென்று சொல்லுகிறது ஷை அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியது தான்.

இரண்டாவதாக அவர்களின் முன்னேற்றத்திற்காக என்று சொல்வார்களேயானால் இதை விட இரக்கப்படத்தக்க விஷயம் யாதென்றுமில்லை! வாஸ்தவந்தான். ஹரி ஜனங்கள் மிகவும் கீழான நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களை முன்னுக்குக்கொண்டு வர வேண்டியது தான். இது ஒவ்வொருவனுடையவும் இன்றியமையாத கடமையாகும். ஒருவன் ஆபத்துக்கு உள்ளாகி இருந்தானேயாகில் அவனை உத்தாரணம் செய்ய வேண்டியது தான. சேரிகளில் கண்டபடி ஆபாசம் செய்கிறார்கள். குளிப்பது என்பது. கிடையாது.

முதலாவதாக தொத்து நோய்கள் அவர்களிடையே பிறக்கின்றன. காலரா முதலிய நோய்கள் சேரிகளில் தான் முதலில் காணப்படுகிறது. இதற்கு மூலகாரணம் அவர்கள் அசுத்தமாக இருப்பதே. அதை நாம் முதலாவதாகக் கவனிக்க வேண்டும். நாமே நேராகவாவது பிறர் மூலமாகவாவது சேரிகளுக்குச் சென்று குப்பை முதலிய அசுத்தங்களை சேரிகளுக்கு வெகு தூரத்தில் போடும்படியாகவும், அவர்களை தினம் ஒரு முறையாவது குளிக்குமாறும், வேஷ்டிகளை கூடியமட்டில் சுத்தமாக வைத்துக் கொள்ளும்படியாகவும் செய்ய வேண்டும். இவ்விதமாகப் பாடுபட்டு சுத்தமாக இருக்கப் பழக்கி வந்தோமேயானால் கோவில் போய் சுவாமி தரிசனம் செய்யும் பாக்கியத்தை அவர்கள் தானே யடைந்து விடுவார்கள். நாம் ஒரு சட்டமாகக் கொண்டு வரவேண்டிய ஆவச்யமே கிடையாது.

அவர்கள் இவ்விதமாக தினம் ஒரு முறை ஸ்நானம் செய்தலும் மாம்சாதிகளை அதிகமாக உட்கொள்ளாமலும் சுத்தமான வஸ்திரங்களை தரித்துக் கொண்டும் தங்கள் குல தெய்வத்தை தினம் ஒருமுறையாவது தொழுது வருவார்களேயானால் பகவான் அவர்களின் மேல் இரக்கம் கொண்டு மேற் பிறவிகளைக் கொடுத்து அவர்களுக்குக் கோவிலில் போய் சுவாமி தரிசனம் செய்வதற்குள்ள அநுக்கிரஹத்தைச் செய்கிறார். அஃதில்லாமல் ஒரு பஞ்சமனைக் கூப்பிட்டு "டேய் நீ முழுகுடா! விபூதி பூசிக்கொள். வா கோவிலுக்கு என்று அழைத்தால் அவனே உண்மையாக நடுங்குகிறான். இது பலாத்காரப் பிரவேசமே யொழிய நியாயமான முறையாகாது.

எஸ். ராமசந்திரன்.

## மதிப்புரை

### ஸங்கிராந்தி பூஜை கோபூஜை

இப்புஸ்தகம் பண்டித சிரோமணி ஸ்ரீமான் காசி விச்வநாத சாஸ்திரிகளால் தொகுக்கப்பட்டது. இதில் மகா ஸங்கிராந்தி தினத்தில் செய்யவேண்டிய ஸ்ரீ ஸூர்யநாராயண பூஜா விதிகள் நன்கு எழுதப்பட்டுள்ளன. த்யானம், ஆவாஹநம், அர்ச்சனை நமஸ்காரம், முதலியவைகளுக்கு வேண்டிய மந்திரங்கள் யாவும் எளிதாகப் புரியும் படி தமிழ் எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

ஸங்கிராந்திக்கு மறுதினம் செய்யப்படும் கோபூஜா விதிகளும் தமிழில் நன்கு எழுதப் பட்டுள்ளன. எல்லா ஹிந்துக்களுக்கும் இப்புஸ்தகம் மிக்க உபயோகமுள்ளது. விலை அணா 2 பி.டி. பாணிகம்பெனி திருவல்லிக்கேணி சென்னை என்ற விலாஸத்திலும், கும்பகோணம் ஜனார்த்தன பிரஸிலும் கிடைக்கும்.

### பிரமாதி ஸூ வாக்ய பஞ்சாங்கம்.

யாழ்ப்பாணம் நொக்குவில் இரகுநாதய்யர் புத்திரர் ஸ்ரீமான் சிவராமலிங்கய்யரால் கணிக்கப்பட்ட ஷை பஞ்சாங்கம் வரப்பெற்றோம் வழக்கம்போல் இதில் அநேக முக்ய விஷயங்கள் அடங்கியுள்ளன. விலை 25 சதம்

### கும்பகோணம்.

மோஹனாவதார அலங்காரகாக்ஷி.

இவ்வூர் ஸ்ரீ சக்கிரபாணிஸ்வாமி ஆலயத்தில் நாளது மார்கழி-மீ 14உ வியாழக் கிழமை தினம் அவ்வாலய கைங்கர்யம் ஸ்ரீ தேசிகாச்சார்யஸ்வாமிகள் அவர்களின் விடாமுயற்சியினால் அவ்வாலயத்தில் நடைபெற்றுவரும் பகல்பத்து உத்ஸவத்தின் 4-ம் திருவிழாவன்று, ஸ்ரீ சக்கிரபாணிஸ்வாமிக்கு அபிஷேகம் அலங்கார ஆராதனைகளும், மாலை 5-மணிக்குமேல் ஸ்ரீ சக்கிரபாணிஸ்வாமிக்கு மோஹனாலங்காரத்துடன் ஷை ஆலய ப்ராகாரத்தில, பிரமணமும், அதுகாலையில் இவ்வூர் நாதஸ்வர வித்வான் ஸ்ரீ இராமியாபிள்ளை அவர்களின் நாதஸ்வரக் கச்சேரியுடனும், நடைபெற்றது. ஸ்வாமியின் படியேற்று உத்ஸவ சமயத்தில், இவ்வூர் ஸ்ரீ பாருமதி சகோதரியினால் 8 படிக்கும் 8 கீர்த்தனங்கள் ஸ்ரீ ராமர்மீது ஸ்தோத்திரம் பாடியதும் விசேஷமானதாகும். இரவு 8 மணிக்குமேல் இவ்வூர் பிரம்மஸ்ரீ இரகுநாத பாகவதர் அவர்களினால் விபீஷணர் சரணாகதி கதாகாலக்ஷேபமும் தக்க உபஸாதகர்களுடன் நடந்தேறியது. ஸ்ரீ தேசிகாச்சாரியஸ்வாமிகளவர்கள் ஆண்டுகள் தோறும் இவ்வரிய உத்ஸவத்தை தாம் மிக்க பக்தி சிரத்தையுடன் நடத்தியதும் ஷை ஆலய டிரஸ்டிகள் இவ்வுத்ஸவத்திற்கு தக்கபடிக்கு உதவிபுரிந்ததும் குறிப்பிடற்பாலது.

ஒரு நிருபர்.


திவான்பகதூர். ராமநுஜாசாரியார். அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| திருவாய்மொழி (3 வால்யூம்) | 7 | 8 | 0 |
| கீதார்த்தசங்கிரப் பாட்டுகள் | 0 | 6 | 0 |
| ஸ்ரீமத் கீதாபாஷ்யம் (3 வால்யூம்) | 3 | 0 | 0 |
| யதீந்த்ரமத தீபிகை. | 4 | 0 | 0 |
| ராமாயணசாரம் (பைண்ட்) | 1 | 8 | 0 |
| ஷை (ராப்பர்) | 1 | 4 | 0 |
| சித்திர ராமாயணம் (பூஜையில் இருக்கக்கூடியது). | 1 | 0 | 0 |
| ராமாயணஸாரம்,(ராப்பர்),சித்திர ராமாயணம், இரண்டும் சேர்ந்து. | 2 | 0 | 0 |

ஸ்ரீ ஜனார்தன ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

15

அர்பதர்மம்

4 ௳ 2
24

12-1-1939

215266

665
30 JAN 1939 MADRAS
215266
665 17

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ்यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 24 கும்பகோணம் கலி5039 பகுதான்ய-ஹூ மார்கழி-மீ 28உ 1939-ஹூ ஜனவரி-மீ 12உ ஸ 2

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு. 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## சென்னை புதிய மந்திரி

### ஸ்ரீமான் வார்க்கீ நியமனம்.

ஸ்ரீ ராமன்மேனன் காலமானதால் ஏற்பட்ட காலி ஸ்தானத்திற்கு பார்லிமெண்டு கார்யதர்சியாக விருந்த ஸ்ரீமான் வார்க்கீ என்பவர் மந்திரியாக நியமிக்கப்பட்டார் இவர் கல்வி மந்திரியாக வேலைபார்ப்பார். டாக்டர் சுப்பாாயன், நீதி, சிறை இலாகா மந்திரியாக மாற்றப்பட்டார்.

## ராஜீய ஏஜெண்ட் கொலை.

### ரான்பூரில் சம்பவம்.

ரான்பூர் ஸம்ஸ்தானத்தின் பொதுஜனங்கள் கிளர்ச்சி நடத்தி வருகையில் ராஜீய ஏஜெண்டான மிஸ்டர்கெட்டிஎன்பவர் தமது கைத்துப்பாக்கி பிரயோகம் செய்து கலவரத்தை அடக்கமுயன்றாராம். அதில் கோபமடைந்த ஜனங்கள் அவரை அங்கு அடித்துக் கொன்றுவிட்டார்கள்.

## கொச்சியில் வைஸ்ராய்.

கனம் வைஸ்ராயும் அவரது மனைவியும் கொச்சி ஸம்ஸ்தானத்திற்கு விஜயம் செய்தனர். உற்சாஹமான வரவேற்பு நடந்தது. ஸம்ஸ்தானவிருந்தில் ஸமஷ்டியை ஆதரித்து வைஸ்ராய் பேசினர். அங்கிருந்து திருவனந்தபுரம் சென்றார்.

## பொப்பிலி ராஜா கண்டனம்.

ஸமீபத்தில் சென்னையில் நடை பெற்ற ஜஸ்டிஸ் கக்ஷிக்கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்களையும், பேச்சுக்களையும் தாம் அங்கீகரிக்கவில்லையென்றும் அவைகளை ஆக்ஷேபிப்பதாயும், தாம் ஏற்கனவே ஜஸ்டிஸ் கக்ஷியிலிருந்து விலகியிருப்பதாயும் தாம் எந்தக் கக்ஷியையும் சேர்ந்தவரல்லவென்றும் பொப்பிலிராஜா ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

## தெய்வ நிந்தை.

### ஜே. கிருஷ்ணமூர்த்தி மீது கோபம்.

தியாஸபி ஸங்கத்தைச் சேர்ந்தவராக நினைக்கப்படும் ஜே. கிருஷ்ணமூர்த்தி என்பவர் லாகூரில் பேசுகையில் பொதுவாக ஸிருஷ்டிகர்த்தாவான தெய்வத்தைப்பற்றியும் குறிப்பாக சீக்கிய குருக்களைப்பற்றியும் நிந்தையாகப் பேசினதுபற்றி சீக்கிய ஸமூஹம் மிகுந்த கோபமடைந்து அவரைக் கண்டிக்கிறது.

## மரணவரி ஆலோசனை.

சென்னை மாகாணத்தில் மாணவரி விதிப்பதைப்பற்றி ஆலோசிப்பதற்காக இந்தியா கவர்ன்மெண்டாரால் அனுப்பப்பட்ட மிஸ்டர் லாயிட் என்பவர் சென்னைவந்து ஸர்காருடன் இவ்விஷயமாக யோசனை செய்தார்.

## காந்தி—ஆகாகான் ஸந்திப்பு.

வார்தாவில் ஸ்ரீகாந்தியைக் கண்டு கனம் ஆகாகான் பேச ஏற்பாடாகி யிருக்கிறது. இப்பேச்சின் மூலமாக ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைப் பேச்சு பலப் படஹேது உண்டென்று நம்பப்படுகிறது.

## ஸமஷ்டி கோர்ட் ஜட்ஜ் பதவி.

ஸ்ரீமான் ஜயகர் பிரிவி கௌன்ஸில் ஜட்ஜாக நியமிக்கப்பட்டுவிட்டதால் அவருடைய ஸ்தானத்திற்கு ஸர். அல்லாடியாவது ஸர். எம். வெங்கடஸுப்பாராவாவது ஜட்ஜாக நியமிக்கப்படலாமாம்.

## குடந்தையில் ஹிந்தி ஆதரவு ஆர்ப்பாட்டம்.

டிஸம்பர் 7உயன்று கும்பகோணத்தில் ஹிந்தி ஆதரவு ஆர்ப்பாட்டம் பலமாக நடத்தப்பட்டது. பல விடங்களில் காங்கிரஸ் கொடி பறக்கவிடப்பட்டது. பெரிய ஊர்வலம் நடத்தப்பட்டது. காங்கேயன் பார்க்கில் ஸ்ரீமான் கே. ஸந்தானத்தின் தலைமையில் பெரிய பொதுக்கூட்டம் நடந்தது. பத்தாயிரம் ஜனங்கள் கூடியிருந்தனர். ஹிந்தியை ஆதரித்தும் மந்திரி ஸபையை ஆதரித்தும் பல தலைவர்கள் பேசினர்.

ஊர்வலத்தில் சிறிது கலவரம் ஏற்பட்டதன் காரணமாகச் சிலருக்குக் கல்லடியும் காயமும் ஏற்பட்டது.

## மாணவர்களின் துஷ்டத்தனம். பள்ளிக்கூடத்திற்கு தீ ?

முன்ஷிகஞ்ஜ் என்ற ஊரில் ஒரு பள்ளிக்கூடமாணவர்கள் பரிக்ஷையில் தோாததால் கோபமடைந்து அந்தப் பள்ளிக்கூடத்திற்கு தீ வைத்து எரித்து விட்டனராம்.

## ஸர் பாத்ரோவுக்கு பதவி.

ஸர். ஏ. ராமஸாமி முதலியார் இந்தியா கவர்ன்மெண்ட் வியாபாா மெம்பாாக நியமிக்கப்பட்டுவிட்டதால் அவருடைய ஸ்தானத்திற்கு ஸர் பாத்ரோ இந்தியா மந்திரிஸபை மெம்பாாக நியமிக்கப்படுவாராம் ?

## திருவாங்கூரில் விடுதலை.

திவான்மீது சாட்டிய குற்றத்தை வாபீஸ் வாங்கிகொண்ட காரணமாக, காங்கிரஸ் தலைவர்கள் மீது தொடரப்பட்டிருந்த ராஜத்வேஷ வழக்குகள் வாபீஸ் வாங்கப்பெற்று அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

## 2 ஆயிரம்பேர் கொலை.

பாலஸ்தீனத்தில் ஏற்பட்டுள்ள ராஜீயக் கலஹம் காரணமாக இதுவரையில் 2 ஆயிரம் பேர்கள் கொலைசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

## கடவுளின் உபயோகம்.

### 1. ஜகத்காரண வஸ்து.

நவீன வித்யாப்யாஸத்தின் நிதர்சனமாயிருந்த ஒரு தனிகர் எப்படியோ ஸ்ரீமஹாஸ்வாமிகளவர்களின் ஸன்னிதிக்கு பாக்ய வசத்தால் இழுக்கப்பட்டு வந்து சேர்ந்தார். அப்பொழுது நடந்த ஸம்பாஷணையில்:—

ஸ்ரீமஹாஸ்வாமிகள்;—உங்களுக்கு ஸாவகாசம் ஜாஸ்தி இருப்பதாகத் தெரிகிறது. அதை எப்படி உபயோகிக்கிறீர்கள் ?

தனிகர்;—'நான்' உபயோகிக்கிறேனென்று சொல்வதற்கில்லை. அதுவாகவே போகிறது.

ம:—பொழுதுபோகவில்லையென்று குறை சொல்லிக்கொண்டிருக்கிறவர்களின் ஜாப்தாவில் நீங்கள் சேரவில்லையென்று தெரிகிறது.

த;—இல்லைதான்.

ம:—மிகவும் ஸந்தோஷம். நம் ஆயுஸ்ஸில் ஒவ்வொரு க்ஷணமும் எவ்வளவு விலையுயர்ந்த தென்று நாம் அறிந்து கொண்டால், பொழுது போகிறதே, அதுவும் அதிசீக்ரமாய்ப் போய் விடுகிறதே, என்று தான் வாஸ்தவமாகக் குறை சொல்லிக்கொள்ள வேண்டும்.

த:—பொழுது போகிற விஷயத்திலும் நான் கவலைப்படுகிறதில்லை.

ம:—பொழுதை வீணாக்குகிறவர்கள் தான் பொழுது போகிறதேயென்று விசாரப்படுவார்கள். நன்றாகவே தன் காலத்தைச் செலவழிக்கிறவர்கள் இப்படி விசாரப்பட மாட்டார்கள். நீங்கள் இந்த ஜாப்தாவில் சேர்ந்தவர்கள்போலும்.

த:—அதுவுமல்ல. காலம் போகவேண்டுமென்பது மாத்திரம் எனக்குத் தெரியும். நன்றாகவோ, நல்லதன்னியிலோ, எப்படிச் செலவழித்தாலும் காலம் போயே தீரும். தவிரவும், எப்படிச் செலவழித்தால் நல்லது, எப்படியானால் நல்லதல்ல, என்று சொல்வதற்கு யாதொரு பிரமாணமும் தெரியவில்லை.

ம:—வாஸ்தவம். ஆனாலும், நம்முடைய மனோ நிலையையாவது மற்றொருவருடைய மனோநிலையையாவது விகாரப்படுத்தாமலிருக்கும் வழியில் எப்படியோ காலத்தைச் செலவழித்தால் மனது அமைதியாயிருக்கிறதல்லவா ?

த:—மனது கலக்கமற்று அமைதியை அடைவது தூக்கத்தில் தான் முடியும்.

ம:—வாஸ்தவம். ஆனால் எப்பொழுதும் தூங்கிக்கொண்டிருக்க முடியவில்லையே ? விழித்துக்கொண்டிருக்கும் போதும் அமைதியை அபேக்ஷிக்கிறோமல்லவா ? மனதில் ஒருவித விருத்தியும் தோன்றாமல் சூன்யமாக உட்கார்ந்திருக்க முடியாது. மனதிற்கு ஏதாவது ஒரு வேலை கொடுத்தாக வேண்டும். நம் மனதின் சாந்தியைக் கொடுக்கக் கூடியதான பொய்யாகவோ நிஜமாகவோ உள்ள விஷயங்களைப்பற்றியாவது, நமக்கு ஸம்பந்தப் படுத்தி நம்மிடத்தில் காமக்ரோதாதிகளைக் கிளப்பி விடக்கூடிய விஷயங்களைப்பற்றியாவது சிந்திப்பதைவிட, ஜகத்தின் உத்பத்தி முதலான தத்வ விஷயங்களை சிந்தித்தால் கெடுதலுக்கே இடமில்லையல்லவா ?

த:—அதெல்லாம் வெறும் ஆகாசப் பந்தல்தானே ?

ம:—இருக்கட்டுமே அதினால் என்ன ? அதினால் யாருக்கும் பாதகமில்லை; உங்கள் மனதிற்கும் பாதகமில்லாமல் ஒரு வேலை கிடைக்கிறது. அதினால் அநுகூலம் கூட உண்டு என்று என்னைப்போல் சிலர்கள் நினைக்கிறார்கள், நாங்கள் நினைப்பது சரியா, இல்லையா, என்பது ப்ரக்ருதமில்லை. இவ்வித ஆலோசனையில் கெடுதல் உண்டென்று நீங்கள் சொல்லமுடியாது.

த.—அப்படியே யிருந்தாலும், இதற்கு என்னப் பிரயோஜனம் ?

ம:—பொழுது போக்கவே ஸாதனமாகிறது. இதற்குமேல் என்னப் பிரயோஜனம் உங்களுக்குவேண்டும் ? நாங்கள் சொல்லுகிறபடி வேறு பிரயோஜனமும் இருந்தால் இருக்கட்டும். இல்லையானாலும், உங்களுக்கு நஷ்டமில்லை. ஆகையால், சிறிது காலத்தையாவது தத்வ விசாரத்திலும், அதுஸம்பந்தமான விஷயங்களிலும், பொழுது போக்கும் நோக்கத்துடனாவது செலவழிக்கக் கூடாதா ?

த:—சில புஸ்தகங்கள் வாசித்திருக்கிறேன். ஆனால், அவை எல்லாம் வார்த்தையும் சப்த ஜாலமுமாகவே இருக்கின்றன.

ம:—புஸ்தகங்களில் வேறு என்ன இருக்க முடியும்! தங்கள் சொந்த ஆலோசனையையும் அவைகளுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த விஷயமாக சில கிரந்தங்களைப் பார்த்திருப்பதாக நீங்கள் சொல்வதினால், ஜகத்தின் உத்பத்தி, ஈசுவரனின் உண்மை, முதலான விஷயங்கள் ஸம்பந்தமாய் உங்களுக்கு ஒருவிதமாக மனோபாவம் ஏற்பட்டிருக்கவேண்டுமே ?

த:—இப்படித்தான் என்று நிச்சிதமான மனோபாவம் புஸ்தகங்களிலிருந்து ஏற்படுகிறதில்லை. ஒவ்வொரு கிரந்த கர்த்தாவும் ஒவ்வொரு விதமாக புத்தியைச் செலுத்திப் பார்க்கிறார்கள். மற்றவர்களின் வழியைவிட, தன் வழியே உயர்ந்தது என்று காட்ட முயலுகிறார்கள். மேலும், வஸ்து ஸ்திதியில், இதுபோன்ற விஷயங்களில் குறிப்பாக இப்படித் தான் தத்வம் என்று ஏற்படவே முடியாது. ஸந்தேஹத்திற்கு இடமன்னியிருக்கும் பொருட்டு ஒரு கிரந்த கர்த்தா எவ்வளவோ சிரமப்பட்டு நிர்வசனம் செய்தாலும், அதுவே முடிவான தீர்மானம் என்று சொல்ல முடியாது. அவரைவிட புத்திசாலியாக இன்னொருவர் கிளம்பி இதை ஆதாரமற்றதென்று நிர்வசனம் செய்து விடலாம்.

ம:—யுக்தியினால் மாத்திரம் தீர்மானிக்க யத்தனித்தால் இப்படித்தான் இருக்கும். சில்லரையான அவாந்தர விஷயங்களில் உள்ள வித்யாஸங்களையும் பாராட்டாமல், இந்த ஜகத்திற்கு உத்பத்தி உண்டென்றால், வேற்றுமையன்றி ஒரு காரண வஸ்துவினிடமிருந்தே இந்த ஜகத் உண்டாயிருக்கவேண்டும், என்ற விஷயத்தையாவது நவீன தத்வ ஆராய்ச்சிக்காரர்கள் ஏகமனதாய் ஒப்புக்கொள்கிறார்களா ?

த:—அக்காரண வஸ்துவின் தன்மையைப் பற்றிப் பலவிதமான கொள்கைகள் இருந்த போதிலும், ஒரு காரண வஸ்து உண்டு என்ற விஷயத்தில் அதிகமாக அபிப்ராய பேதம் இல்லை. ஸ்ருஷ்டிக்கு முன் ஸ்வரூபமற்று எல்லாம் அணுஸமூஹமாயிருந்ததென்று நினைக்கிறார்கள்.

ம:—அப்படியே நம் தார்க்கிகர்களின் அபிப்ராயமும். ஸ்ருஷ்டிக்கு முன், அவ்வணுக்கள் அசைவற்று இருந்தனவா ? சலித்துக் கொண்டே இருந்தனவா ?

த.— அணுக்கள் எப்பொழுதுமே நிச்சலமாக இரா, எப்பொழுதும் சக்தி நிறைந்து இடைவிடாது சலித்துக்கொண்டேயிருக்கும் ஸ்வபாவமுள்ளவைகள், என்றே இப்பொழுதுள்ள பௌதிக சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

ம:—இவைகளுக்கு வெளியிலிருக்கிற வேறு ஒரு சக்தி இவைகளை சலிக்கும்படி செய்கிறதென்று நினைக்கிறார்களா? அல்லது வேறு விதமாகவா?

த:—அணுவுக்குள் அடங்கியிருக்கும் அனந்த சக்தியே ஸ்தூல ரூபம் தரிக்கும்போது அணுவாகிறது, என்று இப்பொழுது கடைசியாய்ச் சொல்கிறார்கள்.

ம:—எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். அணுவுக்கு ஸ்திதியைக் கொடுத்து அதை ஒரு வஸ்துவாக்கி, அதன் சேஷ்டைகளுக்குக் காரணமாயிருப்பது ஒரு சக்தியென்று அறிந்திருக்கிறார்களல்லவா ?

த:—ஆம்,

ம:—எல்லா அணுக்களிலும் இருக்கும் அந்தச் சக்தி ஏகரூபமாயும் அளவிடக் கூடாததாயும் இருக்கவேண்டுமென்பதையும் ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும் ?

த:—ஆம்.

ம:—சக்தி பலவித பரிணமத்தை அடையக் கூடியதாகையால், ஒரு அணுவிலுள்ள மூல சக்திக்கும் இன்னொரு அணுவிலுள்ள மூல சக்திக்கும் வித்யாஸம் உண்டென்று சொல்ல நியாயமில்லையே ?

த:—இல்லைதான்.

ம;—ஆகையால் அனந்தமான யோக்கியதை வாய்ந்து சிற்சில ஸந்தர்ப்பங்களில் அணுக்களாகத் தோன்றக்கூடிய மூலசக்தி ஒன்றே என்று வைத்துக்கொண்டால் ஸௌகர்யமில்லையா ?

த:—மேற்கு தேசத்திய தத்வ சாஸ்திரிகளும் வரவர இந்தத் தீர்மானத்திற்கே நெருங்கி வருகிறார்கள்.

ம.—யுக்தி என்றால், அப்படித்தான்வரும் இந்த அனந்த சக்தியே ஜகத்தின் மூல காரணமான பிரகிருதி பதார்த்தம் ஆகும்.

த:—ஆம்.

ம:—ஆனால், ஜகத் என்பது அணுக்களின் கார்யமான அசேதனம் மாத்திரம் அடங்கியதல்ல. நீங்களும் நானும் இருக்கிறோம். நம்முடைய சரீரங்கள் அசேதன வர்க்கத்தில் சேர்ந்தவைகள் தான். இவைகளைத் தவிர, அசேதன வர்க்கத்தில் சேர்க்க முடியாததான ஒரு சேதன ரூபமான அறிவுப் பிரகாசம் நம்மிடம் இருக்கிறது. ஜகத்துப் பூராவையும் பரிசீலனை செய்கிறதானால், இப்பிரகாசத்திற்கும் காரணம் சொல்லவேண்டும். நவீன விமர்சகர்கள் இதற்கு என்ன சொல்கிறார்கள் ?

த:—ஸாதாரணமாக பௌதிகப் பிரபஞ்சத்தைப்பற்றி மாத்திரம் தான் அவர்கள் விசாரிக்கிறார்கள்.

ம:—மற்றொரு அம்சத்தையும் சிலர்களாவது விசாரித்து இருக்கவேண்டுமே ?

த:—சிலர்கள் விசாரித்திருக்கிறார்கள். ஆனால் நம்மிடமுள்ள சேதனாம்சங்களுக்கெல்லாம் ஒரு மூலகாரணம் உண்டென்று அவர்கள் சொல்வதாகத் தெரியவில்லை. அவ்வம்சங்கள் நம் சரீரங்களை தவிர்த்து வேறு இல்லையென்றாவது, அல்லது அனாதி ஸித்தமாய் மற்றொரு காரணத்தை அபேக்ஷிக்காமலே இருக்கின்றனவென்றாவது, வைத்துக் கொண்டு வருகிறார்கள்.

ம:—அப்படியே ஜகத்துக்கும் ஆதியும் கிடையாது, வேறு காரணமும் கிடையாது, என்று வைத்துக் கொள்வதற்கென்ன ?

த:—ஜகத்தில் தோன்றும் பலவிதவேற்றுமைகளுக்கு ஸமாதானம் சொல்லவேண்டாமா ?

ம:—அப்படியானால், ஜீவர்களிடம் தோன்றும் வேற்றுமைகளுக்கும் ஸமாதானம் சொல்லவேண்டியதுண்டல்லவா ?

த:—வெளிப்படையான அம்சங்களை தள்ளிவிட்டுப் பார்த்தால், ஒரு ஜீவனுக்கும் மற்றொரு ஜீவனுக்கும்வித்யாஸமுண்டென்று எப்படிச் சொல்ல முடியும் ?

ம:—அப்படியே தான் பௌதிகப் ப்ரபஞ்சத்திலும், வெளிப்படையான அம்சங்களைத் தள்ளிவிட்டுப் பார்த்தால், ஒரு அணுவுக்கும் மற்றொரு அணுவுக்கும் வித்யாஸமுண்

(தொடர்ச்சி 3 ம் பக்கம் பார்க்க)



(2ம் பக்கத்தொடர்ச்சி)

டென்று சொல்லவும் நியாயம் கிடையாது. வாஸ்தவத்தில், நீங்களே எல்லா அணுக்களும் பேதமற்ற ஒரு மூலகாரணமான சக்தியிலிருந்து வந்தவைகள் என்று சொல்லவில்லையா ?

த:—ஆம்.

ம.—நான் கேட்பதென்ன வென்றால், அதே மாதிரி அதே யுக்தியை அனுஸரித்து, வெவ்வேறாகத் தோன்றும் அனந்தமான ஜீவர்களுக்கும் மூலகாரணமாக ஓர் ஆதி சேதன பதார்த்தம் உண்டென்று ஒப்புக் கொள்ளவேண்டாமா? என்பது தான்.

த.—அப்படியே வைத்துக் கொள்வோம்.

ம.—அப்படியானால், நவீன தத்வ சாஸ்திரிகளின் விசாரணைக் கிரமத்தை அனுஸரித்துப் பார்த்தாலே, பௌதிக பிரபஞ்சத்திற்கு மூல காரணமாக ஒரு சக்தியும், ஜீவப்பிரபஞ்சத்திற்கு மூலகாரணமாக ஒரு சேதனமும் உண்டென்று ஏற்படுகிறது. அவ்விரண்டு மூலகாரணங்களும் அனந்தமாக விஸ்தாரத்தை அடையும் யோக்யதையுடையவைகள் என்றும் சொல்ல வேண்டும்.

த:—அப்படியே.

ம:—இப்படியிருக்க, இரண்டு மூலகாரணங்கள் இருக்கின்றன வென்று வைத்துக்கொள்வதை விட ஒரே காரண வஸ்துத்தான் உண்டு, அதையே சைதன்யத்துடன் கூடின சக்தியென்றாவது வியவஹரிக்கலாம், என்றால் இன்னம் சௌகர்யம் ஏற்படுகிறதல்லவா?

த:—வாஸ்தவம்.

ம:—நம் ஸித்தாந்தத்தில் இதைத் தான் சொல்கிறோம். மூல காரணத்தை சைதன்யத்துடன் கூடிய ஒரு சக்தி யென்று வியவஹரிக்கும் போது சக்தி என்றும், சக்தியோடு கூடின சைதன்யமென்று வியவஹரிக்கும் போது சித் என்றும், சொல்கிறோம்.

த:—தெரிந்துகொண்டேன்.

ம:—இப்படிச்சொல்வதிலும், சக்தியும் சைதன்யமும் அத்யந்தஸம்பந்தப்பட்டு கலந்திருந்த போதிலும் இரண்டு தனித்தனி அம்சங்களாகவே தோன்றுகின்றனவல்லவா

த:—ஆம்.

ம:—ஆகையால், இன்னமும் ஸௌகர்யத்தை அபேக்ஷிக்கும் போது, மூல காரணத்தில் சக்தி, சித், இவ்விரண்டுக்கும் ஸமானமான ஒரே தர்மம் தான் இருப்பதாக வைத்துக் கொண்டு விடலாம். அதுவே பௌதிகப்பிரபஞ்ச ரீதியாய்ப் பார்க்கும் போது சக்தியாகவும், ஜீவப்பிரபஞ்ச ரீதியாய்ப் பார்க்கும் போது சைதன்யமாகவும், தோன்றுகிறது. அதாவது, அம் மூலகாரணம் தன்னிடத்தில் அம்சமற்ற "சித்-சக்தி" என்று சொல்லலாம். அதையே பிரஹ்மம் என்கிறோம். சித்தும் சக்தியும் அதன் அம்சங்களேயாவதால், அதை "இருக்கிறது" என்று தான் சொல்லலாம். ஆகையால் அதற்கு வெறும் 'ஸத்' என்று பெயரிடப்பட்டிருக்கிறோம்.

த.—ஆனாலும், இதெல்லாம் வெறும்மனக் கல்பனை தானே?

ம:—இது வாஸ்தவமென்று சொல்லி கோஷிக்கிற வேதங்களாகிய சாசுவதமான பிரமாணத்தைக் கவனிக்காத பக்ஷத்தில், கல்பனையே தான். கல்பனையாயிருந்தால் தான் என்ன? முன் சொன்னபடி, இதினால் யாருக்கும் எவ்விதக் கெடுதலும் இல்லை.

த:—நம் புத்தி பலத்தை இதில்செலவழிப்பதற்கு இந்தக் காரணம் போதுமா?

ம:—வேறு விஷயங்களில் செலவழிப்பதைவிட, இதில் செலவழிப்பது எவ்வளவோ மேலாகும். தவிரவும், இதில் ஓர் அனுகூலமும் இருக்கிறது.

த:—அதென்ன? (தொடரும்)

# வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா.)

மனோ வளர்ச்சியைத் தரும்! பாஷை ஸம்ஸ்கிருதம் என்று மைசூர் திவானை ஓர் துருஷ்கர் புகழ்கிறார். ஆர்யரோ வேதகாவ்யங்களைக் கற்பது குறைவென கருதுகிறார்.

கொடுமை! கொடுமை! 400 அபிஸீனியரை இடாலி நாட்டவர் உயிருடன் தீ வைத் தெரித்தனராம்!!

சிறுபிள்ளைத்தனமே!! கல்கத்தாவில் ஸ்ரீ ஜவஹர்நேரு மாணவர் வேலை நிறுத்தம் செய்வதும் உண்ணாவிருதமிருப்பதும் சிறுபிள்ளைத்தனமென கண்டிக்கிறார்! இவர் யோசனை ?

முந்துகிறது! ஆந்த எனும் ஸமஸ்தானம் குடிகளுக்கு ஆக்ஷியில் சிறிது பாகத்தைக் கொடுத்து ஜநநாயக சீர்திருத்தத்தை ஆரம்பிக்கிறது? அந்தபரம்பரையாய் அதிலுள்ள கஷ்டங்களை உணராமல் தேசம் அதைப் பின்பற்றும்போது வீண் சண்டைவளராமல் முந்திக்கொண்டது சிறந்ததே!

பாமரரை ஏய்க்கின்றனர்! காந்திஜி கூறுவது போல் ஒவ்வொருவருக்கும் விஷயத்தைக் கூறி அவர் மனம்போல் நடக்கவிடும் தேசாபிமானி மிக அரிது! மலையாளத்தில் ஒருவர் எனக்கு காந்தி ஆவேசம் வந்திருக்கிறது! எனது வழக்கை நடத்த நீங்கள் பணந்தரவேண்டுமென்கிறாராம்!

நற்சொல்!! எம். ஸி. ராஜா என்பவர் தனது ஜாதி பஞ்சமரை அந்யமதத்தில் சேராமல் இந்துவாகவே இருந்து மன்றாடும்படி கூறுகிறார்!

வீண் சண்டை! ஜின்னா நேரு வாதங்களால் இரு இனத்தவருக்கும் மனக்கசப்பு அதிகமாகிறதே தவிற சண்டை ஓயப்போவதில்லை! பேச்சை நிறுத்தி கார்யத்தில் ஒற்றுமையை வளர்த்தல் நலம்!

பிச்சைக்கார விடுதிக்கு 2 லக்ஷம்! கொடுத்து பாம்பே அரசாங்கம் அவர்களை உணவளித்து காக்கிறது! சென்னையோ!

அழிவிற்கே காரணமிது! லண்டனில் இளைஞர் நகரம் ஒன்று நிர்மாணித்து அதில் அழகிய நாடகசாலையுமமைத்திருக்கிறார்களாம்!! பெற்றோர் பெரியோர் சொல்லுக்கடங்காமல் தனியே இத்தகைய இடத்தில் வசித்தால் போதும்!!

மதம்! ஜநநாயகம்!! யோக்யதை!! இம்மூன்றும்முதலில் அழியாமல் காக்கத்தக்கது என்கிறார் அமெரிக்கத்தலைவர்! நம் நாடு?

சொல் பலிக்கிறது! ஸ்ரீஸத்யமூர்த்தி அய்யரின் வாதம் அரசியலில் ஓங்கிநிற்பது வழக்கம்! சீர்திருத்தத்தை சிதற அடிப்போமென்பவர் அரசாளுகின்றனர்!! ஸமஷ்டியை சில திருத்தத்துடன் ஏற்கலாமென்கிறாவர்!

பசு வதைக்கு 6மாத சிக்ஷை! ஸாஹிதராபாத்தில் ஐக்ய மாகாண சட்டஸபை அங்கத்தினரிருமுகம்மதியர்கள் பசு வதை செய்ததற்காக ஆறு மாத சிக்ஷை விதிக்கப் பட்டனர்.

பணையூர் குரு குல தலைவர்! பிரும்மஸ்ரீ யக்ஞேச்வர தீக்ஷிதரவர்கள் மாணவருடன் சிறிது காலம் பக்ஷி தீர்த்தத்தில் தங்கி ஸங்க்ராந்திக்குப்பிறகு பணையூர் செல்வார்.

## கும்பகோணம்.

ஸ்ரீ ஆதி கும்பேசுவரர் ஆலய உற்சவம்.

இவ்வாலயத்தின் திருவாதிரை உற்சவம் சில வருஷங்களாக நடைபெறாத கோலாட்ட உற்சவம் முதலியவைகளுடன் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. திருவாதிரை தினத்தன்று லலித கலா வல்லப ஸ்ரீமான் வாதிராஜ பாகவதர் அவர்களால் நந்தனார் ஹரிகதாகாலக்ஷேபம் 7மணிமுதல் 10½மணி வரையில் அவருடைய புதுக் கோஷடியுடன் வெகு அழகாயும் பக்தி ரஸத்துடனும் ஏராளமான ஜனத்திரள்களுக்கு முன் செய்யப்பட்டது. ஏற்கனவே இவர் செய்துள்ள கபீர்தாஸ் போன்ற கதைகளால் ஹிந்தி முதலிய பாஷைகளிலுள்ள தேர்ச்சி வெளியாயிற்று. இந்த காலக்ஷேபத்தினால் தமிழிலுள்ள தேர்ச்சியும் சைவ சமயாசாரியர்களால் புகழப்பெற்ற நாயன்மார்களின் சரிதங்களிலுள்ள பரிசயமும் நன்கு வெளியாகிறது. ஸ்ரீமான்கள் கல்யாணம் ஐயர், சொக்கலிங்கம் செட்டியார், மருதவீரம் பிள்ளை (டிரஸ்டிகள்) ஷாப், ருகவேந்திரராவ், குப்புசாமி ஐயர் முதலிய பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீமான் கல்யாணமய்யர் முடிவுரையில் பாகவதர் அவர்களின் திறமையை வெகுவாகப் புகழ்ந்து வடஇந்திய சுற்றுப்பிரயாணத்தால் ஓர் புனித மனிதனாகவே மாறியிருக்கிறாரென்றும் நமது நகர் வாசிகள் அவரைப் பலவாறு ஆதரிக்க வேண்டியது கடமையென்றும் கூறினார். இவருடைய ராமாயண ஸீரீஸை ஏற்பாடு செய்ய தீவிரமான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு நிருபர்.

உ
ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

மூலம் நாகரத்திலும், தமிழிலும்,

ஸ்ரீமான் G.V.கணேசய்யர், B.A., B.L., எழுதிய தமிழுரையுடனும், விசேஷ குறிப்புகளுடனும் கூடியது.

ஸ்ரீ வித்யை, ஸ்ரீ பாஸ்கரராயருடைய சரித்திரம், ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷா ச்லோகங்கள் முதலியன அடங்கியவை.

டிம்மி ⅛ அளவில் சுமார் 1000 பக்கங்கள் கொண்டது. முழு காலிகோ பயின்டு.

ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர், ஸ்ரீ சக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ 4.] [தபால் V. P. P. சிலவு தனி

கும்பகோணம் பாங்கி லிமிடெட், கும்பகோணம்.

(1904ல் ஸ்தாபிக்கப்பட்டது.)

கிளை ஆபீஸ்கள்:—
நாகப்பட்டணம், மன்னார்குடி,
நன்னிலம், அய்யம்பேட்டை.

ஷை பாங்கிக்கு 1938ஹுத்துக்கு, எல்லா செலவுகளும் போக நிகர லாபம் ரூ 33,897–9–2 கிடைத்திருக்கிறது.(1937ஹு நிகர லாபம் ரூ. 32,991—14—3) ஆடிட் ஆனவுடன் பாலன்ஸ்ஷீட் வெளிவரும்.

S. மஹாலிங்க அய்யர், B.A., B.L.
மானேஜிங் டைரக்டர்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்

பகுதான்யஹூ மார்கழிமீ 28உ

## ஹிந்து மஹா ஸபை.

கிறிஸ்த்மஸ் வாரத்தில் இந்தியாவில் பற்பல மஹாநாடுகள் நடந்தனவாயினும் உண்மையில் ஹிந்து ஸமூஹத்தின் நன்மைகளைப் பற்றி சிந்தனை செய்தது ஹிந்து மஹா ஸபை ஒன்றே தான். ஹிந்து மஹா ஸபையின் ஆசாரத்திருத்த ஸம்பந்தமான கொள்கைகளை ஹிந்துக்களில் பலர் ஒப்பவில்லையாயினும் ஹிந்து ஸமூஹ க்ஷேமத்திற்கு அது செய்து வரும் உதவியைப்பற்றி ஹிந்துக்களுள் அபிப்பிராய பேதமிருக்க நியாயமில்லை. இந்தியாவில் குடியேறிய பற்பல அந்நிய ஜாதியினர் பல வழிகளிலும் செல்வாக்குப் பெற்று தங்கள் நிலைமையை உயர்த்திக்கொள்ளவும், தேச ஜனங்களாகிய ஹிந்துக்களை கவிழ்த்து, அவர்களுடைய மத, நாகரிகாதிகளுக்கும் உரிமைகளுக்கும் பாதகம்விளைவித்தும் வருவதைத்தடுக்க ஹிந்து மஹா ஸபை ஒன்றைத்தவிர வேறு ஒரு ஸ்தாபனமிருப்பதாக ஒருவரும் சொல்ல முடியாது. ஹிந்து ஸபையின் ஆரம்ப சரித்திரத்தையும், அது செய்து வரும் வேலைகளையும் கவனித்து வருகிறவர்களுக்கு இது நன்கு தெரிந்ததே. ஆதலால் தான் இந்தியாவில் அந்த மஹா ஸபைக்கு விசேஷ ஆதரவும் மதிப்பும் ஏற்பட்டு காங்கிரஸுக்கு ஸமமான நிலைமையில் இன்று அது தேசப் பிரதிநிதி ஸபையாக விளங்கி வருகிறது.

நாகபுரியில் நடந்த மஹாஸபைக் கூட்டத்தில் செய்யப்பட்டுள்ள சில முக்யமான தீர்மானங்களைக் கவனித்தாலும் ஹிந்து மஹா ஸபையின் பிரதிநிதித்வ பாத்யம் ஸ்திரப்படக் கூடியதாயிருக்கிறது. உத்யோக விஷயங்களில் ஹிந்துக்களின் பாத்யம், பற்பலவிடங்களில் ஹிந்துக்களின் உரிமை, ஹைதாபாத் திருவாங்கூர் முதலிய ஸம்ஸ்தானங்களில் ஹிந்து ஸமூஹத்திற்கு ஏற்பட்டுள்ள ஸங்கடம், சட்டஸபைகளில் வகுப்புவாரி பிரதிநிதித்வம், ஸமஷ்டி திட்டம் ஆகிய அநேக விஷயங்களில் ஹிந்து மஹாஸபை மிக நியாயமான தீர்மானங்களைச் செய்து ஹிந்து ஸமூஹத்தைத் தட்டி யெழுப்பி இருக்கிறது. திருவாங்கூரில் கிறிஸ்தவர்களின் ஜனஸங்கியை அதிகரித்திருக்கிறது. அதைக் கொண்டு அங்கு அந்த மதத்தினர் சிறுகச் சிறுக ராஜ்யத்தையே ஆக்ரமிக்க முனைந்திருக்கிறார்கள். இதற்காகப் பற்பல சூழ்ச்சிகளும் அங்கு நடக்கின்றனவென்று ஹிந்துஸபை தெரிந்துகொண்டிருக்கிறது. அந்த தேசம் கிறிஸ்தவர்களின் கையில் சிக்காமல் காக்க வேண்டியதை ஹிந்துஸபை பொறுப்புடன் கவனித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதுபோல் மஹம்மதிய ராஜ்யமாகிய ஹைதராபாத்தில் ஹிந்துக்களின் உரிமைகள் நசுக்கப்படுகின்றன. ஹிந்துக்கள் மத ஸம்பந்தமான உபந்யாஸங்கள் செய்யமுடியவில்லை. கூட்டங்களும், ஊர்வலங்களும் தடுக்கப்படுகின்றன. இம்மாதிரியாக அங்கு ஹிந்துக்களின் உரிமை பறிக்கப்படுவதை ஆக்ஷேபித்துப் பௌருஷத்துடன் அதை எதிர்க்க முன் வந்திருப்பது ஹிந்து மஹா ஸபையேயாகும், ஸத்யாக்ரஹம், சட்ட மறுப்பு முதலிய கஷ்டங்களையேற்றுவது ஹிந்துக்களின் உரிமையை அங்கு காத்துக் கொடுக்க ஹிந்து மஹா ஸபை முனைந்து நிற்கிறது.

திருவாங்கூர், ஹைதராபாத் ஆகிய இரு ஸம்ஸ்தானங்கள் விஷயத்திலும் காங்கிரஸ் காட்டியுள்ள முரண்பட்ட மனோபாவத்தையும் ஹிந்து ஸமூஹம் கவனிக்க வேண்டும். திருவாங்கூரில் கிறிஸ்தவர் முதலிய பலவகுப்பார் பற்பலநோக்கத்துடன் நடத்திய பெரும் கிளர்ச்சிக்கு காங்கிரஸ் கார்யகமிட்டி ஆதரவு கொடுத்தது. ஒரு ஹிந்து அரசருக்கு விரோதமாக அக்கிளர்ச்சி நடக்கிறதென்ற ரஹஸ்யம் தெரிந்திருந்தும் காங்கிரஸ்காரர்கள் அதற்குப் பூர்ண உதவி செய்தனர். ஆயினும் அதே மாதிரியான கிளர்ச்சி ஹைதராபாத்தில் நடக்கையில் காங்கிரஸ் அதற்கு எவ்வித சலுகையோ உதவியோ காட்டாமல் ஒதுங்கி நிற்கிறது.

ஹைதராபாத்தில் நூற்றுக்கணக்கான ஹிந்துக்கள் ஜயில் வாஸத்தை ஏற்று ஸத்யாக்ரஹம் நடத்துகையிலும், அங்கு ஹிந்துக்களின் உரிமைகள் பகிரங்கமாக அபஹரிக்கப்படுகையிலும் காங்கிரஸ் கார்யகமிட்டி செய்ததென்ன? ஹைதராபாத் நிலைமையைப்பற்றி கார்யகமிட்டியில் ஏதாவது யோஜனை நடந்ததா? ஒரு தீர்மானமாவது அந்த ஸம்ஸ்தானத்தைக் கண்டித்துச் செய்யப்பட்டதா? ஒன்றுமில்லை. அதை ஒரு பொருட்டாகவே காங்கிரஸ் நினைக்கவில்லை. ஜன உரிமையைக்காக்க வந்திருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் ஹைதராபாத் ஹிந்து பிரஜைகளின் க்ஷேமத்தை, உரிமையைப்பற்றி என்ன கவலை எடுத்துக்கொண்டது. அது மஹம்மதிய ராஜ்யமென்பதாலும் அங்கு கிளர்ச்சிசெய்தால் மஹம்மதியர்களின் விரோதம் வருமென்ற பயத்தாலுமன்றோ காங்கிரஸ் ஒதுங்கி நிற்பது? திருவாங்கூர் ஹிந்து அரசரைப் பயமுறுத்த முன் வந்த காங்கிரஸ், ஹைதராபாத்தில் மட்டும் ஒதுங்கி நிற்பதற்கு வேறு என்ன காரணம் சொல்ல முடியும்? இதிலிருந்து பார்த்தால் காங்கிரஸை விட ஹிந்து ஸபையே பக்ஷபாதமின்றி பிரஜைகளின் உரிமையைக் காக்க முயற்சிக்கிறதென்பது விளங்கும்.

ஹிந்து மஹா ஸபையை வகுப்பு வாத ஸபை என்று காங்கிரஸ் வாதிகள் வர்ணிப்பதும் பிதற்றலாகும். தேசத்திற்குப் பொதுவான அம்சங்களை கவனிப்பதுடன் அந்தந்த ஸமூஹத்தின் தனிப்பட்ட உரிமைகளையும் கவனிப்பது அவச்யமாகவே இருக்கிறது. மகம்மதியர், சீக்கியர், கிறிஸ்தவர்களில் பலர் காங்கிரஸிலிருந்த போதிலும், தங்களுடைய ப்ரத்யேக நன்மைக்காக தனி ஸபை நடத்துவதைப் பார்க்கிறோம். இந்த மாதிரி பல உதாஹரணங்கள் உண்டு. ஆதலால் காங்கிரஸ் பொது லக்ஷ்யத்திற்குப்போராடுவதாகச்சொல்லிக்கொண்ட போதிலும் ஹிந்துக்களின் ப்ரத்யேக நன்மைக்கு ஹிந்து ஸபை வேலை செய்ய வேண்டியது இன்றியமையாததே.

ஆகையால் தென்னிந்தியாவிலும் ஹிந்து மகா ஸபையின் கிளைகளை ஸ்தாபித்து அதை தேசமெங்கும் பரவச்செய்ய வேண்டியது உசிதமென தோன்றுகிறது.

## குறிப்புகள்.

### சரித்ரங்களை நம்பியதால் வந்த அனர்த்தம்.

சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி ஸபை ஏற்படும்போது சில தீர்க்கதரிசிகள் நினைத்தபடி இப்போது கிளர்ச்சி ஏற்பட்டு விட்டது. மந்திரிஸபைத் தலைவரும், சில மந்திரிகளும்பிராம்மணர்களாயிருப்பதுபற்றி, 16 வருஷ ஆட்சி நடத்தி ருசிகண்டு தோற்றுப்போன கக்ஷியார் பிராமணத்வேஷத்தைக் கிளப்பிவிடுவார்களென்று நினைத்தபடியே நடந்துவருகிறது. ஹிந்தி எதிர்ப்பு என்பது ஒரு வியாஜமாக ஏற்பட்டது. தமிழ் தேசம் பூராவும் எங்கும், ஆர்ய—திராவிட சர்ச்சை கிளப்பிவிடப்பட்டிருக்கிறது. திராவிட தேசம் திராவிடர்களுக்கே சொந்தமென்றும் மற்றவர்கள் வெளியேறிவிடவேண்டுமென்றும் பேசப்படுகிறதாம்.

மேலும் பிராம்மண நாகரிகமும், ஸம்ஸ்கிருத பாஷையின் மஹத்வமும் எவ்வளவு கேவலமாக தூஷிக்கப்படுகிறதென்பதற்கு கோயமுத்தூர் ஜில்லா கோர்ட்டில் நடந்த "விடுதலை" பத்திரிகை வழக்கு விசாரணை காலத்தில் வெளிப்பட்ட விஷயங்களே போதுமானவை. சட்ட திட்டங்களுக்கு உள்பட்டு நடக்கும் எந்த நாகரிக தேசத்திலும் இத்தகைய விஷமமான வகுப்புத் வேஷம் வளரவிடத்தக்கதில்லை.

ஆர்ய திராவிட விவாதம் இப்போது தலைவிரித்து ஆட ஆரம்பமாயிருப்பினும், இந்த விஷத்திற்கு வெகு காலம் முன்பே சரித்திர ஆசிரியர்கள் தங்கள் நூல்களில் விதை விதைத்திருந்தார்கள். இந்தியாவில் ஜாதி வகுப்புப்பிரிவினைகளைக் குத்திவிட்டு அதனால் தாங்கள் நன்மையடையக்கருதின பல ஆங்கிலேய சரித்திராசிரியர்கள் இந்திய சரித்திர புஸ்தகங்களில் ஆர்ய—திராவிட பேதத்தை மிகைப்படுத்தி எழுதியிருந்தார்கள். இந்தப் புஸ்தகங்களே நம் சிறுவர்களுக்குக்கற்பிக்கப்பட்டு அவை வேத வாக்யம் போல் பிரமாணமாகக்கொள்ளப்பட்டன. இந்தியர்களான சரித்திரக்காரர்களும் அந்த சரித்திர அபத்தங்களையே பெரிதும் நம்பி தாங்கள் ஏமாந்ததுடன் பிறரையும் ஏமாறும் படி செய்து வந்தனர்.

ஆர்யர்கள் மத்ய ஏஷ்யாவிலிருந்து இந்தியாவில் குடியேறியவர்களென்ற அபத்த வாதமானது வெகுவாக வேரூன்றச்செய்யப்பட்டு விட்டது. பாரத தேசத்தின அநாதியான சாதுர் வர்ண்ய வியவஸ்தையையும், வேத விதிகளையும் பார்த்தால் ஆர்யர்கள் இந்த தேசத்தின் முக்ய பிரஜைகளென்பது ஒருவராலும் மறுக்க முடியாதது.

வேதங்கள் கற்பனை செய்யப்பட்டவையென்றும், ஜாதி பேதம் பின்னால் ஆர்யர்களால் உண்டாக்கப்பட்டதென்றும் கட்டுக்கதை கட்டப்பட்டுவிட்டதே இப்போதிய சச்சரவுக்குப்பெரிதும் காரணமாகும். ஆரம்பத்திலேயே இந்த துரபிப்பிராயத்தை நம்மவர்கள் கண்டிக்காமல் ஆங்கிலேயர் வார்த்தைகளில் மோஹம் கொண்டு மயங்கி விட்டார்கள்.

ஆயினும் இப்போது தேசியஉணர்ச்சி ஏற்பட ஆரம்பித்த பின் ஆங்கிலேயர்களின் சரித்திரப் பித்தலாட்டங்கள் ஒவ்வொன்றாக தள்ளப்பட்டு வருகின்றன. ஸ்ரீயுத பாலகங்காதர திலகர் நமது வேதத்தையும், சாஸ்திரங்களையும் தழுவி எழுதியுள்ள உயர்ந்த கிரந்தத்தில் ஆர்யர்கள் மத்ய ஏஷ்யாவிலிருந்துவந்த கதை பொய்யென்பதை நிரூபித்து அநேக லக்ஷ வருஷங்களாக ஆர்யர்கள் பாரததேசத்தில் வஸித்துவருகிறவர்களென்றே முடிவு செய்திருக்கிறார். இந்த



OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS

உண்மையை இப்போது [illegible] வர்கள் ஸ்வல்பமாயினும் நாளுக்குநாள் பள்ளிக்கூட சரித்ரங்களின் உண்மையற்ற தன்மை உணரப்பட்டு வருவதில் ஸந்தேஹமில்லை. ஆதலால் பொய் ஆதார மூலமாக வந்த ஆரிய—திராவிட விவாதத்தை எந்த வழியிலும் அடக்கவேண்டியது ஸர்க்காருடையவும் பொதுஜனங்களுடையவும் கடமையாகும்.

### இணங்கி விடுவார்களா ?

ஆலயப்பிரவேசச் சட்டத்தை தற்போது ஜாதிஹிந்துக்கள் யாவரும் எதிர்த்துவருவது பிரஸித்தமானது. இதில் ஆரம்பம் முதல் மந்திரிகள் தந்திரமாகப் பிரிவினை செய்து பேசி வருகிறார்கள். முதன் மந்திரி ஒரு ஸமயம் பேசுகையில் பிராம்மணர்கள் ஒருக்கால் ஆலயப்பிரவேசித்துக்கிற்கு ஸம்மதித்து விடலாமென்றும், ஆனால் பிராமணரல்லாதார், முக்யமாகக் கிராமவாஸிகள் இதை பலமாக எதிர்ப்பார்களென்றும் அவர்களுடைய எதிர்ப்பை ஸமாளிப்பது கஷ்டமென்றும் சொன்னார். சில நாட்களுக்கு முன் மன்னார்குடியில் டாக்டர் ராஜன் பேசுகையில், பிராம்மணர்களின் புத்திப்போக்கைப் பரிஹஸித்துச் சில வார்த்தைகள் சொல்லியிருக்கிறார். ஆலயப்பிரவேசத்தை பிராம்மணர் முதலில் ஆக்ஷேபிப்பார்களாயினும் பிறகு தாங்களாகவே வழிக்கு வந்து விடுவார்களென்றும், ஆலயப்பிரவேசம் ஏற்பட்டு விட்டபின் அதற்கு சாஸ்திர ஆதாரம் கிடைத்துவிட்டதாகச் சொல்லி பிராம்மணர்கள் அதை ஆதரித்துக் கோவிலுக்குப் போய்க்கொண்டிருப்பார்களென்றும், ஆகையால் ஆலயப்பிரவேசம் வெற்றியடையவது நிச்சயமென்றும் இப்போதிய சிறிய எதிர்ப்பைக் கண்டு அஞ்சவேண்டியதில்லையென்றும் பரிஹாஸமாயும், தைர்யமாயும் பேசினார்.

சில தினங்களுக்கு முன் தேத்தாகுடியில் நடந்த ராஜீயக்கூட்டத்திலும் இதே பாட்டை ஒரு காங்கிரஸ் பிராம்மணர் பாடினாராம். பிராம்மணர்களின்உறுதியற்றநிலைமையையும் ஸந்தர்ப்பத்திற்கேற்றபடி சாஸ்திரம் பேசும் நிலையையும் கவனிக்கும்போது அவர்களுடை எதிர்ப்புக்கு அஞ்சவேண்டியதில்லையென்றே இவர்கள் கருதுவதாகத்தெரிகிறது.

இவ்வளவு கேவலமாக ஒரு வகுப்பாரின் போக்கை பரிஹஸித்து விஷமமாகப் பேசி கூட்டத்தில் ஆதரவு சேகரிப்பது மிக்க ஆபாஸமானது. உண்மையான, சாஸ்திர பிரக்ஞையோ, ஆஸ்திக்யமோ, உறுதியோயுள்ள எந்த பிராம்மணனும் எந்தக்காலத்திலும் ஆலயப்பிரவேசத்தை அங்கிகரித்து விடமாட்டான். மேற்கண்டவர்களின் பரிஹாஸப் பேச்சுக்குப்பதிலாக பிராம்மண ஸமூஹம் பலமான கட்டுபாடுடன் ஆலயப்பிரவேசத்திற்கு எதிராக வேலை செய்து, தங்கள் உறுதியை நிலை நிறுத்துவதே முக்ய வேலையாகும்.

### அஹிம்ஸா தத்வம் பலிக்குமா ?

காந்திஜியின் அஹிம்ஸா தத்வத்தைப் பற்றி ஸமீபகாலமாகப் பத்திரிகைகளில் அதிகம் பிரஸ்தாபம் நடக்கிறது. இந்தியாவிலன்றி மேற்றிசையில் கூட இவ்விஷயம் இப்போது அதிகம் பேசப்படுகிறது. ஹர் ஹிட்லரும், யூதர்களும் அஹிம்ஸா வழியைப் பின்பற்றினால் மேற்றிசைகளில் தோன்றியிருக்கும் அமைதியின்மை அடங்கி விடுமென்று காந்திஜி உபதேசம் செய்தார். இதைக்கண்டித்து பர்லின்பத்திரிகைகள் எழுதின. மேற்றிசைகளில் அஹிம்ஸா தத்வத்தைப் பரப்புவதால், யுத்த ருசியையும், ஆயுதப் பெருக்கையும் தடுத்துமனித உயிரைக் காப்பாற்றலாமென்று காந்திஜி நம்புவதை அத்தேசத்தியவர் ஒப்பாமல் நகையாடுவது இயற்கையே.

ஆயினும் இந்தியாவைப் பற்றியவரையிலாவது இந்த அஹிம்ஸா தத்வம் அநுபவத்தில் பலன்தரதக்கதா வென்று ஆலோசிக்க வேண்டும். காந்திஜிக்கு அஹிம்ஸையின் தத்வம் நன்கு விளங்குகிறது. ஆனால் அவரைப் போல் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? காந்திஜியின் தலைமையிலுள்ள காங்கிரஸ்காரர்களுக்கு இது இன்னும் அநுபவத்தில் வரக்கூடியதாக இல்லையே? ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் போன்ற தீவ்ர காங்கிரஸ் வாதிகள் கூட அஹிம்ஸையானது ராஜீயத்தில் ஸாத்யமில்லையென்றும், ஓரளவு ஹிம்ஸை இருக்கவேண்டியதவச்யமென்றும் வாதிக்கிறார்கள்.

திருவாங்கூர் முதலிய ஸம்ஸ்தானப் போராட்டங்களில் காங்கிரஸ் பெயரால் எவ்வளவு ஹிம்ஸைகள் நடக்கின்றனவென்பது பிரஸித்தமானது. ரான்பூரில் ஓர் வெள்ளைக்கார அதிகாரி கொல்லப்பட்டார். காந்திஜியும், ஜவஹர், போஸ் முதலியவர்களும் இன்னும் அஹிம்ஸையைப்பற்றிப் பேசுகிறார்கள். காங்கிரஸில் இந்த உயர்ந்த தத்வம் பலிக்கும் காலம் எதுவோ ?

**Freedom of conscience.**

"The golden rule of conduct, therefore, is mutual toleration, seeing that we will never all think alike and that we shall always see Truth in fragments and from different angles of vision. Conscience is not the same thing for all. Whilst, therefore, it is a good guide for individual conduct imposition of that conduct upon all will be an insufferable interference with everybody-else's freedom of conscience."

*Ghandiji in "Young India" 23—9—26.*

### அ. இ. ஸாது ஸம்மேளனம். ஸ்ரீஜகத்குரு பூரி ஸ்வாமிகளின் பிரஸங்கம்.

தர்மத்தை ரக்ஷிக்க ஸாதுக்கள் ஸத்யாக்ரகம் செய்யதயார்.

(ஒரு விசேஷ நிருபர்).

அகில பாரதிய ஸாது ஸம்மேளனம், புண்ய ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில், ஜனவரி 1, 2, 3 தேதிகளில் மிகவும் சிறப்பாகவும், உற்சாகத்தோடும் நடந்தேறியது. இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும், சுமார் 10,000 சாதுக்கள் வரையில் விஜயம் செய்திருந்தார்கள். எல்லா மடங்களுடைய பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள், ஸ்ரீ கோவர்த்தன பீடாதிபதி ஸ்ரீமத் ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்ரீ பாரதி கிருஷ்ணதீர்த்த ஸ்வாமிகள் தலைமை வஹித்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் நடியாதிலிருந்து டிஸம்பர் 31உ காசி வந்து சேர்ந்தார்கள். சுமார் 10,000 ஜனங்கள் ஸ்வாமிகளை ஸ்டேஷனில் வரவேற்று மிகவும் பெரிய ஊர்வலமாக ஸ்ரீ ஸ்வாமிகளை அழைத்து சென்ற காக்ஷி மிகவும் விமரிசையாக இருந்தது.

ஸாது ஸம்மேளனம் Ramakrishna Mission of Home Service ன் விசாலமான கட்டிடத்தில் மங்களா சரணங்களுடன் ஜனவரி 2உ ஆரம்பிக்கப்பட்டது. அயோத்யா புரி ஸ்ரீ ராஜகோபால் மடம் ஸ்ரீமஹந்த் ராமதாஸ் வாமிகள், (Chairman of the Reception Committee) வரவேற்பு பிரசங்கம் செய்து ஸ்ரீ ஸ்வாமிகளை ஸம்மேளனத்துக்கு தலைமை வஹிக்கப் பிரார்த்தித்தவுடன், "ஸநாதன தர்மகிஜே", ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகளுக்குஜே என்ற ஜய கோஷங்களுக் கிடையே ஸ்ரீ ஸ்வாமிகள் அக்ராஸன பிரஸங்கத்தை ஆரம்பித்தார்கள்,

தற்காலம் ஸநாதன தர்மத்துக்கு ஏற்பட்டிருக்கும் மஹத்தான இடஞ்சல்களை விவரித்த பிறகு, ஸாதுக்கள், ஸன்யாஸிகள், மஹந்த்கள், ஸநாதனிகள் எல்லோரும், ஒவ்வொரு இடத்திலும் தீவ்ர தர்ம பிரசாரம் செய்யவேண்டுமென்றும், அவச்யம் ஏற்பட்டால் தார்மிக ஸத்யாகிரஹம் செய்யவும் தயாராயிருக்க வேண்டுமென்றும், "தர்மராஜ்ய", "ஆர்ய தர்மம்" பண்டி தபத்ரம்" முதலிய ஸநாதன தர்ம பத்திரிகைகளை ஹிந்து ஜனங்கள் ஆதரிக்கவேண்டுமென்றும், ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகள் பிரஸங்கம் செய்தார்கள்.

(ஸ்ரீஸ்வாமிகளின் பிரஸங்கம் விரிவாக அடுத்த 'ஆர்யதர்மம்' இதழில் வெளியாகும்.)

காசியில் இதுவரையிலும் இவ்வளவுபெரிய ஸாது ஸம்மேளனம் நடந்ததில்லை என்று பண்டிதர்களும் சொல்லுகிறார்கள், கான்பரன்ஸ் காலத்தில் ஸாதுக்கள் ரொம்ப உற்சாகத்துடன் பிரஸங்கம் செய்தது ரொம்பவும் அலாகிக்கத்தக்கது,

### சந்தாதார்களுக்கு முக்ய அறிவிப்பு.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் 23வது வருஷம் பூர்த்தியாகி 24வது வருஷம் ஆரம்பமாகிவிட்டதால் நமது சந்தாதார்கள் புதிய வருஷத்திற்கான சந்தாத்துகையை கூடிய சீக்கிரத்தில் நமக்கு அனுப்பி, எப்போதும்போல் பத்திரிகையை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.

### ஆர்யதர்மத்திற்கு உதவி.

ஸ்ரீ ரங்கத்தில் வஸிக்கும் பிரபல மிராசுதாரும், ஸநாதனதர்மாபிமானியுமானதேசபூஷண, பிரம்மஸ்ரீ ஆர். கே. பிரஸன்ன வெங்கடேச்வாரராவ் அவர்கள் நம் ஆர்யதர்மம் பத்திரிகையின் உதவிக்காக 1938-ம் வருஷத்தில் ரூ. 500 கொடுத்து உதவினர். ஆர்யதர்மம் நிர்வாஹிகள் மேற்படி நன்கொடையை மிக்க நன்றியுடன் ஏற்றுக்கொண்டு ஸ்ரீமான் ராவ் அவர்களை ஆர்யதர்மம் பத்திரிகையின் சாச்வத போஷகராக அங்கீகரித்திருப்பதை ஸந்தோஷத்துடன் வெளியிடுகிறார்கள்.

"கீதாடைரி 0—6—0.

சங்கராந்திக்குள் ஆர்டர் கொடுக்கும் ஆர்ய தர்மம் சந்தாதார்களுக்கு மட்டும் 0—5—0

(தபால் சிலவு தனி)

### 12-12-38-ஹூ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

| | |
|---|---|
| நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி 48 பட்டணம்படி மூட்டை | 4—0—0 |
| ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 48 ஷை உள்ள மூட்டை | 3—8—0 |
| அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 48பவுண்டு உள்ள மூட்டை | 9—2—0 |
| ஷை இரண்டாம்தரம் நெல்லூர்சம்பா 48 பவுண்டு உள்ள மூட்டை | 8—0—0 |
| தேங்காய் எண்ணை 64 சேர் நிறை | 5—0—0 |

[illegible] தாசில்தார்.

ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

Nellore.

## தென்னாற்காடு ஜில்லா ஸநாதந தர்ம மஹா நாட்டில்

### சேலம் அட்வகேட் ஸ்ரீமான் Y. K. சேஷய்யர் அவர்கள் செய்த அக்ராஸன பிரஸங்கம்.

இந்த மஹாஸபையில் தலைமை வஹிக்கவேண்டுமென்று என்னை கேட்டுக்கொண்ட ஸபை நிர்வாஹகர்களுக்கு என்னுடைய வந்னத்தைச் செலுத்துகிறேன். பெரும்பான்மையான ஹிந்துக்களிடம் இப்பொழுது உணர்ச்சியின்மையும், உத்ஸாஹ மின்மையும் நிலவி வருகிறது. இந்நிலையில் ஸநாதநி ஸமூஹத்தை தலைமை வஹித்து நடத்திக்கொண்டு வருவது மிகவும் கடினமானது. என்னிடமுள்ள குறைகள், பேசுதில் திறமையின்மை இவைகளை நான் நன்றாக அறிவேன். ஆகவே நான் அவ்விதகடினமான பொறுப்புள்ள காரியத்தைத் தாங்குவதற்கு தகுதியற்றவன் வரவேற்பு கமிட்டியின் வேண்டு கோளை நான் உத்திரவாகமதித்தே புனிதமான ஸநாதந தர்மத்திற்கு உழைக்க என்னுடைய எண்ணங்களுக்கு எதிராகவே நான் இப்பதவியை ஏற்றேன்.

சென்னை "மெயில்" பத்தரிகை தனது டிம்பர் 30உ பத்திரிகையில் க்ரிஸ்துமஸ் ஸமயத்தில் தேசத்தில் பல விடங்களில் நடந்த மஹாநாடுகளாலும், பத்திரிகைகளில் கவனித்து வந்துள்ள அவைகளில் முக்யமாகப்பங்கெடுத்த அக்ராஸநர் முதலியவர்களின் ப்ரஸங்கங்களாலும் தேசம் அறுவறுப்படையும் என்று அபிப்ராயப்படுகிறது.

நமது ஸபை ஸம்பிரதாயமாகப்ரதிவர்ஷம் கூடும் ஸபை அன்று. வேடிக்கை யாகவோ, ஸந்தோஷமாக காலத்தைக் கழிக்கவோ இந்த ஸபை ஏற்படவில்லை. அநாதி காலமாக தார்மிகர்களாக இருந்துவரும் ஸநாதநிகள்மிக அவஸரமான ஸந்தர்பத்திலேயே இங்கு கூடி இருக்கிறார்கள்; தர்மத்திற்கு ஆபத்து ஏற்பட்டு அழிவேற்பட்டுவிடும் என்ற கவலையின் மீதே நாம் கூடி இருக்கிறோம். இந்தப் புனிதமான ஸந்தர்பத்தில் தேசத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைக் தடுக்கவும் ஸநாதர்மத்தைப் பாதுகாக்கவுமே இங்கு நாம் கூடவேண்டியதாயிற்று. இங்கு நாம் நமது மத வாஸனையே அறியாத எதிரிகளின் ப்ரசாரத்தினால் தவறுகளெண்ணுகிற தேசமக்களை உத்ஸாஹப்படுத்தி எதிரிகளின் ப்ரசாரத்தை எதிர்க்கவுமே கூடி இருக்கிறோம். இந்த புனிதமான கார்யத்திற்குக் கூட நாம் மிகவும் சிரமப்படவேண்டிய அவச்யமில்லை. நம்முடைய முயற்சியை எதிரிகள் வேடிக்கையாகப் பேசி நமக்கு தர்க்கம் செய்வார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் தத்காலம் எதிரிகளுள்ளிட்ட இத்தேச மக்களின் பரஸ்பர அன்பையும் உணர்ச்சியையும் வளர்க்க இல்லாவிடில் நமது புராதனமான தர்மம் வேரூன்றவே தைர்யமாக நாம் வேலை செய்ய வேண்டும்.

சென்னை ப்ரதம மந்திரி ஸமீபத்தில் மத ஸம்பந்தமான பல சட்டங்களை நிறைவேற்றி விட்டார்.

அதை ஆக்ஷேபிக்கும் ஸநாதநிகளுக்கு பதிலளிக்கையில்—அவர் "ஆலயப்ரவேசம் முதலியவைகளில் சாஸ்திரங்களை மீறுது நடந்துவரும் ஜனங்களை பாதிக்கக்கூடிய காங்கிரஸின் கொள்கையை தேச மஹாஜனங்கள் நன்கு அறிவார்கள். அவர்களுடைய கொள்கையை அறிந்தே அவர்கள் பெரும்பான்மையாக காங்கிரஸ் அபேக்ஷகர்களை தேர்ந்தெடுத்தார்கள். இதனால் காங்கிரஸின் கொள்கையை தேச மஹாஜனங்கள் பூர்ணமாக ஏற்கிறார்கள் என்று நிச்சயமாக ஏற்படுகிறது. காங்கிரஸ் மந்திரிகள்மத ஸம்பந்தமான சட்டங்களைச் செய்ய பூர்ணமாக அனுமதி அளித்திருக்கிறது என்று சொல்லுகிறார்.

(தொடரும்)

## நாகூர்.

### ஸ்ரீ ராதாகல்யாண மஹோத்ஸவம்.

புன்னாகவனமென்னும் திவ்ய க்ஷேத்திரமாகிய நாகூரில் மேல அக்கிரஹாரத்தில் து. வீராசாமி அய்யரால் ஸ்தாபிக்கப்பட்டும் ஸ்ரீமத் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யாள் சுவாமிகள் அவர்கள் அனுக்ரஹமும் பெற்று பாத தூளியும் பட்டதுமான ஸ்ரீ பஜனை மடத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாமாத்மா ஸ்ரீ ராதாதேவியினுடைய விவாஹத்தை பிருந்தாவனத்தில் காந்தர்வ விதியினால் நடத்தப்பட்ட திவ்ய கல்யாணமஹோத்ஸவம் நாளது பகுதானிய-ஷு தனுர்-மீ 15உ ஆரம்பிக்கப்பட்டும், 16உ கல்பாத்தி பிர்ம்மஸ்ரீ சுப்பிரமணிய தீக்ஷதர் அவர்கள் ஹார்மோனியம் கச்சேரியும் புலியூர் A. S. நடேசய்யர் அவர்கள் குமாரத்தி சௌ. குஞ்சுமணி புளுட் கச்சேரியும், 17உ ஸ்ரீ ராதாகல்யாணம் வெகு விமர்சையாய் நடத்தப்பட்டும் ஸ்ரீ ராதாகிருஷ்ணன் வைபவத்தை திப்பராஜபுரம் பிர்ம்மஸ்ரீ மந்திரமூர்த்தி கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால் உபன்னியாசிக்கப்பட்டும் பிராமண சந்தர்ப்பணைக்கு பிறகு 3 மணிக்கு நாகப்பட்டணம் அட்வகெட் பிர்ம்மஸ்ரீ P. S. சிவராமய்யர் அவர்களால் ஸ்ரீ ராதாதேவியின் மஹிமை கோலோக விருத்தாந்தம் உபன்னியாசிக்கப்பட்டும் வக்கீல் பிர்ம்மஸ்ரீ N. சாம்பசிவய்யர் அவர்களால் பக்தி முக்கியம் என்பதைபத்தி உபன்னியசிக்கபட்டும், பிறகு திருவாரூர் ராமாயணம் பிர்ம்மஸ்ரீ நடேச சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ ராமாயணம் முத்திரை மோதிரம் சூடாமணி கொடுக்கும் கட்டம் கதை நடத்தப்பட்டும் 18உ ஆஞ்சநேய உத்ஸவமும், 19உ வடபத்திர உத்ஸவம் நடத்தப்பட்டும் ராத்திரி லேட் பிர்ம்மஸ்ரீ மாங்குடி சிதம்பரபாகவதர் அவர்கள் சிஷ்யனை திருப்பூந்துருத்தி பிர்ம்மஸ்ரீ T. R. விஸ்வநாத பாகவதர் அவர்களால் ருக்மணி கல்யாணம் கதாகாலக்ஷேபமும் வெகு விமர்சையுடன் நடைபெற்றது.

நமது நிருபர்.

## ஓர் ஸந்தேஹம்.

மதுரையம்பதியில் ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேச்வராலயத்தில், த்வஜஸ்தம்பத்தின் அடிபாகத்திலுள்ள சதுரப்பெட்டியின் வடபுறத்தில் காணப்படும், விருக்ஷம், பன்றி, கத்தி, சந்திரன், சூர்யன் இவையைந்தும் எதைக் குறிக்கின்றனவென்பதை அறிஞர்கள் அறிவிக்குமாறு வேண்டுகிறேன்.

ஓர் ஆராய்ச்சியாளர்.

---

Seek the plough and reap the bliss.
Live encircled by your relatives.
Gambling and impertinence breed worry.
Misery besets him, who forgets to perform his duties.

## கொன்றைவேந்தன்.

(by T. S. Vaidyanatha Sastrial)

17. ஓோர் ராயினுந் தாழவுரை.
18 குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
19 கூரம்பாயினு வீரியம் பேசேல்.
20 கெடுவது செய்யின் விடுவது கருமம்.

नीचेऽपि वदेत् विनयावनतः
दोषे दृष्टे नैव स्वजनः ।
निशित शरेऽपि न वीरविनादः
त्याज्यः सुहृदपि दुष्कृत कारी ॥
त्यजतत्कर्म यदहितं कुरुते ॥

Speak courteously even to the low.
There is no kinsman to the find-faulter.
Though armed with a sharp arrow never advertise your heroism.
Do away with that friend who harms you.
Give up such action as produces evil.

21 கேட்டில் உறுதி கூட்டும் உடமை
22 கைப் பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
23 கொற்றவன் அறிதல் உற்றிடத்து தவி
24 கோட் செவிக்குறளை காற்றுடன் நெருப்பு

नष्टापूरकमापदि धैर्यं
करतल धनतो ध्रुवमिह विद्या ।
राजनिवेदन मापदि हितकृत्
पैशुन्यं खलु वायुसखोऽग्निः ॥

Fortitude regains lost property.
True knowledge is better than Possessed-wealth.
The action performed with the knowledge of the king is helpful even in distress.
Confiding with a tale-bearer is like the alliance of the wind and fire.

25 கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை
26 சந்ததிக் கழகு வந்தி சையாமை
27 சான்றோர் என்கை ஈன்றோர்க்கழகு
28 சிவத்தைப்பேணின் தவத்திற் கழகு

अपवदनं यदि सर्वविरोधः
ते पुत्रा ये न नुताः पित्रा ।
निपुणस्सुत इति पितुराभरणं
शिवभजनं हि तपस्यतिमहितं ॥

Back-biting always create enmity.
Children should not be praised by their parents of their good behaviour (in their presence).
It will be for the entire satisfaction for the parents if their sons are declared proficient (by the learned).
Devotion towards Siva enriches one's penance.

29 சீரைத் தேடின் ஏரைத்தேடு.
30 சுற்றத்திற் கழகு சூழ இருத்தல்.
31 சூதும் வாதும் வேதனை செய்யும்.
32 செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்.

सीरं विचिनु सखे यदि लेभः
बन्धुर्यदि भव बान्धवसुलभः ।
द्यूतं वादः कुरुतः पीडां
योगे नष्टे प्रभवेत् दुःखं ॥



# தென்னாற்காடு ஜில்லா ஸநாதனதர்ம மஹாநாடு.

### வரவேற்புத்தலைவர் ஸ்ரீமான் தி. ஈ. சடகோபாசாரியாரின் பிரஸங்கம்.

(5—1—39 தொடர்ச்சி)

அதாவது எப்போதும் சாச்வதமாய் ஏகரீதியாய் இருக்கும் கர்ம விசேஷங்கள் என்று பொருள். இதனால் எல்லோருக்கும் எப்போதும் ஒரேவிதமான கர்மத்தைத் தான் அநுஷ்டிக்க வேண்டுமென்று அர்த்தங்கொள்வது யுக்தமல்ல. அந்தந்த இடத்துக்கும் காலத்துக்கும் தகுந்தபடி சீதோஷ்ணம், புல்பூண்டு, காய்கனி முதலியவை மாறுவதுபோல் அந்தந்த அதிகாரிக்குத் தக்கபடி தர்மங்களும் மாறி நிற்கும். ஆனால் எந்தெந்த அதிகாரிக்கு எந்தெந்த தர்மம் ஏற்பட்டதோ அந்த கிரமம் எப்போதும் ஒன்றாகவே இருப்பதால் அது ஸநாதனமென்று வ்யவஹரிக்கப்படுகிறது. மேலும் இதற்கு ப்ரமாணமாய் நின்று தர்ம ஸ்வரூபத்தை நமக்குக் கைவிளக்குப்போல் ப்ரகாசம் செய்யும் வேதமாகிற சாஸ்த்ரம் நித்தியமாய் எக்காலத்திலும் நிலைபெற்றிருப்பது காரணமாகவும்அதைக்கொண்டு அறியப்படும் தர்மம் ஸநாதன மெனப்படும்.

ஆனால் இதெல்லாம் முற்காலத்தில் சில யுக்திசாலிகள் ஏற்படுத்திய ஸங்கேதக் கோட்பாடே தவிர உண்மையான விஷய மென்பதற்கு என்ன அத்தாக்ஷி? இதற்குமுன் பெரும்பான்மை ஜனங்களுக்குப் படிப்பில்லாமல் பகுத்தறிந்து ஆராய்ச்சி செய்யும் சக்தி குறைவாயிருந்தபோது இவ்வித ஸங்கேதப் பேச்சுகளை உண்மையென்று நம்பியிருந்த போதிலும் இக்காலத்தில் மேல் நாட்டு நாகரீகம் எங்கும் பரவி எல்லோருக்கும் படிக்குந் திறமை ஏற்பட்டு தம்தமக்கே பகுத்தறியும் சக்தி வெகுவாய் விருத்தியடைந்திருப்பதால இப்போது இந்தக் கட்டுரைகளுக்கு மதிப்பு மிகவும் குறைந்துவிட்டபடியால் இதைக்கொண்டு ஒன்றும் ஸ்தாபிக்கமுடியாது; என்று நவீந சீர்திருத்தக்காரர் சார்பாக ஆக்ஷேபம் வரக்கூடும்; வந்துமிருக்கிறது. இதற்கு நாம் முதலெடுப்பில் கேட்பது யாதெனில்:—இப்போது எங்களுடைய அநாதியான தர்மாநுஷ்டானங்களைச் சீர்திருத்துவதாக முன்வரும் நீங்கள் மகம்மதியர் கிருஸ்தவர் மாதிரி எங்களுக்கு விருத்தமான வேறு மதத்தைச் சேர்ந்தவர்களா? அல்லது எங்களதான வைதிக மதத்தைச் சேர்ந்தவர்களா? என்று. இதற்கு அவர்கள் நம்மதத்தைச் சேர்ந்தவர்களென்றே ஒப்புக்கொண்டு தீரவேண்டும். அவ்விதமேதான் சொல்லிக்கொண்டும் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் அவர்களுக்கு நம்மத விஷயங்களில் ப்ரவேசிக்கவே அதிகாரம் ஸித்திக்கமாட்டாது. நம்மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஒப்புக்கொண்டவுடனே நம்மதத்துக்கு மூலப்ரமாணமாய் நிற்கும் வேதத்தையும் அதைச் சார்ந்த ஸ்மிருதி முதலிய சாஸ்த்ரங்களையும் அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டிய அவச்யம் ஏற்படுவதால் நாம் முன் கூறிய விஷயங்களை அவர்கள் ஆக்ஷேபிக்க அர்ஹரல்ல. நான் வைதிக மதத்தைச் சேர்ந்தவன் ஆனால் வேத ப்ரமாணத்தை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று சொல்வது பித்தன் பேச்சாகுமே தவிர புத்தியுள்ளவர்கள் ஒப்பத் தக்கதல்ல. ஆகையால் இச்சீர்திருத்தக்காரர்கள் நமது வைதிக மதத்தை அவலம்பித்தவர்களென்பது உண்மையாயிருந்தால் நாம் ஒப்புக்கொண்டிருக்கும் சாஸ்த்ர ப்ரமாணங்களை அவர்களும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். ஆனால் அவைகளுக்கு நாம் சொல்லும் அர்த்தம் சரியல்ல, வேறு விதமாக அர்த்தம் கொள்ள வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லபாத்யமுண்டு. அப்படி அவர்கள் எடுத்துக்காட்டி ஸ்தாபிப்பதில் நமக்கு யாதொரு ஆக்ஷேபமும் இருக்க நியாயமில்லை. ஆனால் அந்த வகையில் இதுவரையில் அவர்கள் சார்பில் எடுத்துக்கொண்ட பல முயற்சிகளில் ஒன்றாவது பயன்படவில்லை யென்பதை மாத்ரம் இங்கு குறிக்கவேண்டியதாகும். இதன் உண்மை சென்ற வருஷத்தில் சென்னையில் அதிவிமர்சையாய் நடைபெற்ற மஹாவித்வத் பரிஷத்தில் செம்மையாய் விளங்கிற்று.

இதனால் நமது ஸநாதநதர்மத்தின் உண்மையை யுக்தியால் ஸ்தாபிக்க முடியாதென்று நாம் ஒப்புக் கொள்வதாக நினைக்கக் கூடாது. ஆனால் சாஸ்த்ரம் என்பதற்குக் கட்டளையென்று பொருளாகையால் சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட விஷயங்களை அநுஷ்டிப்பதில் யுக்தியைக்கொண்டு ஒவ்வொன்றையும் விசாரித்துத் தெளிந்தபிறகு தான் அநுஷ்டிப்பதென்பது ராஜாவின் ஆஜ்ஞை விஷயத்தில் எப்படிப் பொருந்தாதோ அப்படியே இங்கு என்பது மட்டில் சொல்லப்படுகிறதே தவிர ப்ரஸ்துத விஷயங்கள் யுக்திக்கு ஒத்திருக்கின்றனவாவென்று விசாரம் செய்து தெரிந்து கொள்வதில் எவ்வித ஆக்ஷேபமும் கிடையாது. அப்படி விசாரம் செய்தால் சாஸ்த்ரம் எல்லாவிதத்தாலும் நமக்கு நன்மையையே விதிக்கிறதென்பது மிகவும் ஸ்பஷ்டமாய் ஏற்படும். ஆயிரம் தாய் தந்தைகளைவிட நம்மிடம் ப்ரீதியுள்ளது சாஸ்த்ரம் என்று மூத்தோர் வசனம் எந்நாளும் வீண் போகாது. தர்மம் என்பதற்கு தரிப்பது அல்லது தரிக்கச்செய்வது என்று முன்னமே பொருள் கூறினோம். அதாவது நம்முடைய ஸ்வரூபத்தை ரக்ஷிப்பதற்கு இன்றியமையாததென்பதாகும். தர்மம் என்கிற பதத்துக்கு ஸ்வபாவம் என்றும் அர்த்தமுண்டு. இந்த அர்த்தத்தில் ஒவ்வொரு வஸ்துவுக்கும் இயற்கையா யமைந்துள்ள செயல் அதன் தர்மமென்று வழங்குகிறது. இக்கணக்கில் எரிப்பது நெருப்பின் தர்மமென்றும், நனைப்பது ஜலத்தின் தர்மமென்றும் வ்யவஹரிக்கப்படுகிறது. இதை நாம் தீர்க்கமாய் ஆலோசித்தால் நம் விஷயத்தில் தர்மமென்று வகுக்கப்பட்ட கர்மங்கள் நம் இயற்கைக்கு இன்றியமையாதவைகளென்று ஏற்பட்டிருப்பது பற்றியே அவைகள் அவ்விதம் கூறப்பட்டு நமக்கு அவச்யமென்று விதிக்கப்பட்டிருக்கின்றனவென்பது ஏற்படும். கடவுளே இல்லையென்று மறிக்கும் சுத்த நாஸ்திகர் தவிர மற்றெல்லோரும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும் அவர் ஸர்வமும் அறிந்தவர் என்றும் ஸர்வவல்லமை பொருந்தியவரென்றும் இவ்வுலகம் அவரால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்படி நாநாவிதமான ஸ்ருஷ்டியைச் செய்த பகவானே, தான் ஸ்ருஷ்டித்த ஒவ்வொரு வஸ்துவுக்கும் இன்றியமையாத இயற்கை குணம் செயல் முதலியதை அமைத்திருக்கிறார் என்பதற்கு ஆக்ஷேபமில்லை.

இப்படி நாநாரூபமாய் அமைந்துள்ள ஸ்ருஷ்டியில் மனுஷ்யன் எல்லாவற்றையும் விடமேற்பட்டவன் என்பதும் அப்படி அவனுடைய மேன்மைக்குக் காரணம் அவனுக்கு அஸாதாரணமாய் அமைந்துள்ள பகுத்தறிவு என்பதும் நிர்விவாதமான விஷயம். இப்படி மனுஷ்யனை ஸ்ருஷ்டிசெய்து அவனுக்கு கைகால் முதலிய ஸகல அவயவங்களையும் அமைத்து பகுத்தறிவையும் அளித்த ஸர்வஜ்ஞனை பரமபுருஷன் இம்மனுஷ்யனுக்குத் தாம் கொடுத்த விலக்ஷணமான சக்தியை இவன் உபயோகிக்கவேண்டிய மார்க்கத்தைக் கல்பிக்காமலிருப்பாராவென்றும் அப்படி கல்பிக்காமலிருந்தால் அவருடைய ஸர்வஜ்ஞத்வத்துக்குக் குறை நேரிடாதாவென்பதையும் புத்திமான்கள் யோசிக்கவேண்டும். நமது வைதிக சாஸ்த்ர ரீதியாக மனுஷ்யன் தன் சக்தியை ஸரியாய் உபயோகிக்கவேணுமென்பதற்காகவே அவன் செய்ய வேண்டியதையும் ஒழிக்கவேண்டியதையும் அவனுக்குத்தெரிவிக்கவேண்டியதற்காகவே வேதம் முதலிய ப்ரமாணங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்றும் அவைகள் காண்பிக்கும் மார்க்கத்தை அநுஸரித்து இவன் நடந்தால் இவனுக்கு மேன்மேலும் நன்மை பிறக்குமென்றும் அதுவே தர்மமார்க்கமென்றும் அப்படிக்கில்லாமல் அதற்கு விருத்தமாக நடந்தால் அது அதர்மமார்க்கமென்றும் அத்தால் இவனுக்குத் தீங்கே விளையுமென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதுவே யுக்திக்கும் ஒத்ததென்பது எல்லா விஷயங்களையும் அநுபவத்தையொட்டி யதார்த்தமாய்ப் பரிசீலனம் செய்தால் ஸ்பஷ்டமாகும். ஸாதாரணமாய் ஒரு சிற்றரசன் ஒரு பட்டணத்தை நிர்மாணம்செய்து அதில் தன் ப்ரஜைகளைக் குடியேறச் செய்தால் அவர்கள் ஒத்துவாழ்ந்து தங்கள் யோக க்ஷேமத்தை ஸரிவரத் தேடிக்கொள்வதற்காக சட்டங்கள் ஏற்படுத்தி அதன்படி அவர்கள் நடந்து வரவேணுமென்று ஏற்பாடு செய்வதை நாம் காண்கிறோம். அப்படிச் செய்யாத பக்ஷத்தில் ஜனங்களுக்குள் வரம்பு ஏற்படாமல் ஓயாக்கலஹமேற்பட்டு எல்லாம் நாசமடைவதால் பட்டணத்தை நிர்மாணம் செய்த யத்தனமே வ்யர்த்தமாய்விடும். இப்படி ஒரு சிற்றரசனுக்குள்ள யோசனைகூட இவ்வுலகு முழுதும் படைத்த இறைவனுக்கில்லாமற்போகுமா?

(தொடரும்)

# யோக சாஸ்திர நிருபணம்.

ஜடாயுசின் மரணம்.

"ஜட" என்றால் கிளை ஆயுஸ் என்றால் சுவாஸம் ஆகையால் ஜடாயுவை சுவாஸத்தின் சூர்யகலையாகவும் அவன் ஸகோதரன் ஸம்பாதியை சந்திரகலையாகவும் சொல்லலாம். ஸம்பாதி சந்திரகலைதான் யென்பதை காட்டக்கூடிய வேறு காரணமுமிருக்கிறது. ஸம்பாதிக்கு அவனுடைய எரிந்துபோன இரக்கைகள் மறுபடி முளைக்குமென்று நிசாகரரென்ற ரிஷி சொல்லியிருந்ததாக சொல்லி இருக்கிறது. "நிசாகரஸ்யாரஜரிஷே: ப்ரபாவத் அமிதோஜல: । ஆதித்ய ரச்மிநிர்தக் தௌபக்ஷௌபுநருபஸ்திதௌ" என்ற சுலோகத்தில் நிசாகரன் யென்பது சந்திரனுதலாலும் ஸம்பாதி சந்திரகலை யென்று சொல்லலாம். பஞ்சவடியாகிற சித்தத்தில் மாரீசனாகிற மாயை விருத்திவந்ததால் யோக நிஷ்டை கலைந்துவிட்டது. அதனால் பந்தமான சுவாஸம் திரும்பிவந்தது, அதுதான் ஜடாயுஸ் பந்தமான சுவாஸம் தசாதர் சுவாஸம் என்று ஏற்கனவே சொல்லியிருப்பதால் திருப்பிவந்த சுவாஸம் ஜடாயுசை, தசாதருக்கு சிநேகிதனென்று சொல்லப்பட்டிருக்கிறது. உசிதமாக இந்த நிஷ்டை கலைந்துபோகவும் இராமர் திரும்ப நிஷ்டைக்கு ஆரம்பிக்கிறதால் ஸூர்யகலையாகிற ஜடாயுஸ் திரும்பி வந்தது மறுபடி உள்ளடங்கி சந்திரகலை மேலிட்டதால் ஜடாயுஸ் இறந்ததாயும் ஸம்பாதிக்கு மறுபடி இரக்கைகள் முளைத்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் யோகநிஷ்டை செய்யுமுன் சூர்யகலை மேலிட்டு சந்திரகலை சுமர்ந்திருக்குமா. யோகநிஷ்டை பலப்பட்டால் சூர்யகலை அமர்ந்து சந்திரகலை மேலிட்டிருக்கும் அதற்கு ஜடாயுஸ் ஸம்பாதி சரித்திரம் ஒத்திருக்கிறது.

கபந்தன் வதம்.

யோகநிஷ்டையிலிருக்கும்போது சரீரத்தில் பசியில்லாமலிருந்தது அந்த நிஷ்டை கலையவும் பசி உண்டானதைக் கபந்தன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவன் சரீரமானது ஒரு வயிறும் இரண்டு கைகளும் தானென்று சொல்லப்பட்டிருக்கிறது. பசி உள்ள ஸ்தானம் வயிறும் அதற்கு ஆகாரம் போக கூடியதான கழுத்தின் குழாயுந்தான். கழுத்தின் குழாய் இரண்டு கைகளையும் ஒன்றுகச்சேர்த்ததுபோல நீளமாகயிருப்பதால் கபந்தனை வயிறும் கைகளும் மட்டும் உள்ளவனென்றும் அந்தக்கைகளால் ஆகாரங்களை வாரி வயிற்றில் போட்டுக்கொள்வதாயும் சொல்லப்பட்டிருப்பது சரி. நிஷ்டையை மறுபடியும் ஆரம்பித்ததால் பசி நின்றுபோனதைக் கபந்தவதமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு இராமர் சபரி ஆச்சிரமம் போனதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது வாயின் மேல் பாகத்திலுள்ள "லாலண" சக்கிரம் அந்த ஸ்தானத்தில்தான் பதார்த்தங்களின் ருசி தெரியுமானதால் சபரிதான் ருசிபார்த்த பழங்களை இராமருக்கு அவள் கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருப்பது உசிதமாகவிருக்கிறது.

ஸுக்ரீவ ஸக்கியம்.

"ஸுக்ரீவ"னென்றால் நல்ல கழுத்து என்று அருத்தம் அது கழுத்திலுள்ள விசுத்தி சக்கிரம் அந்த, சக்கிரத்திலிருந்துதான் நாம்புகள் ஹ்ருதய சுவாஸப்பை முதலான எல்லா இடங்களுக்கும் போகிறது அதை சக்கர யோகத்தால் கட்டுப்பட்டால்தான் சரீரத்திலுள்ள எல்லா நாம்புகளும் அவயவங்களும் ஸ்வாதீனமாகும். ஹ்ருதயம் சுவாஸ மண்டலம் இவைகளும் சொன்னபடி கேட்கும் அந்தச் சக்கரம் யோகத்தால் வசியப்படுத்துமுன், இருந்ததை வாலியென்றும் வசியமான பிறகு ஸுக்ரீவனென்றும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸுக்ரீவ ஸக்கியம் யென்பது, அந்த சக்கரம் யோகத்தால் இராமருக்கு வசியப்பட்டது என்று அருத்தம் தைத்திரீய உபநிஷத்தில் "பிராணம்தேவா அனுப்ராணந்தி" என்று சொல்லி இருப்பதால் நாம்புகள் தேவர்கள் என்று சொல்லி இருக்கிறது. தேவதைகள் குரங்குகளாக ஆகிவிடுங்களென்று பிரஹ்மாவான் கொடுத்ததாகச் சொன்னதின் இரகஸ்யம் நாம்புகள் தான் குரங்குகளென்று சொல்லலாம். எல்லா நாம்புகளும் ஸுக்ரீவனுகிற விசுத்தி சக்கரத்திற்கு யோகத்தால் ஸ்வாதீனப்படுத்தப்பட்டதான ஸுக்ரீவ ஆக்ஞையென்று பெயர் வந்தது வாலி ஸுக்ரீவனைக் காட்டிலும் பலிஷ்டனுகவிருந்தபோதிலும் அவன் உத்திரவுகளுக்கு அந்தப்பெயர் இல்லை. ஏனென்றால் யோகநிஷ்டை செய்வதற்குமுன் அந்த சக்கரத்திற்கு எல்லா நாம்புகளும் ஸ்வாதீனமில்லை. இந்திரியங்கள் மட்டும் யோகத்திற்கு முன்னும் விசுத்தி சக்காத்திற்குக் கட்டுப்பட்டிருந்ததால் இந்திரியங்களாகிற இராவணனை வாலி கட்டிக்கொண்டு போனதாகச் சொல்லியிருக்கிறது. மேலும் சரீரத்திலுள்ள நாம்புகளைத்தான் குரங்குகளாக சொல்லப்பட்டிருக்கிறதென்பதை ருஜுப்படுத்த வேறு காரணமுமிருக்கிறது. பிரகன் உபநிஷத்தில் 3வது பிரசனம் 6வது சுலோகத்தில் சரீரத்திலுள்ள நாம்புகளின் சங்கியை அநேக 72000 மென்று சொல்லப்படுகிறது. ஸேது மஹாத்மத்தில் இலங்கைக்குப்போன குரங்குகளின் ஸங்கியை 72 வெள்ளமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வெள்ளமென்றால் அநேக ஆயிரம். இது வால்மீக இராமயணத்திலும் சொல்லியிருக்கும் குரங்குகளின் எண்ணைக் கணக்குப்பார்த்தால் சரியாகவிருக்கிறது. யுத்தகாண்டத்தில் 28வது ஸர்க்கம் 4வது ச்லோகத்தில் இராவணன் முன்னிருக்கும் குரங்குகளின் சங்கியை "நவபஞ்சசஸப்தச" யென்று சொல்லப்பட்டிருக்கிறது. நவ பஞ்சயென்றால் 45 ஸப்த யௌ 3ல் 7 ஆக 52 அநேக ஆயிரமாகிறது. இதைத் தவிற 20 குரங்கு சிரேஷ்டர்களைச் சொல்லி ஒவ்வொருவரிடத்திலும் அநேக ஆயிரம் குரங்குகளாயிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் 72 அநேக ஆயிரங்கள் என்று ஏற்படுகிறது. ஆகையால் சரீரத்திலுள்ள நாம்புகளைக் குரங்குகளாகச்சொல்லியிருந்தது நிச்சயம்.

ஹனுமார்.

ஏற்கனவே ஹனுமாரை மனஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இராமயணத்தில் சொல்லிய அவருடைய ஜனன பரம்பரையும் நடத்தைகளும் மனசின் உற்பத்திக்கும் சேஷ்டைக்கும் ஒத்திருக்கிறது. ஹனுமார் கோகர்ண க்ஷேத்திரத்தில் பிறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மனஸின் முக்ய இருப்பிடமாகிய மனஸ் சக்காமும் "கோ" யென்ற கண்ணுக்கும் "கர்ணம்" யென்ற காதுக்கும் ஸமீபத்தில்தாளிருக்கிறது. மனஸானது பிராணன் ஆகாசம் இந்த இரண்டும் ஸம்பந்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. உபநிஷத்தில் மனஸினிடம் வாயு, ஸூர்யன் இந்திரனை இவர்கள் அம்சமும் சேர்ந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதேவிதமாக ஹனுமாரும் வாயு அஞ்சனு தேவி இருவருக்கும் பிறந்ததாயும் அவர் சூர்யனைப் பழமென்று விழுங்கப்போனதாயும் இந்திரன் வஜ்ராயுதத்தால் ஹனுமாரின் தாடையில் அடித்ததாயும் அதைப்பார்த்து வாயு கோபம் கொண்டு ஸ்தம்பித்துவிட்டதாயும், பிரஹ்மா ஸமாதானம் செய்து சூர்யன், இந்திரன், இவர்களின் அம்சத்தை அவருக்கு கொடுத்ததாயும் சொல்லப்பட்டிருப்பதால் மனஸின் அம்சங்களுக்கு ஒத்திருக்கிறது. மனஸானது குரங்கைப்போல சலிக்கிற ஸ்வபாவமானதால் ஹனுமாரை குரங்காகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஹனுமாரை மனஸ் யென்பதற்கு இராமயணத்திலும் வேறு ஆதாரமிருக்கிறது. கிஷ்கிந்தா காண்டத்தின் கடாசியில் ஹனுமார் அங்கதன் முதலானவர்கள் சீதையைத்தேட புறப்படும்பொழுது "மனஸ்ஸமாதாயமஹாநுபாவோ ஜகாமலங்காம் மனஸாமனஸ்வீ" யென்றுசொல்லியிருப்பதால் ஹனுமாரை மனஸ் என்று வால்மீகி காட்டியிருக்கிறார். மேலும் சீதையானவள் இலங்கையில் ஹனுமாரிடம் கருடன், வாயு, ஹனுமார் இவர்கள்தான் இலங்கைக்கு வாலாமென்று சொல்லியிருப்பதாலும் மனஸையும் வாலாமென்று சொல்லாமல் அதற்குபதில் ஹனுமாரைச் சொல்லியிருப்பதால் மனஸ்தான் ஹனுமார் யென்று ஸூசகம் ஏற்படுகிறது.

ஹனுமார் இலங்கைக்குப் போனதும் அவர் இலங்கையில் செய்த செய்கைகளும்.

ஹனுமார் தெற்கு ஸமுத்திர கரையிலுள்ள மகேந்திர கிரியின் மேலேறி ஸமுத்திரத்தைத் தாண்டினரென்று சொல்லப்பட்டிருக்கிறது. மகேந்திர கிரி என்பது அனுஹத சக்காமென்றுசொல்ல இடமிருக்கிறது. கங்கை, யமுனை ஸரஸ்வதி என்று மூன்று நதிகள் சேர்ந்த காசியை அனுஹத சக்காமாக சொல்லுகிறார்கள். அதற்குக்காரணம் காசியில் மூன்று நதிகள் சேர்ந்திருப்பது போல அனுஹத சக்காமும் கங்கை, யமுனை, ஸரஸ்வதி என்று பெயரிடப்பட்டமூன்று பெரிய நாடிகளாகிற இடை, பிங்களை, ஸுஷும்னை சேருமிடமாயிருக்கிறது. ஹிருதயத்திற்கு ஸமீபத்தில் அனுஹத சக்காமிருப்பதாக ஷட்சக்கா நிருபணத்தில் சொல்லியிருக்கிறபடி இராமயணத்திலும் ஹிருதயமாகிற ஸ்வயம்பிரபை இருக்கும் குகையும் மகேந்திர கிரிக்கு ஸமீபத்திலிருப்பதாக சொல்லி இருக்கிறபடியால் மகேந்திரகிரியை அனுஹத சக்காமாக சொல்லஇடமிருக்கிறது. மேலும் இராமயணத்தில் மகேந்திர கிரிக்கும் இலங்கைக்கும் மத்தியில் ஸமுத்திரமிருப்பதாயும் அதை ஹனுமார் மஹேந்திர கிரியில் ஏறி தாண்டி இலங்கையில் குதித்தார் என்று சொல்லியிருக்கிறபடி மஹேந்திரகிரியாகிற அனுஹத சக்காத்திற்கும் இலங்கையாகிற மூலாதார சக்காத்திற்கும் மத்தியில் மணிபூரகம், ஸ்வாதிஷ்டானமென்று சொல்லப்பட்ட இரண்டு சக்காங்களிருப்பதாக் ஷட்சக்ரநிருபணத்தில் சொல்லியிருப்பதும் தவிர அவை இரண்டு சக்காம் ஜலதத்வமுள்ளதாகவும் ஷட்சக்கா நிருபணத்திலும் ஸௌந்தர்யலஹரிஎன்பதாவது சுலோகத்திலும் சொல்லியிருக்கிறது.

ஏனென்றால் ஷட்சக்கா நிருபணத்தில் ஸ்வாதிஷ்டானசக்காத்தை ஜல தத்வமாக சொல்லியிருக்கிறது. மணிபூரக சக்காத்தை அக்னிதத்வமாக சொல்லியிருக்கிறது. ஸௌந்தர்யலகரியின் 9வது சுலோகத்தில் மணிபூரக சக்காத்தை ஜலதத்வமாயும் ஸ்வாதிஷ்டானத்தை அக்கி தத்வமாயும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இரண்டு சக்காங்களையும் ஜலதத்வமாகவும் அக்னி தத்வத்தை ஸமுத்திர மத்தியிலுள்ள படபா அக்னி என்று சொல்ல இடமிருப்பதால் அந்த இரண்டு சக்காங்களிருக்கும் சரீரத்தின் பாகங்களை ஸமுத்திரமாக சொல்ல இடமிருப்பதுடன் அவைகள் இராமயணத்தில் சொல்லிய ஸமுத்திரமாகச் சொல்லலாம்.

S அய்யாத்துரை அய்யர்.

(தொடரும்)



# பிரணவ மஹிமை

[காக்கழுணி கிருஷ்ணமூர்த்தி]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ராக்ஞி உபயுக்தோயோக:,
தேதோச்யதேயோகாநாம் ராஜேதிவா ராஜ
யோக: ।

ராஜயோகமானது தாரகம், அமனஸ்கம், என்று சொல்லப்படும் பிரிவினையை உடையது. தாரகமென்பது பூர்வ பாகம். அமனஸ்கமென்பது உத்தா பாகம். ராஜயோக அப்யாஸத்திலும் சூக்ஷ்மமான இயமநியமாதிகளுண்டு. தவிர, பரிபாகிகளின் பக்குவாபக்குவங்களுக்குத் தகுந்தபடி பற்பல அப்யாச விதிகளுமுண்டு. அவைகளை அனுபவியான யோகிகளிடம் நேரில் தெரிந்துகொள்ள வேண்டியதவச்யம். ராஜயோகப்பியாசம் குருமுகமாக, குருவின் உபதேசப்படி, குருவின் சன்னிதியிலேயே பழகவேண்டியதவச்யமாகும்.

ராஜயோகப்பிரிவினையிலொன்றான 'ஷண்முகீகரண முத்திரை என்ற அப்யாசத்தில் (இரண்டு கைவிரல்களாலும் கண் காதுகளை மூடிக்கொண்டு, புருவமத்தியில் நாட்டமிட்டு அங்கு தோன்றும் டங்கார சப்தத்திலேயே மனதை யுன்னிப்பழகுவது) பிரணவ சப்தத்தையே தாரணை செய்வதாகும். இன்னும், நாம் சுவாசிக்கும் சுவாசமானது 'ஹம்' என்றசப்தத்தோடு நாசிக்கு வெளியில் சென்று 'ஸ:' என்ற சப்தத்துடன் திரும்ப நாசியில் நுழைகிறது. இச்சப்தங்கள் வெகு சூக்ஷ்மமானதால் சாதாரணமாய்ப்புலப்படுவதில்லை. நம் மனோவிருத்தியை அந்தர் முகமாயாக்கினல் அச்சப்தம் அறியப்படுவதாகும். குருமுகமாயறிந்து பழகுமந்த யோக சாஸ்திரத்தில் அஜபாயோகமெனசொல்லப்படுகிறது.

ஹகாரேண பஹிர்யாதி ஸகாரேண
விசேத்புந: । ஹம்ஸ ஹம்ஸேதி
யோமந்த்ரம் ஜீவோஜபதி ஸர்வதா ।
அஜபாநாம காயத்ரீம் யோகிநாம்
மோக்ஷ சாதனம் ।

எனயோக சாஸ்த்ரம் கூறுகிறது. இதில் காணும் 'ஹம்' என்றசப்தம் பிரணவநாதமாகும் சர்வ சங்க பரித்யாகம் செய்துள்ள பாஹம்ச சந்நியாசிகளுக்குக்கூட பிரணவஉபாசனை விதிவத்தாகவுள்ளது.

சூக்ஷ்மரூபமாய் விளங்கும் 'ஓம்' என்ற ஓரே அக்ஷரத்தை ஸ்தூலமாக்கும் பொழுது 'அ' உ ம் எனமூன்று அக்ஷரமாக பிரிபடுகிறது. இந்த மூன்று அக்ஷரங்களிலிருந்தும் சராசராத்மகமான சர்வப் பிரபஞ்சங்களும் உண்டாவதாக சாஸ்திரங்கள் சொல்லுகிறது.

ப்ருதிவ்யக்நிச்ச ரிக்வேத: பூரித்யேவ
பிதாமஹ: । அகாரேதுலயம் ப்ராப்தே
ப்ரதமே ப்ரணவாம்சகே ।
அந்த ரிக்ஷம் யஜுர்வாயு: புவோ விஷ்ணு
ஸ்ஸநாதந: । உகாரேதுலயம் ப்ராப்தே
த்விதீயே ப்ரணவாம்சகே.
த்யௌ: ஸூர்ய: ஸாமவேதச்சஸ்வரி
த்யேவ மகேச்வர: । மகாரேதுலயம்
ப்ராப்தே த்ருதீயே ப்ரணவாம்சகே.

என்றும்,

அகார: பீதவர்ணச்சரஜோ
குணஸமுத்பவ: । உகார: ஸாத்விக:

என்றும் சொல்லப்படுவதால், அகார, உகார, மகாரங்களிலிருந்து தனித்தனியாய் பிரபஞ்ச பதார்த்தங்களும், மஹா மந்திரங்களும், குணங்களும் உண்டானதாக ஏற்படுகிறது. அதாவது ப்ருதிவி அக்னி ரிக்வேதம், ஸ்வர்ம் பூ: என்ற காயத்திரியின் பிரதம பாகம், பிர்ம்மா, மஞ்சள் வர்ணம் ரஜோகுணம் முதலானவைகள் அகாரத்திலிருந்தும், ஆகாயம் வாயு யஜுர்வேதம், 'புவ:' என்ற காயத்திரியின் மத்தியமபாகம், விஷ்ணு, சநாதந தர்மம், வெள்ளை வர்ணம் சத்துவகுணம் முதலானவைகள் உகாரத்திலிருந்தும், சூர்யாதி நவக்கிரஹங்கள், ஸாமவேதம், மஹேச்வரன் 'ஸுவ.' என்ற காயத்திரியின் அந்திம பாகம் கறுப்பு வர்ணம் தாமஸ குணம் முதலானவைகள் மகாரத்திலிருந்தும் உண்டானவைகளாகும். இவ்விதம் யாவற்றையுமாராயுமிடத்து, இச்சா, ஞான கிரியை என்ற சக்திகள் மூன்று, விச்வ தைஜஸ பிராக்ஞ என்ற சீவத்வம் மூன்று பிராத மாத்யாந்ந ஸாயம்என்றகாலங்கள் மூன்று கார்ஹபத்ய ஆஹவநீய தக்ஷிண எனப்படும் அக்னிகள் மூன்று, ஸ்வர்க்க மத்ய பதாள என்ற லோகங்கள் மூன்று ஸ்தூலஸூக்ஷ்ம காரண என்ற தேஹங்கள் மூன்று காமிக் மாயிக ஆணவ என்ற தோஷங்கள் மூன்று ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிக என்ற தாபங்கள் மூன்று தாரபுத்திர தனமென்ற ஈஷணைகள் மூன்று இவ்விதம்மும் மூன்றுயுள்ள பற்பல பொருள்கள் குணங்கள் முதலானவைகள் யாவும் முறையே அகார உகார மகாரங்களிலிருந்து உண்டானவைகளாகும்.

இவ்விதம் யாவும் பிரணவாம்சமாகவே யிருப்பதால் பிரணவநாதமே பிரபஞ்சமெல்லாம் வியாபித்து விளங்குகிறது. சமுத்திர கோஷம், இடி முழக்கம், சிம்ம கர்ஜனை யானையின் பிளிறல், கண்டாநாதம் முதலிய முறட்டுச் சப்தங்களிலும், குதிரையின் கனைப்பு, நாயின் குலைப்பு, பன்றியின் உறுமல், பக்ஷிகளின் கத்தல் முதலான பற்பல பிராணிகளின் சாமான்ய சப்தங்களிலும், வீணை, வேணு முதலிய வாத்யங்களாலுண்டாகும் மிருதுவான கீதநாதங்களிலும் வெளியாவதெல்லாம் ஊஹித்தறியின் யாவும் பிரணவ சப்தமே யொழிய வேறல்ல. உதாரணமாக பல ஜனங்கள் கூடி போஞ்செய்யும் ஒரு சந்தைக் கூட்டத்தின் பேரிரைச்சலை சற்று தூரத்தில் நின்று கவனிப்போமானல், அவைகள் இன்னின்ன வார்த்தைகள் என்று நமக்குத்தெளிவாயறிய முடியாதாயினும், அங்குண்டாகும் சப்தங்கள் யாவும் ஒன்றாகி சமஷ்டி சப்தமாக ஒரு சப்தம் வெளிப்படும். அந்த சப்தத்தை ஊஹிப்போமானல், அது பிரணவத்தொனி யென்பதை நன்கறியலாம். இவ்விதம் சர்வப்பிரபஞ்சத்தையும் வியாபித்துள்ள பிரணவ சப்தத்தையே நாம் சர்வதா காதில் கேட்டுப்பழகவேண்டும். வேற்றுமையைத்தாத்தக்க இதா சப்தங்கள் நம் காதில் விழ எள்ளளவும் இடங்கொடுக்கக்கூடாது. என்று சொல்லப்படுவதால் நாமும் நமது மனோவிர்த்தியை உலகவிவகார சப்தத்திலிருந்து திருப்பி, பிரவண சப்தத்தையே கிரஹிக்கும்படி செய்து சந்ததமும் பிரணவத்தியான பார்களாயிருப்போமாயின், வேத சாரமான பொருள் நமக்கு வெளிப்படும்.

தைலதாரா மிவாச்சிந்நா தீர்க்க
கண்டா நிநாதவத் । அவாச்யம்
ப்ரணவஸ்யாக்ரம் யஸ்தம் வேத ஸவேத
வித் ॥

என்று சொல்லப்படுவதால் நாம் அனவாதமும் அந்த பிரணவத்தையே ப்றபலவிதமாயும் அன்புடன் நினைத்தும், கேட்டும், ஆராய்ந்தறிந்தும் பழகவேண்டியது நமது கடமையாகும். பிரணவமான 'ஓம்' என்ற சப்தமே நமக்கு உலகின் உண்மையை விளக்கி, உயர்வைத்தந்து, உபசாந்த நிலையையும் தருவதாகும். அதுதான் மெய்யறிவு. உலக சப்தங்கள் யாவற்றிலும் நிறைந்துள்ள உண்மையைக் காண்பதுதான் மெய்யறிவு என்பதை நாயனர்

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினு
[மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று விளக்கியிருக்கிறார்.

பிரணவாம்சமான அகாரம் அடித்தொண்டையிலிருந்தும், உகாரம் வாயைக் குவித்துச் சொல்வதிலிருந்தும், மகாரமோ இரண்டு உதடுகளையும் ஒன்றுய்ச் சேர்த்து உச்சரிப்பினுலும் வெளிப்படுவதாகும். அதாவது 'ஓம்' என்ற பிரணவம் அடி, இடை, கடை என்ற மூன்றுகவுள்ளசிருஷ்டி, ஸ்திதி, சங்காரத்தை விளக்குகிறதாகும். தவிற, கற்பனையான ஜகத்தாதிகளின் தோற்றத்துக்கு முந்தியும், கற்பனையின் விளக்கத்திலும், கற்பனைகள் நசித்த உபசாந்த நிலையிலும், பிர்ம்மம், ஒன்றே விளங்குவதால், மூன்று காலங்களிலும் ஒரேபடித்தாய் விளங்கும் 'சத்' எனப்படும் பிர்ம்மவஸ்து உற்பத்தியற்ற அநாதி என்பதை 'அ' என்ற அக்ஷாத்தாலும், நிர்விகார வஸ்துவில் 'சித்' விலாசமாக ஜீவ, ஈச்வா, ஜகத்தாதிகள் கற்பனையாக உண்டானதுகள் என்பதை 'உ' என்ற அக்ஷாத்தாலும், சர்வ துவைத பாவங்களும் நசித்து ஏகரசமான அத்வைத 'ஆனந்த' நிலையை (துவைதமான இரண்டு உதடுகளையும் சேர்த்து) 'ம்' என்ற அக்ஷாத்தாலும் பிரணவம் வெளியிடுவதாகவும் கூறலாம்.

'ம்' என்ற அக்ஷாமே மோன நிலையைக்காட்டுவதால் அதற்குமோன அக்ஷாமென்றும் ஊமை அக்ஷாமென்றும், நூல்களில் சொல்லப்படுகிறது. இம்மோன நிலையை சாக்ஷாத் சங்கான் தெக்ஷணாமூர்த்தியாய் அவதரித்து தன் கைவிரலை மடக்கி சின் முத்திரை என்ற சங்கேதத்தால் சனகாதிகளுக்கு உபதேசித்தருளினர். ஸ்ரீ தாயுமான ஸ்வாமிகளுக்கு உபதேசித்த ஆசானும் கைகாட்டி உண்மைப்பொருளை உபதேசித்தானென்றும், மோனகுருவென்றும் தன் ஆசானைப்பற்றிப்புகழ்ந்து, தான் பெற்ற மோன நிலையைக்கொண்டாடி தான் செய்த பாடல்களில் தாயுமானஸ்வாமிகள் புகழ்ந்திருப்பதே போதிய சான்றுகும்.

அகார, உகார, மகார, மயமான பிரணவம் ரிக், யஜுர், ஸாம, அதர்வணமாகிய நான்கு வேத மஹா வாக்கியங்களின் பொருள்களையும் 'ஓம்' என்ற ஒரு மொழியால் மொழிவதெனவும் கொண்டாடப்படுகிறது. எத்தனை விதமாய் ஆராய்ச்சி செய்தாலும் அத்தனை விதத்திலும் பிரணவ மகிமை பேசப்பேசப் பெரிதாகுமேயொழிய பேசி முடிவதற்கில்லை பிரணவத்தின் மஹிமை அளவிடற்கரியதாயிருக்கிறது.

இவ்விதம் மஹாமஹிமை பொருந்திய 'ஓம்' என்ற ஒரு (பிரணவ) மொழியினல் பிறவியில் படும் சர்வசிரமங்களும் ஒழிந்து ஒழிவெனும் சாந்த நிலை (சும்மாவிருத்தல்) பெற்று சாச்வதானந்த பதவியில் சந்ததமும் வாழலாமென்பதை பார்வதிதேவிக்கு பாமன் உபதேசித்தருளிய நிஷ்டானுபூதியில்

ஒரு மொழியாலே சுருதியாகமநூலுயர்
புராணமுமெல்லா மொழியும்
ஒரு மொழியாலேசரிதை நற்கிரியாயோக
பாவனையெல்லா மொழியும்.
ஒரு மொழியாலே யண்ட பூதங்களொடுங்
கிடுந் தன்னிலை தோன்றும்
ஒரு மொழி சும்மா விருத்தலாமதனலொப்
பிலாச்சிவபதமடைவார்" என்று விளக்கியிருக்கிறது.

சம்சார நாசத்தின் பொருட்டு எவ்வித சாதனை புரியினும், அதனல் சாத்யமாவது யாதென நன்கு நோக்கிடின் அல்லலற்றிருப்பதுவே பிரயோஜனமாகும். அணுவளவு அல்லலிருப்பினும் அது உபசாந்த நிலையாகாது. அதினல் உபசாந்தம் பெற்ற பெரியோர்களை கிருத கிருத்தியன் என கொண்டாடப்படுகிறது. செய்கையும், செய்விக்கையுமற்று சுகமாயிருத்தலேசும்மாவிருத்தலாம்

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

215266



மார்சலியே



சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்




## புராணக் கதைகள்.

### ஸத்யத்தின் பெருமை.

மஹா ஞானியான மனுவிற்கு அநேக பிள்ளைகளுண்டு. அவரவர்களில் ஒருவன் பெயர் 'நாபாநேதிஷ்ட' என்பது. இவன் குருகுலத்தில் அத்யயனம் செய்துகொண்டிருக்கும் போது மனுவிற்குத் தன் காலம் நெருங்கியதாகத்தோன்ற, அவர் உடனே தன் பொருள்களைத் தன் பிள்ளைகளுக்குப்பங்கிட்டுக்கொடுத்து விட்டுக் காடு சென்றார்.

நாபாநேதிஷ்டன் அத்யயனம் முடித்து ஊர் வந்ததும் தன் பிதாவைக்காணவில்லை. விசாரிக்கையில் தன் தகப்பனார் தன் ஆஸ்தியைக்குமாரர்களுக்குக் கொடுத்து விட்டுக் காடு சென்றதாகத் தெரிந்து கொண்டான். உடனே தன் ஸஹோதரர்களை யடைந்து தனக்கு பிதா வைத்த பாகம் எங்கே என்று கேட்க, அவர்கள் உனக்கு பாகம் யாதொன் வைக்கவில்லை. அதற்குக்காரணமும் எங்களுக்குத் தெரியாது. தகப்பனார் அளித்த பொருளை நாங்கள் அநுபவிக்கின்றோம். உனக்கு எதாவது சொல்லவிஷயமிருந்தால் தகப்பனாரிடம் போய்ச்சொல்லிக்கொள் என்றனர்.

இதுகேட்ட நாபாநேதிஷ்டன் கொஞ்சமேனும் ஆயாஸமடையாமலும் மனதைக்காமக்ரோதங்களுக்குட் படுத்தாமலும் எல்லா விஷயத்தையும் தந்தையிடம் கூறுவோம் என்று உத்ஸாகத்துடன் தந்தையைநோக்கிச் சென்றான். கானகத்தில்தந்தையைக்கண்டு அவரைப்பணிந்து அத்யயனம் செய்து குருவினிடமிருந்து வீடு செல்ல அனுமதி பெற்றதையும் தன் ஸஹோதரர் கூறிய விஷயங்களையும் தெரிவித்தான்.

தகப்பனார் ஸந்தோஷித்து, நாபாநேதிஷ்ட! உனக்கு நான் பொருள் ஒன்றும் வைக்கவில்லை என்பது உண்மையே. ஸமீபத்தில் ஒரு நதி தீரத்தில் ஆங்கிரஸர்கள் யாகம் செய்யப் போகிறார்கள். அவர்கள் அனேவருக்கும் யாகத்தில் 6-வது தினத்தில் செய்யவேண்டிய ஸவனகர்மாவில் முறைதெரியாமல் பதட்டம் ஏற்படும். இவ்விதம் அநேக முறை யாகம் செய்து ஆறுவது தினத்தில் செய்யவேண்டிய கார்யம் தெரியாமல் யாகங்கள் வீணாயின. உனக்கு இரண்டு ஸவன மந்திரங்களைக் கற்றுக்கொடுக்கிறேன். நீ அங்கு சென்று ஆறுவது தினத்தில் உதவி புரிந்தால் அவர்கள் உனக்கு ஏராளமான பொருளைக் கொடுப்பார்கள். அதையடைந்து சுகமாய்க் காலம் கழிக்கலாம் என்றார்.

நாபாநேதிஷ்டன் அப்படியே செய்கின்றேன் என்று சொல்லி யாகசாலைக்குச் சென்றான். தகப்பனார் கூறியபடி ஆறுவது தினத்தில் அங்கு கூடியிருந்த அங்கிரஸ்கள் ஹோமமுறை தெரியாமல் விழிக்கும்போது நாபாநேதிஷ்டன் முன்வந்து உதவிபுரிய, அவர்கள் மிகவும் ஸந்தோஷித்து அந்த யாகத்தில் செலவுசெய்ததுபோக மிஞ்சிய தனத்தையெல்லாம் நாபாநேதிஷ்டனுக்குக் கொடுத்து, யாகத்தைத் தப்பிதமில்லாமல் செய்து முடித்ததனால் ஸ்வர்க்கம் சென்றனர்.

நாபாநேதிஷ்டன் யாக சாலையிலிருந்து ஏராளமான தனத்தை எடுத்துக்கொண்டு வரும்போது கரியவஸ்திரம் தரித்த புருஷன் ஒருவன் அவன் முன்தோன்றி 'நீ யார்? ஏன் இப்பொருளை எடுத்துச் செல்கின்றாய்? இவையெல்லாம் என்னைச் சேர்ந்தவை. கீழே வைத்துவிட்டுச் செல்' என்றான். உடனே நாபாநேதிஷ்டன் தனக்குப் பொருள் கிடைத்த வரலாற்றைச் சொல்ல அப்புருஷன் மறுபடியும் "நீ சொல்வது உண்மையே. ஆனால் யாகத்தில் மிகுந்த பொருள் என்னைச் சேர்ந்ததே. அதை உனக்குக்கொடுக்க யாருக்கும் அதிகாரமில்லை. ஆகையால் அங்கிரஸ்கள் கொடுத்ததால் இப்பொருளில் உனக்கு பாத்யதை ஏற்படாது. இதில் உனக்கு ஸந்தேஹமிருந்தால் உன் தகப்பனாரைக் கேட்டுவா. நான் அவர் சொற்படி நடக்கிறேன்" என்றான்.

நாபாநேதிஷ்டன் சற்றேனும் வருந்தாமல் தன் தந்தையிடம் சென்று விஷயத்தைத் தெரிவிக்க, அவர் குழந்தாய், உன் முன் தோன்றியவர் யக்ஞபுருஷர். அவர் சொல்வது உண்மையே. யாகத்தில் மிகுந்த பொருள் அவரைச் சேர்ந்ததே. ஆகையால் அங்கிரஸ்கள் கொடுத்தபொருளை அவரிடம் கொடுத்துவிடு என்றார். தந்தையின் வார்த்தையை கௌரவித்து, நாபாநேதிஷ்டன் யக்ஞ புருஷரை அடைந்து 'ஸ்வாமி தாங்கள் சொன்னது உண்மைதான் என்று என் பிதா கூறினார். ஆகையால் இப்பொருளை தயவு செய்து எடுத்துக்கொள்ளவும்' என்று வேண்டினான்.

யக்ஞமூர்த்தி உடனே களித்து, ஏ! உத்தமனே, உன் குணத்தை மெச்சினேன். உன் தகப்பனார் கூறிய மொழிகளைக்கொஞ்சமும் மறைக்காமல் பணவாசை சற்றுமின்றி உள்ளதை உள்ளபடிகூறிய நீ அல்லவா உத்தம புத்திரன். ஸ்வதர்மத்தைப்பூர்ணமாய்க்கைப்பிடித்த உனக்கு இந்தப்பொருள் ஒரு அரிய வஸ்துவா? நீ உலகில் க்ஷேமமாய் வாழக்கடவாய் என்று அவனை ஆசீர்வதித்து அங்கிரஸ்கள் அளித்த பொருளை மறுபடியும் அவனுக்கேயளித்து மறைந்தார். நாபாநேதிஷ்டனும் ஸந்துஷ்டனாய்த் தன் தந்தையிடம் சென்று நடந்த விஷயங்களைச் சொல்ல, அவர் தன் மகனை எப்பொழுதும் ஸத்ய தர்மத்தை அனுஷ்டிக்கும்படி உபதேசித்தார்.

ஆகையால் ஸத்யவாதி ஒருக்காலும் துன்பத்துக்காளாகான்.

S. இராமச்சந்த்ர ஹரி:

## திருவாரூர்.

காலமானார் சென்ற 15 வருடகாலமாக திருவாரூர் கமலாலயம் மேல்கரையிலிருக்கும் பெ. அள. வெ, வீர. ராமனாதன் செட்டியார் அவர்கள் வேத பாடசாலையில் உபாத்யாயராயிருந்த பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கனபாடிகள் என்ற பெரியார் வெகுதான்யஸு கார்த்திகை-மீ 27உ திங்கட்கிழமை அதாவது 1938 ஹு டிசம்பர்-மீ 12உ பரலோகத்தையடைந்தார்.

வேதத்தின் பொருளை தெரிந்துகொண்டபடி அனுஷ்டானம் செய்வதும் சிஷ்யர்களுக்குச்சொல்லி கொடுப்பது யாரிடத்திலும், சாந்தம் காட்டுவதும் மேற்படி வேத பாடசாலையில் வரும் வருமானம் சொற்பமாயிருந்த போதிலும் தர்ம முன்னேற்றத்தில் ஆஸக்தியுள்ளவராயிருப்பது, ஒவ்வொரு வருடத்திலும் 10 அல்லது 15பையன்களை முன்னுக்கு கொண்டுவருவது, மைசூர் முதலிய ராஜாங்க வித்வத் ஸபைகளுக்கு பரீக்ஷை விஷயமாய் ஒவ்வொரு வருஷத்திலும் பையன்களையனுப்புவது என்பதான கொண்டாடத்தகுந்த அநேக குணங்களோடு கூடியிருந்த பெரியாரின் மரணமானது வருந்தத்தக்கதென்ற விஷயத்தில் யார் தான் ஐயமுறுவார்கள். ஒருநிருபர்.

(9ம் பக்கத்தொடர்ச்சி)

நமது யாவற்றுக்கவலையுமற்று, இன்பவடிவாகியிருப்பதுவே உண்மை முக்தி நிலையென்பதை சொரூபானந்த தேசிகர்

"ஞான நூல் கற்றாலு நல்லுறவு பூண்
டாலு மோன சமாதி முயன்றாலுந்-தா
னொழி எல்லாக்கவலையுமற்றின்புற்றிருப்
பதுவே சொல்லாரு முக்திச்சுகம்"

என்று எடுத்து காட்டியிருப்பதால், அச்சுக வடிவாக நாம் ஆகவேண்டுமென்றால், அகார உகார, மகார, ஸ்வரூபமாயுள்ள பிரணவத்தை சந்ததமும் ஆசிரயித்து, அன்பெனும் பணிவிடையை அந்தக்கரணத்தால் அனுஷ்டித்து, அகண்டாகார விருத்தியெனும் அழியாப் பதத்தில் ஆனந்த ஸ்வரூப ப்ராப்தியில் அமருவோமாக.

ஒ... [illegible]

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakondm.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்

4 3

24

19-1-1939

215267

000 666 25267 31
30 JAN 1939 MADRAS

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 24 | கும்பகோணம் கலி5039 பகுதான்ய-ஞு தை-மீ 6உ 1939-ஞு ஜனவரி-மீ 19உ | ஸ 3

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
[illegible] கும்பகோணம்.

## ஜஸ்டிஸ் கக்ஷியிலிருந்து விலகினர்.

வெங்கடகிரி ராஜா ராஜிநாமா.

ஜஸ்டிஸ் கக்ஷியில் பிரபலஸ்தராயிருந்தவெங்கடகிரி ராஜா அவர்கள் அந்தக் கக்ஷியிலிருந்து ராஜிநாமாசெய்து விலகிவிட்டார். அக்கக்ஷியில் புதிதாகக் கிளப்பப்பட்டுள்ள ஆர்ய திராவிடப் புதுக்கிளர்ச்சியை கண்டிக்கும் அறிகுறியாகவே இவர் விலகினதாகத் தெரிகிறது.

## ரயில் விபத்து.

10—பேர் மரணம்.

டோராடூன் எக்ஸ்பிரஸ் தண்டவாளத்தை விட்டு நழுவிக் கீழே விழுந்த விபத்தில் சுமார் 10 பிரயாணிகள் கொல்லப்பட்டுப் போனர்கள். 50 பேர்களுக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது.

## நிலவரி வஜா.

மீண்டும் 75 லக்ஷம்?

சென்னை ஸர்க்கார் சென்ற வருஷங்களைப் போல் இவ்வருஷத்திலும் 75 லக்ஷம் ரூபாய் நிலவரி வஜா செய்ய நிச்சயித்திருப்பதாகக் கூறப்படுகிறது. தஞ்சை ஜில்லா போர்டில் 100-க்கு 33 வீதம் நிலவரியைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று ஸர்க்காரைக்கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பலன் என்னவோ?

## லக்ஷம் ரூபாய் நன்கொடை.

காசி ஹிந்து ஸர்வ கலாசாலைக்கு ஹைதராபாத் மஹாராஜா லக்ஷம் ரூபாய் நன்கொடையளித்தார். இப்பணம் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை யுண்டுபண்ணும் வழியில் செலவிடப்படும்.

## ஆகாயத் தபால் விமானம் நாசமாகியது.

சென்னைக்கு வந்து கொண்டிருந்த டாடா தபால் விமானம் வழியில் கால நிலைமைக் கோளாறு காரணமாக விபத்துக்குள்ளாகி எரிந்து விட்டது. விமானமோட்டியும் எரிந்து மாண்டார். அநேக விமானங்கள் தேடிச் சென்று இதைக் கண்டுபிடித்தார்கள்.

## நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தோற்றது.

ஹிந்து சட்ட ஸபையில் மந்திரிகளின் மீது கொண்டு வரப்பட்டிருந்த நம்பிக்கையில்லாத்தீர்மானம் தோல்வியடைந்து விட்டது. முஸ்லீம் லீக் இவ்விஷயமாக மிகுந்த பாடுபட்டது.

## கார்யக் கமிட்டி.

காந்திஜியின் புதிய திட்டம்.

காங்கிரஸ் கார்டக் கமிட்டி பர்டோலியில் காந்தி ஆச்ரமத்தில் நடைபெற்றது. ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைக் கருதி மைனரிடி வகுப்புப் பாதுகாப்புத் திட்டமொன்றை காந்திஜி தயாரித்து கார்யக் கமிட்டியில் ஆஜர் செய்திருக்கிறர். இந்த திட்டம் ரஹஸ்யமாக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கனம் ஆகாகான் பர்டோலியில் காந்திஜியை 14உ யன்று ஸந்தித்து முக்ய விஷயங்களைப் பற்றிப் பேசினர்.

உ
ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

## ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

மூலம் நாகரத்திலும், தமிழிலும்,

ஸ்ரீமான் G.V.கணேசய்யர், B.A., B.L., எழுதிய தமிழுரையுடனும், விசேஷ குறிப்புகளுடனும் கூடியது.

ஸ்ரீ வித்யை, ஸ்ரீ பாஸ்கரராயருடைய சரித்
[illegible]
கங்கள் முதலியன அடங்கியவை.

டிம்மி 1/8 அளவில் சுமார் 1000 பக்கங்கள் கொண்டது. முழு காலிகோ பயின்டு.

ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர், ஸ்ரீ சக்ரம் படங்களுடன் கூடியது.
விலை ரூ 4.] [தபால் V. P. P. சிலவு தனி

## ஸ்ரீ லலிதாத்ரிசதீ.

நாகரலிபியில் மூலமும், நாமாவளியும்.
விலை 0—3—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு விலை அணா 0—2—0.

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
"ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B.A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால் சிலவு வேறு] [விலை அணா 0—8—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு விலை அணா 6.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனர்தன ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டென்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

## கடவுளின் உபயோகம்.

### 2. நற்றேழன்.

ம:—நடக்க பலமற்று ஒரு மனிதன் இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இன்னொருவன் பலசாலியாக விருந்து தன்னை வழிகாட்டி யழைத்துப் போவானென்று தெரிந்தால் அவனுக்கு ஸந்தோஷமாயிருக்காதா? தான் கடுமையான வியாதியினால் பீடிக்கப்பட்டவனாக இருக்கும்போது, தன்னைக் கவனித்துப் பிரியமாய் வைத்யம் செய்யக்கூடிய ஒரு வைத்தியர் ஸமீபத்திலிருக்கிறார் என்று தெரிந்தால் கொஞ்சம் ஆறுதல் ஏற்படாதா? தாரித்திரியத்தினால் மிகவும் வருந்திக் கொண்டிருக்கிற ஸமயத்தில், தன் வறுமையைத் தீர்த்துக் கொடுக்கக்கூடிய ஓர் அன்புள்ள பணக்கார பந்து ஸமீபத்தில் இருக்கிறார் என்று தெரிந்துகொண்டால் சிரமம் கொஞ்சம் குறைவுபடாதா?

த:—வாஸ்தவம்.

ம:—நம் ஆயுட்காலத்தில் பிரதிக்ஷணமும் வியாதி, தாரித்திரியம் முதலான கணக்கிட முடியாத துக்க காரணங்கள் ஸம்பவித்துக் கொண்டேயிருக்கின்றன. அப்படியிருக்க, அந்த துக்க ஹேதுக்களை நிவிருத்தி செய்து, கேட்கும்போது ஆறுதலைக் கொடுக்கக்கூடியவனாக ஒருவன் ஸமீபத்திலிருப்பதாகத் தெரிந்து உணர்ந்தால் நமக்கு ஸந்தோஷமாயிராதா?

த:—இருக்கும் தான்.

ம:—நாம் வியாதியினால் பீடிக்கப்படும் [illegible] தரித்திரனாயிருக்கும்போது இன்னொரு தரித்திரனையும், நினைத்தால் என்ன பிரயோஜனம்?

த:—இல்லைதான்.

ம.—பல சாலியாய் அரோகமாயிருப்பவனையோ, பணக்காரனையோ, நினைப்பதுதான் உசிதமாகும்.

த:—ஆம்.

ம:—வியாதி, தாரித்திரியம், இவைகளுடன் நம் சிரமம் நின்று விடுகிறதில்லை.

த:—நமக்கிருக்கும் சிரமங்களுக்கு கணக்கேயில்லை.

ம:—ஒவ்வொரு சிரமத்திலும், அந்த சிரமத்திலிருந்து விடுவிக்கக்கூடிய ஒரு ஸ்நேஹிதர் இருக்கிறார் என்று தெரிந்தால் ஆறுதல் உண்டாகும்.

ம:—ஆகையால், நமக்கு ஏற்படக்கூடிய சிரமங்களுக்கெல்லாம் தக்கபடி அந்தந்த சிரமங்களற்ற மனுஷியர்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

த.—அதெப்படி முடியும்? நம் சிரமங்கள் தான் அனந்தமாய் இருக்கின்றனவே?

ம:—வாஸ்தவம். ஆகையால், எல்லாவித சிரமங்களுக்கும் உட்படாத ஒருவன் கிடைத்து விட்டால் நமக்குப் போதுமல்லவா?

த:—வாஸ்தவம். ஆனால், அப்படி யார் எங்கே அகப்படுகிறார்கள்?

ம:—இந்த லோகத்தில் மரணம் ஒரு சிரமம்?

த:—ஆம்.

ம:—அப்படியே ஜனனமும் சிரமம்தான்.

த:—வாஸ்தவமே. மற்ற சிரமங்களுக்கெல்லாம் இதுவே மூலகாரணமாகும்.

ம:—ஆகையால் ஜனனத்திற்காவது மரணத்திற்காவது, தான் உட்படாமலிருந்துகொண்டு, நம்மையும் இந்த சிரமங்களிலிருந்து விடுவிக்கக் கூடியவராக ஒரு ஸ்நேஹிதர் அகப்பட்டால் நன்றாயிருக்குமல்லவா?

த:—யுக்திக்கு ஸரிதான்.

ம:—நாம் ஸாதாரணமாக சிரம நிவிருத்தியை மாத்திரம் அபேக்ஷிக்கிறோமென்பதில்லை. நம் மனோரதங்களும் பூர்த்தியாக வேண்டுமென்று நினைக்கிறோம். அம்மனோரதங்கள் கணக்கில் அடங்காதவைகள். ஆகையால், நம் மனோரதங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொடுக்கக் கூடிய ஒரு ஸ்நேஹிதரும் வேண்டியிருக்கிறது. நம்முடைய ஆசைகள் எண்ணிக்கையில் அடங்காமலிருப்பதுடன் எல்லையற்றுமிருக்கின்றன. எவ்வளவு பணக்காரனாயிருக்கும் பந்துவும் நம் ஆசைகளை பூர்த்திசெய்து கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. அவனுக்கு மனதிருந்தபோதிலும் அதிசீக்கிரம் அவன் சொத்தே காலியாகிவிடும். ஆகையால் நம் ஸ்நேஹிதருக்கு அக்ஷயமான சொத்தும் இருக்கவேண்டும் கணக்குப்படி ஒருவர் பெரியப் பணக்காரராகவேயிருந்தாலும், உங்களுக்கு அவசியம் ஏற்படும் போது அவர் கைவசம் ரொக்கம் இல்லையானால் உங்களுக்கு உதவிக்க முடியாது. ஆகையால் பணம் ஏராளமாய் இருந்தால் மாத்திரம் போதாது. எப்பொழுதும் அப்பணம் கூடவே இருக்கவேண்டும். தன்னுடைய கஜான்வரவேண்டுமென்றிருந்தாலும், இரும்புப் பெட்டியின் சாவி தவறியிருந்தாலும், உடனே உங்களுக்கு உதவிக் கொள்ள முடியாது. அப்படி ஒரு ஸ்நேஹிதர் மதுரையில் இருந்தால், நீங்கள் அவரையும் கூடவே அழைத்துப் போனாலொழிய, அவர் உங்களுக்கு மைஸூரில் உதவமாட்டார். நீங்கள் அழைத்துப் போகிற சிரமம் கூடயில்லாமல், உங்களுக்கு வேண்டிய இடத்திலெல்லாம் அவர் இருக்கக் கூடியவராயிருந்தால், மிகவும் ஸௌகர்யமில்லையா? இவ்விதமாகவே ஆலோசனை செய்துகொண்டு [illegible] பொழுதும் ஸித்தமாய், உங்கள் கூடவே எங்கும் இருக்கக் கூடியவராய், உங்களுக்காக எதையும் செய்யக் கூடியவராய், எதையும் அறிந்தவராய், தான் எவ்வித சிரமும் அற்றவராய், உங்களுடைய அபேக்ஷைகளைப் பூர்த்திசெய்யவும் குறைகளை நீக்கவும் மனமும் சக்தியும் வாய்ந்தவராய், ஒரு ஸ்நேஹிதர் இருக்கிறாரென்ற பாவனை உங்களுக்கிருந்தால், மிக்க ஆறுதல் இருந்துதானே தீரும்!

த:—இப்படிப்பட்ட வொரு ஸ்நேஹிதரை வெறும் மனோராஜ்யத்தில்தான் காணலாம்.

ம:—இருக்கட்டுமே. வாஸ்தவமாகவோ, தவறுதலாகவோ, இப்படியொரு ஸ்நேஹிதர் இருக்கிறார் என்று நினைத்தால் ஆறுதலிருக்கிறதென்பது வாஸ்தவம். நம் ஸ்நேஹிதரிடம் இருக்கவேண்டியதாகத் தீர்மானித்திருக்கிற குணங்களைக் கவனிக்கும்போது, அவருக்கு ஸர்வ வ்யாபித்வம், ஸர்வ சக்தத்வம், ஸர்வக்ஞத்வம், முதலானவைகளெல்லாம் வேண்டுமென்று ஏற்படுகிறது. நம்முடைய குறுகின புத்தியினால் மனோராஜ்யத்தைத் தவிர வேறு வழியில் இப்பேர்ப்பட்ட ஸ்நேஹிதரை ஊஹித்துக்கூடப் பார்க்க முடியாது. அப்படியிருக்க, அவ்வித ஸ்நேஹிதரை ஸாக்ஷாத்கரிப்பது எப்படி ஸாத்தியமாகும்? ஆகையால், நம்மிடம் மிகவும் அக்கரை கொண்டவராகவும், நாம் விசுவாஸம் வைக்கக்கூடியவராகவும், ஒருவர் வந்து மேலே சொல்லியபடி ஒரு ஸ்நேஹிதர் இருக்கிறார் என்று உறுதி சொல்லும் விஷயத்தில், நாம் அவரிடம் மிகவும் நன்றி பாராட்ட வேண்டியதுண்டு. நம் புத்தி பரிச்சின்னமாயிருக்கிற காரணத்தினாலேயே, அவர் சொல்லும் விஷயம் வாஸ்தவமில்லையென்று ருசுப்படுத்தவும் நம்மால் முடியாது. இவ்விதம் நமக்குச் சொல்லும் ஆப்தரிடத்தில் நமக்குள்ள நம்பிக்கையை தளரச்செய்ய எவ்வித காரணமும் இல்லை. ஆகையால் ஸர்வ. சக்தராக ஒரு ஸ்நேஹிதர் இருக்கவே இருக்கிறார் என்கிற எண்ணத்தைக் கெடுக்கவும் முடியாது. அப்படி ஒரு ஸ்நேஹிதர் எல்லாமறிந்தவராக, ஸகலவல்லமையும் வாய்ந்தவராக, இருந்து வேளை வந்தபோது நம்முடைய ஸகலவிதத் துக்கத்தையும் விலக்கிக் கொடுக்க ஸித்தமாயிருக்கிறார் என்ற நம்பிக்கை ஒருவனுக்கு த்ருடமாயிருந்தாலும், முதலில் இல்லாமலிருந்து பின்னால் அவ்வித நம்பிக்கையை ஸம்பாதித்துக் கொண்டாலும், அவனுக்கு அதைர்யம் ஏற்பட இடமேது? தான் நினைத்தபடி துக்க நிவிருத்தி யேற்படாமல்போனாலும் கூட, ஒருக்கால் அந்த ஸர்வக்ஞான ஸ்நேஹிதரின் தீர்மானத்தில் இத்தருணத்தில் அந்தத் துக்கமே தான் சிரேயஸ்கரமென்றிருக்கலாமென்று ஸமாதானம் செய்து கொள்வான். ஆகையால், ஈசுவரன் என்று நாங்கள் சொல்கிற அவ்வித ஒரு ஸ்நேஹிதர் இருக்கிறாரென்று ருசுப்படுத்த முடியுமா, காட்ட முடியுமா, என்ற கேள்விகளை தாரவைத்து விட்டாலும்கூட, அப்படி ஒருவர் இருக்கிறாரென்று நம்பினால் அனுபவத்தில் பெரிய அனுகூலமிருக்கிறதென்பதை ஆக்ஷேபிக்க முடியாது.

த:—இருக்கிறாரென்று கூட ருசுப்படுத்தாத ஒருவர் விஷயத்தில் எப்படி நம்பிக்கை யேற்படும்?

ம:—இருக்கிறதாக ருசுப்படுத்தப்பட்ட விஷயங்களை மாத்திரம் தான் நாம் நம்புகிறோம் என்ற நியமம் உண்டா? நம் நம்பிக்கையை அவ்வளவுக்குள் அடக்கிக் கொண்டால், உலகத்தில் ஒரு காரியமும் செய்ய முடியாது. நம்முடன் ஸம்பந்தப்படுகிறவன் யாராயிருந்தாலும் அவன் வார்த்தையை நம்பித்தான் தீரவேண்டும். ஒரு வீட்டை உத்தேசித்து நீங்கள் தேடிக்கொண்டிருக்கையில், [illegible] கோளின் பேரில் உங்களுக்கு வழிகாட்டினால், உடனே அவன் யோக்கியனா, அவன் நன்கு தெரிந்து சொல்கிறானா, என்று விசாரிக்க ஆரம்பிக்கிறீர்கள்? அவன் வார்த்தை தவறுதலாயிராதென்று உடனே நம்பி அவ் வீட்டுக்குப் போவீர்கள். அங்கு போன பிறகு, அது நீங்கள் தேடின வீடாக இல்லாமலிருந்தால், அப்புறம் அவன் பேரில் குற்றம் சொல்ல நியாயமுண்டு. அப்படியன்னியில், நீங்கள் அவன் வார்த்தையை நம்புவதற்கே, தான் ஸரியாகத்தான் சொன்னேன் என்று அவன் ருசுப்படுத்தட்டும் என்று ஆரம்பித்தால், அப்படி ருசுப்படுத்த ஒரு வழிதான் உண்டு உங்களை கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு அவ்வீட்டில்கொண்டு போய் விடவேண்டும். அதற்கும் நீங்கள் அவன்கூடவே போகத் தயாராயிருக்கவேண்டும். நானும் ஒரு அடி எடுத்துவைக்க மாட்டேன், அவனும் தன் வாக்கியத்தை ருசுப்படுத்தவேண்டும், என்றால் ஒருக்காலும் நடக்காது. அதேமாதிரி, ஈசுவரன் உண்டென்று நம் பிராசீன அறிஞர்கள் சொல்லியிருப்பதை நம்பாமலிருக்க எவ்விதம் காரணமும் கிடையாது, அவர்களுடைய வார்த்தையில் த்ருடமான விசுவாஸம் வைத்துத் தீரவேண்டும். அவர்கள் சொல்லியபடி நடந்து பார்த்துக் கடைசியில் அவர்கள் சொன்னது தவறு என்று உங்களுக்கு ஏற்பட்டதேயானால், அப்பொழுது அவர்கள் பேரில் குற்றம் சொல்லலாம். அதுவரை சொல்வது நியாயமாகாது.

த:—அந்த ரிஷிகளும் நம்மைப்போல் மனுஷியர்கள் தானே? நமக்குத் தெரியாமலிருக்க, அவர்கள் மாத்திரம் ஈசுவரனைப் பற்றி எப்படித் தெரிந்து கொண்டார்கள்?

ம:—அதற்குக் காரணம் அவர்கள் தங்கள் குருக்களிடம் த்ருடமான விசுவாஸம்

(தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்க)



MADRAS 1939

## Public Health Bill.

(Raosahib N. Natesa Iyer, Madura).

The Madras Public Health Bill opens up a new Chapter in the suffocating history of strategic Legislative invasions into the sphere of Indian social and religious life. It creates a Public Health Board and Health establishments of local authorities including Executive authorities, Health Officers and Sanitary Inspectors who may belong to any caste, class, creed or religion and confers upon them powers the exercise of which is virtually not open to any outside control. The most lamentable and dreadful feature which pervades the Bill is that all officers not below the rank of Sanitary Inspector have been armed with immense powers to enter private houses, temples, water sources at any time for working the Act. Any person obstructing the entry there-to of a Panchama, Muslim or Christian Inspector or Health Officer can be punished with *imprisonment for 6 months and unlimited fine.* Temple Entry Bills and Civil Disabilities Removal Bills are no longer needed for this purpose.

The innocent name dexterously given to it has disarmed all suspicion of the deep policy lurking underneath. The Unwary public thus thrown off their guard have not probed into it with sufficient care and attention. A close scrutiny however will not fail to reveal that under the cloak of an apparently health-promoting measure it is, in the fullness of time sure to complete, silently, covertly and with a greater measure of success, the work of destroying the Vedic religion, culture and civilization which the Civil Disabilities Removal Act, the Malabar Temple Entry Act, the Child Marriage Restraint Act, the Civil & Special Marriage Acts, the Widow Remarriage Act and the Caste Disabilities Removal Act, have openly and [illegible] aid of the Time-spirit. Had only a measure of this kind been hatched and evolved earlier, there might have been no need for many of the aforesaid laws and most of the huge storms and tearful oppositions and waves of unrest amidst which they have been enacted and which are still tearing and convulsing the country from end to end could have been avoided. A silent bloodless revolution would have thoroughly changed the religious and social map of India without anybody perceiving it or feeling it. The people would have quietly and peacefully glided into the soulless socialistic, classless, casteless mentality which it is the primary aim of the powers that be to create at all costs. The Civil Disabilities Removal Act and the Temple Entry Act strike at public places and institutions only and leave untouched private homes, private places of worship, private gatherings, private festivities and private ceremonials and functions. The Public Health Bill fills up this lacuna and under the pretext of promoting public interests, and in an unheard-of manner, lays violent hands on what are essentially private elementary fundamental rights and exultingly destroys the still lingering avenues of escape from the poisonous atmosphere of irreligion and lapses from correct conduct, which is increasingly enveloping the country from shore to shore. It is enough to refer by way of illustration to a few provisions of the Bill Viz.,

(1) Class 23 & 25 of Chapter III which empower a Health Officer at his pleasure to close permanently a private source of water-supply and prohibit owners of dwelling houses from occupying houses which are not provided with wholesome water within them - a matter for which the owner may not be responsible.

(2) Clauses 3 and 40 which give such a wide and elastic definition of the term "nuisance" as to draw within its ambit and penalize, at the whim and caprice of an officer not below the rank of a Sanitary Inspector, any act, however innocuous in itself such as collecting people in one's own house for a marriage, a feast, musical entertainment, a religious lecture, Bhajana or worship: Clause 42 which places in the hands of a mischievously minded neighbour a weapon of harassment in the shape of malicious report of nonexisting nuisances in dwelling houses; and clause 45 which empowers a malicious Health Officer to take steps for vacating them; and clause 47 which empower any officer net below the rank of a Sanitary Inspector to enter and inspect at any time and in any manner any dwelling houses for enforcing the provisions touching nuisance.

(3) Clauses 3 and 51 which give such an equally wide and elastic and drastic definition 'infectious' and venerial diseases as to bring within the operation of Chapter VII almost every living person; Clause 55 which clothes a Health Officer with a right to enter and occupy a house which in his unfettered discretion he may consider necessary to enter for preventing infection; clauses 57, 76 and 80 which furnish a disgruntled medical practitioner with an easy instrument for venting his spleen and Clause 58 which empowers a Health Officer or his nominee to enter and inspect any dwelling house at any time with or without notice and even imprison them therein for any length; Clause 63 which leaves it to a Health Officer to determine whether either hnsband or wife or both are suffering from infectious diseases and to march them off jointly or separately to different places ostensibly for treatment and which further makes obstruction to such removal and detention an offence punishable with imprisonment for 6 months or unlimited fine or both; Clause 65 which places it in the power of Health Officer to dislodge from a public conveyance a Judge, Advocate, party or witness on his way to the Court house on suspicion of his being subject to an infectious disease; Clauses 67 & 68 which compel every husband and wife, mother and daughter, father and son, declared by an Officer not below the rank of a Sanitary Inspector to be suffering from an infectious disease, to separate themselves forthwith wherever they may be in a street, a theatre or night club or temple or rest house or a health resort and every legal or medical practitioner or other businessman who may be declared infected, to desist from his engagements; Clause 71 which arms a Health Officer with the power to stop abruptly Uthsavams in temples, Harikatha performances, Religious discourses, Marriages, private and public entertainments involving the assemblage of more than 50 persons by declaring the existence there about of infectious diseases; Clause 72 which confers upon the Health Officer the power to compel persons to submit to vaccination and inoculation in spite of the fact that preponderance of medical opinion is veering against such processes and in spite of conscientious and religious objections and to order evacuation of houses which it is left to their sweet will and pleasure to declare to be infected.

(3) Clause 123 which by insisting upon a 60 days' previous notice of a temple festival makes the conduct of a festival virtually impossible and which in conjunction with the operation of the clauses relating to nuisance may result in the indefinite postponement and stoppage of the periodical festival.

It is needless to give further instances. The provisions already existing are quite adequate to meet the evils real or imaginary. The authors of the Bill themselves admit though in a characteristically clever language that many of the provisions are revolutionary. It is entirely opposed to the Indian genius. It will not be incorrect to state that the Bill is a deceptive measure, deliberately dressed in the garb of Public and Health for disarming public suspicion and opposition which in the fulness of time is sure to destroy in actual working what little yet remains of the principles of Hinduism not devoured by legislative measures already referred to. It is hoped that the authorities concerned will take note of the dangerous consequences that are sure to follow from enacting the same in its present form without radical modifications.

## தேசிகன் தேன் மொழிகள்.

(2ம் பக்கத்தொடர்ச்சி)

வைத்து ஈசுவரனை அறியவேண்டியதற்குள்ள உபதேசங்களைப் பெற்று அதன்படி நடந்து கொண்டார்கள்.

த:—இதுவே ஸமாதானமாயிருந்தால், அந்தக் குருக்களுக்கு எப்படித் தெரிந்தது என்ற மேல் கேள்வி வரும். இப்படிக் கேட்டுக் கொண்டேபோனால், முடிவன்னியில் அனவஸ்தையாக வல்லவா ஏற்படும்?

ம:—இன்னொருவரிடமிருந்து அறிந்து கொள்ள அவசியமன்னியில்தானே தெரிந்தவராக ஓர் ஆதி புருஷனை ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில், அனவஸ்தைதான்.

த:—அந்தப் புருஷன் யார்?

ம:—நம் பழைய ஸ்நேஹிதராகிய ஸர்வக்ஞான ஈசுவரனே வேதங்கள் அவருடைய நிசுவாஸம். அவைகளே ஸகல நல்லறிவுக்கும் மூல ஸ்தானம். ஆகையால் ஈசுவரனிடத்திலும், அவருடைய வாக்கிலும், அவர்களுடைய பக்தர்களிடத்திலும் நம்பிக்கை வையுங்கள். அதிசீக்கிரத்தில் நன்கு ஆறுதலைக் காண்பீர்கள். உங்கள் கூடவே அவர் எப்பொழுதும் ஸித்தமாயிருக்கிறாரென்ற நண் [illegible] கும். அவருடைய ஸந்நிதியை உணரவும் ஆரம்பித்து விட்டீர்களேயானால், இதற்கு முன் அனுபவித்திராத ஓர் ஆனந்தம் தோன்றும். எப்படியாவது காலத்தைச் செலவழிக்கவேண்டியதுதானே என்ற எண்ணம் போகும். அந்த சாந்தி ஸுகத்தைத் தேடி யனுபவிப்பதிலேயே காலத்தை நன்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று தோன்றும். அதிருப்திகரமான எவ்விதத் தோற்றமும் அப்புறம் தோன்ற இடமிராது. ஆயுட்காலம் பிரயோஜனமற்ற ஒரு வெட்டவெளி யென்ற பாவனை அடியோடு போய்விடும்.

## தென்னாற்காடு ஜில்லா ஸநாதனதர்ம மஹாநாடு.

(6-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஞானசக்ஷுஸ்ஸால் ஸமாதானப்படுத்தி விட்டார்கள். உண்மையாகவே பகவான் கீதையில் ஒன்றை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்துவிடலாம் என்று சொல்லுகிறார் ஸ்ரீ பகவானும் "இவ்விஷயங்கள் வேதங்களில் சொல்லப்பட்டவை" என்று சொல்லுகிறார். ராஜ்யமானது காங்கிரஸ் ராஜ்யமாகவோ மற்றதாகவோ இருக்கலாம். ஆனால் அனுதியான பேரின்பத்தை அடைவதற்காகவும் ஆத்மா போராடுகையில் எந்த ராஜ்யமும் அந்த ஆத்மார்த்திக வளர்ச்சியில் ஆக்கிரமிக்க முடியாது. ஓர் ராஜ்யமானது மனிதனுடைய தேவைகளை திருப்திசெய்து வைக்கலாம் ஆனால் மதமோ மனிதனுடைய ஸ்திரமான சந்தோஷத்தையும் மோக்ஷத்தை சம்பாதித்துக் கொடுப்பது. சாஸ்திரங்கள் பகவானுடைய உத்திரவை வெளியிடுகின்றன. அதற்கு எதிராக மனிதனுடைய உத்திரவு ஒரு நாளும் அனுமதிக்கத்தக்கதல்ல.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்

பகுதான்யஹு தை-மீ 6உ

## "மதத்தை ஸரிப்படுத்த சட்டத்தால் முடியாது"

மதத்தையும், பழக்க வழக்கங்களையும் சட்ட மூலமான நிர்ப்பந்தத்தால் ஒழிக்க வேண்டுமென்று சில தீவ்ர ஆசாரத்திருத்தக்காரர்கள் வெறி பிடித்துத் துடிப்பது தெரிந்த விஷயம். இந்தக் குறுக்கு வழி பிரயோஜனப்படாதென்றும், அபாயமானதென்றும் கனம் மந்திரி ஸி. ஆர். சென்னை ஜீவாக்ஷா பிரசார ஸபையின் வருஷாந்திரக்கூட்டத்தில் பேசியிருக்கிறார். ஆசார திருத்த வாதிகள் நீண்ட காலமாகப்பத்திரிகைகளிலும், பிரஸங்க மேடைகளிலும் ஆசாரத்திருத்தங்களைப் பற்றி பல்லவரியே பேசி வந்திருக்கிறார்கள். ஆயினும் அவைகளை ஜனங்கள் ஏற்கவில்லை. இப்போது சிற்சிலவிடங்களில் ஏதோ சிலர் சில ஆசாரத்திருத்தங்களை கையாளுகிறார்களெனினும், அது ஸாதாரணமாகக்கால மாறுதலால் ஏற்பட்டதேயல்லது சீர்திருத்த பிரசாரத்தின் பலனென்று சொல்ல முடியாது. ஆதலால் சீர்திருத்தக்காரர்கள் தங்கள் கொள்கைகளைப் பொதுஜனங்கள் மீது சுமத்தக்குறுக்கு வழியாகச் சட்டமியற்றுவதை வற்புறுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். ஒருவருக்கு அல்லது ஒரு சிறிய கூட்டத்திற்கு ஒரு விஷயம் பிடிக்கவில்லையானால் உடனே அது விஷயமாகச்சட்டம் செய்து விட வேண்டுமென்று கேட்பது இப்போது வெகு ஸஹஜமாகி வருகிறது.

தேவாலயங்கள் சிலவற்றில் பிராணி பலி செய்யப்படுவதைத் தடுக்க முன்வந்துள்ள கக்ஷியாரும் இந்த வகையைச் சேர்ந்தவர்களே. பலி நிறுத்தத்திற்காக ஓர் கடுமையான சட்டமியற்றிவிடவேண்டுமென்று அவர்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இந்த உத்தேசத்தைக் குறுக்குவழியில் நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கத்துடனேயே அவர்கள் தந்திரமாக கனம் ஸி. ரா. வைத் தலைமை வஹிக்க அழைத்திருக்கவேண்டுமென்று நினைக்கிறோம். ஆயினும் கனம் ஆசாரியர் அவர்களுடைய வலையில் சிக்காமல் தப்பிக்கொண்டிருக்கிறார். மேற்படி ஸபையின் அதிகாரிகள் சிலர் அங்கு பேசுகையில், மதத்தின் பெயராலும், தெய்வத்தின் பெயராலும் பலியிடப்படுவதைத் தடுக்கவேண்டுமானால் சட்டம்செய்து தீரவேண்டுமென்றும் சட்ட உதவியில்லாமல் இக்கார்யத்தை ஸாதிப்பது கஷ்டமென்றும் வாதித்தார்கள். ஆனால் கனம் ராஜகோபாலாசாரியர் பேசுகையில் வெகு நிதானமாயும், சாதுர்யமாயும், அநுபவத்தை யொட்டியும் அவர்களுடைய கக்ஷியை திரஸ்கரித்துவிட்டார். பலியிடுகிறவர்கள் தங்கள் பாவத்தைப் போக்கிக்கொள்ள அது ஒரு ஸாதனமென்ற பெருத்த நம்பிக்கையாலேயே அதைச் செய்கிறார்கள். மேலும் தங்களுடைய முன்னோர்களும் இந்த வழக்கத்தை அநுசரித்திருப்பதை பிரமாணமாகக் கொள்ளுகிறார்கள். பலியிடுவதை தெய்வ பூஜையென்று நம்பிச் செய்கையில் அந்த ஸமயத்தில் அதை ஸரியல்லவென்று தடுப்பது நியாயமல்லவென்று கனம் ஆசாரியர் நினைக்கிறார். அவனுக்குத் தோன்றிய வழியில் கடவுளிடம் அவன் பக்தி செலுத்துகையில் அவனைத் தடுப்பது உசிதமல்லவென்றும் கனம் மந்திரி நினைக்கிறார். சீர்திருத்த வாதிகள் பலி நடக்குமிடங்களுக்குச் சென்று கூட்டம் போட்டுத் தடுத்தும், மறியல்செய்தும், ஸத்யாக்ரஹம் நடத்தியும் அதை நிறுத்தக் கிளர்ச்சிசெய்வது நியாயமல்லவென்றே கனம் ஆசாரியர் மேற்கண்ட வார்த்தையில் குறிப்பிடுகிறார். இது சீர்திருத்த வாதிகளுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கக் கூடியதே. பலியானது நியாயமல்லவென்று தோன்றினால் அதைச் செய்யுமவர்களிடையில் அமைதியாக பிரசாரம் செய்து அதை மாற்றக்கூடிய அறிவைப் புகட்ட வேண்டியதே கடமையேயல்லது சட்டமியற்றுவதல்லவென்று ராஜாஜீ குறிப்பிடுகிறார். மேலும் பலி கொடுப்பவர்களுக்கும் கடவுள் பக்தி அதிகமாக இருந்துவருகிறது. அந்த பக்தி மேலீட்டின் காரணமாகவே பலி கொடுத்து தெய்வத்தைப் பிரீதி செய்விக்க அவர்கள் முன் வருகிறார்கள்.

ஆனால் அது ஒரு விதமான மூட பக்தியாயிருக்கலாம். ஆயினும் அந்த பக்தியை நல்லதான வேறு வழியில் திருப்பப்படுபட வேண்டும். பலி நடக்கும் வழக்கமில்லாத கோவில்களை ஏற்படுத்தி அந்த கோவில்களுக்கு அவர்களைப் போகும்படி [illegible] வேண்டும். இத்தகைய கார்யங்களெல்லாம் செய்து ஜனங்களின் மனதைத்திருப்ப வேண்டும். இவ்வளவையும் சட்டத்தால் ஸாதிக்கமுடியாது. திடீரென்று சட்டம் செய்தால் கலகமே ஏற்படும். மதத்தை ஸரிப்படுத்தசட்டத்தால் முடியாது. மதவிஷயமாகச் சட்டம் செய்வதுபாம்புக்காட்டில் பிரவேசிப்பதாகும். இத்யாதிகாரணங்களை கனம் ஆசாரியர் விரிவாகக்கூறி அவஸாக்ஷார்களின் வாதத்திற்கு ஆப்பு அடித்து விட்டார்.

ஆனால் இவ்வளவு தூரம் நியாயம் பேசிய கனம் ஆசாரியார் ஆலயப்பிரவேச விஷயமாக மட்டும் நிர்ப்பந்தச்சட்டம் செய்யவில்லையாவென்று கூட்டத்தில் ஒருவர் கேட்டிருக்கிறார். ஆலயப்பிரவேசச்சட்டமானது நேரிட மதத்தில்பிரவேசிக்க வில்லையென்றும் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து அவர்கள் இஷ்டப்பட்டால் தான் ஆலயப்பிரவேசம் செய்யமுடியுமென்றும், பலிநிறுத்தச்சட்டமோ, மற்ற மத சம்பந்தமான சட்டமோ இப்படியாகாதென்றும் கனம் மந்திரி பதில் சொல்லுகிறார். இதிலுள்ள நியாயங்களைப் பற்றி நாம் இப்போது சர்ச்சை செய்வது அவச்யமில்லை. ஆலயப்பிரவேசச்சட்டம் செய்தவரோ அது மதத்தில் நேரிட பிரவேசித்ததாகாதென்று ஸமாதானம் கூறியும் மத விஷயங்களில் சட்ட மூலமாக நிர்ப்பந்த மேற்படுத்துவது ராஜநீதிக்கோ, ஜனக்ஷேமத்திற்கோ, உரிமை ரக்ஷணத்திற்கோ, ஏற்றதல்லவென்றும், அப்படிச் சட்டம் செய்வது பிரயோஜனமற்றதாகிறதுடன் அபாயகரமாகவுமிருக்குமென்றும் கூறி, மத விஷயச் சட்டமியற்றுவதை பலமாகவும், தெளிவாகவும் எதிர்த்துப் பேசியிருப்பதை பொதுஜனங்கள் எந்நாளும் மறவாமல் மனதில் பதியவைத்துக் கொண்டிருக்கவேண்டியது அவச்யமென நினைக்கிறோம்.

## குறிப்புகள்.

### அலங்காரம் செய்து சிரச்சேதம்.

பம்பாய் மந்திரியான கனம் முன்ஷியை நாம் மறப்பதற்கில்லை. ஒரு ஸமயம் அங்கு தீண்டாமை விலக்கு விஷயமாகச் சட்ட ஸபையில் அவர் பேசும்போது, "நமது சாஸ்திரங்களுக்கு நெருப்பு வைக்கவேண்டு" மென்று முரட்டு ஆக்ரஹத்துடன் அவர் பேசியது பலரும் அறிந்ததே. சென்ற வாரத்தில் பம்பாயில் இவர் ஆர்ய நாகரிகத்தின் மேன்மையைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்து பேசியிருக்கிறார். ஆர்யர்களின், குடும்ப வ்யவஸ்தை, மாதா பித்ரு பக்தி, தெய்வ நம்பிக்கை, வர்ணாச்ரமமுறை ஆகிய பலவற்றையும் அவர் பிரஸ்தாபித்து, மற்ற ஜாதி மதங்களைவிட ஆர்யர்களின் மதஸமூஹ வழிகளே மிகச் சிறந்தவையென்றும், இந்தியாவின் க்ஷேமத்திற்கும். கௌரவத்திற்கும் அவைகளே அடிப்படையான ஆதாரமென்றும் தக்க பிரமாண யுக்திகளுடன் பேசியிருக்கிறார்.

ஆனால் "அலங்கரித்து சிரச்சேதம்" செய்வது போல், வெகு பலமாக அவர் ஆர்யதர்மமே பாரத தேசத்தின் உயர்ந்த தர்மமென்று வர்ணித்து விட்டு, உடனே அதன் சிரஸ்ஸை வெட்டி யெறிவது போல் அபத்தமாகப் பேசி யிருப்பது தான் மிக்கவருந்தத்தக்கது. கடைசியாக நமது தர்மங்களின் அடிப்படையான அம்சங்களைப் பற்றி இவர் பேசியிருப்பது மேற்கண்டவாறு வர்ணிக்க இடமளிக்கிறது. ஆர்யநாகரிகத்திற்கு வர்ணாச்ரம முறையே மூலதர்மமென்று சொன்னாயினும், ஜாதி நியமங்களைப் பற்றி அவர் நிர் [illegible] தன் பேச்சின் ரஸத்தையே நாசமாக்கி விட்டார்: ஆர்ய தர்மத்தின் அடிவேரையே களைந்து விட்டார். அவர் பேசியுள்ள விஷயத்தில் நல்ல அம்சம் எவ்வளவு இருக்கிறதாக நினைக்கப் படுமோ, அதைவிட விஷமமே அதிக மென்பது தெளிவாகிறது.

நமது உத்தம தபஸ்விகளும், தர்ம பிரவர்த்தகர்களுமான வியாஸ பாராசாதி மஹர்ஷிகளைப்பற்றி இவர் கூறியுள்ள அபத்த அபிப்பிராயம் வைதிக ஹிந்துக்களால் ஒரு க்ஷணம் கூட ஒப்பத்தக்கதில்லை. மிகவும் கண்டிக்கத்தக்கது. மேற்கண்ட மஹர்ஷிகளின் உற்பத்தியைப்பற்றி வெகு ஆபாஸமான அபிப்பிராயத்தை இவர் வெளியிட்டிருக்கிறார். வைதிக மதத்தின் ரஹஸ்யத்தை அவர் அறிந்தவரல்லவாகையாலேயே இப்படிப் பேசினார். ஆர்ய நாகரிகத்தில் பிறப்பு ஜாதி கிடையாதென்றும், எவனும் தனது குணகர்மங்களால் உயர்ந்த ஜாதியை அடையலாமென்றும் இவர் உயர்த்திப் பேசியிருப்பது ஆர்ய நாகரிகத்திற்கு முற்றிலும் முரண்பட்டது. ஆர்ய ஸமாஜ வாஸனையைக்கொண்டே ஆர்யநாகரித்தின் மஹிமையை அவர் வர்ணிக்க முற்பட்டபடியால் இவருடைய பேச்சு முழுவதும் விஷமயமாகி விட்டது.

### வைதிக மதமும், மதமாற்றமும்.

ஸ்ரீமான் முன்ஷி மற்றொரு விஷயத்திலும் வைதிக மதத்தின் தத்வத்தை அறியாமல் பேசிவிட்டார். இந்தியாவில் தற்போது மதமாற்றக் கிளர்ச்சி அதிகம் இருந்துவருகிறது. இது உண்மையில் ஜாதி மாற்றத்திலேயே முடிந்து வருகிறது. மஹம்மதியர், கிறிஸ்தவர்கள் முதலானவர்கள் ஹிந்துக்களை ஜாதிமாற்றி விடுகிறார்கள். இதற்குப் பதிலாக ஆர்ய ஸமாஜிகளும் இந்த வேலையில் இறங்கியிருக்கிறார்கள். ஆனால் இதற்கு



வைதிக மதத்தில் ஆதாரமிருப்பதாக கனம் முன்ஷி சொல்லியிருப்பது நிர்மூலமானது.

வ்ராத்ய ஸ்தோமம் என்ற பிராயச்சித்த சுத்தி முறையால் ஹிந்துக்களல்லாதவர்களை கூட சுத்தி செய்து ஹிந்து ஜாதியில் சேர்க்கலாமென்றும், இம்மாதிரி செய்ய சாஸ்திரம் இடம் கொடுப்பதாயும் முன்ஷி வாதிக்கிறார் வ்ராத்யஸ்தோம மென்பது வேறு ஜாதியினரைச்சுத்தி செய்வதற்காக விதிக்கப்பட்டதில்லை. சாதுர் வர்ண்யத்திலிருந்தவன் ஆசார அநுஷ்டான முறைகளும், வைதிக ஸம்ஸ்காரங்களும் பெறுமல் பதிதனாகி விட்டால் அவனைச்சுத்தி செய்யவே ஏற்பட்டதாகும். இது ஜாதி மாற்றத்திற்கு ஏற்பட்டதல்ல. பிறப்பில் ஏற்பட்ட ஒரு ஜாதியை அதேபிறப்பில் மாற்றமுடியாதென்பதே வைதிக மதத்தின் ஸ்திரமான கொள்கை. இந்த ஆர்யதர்மம் தோன்றிய காலம் முதல் இன்று வரையில் இதர ஜாதியினர் சுத்தி செய்யப்பட்டு நமது ஜாதியில் சேர்க்கப்பட்டதாகச்சொல்ல ஆதாரமும்கிடையாது. இப்படியிருக்க கனம் முன்ஷி ஜாதி மாற்றக்கொள்கை நம்மில் இருந்ததாகக்கூறுவது அபத்தமேயாகும்.

ஜாதி மாற்றத்திற்கும், மதமாற்றத்திற்கும் உள்ள வித்யாஸத்தை அறியாமலேயே இப்படி இவர் பேசியிருக்கிறார். ஆர்யநாகரித்தில் மதமாற்றமென்பது ஒருவாறு இருந்திருக்கலாம். சைவ, வைஷ்ணவாதிகளிலும், பௌத்த, ஜைனாதிகளிலும் பலர் ஜாதிமாற்றமில்லாமல் மதத்தை மட்டும் மாற்றிக்கொண்டதாகச் சரித்திர ஆதாரமிருக்கலாம். எப்படியும் "விராத்ய ஸ்தோமம்" ஏற்பட்டதன் காரணம் வேறு. மனுஸ்மிருதியில், அநேக க்ஷத்திரிய ஜாதிகள், ஆசார லோபத்தினாலும், வேறு காரணத்தினாலும் சிறிது சிறிதாக கௌரவமிழந்து கடைசியில் "விருஷளர்" களாகி விட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ஸ்வதர்மத்யாகத்தினால் "பிரஷ்டர்"களாகப் போனவர்களை சுத்திசெய்யவே விராத்யஸ்தோமம் உபயோகப்படும். "விராத்யர்கள்" யார் என்பதை நமது சாஸ்திரங்களே நிர்ணயித்துள்ளன. சாதுர்வர்ண்யத்திற்குள் பிரஷ்டர்களானவர்களே விராத்யரெனப்படுவர்.

விராத்யஸ்தோமமும் இவ்வளவு காலத்திற்குள் தான் செய்ய முடியுமென்பதையும் சாஸ்திரங்களே நிர்ணயிக்கின்றன. இந்த விதியை வேறு ஜாதியார்களுக்கு உபயோகித்து அவர்களை வைதிக மதத்தில் சேர்க்கமுடியாது. இம்மாதிரி வாயில் வந்ததைப்பேசி ஆர்ய நாகரீகத்தை சிலாகிப்பதாக நினைப்பது உண்மையில் அதைக்கொலை செய்வதாகஆகுமே யல்லது வேறல்ல.

## விடுதலை வகுப்புத்வேஷ வழக்கு.

### ஆசிரியருக்கும், பிரசுரகர்த்தாவுக்கும் தண்டனை.

ஈரோட்டிலிருந்து வெளியாகும், சு. ம. தினசரிப் பத்திரிகையான 'விடுதலை' மீது ராஜத்வேஷம், வகுப்புத்வேஷம் ஆகிய இரண்டு குற்றங்கள் சாட்டி கீழ்கோர்ட்டில் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. கோயமுத்தூர் ஜில்லா கோர்ட்டில் நடந்த அப்பீல் விசாரணையில் ஜட்ஜ் ராஜத்வேஷக் குற்றத்தை விலக்கிவிட்டு, வகுப்புத்வேஷக் குற்றத்திற்காக மட்டும் எதிரிகளுக்கு 6 மாதம் வெறுங்காவல் தண்டனை விதித்தார். எதிரிகள் ஹைகோர்ட்டால் ஜாமீனில் விடப்பட்டனர்.

## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா.)

நூறுண்டு யுத்த திட்டமா! ஜப்பான் உலகை புநருத்தாரணம் செய்து தனது ஏகாதிபத்யத்தை ஸ்தாபிக்க 100 வருஷ சண்டைக்கு ஆயத்தம் செய்கிறதாம்! போராசை பெரும் நஷ்டம்.

52½ கோடி டாலர் சேலவு! செய்து அமெரிக்கா யுத்த ஸந்நாஹம் செய்கிறது! நல்வழியில் செலவு செய்ய தரம் யாருக்குமில்லை!

கூடிக்கூடி பயனேன்ன? ராஜாங்க ஸபை தலைவர் கூட்டம் டில்லியில் கூடிற்று. அசெம்ப்ளி தலைவர் வேறு கூட்டம் போகின்றனராம்! இதனால் ஏற்படும் செலவை விட லாபமதிகம் என காட்டாதவரை இவை வீணென்றே பொதுஜன அபிப்ராயமாகும்!

கிருமபோனால் சிக்த்ஸையாம்! மேஜர் ஒருவர் வந்து தானில்லாத காலத்தில் சில பிளேட்டுகளை வைத்து நோயை அகற்றி வருகிறாராம்! விபூதியினாலே நோயகலும் தேசத்திற்கு இவை ஆச்சரியமல்ல!

ரேகை நிபுணர் கூற்று! வங்கத்திலே ஒருவர் எல்லோருடைய ரேகைகளையும் தான் பார்த்ததாகவும் ஸமீபத்தில் போரபத்து வருவதைக்காட்டுகிறது அது என்கிறார்! இச்சமயம் எங்கும் நெருக்கும் போரபத்தே! இதை விட அதிக முண்டோ?

வரியை பொருளாகவே வாங்கலாம்! என ஒருவர் சென்னையில் கூறினர்! ரூபா அணா பைசாக்களால் தான் பஞ்சம்! பண்டமாற்று முறை [illegible] அர்த்த சாஸ்த்ரம் கூறுகிறது! முதன் மந்திரி கவனிப்பாரா?

சொல்லை விட நடத்தலே மேல்! வயது வந்தவர் கல்வி என ஓர் கூட்டம் ஆட்டம் நடந்தது! ஸேவை எளிய வாழ்க்கை! எனப் பலர் பேசினர். அவர்கள் உடை விலையில் ஓர் மாதம் ஏழை குடும்பம் பிழைக்கும்!

நல் வழி காட்டுகிறது! உப்பிலியப்பன் கோவிலாதாவில் ஓர் வேத காவ்ய பாடசாலை நடக்கப்போகிறது! மற்றவை கவனிக்குமா?

சிறையில் நூல் நூற்றல்! கட்டாக்கில் குற்றவாளிகளை நூல் நூற்கும்படி தேசீய மந்திரி உத்திரவிட்டார்! நம்மூரில்?

இன்னுமா இது? கல்பாதி அக்ரஹார தியாகராஜ உத்ஸவத்தில் டிப்டி கலெக்டர் பீடி பிடித்ததை ஓர் சிறுவன் கண்டிக்க அவர் கோபத்துடன் எழுந்துபோனார்! உடனே போலீஸார் பந்தலைப்பிறி! உத்ஸவத்தை நிறுத்து என உத்திரவிட்டார்!

அர்த்தமில்லாப் பேச்சு! ஸீதாதேவி மறை உறிதரித்தாள் என ஒருவள் பேசியதை ஓர் ஆஸ்திக வித்வான் கண்டிக்கிறார். கிருஷ்ணன் சர்க்கா சுத்தினார். அதை உபதேசிக்கிறார் கீதையில், ஸீதாதேவியுடன் அநுமான் ஹிந்தி பேசினார், என்ற கூட்டத்தைச்சார்ந்த ஒருவள் ஸீதாதேவி கதர் கட்டினளென்று கூறுதகே ஆச்சரியம்!

### ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

Nellore.


### கும்பகோணம் பாங்கி லிமிடெட்; கும்பகோணம்.

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட பங்கு தொகை | ரூ 2,82,575 |
| க்ஷேம நிதிகளும் காப்பு நிதிகளும் | ரூ 2,09,438 |
| கரண்டு அக்கௌண்டு | .... 2% வட்டி |
| ஸேவிங்க்ஸ் பாங்கி | .... 3% ,, |
| தவணை டிபாஸிட்டுகள் | 1-ஹு 4% |
| | 2-ஹு 4½% |

சீஸன் டிபாஸிட்டுகளும் இப்போது வாங்கப்படுகின்றன.


## சந்தாதார்களுக்கு முக்ய அறிவிப்பு.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் 24ம் வருஷம் ஆரம்பமாகிவிட்டதால் நமது சந்தாதார்கள் புதிய வருஷத்திற்கான சந்தாத்தொகையை கூடிய சீக்கிரத்தில் நமக்கு அனுப்பி, எப்போதும்போல் பத்திரிகையை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.

### மூகபஞ்சசதி.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.—

பக்தி ரஸம் நிறம்பிய உத்தம காவ்யமான மூகபஞ்சதிக்கிரந்தத்தின் ஆர்யா சதகம், கடாக்ஷசதகம் இரண்டும் ஏற்கனவே நமது ஆர்யதர்மத்தில் தமிழ் மொழி பெயர்ப்புடன் பிரசுரிக்கப்பட்டன.

மற்ற பாகங்களையும் தமிழ் மொழி பெயர்ப்புடன் வெளியிடவேண்டுமென்று பல நண்பர்கள். விரும்பியபடி அடுத்த வாரம் முதல் 'மூகபஞ்ச சதி' தொடர்ச்சியாக வெளியிடப்படுமென்பதை அபிமானிகளுக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம்.

வேறு சில அபூர்வ கிரந்தங்களையும் மொழி பெயர்ப்புடன் நமது பத்திரிகையில் பிரசுரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

### மலையாளத்தில் மாகாண வர்ணாச்ரம மஹாநாடு நடத்த முயற்சி.

பிப்ரவரி மாதம், முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் மலையாளம் ஜில்லாவின் மத்ய பாகம் ஒன்றில் மாகாண வர்ணாச்ரமஸ்வாராஜ்ய ஸங்கத்தின் மஹாநாட்டைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகள் சீக்கிரமாக நடைபெற்று வருவதாக அறிகிறோம். கொல்லங்கோடு ஸர். வாஸுதேவராஜா அவர்கள் மஹாநாட்டைத் திறந்துவைப்பாரென்றும் தெரிகிறது. மற்ற விபரங்கள் கூடிய சீக்கிரம் வெளியிடப்படும்.

# தென்னாற்காடு ஜில்லா ஸநாதன தர்ம மஹா நாடு.

பிரம்மஸ்ரீ ஒய். கே. சேஷய்யர் அவர்களின் தலைமை பிரஸங்கம்.

(சென்ற வாரத்தொடர்ச்சி.)

மேற்கண்ட பிரதம மந்திரியின் கூற்றுக்களை தர்மாபிகளான வர்ணாச்ரம தர்மத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் உணர்ந்ததாகதெரியவில்லை இது சம்பந்தமாக பகவான் கீதையில் சொல்லும் வார்த்தையை இங்கு உதாஹரிப்பது உசிதமென்று நினைக்கிறேன்.

சுருதி: ஸ்மிருதிர் மமைவாஜ்ஞா.

ஸ்ரீமான் காந்தி எப்பொழுதும் கீதை பெயரால் சபதம் பண்ணுகிறார். சென்னை பிரதம மந்திரியும் கீதையைப்பற்றி கண்ணன் காட்டியவழி என்ற புஸ்தகத்தை எழுதியுள்ளார். ஆனால் இவ்விருவர்களில் யாரும் உண்மையான உபதேசத்தை பின்பற்றுவதில்லை. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. வர்ணாச்ரம தர்மவிஷயத்திலும் அந்தந்த வர்ணங்களுக்கு இடப்பட்ட கட்டளைகள் விஷயத்திலும் பகவானின் உபதேசம் ஸ்பஷ்டமானதே. கீதையினுடைய ஒவ்வொரு உபதேசங்களும் வேத மூலமானவை என்பதை கீதை படிப்பவர்கள் நன்கு அறிவார்கள்.

எலக்ஷன் சமயத்தில் சென்னை பிரதம மந்திரி மதசமூகமான சட்டங்களில் அதிகாரத்திற்கு வந்தால் காங்கிரஸ் மஹா சபை நடுநிலைமை வஹிக்குமா என்று அநேக இடங்களில் திட்டமாக கேட்கப்பட்டார். முக்யமான இந்த கேள்வியானது, "இவ்வித அல்ப விஷயங்களைபற்றி கவனத்தை செலுத்துவதற்கு எனக்கு அவகாசம் கிடையாது,, என்ற அஹங்கையான பதிலினால் தந்திரமாக சமாளிக்கப்பட்டுவிட்டது. எலக்ஷன் மத்தியில் ஹரிபுராவில் காங்கிரஸ் மஹா சபை நடைபெற்றது. ஸநாதனி ஓட்டர்களுடைய மனதை திருப்திபடுத்த மத விஷயங்களில் கண்டிப்பான நடுநிலைமை வஹிப்பதாக அது ஓர் தீர்மானம் செய்தது. சென்னை பிரதம மந்திரி காங்கிரஸின் ஓர் பிரதானமான மெம்பர். அந்த சபை கொடுத்த அதிகாரத்தை கொண்டே ஆண்டு வருகிறார். இவர்கள் தான் சத்தியத்தை நேசிப்பவர்கள்! அவர்களுக்கு சத்தியமே கடவுள்! இவர்களுடைய உண்மை ஆச்சரியமானதே. காங்கிரஸ் மஹா சபை அகில இந்திய ஸ்தாபனம். அது எந்த வகுப்பிலும் சேர்ந்தது அன்று 1885-ல் காங்கிரஸ் மஹா சபையை ஆரம்பித்த பல மேதாவிகளில் காங்கிரஸ் மஹா சபையின் விவாதத்திலிருந்து சமூக சீர்திருத்தங்கள் விலக்கப்பட்டு விட்டன. கதரும் நூற்றலும் ராஜீயத்திற்கு உடன்பட்டதே அது தேசத்தை பொருளாதார அடிமைதனத்திலிருந்து மீட்காதென்பதும் பிரஸித்தமானதே. ஆனாலும் ஸ்ரீமான் காந்தியின் அபிப்பிராயத்தை அனுசரித்து தேசத்தின் விடுதலைக்கு அது ஓர் சின்னமாக ஆதரிக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் நடந்த காங்கிரஸ் கார்ய கமிட்டி கூட்டத்தில் நூல் நூற்பது, காங்கிரஸ் மெம்பராவதற்கு யோக்கிதையாக சொல்லப்பட்டது.

ராஜீயக்கொள்ளுகைகளோ அல்லது தேச விடுதலைக்கு போராடுவதோ காங்கிரஸ் மெம்பராவதற்கு யோக்கியதையாக சொல்லவில்லை. சாஸ்திரங்களுடைய விதிகளை அநுசரித்து நடந்துவரும் நல்ல அறிவுள்ளவர்களை மட்டும்இவர்கள் குதர்க்கமாக பேசுகிறார்கள்.

காங்கிரஸ் கார்ய கமிட்டியானது, முஸ்லிம் லீக் ஹிந்து மஹா சபை போன்ற வகுப்புவாத ஸ்தானங்களின் மெம்பர்கள், காங்கிரஸ் மெம்பராவதற்கு யோக்கிதை அற்றவர்கள் என்று தீர்மானிக்கிறது. அதற்கு காரணம் ஹிந்து மஹா சபையும் முஸ்லீம் லீக்கும் வகுப்பு ஸ்தாபனமாக இருப்பதே. கீழ்கண்ட தீர்மானத்தால் காங்கிரஸ் மஹா சபையானது புராதனமான மதத்தை அடிப்படையாகக் கொண்ட வகுப்பு ஸ்தாபனமாக இல்லாமல் சர்காவை அடிப்படையாகக் கொண்ட வகுப்பு ஸ்தாபனமாகவே தன்னை செய்துகொண்டுவிட்டது.

இவர்கள் சாஸ்திரங்களை மதிக்காது தங்களிஷ்டப்படி நடந்தால் யாரும் இவர்களுடன் விவாதப்படமாட்டார்கள். ஆனால் எந்த சமயத்திலும் ஹிந்துக்களாகவே வேஷம்போடுகிறார்கள்.

காங்கிரஸ், வார்தாவைபிரதான நகரமாயும், ஷிகானை கர்பகிரஹமாயும், வைத்துக்கொண்டு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குப் போட்டியாக ராஜ்ய பரிபாலனத்தை நடத்துவதாக தற்புகழ்ச்சிசெய்து கொள்ளுகிறது. அது உண்மையாக இல்லாவிடினும் சாஸ்திர விதிகளுக்கு போட்டியாக விதிகளை நிறைவு அவர்கள் முயற்சிப்பது நிச்சயம். தங்களுடைய இஷ்டப்படி அவர்கள் சாஸ்திரங்களை வியாக்யானிக்கிறார்கள். கீதை 16-ம் அத்தியாயம் 23-ச்லோகத்தில் சாஸ்திர விதிகளைமீறி நடப்பவர்கள் ஸித்தியை அடைவது இல்லை என்றும் சந்தோஷத்தை அடைவது இல்லை என்றும் பகவான் சொல்லுகிறார். 24-வது ஸ்லோகத்தில் பகவான், செய்யவேண்டியது செய்யவேண்டாதது இவைகளை முடிவு செய்ய சாஸ்திரங்களை பின்பற்றவேண்டுமென்று சொல்லுகிறார். அவரவர் ஸ்பாவத்தை அனுசரித்தே நம்பிக்கைஉண்டாகிறது. சாஸ்திர விதிகளைமீறி நடப்பவர்கள் அஸுரர்கள் ஆனால் எவர்கள் தங்களுடைய இஷ்டப்படி வியாக்யானித்து சாஸ்திரங்களை நாசமாக்குகிறார்களோ அவர்களைப்பற்றி என்ன சொல்வது? ராஜீய விஷயங்களில் தலைமை வஹிப்பதற்கு தகுந்த பயிற்சியும் முக்கியமாக மணி கணக்கில் நூல் நூற்றலும் யோக்கியதையாகவேண்டியிருக்கிறது. அவ்விதமே மத விஷயங்களில் தலைமை வஹிப்பதற்கும் ஆசார்யரிடத்தில் பயபக்தியோடு சாஸ்திரங்களை படிப்பதும் யோக்கிதையாக வேண்டியிருக்கிறது. இதற்கு காரணம் இந்ததேசத்தில் அரசியல் முக்கியமாக இருப்பதே. அரசியல் ஜனநாயகமும் இங்கு இருந்துவருகிறது. பெரும்பான்மையாக இப்பொழுது ஹிந்துக்கள் தங்களுடைய தர்மங்களை செய்வதை விட்டுவிட்டார்கள். அவர்களுடைய பொறுப்பு அற்ற தன்மை அரசியலுக்கு வழிவிட்டு விட்டது. தங்களுடைய மத வாழ்க்கையைக் காப்பாற்றவேண்டுமென்று ஆவேசப்படுபவர்கள் வெகு சிலரே. அவர்களும் பலமற்று இருப்பதுடன் கட்டுப்பாடு அற்றவர்களாயும் இருக்கிறார்கள். தனக்கு இஷ்டமானதை நிறைவேற்றுவதற்காக தன் இஷ்டப்பட்ட வழியில் நடந்துகொள்ளுவதற்காக பெரும்பான்மை ஆட்சி ஏற்படவில்லை. இது மிருகத்தனமான ஆட்சியை காட்டிலும் இன்னும் கடினமானது. சென்னை மந்திரி அடிக்கடி ஜனங்களால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கமென்று இன்பத்தோடு பேசுகிறார். ஹர் ஹிட் லரும் தன்னுடைய எந்த கெட்ட காரியத்திற்கும் பொதுஜன ஆதரவையே குறிப்பிடுகிறார். முஸலோனியும் அவ்விதமே. பண்டித நேருவு பிரஜாவுரிமையைபற்றி பேசும்பொழுதெல்லாம் மஹமதியர் முதலிய வேறு மதஸ்தர்களையே மனதில் வைத்துக்கொண்டு பேசுகிறார். காங்கிரஸ் ஹிந்துக்கள் தங்களுடைய மதவிஷயங்களிலும் சாஸ்திர விஷயங்களிலும் காட்டும் மத பக்தியை காட்டிலும் கிருஸ்தவர்களோ மஹமதியர்களோ தங்களுடைய பைபிள் குரான் இவைகளில் அதிக பக்தியை காட்டுகிறார்கள். பண்டிட்நேரு தன்னுடைய சுயசரிதையில் மதத்தைபற்றி சொல்லுகையில் மதத்தை ஓர் வயதான கிழவனுடைய விஷயத்திற்கு ஒப்பிட்டு பேசுகிறார். சென்னை பிரதம மந்திரி மதம் ஓர் அல்ப விஷயம் என்று சொல்லுகிறார்.

மற்றவர்கள் அதைபற்றி கவலைப்படுவதே கிடையாது. ஆனால் ஹிந்துமதத்தை அழிப்பதில் அவர்கள் எல்லோரும் ஒருமித்து அபிப்பிராயப்படுபவர்களே. இந்திய ராஜீய வாழ்வில் முக்கியஸ்தர்களாக கருதப்படும் நேரு, காந்தி, போஸ் இவர்கள் தங்களுடைய யௌவனத்தை வெளி தேசங்களிலேயே கழித்துவிட்டார்கள். பரதேசக் கல்வி நாகரீகம் இவைகளுக்கு அவர்கள் அடிமையாயிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மத விருத்தமான காரியங்களை செய்வதிலும் சொல்வதிலும் ஆச்சரியமில்லை. அவர்கள் அடிக்கடி ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை பற்றி பேசி வருகிறார்கள். ஹிந்து என்ற வார்த்தையால் அவர்கள் யாரை குறிப்பிடுகிறார்கள்? காந்தீயத்தை அனுசரிப்பவர்களே ஹிந்துக்கள் என்று கூறப்படுகிறார்களா அல்லது பக்தியோடும் உக்ரமாக ஸநாதன தர்மத்தை ஆதரிப்பனை குறிப்பிடுகிறார்களா? ஹிந்துக்களுடைய மதவுணர்ச்சியை மீறி நடப்பதற்கு அவர்களுக்கு அரசியல் அதிகார ஆசையும் நாஸ்திகத்தனமுமே காரணம். தங்களுடைய சகோதரர்களான ஸநாதனிகளை அஹங்கையாக பேசுவதும் அவமதிப்பதும் தாங்கமுடியாதபடி முற்றி வருகின்றன. அந்த அஹங்கை அவர்களுக்கு தாங்களே இந்த தேசத்தை பாதுகாக்க வந்தவர்களென்றும் மற்றவர்கள் தங்களுடைய மனஸ்ஸாக்ஷி ஸ்வய உரிமை இவைகளை இவர்களுக்கே அர்ப்பணம் செய்துவிடவேண்டுமென்றும் எண்ணும் மயக்கத்தால் ஏற்பட்டது. இவர்களுடைய முன் நடவடிக்கைகளை கொண்டு பார்த்தால் இப்புனிதமான தேசத்தின் நாகரீகம் கல்வி இவைகளை காப்பாற்றுவதிலோ அல்லது பரப்புவதிலோ அல்லது சீர்படுத்துவதிலோ சிறிதும் இவர்களுக்கு ஆசை கிடையாது என்றும் அவைகளிடத்தில் அவர்களுக்கு மரியாதை கிடையாது என்றும் ஏற்படுகிறது. உலகத்தில் உருப்பாக மனிதன் அமைந்து கட்டுப்பட்டிருக்கிறான் என்ற கடினமான உண்மையை மனிதன் அறிந்து நடப்பதற்காகவே சாஸ்திரங்களில் சில விதிகள் காணப்படுகின்றன. இவைகளில் அவர்களுடைய மனது பரிதாபகரமாக குழப்பமடைந்து விடுகிறது. சாஸ்திரம், உலக வாழ்கைக்கு எதிராக மனிதன் நிற்கக் கூடாதென்றும் அதை அநுசரித்தே நடக்கவேண்டுமென்றும் உபதேசிக்கிறது. அவ்வித நடவடிக்கைகளில் அவன் உண்மையான மனிதனாகவும் துராசை இல்லாதவனாகவும் வருகிறான்.

ஒரு தேசமானது தனிப்பட்ட மனிதர்களாலும் வகுப்புக்களாலும் நிறைந்தது. ஒரு ராஜ்யத்தினுடைய மேன்மை தனிப்பட்ட மனிதனின் மேன்மையை பொறுத்ததாயிருக்கிறது. ராணுவ ஆட்சி நிறைந்த தேசத்தில் தனிப்பட்ட மனிதனின் அபிவிருத்தி முடியாததே. இந்தியா தேசமானது ராஜீய விஷயங்களில் அடிமையாயும் இருக்கலாம். ஆனால் அதனுடைய விரிவான நோக்கத்தில் வாழ்க்கை சம்பந்தமான விஷயங்களில் அது ஸ்வதந்திரமாகவே இருக்கிறது. மனிதனுடைய பசி தீர்க்கப்படவேண்டுமென்பது உண்மையே. ஆனால் ஆத்மார்திகமான பசியை தீர்க்க முயற்சிப்பதே உயர்தரமானது. இப்பசியை நமது மஹரிஷிகள் தங்களுடைய

(இதன் தொடர்ச்சி 3-ம் பார்க்க)



# தென்னாற்காடு ஜில்லா ஸநாதனதர்ம மஹா நாடு.

வரவேற்புத்தலைவர்

ஸ்ரீமான் தி. ஈ. சடகோபாசாரியாரின் பிரஸங்கம்.

(12—1—39 தொடர்ச்சி)

அவன் உலகம் நல்வழியில் நடைபெற்று க்ஷேமமாய் இருக்கவேண்டியதற்காக சட்டதிட்டங்கள் ஏற்படுத்தாமலிருப்பானா? என்பது முதலிய விஷயங்களை தீர்க்கமாய் யோசித்தால் நமது சாஸ்த்ரத்தில் தவிர வேறெங்கும் ஸரியான ஸமாதானம் கிடைக்காதென்று நிச்சயமாய் அறுதியிடலாம். இதனால் பகவான் மனுஷ்யனுக்கு சரீரத்தையும் புத்தி சக்தியையும் கொடுத்தது அவன் சாஸ்த்ரோக்தமான தர்மானுஷ்டானம் செய்து தன்னுடைய நன்மையைத் தேடிக்கொள்வதற்காகவும் அதன் மூலமாய் உலகத்துக்கு நன்மையைச் செய்வதற்காகவுந்தான் என்பது ஸ்பஷ்டமாய் ஏற்படுவதால் நம்முடைய பகுத்தறிவு வேதம் முதலிய சாஸ்த்ரங்களில் பகவானால் வெளியிடப்பட்ட தர்மஸ்வரூபத்தை அறிந்து கொள்வதற்கு உபயோகப்பட்டால்தான் அதற்கு ப்ரயோசனமுண்டே தவிர மற்ற விதமாய் உபயோகப்பட்டால் அது வ்யர்த்தமேயாகும் என்பதற்கு ஸந்தேகமில்லை.

இவ்வகையில் ஆராச்சி செய்யத்தொடங்கினால் ப்ரகிருதி ஸம்பந்தத்தால் ஏற்பட்ட இவ்வுலகத்திலுள்ள ஸர்வபதார்த்தங்களும் ஸத்வம், ரஜஸ், தமஸ், என்கிற மூன்று குணங்களின் சேர்க்கையாலமைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் அவைகளில் எந்தெந்த குணம் தலையெடுத்து நிற்கிறதோ அதற்கனுகுணமாக எல்லா வஸ்துக்களும் மூன்று வகுப்பாகப் பிரிக்கப்பட்டு நிற்குமென்றும் இவ்வித மூன்று வகைப் பிரிவு மனுஷ்யர்களுக்கும் குண தாரதம்யத்தால் உண்டென்றும் அத்தாரதம்யத்தை அநுஸரித்தேதான் ஜாதிப் பிரிவும் அதற்கநுகுணமான தொழிற் பிரிவும் வ்யவஸ்தை செய்யப்பட்டிருக்கிறதென்றும் நமது சாஸ்த்ரங்கள் எல்லாம் ஒரே முகமாய்க்கூறும் விஷயத்தின் உண்மை புலப்படும். இதனால் ஜாதி யென்பது ஜந்மாத்தாலேற்பட்டுப் பிறகு அதற்குரிய கர்மங்களைச் செய்வதற்கதிகாரத்தைத் தருகிறதென்று ஸித்திப்பதால் வர்ணாச்ரம தர்மங்கள் அந்தந்த அதிகாரிக்குத் தக்கபடி வகுக்கப்பட்டிருப்பது நியாயமென்றேற்படும். பிறப்பிலேயே ஒருவருக்கொருவர் குணம் சக்தி முதலானவைகளில் தாரதம்யம் ப்ரத்யக்ஷமாய்ப் புலப்படுவதால் அந்தந்த அதிகாரிக்குத் தக்கபடி கர்மானுஷ்டானம் பிரிந்து நிற்கவேண்டியதவசியமென்றே விவேகிகளனைவரும் ஒப்புக்கொள்ளவேண்டும். குழந்தை, வாலிபன், விருத்தன் இவர்களுக்குள் உணவு, உடை முதலியவற்றில் வித்தியாஸம் எப்படி அவச்யமோ அந்த நியாயமே இதற்குமுள்ளதென்று கண்டுகொள்ளவேண்டும்.

மேலும் இவ்விதமான தாரதம்யம் பிறப்பிலேயே அமைந்திருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டால் அதற்கு நம் சாஸ்த்ரம் தவிர வேறெங்கும் யாதொரு ஸமாதானமும் கிடையாது. நம் சாஸ்த்ரத்தில் இத்தாரதம்யம் பூர்வ ஜன்மங்களில் செய்த கர்மங்களின் தாரதம்யத்தால் ஏற்பட்டிருக்கிறதென்று ஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டிருக்கிறது. இதுவே யுக்திக்கும் ஒத்ததென்பது பராமர்சித்தால் ஏற்படும். இந்த ஜந்மத்திலேயே ஒருவன் நல்வழியில் முயற்சி செய்தால் நல்ல பலனை அடைவதையும் கெட்டகார்யம் செய்தால் துக்கத்தை அடைவதையும் நேரில் காண்கிறோம். ஒருவன் திருட்டுக் குற்றம் செய்தால் தண்டிக்கப்படுகிறான். அத்திருட்டைக் கண்டுபிடித்தவன் வெகுமதி பெறுகிறான். மனுஷ்யர்கள் செய்யும் ராஜ்ய பரிபாலன ரீதியில் இம்மாதிரி அவனவனுடைய கர்மத்துக்கநுகுணமாக பலம் கிடைப்பதென்றால், பகவானால் நடத்தப்படும் நித்யமான ஜகத்பரிபாலனத்தில் அவனவன் தனக்குத் தோன்றியபடியெல்லாம் செய்து வாழ்நாள் முழுவதும் வீண்நாளாய்க்கழிக்கலாம் கேழ்வைமுறை கிடையாது ஸர்வம் அராஜகமென்று சொல்வது யுக்திக்கு இசையுமாவென்று புத்திமான்கள் யோசிக்கவேண்டும். ஆகையால் பகவானன்றி புல்முனைகூட அசைவதில்லையென்று நம் சாஸ்த்ரங்கள் அறுதியிடுகிறபடி நமது ஸமஸ்த கார்யங்களும் பகவானுடைய நியமனத்தாலேயே நடைபெறுகின்றனவாகையால் நமது அதிகாரத்துக்குத் தக்கபடி அவன் இட்டிருக்கும் கட்டளைகளை நாம் சாஸ்த்ர மூலமாய்த் தெரிந்துகொண்டு அவைகளின் கருத்துப்படி நடப்பதே உத்தமமென்பதற்கு ஆக்ஷேபமில்லை. அவ்வழியை நாம் ஒவ்வொருவரும் ஸ்வதந்த்ரமாய் அறிவதற்கு சக்தியற்றவர்களாயிருப்பதுபற்றியே மஹாக்ருபாளுக்களான நம் பெரியோர்கள் தர்ம சாஸ்த்ர க்ரந்தங்களைச் செய்தும் தாமநுஷ்டித்துக் காட்டியும் தர்ம மார்க்கத்தை எல்லோருக்கும் விளங்கும்படி வரையறுத்திருக்கிறார்கள்.

இத்தர்மங்களில் முக்கியமாய் நாம் இப்போது கவனிக்கவேண்டியவை ப்ராம்ஹண க்ஷத்ரியாதி நான்கு வர்ணங்களுக்குள்ள தர்மம், இந்நான்கு வர்ணங்களும் வெளிப்பட்ட சண்டாளாதிகளின் தர்மம், ஸ்த்ரீதர்மம் என மூன்று வகுப்பாக நிற்கும். இவற்றுள்ளும் தத்காலம் சட்ட நிர்ப்பந்த மேற்படுத்தி அதனாலுண்டாகும் உபத்ரவங்களுக்குட்படுத்தக்கூடிய நிலைமையில் நிற்பது சண்டாளர் ஆலய ப்ரவேசம் செய்யலாமென்பதும் ஸ்த்ரீகளுக்கு விவாஹாதிகள் விஷயத்தைப்பற்றியதும்தான். ஆகையால் இவ்விஷயங்களைக் குறித்துச் சில அம்சங்கள் சொல்லவேண்டியதாகிறது. மற்ற தேசங்களொன்றிலுமில்லாமல் மற்ற மதஸ்தர்களும் அனுஷ்டிக்காத ஜாதி பேதமும் அதற்கநுகுணமான கர்மபேதமும் நம்மிடம் மாத்ரமிருப்பது யுக்தமல்ல, அது நமது நாகரீகக் குறைவைக் காட்டுகிறபடியால் அதைத் துலைத்துவிடுவதே நலமென்று சிலர் வாதிக்கிறார்கள். இது உண்மையறியாததால் ஏற்பட்ட வாதமென்பதற்கு ஆக்ஷேபமில்லை. நமது சாஸ்த்ரத்தின் தத்வம் முன்னமேவே சுருக்கமாய்க் கூறப்பட்டது. அதை இங்கு மறுபடியும் சொல்லவேண்டிய அவசியமில்லை. நாகரீகம் என்பது தத்வ ஞானத்தை யொட்டின்தாக வைத்துக்கொண்டால் மற்ற தேசத்தார்களும் அன்னிய மதஸ்தர்களும் நம்போல் வர்ணாச்ரம விபாகம் தர்மவிபாகம் முதலியது வைத்துக்கொள்ளவில்லையென்றால் அது அவர்களுடைய நாகரீகக் குறைவைக் குறிக்குமே தவிர வேறில்லை என்று பூர்ணநம்பிக்கையுடன் உறுதி கூறலாம்.

ஸத்வம், ரஜஸ், தமஸ், என்கிற முக்குணங்களின் தத்வத்தை யார் பகுத்தறியவில்லையோ அவர்களுடைய மதமாவது ஆசாரமாவது நமக்கு நிதர்சனமாகக் கொள்ள யோக்யதையற்றது. இந்தப் பகுத்தறிவு ஏற்பட்டால் அவர்கள் நம் சாஸ்த்ரங்களை ஒப்புக்கொண்டே தீருவார்கள், என்பதற்கு ஸந்தேகமில்லை. இவ்வளவு அவர்களுக்கு அநுபவஸித்தமாகாதது காரணமாகவே அவர்களில் உண்மையாக நம் விஷயங்களை அறியவேண்டுமென்கிற எண்ணமுள்ளவர்களுக்குக்கூட நமது தர்ம வ்யவஸ்தை ஆசாரம் முதலியதைப் பூர்ணமாகத் தெரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது. ப்ரகிருதி மயமான இந்த ஜகத் மேற்கூறிய முக்குணங்களில் ஏற்பட்டதென்கிற விவேகம் பிறந்தவுடன் அவர்கள் குருடனுக்குக் கண் திறந்ததுபோல் நம் சாஸ்த்ரார்த்தங்களையும் ஆசாரங்களையும் செவ்வனே அறிவார்களென்றும் பிறகு நம்மிடம் சிஷ்ய வ்ருத்தி செய்வார்கள் என்றும் நிச்சயமாய்க் கூறலாம். இதனால் பிறருடைய மதங்களில் அடியோடு உண்மையில்லையென்று சொல்வதாக எண்ணக் கூடாது. அவைகளில் ஸ்தூலமாக சில தத்வங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நன்றாய்ப் பரிசோதித்தால் அத்தத்வங்கள் நமது சாஸ்த்ர ரீதியை அநுஸரித்தேயிருக்குமென்றும் கூறுவது தப்பிதமாகாது. பகவானன்றி புல்நுனி கூட அசைவதில்லையென்று முன்கூறப்பட்டது. கிருஸ்தவ மதப்புஸ்தகத்தில் இதே விஷயத்தை ஒரு சிறு குருவியின் அசைவைக்கூட பகவான் கண்காணிக்கிறார் என்று கூறப்பட்டிருக்கிறது. நம் சாஸ்த்ரத்தில் அவனவன் தன் கர்மானுகுணமாக பலன் அனுபவிக்கிறான் என்று கூறப்பட்டிருப்பதை நாம் எதை விதைக்கிறோமோ அதைத்தான் அறுவிடை செய்கிறோம் என்று கிருஸ்துவ மத க்ரந்தத்தில் சொல்லியிருக்கிறது. இப்படியே இன்னும் அநேக விஷயங்களில் அபிப்பிராயம் நமக்கும் இதர மதஸ்தர்களுக்கும் ஒத்திருப்பது நிச்சயமே. ஆனால் அவர்கள் நம் சாஸ்த்ரார்த்தங்களை பூர்ணமாய் கைக்கொள்ளாமலும் நம் ஆசாரங்களை அறியாமலுமிருப்பதற்குக் காரணம் என்னவென்றால் சில ஸந்தர்ப்பங்களில் இங்கிருந்து அவர்களுக்குக் கிடைத்த ஞானம் மேன்மேலும் விருத்தியடைவதற்கு வேண்டியபின் தொடர்ச்சியற்றுப்போனபடியால் மஹாநதியின் வெள்ளப்பெருக்கால் வெளியில் பரவிய ஜலம் ஆங்காங்கு ஏரி, தடாகம் முதலிய இடங்களில் தேங்கி வெள்ளம் வடிந்தபிறகு அந்த ஜலாசயங்களுக்கு நதியின் ப்ரவாஹத்துடன் ஸம்பந்தமற்றுப் போகும் ரீதியில் வேதஸம்பந்தமற்றுப் போன வித்யை சிதறிப்

215267



போவதுபோல் என்று அசோகவனத்திலிருந்த ஸீதாதேவியை வர்ணித்த ப்ரகாரமாய் உத்பத்தி ஸ்தானத்துடன் கலப்பற்றுத் துண்டு துண்டாய் நின்றுபோயினவென்பதே பரமார்த்தமென்பது ருஜு புத்தியுடன் நன்றாய்ப் பராமர்சிக்கும் நிபுணர்களுக்கு விளங்கும். ஆகையால் புலன்களுக்கெட்டாத ஸூக்ஷ்மங்களையெல்லாம் தமது யோக மஹிமையால் ப்ரத்யக்ஷமாகத் தெரிந்து கொள்ளக்கூடிய சக்திவாய்ந்த மஹர்ஷிகளால் பாதுகார்க்கப்பட்டு வளர்க்கப்பட்ட நமது ஸநாதனதர்மமாகிற மஹாதனத்தை மற்றவரிடம் அது காணப்படவில்லையென்கிற காரணத்தைக்கொண்டு நாம் எறிந்துவிடவேண்டுமென்று உபதேசம் செய்பவர்கள் வார்த்தைகளை என்னென்று மதிப்பதென்று புலப்படவில்லை. நம்மதத்தைச் சீரழியச் செய்து தங்கள் மதத்தை இந்நாட்டில் பரவச் செய்யவேணுமென்கிற கெட்ட எண்ணங்கொண்ட அந்நிய மதஸ்தர்கள் இவ்வாறு சொல்வதை நாம் அறிவோம். அவர்கட்கு அவ்விதம் அக்கறையிருப்பதால் அவர்கள் இவ்வாறு சொல்வது ஸஹஜமே. நமது தேசத்தின் முன்னேற்றத்திலும் நமது மதத்தின் அபிவிருத்தியிலும் அக்கறைப்பட்டவர்கள் இவ்விதம் சொல்வதைக் கேட்க மனதுக்கு அடங்காத் துக்கம் ஏற்படுவதுடன் இதற்கு என்ன பரிஹாரம் தேடுவதென்கிற விஷயத்தில் மிகவும் கலக்கமுண்டாகிறது. இதற்குமுன் ராஜ்ய நிர்வாஹம் பூர்ணமாய் பிரிடிஷ் உத்யோகஸ்தர்களிடம் இருந்தவரையில் அவர்கள் வேறு அம்சங்களில் என்ன செய்தபோதிலும் மதவிஷயங்களில் கனம் விக்டோரியா மஹாராணியின் பட்டயத்தைப் பூர்ணமாய் பின்பற்றி மதஸம்பந்தமான நிர்ப்பந்தச் சட்டதிட்டங்கள் ஒன்றும் செய்யாமலே இருந்தார்கள். இப்போது நாமெல்லாரும் பலவித முயற்சிகள் இடைவிடாது செய்து நமது ஜனங்களுக்கு ஆதிபத்யத்தை ஸாதித்து வைத்தவுடன் நம் பிரதிநிதிகள் எல்லாவிதத்திலும் நம் நாட்டுக்கு சிரஸ்ஸாய் நிற்கும் நமது ஸநாதநதர்மத்தின்பேரில் பஸ்மாஸுரன்போல் கை வைக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதைவிட கலிபுருஷனுடைய மஹத்துவத்தைக் குறிக்கக்கூடிய நிதர்சனம் வேறொன்றுண்டோ? இவர்கள் தங்கள் அபிப்பிராயத்தைப் பலவாறு கூறுகிறார்கள். சில ஸமயங்களில் சாஸ்த்ரத்தின் உட்பொருள் அநாதி பரம்பரையாய் வரும் க்ரமத்தில் அதைக்கற்று மஹர்ஷிகள் அபிப்பிராயத்தைக் கேள்வியில் தெரிந்து கொண்டிருக்கும் மஹாவித்வான்களுக்கு விளங்காது, ஆனால் தாங்கள் [illegible] அதற்கு ஸமானமான சில ஸாதனங்களைக் கொண்டோ தங்கள் மனதில் செய்திருக்கும் தீர்மானங்கள்தான் சாஸ்த்ர ஸம்மதமென்று சொல்லுகிறார்கள். ஆனால் அதை ஸபையில் வந்து எங்களுக்கு விளங்கும்படிச் சொல்லி நாங்கள் சொல்வதையும் கேட்டு நியாயம் போகிற வழியில் நிர்ணயம் செய்வோமென்றால் அதற்கவர்கள் ஒத்துவருகிறதில்லை. மற்றும் சிலர் சாஸ்த்ரம் எப்படியிருந்தபோதிலும் தத்கால நிலையை அநுஸரித்து நம் தேசத்தின் நன்மைக்காகவும் நம்முடைய ஒத்துமைக்காகவும் ஜாதி வித்தியாஸம் முதலிய பண்டைக் காலத்து ஆசாரங்களை ஒழிக்கவேண்டியதவச்யமென்று சொல்லுகிறார்கள். ஆனால் இவர்கள் சொல்லுகிறபடி தத்காலமிருக்கும் சில அஸௌகர்யங்களுக்குப் பயந்து வயிற்று வலிக்காகத் தூக்கு மாட்டிக்கொள்பவர்போல் நமக்கின்றியமையாத ஸநாதநதர்மத்தையும் ஆர்யாசாரத்தையும் தொலைத்து விடலாமாவென்பது ஒரு பக்கத்திலிருக்க நமக்குள் ஜாதிபேதம் இருப்பதைக்கொண்டுதானா இப்போது ஒத்துமைக் குறைவு ஏற்பட்டிருக்கிறதென்பதை சற்று விமர்சம் செய்தால் இவர்கள் கூறுவது சரியல்லவென்றேற்படும். இப்பாரதவர்ஷத்தில் ஸ்ருஷ்டிகாலமுதல் ஜாதிபேதம் இருந்து வந்திருக்கிற விஷயம் ஆக்ஷேபிக்கத்தக்கதல்ல. இப்போது சிலகாலமாய் மேல்நாட்டு நாகரீக ப்ரசாரம் ஏற்படும்வரையில் ஜாதிபேதத்தைக் குறித்து நமது ஜனஸமூஹத்தில் ஒத்துமைக் குறைவிருந்ததாகக் கேள்விப்பட்டதில்லை. பௌத்த மதம் வியாபித்த காலத்திலும் மஹம்மதியர் காலத்திலும் மதஸம்பந்தமான விரோதங்கள் இருந்தனவேயொழிய, நமது வைதிக மதத்துக்குட்பட்டவர்களுக்குள் ஜாதிப் பிரிவைப் பொறுத்து ஒருவருக்கொருவர் மனஸ்தாபமாவது சச்சரவாவது இருந்ததே கிடையாது. இப்படியிருக்க இப்போது புதிதாக ஜாதிபேதத்தினால் நமக்குள் மனஸ்தாபமும் ஒத்துமைக் குறைவும் ஏற்பட்டிருப்பதாகச் சொல்வது சரியல்ல. இப்போது இது ஸம்பந்தமாய் நமக்குள் மனஸ்தாபங்களும் கலஹங்களுமிருப்பதற்கு உண்மையான காரணமென்னவென்று நாம் தடஸ்த புத்தியுடன் பராமர்சிக்கும் பக்ஷத்தில் நம் ஸமூஹத்துக்குள் சச்சரவுண்டாக்கி நம்மைக் குறைக்கவேண்டுமென்பதற்காக நம்முடைய ஜாதிக் கோட்பாடாகிற பலமான கோட்டையைத் தகைந்தால்தான் தங்கள் எண்ணம் நிறைவேறி நமக்குள் தங்கள் மதத்தை ப்ரவேசிக்கச் செய்யலாமென்கிற எண்ணத்துடன் கிருஸ்தவப்பாதிரிகள் முதலிய அன்னிய மதஸ்தர்கள் நம் ஜாதிப் பிரிவினையை தூஷித்துப் பேசி நமக்குள் ஒருவருக்கொருவர் வேறுபாட்டை உண்டாக்கியதே அதிகாரணமாகும். இதன் உண்மையை அறியாமல் அவர்கள் போதனையை கேட்டு அவர்கள் கற்பித்த படிப்பைப் படித்து நம் ஜனங்கள் அவர்கள் குறை கூறியதை வாஸ்தவமென்று ப்ரமித்து ஜாதிபேதம் முதலியதை ஒழித்து நம்மைச் சீர்படுத்திக்கொள்ளவேணுமென்று நினைத்து சீர்திருத்த ப்ரசாரம் ஆரம்பித்தார்கள். இது முதலாக இந்த இயக்கம் நம் நாட்டில் வேரூன்றிப் பரவி வருகையில் இப்போது சமீபகாலத்தில் அதாவது சுமார் 20 வருஷங்களுக்கு முன் ராஜாங்க விஷயத்தில் நம் ஜனங்கள் ஒத்துமைப்பாட்டுடன் சுய ஆக்ஷி (Home Rule) வேண்டுமென்று முக்கியமாய் இம்மாகாணத்தில் தீவ்ரமான முயற்சி எடுத்துக்கொண்டபோது அதைத்தடை செய்வதற்காக அப்போதிருந்த அதிகாரிகள் வெகு யுக்தியாய் பிராமணன் பிராமணரல்லாதார் என்கிற கக்ஷியைக் கிளப்பிவிட்டு அதுமுதலாக நமக்குள் ஒத்துமைக் குறைவும் மனஸ்தாபங்களும் வெகு விரிவாய் வளர்ந்துவருகின்றன. இவ்விதம் இது ஏற்பட்ட சரித்ரத்தை நம் ஜனங்கள் நன்கு பராமர்சித்து நமக்குள் பேதமுண்டாக்குவதில் அக்கரைப்பட்டவர்களின் துர்ப்போதனையால் தான் நமக்குள் மனஸ்தாபமே தவிர அநாதியாயிருந்துவரும் தர்ம வ்யவஸ்தையின்மீது இப்பழியைச் சுமர்த்துவது சிறிதும் யுக்தமில்லையென்றும் இதற்குப் பரிஹாரம் தேடுவதற்காக நாம் நமக்கு அஸாதாரணமாய் எல்லோரையும்விட நம்மை மேன்மையாக்கும் தர்மங்களை ஒழித்துவிட்டால் நம் ஆர்ய ஸமூஹமே தற்கொலை செய்துகொண்டதாகுமே தவிர வேறில்லையென்றும் இதனால் நம் எதிரிகள் உத்தேசித்ததுக்கு மேற்பட்ட தீங்கு நமக்கு ஸம்பவிப்பதால் அவர்கள் மனதை நாம் மிகவும் குளிரச் செய்வோமென்றும் நம் வைதிக மதத்தைச் சார்ந்த ஜனங்கள் எல்லோரும் நன்குணர்ந்தால் இவ்வித தகாத கிளர்ச்சிகளுக்கு இடமேற்படாது. இந்த தத்வத்தை நம்மில் தலைவர்களாயிருப்பவர்கள் சரிவர அறியாமலிருப்பது ரொம்பவும் வியஸநிக்கத்தக்கதாயிருக்கிறது. தாங்களறியாமலிருப்பதோடு மட்டில் நிற்காமல் மற்றோர்களை சட்டமூலமாய் நிர்ப்பந்தித்துத் தங்கள் தவறான நோக்கப்படியே எல்லாரும் நடக்கும்படி செய்விக்கவேணுமென்று ஆரம்பித்திருப்பதின் கொடுமை வாயினால் சொல்லமுடியாதது. ஒவ்வொரு ஸந்தர்ப்பங்களில் இந்த அக்ரமத்தைப்பற்றி யோசிக்கும்போது மனங்கொதித்து இவ்வித சுயாக்ஷியைவிட பராட்சி பலமடங்குமேலென்ற எண்ணமும் உதிக்கிறது. இவ்வித பெருந்தீங்கை விளைவித்து சான்றோர் மனதைப் புண்படுத்[illegible]கிறோமேயென்கிற கூச்சம் கொஞ்சமுமில்லாமல் இப்போது அதிகாரம் வகிப்பவர்கள் நடந்துகொள்ளும் வழியானது இவ்வுலகத்திலாவது எவ்வுலகத்திலாவது க்ஷேமத்துக்கு ஹேதுவாகாதென்பதை நிச்சயமாய்க் கூறலாம். வேலி பயிரை மேய்வதுபோல்து சட்டசபைகளில் நியாய விரோதமான சட்டங்கள் ஏற்படுத்துவதைவிட தேசத்துக்கு அநர்த்தமான கார்யம் வேறொன்றும் கிடையாது என்பதை நன்குணர்ந்தால் நியாய விரோதமும் தர்ம விரோதமுமான சட்டங்களை ஏற்படுத்த ஒருவரும் மனந்துணிய மாட்டார்கள். இவ்வித உணர்ச்சி அதிகாரத்தை வகிப்பவர்களுக்கில்லாமலிருப்பது காலத்தின் விபரீதக் குறிதான் என்றெண்ணவேண்டியதாயிருக்கிறது.

நமது தேவாலயங்களுடைய நிஜஸ்வரூபத்தை நன்கறிந்தவர்கள் ஆலய பூஜைக்காக ஏற்பட்ட ஆகம விதிகளுக்கும் அது விஷயமாக தொன்றுதொட்டு நடைபெற்றுவரும் ஆசாரங்களுக்கும் மாறுதல் செய்ய முன்வரமாட்டார்கள். ஆலயங்கள் மந்த்ரங்களின் ப்ரபாவத்தால் நிலைபெற்றிருக்கின்றனவென்பது இவர்கள் அறியவில்லைபோலும். ப்ரதிஷ்டை செய்தது முதல் விடாமல் மந்த்ரங்கள் நடைமாடி வருவதாலும் அதற்குவேண்டிய நியமங்கள் குறைவின்றி அநுஷ்டிக்கப்பட்டு வருவதாலும் தான் ஆலயங்களுக்கு மஹிமை நிலைத்திருக்கிறது. ஆலய பூஜை சரிவர நடந்தால் ஆலயமிருக்கும் க்ஷேத்ரத்துக்கும் அதைச்சுற்றியுமுள்ள ஸ்தலங்களுக்கும் க்ஷேமமுண்டாகும் என்பது சாஸ்த்ரத்தாலும் அநுபவத்தாலும் ஸித்தமாயிருக்கிறது. இப்படி மந்த்ரங்களும் அதற்குரித்தான நியமங்களும் ப்ரதானமாயிருக்கும் ஆலய பூஜையை நம்மிஷ்டப்படி மாற்றிவிடலாமென்றுவது அதற்கேற்பட்ட நியமத்துக்கும், ஆசாரத்துக்கும் விரோதமாக சண்டாளர்களை ஆலயங்களில் ப்ரவேசிக்கும்படி பலாத்காரம் செய்யலாமென்றுவது எண்ணுவது மஹா பாதகத்தில் சேருமேயொழிய வேறில்லை. இதனால் தேசத்துக்கு யாதொரு க்ஷேமமும் கிடைக்க எவ்வித நியாயமில்லை. மஹத்தான தீங்கே விளையுமென்பதை நிச்சயமாய் நம்பலாம்.

நம் ஆலயங்களில் தைவஸாந்நித்யம் ஸாக்ஷாத்தாய் இருப்பதாக நமது கொள்கை. அப்படியே நம்பி நடவடிக்கைகள் நடத்தி வருகிறோம். அவைகள் எதிர்பார்த்தபடி பலம் தருவதையும் ப்ரத்யக்ஷமாய்க் காண்கிறோம். தீண்டாதார் பிரவேசித்தால் தைவஸாந்நித்யத்துக்கு பங்கம் நேரிடுமென்று ஆகமசாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அதை நம்பியே அநுஷ்டானம் அநாதிகாலமாய்

(தொடரும்)



## கும்பகோணம். ருக்மணீ கல்யாணம்.

நமது நகர் ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் ஸ்ரீ மடத்தில் சுமார் ஒருவருஷ காலமாக பிரம்ம ஸ்ரீ கோபாலசாஸ்திரிகள் ஸ்ரீமத் பாகவத புராணத்தை உருக்கமாயும் இனிய சங்கீதத்துடனும் பிரவசனம் செய்து வருவதை ஏராளமான பக்தகோடிகள் ஸ்திரீ புமான்கள் கேட்டு ஆனந்தமடைந்து வருவது நமது நேயர்கள் அறிந்ததே. 12-1-39 மாலை ஸ்ரீ ருக்மிணி கல்யாண கட்டம் வெகு அழகாக வர்ணிக்கையில் சாஸ்திரிகளவர்கள் சிறிது நேரம் மெய் மறந்திருந்ததுகுறிப்பிடத்தக்கது. மகா ஜனங்கள் தத்தம் சக்திக்கேற்றவாறு சன்மானங்களைச் செய்தனர். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களும் தமது அனுக்ரஹ ரூபமாக ஓர் தங்க மெடலை அருளி அனுக்ரஹம் புரிந்தனர். 14-1-39 மாலை பிரத்யும்னனின் பிறப்பும் அவன் நஷ்டமானதும் சம்பராசுரனைக் கொன்று திரும்பியதுமான கதா பாகம் அழகாக வர்ணிக்கப்பட்டது. அதுகாலை ஸ்ரீமான் குப்புஸ்வாமி ஐயரின் பிரேரணையால் டவுன் ஹைஸ்கூல் டீசர் எம். ராம ராவ் பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகளின் சொற்சுவையையும் பிரவசன சக்தியையும் சிலாகிக்கையில், பின் வருமாறு பேசினார். மகர ஸங்கராந்தியாகிய இன்று வானர ஸைன்யங்கள் ஸ்ரீராமர், சுக்ரீவன், ஹனுமான் மூவருக்கும் பொதுவான சூரிய பகவானை பூஜித்து ஸீதான்வேஷணம் சென்றதால் நஷ்டத்ரவ்ய லாபம் ஏற்பட்டது போலவே இன்றும் நஷ்டமான பிரத்யும்ன லாபம் ஏற்பட்டது மிகவும் பொருத்தமானதே. ராமாயணம், பாரதம் போலல்லாமல் ஸ்ரீபாகவதத்தில் மாத்திரம் ஸ்ரீதரீயம், வீரராகவீயம், விஜயத்வஜீயம் என்ற மதத்ரய பாட பேதத்தில் [illegible] தாமதஸ்தாகளிடையே பாகவதத்திற்குள்ள கௌரவம் நன்கு வெளியாகிறது. சம்பராசுரனின் கோபம் 'பதாஹத இவோரக:' என்றும் ஹிரண்யகசிபுவின் கோபம் 'ஸர்ப்ப: பதாஹத இவ' என்றும் துருவனின் கோபம் 'தண்டஹதோ யதா ஹி:' என்றும் வர்ணிக்கப்பட்டிருப்பதின் தாத்பர்யத்தையும் 'உரக:' என்ற பதத்தின் ஸ்வாரஸ்யத்தையும் ஸ்ரீமான் ராவ் விளக்கி ஷை சாஸ்திரிகளைக் கொண்டே கீதை முதலிய நூல்களையும் மகாஜனங்கள் கேட்டு ஆனந்தித்து அவரை ஆதரிக்க வேண்டியது அவசியம் என்று கூறி ஸ்ரீகிருஷ்ண ஸ்துதியாகிய ஓர் சுலோகத்தைச் சொல்லி எல்லோரும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் அனுக்ரஹத்திற்குப் பாத்திராளாகும்படி வேண்டினார்-

நமது நிருபர்

## கும்பகோணம் ஸ்ரீ சக்ரபாணிஸ்வாமி கோவில்

### திருத்தேர் உத்ஸவ கைங்கர்ய உதவி வேண்டுகோள்

"எனக்காக அவதரித்த இந்த அவதாரத்துடன், இந்த கும்பகோண க்ஷேத்திரத்திற்கு "பாஸ்கர க்ஷேத்திரம்" என்று பெயர் தந்து இந்த க்ஷேத்திரத்தில் நித்தியவாஸம் செய்வேணும்" என்றும் ப்ரார்த்தித்தான் சூர்யன். சக்ரமத்யஸ்தான பகவான், அது முதல் இத்திருக்குடந்தையில் வீற்றிருந்து பக்த கோடிகளை ஸம்ரக்ஷணம் பண்ணி வருகிறார். பகவதநுக்ரஹத்தால், தேஜஸ்ஸை மறுபடியும் பெற்ற சூர்யன், சக்ரத்தாழ்வானுக்கு ஆலய ப்ரதிஷ்டை செய்து, சக்ரத்தாழ்வான் அவதார தினமாகிய, மாசி மகத்தன்று "ரதோத்ஸவம்" வரும்படியாக பிரம்மோத்ஸவத்தை நடத்தி வைத்தார், என்பது ஸ்தலமாகாத்மிய சுருக்கம்.

திருப்பணி, காணிக்கை, அர்ச்சனை, பிரதக்ஷிணம், தீபம், நிவேதனம் முதலிய பிரார்த்தனை செய்து கைகண்ட பலன்களை அடைகிறோம் என்பது அடியேங்கள் அநுபவஸித்தம். பால்யத்திலும், இப்போதும், சமீபத்திலும், இப்படிப்பட்ட அநுபவஸித்தாந்தம் பெற்றோம். இவ்வளவு மஹிமை பொருந்திய பெருமாளுக்கு மாசிமகம் பிர்மோத்ஸவத்தில் திருத்தேர் உத்ஸவம் பல வருஷங்களாக இல்லாதது பக்தர்களுக்குக்குறையாக இருந்தது.

17-12-38-ல் பக்தர்கள் ஸபைகூடி. திருத்தேர் உத்ஸவம் விஷயம் பரியாலோசனை செய்தார்கள். திருத்தேர் இழுக்க வேண்டியது அவச்யம் என்றும், ஸகலவிதமான ஜாதியார்களும், வெளியில் தேரில் எழுந்தருளியிருக்கும் பகவானைத் தர்சனம் பண்ண, இதுவே தக்க தருணம் என்றும், பக்தர்கள் ஸத்ரவ்யம் வாங்கித்தான் செய்ய முடியும் என்றும், உடனே தக்க முயற்சி செய்ய வேண்டுமென்றும், டிரஸ்டிகளைக் கேட்டுக் கொள்வதாகவும் தீர்மானித்தார்கள். மேலும் ஹரிஜநங்கள் தேர் இழுக்கும் பொழுது, ஸ்வாமி தர்சனம் பண்ணி, ஸ்வாமி கிருபையைப்பெற இதுவே நல்ல ஸமயமாக நமது முன்னோர் ஏற்படுத்தியிருக்கிறார்கள். எவ்விதத்திலும், திருத்தேர் உத்ஸவம் பண்ணவேண்ணவேண்டும் என்கிற பிரார்த்தனை மிகவும் உயர்ந்த பிரார்த்தனையாகும்.

ஸ்ரீசக்ரபாணி ஸ்வாமி கோவில் இப்பொழுதிருக்கும் நிலைமையில், முற்றிலும் யாசகம் செய்து தான் இக்கைங்கர்யம் நடை பெறவேண்டியிருக்கிறது. ஸகல தளவாடங்களும் தயாராக வேண்டும். ரூபாய் ஆயிரத்து ஐந்நூறுக்குக் குறையாமல் தேவையாயிருக்கும் என்று உத்தேசிக்கிறார்கள்-

பக்தர்கள் விரைவாய் முன்வந்து, பேருதவிபுரிந்து, ஸத்திரவ்யம்வழங்கி திருத்தேர் கைங்கர்யத்தை பூர்த்தி செய்து வைத்து ஸ்ரீ சக்ரத்தாழ்வான் கிருபையைப் பெறவேண்டுமென்று பிரார்த்திக்கும்,

வி. விஜயராகவாசாரி,
கே. ராகவேந்திர ராவ்,
ஏ. ஆர். ராமலிங்கம் செட்டியார்.
டிரஸ்டிகள்.

## ஸநாதன தர்மம்.

### பிரம்மஸ்ரீ டி. எல். ஸுப்பய்யரின் பிரஸங்கம்.

சேங்காலிபுரம் ஸ்ரீ குகதாஸ் அவர்களின் "குகாலய"த்தில் சென்ற 9-1-39 திங்கள் கிழமை தினம் திருக்கருகாவூர் ஸ்ரீமான் டி. எல். சுப்பய்யர் அவர்கள் பல அக்னிஹோத்திரிகள், சாதுக்கள், உத்தம பக்தர்கள் நிறைந்த சபையின் முன்பு "ஸநாதனதர்மம்" விஷயமாக ஓர் அரிய உபந்யாசம் சுமார் மூன்று மணி நேரம் செய்தனர். உபந்யாஸ ஆரம்பத்திலும், முடிவிலும் பகவானுக்குக் ஹாரத்தி எடுக்கப்பட்டது. வேத கோஷம் நடைபெற்றது. எல்லா ஜீவன்களும் 'சாந்தம், சௌக்கியம், பேரின்பம்' இவைகளை முறையே அடையப் பிரார்த்திக்கப்பட்டது. உபந்யாசகர் "ராமாயணம், மனுஸ்மிருதி, பாதஞ்ஜல யோகஸூத்ரம், கூட நாலடியார், ஔவை, திருக்குறள்" முதலியவைகளின் பற்பல ஆதாரங்களுடன் "ஸநாதநதர்மம், நவீன நாகரீகத்தினது கேடு, தர்மத்தினால் ஏற்படும் இக-பர நன்மை, லோபத்தினால் சம்பவிக்கும் நாசம், காயத்ரீயினது மகிமை, ஐகாக்கிரியத்துடன் கூடிய ஜப, மந்திரங்களினது மகிமை" முதலிய பல விஷயங்கள் பற்றி சபையோர்கள் யாவரும் ஆனந்தக் கண்ணீர் சொரியும்படி தனது உபந்யாசத்தை முடித்தார். பிரும்மஸ்ரீ ராமாயணம் ஆர். அப்பாசாமி சாஸ்திரிகள் சபையோர்கள் சார்பாக உபன்யாசகருக்கு சகல விதத்திலும் ஸர்வ வல்லமையுள்ள பகவான் இக-பர க்ஷேமங்களை வர்ஷிக்கவேண்டுமென்றும், பல இடங்களிலும் இவர் ஸநாதன தர்மத்தைப் பிரசாரம் செய்து ஒருவாறு உலகின் தாபத்தைச் சமனம் செய்யவேண்டுமென்றும் பிரார்த்தித்து வந்தனோபசாரம் கூறினர். கூட்டம் மாலையில் முடிவு பெற்றது.

S. V, மகாதேவன்.

## ஸ்ரீ ஆவணி ஸ்ரீ சிருங்கேரிஸ்வாமிகளின் விஜய யாத்திரை.

### நன்னிலத்தில் வரவேற்பு.

13-1-39 வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நன்னிலம், நல்லமாங்குடி, ஆஸ்திக மகா ஜனங்கள் எல்லோரும் அதிகாலை ஸ்நானம், பகவதாராதனம் முதலியவைகளை முடித்துக்கொண்டு டவுனுக்கு ஈசான்ய எல்லையில் வேத கோஷத்துடனும் பூர்ண கும்பங்களுடனும், வாத்ய கோஷம், பஜனை கோஷ்டியுடன் சென்று எதிர்கொண்டு ஸாக்ஷாத் கைலாஸபதியை தேவர்கள் வரவேற்பது போல் ஸமீபித்ததும்; பனிக்குவியல் அகலுவதும் கதிரவன் ஒளி வீசுவது போலும்; அறியாமை என்ற இருள் நீங்குவதும் ஞானச்சுடர் பாய்வது போலும்; மூடு பல்லக்கின் பக்கத்துக்கதவுகள் படீரென்று விலக, பரப்பிரும்மமே ப்ரத்யக்ஷமானது போன்ற ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமதபிநவோத்தண்ட ஸ்ரீ வித்யாரண்ய பாரதீஸ்வாமிகளது கருணை கடாக்ஷ பாதமேற்பட்டு அவரது திவ்ய மங்கள ரூபத்தையும் எதிரிலிருந்த ஸ்ரீ ஆதி சங்கரபகவத்பாதாளது பாதத்தையும் தர்சனம் செய்து ஸேவித்து பரமானந்தமடையும் பொழுது "நகர்மணா நப்ரஜயா" என்ற மந்திரத்தை வானம் எட்டும்படி உறக்கச்சொல்லி பூர்ண கும்பத்தை சேர்ப்பிக்கையிலும், ஸநாதன தர்மத்தின் துர்தசையையும், தத்கால ஸ்திதியையும், அதில் ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகளது விஜய யாத்திரையினால் ஏற்படும் ச்ரேயஸ்ஸையும் விளக்கியும் யாவரும் புரிந்து கொள்ளுமாறு எளிய நடையில் ஸம்ஸ்கிருதத்தில் கத்யமாயும் ச்லோகங்களாகவும் எழுதி, பிரும்மஸ்ரீ T. S. வைத்யநாத சாஸ்திரிகளால் இனிய உச்சரிப்புடன் பக்தி மேலிட்டுப் படித்துக்கொடுக்கப்பட்ட வரவேற்புப் பத்திரம் ஸ்ரீ பாத கமலங்களில் சேர்ப்பிக்கப்பட்டதும், பக்த ஜனங்கள் தன்யர்களாகி மேளம், வேதகோஷம், பஜனையுடன் எல்லா அக்ரஹாரங்களுக்கும் பல்லக்குடன் கூடச்சென்று ஜாகையில் அலங்கரிக்கச்செய்து அநுக்ரஹம் பெற்று வீடு சேர்ந்தனர். பிரதி வேளைகளிலும் பூஜை விசேஷமாகவும் விமர்சையுடனும் நடந்து வருவதை எல்லோரும் வந்து சித்தையுடன் தர்சித்து வருகிறார்கள், (தென்னிந்தியாவிலுள்ளது ஆதி ஸ்ரீ சங்கர பகவத்பாதாளால் ஸ்தாபிக்கப்பட்டது. 1. காஞ்சி காமகோடி பீடம் 2. சிங்கேரி ஸ்ரீ சாரதா மடம். பிறகு சாரதா பீடத்தின் ஓர் கிளையாக துங்கபத்ரா தீரத்தில் ஆவணி என்ற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.)

ஒரு நிருபர்.

ஜ 215267

## சென்னை ஸ்ரீ வித்யோல்லாஸினீ ஸபா.

சென்னை நாராயணமுதலி வீதி சம்ஸ்கிருத கலாசாலையில் ஸ்தாபித்துள்ள மேற்கண்ட சபையின் கூட்டமொன்று சென்ற (9—1—39) திங்கட்கிழமை மாலை நான்கு மணிக்கு நடைபெற்றது.

பல வித்வான்களும் ஸம்ஸ்கிருதாபிமானிகளும் இதரப் பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீ உ. வே. வித்வான் காஞ்சீப்ர. அண்ணங்காரச்சாரியார் ஸ்வாமி தலைமை வகித்தார். தெய்வ வழிபாடு நடந்தவுடன் ஷை ஸபைக் காரியதரிசி டி. டி. ஸ்ரீநிவாஸன் சென்ற ஸபையின் அறிக்கையைப் படித்தார்.

பிறகு பி. எம். ஸ்ரீநிவாஸன் என்னும் மாணவனால் "கல்வி" என்ற விஷயம் வடமொழியில் நன்கு உபன்யஸிக்கப்பட்டது. அதே விஷயத்தைப் பல மாணவர்களும் பேசினார்கள். பிறகு ஸ்ரீ உ. வே. வானமாமலை ஏ. கோபாலய்யங்கார், (ந்யாய சிரோமணி) ஸ்ரீ. உ. வே. டி. ஏ. ஸம்பத் குமாராச்சாரியார், எம். ஏ. (ந்யாயவித்வான்) முதலான வித்வான்களும் வடமொழியில் இனிமையாகப் பேசினர். முடிவாக அக்ராஸனாதிபதியவர்கள் செய்த பிரசங்கத்தின் சாராம்சமாவது:—

உலகின்கண் வாழும் மானிடர்களின் ஞானவிருத்திக்கு கல்வியே முக்கிய சாதனமாகும். அவ்வித்யையை ஸாமான்ய வித்யை, ப்ருஹ்மவித்யை என இருவகையாகப் பிரிக்கலாம். எக் கல்வியின் ஞானத்தால் பரம்பொருளானது அறியப்படுகிறதோ அக் கல்வியைத்தான் ப்ருஹ்மவித்யை எனச் சொல்லுகிறார்கள். அப் பிரும்மவித்யையில், பிரவேசமானது சாமானிய வித்யையைப் பயிலாதவருக்கேற்படாது. ஆகையினால் இவ்விருவிதமான வித்யைகளும் மனிதனுக்கு இன்றியமையாதவைகள். மேலும் சாமானியக் கல்வியில்லாவிடில் மானிடர்களுக்கு லௌகிக ஞானம் உண்டாகாது. பிரும்ம வித்யையை அப்யஸிக்காமல் ப்ரும்மஞானம் ஏற்படாது. நம்முடைய மதத்தில் ஞானத்தினாலேயே மோக்ஷம் என்று கூறப்பட்டுள்ளமையால் அந்த ப்ரும்மஞானமில்லாவிடில் மோக்ஷம் ஸித்தியாது. ஆதலால் இவ்விரு வித்யைகளும் மனுஷ்யர்களால் அவசியமாகவறியத்தகுந்தவைகள் என்று கூறி பின் மாணாக்கர்களுக்குரிய நீதிபோதனைகளையும் குறிப்பிட்டு எல்லார் தமக்கும் இன்பம் பயக்குமாறு வடமொழியில்விரிவாக ஓர் சொற்பொழிவாற்றினார்.

பின் ஷை கலாசாலை தலைமையாசிரியர் ஸ்ரீ உ. வே. டி. எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் (ந்யாய சிரோமணி) வந்தனோபசாரங்கூற மங்களவாழ்த்துடன் சபை இனிது கலைந்தது.

ஒரு நிருபர்.

## திப்பிராஜபுரம். பிரும்மவித்யா ஸபா.

10—12—38 ஸ்திரவாரத்தில் பிரும்மஸ்ரீ சாஸ்திரியளவர்கள் சுகருக்கும் வியாசருக்கும் கிருஹஸ்தாச்ரமத்தை அவலம்பிக்கிற ப்ரகடனத்தில் நடந்த தத்வ வாதத்தைப் பற்றி சொன்னார்.

17-12-38 ஸ்திரவாரத்தில் திருவிடமருதூரிலிருந்து வரும் ப்ரும்மஸ்ரீ V. K. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள், மோக்ஷத்துக்கு பரமஹேதுவாயிருக்கிற பக்தியோகத்தின் பெருமையைப்பற்றியும், பகவானுடைய குணகணங்களை அதற்கு திருஷ்டாந்தமான கதைகளுடனும் வெகு அழகாக உபன்யசித்தார்.

21—12—38 ஸ்திரவாரத்தில் நன்னிலம் போர்டுஸ்கூல் உபாத்தியாயர் இவ்வூர் பிரும்மஸ்ரீ T. S. வைத்தியநாத சாஸ்திரிகள் அவர்கள் பகவானிடத்தில் காட்டும் அன்பு அல்லது பிரியம்தான் பக்தி எனப்படுவது என்கிறதைப்பற்றியும் அன்று நடந்த ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமியின் லக்ஷார்ச்சனா பூர்த்திவைபவத்தைப்பற்றி ச்லாகித்தும் வெகு அழகாகவும் உற்சாகமாகவும் சொன்னார்.

31—12—38 ஸ்திரவாரத்தில் ப்ரும்மஸ்ரீ நாரசிங்கம்பேட்டை ராமு சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் "அதிகாயன் வதம்" என்கிற கட்டத்தை அழகாக சொன்னார்.

7—1—39 ஸ்திரவாரத்தில், ஸித்தமல்லி V. ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்கள், வேத மஹிமை, மனுஷ்யஜன்மாவின் உயர்வு, இதுகளைப்பற்றியும், இந்திரியா ஸக்த மனஸானது தன் இஷ்டப்படி விஷயாதி நச்வரமான இஹ போகங்களில் ஈடுபடாமல் செய்து மனுஷ்யன் சாதன சதுஷ்டய ஸம்பன்னனாகி, ஆனந்தகனீபூதமானதும், சத்-சித்-ஆனந்த ஸ்வரூபமானதுமான, பரப்ரும்மத்தினிடத்தில் மனம் லீனமாக மோக்ஷாந்தமான பரம ச்ரேயஸ்ஸை அடையவேண்டியது மனுஷ்ய ஜன்மாவைப்பெற்ற அதிலும், நம் பிராமணர்களுக்கு உரித்த கடமையாகும் என்பது பற்றி ரொம்ப சிலாகிக்கத் தகுந்ததாயும், போதனா முறையாகவும், அதிநுட்ப விஷயங்களைக்கூட தெளிவாக புரியும்படிக்கும் உபன்யசித்தார் மேலும் 6—1—39 வெள்ளிக்கிழமை யன்று திருபுர சதனத்தில் ஷை யார் தர்ம, அர்த்த, காம, மோக்ஷ, என்கிற புருஷார்த்தங்களைப்பற்றி விரிவாகவும் அதுகளை மனுஷ்யன் அடையவேண்டிய ஆவச்யகத்தைப்பற்றியும் உருக்கமாகவும், லளிதமாகவும் உபன்யசித்தார்.

## கீர்வாணவாணீ பரிஷத். பழவூர்,

இச்சபையின் 5-வது கூட்டம் இம்மாதம் 24௳ (8—1—39) மாலை 3½-மணிக்கு வேத பாடசாலையில் நடைபெற்றது. அவ்வமயம் பிரம்மஸ்ரீ, S. V சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமை வகித்தார்கள். பிரம்மஸ்ரீ, சாஸ்திரிகளின் தலைமை உரைக்குப் பிறகு அம்மங்குடி சிவராம கிருஷ்ண சாஸ்திரிகள் (வேதாந்த சிரோமணி) அவர்கள் "சதுர்வித புருஷார்த்தம்" என்னும் விஷயத்தை தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் உபன்யஸித்தார்கள். பிறகு இச்சபையின் காரியதரிசியான P. R. நாகேச்வர சாஸ்திரிகள் அப்பய்ய தீக்ஷிதர் அவர்களுடைய சரித்திரத்தை விஸ்தாரமாக தமிழில் எடுத்துரைத்தார்கள். பிறகு ஆங்கரை ராஜகோபால தீக்ஷிதர் "ராஜா காலஸ்ய காரணம்" என்றும் விஷயத்தை உபன்யஸித்தார். பிறகு L. S. ராமச்சந்திர கனபாடிகளால் இச்சபையின் போஷகரான ரிடயர்டு டிப்டிகலெக்டர் P. ராமச்சந்திர அய்யர் அவர்களுக்கும் தலைவருக்கும் மற்றுமுள்ள ஆஸ்திகர்களுக்கும் வந்தனம் தெரிவிக்கப்பட்டு கூட்டம் குதூகலத்துடன் கலைந்தது.

இவ்வூரில் உள்ளூர் மகாஜனங்களுடைய வேண்டுகோளின் பேரில் பிரம்மஸ்ரீ, S. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் மகாபாரதத்திற்கு சிரோபூஷணமாக விளங்கும் விராடபர்வாவை ஒவ்வொரு நாளும் இரவு 8-மணி முதல் 9½-மணி வரையிலும் விஸ்தாரமாக ப்ரவசனம் செய்துவிட்டுப் பிறகு தநுர்மாதாரம்பம் முதல் வேதாந்த சாஸ்திரத்தின் ஸாரமாக விளங்கும் "பகவத் கீதையை" பண்டித பாமரர்கள் யாவரும் நன்கறியுமாறு எளிய தமிழ் நடையில் ப்ரவசனம் செய்து வருகிறார்கள். உள்ளூரிலிருந்தும் பக்கத்து ஊர்களில் இருந்தும் ஆஸ்திகர்கள் வந்திருந்து சிரவணம்செய்து வருகிறார்கள்.

K. N. நடேச சர்மா.

## எது மலமாஸம்?

நம்நாட்டில் அனேகர்கள் பஞ்சாங்கம் கணித்து வருகிறார்கள் ஒவ்வொரு பஞ்சாங்கத்திலும் திதி நக்ஷத்திரங்களின் நாழிகை தாரதம்யம் காணப்படுவதால், அதிதி, திதித்வயம், சூன்யதிதி, விரதம், புண்யகாலங்கள் இவைகளை மாறுதலாக அநுஷ்டிக்கும்படி நேர்ந்துவிடுகிறது யாவரும றிந்தவிஷயம்—

அடுத்த பிரமாதி வருஷத்தில் ஆனி-மீ 3௳யிலும் 32௳யிலும் அமாவாஸ்யைகள் ஏற்படுவதால், 39-வது வருஷத்திய டைரிப் பஞ்சாங்கத்திலும் வேறொரு வாக்கியப் பஞ்சாங்கத்திலும், ஆனி-மீ 4௳ முதல் அதிகாஷாடமென்றும் மலமாஸமென்றும், ஆடி-மீ 1௳ முதல் நிஜாஷாடமென்றும், எழுதப்பட்டிருக்கிறது. ஷை பஞ்சாங்கப் படியே, ஆனி-மீ 3௳ அமாவாஸ்யை நாழிகை 53 என்றிருப்பதாலும், அமாவாஸ்யையின் முடிவுக்குள்ளாகவே நாழிகை 32-31க்கு கடக ஸங்கிரமணம் ஏற்படுவதாலும், அந்த மாஸம் அதிகமாஸமாகாது. ஆஷாடமாஸமே ஆகிறது. ஷை ஆனி-மீ 32௳ அமாவாஸ்யையின் முடிவுக்குமேல் ஆடி-மீ 30௳ அமாவாஸ்யையின் முடிவுக்குள் சங்கரமணம் ஏற்படாமல் ஆவணி-மீ 1௳ ஸிம்ஹ ஸங்கிரமணம் ஏற்படுவதால், ஆடி-மீ 1௳ முதல் அதிக சிராவணமாஸமென்றும், ஆடி-மீ 31௳ முதல் சுத்த சிராவணமாஸமென்றும் கொள்ளவேண்டியது நியாயமாகும். எல்லா ஸ்மிருதி நிபந்தனங்களிலும், "அஸங்கிராந்த மாஸோऽதிமாஸ:" இத்யாதி வசனங்களிருப்பதால் "எந்த சாந்திரமாஸத்தில் ஸங்கரமணமில்லையோ அந்த மாஸம் மலமாஸமென்றும் அதிகமாஸமென்றும் சொல்லப்பட்டிருப்பது அறியவும். ஸாமானியமாக பஞ்சாங்கத்தைப் பார்த்துவிட்டு, சாந்திரமான அநுஷ்டாதாக்கள் ஆஷாட மாஸத்தில் செய்ய வேண்டிய சிராத்தாதிகளை அதிக சிராவணமான மலமாஸத்தில் அநுஷ்டிக்காமல் ஸ்வகாலத்தில் அநுஷ்டிக்கவேண்டி இப்போதே இந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது. ஆகையால் பஞ்சாங்கம் கணிப்பவர்களும் அச்சிடுவதற்கு முன்னமே மலமாஸம், குரு சுக்கிர மௌட்யாதிகாலம் மற்ற புண்ய காலங்கள் இவைகளை கவனித்து முக்கியமான விஷயங்களை பெரிய எழுத்துகளால் எழுதிப் பிரசுரம் செய்தால் லோகோபகாரமாக இருக்குமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அ. சங்கரசாஸ்திரி, சோழவந்தான்.


பிரும்மஸ்ரீ அருட்கவி ந. சுப்ரமண்ய அய்யர், அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ நகர விமர்சனம். | 0 | 12 | 0 |
| ஸ்ரீ குரு விமர்சனம். | 0 | 5 | 0 |
| வரிவஸ்யா ரஹஸ்யம். | 1 | 0 | 0 |
| ஸ்ரீ லலிதாத்ரிசதீ பாஷ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீவித்யாசபர்யாபத்ததி | 2 | 8 | 0 |

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

4

H
24
26-1-1939

215268.

667
3 0 JAN 1939
MADRAS
215268

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 24 | கும்பகோணம் கலி5039 பகுதான்ய-ஸு தை-மீ 13உ 1939-ஸு ஜனவரி-மீ 26உ | வர 4

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அண 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அண. 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## அண்ணமலை கலாசாலை.
### மீண்டும் உபத்திரவம்.

சிதம்பரம் அண்ணமலை ஸர்வகலாசாலை 15உ திறக்கப்பட்ட பிறகும் சில மாணவர்கள் ஹாஸ்டலில் துஷ்ட பிரசாரம் செய்து மற்ற மாணவர்களைக் கலைக்க முயற்சித்தார்கள். அவர்களில் சிலர் கலாசாலையை விட்டுத் தள்ளப்பட்டனர். சிலர் தாற்காலிகமாக நீக்கிவைக்கப்பட்டிருக்கிறார்கள். 13 மாணவர்களுக்கு 144-வது பிரிவுப்படி தடை உத்திரவு போடப்பட்டிருக்கின்றது.

## கல்வி ஸபைகள் ஒழிக்கப்பட்டன.

சென்னை மாகாணத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்படுத்தப்பட்டிருந்த கல்வி ஸபைகளை எடுத்துவிடவேண்டுமென்று சட்ட ஸபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

## ஒரிஸாவில் தகராறு.

ஒரிஸா மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரிகளுக்கும், கவர்னருக்கும் அபிப்பிராயபேதமேற்பட்டு தகராறு நடந்துவருகிறதாம். அந்த மாகாண ஸம்ஸ்தானங்களின் பாதுகாப்பு ஸம்பந்தமாக கவர்னர் செய்ய உத்தேசித்துள்ள கார்யத்தினாலே தகராறு ஏற்பட்டது. ஸமீபத்தில் ரான்பூரில் ஒரு வெள்ளைக்கார உத்யோகஸ்தர் கொல்லப்பட்டது யாவரும் அறிந்த விஷயம்.

## பொது ஸுகாதார மசோதா சட்டமாகியது.

சென்னை சட்டஸபையில் கனம் டாக்டர் ராஜனால் கொண்டுவரப்பட்டிருந்த பொது ஸுகாதார மசோதா சட்டமாகிவிட்டது. அம்மைகுத்திக்கொள்ளும் விஷயத்தில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு விலக்குச் செய்வதற்காக ஒரு பிரிவுசேர்க்கப்பட்டிருக்கிறது. மாஜிஸ்ட்ரேட்டிடம் மனுக்கொடுத்து விலக்கு செய்துகொள்ளவேண்டும். இப்படியே இனாகுலேஷன் செய்துகொள்வதற்கும் விலக்கு உண்டு.

வெற்றிலை பாக்கு, புகையிலை போட்டு எச்சில் துப்புவதும் குற்றமாக்கப்பட்டிருக்கிறது.

### மின்சாரத்திற்கு புதிய வரி.

சென்னை கவர்ன்மெண்டார் மின்சாரவிசை உற்பத்தி செய்வோருக்கு யூனிட் ஒன்றுக்கு அரையணாவிதம் வரிவிதிக்க நிச்சயம் செய்திருக்கிறார்கள். மாகாண வருமானத்தை விருத்தி செய்யவே இந்த வரியாம்.

## கோவில்களில் பரம்பரை பாத்யம்.
### அழகர் கோவிலில் ஒரு தீர்ப்பு.

மதுரைக்கு ஸமீபமாயுள்ள ஸ்ரீ அழகர் கோவில் பூஜகரும், கணக்குப்பிள்ளையும் டிரஸ்டிகளுக்குக் கீழ்படியாமைக்காக வேலையிலிருந்து தள்ளப்பட்டனர். அவர்கள் தாங்கள் பரம்பரை பாத்யஸ்தர்களென்றும் தங்களை அடியோடு வேலையிலிருந்து நீக்க ஒருவருக்கும் அதிகாரமில்லையென்றும் வாதாடினார்கள். ஹிந்து மதஸ்தாபன போர்டாரிடம் அப்பீல் செய்துகொண்டார்கள். அவர்கள் அதை விசாரித்து மனுதார்கள் மீது குற்றம் ருஜுவாகியிருப்பதாயும், அவர்கள் டிரஸ்டிகளை லக்ஷ்யம் செய்யாமலும், உத்திரவுக்குக் கீழ்படியாமலும் இருந்து வந்திருக்கிறார்களென்றும் ஆகையால் இவர்களை அடியோடு டிரஸ்டிகள் வேலையிலிருந்து தள்ளியது நியாயந்தானென்றும் தீர்ப்புச் சொல்லிவிட்டார்கள்.

பரம்பரை பாத்யமென்று சொல்லிக்கொண்டு அட்டூழியம் புரிந்துவருவோரை நீக்க டிரஸ்டிகளுக்கு அதிகாரமிருப்பதை மற்ற தேவஸ்தான டிரஸ்டிகளும் கவனித்து நடப்பது இனி ஸௌகர்யமாயிருக்கும்.

கும்பகோணம் பாங்கி லிமிடெட்;
கும்பகோணம்.

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட பங்கு தொகை | ரூ 2,82,575 |
| க்ஷேம நிதிகளும் காப்பு நிதிகளும் | ரூ 2,09,438 |
| கரண்டு அக்கௌண்டு | .... 2% வட்டி |
| ஸேவிங்க்ஸ் பாங்கி | .... 3% ,, |
| தவணை டிபாஸிட்டுகள் | 1-ஸு 4% |
| | 2-ஸு 4½% |

சீலன் டிபாஸிட்டுகளும் இப்போது வாங்கப்படுகின்றது.

## 472 மாணவர்களின் கதி.
### வந்தேமாதரம் பாடியதற்காக தள்ளப்பட்டவர்கள் நாகபுரி வருகை.

ஹைதராபாத்திலுள்ள கலாசாலையில் வந்தேமாதரப்பாட்டுப் பாடிய குற்றத்திற்காக கலாசாலையிலிருந்து நீக்கப்பட்ட 472 ஹிந்து மாணவர்கள் நாகபுரி வந்திருக்கின்றனர். அவர்களை அந்த ஊர்கலாசாலையில் சேர்த்துக்கொள்ள ஸர்க்கார் ஏற்பாடு செய்து வருகின்றார்கள்.

## சென்னையில் சீட்டுக்கட்டு இறக்குமதி
### பிரதி வருஷமும் 2லக்ஷத்திற்குமேல் நாசம்,

சென்னை மாகாணத்தில் சீட்டு விளையாட்டு நிமித்தமாக வெளிநாடுகளிலிருந்து பிரதி வருஷமும் 2 லக்ஷம் ரூபாய்க்குமேல் மதிப்புள்ள சீட்டுக்கட்டுகள் இறக்குமதியாகி வியாபாரம் நடப்பதாக சென்னை சட்டஸபையில் ஒரு கேள்விக்குப் பதில் கூறப்பட்டது.

இந்த மாதிரி ஒவ்வொரு மாகாணத்திலும் கணக்கிட்டால் இந்த இனத்தில் மட்டும் 25 லக்ஷம் வரையிலாவது பணம் அன்யதேசம் போவது வெளியாகும்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# ஸ்ரீகாசி நகரில் அகில பாரதீய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின்

## 11-வது மஹாநிவேசநம் வரவேற்புத் தலைவரின் முன்னுரை.

### ஸ்ரீவிசுவநாதர் மேன்மையுடன் விளங்குகிறார்.

எவரைச் சைவர்கள் பரமசிவனென்றும், வேதாந்திகள் பரப்பிரம்மம் என்றும், பௌத்தர்கள் புத்தபகவானென்றும், ஹேதுக்களின் உதவிகொண்டு முடிவு செய்பவர்களான, தர்க்க சாஸ்திர மறிந்தோர், உலகத்தை ஆக்கியோன் என்றும், ஜைனமதத்தினர் அருகக் கடவுள் என்றும், மீமாம்ஸகர்கள் கர்மமென்றும், உபாஸனம் செய்கிறார்களோ, மூவுலகங்களுக்கும் நாதரான அந்த ஸ்ரீ ஹரிமூர்த்தியானவர் நமக்கு விரும்பிய பயனை அளிப்பாராக:—

மிகவும் வணங்கத் தகுந்தவர்களான ஆசார்யர்காள்! தொழத்தகுந்தவர்களான பண்டிதர்காள்! மரியாதை செய்யத் தகுந்தவர்களான மகான்காள்! இங்கே விஜயம் செய்திருப்பவர்களும் தர்மத்தில் அன்புடையவர்களுமான நல்லோர்காள்! மஹாநுபாவர்காள்! பெண்மணிகாள்!

தர்மத்தையே உயிராகக்கொண்ட தேசபக்தர்களான தங்களுக்கு நல்வரவு கூறும் பாக்கியம், ஜகன்மாதாவான ஸ்ரீ அன்னபூரணி தேவியுடையவும், எவ்வுயிர்களையும் தாய்மைப் படுத்துகிறவரான ஸ்ரீவிசுவநாதருடையவும் அளவில்லாக் கருணையால் எனக்குக் கிடைத்திருக்கிறது. யாவராலும் போற்றத் தகுந்த தங்களுடைய திருவடிகளில் நான் ஆதரவுடன் வணங்கித் தங்களுக்கு என் மனமார்ந்த அபிநந்தனம் செய்கிறேன்.

இன்று எனக்குக் கிடைத்த பேற்றைக் குறித்து நான் கெர்வம் கொள்ளுகிறேன். ஏனெனில் சாமான்ய மனிதனை என்னை அழைக்கப்பெற்று, இந்தப் பாரத நாட்டின் பல பல பகுதிகளிலிருந்தும் பூஜிக்கத் தகுந்தவர்களான தர்மாச்சார்யர்களும், திக்கஜங்கள்போன்ற வித்வான்களும், ஸாதுக்களான மஹாத்மாக்களும், தார்மிகர்களான நல்லோர்களும் செல்வத்தால் குபேரனை யொத்தவர்களும், பல பல சிறந்த அரசர்களும், மரியாதைக் குறியவர்களான பிரதிநிதிகளும், மற்றும் பண்டிதைகளான பெண்மணிகளும் ஆன தாங்கள் எல்லோரும் இங்கு ஒன்று கூடி வர்ணாசிரம ஸங்கத்தின் விஜயக்கொடியை பூமண்டலம் முழுவதிலும் நாட்டுவதற்காக ஸம்ஸார பயத்தைத் தீர்ப்பவரான திரிபுராரியின் தாய்மை வாய்ந்த ஸ்ரீகாசியான இந்நகரத்தில் மன உறுதியுடனும், மிக்க உற்சாகத்துடனும் ஒன்றுகூடி, என் அந்தராத்மாவின் சக்தியாகிற கெங்கையை வெள்ளம் வெள்ளமாய்ப் பெருகும்படி செய்திருக்கிறீர்கள்.

இப்போது விஜயம் செய்திருப்பவர்களான பெரியோர்களை நான் வரவேற்று அவர்கள்பால் என் மனமார்ந்த நன்றியறிதலை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புண்யமான புகழ்வாய்ந்த தர்மாசாரியர்களின் நல்வாழ்த்தென்கிற கெங்காப் பிரவாஹமும், ஸாதுக்களான மஹான்களின் சேர்க்கையான யமுனை யாற்றின் சுழல்களும், மேலும் நன்கு மதிக்கத்தக்க மஹான்களின் நல்லாராய்ச்சியாகிற ஸரஸ்வதியின் அலைகளும் ஒன்று சேர்ந்து இங்கே விளங்குவனபோல் தோன்றுகிறது.

இன்று ஜகத்குரு ஸ்ரீ சங்காராசார்யபீதாளும் லோககுரு ஸ்ரீவைஷ்ணவாச்சார்யபீதாளும் சேர்ந்திருப்பது, ஸ்ரீபகவான் வேணீமாதவர் பிரயாகையிலிருந்து இங்கே ஸ்ரீவிசுவநாதபுரியில் விஜயம் செய்து பகவான் ஸ்ரீ சங்கரருடன் சேர்ந்து, ஹரிஹரர்களின் வியக்கத்தக்க சேர்க்கை என் கண்களின் முன்னே விளங்குகிறது. இந்தச் சேர்க்கை நெடுநாள் வாழ்வதாக! பகவான் ருத்ரர் அஸுரத்தன்மையை அழித்திடுவாராக; மேலும் பகவான் திருமால் பாரததேசத்தின் தைவிக ஸம்பத்தை இடைவிடாது வளர்ப்பாராக; அதனால் நம் தாய் நாடான பாரததேசத்தில், இன்பம், அமைதி, இவற்றின் மேன்மை எங்கும் பரவுவதாக; தர்மவான்களான தங்களுக்குத் தக்கவாறு வரவேற்க நான் சக்தியுடையவனல்லன் என்பதைக் குறித்து வருந்துகிறேன். என் அஜாக்கிரதையால் தங்களுக்கு அநேக அஸௌகர்யங்கள் ஏற்படக்கூடியதாயிருக்கும். அதற்காகத் தாங்கள் என்னை க்ஷமித்தருளவேண்டுகிறேன். மேலும் சபரியின் காய்ந்த பழம் போன்றதும் குசேலரின் அவலரிசி போன்றதுமான அன்பமுதம் நிறைந்த இந்த எளிய வரவேற்புக்குத் தங்களுடைய திருவுள்ளத்தில் இடமளித்துக் குற்றங்களைக் கருதாது விடுவீர்களாக.

"கடலையமென்று கங்கைநீர் பருகி உயிர் வாழ்ந்தேனும் ஸ்ரீகாசியில் விசுவநாதர் ஸந்நிதியை விட்டகலாமலிருப்பீர்களாக" எனும் இம்மூதுரை ஸ்ரீகாசியை விட்டுத் தங்கள் ஊர் திரும்பும்போது அவசியம் தங்களுடைய நினைவுக்கு வரும்.

ஸநாதன தர்மிகள், பாரதநாட்டுக்கு உண்மையில் நன்மை விரும்புவோர். இவர்களின் ஸௌபாக்கியமாகிற சூரியன் அஸ்தமித்து விட்டான்; ஏனெனில் பாரதமாதாவின் சத்புத்ரர்களும் ஜகத்துக்கே செல்வம் போன்றவர்களுமான மகாராஜாதிராஜ ஸ்ரீராமேசுவரஸிம்மபகதூர், தர்மத்தையே உயிராகக்கொண்டவரும் மஹாவித்வானுமான ஸ்ரீலக்ஷ்மண சாஸ்திரி திராவிடர்; மேலும் இளமைப்பருவம் முதற்கொண்டு பிர்ம்மசாரியும், தவம் புரிபவரும், நன்கு உபந்நியஸிக்கக்கூடியவருமான ஸ்ரீஸ்வாமி தயாநந்தர், ஆகிய இவர்கள் இப்பூலகை விட்டுத் திருநாடு அலங்கரிக்கிறார்கள். ஆனாலும் அவர்களின் ஆத்மாக்கள் அழிவற்றவை. அந்த மூன்று ஆத்மாக்களும் ஒன்று சேர்ந்து, தங்களுடைய திவ்ய சக்திகளால் வர்ணாசிரம ஸ்வராஜ்யசங்கமாகிற கல்பக் கொடியை மென்மேலும் நல்வழியில் ஓங்கி வளரச் செய்துகொண்டிருக்கின்றன. ஆகையால் அந்த மஹா சக்திகளைக் குறித்துப் பாரதமக்கள் எப்போதும் நன்றி பாராட்டல்வேண்டும். மேலும் தார்மிகர்களின் ஸ்வாதீன நிலையைப்பற்றி எழுதப்பெறும் சரித்திர புஸ்தகங்களில், இம்மஹான்களுடைய நாமதேயங்களைப் பொன் எழுத்துக்களால் மற்ற யாவருக்கும் முதன்மையில் எழுதிவைத்தல் வேண்டும்.

பகவானின் விளையாட்டு நாடாகிற பாரத பூமியில் தற்காலத்தில் பயத்தைத் தாக்கூடியதான கடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஓரிடத்தில் போற்றத் தகுந்தவர்களான ரிஷிகளால் வெகு காலமாய்த் தேடிவைக்கப்பெற்ற தர்மத்தை வேருடன் களைவதற்காக அதர்மச் சட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன; பிரிதோரிடத்தில் வகுப்பு விரோதம், சாதிச் சண்டை, இவைகள் நிகழ்கின்றன; மற்றோரிடத்தில் துன்புறுத்தப்படுபவர்களும், எண்ணிக்கையில் குறைந்தவர்களுமான மக்களுக்கு அநியாயம் செய்தல், என்ற விதை விதைக்கப்படுகிறது; இன்னுமோரிடத்தில் க்ருஷி செய்பவரோடு மற்ற வகுப்பினரிடை கடும்போர் நிகழ்கிறது; மற்றுமோரிடத்தில் வரி கனத்தால் ஏற்கனவே அழுத்தப்பட்டவர்களின்மேல் புதுவரிச் சுமை ஏற்றப்படுகிறது. வீணாக வளர்ப்பதேன்? பாரத நாட்டின் துர்ப்பாக்கியத்தாலோ அல்லது நம்மெல்லோருடைய தீவினையின் பயனாலோ, இன்று ஐயாயிரம் வருஷங்களுக்குப் பின், இப்புண்ய பூமியான பாரத நாட்டில் ஏற்படுகிற (ஸாஸந) அமுலான துச்சாஸனன், சட்டம் செய்ய வலிமையென்ற கைப்பலத்தால் பாரதத்தாயாகிற துரௌபதையின் மரியாதை யென்ற ஆடையை இழுத்து! பாரத மாதாவின் கற்பாகிற செல்வத்தை அழித்துவரத் தொடங்கியிருக்கிறான். இன்று பாரத மாதாவான துரௌபதி தேவி அலறித் தவித்துக்கொண்டிருக்கிறாள். புதுச்சட்டங்களாகிற துச்சாஸனன் "காங்கிரஸ்" என்ற கர்ணனின் பெலங்கொண்டு அச்சமற்றவனாய்த் "தர்மம்" என்ற சேலையை இழுக்க முயன்று கொண்டிருக்கிறான். இந்தப் பயங்கரமான நிலைமையில் வர்ணாச்சிரம சங்கத்துக்கு ஸ்ரீ கோவிந்தனே அடைக்கலம்; அந்தப் பகவானிடமே முழு நம்பிக்கை; அதனாலேயே பாரத மாதாவான துரௌபதிதேவியின் மானமரியாதை நிலை நிற்கும்.

தன் தாய் நாடாகிற ஜன்மபூமிக்கு ஸ்வாதீனத்தை விரும்பாத தூரதிருஷ்டியற்ற மனிதனும் உளனோ? நவீனக் கல்வி கற்றவர்கள் தம் தாயைத் தொழுவதைவிட்டு "வந்தேமாதரம்" கற்பவர்களும் கற்பிக்கப் பெறுவர்களுமா யிருக்கிறார்கள். ஆனால் ஸநாதன தர்மத்தில் பற்றுள்ளவர்கள் தினந்தோறும் வைகறைப் பொழுதில் படுக்கையை விட்டெழுந்தவுடன் பூமி தேவிமேல் கால்களை வைக்கும்போதே, ஜனனியான ஜன்மபூமிக்கு வந்தனம் செய்கிறார்கள். கைகூப்பித் தலை வணங்கி உரைக்கிறார்கள்:—

"கருங்கடலை ஆடையாகக்கொண்டும் மலைகளைக் கொங்கைகளாகக்கொண்டும் விளங்குகிற தேவியே! திருமாலின் மனையாளே! உனக்கு நமஸ்காரம்; உன்னை என் கால்களால் தொடுவதை க்ஷமிப்பாயாக."

அந்தத் தாயின் ஸ்தனங்களாகிற மலைகளிலிருந்து பெருகுகிற கெங்கை, யமுனை முதலான பால் வெள்ளத்தை அருந்துவதால் நம் பாரத மக்களின் தேகம், மனம், புத்தி, ஆத்மா, இவைகள் எப்போதும் புஷ்டியடைந்தும், களிப்படைந்தும் இருந்துவருகின்றன.

நம் தாய் திருமாலின் மனைவியாயிருப்பதால் எப்போதும் ஸுமங்கலியாயிருக்கிறாள்.

எல்லாத் தேசங்களுக்கும் தலைபணியோல் விளங்குகிற பாரதத் தாயை நாம் நாள்தோறும் வணங்குகிறோம். அவருக்கு தேஜஸை விரும்புகிறோம்.

எவர்கள் ஸநாதன தர்மிகளைக் காட்டிலும், தாம் மேம்பட்ட தேசபக்தர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களின் புத்தியைக் குறித்து நமக்கு இரக்கம் வருகிறது.

எல்லாப் பிராணிகளும் தங்களுக்கு இன்பம் உண்டாக வேண்டுமென்று முயலுகின்றன. மனிதர்களைப்பற்றிச்சொல்லவும் வேண்டுமா?

ஜகத்தில் எல்லா ஜீவர்களும் தமக்கு இன்பம் கிடைக்க வேண்டுமென்றும் துன்பம் தொலைய வேண்டுமென்றும் அவாக் கொள்கிறார்கள். யாவராலும் விரும்பப்படும் இன்பம் யாது? அது எவ்விடமிருப்பது?

(தொடரும்)

## பிரயாகையில் 15 லக்ஷம் பேர்கள்.

தை அமாவாஸ்யை புண்யகாலத்தை முன்னிட்டு கங்கா—யமுனா ஸங்கமத்தில் ஸ்நானம் செய்வதற்காக 15 லக்ஷம் யாத்ரீகர்கள் பலவிடங்களிலிருந்தும் வந்து ஸ்நானம் செய்தார்களாம்.



OFFICE OF ... MADRAS

# பொய்யிலிருந்து மெய்யா?

## ஸ்ரீ தத்வடீகை டிப்பணியின் போக்கு

### இதுவா ஸ்ரீதேசிகன் திருவுள்ளம்?

(ஒரு மஹா மஹோபாத்யாயர் எழுதுகிறார்)

ஸ்ரீதத்வ டீகையின் சென்னை நாகரப்பதிப்பில் 427-ம் பக்கத்தில்

लिङ्गविभ्रमबाह्यागमन्यायमुद्धाटयति प्रमाणतयेति

என்ற தத்வடீகைக்கு

लिङ्गेन चिह्नेन विभ्रमो यस्मिन्बाह्यागमे तं न्यायम् उद्धाटयति चिह्नेन असंबद्धतया प्रकाशयति

என்று ஒரு டிப்பணி எழுதப் பட்டிருக்கிறது. மூலத்தின் கருத்தை எப்படி நினைத்துக் கொண்டு இந்த டிப்பணி எழுதப் பட்டிருக்கிறதோ? டிப்பணி வாக்யத்தின் பொருளே விளங்கவில்லை.

இங்கே "லிங்க விப்ரம ந்யாயம்" 'பாஹ்யாகமந்யாயம்' என்று இருந்யாயங்களை ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளம் பற்றி யிருப்பதாகத் தோன்ற வில்லையா? 'லிங்க விப்ரமாதிந்யாயென உபபாதயாதி' என்று மேலே தத்வடீகையிலேயே (436-ம் பக்கம்) வாக்யம் இருக்கிறதே. இந்த லிங்க விப்ரம சப்தம் ஸ்ரீஸ்வாமியால் சததூஷணியின் முப்பதாவது வாதத்தில் பலதடவை உபயோகப் படுத்தப் பட்டிருக்கிறது. 24-ம் வாதத்திலும், தத்வமுக்தாகலாபம் ஜீவஸரத்தின் 49-ம் ச்லோகத்தினுடைய ஸர்வார்த்த ஸித்தியிலும் இந்தசப்தம் இருப்பதைக் காணலாம்.

இந்த லிங்க விப்ரம ந்யாய ஸ்வரூபத்தை, சததூஷணியிலும் ஸ்ரீபாஷ்யத்திலும் ச்ருதப்ரகாசிகையிலு முள்ள 'பாஷ்பாரோபித தூமாதிபி:' 'தூமபுத்யா க்ருஹீத பாஷ்ப' என்ற வாக்யங்களால் தெரிந்து கொள்ளலாம். இந்த ஸமயத்தில், ஆரம்பணாதிகரண பாமதியில் காணும் ஸமாரோபித தூமபாலையான தூமமஹிஷியைப் பார்ப்பதும் விநோதமாயிருக்கும்.

लिङ्गरूपात् विभ्रमात् अर्थाध्यासात्

என்பது சண்டமாருதம்.

பாஹ்யாகமந்யாய ஸ்வரூபம் 'சூன்யமேவ தத்வமிதி வாக்யேந—' என்று ஆரம்பித்துள்ள ஸ்ரீபாஷ்யத்திலிருந்தே ஸ்பஷ்டமாகிறதல்லவா? அஸத்யாத் ஸத்யப்ரதிபத்தி நிராஸத்தில் உபயோகிக்கப்படும் ஹேதுக்கள் இங்கேயும் உபயோகிக்கப்படக் கூடியவைகள் தானே. இது ஸ்ரீபாஷ்யாதிகளிலும் மதாந்தரக்ரந்தங்களிலும் காணப்படும் ஸாதாரண விஷயம். இங்குள்ள "உபபாதயதி" "உத்காடயதி" என்ற பதங்கள் ஸ்வாரஸ்யத்தையும் ஆலோசிக்கவேணும். (2) 431-ம் பக்கத்தில்

अतो न सत्यधीः सत्या ........ न च

என்ற காரிகைக்கு

तव मते सत्यधीरिति काचन ब्रह्मवत् सत्या. न ........ सिध्यतीत्यर्थः

என்று ஒரு டிப்பணி எழுதப்பட்டிருக்கிறது

இங்கே க்ரந்தாந்தரஸம்வாதம் பார்த்துப் பாடசோதனம் செய்யாமல், கிடைத்த பாடத்துக்கு ஒருவிதத்தில் டிப்பணி எழுதியிருப்பதாகத் தெரிகிறது. இங்கு டிப்பணியில் காணும் ஸத்யத்வம் — வ்யாவஹாரிகமா, பாரமார்த்திகமா என்று ஆராயப் புகுந்தால், இருக்கிற பாடத்துக்கும் இந்த டிப்பணி உபயோகப்படுகிறதில்லையென்பது பண்டிதர்களுக்கு எளிதில் புலப்படலாம். மேலும், மற்ற மூன்று பாதங்களிலும் ஹேது பஞ்சமயந்தம் இருக்க, முதல் பாதத்தில் ஏன் இல்லை? நமக்கும் மற்றவர்களுக்கும் வாசி பேசவேண்டியதில்லையா? இரண்டாம் பாதத்திய "தவ்" என்பதை முதல் பாதத்திலேயே ப்ரயோகிக்கலாகாதா? இவைபோன்ற விஷயங்களையும் விமர்சகர்கள் ஆலோசிக்கவேண்டும்.

ஸ்ரீந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் (சென்னை நாகரப்பதிப்பு 143-ம் பக்கம்) இதே ப்ரகரணத்தில்,

सत्यधीर्मिमसत्येन तत्रासत्यादसत्यधीः
सत्यादसत्यधीर्वेति नासत्यात्सत्यधीर्भवेत् ॥

என்று ஸ்ரீ ஸ்வாமியே காரிகை எழுதியிருக்கிறார் ஸர்வார்த்த ஸித்தியில் ஜீவஸரத்தில், இந்த காரிகை காணப்படுகிறது. இந்த காரிகையின் அர்த்தத்தை ஸ்ரீரங்காமாநுஜஸ்வாமி வ்யாக்யானத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆகையால் இங்கே தத்துவ டீகையில்,

अतो नः सत्यधीः सत्यात्

என்று இருந்திருக்கவேண்டும். லேககப்ரமாதாதிகளால் பாடங்கள் மாறுபடுகிற விஷயத்தை, ச்ருத ப்ரகாசாதி ப்ராசீன க்ரந்த பரிசயமுள்ள எவரும் ஒப்புக்கொள்ளாமலிரார்.

நம்ம ஸ்வாமி, ஒரே விஷயத்தைப் பற்றியதாயிருந்தால், ஒரு க்ரந்தத்தில் எழுதிய காரிகாதிகளை அப்படியேயோ, ஒன்றிரண்டு வார்த்தைகளை மாற்றியோ வேறு க்ரந்தத்திலும் எழுதுவது வழக்கம். "அவேத்யமிதி வேத்யத்வே' "அவாச்யமித்யவாச்யத்வே" என்கிற காரிகைகள், தத்வடீகையிலும், ந்யாய ஸித்தாஞ்ஜநத்திலும் சிறிது மாறுதலோடு காணப்படுகின்றன.

இங்குள்ள பூர்வ பக்ஷங்களை நன்றாகத் தெரிந்துகொள்ள விரும்பும் வித்யார்த்திகள், ஸ்ரீ சங்கரபாஷ்யத்தில், அத்யாஸ ப்ரகரண முடிவு, ஸமன்வயாதிகரண பரிசிஷ்டம், ஆரம்பணாதிகரணம் இவைகளைப்பரிசீலிப்பதுநல்லது.

(3) 403-ம் பக்கத்தில் காணும் अनुपपन्न என்ற காரிகையை, ஸ்ரீஸ்வாமியின் காரிகையாக ஓரிடத்திலும், "வாசஸ்பதி எடுத்தது" என்று மற்றோரிடத்திலும் காட்டியிருக்கிறது.

இந்த காரிகையை வாசஸ்பதி மிச்ரர்,

यथाहुः बाह्या अपि .... निरुपद्रव भूतार्थ

என்று காட்டியிருக்கிறார். மூன்றாம் பாதத்தில் "அயத்நவத்வே அபி" என்று பதவிபாகம் காட்டி, கல்பதருகாரர் அழகாக வ்யாக்யானம் செய்திருக்கிறார். தத்வடீகைப் பதிப்பிலோ "யத்நவத்வே அபி" என்று பதம் காட்டப்பட்டிருக்கிறது. காரிகைக்கு அர்த்தம் என்னவோ?

# ஆரியர் நாகரிகம்.

## அதன் முக்கியாம்சங்கள்.

### மந்திரி முன்ஷியின் பிரசங்கம்.

பம்பாய்மந்திரி கனம் முன்ஷீ பாரதீய வித்யாபவனத்தில் பிரதம மந்திரி கனம் கெர் தலைமையில் ஆரிய நாகரிகத்தின் முக்கியாம்சங்கள் என்பதைப்பற்றிப் பேசுகையில் கூறியதாவது:— நமது சமூக பழக்கவழக்கங்களும் ஜாதியும், குடும்பமும் விவாக முறையும் வாழ்க்கை ஆகா. அவை வாழ்வின் வெளி அம்சங்களேயாகும். நாகரிகமும் கலாஞானமும் சடங்குகள், நம்பிக்கைகள் இவற்றில் மூலம் வெளியாகின்றன. இது வாழ்க்கை முறை ஒழுக்க முறை. சமூக சம்பிரதாயங்கள் வாழ்க்கை சித்தாந்தம், இலக்ஷியங்கள் இவற்றின் மூலம் வெளியாகும் சில மதிப்புகளேயாகும். இம்மதிப்புகள் தொன்றுதொட்டு இருந்து வரும் எண்ணங்களால் ஏற்படுகின்றன. இவை சாதனமாக இராமல் வாழ்க்கை இலக்ஷியமாக இருக்கின்றன. ஆரியர் நாகரிகத்தின் முக்கியாம்சங்களாவன:— (1) அவிபக்த குடும்ப முறை (2) தாம்பத்ய வாழ்க்கை (3) வருணாசிரம தர்மம் (4) ஆர்யவர்த்தத்தைப் பற்றிய அபிப்பிராயம் (5) சம்ஸ்கிருதத்தின் மேன்மை. (6) வேதத்தின் புனிதத்தன்மை குடும்பத்தில் தந்தையே உயர்ந்தவர் என்ற எண்ணம். மதிப்பினால் மட்டுமின்றி உணர்ச்சியுடன் கூடிய பிதிர் ஆராதனையாலும் பாராரித்து வரவேண்டுமென்று ஆரிய நாகரிகம் கூறுகிறது. (2) தாய்தந்தையிலிருந்து பிரிக்கப்படக் கூடாதென்று நியதியை ஏற்படுத்துகிறது. ரோம், கிரீஸ்போன்ற தேசங்களில் முதல் அபிப்பிராயம் ஏற்கப்படுகிறது. இந்தியாவிலோ வெனில் இரண்டு அபிப்பிராயமும் சடங்குகள், நம்பிக்கைகள், சட்டங்கள் இவற்றில் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் ஒவ்வொருவரும் தெரிந்தே தங்களது மூதாதையருடனும் சந்ததியாருடனும் சம்பந்தங் கொள்ளுகின்றார். ஆண் குழந்தை பிறந்ததும் அவன் தந்தை கோத்திரத்தைச் சேர்ந்தவனாகிறான். இம்மாதிரியே ஒவ்வொரு ஸ்திரீயும் தெரிந்தே தனது கணவனுடன் ஒன்றுபட்டு வாழத் தீர்மானங் கொள்ளுகிறாள்.

இது யோசனை சக்தியுடன் ஏற்படுத்திக் கொண்ட அடையாள முறையாகும். ஆணும் பெண்ணும் தனித்தனி நபர்களானபோதிலும் சிந்தனை சக்தி மூலமே மனைவி புருஷனின் பாதி உடம்பைப்போல ஆகிறாள். ஒவ்வொரு தலைமுறையிலும் ஒவ்வொருவரும் ஆரியர் நாகரீகத்தின் செல்வாக்குமூலம் இம்மாதிரி முயற்சி செய்வதால் இந்தியாவில் குடும்ப வாழ்க்கை குலையாமலிருந்துவருகிறது. வருணாச்சிரம முறையானது பிரதேச எல்லைகளைக் கடந்தது. ஆர்யர்களது ராஜீய ஆதிக்கம், கலாஞான, நாகரீக ஆதிக்கமாக மாறியது. ஆர்யர்களது அபிப்பிராயப் படித் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களும் அந்நியரும்கூட உயர்ந்த பிராம்மண்யத்தை அடைய முடியும், வசிஷ்டர், பாராசர், வியாசர், ஜாபாலி, ஆத்திரேயர் போன்ற பல பிரசித்தி பெற்ற ரிஷிகள்கீழ் வருணத்தில் பிறந்து உன்னத நிலையை அடைந்திருக்கின்றனர். ஆரியர் அபிப்பிராயப்படி எந்த வகுப்பும் நிரந்தரமாகத் தாழ்ந்த ஸ்திதியிலேயே இருக்க வேண்டியதில்லை. கல்வியறிவும் பழக்க வழக்கங்களும் இலக்ஷியங்களும் விருத்தியடைந்து ஆரியர் நாகரிகத்தின் நிரந்தரமான மதிப்புக்கிணங்க வரும்போது அவரது நிலையும்மாறும்.

விராத்யஸ்தோம மூலம் நெறி தவறியவர்களும் ஆரியரல்லாதவரும் ஆரியராக மாற்றப்படலாம். ஆனால் வருணாசிரமம் இதற்கு மேற்பட்டது. சமூகமானது பிம்ம, க்ஷத்திரிய, வைசிய சூத்திர என்ற 4 வருணங்களின் ஐக்கிய ஸ்தாபனமாக இருக்கிறது. இது தர்மத்தையே நோக்கமாகக்கொண்டு தர்மத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது. பிறரின்றி நாம் வாழமுடியாது என்ற உண்மையே வருணாச்சிரம முறைக்கு ஆதாரம். இந்த ஒற்றுமை, பிரார்த்தனை, தவம், சேவை அன்பு இவற்றின் மூலம் பெறப்படுகிறது. ஒவ்வொருவரும் மனமுவந்து ஒத்துக்கொள்ளுவதன் மூலமே இந்த ஒற்றுமை ஏற்படுகிறது, மகான்கள் பக்தர்கள். சாதுக்கள் இவர்கள் காலம்முதல் மகாத்மாகாந்தி காலம் வரை இப்படிப்பட்ட ஆர்யதர்மமே நமக்குக் கிடைத்து வருகிறது. ஆர்யவர்த்தத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொள்ள வேண்டுமென்பது இந்த நாகரீகத்தின் முக்யாம்சமாகும். ஆர்யாவர்த்தம் என்பது ஆர்ய தர்மம் அமுலிலுள்ள இடம் என்றே அர்த்தமாகும். மகாத்மா வற்புறுத்தும் சத்தியமும் அஹிம்சையும் நிரந்தரமான செல்வாக்கும் அதிகாரம் ஏற்படும்படி செய்வதற்கான சாதனமாகும் இவை தத்துவங்களாகமிருக்க முடியுமேயன்றி முறையாக இருக்கமுடியாது. இவற்றின் மூலம் காந்திஜீ ஆர்ய நாகரீகத்தின் அடிப்படையான மகத்துவத்தின் ஹேதுவையும் திறமையையும் அதிகரித்திருக்கிறார்.

சு. மி.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்

பகுதான்யஸு தை-மீ 13உ

## நமது ஸ்திரீகளுக்கு ஓர் நல்லுபதேசம்.

நெல்லூரிலுள்ள ஆஸ்திக ஹிந்து ஸ்திரீகள் ஜகத்குரு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுக்கு பிக்ஷை செய்துவைத்து உபசரித்தனர். அச்சமயம் ஸ்ரீ ஸ்வாமிகள் நமது ஹிந்து ஸ்திரீகளின் தர்மத்தையும், கடமையையும் பற்றி மிகத் தெளிவாயும், உறுதியாயும் வற்புறுத்தி உபதேசித்திருப்பது யாவராலும் மதிக்கத் தக்கதாயிருக்கிறது. நவீன நாகரீக இயக்கங்களில் சிக்குண்டு வழிதெரியாமல் தவிக்கும் பலர் தெரிந்தோ, தெரியாமலோ நமது ஸ்திரீகளை தப்புவழியில் இறக்கிவிடப் பாடுபடுவது பிரஸித்தமானது. ஸ்திரீகளின் முன்னேற்றத்தைப்பற்றிக் குழப்பமானதும், நிலையற்றதும், முரண்பட்டதுமான பற்பலவித பிரசாரங்கள் நடக்குமிக்காலத்தில், ஸ்திரீகளின் உண்மையான முன்னேற்றத்திற்கும், கௌரவத்திற்கும் ஏற்றதான வழியென்னவென்பதை, சாஸ்திர ப்ரக்ஞையுடனும் உலக அநுபவத்துடனும், தீர்க்க திருஷ்டியுடனும் காருண்யத்துடனும் ஸ்திரீகளுக்கு எடுத்துச்சொல்லவேண்டிய அவஸர ஸந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய உபதேசத்தைச் செய்ய மிகுந்த பொறுப்பும், பாத்யமும், சிரத்தையும் தகுதியும் நமது மதாசாரியர்களுக்கு இருப்பது போல் வேறு எவருக்கும் இல்லையென்பது நிச்சயமே. பொதுஜனங்களுக்குத் தகுதியான வழியைக்காட்ட சீர்திருத்தக்காரர்களும், பத்திரிகைகளும்தான் பாத்யமுள்ளவையென்பதும், இவர்களுடைய அபிப்பிராயமேதான் நன்மை பயக்கூடியதென்பதும் எந்த விவேகியாலும் எச்சமயத்திலும் ஏற்கத்தக்கதில்லை. ஆகவே நமது ஸ்திரீகளின் கடமைகளைப்பற்றி ஸ்ரீ ஸ்வாமிகள் வெளியிட்டுள்ள அபிப்பிராயங்களே, நமது சாஸ்திரங்களுடையவும், முன்னோர்களான மஹர்ஷிகளுடையவும், பூர்வாசார்யர்களுடையவும், ஆஸ்திக ஜன ஸமூஹத்திலுடையவும், உறுதியான, க்ஷேமகரமான அபிப்பிராயங்களென்று ஒவ்வொருவரும் நினைக்கத் தடையில்லை.

ஸ்திரீகள் முன்னேற்றத்தைப்பற்றியும், படிப்பைப்பற்றியும் தாறுமாறான அபிப்பிராயங்கள் வெளிவந்துகொண்டிருந்தபோதிலும் ஸ்ரீ ஸ்வாமிகள் உறுதியான வழியென்னவென்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார்கள். நமது ஸ்திரீகள் நவீன முன்னேற்ற நோக்கங்கொண்ட இயக்கங்களில் கலக்கக்கூடாதென்றும், ஹிந்துக்களின் தர்மங்களையும், ஆசாரங்களையும் பாதுகாப்பதில் நமது ஸ்திரீகள் விசேஷமாக சிரத்தை வைக்கவேண்டுமென்றும் ஸ்ரீ ஸ்வாமிகள் குறிப்பாக உபதேசிக்கிறார்கள். மேலும், நமது பெண் குழந்தைகளுக்குத் தற்கால நவீனக் கல்வியானது ஏற்றதல்லவென்றும், ஆதலால் அந்த கல்வியை ஸ்திரீகள் விலக்கிவிடவேண்டுமென்றும், நவீனக் கல்வியில் பழக்கமுள்ள ஸ்திரீகள் ஹிந்து தர்மங்களையும், ஆசாரங்களையும் லக்ஷியம் செய்வதில்லையென்றும், நமது ஆசாரங்கள் ஹிந்து ஸமூஹத்தின் புத்திமேன்மைக்கு ஸாதகமாயிருப்பதுடன், மதம் வேதாந்தம் போன்ற உயர்ந்த தத்வங்களுக்கும் ஓர் சின்னமாக இருப்பதாயும் ஸ்ரீ ஸ்வாமிகள் குறிப்பிடுகிறார்கள். தவிர, ஹிந்து மதமானது கேவலம் பக்திமார்க்கத்தைத் தெரிவிப்பதுடன் நிற்கவில்லையென்றும், மனித ஸமூஹத்திற்கும், கடவுளுக்கும் செய்யவேண்டிய கடமைகளையும் அது கூறுவதுடன், உலக க்ஷேமத்திற்கு காரணமாயுள்ள தேவதைகளுக்கான பற்பல கர்மாக்களையும் சொல்லுகிறதென்றும் இந்த கர்மாக்களை அநுஷ்டிப்பதன்மூலம் உலகக்ஷேமத்தை விருத்திசெய்யமுடியுமென்றும் ஸ்ரீ ஸ்வாமிகள் கூறியுள்ளதின் ரஹஸ்யத்தை நன்கு கவனிக்கவேண்டும். முக்யமாக நமது ஸமூஹத்தின் பரிசுத்தியானது ஸ்திரீகளையே பொறுத்ததென்றும், கலப்பில்லாததும், பரிசுத்தமுமான ஸந்ததிகள் இருந்தால்தான் பிதிரு தேவாதிகளுக்கு திருப்தியைக்கொடுக்கக்கூடியதும், உலக க்ஷேமத்திற்கு ஆதாரமுமான கர்மாக்களைச் செய்யமுடியுமென்றும், ஸ்திரீகள் பதிவ்ரதா தர்மமூலமாகவே மேற்படி பரிசுத்தியை ஸ்தாபிக்க முடியுமென்றும் ஸ்ரீ ஸ்வாமிகள் கடைசியாக உபதேசிக்கிறார்கள்.

மேற்கண்ட ஒவ்வொரு வார்த்தைகளிலும் அபிப்பிராயத்திலும், ஆழ்ந்துள்ள ஆச்சரியகரமான தத்வங்களையும் அநுபவங்களையும் புத்திமான்கள் நன்கு ஆலோசிக்கக்கடவர். முக்கியமாக நமது ஸ்திரீகளுக்கு நவீனக்கல்வி அநாவச்யகமென்று ஸ்ரீஸ்வாமிகள் குறிப்பிடிருப்பது தற்கால மேதாவிகள் யாவராலும் நன்கு கவனிக்கத்தக்க அம்சமாகும். படிப்புக்கு படிப்பே பலனா, அல்லது அதனால் அடையக்கூடிய வேறு பலன் இருக்கிறதா என்பதைப்பற்றி நவீனர்களுக்குள்ளேயே இன்னும் சர்ச்சைமுடிந்து நிர்ணயம் ஏற்பட்டபாடில்லை. எது எப்படியாயினும், படிப்பினால் வேறு நல்ல பலன் ஏற்பட வேண்டுமென்ற கொள்கையுடன் நாம் விஷயத்தைப் பராமர்சித்தால், அந்தப்பலனைப் படிப்பில்லாமலேயே பெறக்கூடுமென்பது நமது அநுபவத்தில் தெரிந்த விஷயம். ஸ்திரீகள் படிப்பதினால் உத்யோகம் முதலிய லௌகிக பிரயோஜனம் முக்கியமாகக்கருதப்பட நியாயமில்லை. நம்தேச நிலைக்கு அது ஏற்றதுமல்ல. ஆதலால், குடும்ப ரக்ஷணம், ஸன்மார்க்கம், விவேகம், போன்ற அநேகப்ரயோஜனங்களை ஸ்திரீகள் கல்வி கற்பதன் பலனாக நினைக்க வேண்டும். ஆனால் மேற்கண்ட நற்குணங்கள் படிப்பினால் தான் ஏற்பட வேண்டுமென்று சொல்ல நியாயமில்லை. படித்தவர்களை விட படிக்காதவர்களிலேயே பெரும்பாலோர் விவேகிகளாயும் பணக்காரர்களாயும் புத்திமான்களாயுமிருப்பதைப் பார்க்கிறோம். பெரியோர்களிடம் பழக்கத்தினாலும், அநுபவத்தினாலும், ஜந்மாந்திர வாஸனையாலும், படிப்பில்லாமலே மேற்கண்ட நற்குணங்கள் நிரம்பியவர்களைக்கணக்கில்லாமல் பார்க்கிறோம்.

அதனால்தான் நமது ரிஷிகளும், ஸ்திரீகளுக்கு குருகுலவாஸமிருந்து வித்யை கற்க வேண்டியதவச்யமில்லையென்றும், பர்த்தாவுடன் சேர்ந்து பழகிவருவதே குருகுலவாஸத்திற்கு ஸமமானதென்றும் விதித்தார்கள். இதன் உள்நோக்கத்தை கவனித்தால் படிப்பினாலேயேதான் நற்குணம் ஏற்படவேண்டுமென்ற நியமமில்லையெனத் தெரிகிறது. இந்த நிலைமையில் மேற்படி நற்குணங்களை அடைய நவீனக்கல்வியில் நமது ஸ்திரீகள் ஈடுபடவேண்டிய அவச்யமில்லையல்லவா? அக்கல்வி விபரீதபலனைக்கொடுத்துவருவதும் ப்ரத்யக்ஷமாயிருக்கிறதன்றோ? ஆதலால் நவீனக்கல்வியிலிருந்து நமது ஸ்திரீகள் விலகிநிற்கவேண்டுமென்பதும், அது நமது ஆசாரத்தை நாசமாக்குகிறதென்றும் ஸ்ரீ ஸ்வாமிகள் கூறியது முற்றிலும் அநுபவத்திற்கு ஏற்றதாயிருப்பதை கவனிக்கவேண்டியது அவச்யம்.

## குறிப்பு.

### அம்மை குத்தலுக்கு விலக்கு.

சென்னை சட்டஸபையில் பொது ஸுகாதார மசோதா நிறைவேறி விட்டது. அதில் கட்டாய அம்மை குத்தல் பிரிவுக்கு ஓர் முக்யமான திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. மத தர்மத்தையும், மனச்சாக்ஷியை மதித்து அம்மைகுத்திக்கொள்ள இஷ்டப்படாதவர்களை அதிலிருந்து விலக்கிவிட ஓர் பிரிவை கவர்ன்மெண்டார் சேர்க்க இணங்கியிருக்கிறார்கள். அம்மை வைத்துக்கொள்ள இஷ்டப்படாதவர்கள் ஸ்தல மாஜிஸ்ரேட்டிடம் மனுசெய்துகொண்டு தம்மை விலக்கிவிடவேண்டுமென்று கேட்கலாம். மாஜிஸ்ட்ரேட் கூறும் நிபந்தனைக்கு உட்படுவதாக ஒப்புக்கொண்டால் அவர் விலக்கு அளிக்கலாமென்பதே மேற்படித் திருத்தமாகும். அம்மை குத்திக்கொள்வதைப்பற்றிக் கட்டாயப்படுத்தக் கூடாதென்று பலர் வாதித்து வருவது நெடுநாளாக நடந்துவரும் கிளர்ச்சி. அம்மை குத்தும் வழக்கம் நம் தேசத்தில் வியாபகமடைந்தபிறகு, சில வைத்ய நிபுணர்கள் நமது ஆயுர்வேதாதி சாஸ்திரங்களிலும் இதற்கு ஆதாரமிருப்பதாகக்காட்ட முன்வந்திருப்பதை நாம் அறிவோம். ஆயினும் தற்கால அரசாங்கத்தார் அனுஸரிக்கும் முறையும், நமது சாஸ்திரமுறையும் ஒன்றா என்பதைப்பற்றி விமர்சிக்கவேண்டும். தற்போது அநுஷ்டிக்கப்படும் முறையானது பலருக்கு அருவருப்பைக் கொடுப்பதாயும் பிரயோஜனமற்றதாயும், சில ஸமயங்களில் விபரீத பலன் கொடுப்பதாயும் இருந்து வருவது பிரஸித்தம். அதனால் அநேகவிடங்களில் கட்டாய அம்மைகுத்தலுக்குத் தீவ்ர எதிர்ப்பு இருந்துவந்தது. பாலக்காடு முதலிய விடங்களில் இதை எதிர்த்து கோர்ட் வியவஹாரங்களும் தண்டனைகளும் நடந்தது பலருக்கு ஞாபகமிருக்கும்.

பொது ஸுகாதார மசோதா வெளிவந்தவுடன் கட்டாய அம்மைகுத்தும் பிரிவு முன்னைவிட இன்னும் கடுமையாயிருப்பதாக எங்கும் புகார் ஏற்பட்டது, பலவிடங்களில் கண்டனக் கூட்டங்களும் நடைபெற்றன: இந்தக் கிளர்ச்சியை மதித்து நமது காங்கிரஸ் ஸர்க்கார் இணக்கம்காட்டியிருப்பது விசேஷமாகும். எதையும் அலக்ஷ்யபாவனையுடன் கவனிக்கும் ஸ்வபாவமுள்ளதாக நினைக்கப்படும் மந்திரிஸபைகூட இவ்விஷயத்தில் சிறிதாவது ஆஸ்திகர்களின் விருப்பத்திற்குச் செவிசாய்த்தது ஸந்தோஷிக்கக் கூடியதே.

ஆயினும், இப்போது செய்துள்ள திருத்தத்தால் விசேஷ பலன் ஏற்படுமென்று நினைக்க நியாயமில்லை. அம்மை குத்திக்கொள்ள இஷ்டமில்லாதவர் மாஜிஸ்ட்ரேட் முன் மனுக்கொடுக்க வேண்டும். இது விசாரணையாக வேண்டும். இந்த விஷயமெல்லாம் சிரம ஸாத்யமாயும், காலஹரணம் ஏற்படக்கூடியதாயும் இருக்கிறது. மேலும் மாஜிஸ்ட்ரேட் நிபந்தனை விதிப்பாராம். அது எத்தகையதென்பது தெரியவில்லை. மாஜிஸ்ட்ரேட் நிபந்தனை எந்த ரூபத்திலிருக்குமென்பதை மந்திரிகள் விளக்கவில்லை. ஆதலால் திருத்தம் செய்யப் பட்டிருந்தும் அதன் பயனை அடைவதற்கு விசேஷ சிரமமேற்படக் கூடியதாய் இருக்கிறது.

மேலும் பள்ளிக்கூடத்தில் சேரு முன் பிள்ளைக்ளுக்குக் கட்டாயமாக அம்மை வைக்கவேண்டியிருக்கிறது. அதற்கு எவ்வித விலக்கும் ஏற்படாததால் மேற்படி திருத்தம் செய்யப்பட்டும் எவ்வித லாபமுமில்லை. கடுமையான நிபந்தனைக்குள்பட்ட இந்த திருத்தத்தை செய்யாமலிருந்திருக்கலாம். சுலபமான வழியில் ஜனங்களுக்கு ஸௌகர்யம் ஏற்படுத்திக் கொடுக்காத வரையில் இந்த திருத்தத்தால் நன்மை ஏற்பட வழியில்லை.

இது நிற்க பொது சுகாதார மசோதாவில் சிற்சில சிறிய விஷயங்கள் திருத்தப்பட்டனவாயினும், நமது ஸனாதன தர்மத் தலைவர்கள் எடுத்துக்காட்டிய மத ஸமூஹ ஸம்பந்தமான பல ஆக்ஷேபங்களுக்கு எவ்வித பரிஹாரமும் செய்யப்படாததுமிகவும் கண்டிக்கத்தக்கது.

### காங்கிரஸ் தலைவர் போட்டி தகாறு.

#### ஸுபாஷ்போஸ் மீது கண்டனம்.

திரிபுரா காங்கிரஸுக்குத் தலைவர் தேர்ந்தெடுப்பதைப்பற்றி காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளேயே சச்சரவு ஏற்பட்டிருக்கிறது. மௌலானா அஸாத், டாக்டர் பட்டாபி ஸ்ரீமான் ஸுபாஸ்போஸ் ஆகிய 3 பேர்களும் அபேக்ஷகர்களாக நின்றனர். மௌலானா அஸாத் விலகி விட்டார். பட்டாபிக்கு ஸ்தானம் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அப்படிச்செய்தார்.

ஸ்ரீமான் ஸுபாஷ்போஸ் தாம் விலகப்போவதில்லையென்றும் காங்கிரஸ் வோட்டர்கள் எப்படி முடிவு செய்கிறார்களோ அப்படியே தாம் நடக்கப்போவதாயும் கூறியதுடன் மீண்டும் தாமே தலைவர் பதவிக்கு வர வேண்டிய அவச்யமிருப்பது போலவும் எழுதியிருந்தார்.

இதைக்கண்டு ஸர்தார் படேல், புலாபாய் தேசாய், ராஜேந்திரபாபு, கிருபாலினி, முதலிய காங்கிரஸ் கார்யக்கமிட்டி மெம்பர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டு, ஸ்ரீமான் போஸ் கூறிய வாதங்களைக்கண்டித்தும், விசேஷ நிலைமை ஏற்படாத வரையில் ஒருவரே காங்கிரஸ்தலைவராக வரக்கூடாதென்றும், பட்டாபிக்காக போஸ் விட்டுக்கொடுத்து விலகுவதே நியாயமென்றும் காங்கிரஸின் பின் காலக் கொள்கையைப்பற்றி ஸ்ரீமான் போஸ் இப்போது பேச எவ்வித அதிகாரமுமில்லையென்றும் ஆகையால் ஸ்ரீமான் பட்டாபி ஸீதாராமய்யாவையே தலைவராக தேர்ந்தெடுக்கும்படியும் ஸர்தார் படேல் முதலியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இந்தத்தகாறு முற்றுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீமான் போஸ் தாமே மறுபடியும் தலைவராக வர முயற்சிப்பது பற்றி பெரிய காங்கிரஸ் தலைவர்களிடையிலேயே பலமான வெறுப்பு ஏற்பட்டிருப்பது பஹிரங்கமாகி விட்டதால், ஸ்ரீமான் போஸும் அவர் தலைமையிலுள்ள வங்காள காங்கிரஸ்காரர்களும் காங்கிரஸ்ஸை விட்டுப் பிரிந்து போகக்கூடுமென்றும் நினைக்கப்படுகிறது.

## சேங்காலிபுறம். ஸ்ரீ முத்தண்ணவாள் ஆராதனை மகோத்ஸவம்.

### ஸநாதன மகாநாடு.

பகுதான்ய-ஸு தை-மீ 3உ மேற்படி உத்ஸவம் வழக்கம்போல் பெரியவாள் செய்துவந்தபடி வைதீகதர்ம சம்ரக்ஷக, ப்ரவசனதுரீண பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதாவர்கள் ரொம்பவும் நன்றாக நடத்தினார்கள். பிரதிதினமும் இரண்டு வேதபாராயணமும் காவடிகட்டி ஸமாதிக்கு அபிஷேகமும் பிராம்மண சமாராதனமும் நடந்தது. ஷை உத்ஸவத்தில் 4 தினங்கள் ஸநாதன தர்ம மகாநாடு ரொம்பவும் விமரிசையாக நடைபெற்றது. ஷை மகாநாட்டிற்கு கிராமத்தாரின் ப்ரார்த்தனையின் பேரிலும், தீக்ஷிதாவர்கள் வேண்டுகோளின்பேரிலும் ப்ரம்மவித்துக்களும் பரமஹம்ஸ பிக்ஷு சன்யாசியுமான ஸ்ரீ ஆனந்தகிரிஸ்வாமிகளவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள் ப்ரம்மஸ்ரீ பிரஸங்கபாநு வைத்தினாத சாஸ்திரிகளவர்களும், ப்ரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதாவர்களும், ப்ரம்மஸ்ரீ நாராயண தீக்ஷிதாவர்களும், ப்ரம்மஸ்ரீ அய்யாதீக்ஷிதாவர்களும், ப்ரம்மஸ்ரீ கொடுமுடி ராஜகோபால சாஸ்திரிகளவர்களும், ப்ரம்மஸ்ரீ அப்பாசாமி சாஸ்திரிகளவர்களும், பிரம்மஸ்ரீ சாக்ராயண சாஸ்திரிகளவர்களும் (குடவாசல் ஹைஸ்கூல் சமஸ்கிருத பண்டிட்) பேசினார்கள், கடைசி தினத்தில் ப்ரம்மஸ்ரீ அனந்தராமதீக்ஷிதாவர்கள் "துருவ சரித்திரம்" சொல்லி பரிஸமாப்தி செய்தார்கள்.

மஹாதானபுரத்தில் வசிப்பவர்களும் ரிடையர்ட் டிஸ்டிரிக்ட்போர்ட் இஞ்சினியரவர்களும் பாஷ்யம் முதலிய கிரந்தங்களை ஸேவித்து வருகிறவர்களும், அனந்தராம தீக்ஷிதாவர்களுக்கு சம்பந்தியுமான மகா-ா-ஸ்ரீ M. K. துரைசாமி அய்யாவர்களின் மூத்த குமாரர் மகா-ா-ஸ்ரீ கிட்டப்பா அய்யர் கோட்டுவாத்திய கச்சேரியை காதுக்கு இனிமையாகவும் ஜனங்களுடைய மனமுருகும்படிக்கும் நடத்தினார்கள். ஏராளமான ஜனங்கள் பிரதிதினமும் கூடியிருந்ததுபோல் ஷை கச்சேரிக்கும் கூடியிருந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் பிரசங்கஞ்செய்த வைபவத்தை பத்திரிகையிலெழுதவும் முடியுமோ? ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திராளின் அவதாரமென்றே எல்லா ஜனங்களும் கூறினார்கள். ஷை மகாநாட்டிற்குப் பக்கத்துக் கிராமங்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் 4 தினங்களிலும் வந்து கொண்டாடத்தகுந்தது. ஒவ்வொரு வித்வான்களும் ஆலயப்ரவேசம், சாரதாசட்டம், புனர்விவாஹம் முதலிய அதர்மமான மசோதாக்களை கண்டித்து மிக உருக்கமாக பேசினார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளின் அனுக்ரஹத்தினால் நடந்துவரும் வைதிகதர்ம சங்கத்தின் கிளையாக கிராமசங்கமொன்று இவ்வூரில் ஸ்தாபிப்பதற்காக ஏராளமான அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டார்கள். ஷை கிராம சங்கம் கூடிய சிக்கிரம் அதன் ஆதாவில் ஒரு நியம அத்யயன பாடசாலை ஆரம்பிக்கப்படுமென்று தெரிகிறது. ப்ரம்மஸ்ரீ நாராயண வாஜபேயாள் முதலிய ஒவ்வொரு ஆஹிதாக்னிகளுடைய கிருஹத்திற்கும் ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் சென்று அக்நிஹோத்ர தரிசனம்செய்து ஆனந்தப்பட்டது மிகவும் குறிப்பிடத்தகுந்தது.

ஸ்ரீ பரமஹம்ஸ பிக்ஷு ஸன்யாசிகளான ஆனந்தகிரிஸ்வாமிகள் அக்கிராசன ப்ரசங்கத்தில் பேசியதின் சாராமானது பிறகு வெளியாகும்.

நமது நிருபர்.



## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா.)

மந்திரியின் தந்திரம்! ஆலயப்ரவேச விஷயத்தில் தான் செய்த தந்திரத்தை சென்னை முதன் மந்திரி சென்ற வாரம் கக்கி விட்டார்! ஜனங்களை கேட்டுக்கொண்டே விடுவதால் மதத்தில் தலையிடுவதாகாதென்றார். தன் ஆள் பலத்தைக்கொண்டு நிர்ப்பந்தம் செய்யாதது போல் கூறுவது தந்திரமே!

இடமளிக்கலாமா? ஆலயத்தையும் தர்மத்தையுமழிக்க கலி நால்வகைச்சேனையுடன் வர சிவ விஷ்ணு ஆலயங்களில் தம்தம் காமக்ரோதங்களை ஸம்ப்ரதாய பேதம் மரியாதைத்தகரார் என்ற பெயர்களால் சிலர் பிறர் நகைக்கவும் உள்ளே புகவுமிடமளிப்பது அழகாமா? நமக்குள்ளே தீர்த்துக்கொள்ளலாகாதா?

கேரளத்தில் ஹிட்லரா? இவரியக்கத்தின் சின்னங்களான ஸ்வஸ்திக் முத்ரை முதலியவைகளுடன் அவர் படமும் உள்ள விளம்பரம் கோள காங்க்ரஸ் கட்டிட சுவற்றில் ஒட்டப்பட்டதாம்.

கோயிலைக்கண் காக்ஷியாக்காதீர்!! ஸ்ரீரங்கம் ஆலய அதிகாரிகள் ஸ்ரீரங்கனது வாஹனங்களையும் திவ்யாபரணங்களையும் ஸமீபத்தில் வைச்ராய் மனைவிக்கு காட்டினாராம்! இதனால் அதிகாரிகளடையும் நன்மை யாது? பக்தருக்கன்றோ கொயில்!

இஃதோ நல்லாக்ஷி? கொண்டா என்றவிடத்தே ஓர் பிராமணர் உடை உணவின்றி பலரை யாசித்தும் பயனின்றி தான் உயிருடன் சிதையில் படுத்துத் தீயிட்டுக்கொண்டனராம்! தேசிய மந்திரி முதல் வேலை இத்தகையபட்னி நிவாரணமன்றோ?

விபரீத உபதேசம்! தர்மத்திற்கும் ஞானத்திற்கும் பிறப்பிடம் பாரத நாடென பலர் புகழ தஞ்சையில் அனாதை விடுதியைத்திறந்தகலெக்டர் மேனாட்டாரை தர்மத்தில் நாம் பின்பற்ற வேண்டு மென கூறுகிறார்!

பலியில்லையேல் பொங்கலில்லை! புதுப் போலி ஜீவகாருண்ய கோஷ்டிகள் திருநெல்வேலியில் ஓர் அம்மன் கோவிலில் பலியைத் தடுத்தகாலத்திலே பூஜைக்கு வந்தவர் பொங்கலும் வேண்டாமென சென்றார்!

### கேரளத்தில் தர்மப்பிரசாரம்.

#### ஸ்ரீ. நடேசய்யரின் சுற்றுப்பிரயாணம் "தார்மசக்ரவர்த்தி" பதக்கம் வழங்கல்.

1939ஸு ஜனவரி 30உ எர்ணுகுளத்தில் நடக்கப்போகும் கார்னேஷன் தர்பாருக்கு ராவ்சாகிப் நடேசய்யர் அவர்களுக்கும் டி. எஸ். ராமச்சந்திர அய்யர் அவர்களுக்கும் கொச்சின் தர்பாரிலிருந்து அழைப்பு வந்திருப்பதால், அவர்கள் 29உ மதுரையிலிருந்து காரில் புறப்பட்டு போவார்கள் என்று தெரிகிறது. போகும் மார்க்கத்தில், பாலக்காடு, குருவாயூர், கள்ளிக்கோட்டை முதலான இடங்களில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கி தர்மப்பிரசாரம் செய்வார்கள்.

மேலும் போன வருஷம் வித்வத் பரிஷத்தில் தலைமை வகித்த மேலகோட் ஸ்வாமிகளும் அவர்களுடன் எர்ணுகுளம் போவார்களென்று தெரிகிறது. அவர்கள் "தார்மிக சக்ரவர்த்தி" பதக்கத்தை மஹாராஜாவுக்கு அளிப்பார்கள்.

நமது நிருபர்.

### ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

Nellore.

## TEMPLE ENTRY.

From the large volume of literature that is now appearing on the question of Temple Entry, one thing is clear. The advocates of Temple Entry rely solely on the equality of rights of the citizen to enter the Public Temples and that it is a matter for legislation. The so- called equality without any discrimination has never been there in any country. Nor can it ever be equal.

The right of Temple-entry depends on the eligibility of the individual to so enter. This eligibility is also determined by certain rules of discipline enjoined by the Hindu Law and propounders of Hindu Dharma. Hence equality of right, irrespective of eligibility, and in defiance of rules of discipline, is sure to prove self destructive. The very objects of the Temples, are sure to be defeated, if there should be a breach of discipline in regulating the entry into them. Discipline, is no less necessary for an Institution like the Temple, than for the individual, for progress and realisation of the goal.

Hindu civilisation, has, for its foundation the belief in God . Love of God. Neither Karma nor Jnana(or intelligence)can achieve divine bliss, without love of God known as Bhakti.

This Bhakti cult has been preached by all the Rishis and Vedas. It is not a matter that can be reached by one step. Prahlada says that it consists of 9 steps.

श्रवणं कीर्तनं विष्णोः स्मरणं पादसेवनं ।
अर्चनं वन्दनं दास्यं सख्य आत्मनिवेदनं ॥

1. Hearing stories of God; 2. Singing his stories; 3. Recapitulating His acts; 4. Looking at his feet; 5. Doing Pooja; 6. Bowing to him; 7, Service to Him; 8. Looking at Him as his friend; 9. Sacrificing himself unto Him; are the Nine steps of the ladder, to reach the goal of dedicating one's body and soul to him and thereby feel one with Him.

Of these, the first 4 steps are better achieved outside the precincts of the Temple, than inside it. In fact, it is part of the duty of the Temples, to provide all the facilities for those that happen to stay in the first 4 steps, by organising Kalakshepams, lectures, Bhajanas etc., around the Temple precincts. The next 3 steps, have to be carried on with the Temples, but not near the Sanctum Sanctorum. Those that are in these steps, are allowed entry. The eighth step is given access nearer the Sanctum Sanctorum, while the last and Ninth step is identified with Him.

Temples are those institutions built for the development of the Bhakti cult, not for any section of the population but for all people. The object of the Institution can be best achieved only by some discipline and that discipline is the root cause of the existing practice of keeping the Avarnas outside the Temple.

The Avarna's happen to occupy the zone or the first 4 steps in the Bhakti cult, which under the discipline, are denied entry into the Temple. Such a denial is not only beneficial to themselves but to the other sections of the public, that get into the temple otherwise, promiscuous entry of all grades of men into the temple is suicidal of the very objects of the Institution. Institutions like individuals thrive only by discipline however unpalatable it be.

Treasuries, a colleges and Hospitals are all public buildings, intended for the benefit of the public. But it does not necessarily mean that they can be thrown open to all the public, without any restriction or reservation. Can a boy of 15 be allowed to sit in a Law College with the Law graduates? Will he be allowed entry into the lecture Hall? Will the Government allow a large gathering of the people around the Treasuries? Is any individual, other than the officer in charge of it, allowed entry into the Treasury? In fact money is paid out through the counter gates or window.

How is the Temple building distinguished from the other building? It is perhaps the dynamic force, which one feels in the Temple, that demands the enforcement of discipline in the matter of access into it. Discrimination in allowing entry is necessary. They are not museums in exhibition grounds.

Such discrimination in allowing or deny ing entry into the Temple, can never be exercised by a Legislature. It can never be within the scope of any Legislature to declare equality of rights in matters relating to temperament, intelligence, character and Bhakti. The eligibility of any individual to enter a Temple, depends on the grades of Bhakti on which he stands, apart from other considerations. It is not the Legislature nor it is the remaining section of the public that is competent to Judge it. Who is to Judge this? It is only those that are entrusted with this duty, that can and ought to Judge it. Who are they? It is our Matathipathis. They alone are the exponents of our Dharma and conduct.

In matters like Temple entry, it is the verdict of our Matathipathies that must prevail over any other opinion. Such a step has not only been not followed but a law contrary to their verdict has been passed. Such legislation is a flagrent breach of discipline, not merely for the insitution but also for the individuals, calculated to destroy the very purpose of the institutions of Temples.

If only those that founded the Temples were alive to day, what would be their feelings? Is it not the duty of any Government to respect the wishes of those founders of temples and carry out *their* purpose? Is not the present legislation, a breach of Trust?

Radhakrishnan

## கொன்றைவேந்தன்.

(by T. S. Vaidyanatha Sastrigal)

(12—1—39 வாரத்தொடர்ச்சி).

33 சேமம்புகினும் சாமத்துறங்கு.
34 ஐயொத்திருந்தால் ஐயமிட்டுண்.
35 சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்.
36 சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்.

रक्षायामपि यामं सुप्यात्
सति विभवे भुञ्जरिन् दत्वा ।
धनिकस्य फलेत् धर्मः कामः
त्रिकरणशुद्धौ बहुधनलाभः
तन्द्रालुश्चेचरति दारिद्रः ॥

Sleep for a while though you may be a guard.

If your purse permits give alms and then eat.

The path of Dharma and Kama, becomes easily accessible to the wealthy man or Purity in thought, deed and word, acquires plenty of wealth.

The idlers become emaciated with Poverty.

37 தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை.
38 தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.
39 திரை கடலோடி யுந்திரவியம் தேடு.
40 தீராக் கோபம் போரா முடியும்.

पितृवचना न्नहि महदिह मन्त्रं
मातुर्नान्यत्परममुपास्यं ।
तीर्त्वा सागरमपि चिनु वित्तं
निगृहीते हि न कोपे युद्धं ॥

No other mantra is more effective than the father's words.

No other worship is more beneficial than the worship of mother.

Earn wealth, even by crossing the roaming Ocean.

Uncontrolled anger leads to fight.

41 துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு.
42 தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்,
43 தெய்வம் சீறின் கைதவமாளும்.
44 தேடாதழிக்கின் பாடா முடியும்.

पतिदुःखसहा क्रोडे वह्निः
पतिदोषैकदृगबला मृत्युः ।
प्रतिकूल विधौ नश्यति सिद्धं
परिणतिदुःखं अनार्जितभुक्तं ॥

The woman, unmoved by the suffering of her husband, is like embracing fire.

That woman, who always finds fault with her husband, is Death-Incarnate.

Even accomplished objects will vanish if Fate is against one.

Enjoyment of an unearned property ultimately leads to misery.

45 தையும் மாசியும் வையகத் துறங்கு
46 தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
47 தோழனோடும் ஏழ்மை பேசேல்
48 நல்லிணக்கமல்லது அல்லற்படுத்தும்

स्वपिहि पलालगृहेऽन्तः शिशिरे
स्तुतिलभ्यान्मधुरं कृषिभुक्तं ।
सुहृदेऽपि न कथनीयं दैन्यं
दुःखकरं स्यात् दुर्जनसख्यं ॥

Sleep within the four walls of a house roofed with straw.

The food earned by cultivation will be sweeter than that of getting without labour simply by praising others.

Don't reveal your poverty even to your friend.

Association with wicked persons causes distress.

49 நாடெங்கும்வாழக் கேடொன்றும் இல்லை
50 நிற்கக் கற்றல் சொற்றிறம்பாமை
51 நீரகம் பொருந்திய ஊரகத்திரு
52 நுண்ணியகருமமும் எண்ணித்துணி

ऋद्धि यदि सर्वत्र न बाधा
स्वात्मधृतौ नाधीतभ्रंशः ।
तीर्थोदकमहिते वस देशे
लघ्वपि कुर्यात् कर्म विमृश्य

Nothing will happen untoward wherever prosperity prevails.

The study becomes correct and perfect if one preserves it always in mind.

Dwell in a fertile land.

Perform an action, even it is trivial, with due consideration.

(தொடரும்)

புதுக்கோட்டை,
A. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் பிரசுரங்கள்.

| | |
|---|---|
| ஸ்ரீ சூக்தபாஷ்யம் | 1 8 0 |
| பதினொரு தில்லை ரஹஸ்யங்கள் ஸாரஸாரம் முதலியன | 2 12 0 |

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்,



### தென்னாற்காடு ஜில்லா

## ஸநாதனதர்ம மஹாநாடு.

வரவேற்புத்தலைவர்
ஸ்ரீமான் தி. ஈ. சடகோபாசாரியாரின் பிரஸங்கம்.

(19—1—39 தொடர்ச்சி)

நடந்து வருகிறது. இப்படியிருக்க ஆலயங்களைக் கெடுக்க வேண்டுமென்கிற எண்ணமிருந்தாலொழிய மற்றப்படி தீண்டாதாரைப் பிரவேசிக்கச் செய்வதால் யாதொரு குறைவும் வராதென்று பேசுவது சாஸ்த்ரத்துக்காவது, யுக்திக்காவது, நியாயத்துக்காவது உண்மைக்காவது இசைந்ததென்று புத்தி ப்ரமயில்லாதவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அப்படி பலாத்காரமாக ப்ரவேசிக்கச் செய்தால் ப்ரவேசிக்கிறவர்களுக்கும், அதைச் செய்விப்பவர்களுக்கும், அநுமோதிப்பவர்களுக்கும், தேசத்துக்கும் அதிகமான க்ஷேமக்குறைவு ஏற்படுமே தவிர வேறில்லை. புதிதாக ஒன்றைச் செய்தோம் என்கிற பெருமை தவிர வேறொரு பயனும் ஏற்படமாட்டாது. தீண்டாதார் இதை வேண்டவில்லை; இதன் உண்மையறிந்தவரும் இதை ஒப்பவில்லை. அப்படிக்கிருக்க இவ்வளவு பிடிவாதத்துடன் இப்பெரிய தவக்குற்றத்தை இவர்கள் செய்யத் துணிவது மிகவும் வருத்தப்படத்தக்கது. ஏதோ தாங்கள் பிடித்த பிடிவாதத்தை நிறைவேற்ற வேணுமென்கிற ஒரே எண்ணமிருப்பதாகத்தோன்றுகிறதே தவிர அக்கார்யத்தின் ஸாதகத்தையாவது பாதகத்தையாவது பராமர்சித்துச் செய்வதாக ஏற்படவில்லை. மகம்மதியர் முதலிய இதர மதங்கள் விஷயத்தில் இவ்விதமாய் மாறுபாடு ஏற்படுத்த நம் அதிகாரிகள் கனவிலும் நினைக்கத் துணிவார்களாவென்று யோசிக்கவேணும். இதற்குக் காரணம் அவர்கள் பயப்படாமல் தங்கள் அபிப்பிராயத்துக்கு விரோதமான கார்யங்களை எதிர்ப்பார்கள் என்கிற பயந்தான். ஸநாதன தர்மத்தை அநுஷ்டித்து வரும் நாம் சாந்தியை முக்கியமாகக் கைப்பிடித்து ஸாத்விக மார்க்கத்தில் நடப்பதால் நம் விஷயத்தில் எதையும் பயமின்றிச் செய்யலாம் என்கிற எண்ணமே இவ்வித துணிகரமான அக்ரமங்களுக்கு இடங்கொடுக்கிறது. இது விஷயத்தில் எவ்விதம் தக்க பரிஹாரம் தேடவேண்டுமோ அதையெல்லாம் யோசித்து நிர்ணயம் செய்யும் பொறுப்பு உங்களுடையதாகும்.

நம்முடைய ஸ்த்ரீகளின் தர்மத்தைப் பாதுகார்க்கவேண்டிய அவச்யம் இப்போது நேர்ந்திருக்கிறது என்று முன்பே குறிப்பிட்டேன். அது விஷயத்திலும் கொஞ்சம் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஸ்த்ரீகளுக்கு பாதிவ்ரத்யம் என்பது முக்யமான தர்மமென்பது நமது சாஸ்த்ரங்களில் நிர்ணயிக்கப்பட்ட விஷயம். பாதிவ்ரத்யம் என்பதன் பொருள் வேறு. எந்த மதஸ்தர்களுக்கும் எந்த தேசத்தினருக்கும் பூர்ணமாய் விளங்காது. பத்னீ என்கிற பதத்திற்கே யஞ்ஞத்தில் கூடயிருக்க அதிகாரம் வாய்ந்தவள் என்று பொருள். அதாவது சாஸ்த்ரோக்தமான தர்மங்களை அநுஷ்டிப்பதில் பதியுடன் கூட இருந்து அவனுக்குதவி புரியும் பாத்தியம் உள்ளவளென்பதுதான். இதனால் எல்லா வைதிக கர்மங்களிலும் பதிக்கு பத்னீயில்லாமல் தனிமையில் அதிகாரம் இல்லையென்று ஏற்படுவதால் விவாஹம் என்பது தர்மாநுஷ்டானத்தையே முக்கிய உத்தேசமாக உடையதென்று ஏற்படுகிறது. ஆகையால்தான் பத்னீக்கு ஸஹதர்மசாரிணீ அதாவது பதியுடன் கூட தர்மத்தை அநுஷ்டிப்பவள் என்று பெயர் வாய்ந்திருக்கிறது. ஆகையால் பாதிவ்ரத்யம் என்பது பதியின் வ்ரதத்தையே தன் வ்ரதமாகக் கைக்கொள்வது என்றும், பதியிடம் தன் மனோவாக் காயங்களாகிற திரிகரணங்களையும் செலுத்துவது என்றும் அர்த்தமுள்ளதாகக் கூறப்படுகிறது. ஸ்த்ரீகளைப்பற்றி இவ்வித அபிப்பிராயம் வேறு எந்த தேசத்திலாவது எந்த மதஸ்தர்களிடமாவது இருக்கிறதாவென்பதை யோசிக்கவேண்டும். இவ்வித அபிப்பிராயம் லேசம் கூட நம் வைதிக ஸம்ப்ரதாயஸ்தர்களுக்குத் தவிர வேறொருவருக்கும் இருக்க ஹேதுவில்லையென்பதை உறுதியாய்ச் சொல்லலாம். அப்படிக்கிருக்க அவர்களுடைய நடவடிக்கைகளை உதாஹரணமாக வைத்து நம் ஸ்த்ரீகள் விஷயத்தில் சீர்திருத்தம் செய்யவேணுமென்று நவீன பரிஷ்காரதுரந்தரர்கள் உத்கோஷிப்பது தத்வமறிந்தவர்களுக்கு பரிஹாஸாஸ்பதமேயாகும். இந்த ஸந்தர்ப்பத்தில் ஒரு ஸம்ஸ்க்ருத கவி சொல்லியிருப்பது ஞாபகத்துக்கு வருகிறது. ஒருக்கால் தேவலோகத்திலுள்ள மானஸ ஸரஸ்ஸிலிருந்து ஒரு ஹம்ஸம் பூலோகத்துக்கு வந்தது. அங்கு ஒரு குளக்கரையில் சில கொக்குடன் குப்பலாய் நண்டு பிடிக்க உட்கார்ந்திருந்தன. அவைகள் தன் இனம்போலிருந்ததைக்கண்டு ஸமீபித்தபோது அவைகள் ஹம்ஸத்தைப் பார்த்து நீ யார் எங்கிருந்து வருகிறாய் உன் தேசத்தில் என்ன வஸ்துக்கள் உண்டென்று கேட்க ஹம்ஸம் தன் பெயரைச் சொல்லித் தான் மானஸ ஸரஸிலிருந்து வருவதாகவும் அதன் கரைகளில் நவரத்னங்கள் இழைக்கப்பட்டிருக்கிறது, அமிருதத்துக் கொப்பான ஜலம் அதில் இருக்கிறதென்று சொல்லிற்று. பிறகு அங்கு நண்டுகள் உண்டாவென்று கொக்குகள் கேட்டன. இல்லையென்று ஹம்ஸம் பதில்சொல்லவே எல்லா கொக்குகளும் குப்பலாய் ஹீஹீ என்று சிரித்து இவ்வளவுதானா ப்ரயோஜனமில்லையென்று பரிஹாஸம் செய்துவிட்டதாமென்று அந்தக் கவி அந்யோபதேசமாய் சொல்லியிருக்கிறார். அது இங்கு நம் தேசத்து ஸத்ரீகளுக்கு ஸ்வாதந்த்ர்யம் இல்லையென்று பரிஹஸிக்கும் மேல் நாட்டார் விஷயத்திலும் அவர்களை அடியொற்றி நடக்கும் நம் புது நாகரீகக்காரருக்கும் பொருத்தமாயிருக்குமென்று தோன்றுகிறது.

ஸ்த்ரீகள் ரத்னம் மாதிரி ரக்ஷிக்கத் தகுந்தவர்கள் என்றும் வீட்டுக்கு அவர்கள் தீபம்போல் சோபையைத் தருகிறார்கள் என்றும் நமது கொள்கை. அப்படிக்கில்லாமல் அவர்கள் புருஷர்களுடன் வயிற்றுப் பிழைப்புக்குப் போட்டிபோட்டுத் தொழில் செய்யவேண்டுமென்றும் அவர்கள் புருஷர்களைப்போல் ஸ்வதந்த்ரமாகவும் யதேச்சையாயும் வெளியில் ஸஞ்சாரம் செய்யவும் ஸகல நடவடிக்கைகளும் புருஷ ஸஹாயமின்றியே செய்யவும் வேண்டுமென்றும் அவர்களுக்கு விவாஹம் செய்து கொள்ளும் நிர்ப்பந்தமிருக்கக் கூடாதென்றும் ஸ்த்ரீ புருஷர்கள் நியமமின்றி தோன்றினபடி யெல்லாம் விவஹரிக்கலாமென்றும் இவ்வாறாக பஹுப்ரகாரமாய் இக்காலத்தில் மேல்நாட்டில் வழங்கும் பேச்சும், நடவடிக்கைகளும் நம்நாட்டில் நடையாடச் செய்வதால் நம்முடைய அஸாத்ரணமான குலதனமாகிய ஸ்த்ரீபாதிவ்ரத்யத்தை இழக்கவும் அதனால் நாம் பசு, பக்ஷி முதலிய கீழ்ப்பட்ட ஜந்துக்களைவிட ஹீனமான ஸ்திதியை அடையவுமே ஹேதுவாகும் என்பதை நம்மில் ஒவ்வொரு பகுத்தறிவுள்ள புருஷனும் ஸ்த்ரீயும் கவலையுடன் ஆலோசிக்கவேண்டியது அத்யாவச்யமாகும். ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ரயம் கூடாதென்று நம் தர்ம சாஸ்த்ரத்தில் கூறுவது உண்மையே. இதை ஒரு வ்யாஜமாக வைத்துக்கொண்டு நம் மதத்தையும் ஆசாரத்தையும் தூஷிப்பதே தொழிலாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் நாம் ஸ்த்ரீகளை அடிமைகளாக்கி அவர்களைத் துன்பப்படுத்துகிறோமென்றும் அவர்களுக்கு எல்லா விதத்திலும் ஸ்வாதந்த்ர்யம் கொடுத்தாலொழிய நாம் ஸ்வராஜ்யத்துக்கு அதிகாரிகளாக மாட்டோமென்றும் பலவித கலஹ வார்த்தைகளைச் சொல்லி அதை வேதவாக்யமாய்க் கொண்ட நம் சீர்திருத்தக்காரரும் அதுவே சரியென்று கூச்சல்போட்டு வருகிறார்கள்.

(தொடரும்)

# யோக சாஸ்திர நிருபணம்.

(12—1—39 வாரத்தொடர்ச்சி)

மேலும் அனுஹதசக்காத்திற்கும் மூலாதாரத்திற்கும் மத்தியிலிருக்கும் இடை, பிங்களை, ஸுஷும்னைநாடிகளை கங்கை, யமுனை, ஸரஸ்வதியாக ஷட்சக்கர நிருபணத்தில் சொல்லியிருப்பதால் அந்த இரண்டு சக்கிரங்களிருக்கும் சரீரத்தின் பாகத்தை அந்த நதிகள் ஸங்கமமாகும் சமுத்திரமாகச் சொல்லலாம். இராமாயணத்தில் சொல்லி இருக்கும் மைனுகபர்வதத்தை மணிபூரக சக்கரமாயும், ஸுரஸை என்ற நாகமாதாவை ஸ்வாதிஷ்டான சக்கரமாகவும் சொல்ல இடமிருப்பதாலும் அவை இரண்டுகளும் ஸமுத்திர மத்தியிலிருப்பதாக சொல்லி இருப்பதாலும் அவைகளில் ஹனுமார் தங்கிப்போனுரென்று சொல்லி இருப்பதாலும் மஹேந்திரகிரியை அனுஹத சக்கரமாயும் இலங்கையை மூலாதாரசக்ரமாயும் சொல்ல இடமிருக்கிறது. மேலும் மஹேந்திர கிரியை விட்டு ஹனுமார் புறப்படும்போதும் மறுபடி ஹனுமார் இலங்கையிலிருந்து திரும்பி மகேந்திரகிரிக்கு வந்தபோதும் அவிடத்தில் பெரிய சப்தம் உண்டானதாக இராமாயணத்தில் சொல்லி யிருக்கிறது.

ஹனுமார் மஹேந்தாகிரியை விட்டு புறப்படும் போது அந்த கிரியிலிருக்கும் ஜீவ ஜந்துக்கள் பெரிய சப்தம் செய்ததாயும் ஹனுமார் திரும்பிவரும்போது தானே பெரிய சப்தம் உண்டுபண்ணினதாயும் சொல்லியிருக்கிறது. இதைப்போல ஷட்சக்கர நிருபணத்திலும் ஸஹஸ்ரா சக்காத்திலிருந்து ஸுஷும்ண நாடி மூலம் அனுஹத சக்காத்திற்கு வரும் (Nerve current) சக்தியும் மூலாதாா சக்தியும் அனுஹத சக்காத்தில் ஸந்திப்பதால் எப்போதும் அந்த சக்காத்தில் சப்தம் உண்டாவதாக சொல்லி யிருப்பதும் ஒத்திருப்பதாலும் அனுஹத சக்கரம் மஹேந்திர கிரிதானென்று உறுதியாய்சொல்ல இடமிருக்கிறது. மேலும் ஹனுமார் மஹேந்திரகிரியை விட்டுபுறப்பட்டு இலங்கைக்குப்போகும் போது வழியில் ஸமுத்திரத்தில் ஆழ்ந்திருந்த மைனுக பர்வதமானது ஹனுமாரை உபசரிக்க வெளியே கிளம்பினதாயும் ஹனுமாரை தனது தாழ்வரைகளில் தங்கிப்போகும் படி கேட்டுக்கொண்டபடி அவர் அதை தொட்டுப்போனதாயும் சொல்லி இருக்கிறது. மைனுக பர்வதம் பாதாள லோகத்திற்குப்போகும் வழியை அடைத்துக் கொண்டிருப்பதாகவும் சொல்லி இருக்கிறது. மணிபூரகசக்கரமும் சரீரத்தின் கீழ்பாகத்திற்குப் போகிற வழியாகிற தொப்பிளிலிருப்பதாக ஷட்சக்கா நிருபணத்தில் சொல்லியிருக்கிறது, யோகி நிஷ்டைசெய்கையில்ஒவ்வொரு சக்காத்திலும் வரிசையாக ஸம்யமம் செய்ய வேண்டு மென்று சொல்லி இருக்கிறபடி ஹனுமாராகிற மனதும் மைநாகமாகிற மணிபூரக சக்காத்தை தொட்டு விட்டுப் போனதும் உசிதமாக யிருக்கிறது. அதே விதமாக அடுத்த சக்கரமாகிற ஸ்வாதிஷ்டானமே தான் ஸுரஸாதேவி என்று குறிப்பிட இடமிருக்கிறது. அவள் ஹனுமாரைதன் வாயில்விழுந்து போக வேண்டுமென்று தன் வாயைத்திறந்ததும் அதில் ஹநுமார் புகுந்து காது வழியாக வெளியே போனுரென்றதும் அது ஸ்வாதிஷ்டான சக்கர மென்றும் யோகிகள் அனுஷ்டானப்படி அவள் வாயில் புகுந்ததும் அவிடத்தில் ஸம்யமம் பண்ண தங்கினுரென்றும்காட்ட இடம்கொடுக்கிறது.

ஹனுமார் ஸிம்ஹிகையை கொன்றது.

பிறகு ஹநுமாருடைய நிழலை ஸிம்ஹிகை என்ற அரக்கி பிடித்து இழுத்து அவருக்குத் தடை செய்ததாயும் அவளை ஹனுமார் கொன்றதாயும் சொல்லியிருக்கிறது. பாகவதம் ஐந்தாவது ஸ்கந்தம் 24-வது அத்தியாயத்தில் ஸிம்ஹிகையை ராகுவின் தாயாராக சொல்லி இருப்பதாலும் ருகுசாயா கிரகமாக சொல்லி இருப்பதால் ஸிம்ஹிகையை சாயையாக சொல்லலாம். அங்கே ஹனுமாரைத் தவிர வேறு ஒருவருமில்லாததால் ஸிம்ஹிகை ஹனுமாருடைய நிழல்தான் என்று சொல்லலாம். ஸிம்ஹிகையை ஹநுமார் கொன்றுர் என்றுல் ஹநுமாருடைய நிழல் இல்லாமல் அவர் அழுக்கற்ற கண்ணுடியைப் போல நிழல் அன்னியில் ஆனுர் என்று சொல்ல இடமிருக்கிறது. இதை அனுஸரித்து யோக சாஸ்திரத்தில் மூன்றுவது பாதத்தில் கடைசி ஸுத்திரத்தில் மனஸ் ஆத்மாவைப்போல சுத்தமாக ஆனுல் அதற்கு கைவல்ய பதவி என்று சொல்லி இருக்கிறது. "ஸத்வபுருஷயோஹோ சுத்தி ஸாம்யம் கைவல்யம்" ஆகையால் ஹனுமாருகிற மனஸ் கைவல்ய பதவியை அடைந்ததென்று சொல்லலாம். பிறகு ஹனுமார் இலங்கையில் குதித்தார் என்பதை அவர் மூலாதாரத்தைக் குறித்து ஸமயமம செய்ததாக சொல்லலாம். இலங்கை மூன்று பர்வத சிகரங்களுக்கு மேலிருப்பதாக சொல்லியபடி மூலாதார சக்கரமும் மூன்று கோணவடிவமாக இருக்கிறதாக சொல்லி யிருக்கிறது. மேலும் இலங்கை என்ற பெயர் மூலாதார சக்காத்திற்கு அதின் பீஜாக்ஷா "லம்" என்றதால் அதற்கு லங்கை என்று பெயர் கொடுத்தது உசிதமாக இருக்கிறது. இலங்கையில் ஹனுமார் அநேகம் அரக்கர்களைக் கொன்றுர் என்றதை அவர் பண்ணிய ஸம்யமத்தால் அநேக பாபகர்மங்கள் அழிக்கப்பட்டதென்று சொல்லலாம், ஹனுமார் இலங்கையில் தீவைத்து அதை கொளுத்தினுர் என்பதை மூலாதாாத்தில் ஸம்யமம் செய்து அங்குள்ள குண்டலினி சக்தியாகிற மூலதீயை கிளப்பும்போது உண்டான தீயேனறு சொல்லலாம் பிறகு ஹநுமாரிடம் ஸீதை அடையாளமாக இராமரிடம் கொடுக்கும்படி கொடுத்த சூடாமணியானது குண்டலினி சக்திதான் என்று சொல்ல இடமுண்டு.

இராமர் அந்த சூடாமணியை ஹநுமாரிடம் வாங்கினபொழுது, ஸுக்ரீவனிடம் அந்தச் சூடாமணியானது இந்திரனுல் ஜனகருக்கு கொடுக்கபபட்டதாயும் அது ஜனகருல் ஸீதைக்கு கல்யாண காலத்தில் கொடுக்கப்பட்டதாயும் சொல்லப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ண சரித்திரத்திலும் குண்டலி சக்தியை இந்திரன் தாயாருன அதிதியின் குண்டலமென்று சொல்லப்படுகிறது. பாரதத்திலும் கர்ணனுடைய குண்டலமாகிற குண்டலினி சக்தியை இந்திரன் வாங்கிப் போனதாக சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு எல்லாம் இந்திரனுடைய ஸம்பந்தம் ஒத்திருக்கிறதினுல் அவைகள் குண்டலினி சக்தியென்று அவைகளை சொல்லயிட்டிருக்கிறது.

ஸேது பந்தனம்.

ஸேதுயென்பது அனுஹத சக்காத்திற்கும் மூலாதாா சக்காத்திற்கும் மத்தியிலுள்ள ஸுஷுமண நாடியென்று சொல்ல யிடமிருக்கிறது. யோகம் செய்வதின் முக்கிய காரணம் மூலாதாரத்திலிருக்கும் குண்டலி சக்தியை சிறஸுக்கு யேத்துவதுதான். ஸுஷுமண நாடியானது யோகத்திற்கு முன் குண்டலி சக்தியை யேற்றத் தகுதி அற்றதாகயிருக்கிறது. யோக நிஷ்டையால் அந்த நாடி சீர்படுத்தப்படுகிறதாகச் சொல்லப்படுகிறது. இராமாயணத்தில் ஸேதுவை "நளஸேதோச்ச பந்தனம்"யென்றும் "நளம ஸேதும் அகார்யத்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு இரண்டு அருத்தமிருக்கிறது. நளனுல் கட்டப்பட்ட ஸேதுவென்றும் நளனே ஸேது என்றும் அருத்தம் சொல்லலாம். நளம் என்ற பதம் நளம் என்று மாற்றப்பட்டிருக்கிறது. அந்த நாளம் என்பது பிரஹ்ம நாளமாகிற ஸுஷும்ண நாடிதான். ஸுஷும்ண நாடியை யோக நிஷ்டையால் பலடபடுத்துவதைதான் ஸேதுபந்தனமாகச் சொல்லி இருக்கிறது "தபஸா ஸேதுபந்தேனஸாக ரோசசோஷணைவா" என்று இராமாயண உயுத்த காண்டம் 3-வது ஸர்கத்தில் சொல்லி இருப்பதால் "ஸேதுபந்தம் யென்பது யோகத்தால் ஸுஷும்ண நாடி சீர்படுத்தப்படுவதுதான். மேலும் ஸேதுவானது இராமேச்வரத்திற்கும் இலங்கைக்கும் மத்தியிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இலங்கை மூலாதாரமாகச் சொல்லப்படுவதால் இராமேச்வரத்தை அனுஹத சக்கரமாகச் சொல்லலாம். ஷட்சக்கர நிருபணத்தில் அனுஹத சக்காத்தில் சிவனுடைய லிங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இராமேச்வரத்திலும் இராமனுத இலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஸேது மாஹாத்ம்யத்தில் இராமர் அந்த இலிங்கத்தை ஸ்தாபனம் பண்ணும்பொழுது ஸீதை மணலை இலிங்கமாகக் குவித்து வைத்ததாயும் இராமர் தன் அனுகத சக்காத்திலுள்ள சிவனை அந்த மணல் இலிங்கத்தில் ஆவாகனம் பண்ணினதாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு இலிங்கங்களும் ஒன்ருக விருப்பதால் இராமேசவரம் அனுஹத சக்கரமென்று சொல்லலாம். காசியும் அனுஹத சக்கரமாகச் சொல்லப்படுவதால் காசியைப்போல இராமெச்வாத்திற்கும் மஹிமையுண்டு. மேலும் காசியில் உள்ள சில தீர்த்தங்கள் இராமேசுவாத்திலுமிருக்கிறது. காசி விச்வநாதர் கோயில் இராமேசுவாத்திலுமிருக்கிறது. ஆகையால் இராமாயணத்தில் "அத்ரபூர்வம் மஹாதேவ: ப்ரஸாதம் அகரோத ப்ரபு: யென்ற வாக்கியம் அனுஹத சக்காத்திலுள்ள சிவலிங்கத்தை குறிக்கிறதேயன்றி ஸமுத்திாராஜனை குறிக்காது.

S. அய்யாத்துரை அய்யர்.

(தொடரும்.)

G. V. கணேச அய்யர், B.A., B.L.
மொழிபெயர்த்த புஸ்தகங்கள்.
'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் சிலவு பிரத்யேகம்.

ஸ்ரீ லலிதா
ஸஹஸ்ர நாமம்

நாகாலிபியில் மூலமும்,
நாமாவளியும். விலை அணு 0—5—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு
விலை அணு 0—4—0.
தபால்சிலவு அணு 0—1—0

"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகாத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
தபால் சிலவு வேறு] [விலை அணு 0 8 0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனுர்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.



# புஸ்தக விமர்சனம்.

தாஸனது ஆத்மாநுபவம்.

(1-வது பாகம் "அத்யாத்ம யாத்திரை") [இக்கிரந்தம் நமது பார்வைக்கு எட்டியது. இதை இயற்றியவர் தஞ்சை ஜில்லா, சேங்காலிபுறம் ஸ்ரீகுகதாஸ் ஆவார். இந்நூலில் ஆத்மாநுபவங்கள் குவியலாக நிறைந்துள்ளன. ஸ்திரீ, புருஷர்கள் யாவரும் எளிதில் அறியும்படியான தமிழ் நடையில் உள்ளது. கும்பகோணம் ஸ்ரீ ஜனுர்த்தன அச்சுக்கூடத்தில் நிரம்பவும் சுத்தமாக உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. மொத்த பக்கங்கள் 192. விலை காலிகோ ரூ. 1—8—0 ராப்பர் ரூ. 1—4—0 கிடைக்கும் இடம்:—காரியதரிசி, "குகாலயம்" சேங்காலிபுறம், போஸ்டு (தஞ்சாவூர் ஜில்லா)]

இந்நூலில் உள்ள அநுபவ விஷயங்களை ஊடுருவி விமர்சனம் செய்யுமுன்பு கிரந்த கர்த்தா ஸ்ரீ குகதாஸ் பற்றிச் சில வரிகள் நமது 'ஆர்ய தர்மம்' வாசகர்களுக்கு அறிவிப்போம். இவரது பெயர் எஸ். வி. நடராஜய்யர். "குகதாஸ்" எனும் புனைப் பெயருடன் இந்நூலை வெளியிட்டிருப்பது, ஸர்வ வியாபக பரம்பொருளை ஹ்ருதய குகையில்இருத்தி இவர் ஆராதிப்பதுபோலும். சென்ற இருபது ஆண்டுகளுக்கு மேலாக உலகின் கண்ணுள்ள பல மதங்கள், கொள்கைகள், உபாஸனைகள் முதலியனபற்றியும், பல காலங்களிலும், பல தேசங்களிலும் அவதரித்துள்ள ஆத்ம ஞானிகள் பற்றியும் அரிய விஷயங்களை அதி ஊக்கத்துடன் இவர் கற்றுணர்ந்தவர்; ஆத்மாநுபவத்திற் குறைந்தவராய், வாதம் தொடுப்பதிற் சிறந்தவராய், பிடிவாதத்தைக் கடைப்பிடிப்பவராய் உள்ள மத, கொள்கை, உபாஸனை வாதிகளைக் காண இவர் வாடி வெதும்டவார். ஆனுல் மத, கொள்கை, உபாஸனை ஒற்றுமையை எக்காலும் வேண்டி நிற்பார். மதத்தை (உள்ளில் உணரப்படும் பொருளை) மதத்துடன் (கொழுப்புடன்) மிச்ரம் செய்ய இவர் நடுங்குவார். சுருக்கமாக உரைக்கின் ஆத்மாநுபவமே உண்மை மதமென இவர் வற்புறுத்துவார். கீதை வாயிலாக ஸ்ரீ கிருஷ்ணன் கோஷித்தருளிய "உட் கண்" ணுகிய அத்யாத்ம ஞானத்தை வேண்டியே இவர் பல ஆண்டுகளாகத் தம்மை ஆத்ம ஸமர்ப்பணம் செய்து வருகிறுர். "எல்லோரும் பகவத் பக்தியில் ஈடுபடவேண்டும்; ராஜமார்க்கமான அத்யாத்மப் பாதையை நாடவேண்டும்; சாசுவத ஆனந்தத்தைப் பெறவேண்டும்." எனும் ஆழ்ந்த பிரார்த்தனை கொண்டவராய் "அத்யாத்ம யோகம் அல்லது ஆத்மப் பயிற்சி", "ஆத்மாநுஸந்தானக் கிரமம்" முதலிய ஆத்மக் கிரந்தங்களையும், "நாரத பக்தி ஸூத்ரம்", "பஜகோவிந்தம்" முதலான பக்தி நூல்களையும் வெளியிட்டுள்ளார். கூட, இவர்காந்தர்வ (சங்கீதம்) வேதத்தில் நல்ல பயிற்சி உள்ளவர். ஆங்கிலத்திலும், தமிழிலும் இந்திய ஸங்கீதத்தைப் பற்றிப் பல நூல்களை இவர் இயற்றியுள்ளார். நாதப் பிரும்ம வித்யையை ஓர் வியாபாரமாகக் கைக்கொள்ளாது ஆத்மார்த்தமாகவும், உத்தம பக்தர்கள் கோஷ்டியிலும் உபாஸிப்பவர். சங்கீதம், தெய்வபக்தி ஆகிய இவ்விரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று அகன்று செல்லுமிக்காலத்தில் இவ்விரண்டையும் ஒன்றுபடுத்த வேண்டுமென்பது இவரது பேரவல்.

இனி இக்கிரந்தத்தின்கண் பதிந்துள்ள விஷயங்களைச் சற்று ஆராய்வோம். இக்கிரந்தம் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீஸ்வாமிகள் அவர்களுக்கு, அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீ ஜகத்குருவினது ஸ்ரீ முகமும், ஸ்ரீரமண மகரிஷியினது உபதேசங்களும், ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீயினது ஆத்ம பஞ்சகமும் இக்கிரந்தத்தை நிரம்பவும் சோபிக்கச் செய்கின்றன. இம்மூன்று மஹான்களும் இக்கிரந்தத்தையும், இந்நூலாசிரியரையும் கடாக்ஷித்து அருளியிருப்பதால் இந்நூல் பல ஜீவன்களுக்கு இக-பர க்ஷேமங்களை வர்ஷிக்குமென்பதில் ஐயமில்லை.

இக்கிரந்த கர்த்தா தனது சற்று நீண்ட "முன்னுரை"யில் பகவதர்ப்பணத்துடன் ஆரம்பித்து, "தான் ஆத்மாநுபவங்களைஎழுதி வரும் காரணம், பற்பல அநுபவிகளினது உபதேசம் என்ன, ஆத்ம அநுபவங்களைப் பாமரர்கள் அறியும்படி அறிவிப்பதின் சிரமம், புத்திமான்களுக்குச் சில விஷயம், மஹான்களுக்கு வந்தனம்" முதலியவைகள் பற்றி சற்று விரித்துள்ளார். தவிர்த்து, இம் முன்னுரையினது கடைசியில் தனது அநுபவ நூல்கள் பறந்த உலகின்கண் "வெளி வருங்காலம்" பற்றி "கவலையில்லை" என ஆரம்பித்து (பக்கம் XXV II இரண்டு பக்கங்கள் கதறியிருப்பதைப் பார்க்கும் எந்தப் பாமரனும் கண்ணீர் விடாது மேற்போக முடியாதென்பது நமது அபிப்பிராயம். பிறகு சுமார் 8 பக்கங்கள் "அர்ப்பணம், பிரார்த்தனை, ஜீவன் அடையவேண்டிய நிலை, ஆச்சார்ய பக்தி, ஆத்மப் பாதையில் தைரியம் ஊட்டல்" முதலிய சில விஷயங்களைப் பெரியோர்களினது உபதேசங்கள் வாயிலாக நிரூபித்துள்ளார். இவ்வுபதேசங்கள் ஆத்மாநுஸந்தானத்துக்கு நிரம்பவும் உதவியளிக்கும்.

இதன்பின் ஸ்ரீ குகதாஸ் தமது ஆத்மாநுவங்களைச் சொல்லுமிடத்து ஜீவயாத்திரையில் நேரிடுகின்ற பற்பலவைகளில் 130. அநுபவ விஷயங்களை "உள்ளங்கை நெல்லிக்கனி" யாக யாவரும் எளிதில் அறிந்து அநுஷ்டிக்கும்படி வெளியிட்டுள்ளார். அவைகளின் சில, நூலில் குறிப்பிட்டுள்ள நம்பர்களுடன், அடியில் வரைவது மூலம் நமது வாசகர்களுக்கு இவரது ஆழ்ந்த ஆத்மாநுபவங்களை வெளியிடுவோம்:— (2) தூங்கி எழுந்திருத்தல் (3) ஆஸனம் (5) ஐகாக்கிரிய, தியான ஸமாதிகளான மூன்று அநுபவ நிலைகள், (7) ஜபம் செய்யும் விதம், (10) தியானம், (11, 12) ஸகுண, நிர்க்குணத் தியான முறைகள், (15) இன்ப துன்ப, அலுப்புத் தியானங்களில் எவ்விதம் யாத்திரையை அநுஷ்டிக்கவேண்டும், (16) தியான பலன்கள், (19 முதல் 21) ஸமாதி விஷயம், (25) ஆத்மப் பொருளது அபயம், (26) பரம்பொருளினது தயை, (27) காதலி காதலன் எனும் காந்தாஸக்தி, (28 முதல் 35 முடிய) அத்யாத்ம அநுபவியினது லக்ஷணம், இவன் சக்தியின் பரிணமிப்பு, வீரத்தன்மை, (36) நல்ல, கெட்ட அநுபவங்கள், (38—52) அத்யாத்மப் பாதையில் போர், பகவானது அபயம், வெற்றி முதலியன, (58—66) பலவித பிரார்த்தனைகள், (67, 68) அநுஸந்தானம், (70) ஹ்ருதயத்தில் தேவர்கள், (74) ஆத்மமந்திரம் யாது, (77) ஸ்வயராஜ்யம், (83) தத்வமஸி, (85—100) ஆச்சார்ய, சிஷ்யர்கள் லக்ஷணம், (101) மௌனம் (102) ஜபமாலையினது அவசியம், (103) விபூதி பூசுவது, (104) விக்ரக, யந்திர ஆராதனையினது தத்துவம், (107) அஹஹோமம், (108—120 முடிய) அநுபவிகளைத் தர்சிக்கும் விதம், தர்சன பலன் முதலியன, (126) பால்யத்தில் பக்தி ஏற்படுவதின் அவசியம், (127) தீவ்ர யாத்ரீகனது லக்ஷியம், (130) பகவான் கவனிப்பது. ஸ்ரீ குகதாஸ் தமது 'முடிவுரை'யில் "அத்யாத்மப் பாதையில் ஸமஸ்த ஜீவன்களும் ஈடுபட்டு சாந்தம், சௌக்கியம், பேரின்பம் முதலிய இக—பர க்ஷேமங்களைப் பெறவேண்டும். தான் தெரிவித்துள்ள ஆத்மதத்துவம், பிரபஞ்ச— அஸாரத்—தன்மை முதலியன நிரம்பவும் சொற்பம், அநந்தங் கோடியாக உள்ளன" முதலியனபற்றிச் சில வரிகள் கூறிவிட்டுக் கடைசியாக எல்லா ஜீவன்களுக்கும் க்ஷேமம் எற்படப் பிரார்த்தித்து இந்த "அத்யாத்ம யாத்திரை" நூலை முடிக்கிறுர்.

இக்கிரந்தத்தில் வரையப்பட்டுள்ள ஆத்மா அநுபவங்களை ஆழ்ந்து நோக்க ஸ்ரீ குகதாஸ் பலர்களுக்குப் பற்பல மனோ நிலைகளுக்குத் தகுந்தவாறுப் பல அரிய விஷயங்களைப் பல இனங்களில் புகட்டியிருப்பதாகப் புலப்படுகின்றது. கூட, ஸ்ரீ ஜகத்குரு, ஸ்ரீரமண மகரிஷி, ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதி— இம்மூன்று மஹான்களும் முறையே "ஸ்ரீமுகம், உபதேசம், பஞ்சகம்" வாயிலாக இக்கிரந்தத்தை கடாக்ஷித்திருக்கும் தேதிகளைப்பார்க்குமிடை இந்நூலானது ஸ்ரீ குகதாஸ் அவர்களால் பல வருஷங்களுக்கு முன்பே வரையப்பட்டு சென்ற 1934-வது ஆண்டில் ஒருவாறு பூர்த்திசெய்யப்பட்டிருப்பதாக நமக்குத் தோன்றுகிறது. இவ்வரிய "ஆத்மாநுபவம்" கிரந்தம் 1939-ம் ஆண்டு ஆரம்பத்தில் தான் பறந்த உலகின் கண் வெளிவர வேண்டுமென ஸர்வ சக்தி வாய்ந்த பரம்பொருளினது ஆக்ஞை இருக்கும்போது பல வருஷ காலமாக இந்நூல் யோக நித்திரையில் இருந்தது பற்றி நாம் கவலை கொள்வதில் பிரயோஜனம் யாது?

இந்நூல் வாயிலாக ஸ்ரீ குகதாஸ் மனமுருகிக் கதறியிருப்பதை அநுபவத்துக்குக்கொண்டு வரக்கிஞ்சிற்று பிரயாசை எடுத்தால் கூட சகல விதத்திலும் ஜீவன்கள் இக — பர க்ஷேமங்களை அடையலாமென்பது திண்ணம்.

ஓர் விஷயம் அறிவித்து இந்த "விமர்சனத்தை" முடிப்போம். இந்நூல் அளகாபுரி அமெரிக்கா கண்டம், த்ரிசங்கு ஸ்வர்க்க லண்டன்மா நகர் முதலிய மேனுடுகள் ஒன்றில் வெளியிடப்பட்டிருந்தால் சற்றும் சந்தேகமின்றி டாலர் அல்லது பவுன் கணக்காகத் தான் விலை வைக்கப்பட்டிருக்கும். ஸ்ரீ குகதாஸ் தமது பலவருஷ பரிசிரமத்தைப் பொருட் படுத்தாது இக்கிரந்தத்துக்கு விலை நிரம்பவும் குறைத்து வைத்திப்பது பிரபஞ்ச ஜீவன்களின் மீது அவர் வைத்துள்ள கருணையைக் காண்பிக்கின்றதெனக் கூசாமல் கூறுவோம். "எல்லோரும் பகவதாராதனை வாயிலாக இக-பர க்ஷேமம் அடையட்டும்" எனக் குகதாஸ் பிரார்த்தித்து வருவதில் நாமும் கலந்து கொள்ளுகிறோம். நமது வாசகர்களும், உத்தம பக்தர்களும் இப்பிரார்த்தனையில் கலந்து கொள்ளுவார் களெனவும் நம்புகின்றோம். தனது "முன்னுரை" யில் ஸ்ரீ குகதாஸ் கூறியுள்ள 'தாஸனது ஆத்மாநுபவம்' 2-வது, 3-வது பாகங்களான 'அத்யாத்ம தர்மம், அத்யாத்ம மாலா" கிரந்தங்களும் கூடிய விரைவில் உலகின்கண் வெளிபரவும், அதன் வாயிலாக ஸமஸ்த ஜீவன்களும் "சாந்தம், பேரின்பம், சாசுவத ஆனந்தம்" பெறவும் மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கின்றோம்.

P. S. V. அய்யர், B.A., B.L., அட்வகேட்.

G. V. கணேச அய்யர், B. A., B. L.
அவர்கள் மொழிபெயர்த்தது.
'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் சிலவு பிரத்யேகம்.

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனுர்தந அச்சுக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.

55

215268





அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்




அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

## ஆத்ம வித்யை.

சென்ற 17—1—39 செவ்வாய்கிழமை மாலை பொன்மலை ஆத்மீக வாழ்க்கை (Divine life Society) சங்கத்தின் ஆதரவின் கீழ் தஞ்சை ஜில்லா சேங்காலிபுறம் ஸ்ரீமான் குகதாஸ எஸ். வி. நடாராஜய்யர் "அத்யாத்ம வித்யையும், அதை அடையும் பாதையும்" என்பதுபற்றி ஓர் பெரிய கூட்டமுன்பு சுமார் மூன்றுமணிநேரம் ஓர் அரிய உபந்நியாசம் செய்தனர். அவ்வுபந்யாஸத்தில் அத்யாத்ம யோகம் உலகின்கண் மறைந்து வருவதினால் ஏற்பட்டுவருகிற பலவித தாபங்களையும், நஷ்டங்களையும், போர்களையும் முன்னதாகக் கூறிவிட்டு, அத்யாத்ம, "அத்யாத்ம வித்யை, யோகம் இவைகளின் வாயிலாகப் பரம்பொருளை வழிபடுவதினால் ஏற்படுகிற இக—பர க்ஷேமங்கள், ஆத்ம ஸமர்ப்பணம், இவைகளுக்கு அநுகுணமாக யம, நியமாதிகளான அஷ்டாங்கங்கள் முதலியனபற்றிப் பற்பல ஆதாரங்களுடனும், முக்கியமாகத் தனது ஆத்மாநுபவங்களுடனும் குறிப்பிட்டார். சபையோர்கள் யாவரும் நிரம்பவும் சாந்தத்துடனும், மனதை ஒருமைப் படுத்தியும் உபந்நியாஸத்தைக் கேட்டானந்தித்ததும் திருச்சியிலிருந்து பல உத்தமபக்தர்கள் ஸ்ரீ குகதாஸ் உபந்யாஸத்துக்குப் பொன்மலை வந்திருந்ததும் குறிப்பிடத் தக்கன. T. W. லக்ஷ்மணய்யர், B. A.

## திண்டுக்கல்.

### கட்டாய அம்மை குத்துதலுக்கு எதிர்ப்பு.

சென்ற 8-1-39 யன்று ஸ்ரீஜகத்குரு மடத்தில் "ஹிந்து மத ஸங்க" ஆதரவின் கீழ்வூர் பொதுக்கூட்டம் ப்ரம்மஸ்ரீ M, ஸ்வாமிநாத அய்யர் அவர்கள், அட்வகேட் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் ப்ரம்மஸ்ரீ Dr. K. L. S. சர்மா அவர்கள் (புதுக்கோட்டை) அம்மை குத்துதலால் ஏற்படும் கெடுதிகளைப்பற்றி விரிவாக எடுத்துரைத்து இந்த அதர்ம வழக்கம் அநேக பௌதிக சாஸ்திரி புணர்களால் நிந்திக்கப்படுவதாயும், ஸ்ரீமான் காந்தியே "இது ஒரு பெரிய காட்டு மிராண்டித்தனமான ஒருவித வேலை" யென்று அபிப்ராயப்பட்டாலும் அவரது அந்தேவாஸிகளான காங்கிரஸ்காரர்கள் கட்டாய அம்மை குத்து தலை நிர்பந்திக்க முயலுவது ஆச்சர்யம் என்றும உபன்யஸித்தார்கள், பிறகு கட்டாய அம்மைகுத்துதலை எதிர்த்து ஒரு தீர்மானம் ஏகமனதாய் செய்யப்பட்டு ப்ரதமமந்திரிக்கும், சுகாதார, மந்திரிக்கும் அனுப்பப்பட்டது, ஒரு நிருபர்.

## ஸீதாதேவி "வல்கல" த்தை யுடுத்தாளா?

டாக்டர் ஆர். நாகராஜ சர்மா எழுதுகிறார்:— ஸ்ரீமதி சரோஜினி நாயுடு அகிலஇந்தியசுதேசி பொருட்காக்ஷியைத் திறந்துவைக்கும் பொழுது செய்தபிரசங்கத்தில் "ஸீதாதேவிவல்கலத்தை யுடுத்தாள்" என்று சொன்னதாக பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதைப் பார்த்தேன். ஸீதாபிராட்டி வல்கலத்தை (மர உடை) யுடுத்ததுண்டா? இந்த பிரச்னைக்கு வால்மீகி ராமாயணத்தில் என்ன பதில் கிடைக்கு மென்பதை மட்டும் இங்கு சுருக்கமாக எழுதுகிறேன். கல்மனது படைத்த கைகேயி தர்ப்பத்தால் செய்த மரப்பட்டையைப் போன்றதை ஸீதையும் உடுக்க வேண்டுமென்றாள். அதை எப்படி உடுப்பதென்றறியாத ஸீதை இராமனை வேண்ட, ராமர் ஸீதை உடுத்தியிருந்த பட்டுப்புடவையின் மேல் தர்பப்போர்வையைச் சுற்றிக்காண்பித்தார்.

கைகேயி கேட்ட வரங்கள் பிரகாரம் வனவாஸமும், அதற்கேற்ற கோலமும் ஸீதைக்கு அல்லவென்று வஸிஷ்டரும் தசரத மஹாராஜாவும் கடுமையாகக் கண்டித்து வனவாஸ முடியும் வரையில் கணக்குப்பார்த்து வேண்டிய பட்டுப்புடவைகளையும், நகைகளையும் ஸீதையின் உபயோகத்திற்காகக் கொடுக்கும்படி வ்யவஸ்தை செய்யப்பட்டது. (அயோத்யா காண்டம், ஸர்க்கம் 39)

லங்கையில் ஹனுமான் ஸீதையைக்கண்டுபிடித்ததும் ராவணன் தூக்கிச்செல்லும் பொழுது எந்த மஞ்சள் பட்டுப் புடவையைக் கட்டியிருந்ததாக அடையாளம் சொல்லப்பட்டதோ அதே புடவையுடன் பார்த்ததாகவும் ஆயினும் வர்ணம் கொஞ்சம் மங்கலாக இருந்ததாகவும் வால்மீகி குறிப்பிட்டிருக்கிறார். (ஸுந்தர காண்டம் ஸர்க்கம் 15)

மேற்கண்ட வால்மீகி வாக்யங்களிலிருந்து ஸீதாதேவி வல்கலத்தை யுடுக்கவில்லையென்பது நிச்சயம்; ஸ்ரீமதி சரோஜினியின் கூற்று முற்றிலுமாதாரமற்ற தென்றுதான் கொள்ளவேண்டும்.

நவீன அரசியல்-பொருளாதாரம் முதலிய கொள்கைகளின் பிரகாரம் புராதன நூல்களுக்கு அர்த்தம் சொல்ல யத்தனிப்பது பயன்படாதென்று வாஸ்தவ ஆராய்ச்சிக்காரர் பொதுஜனங்களுக்கு சமயம் வரும்பொழுது எடுத்துச்சொல்ல வேண்டும்.

## மைலாப்பூரில் ஸ்ரீ ராமபட்டாபிஷேகம்.

மைலாப்பூர் வெங்கடேச அக்ரஹாரத்தில் சுமார் இரண்டு மாதகாலமாக சேங்காலிபுறம் பிர்ம்மஸ்ரீ, அனந்தராமதீக்ஷிதர் அவர்களால் ஸ்ரீமத் ராமாயண உபன்யாசம் நடத்தப்பட்டு வந்தது. ஏராளமான ஜனங்கள் கேட்டு ஆனந்தமடைந்தனர். உபன்யாச மத்தியில் சில தினங்களில் தர்மரக்ஷாமணி மகா-ா-ா-ஸ்ரீ, K. பாலசுப்ரமண்ய அய்யாவர்களும் திருப்புகழ் மணி மகா-ா-ா-ஸ்ரீ, T. M. கிருஷ்ணஸ்வாமி அய்யாவர்களும் அங்குள்ள ஆஸ்திகர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க சில அரிய உபன்யாசங்களை செய்தது, மிகவும் போற்றத்தக்கது. தீக்ஷிதரவர்களுடைய உபந்யாஸ வைபவத்தை சென்னையில் கொண்டாடாதாரில்லை. ஜனவரி மாதம் 12உ ஸ்ரீராமபட்டாபிஷேகம் வெகு அழகாக நடைபெற்றது. அச்சமயம் ஜகத்குருக்களான ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீதீக்ஷிதரவர்களுக்கு "வைதிக தர்மஸம்ரக்ஷக" என்ற பட்டத்தை தங்க பதக்கத்தில் எழுதி கொடுத்தார்கள். மைலாப்பூர் மஹா ஜனங்கள் "ப்ரவசன துரீண" என்ற பட்டத்தை ரொம்பவும் உத்ஸாஹத்துடன் அளித்தனர். மேற்படி பட்டத்தை ஸம்ஸ்கிருதத்தில் ஓர் அட்ரஸ் படித்து தர்மரக்ஷாமணி அய்யாவர்கள் வெகு உருக்கமாகப் பேசி கொடுத்தார்கள். அப்பொழுது அங்குள்ள ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஏகமனதாக கரகோஷம் செய்து ஆனந்தித்தனர். இன்னும் திருப்புகழ் மணி அய்யரும் ராவ்பகதூர் பிர்ம்மஸ்ரீ, பத்மநாப சாஸ்திரிகள் அவர்களும் ஸம்ஸ்கிருத கலாசாலை பிரதம உபாத்யாயரான பிர்ம்மஸ்ரீ, ராமசந்திர தீக்ஷிதரவர்களும் அனந்தராம தீக்ஷிதர் அவர்களுடைய உபன்யாசத்தைக் கொண்டாடியதோடு இவர்களுக்கு கொடுத்த பிருதம் உசிதமென்று ஆனந்தித்தனர். எல்லோரும் தீக்ஷிதரவர்களுக்கு விலை உயர்ந்த பொருள்களையும் ஸம்மானமாகச் செய்தனர்.

— ஒரு நிருபர்.

"கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

தபால் செலவு வேறு] [விலை அணு 0 8 0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட் டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

4/
24

5

2-2-1939

Accn Nos 215269
215270

215269

1094

215269

59

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 | 24 — கும்பகோணம் கலி5039 பகுதான்ய-ஞு தை-மீ 20உ 1939-ஞு பிப்ரவரி-மீ 2உ — வா 5

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0. தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு [illegible] 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0
நீண்ட [illegible] விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## பூகம்பத்தினால் 30 ஆயிரம் பேர் மாண்டனர்.

சில்லியில் கோர ஸம்பவம்.

சில்லி என்ற நாட்டில் சென்ற வாரம் ஏற்பட்ட பூகம்பத்தினால் 50 ஆயிரம் ஜனத்தொகையுள்ள ஒரு நகரமே அழிந்து போய்விட்டது. இதில் 30 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டுப் போய்விட்டதாகத் தெரிகிறது. 15 லக்ஷம் பவுன் சொத்து நாசமும் ஏற்பட்டது.

## எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை.

15 வயதுள்ளவர்களும் ஆஜராகலாம்.

சென்னை யூனிவர்ஸிடியார் 15 வயது ஆகாதவர்கள் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷைக்கு ஆஜராகக்கூடாதென்று இருந்து வரும் தடையை நீக்கிவிட நிச்சயித்திருக்கிறார்கள். இந்த வருஷத்திற்கே இது அமுலுக்கு வரும்.

## ராஜ்கோட்டில் மீண்டும் அமளி.

ராஜ்கோட் ஸமஸ்தானத்தில் ஸ்ரீ படேலின் தலையீடு காரணமாக ராஜியேற்பட்டுவிட்டதென்று பறையடிக்கப்பட்டது. ஆயினும் ஸ்வல்பத்தகாறு நிமித்தமாக அங்கு மீண்டும் ஸத்யாக்ரஹம் ஆரம்பிக்கப்பட்டு பலர் கைதியாகி வருகின்றனர்.

## முஸ்லீம்களின் சட்ட மறுப்பு.

வித்யா மந்திர திட்டத்திற்கு எதிர்ப்பு.

நாகபுரியில் வித்[illegible]மென்ற புதிய கல்வி திட்[illegible]த்தை எதிர்த்து பிரபல முஸ்லீம் [illegible] சத்யாக்ரஹம், சட்ட மறுப்புச் செய்ய ஆரம்பித்து விட்டனர். கவர்மெண்டு கார்யாலய வாசலில் ஸத்யாக்ரஹம் நடக்கிறது. முஸ்லீம் லீக் இதை ஒப்பவில்லையாயினும் நாகபுரி மஹம்மதியர்கள் சுதந்திரமாக இதை நடத்துகிறார்களாம்.

## சிதம்பர கலாசாலை நிலைமை.

ஒரு மாணவன் கைது.

சிதம்பரம் அண்ணாமலை ஸர்வ கலாசாலையில் கூடியவரையில் அமைதி ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் சில மாணவர்கள் இன்னும் பலாத்காரமாக ஹாஸ்டலில் புகுந்து மற்றவர்களைக்கலைப்பதாகத் தெரிகிறது. பாலதண்டாயுதம் என்ற மாணவன் 144 வது பிரிவை மீறி பிரசாரம் நடத்திய குற்றத்திற்காகக்கைது செய்யப்பட்டிருக்கிறான்.

## சென்னை முனிஸிபல் எலெக்ஷன்.

3 வருஷத்திற்கு ஒரு தடவை.

சென்னை முனிஸிபல் எலெக்ஷன்களை 3 வருஷத்திற்கு ஒரு தடவையே நடத்தவேணுமென்று ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி கொண்டு வந்த தீர்மானம் பலத்தமெஜாரிடியால் நிறைவேறியது.

## ஸ்பெயின் கலஹம்.

பார்ஸிலோனியா வீழ்ச்சி.

ஸ்பெயின் உள்நாட்டுக் கலஹம் மீண்டும் அதிகரித்து விட்டது. கலஹப்படைத் தலைவரான ஜனரல் பிராங்கோவுக்கு இதாலி உதவி ஏராளமாகக் கிடைத்திருக்கிறது. இதனால் அவருக்கு விசேஷமாக வெற்றி கிடைத்து வருகிறது. ஸ்பெயின் ஸர்காரின் முக்யப் பட்டணமாகிய பார்ஸிலோனியாவை கலகப்படை பிடித்துக்கொண்டு விட்டது.

**கும்பகோணம் பாங்கி லிமிடெட்,**
**கும்பகோணம்.**

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட பங்கு தொகை | ரூ 2,82,575 |
| க்ஷேம நிதிகளும் காப்பு நிதிகளும் | ரூ 2,09,438 |
| கரண்டு அக்கௌண்டு | .... 2% வட்டி |
| ஸேவிங்க்ஸ் பாங்கி | .... 3% ,, |
| [illegible] டிபாஸிட்டுகள் | 1-ஞு 4% |
| | 2-ஞு 4½% |

சீலன் டிபாஸிட்டுகளும் இப்போது வாங்கப்படுகின்றது.

## ஸ்பெயினில் பரிதாபக் காக்ஷி

ஸ்பெயினின் தற்காலத் தலைநகரான பிகுதார் என்ற விடத்தில் கலஹ விமானங்கள் ஏராளமாக வெடிகுண்டுகளை வீசிவருகின்றன. இதனால் ஸாதாரண பிரஜைகள் மிகவும் கஷ்டமடைந்திருக்கிறார்களாம். தாய் தகப்பன்களையும், பந்துக்களையும் இழந்த குழந்தைகள் தெருவில் அநாதையாகத் தவிக்கின்றனவாம். கணவனை இழந்த ஸ்திரீகளுடையவும், பிள்ளைகளை இழந்தத் தாய்மார்களுடையவும் கண்டாவிக் காக்ஷியை வர்ணிக்க முடியாதாம். என்னே! ஐரோப்பிய நாகரீகம்!

## எங்கும் கலஹம்.

ஹைதராபத்தில் ஹிந்துக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதைக் கண்டிக்க இந்தியா வெங்கும் "ஹைதராபாத்" தினம் ஹிந்துக்களால் கொண்டாடப் பட்டது. இச்சமயம் டெல்லி, லக்ஷ்மணபுரி, பெரில்லி முதலிய அநேக இடங்களில் மஹமதியர்கள் பெரிய கலஹம் விளைவித்து ஊர்வலங்களையும், கூட்டங்களையும் எதிர்த்தார்கள். பலவிடங்களில் ஹிந்துக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— **T. B. சீதாராம் டெண்டிஸ்ட்,** பெரியதெரு, கும்பகோணம்.

# ஸ்ரீகாசி நகரில் அகில பாரதிய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின்

## 11-வது மஹாநிவேசநம் வரவேற்புத் தலைவரின் முன்னுரை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

'ஸர்வம் பரவசம் துக்கம், ஸர்வம் ஆத்ம வசம் ஸுகம்:'

பிறருக்கு வசப்பட்டதெல்லாம் துன்பம் ஸ்வாதீனமாயிருத்தலே இன்பம். சுக துக்கங்களின் இந்த இலக்கணம் சுருக்கமாய்க் கூறப்பட்டிருக்கிறது; இதை யாவரும் அறிய வேண்டும்.

எவ்வாற்றாலும் பிறர் வசப்பட்டிருத்தல் துன்பமே. ஸ்வாதீனமாயிருத்தலே இன்பம். இன்பத்துக்கு அதிகாரணம் ஸ்வாதந்திரியமே சுக துக்கங்களின் இலக்கணம் இங்கே சுருக்கமாகக் கூறப்பட்டிருப்பதை எல்லோரும் அறியவேண்டும். ஆத்மா நித்யமாயும் சுத்த ஸ்வபாவமுள்ளதாயும் இருப்பதால், மிகவும் ஸ்வதந்திரமானது. எது எதற்கு இயற்கையில் ஸ்வரூபமோ, அதைக் குறித்து மனத்தில் சிந்தித்துக்கொண்டிருத்தல் நியாயமே. அது விலக்க முடியாதது.

ஜன்மத்தால் கிடைத்த உரிமையிலும், இயற்கையில் கிடைத்த உரிமையிலும் ஆஸக்தி அவச்யம் ஏற்படுகிறது. இந்த ஆசையின்றிக்கே, ஜீவாத்மாவின் நிலைமை வீணேயாகும். ஏனெனில் ஸ்வாதீனமான ஆத்மா, தன்னுடைய ஸ்வாதீன நிலைமையை—அநுபவிக்கா விட்டால், அது இருந்தும் இல்லாதது போலவே. எல்லா ஜீவர்களும் ஸ்வாதந்திரியத்தை (அதாவது சுயராஜ்யத்தை) விரும்புகிறார்கள். ஸ்வாராஜ்யம் அல்லது ஸ்வாதந்திரியம் எவ்விதம் அடையப்பெறுகிறது, அதை அடைவதற்குச் சாதனங்கள் எவை என்பதை: பற்றிச் சுருதியும் ஸ்மிருதியும் தெளிவாய்த்தெரிவிக்கின்றன:—

'மித்ரஸ்யசக்ஷுஷாஸமீக்ஷே—மித்ரஸ்ய சக்ஷுஷாஸமீக்ஷாமஹே'

இந்த வேத வாக்யத்தின் கருத்தையே மநு பகவான் தெரிவிக்கிறார்:—

'ஸர்வபூதஸ்த மாத்மானம் ஸர்வபூதாநிச ஆத்மநி. ஸர்வம் பச்யன் ஆத்மயாஜீ ஸ்வாராஜ்யமதிகச்சதி:'

(தன்) ஆத்மாவைச் சர்வ பூதங்களிடத்தும் சர்வ பூதங்களையும் தன் ஆத்மாவிலும் பாவித்து எவன் ஆத்ம யக்ஞம் செய்கிறானோ அவனே ஸ்வாராஜ்யத்தை அடைகிறான். இதுவே ஆரியர்கள் சுயராஜ்யப்பேற்றைப் பெறுவதற்குப் பயன் தரக்கூடிய சாதனமாகும்.

பூமண்டலத்திலுள்ள எல்லாச் சாதியார்களும் ஆரியர்களின் சாஸ்திரத்தில் கூறப்பெற்றசித்தாந்தப்பிரகாரம்ஸ்வாராஜ்யத்தைப் பெற முடியுமா? ஒருக்காலும் இல்லை. இப்பூமியில் காணப்படுகிற ஸாம்ராஜ்யங்களில், ஏற்றத் தாழ்வின் ரீதியாக எந்தச் சாதியார் தன்னை நன்றாய் அறிகிறார்களோ, அவர்களுக்கு மட்டும் ஸ்வ என்பது பயனை அளிக்கும். எந்தச் சாதியார் ஸ்தூலசரீரத்தைத்தான் என்று அறிகிறார்களோ, அந்தசாதியாரின் ஸாம்ராஜ்யம், ஸ்தூல சரீரத்தின் பேரிலேயே நிலைத்திருக்கிறது. தங்களுடைய ஸ்தூல சரீரம் தங்களுடைய நாடு, இவைகளை வேறு சாதியாரிடம் அடிமைப்படுத்தாமல், ஸ்வதந்திரமாகக் காத்துக்கொள்ளுதலையே அவர்கள் ஸ்வாராஜ்யம் என்று நினைக்கிறார்கள்; எந்தச்சாதியார் ஸூக்ஷ்ம சரீரத்தையே "தான்" எனக் கருதுகிறார்களோ, அவர்களின் தோற்றத்தில், மனோராஜ்யம், புத்தியின் ஆளுகை இவைகளைப்பாத்துதலே, பூர்ண ஸ்வாராஜ்யம் என்று தென்படுகிறது. மனதுக்கோ, இந்திரியங்களுக்கோ, விஷயங்களுக்கோ வசப்படாமலிருத்தல், புத்தியின் மீது அவித்யை (மோகம்) ஆகிற ஆவரணம் (மறைப்பு) வராமல் தடுத்தல், மனம், புத்தி, இவைகளுக்கு இம்மை மறுமைப்பயன்கள் உண்டாகும்படி பழக்குதல், இவைகளே ஸ்வாராஜ்யம் பெறுவதற்கான அறிகுறிகள்.

மேலும், எந்தச்சாதியார் (ஸ்வ) "தான்" என்பதின் பொருள் ஆத்மாவே என்று உணர்கிறார்களோ, அவர்கள் ஸ்தூல சரீரம், தங்கள் நாடு, இவைகளை அடிமைத்தனத்திலிருந்து நீக்குதலை மட்டும், பூர்ண ஸ்வாராஜ்யம் என்று நினைப்பதில்லை. மனம், புத்தி, இவைகளின் உயர்விலேயே தங்களுக்கு ஸ்வராஜ்யம் கிடைத்ததாகக் கருதவில்லை. சரீரம், மனம், புத்தி இவை மூன்றினுடைய உயர்விலும், நித்ய முக்தி ஸ்வரூபத்தில் இவைகளை நிலைநிறுத்தலாலும் மட்டும் தங்களுக்குப் பூர்ண ஸ்வாராஜ்யப் பேறு கிடைக்குமென்று உறுதியாய் நம்புகிறார்கள். இந்நாள் வரை பூமண்டலத்தில் மற்ற எல்லாச் சாதியாரும் ஸ்தூல சரீரம் தங்கள் நாடு இவைகளையே 'ஸ்வ' எனக் கருதிவந்தார்கள்.

ஆனால், ஆர்ய ஜாதியைச் சேர்ந்தவர்களும், போற்றத் தகுந்தவர்களுமான நம் முன்னோர்கள் (மகர்ஷிகள்) 'ஸ்வ' என்பதற்கு உண்மையான அர்த்தம் ஆத்மாவே எனக் கருதி, தேயத்தின் செல்வமிகுதியை மட்டும் பூர்ண ஸ்வாராஜ்யமாகக் கொள்ளாமல் சரீரம் மனம் புத்தி இவை எல்லாவற்றினுடையவும் ஸ்வாதந்திரியத்திலேயே உண்மையான ஸ்வாராஜ்யம் நிலைத்திருப்பதாக உறுதி கொண்டிருந்தார்கள். ஆகையால் சரீரம், மனம், புத்தி, ஆத்மா இவைகள் யாவையும் பிறர் வசப்படாமல் காத்தலே வர்ணாசிரம சங்கத்தின் சித்தாந்த ரீதியாக ஸ்வாராஜ்யம் நிலைபெறுவதற்கு இலக்கணமாகும்.

இவ்விதமாக மகர்ஷிகளின் கெம்பீரமான ஆராய்ச்சியின் பயனாக நான்கு புருஷார்த்தங்களுடன் கூடியதான பூர்ண ஸ்வாராஜ்ய ஸித்தி பெறுதல் பொருட்டு ஸங்கங்கள் மூலமாய் நம் நாட்டாரால் ஏன் முயற்சி செய்யப்படுகிறது? மற்ற விதேசிகள் போல், ஸ்தூல சரீரம் தேசத்தின் ஸ்வாதந்திரியம் இவைகளாலேயே ஸ்வாராஜ்யம் கிடைத்ததாகவும், அதுவே போதுமானதென்றும் ஏன்கருதக் கூடாது? இந்தக் கேள்விக்குப் பதில் பூமியின் சரித்திரத்தில் வெகு ஜாதியார் உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்த நிலைமையை அடைந்ததின் காரணத்தை ஆலோசித்துப் பார்க்கிற புத்திசாலி ஒருவனுக்கும் புலப்படாமலிருக்காது. சென்ற சில ஆயிர ஆண்டுகளுக்குள் எவ்வளவு ஜாதியார் கால சமுத்திரத்தின் நடுவில் ஒரே படியாக மூழ்கி விட்டனர்.

அந்தச் சாதிகளின் சரித்திரத்தை விசாரிக்குங்கால் பொருளாசை பசுபலம் (Bruto Force) இவைகளால் மட்டும் யாதொருஜாதியும் தன்னுடைய தேசத்தையோ சரீரத்தையோ ஸ்வதந்திரமாகச் செய்துகொள்ள முடியாதென்பது வியக்தமாய் விளங்கும். ஆனால் மனுஷ்ய புத்தியை அஸ்வாபாவனையிலிருந்து விடுவிக்க எந்தச் சாதி முயலுகிறதோ அதனிடம் தர்ம பலமும் ஆத்மாவை அஞ்ஞான இருளிலிருந்து விடுவிக்க வல்லதான ஞான பலமும், ஆத்மபெலமும் நிலைத்திருக்கும், அப்படிக் கன்னியில் பொருளாசையாலும், பசுபலத்தின் Bruto Force வலிமையாலும் அஸ்வாபாவனை, ஆசாரமின்மை நீயஒழுக்கம், மனதுக்குத் தோன்றியவாறு நடத்தல், விபசாரம், மிருகத்தன்மை இவைகள் எந்தச் சாதியிடம் ஓங்குகின்றனவோ அந்தச் சாதி அற்பகாலத்துக் குள்ளாகவே கால வெள்ளத்தால் விழுங்கப் பட்டுவிடும். இதில் ஐயமே இல்லை.

சில ஆயிர ஆண்டுகளுக்குள்ளாகவே Babylonian [பேபிலோனியன்] Assyrian [ஏசேரியன்] Egyptain [எகிப்தியன்] Greecian [கிரீக்கர்] Roman [ரோமன்] முதலான அநேகச்சாதிகள் முற்றிலுமே அழிந்து விட்டனவென்பது அறிஞர்களான தங்களுக்குத் தெரியாததல்ல. இவ்வெல்லாக் கேடுகளுக்கும் காரணம் யாதெனில், தர்மமின்மை, ஆத்மஞானமின்மை மிருகத்தன்மை, Bruto Force, பொருளாசை இவைகளின் மிகுதியே அந்தச் சாதிகள் முக்கியமாக மிருகத் தன்மையைக் கொண்டு தங்களுடைய ஸ்தூல ஜகத்தை ஸ்வதந்திரமாகச் செய்து கொண்டார்கள்; மேலும் பலமற்ற ஜாதியார்கள் மீது, மிருகத் தன்மையின் [Bruto Eorce] ஆக்கத்தினால் தங்களுடைய ஆளுகையைச் சுமத்தினார்கள். ஆனால் முன்னே கூறப்பட்ட பிரகாரம் பொருளாசையின் வேரில் தர்மம் நிலைத்திராத காரணத்தால் நெய்சொரிந்த அக்னியைப் போல் பொருளாசையும் காமவேட்கையும் மிகவும் அதிகரித்து ஒரு விதமான ஸ்வாராஜ்யத்தை யடையச் செய்து முடிவில் அந்தச்சாதியை முற்றிலுமே அழித்துவிட்டது. இக்காலத்திலும், தர்மமில்லாமலும், ஆத்ம ஞானமில்லாமலும் ஸ்வாதீனமடைந்தவையான மேல் நாடுகளில் பொருளாசையால் மூட்டப்பெற்ற போர்த்தீயானது ஜ்வாலைகளைப் பரப்பிப் பொறிகளை நான்கு பக்கங்களிலும் வாரி இறைக்கின்றது அத்தேயங்களெல்லாம் போர்த்தீவாய்ப்பட்டுச் சாம்பலாய்த் தீய்ந்து நீறாகாமல், பகவான் விச்வேசுவரர் காத்துக்கொள்வாராக. அந்நிய நாடுகளின் நிலைமையை அறிந்தும் நம் நாட்டில் ஸ்வாதந்திரியத்தைப் பெற விரும்புகிறவர்களான சுதேசி மக்களுக்குப் பகவான் நற்புத்தி அளிப்பாராக. அதனால் அவர்கள் தர்மபலத்தையுடையவும் ஆத்ம பலத்தையுடையவும் பெருமையை அறிவார்கள். வர்ணாச்ரம சங்கத்தின் உன்னதமான கொடிக்கீழ் த்வஜ நின்று கூடி நான்கு புருஷார்த்தங்களும் நிறைந்ததான பூர்ண ஸ்வாராஜ்யத்தைப் பெறுவதற்காக அவர்கள் விடாமுயற்சிசெய்வார்களாக. இதனால் பூமண்டலம் முழுவதிலும், இன்பம், அமைதி, இவைகளாகிற கெங்கை, வெள்ளமாய்ப் பெருகும். அதில் ஸ்நானம் செய்து எல்லாப் பிராணிகளும், கிருதகிருத்யர்களாகஆவார்கள். ஆகையால் இந்தச் சங்கமானது வர்ணாச்ரம தர்ம பரிபாலனத்துடன் ஸ்வாராஜ்யத்தைப் பெற விரும்புகிறது.

தர்மத்தையே உயிராகவும், வேளாண்மையையே முக்கியத் தொழிலாகவும் கொண்ட பாரத நாட்டிற்கு முக்கியமான செல்வம், பசுவாகிற ஐசுவரியமே. பசுக்கள் செழித்தால் தான் கிருஷித் தொழிலும் செழிக்கும். நம்முடைய பாக்கியத்தால், சில மாகாணங்களில் கிருஷிகர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றுஉத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. உழவாளர்களுக்கு நன்மையை விரும்புகிறவர்களான நாம், மற்றமாகாண அஸெம்பிளி (Assembly) களிலும், பசுக்களை ரக்ஷிப்பதற்காக உத்திரவுகளைச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

ஸநாதனிகளான செல்வக் குபேரர்களையும் நாம் பிரார்த்திப்பதாவது:—அவர்கள் மற்ற வகுப்பினர்களோடு கலந்து எளிய உழவாளர்களின் வறுமை நீங்கும்படிக்கும், எளியோர்களின் தாரித்திரியம் தொலையும் படிக்கும், அவர்களுக்குச் செல்வப் பெருக்கு

(இதன் தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க.)



(2ம் பக்கத் தொடர்ச்சி)

விளையும்படி முயற்சி செய்ய வேண்டு மென்பதே. தீண்டாதார்களுக்காக அவர்களுக்கு தகுந்த கலைகளை கற்பிப்பதற்காக கலாசாலைகளையும் ஏற்படுத்த வேண்டும். அவைகளிற் பயிலுவதால் அவர்களுக்குத் தனம் [wealth] பெருகவேண்டும்; அவர்களின் மனைவி மக்களும் வயிறுற உண்ணவேண்டும், சௌக்கியமாக இருக்க வேண்டும்.

வர்ணாசிரமமரியாதையை காத்தலோடு ராஜ்யத்தின் பூர்ணமலர்ச்சி ஏற்படுவதற்காக, எல்லா வகுப்பினரும் கூடி முயற்சி செய்வதால், நம் நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். எண்ணிக்கையில் அதிகமான வகுப்பினரோ, அல்லது ஜனசங்கியையில் குறைவானவகுப்பினரோ, அவர்களின் செல்வம், பரம்பரையாய் வந்த அதிகாரம் இவைகள் காக்கப்பட வேண்டும். உழவாளர்கள், ஜமீன்தார்கள், மகந்துகள், மஹாஜனங்கள் தர்மாச்சார்யார்கள் இவர்கள் ஒன்று கூடி முயற்சி செய்தலால் நான்கு புருஷார்த்தங்களும் நிறைந்ததான ஸ்வாராஜ்யத்தைப் பெற்று நாட்டிற்கு மங்களங்களைச் செய்ய நாம் விரும்புகிறோம். எவர்கள் தன்னலம் கருதாமல் அமைதியுள்ளவர்களாயும் ஒருவருக்கும் தீங்கு விளைக்காதவர்களுமாயிருந்து ஸேவை புரிவதில் முயலுவார்களோ அவ்விதமான தேசபக்தர்களின் வகுப்பை ஸ்தாபித்தல் வேண்டும் துன்பமடைகிறவர்களாயும் எண்ணிக்கையில் குறைந்தவர்களாயுமுள்ளவர்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதில் ஊக்கம் கொண்டு தர்ம விரோதமான சட்டங்களை ரத்து செய்யவும், இனிமேல் தர்ம விரோதமான சட்டங்கள் செய்யபடாமல் தடுக்கவும், முயற்சி செய்தல் வேண்டும். ஏனென்றால் தர்மத்துக்கு ஆத்மாவுடனும் அந்தக்கரணத்துடனும் தொடர்பு உண்டு சட்டமூலமாகத் தர்மத்துக்குத் தடை செய்தல் அநியாயமே. தர்மம் காக்கப் பட்ட பின்னரே, சங்கத்தின் உத்திரவுகளை நாம் ஒத்துக்கொள்வோம். ஏனெனில் நம் தர்மத்தின் ஸ்வாதந்திரியத்தையே விரும்புகிறோம். இன்றுவரை "வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய ஸங்கம்" தன்னுடைய புருஷார்த்தத்தினால் ஹிந்து ஜாதியின் மரியாதையை ஓங்கச்செய்து, நம் நாட்டுக்குப் பல பல நன்மைகளைச்செய்திருக்கிறது என்று என் உபந்நியாஸத்தினால் தங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

சரித்திரத்தில் தர்ம பூமியென்றும் முக்தி நகரியென்றும் பெயர் பெற்ற புண்யநகரமான ஸ்ரீ காசியில் வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய ஸங்கத்தின் 11வது மகாநிவேசனம் இன்று தொடங்கப் பெற்றிருக்கிறது. மநு பகவானின் "கர்பாதே காகோக்ஞ" என்ற வாக்கியப்பிரகாரம் இச்சங்கத்தின் க்ஷத்திரிய தேஜஸை வளர்ப்பதான உபநயன ஸம்ஸ்காரம் வால்மீகி குண்டமாகிற இந்தப்புண்ய ஸ்தலத்தில் இன்று செய்யப்பெற்றிருக்கிறது. இச்சங்கமானது திவ்யமான தர்ம பலத்தையும் க்ஷத்திரிய பலத்தையும் பெற்றுத் தன்னுடைய மங்காத ஒளியால் உலகத்திலுள்ள அஞ்ஞான இருளை நீக்கி, தர்மத்தையே உயிராகக்கொண்ட பாரத நாடு மறுபடியும் "ஜகத்குரு" என்ற பதவியைத் தங்களுடைய ஆசீர்வாதத்தால் பெறவேண்டும்.

மகாநுபாவர்களான தாங்கள் கூடி ஆலோசனை செய்வதால், பாரத நாட்டுக்கு மட்டுமல்ல, பூமண்டலத்துக்கே நேரிட்டிருக்கிற இடர்களாகிற இருள் சின்னபின்னமாய்ச் சிதறிவிடுமோ, அவ்விதமாகத் தீர்மானங்களை எப்பொழுது தாங்கள் நிறைவேற்றுகிறீர்களோ, அப்பொழுது தான் இந்தச்சம்மேளனத்தின் ஸமாஜம் பயனுள்ளதாகும். ஆதிசக்தியான அன்னபூரணி, பகவான் ஸ்ரீ விச்வேசுவரர் இருவர்களும் தங்களுடைய வரப்பிரசாதத்தை நம்மீது வைத்திருக்கிறார்கள்:

இறுதியில், மறுபடியும் மஹானுபாவர்களான தங்களுக்கு என் மனமார்ந்த அபிநந்தனம் செய்கிறேன். மேலும் ஜனங்களின் துக்கங்களைத் தொலைப்பவரான திரிபுராரி பகவான் ஸ்ரீ விச்வநாதரின் பாதங்களில் நான் பிரார்த்திப்பதாவது:—

ஸர்வேகுசலிந: ஸந்து ஸர்வேஸந்து நிராமயா: ஸர்வே பத்ராணி பச்யந்து மா கச்சித் துக்கபாக் பவேத்:

(எல்லோரும் க்ஷேமமடைவார்களாக; எல்லோரும் மங்களைக் காண்பீர்களாக; ஒருவனும் துன்பம் அடையவேண்டாம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஸ்ரீதர்மதத்ததீர்பாடி.

# ஸ்ரீரங்கத்தில் ஆலயப்பிரவேசக் கிளர்ச்சி?

## ஹரிஜன ஸேவா ஸங்கத்தின் திட்டம்.

சென்னை மாகாண ஹரிஜன ஸேவா ஸங்கத்தின் வர்ஷாந்திரக்கூட்டத்தில் தென்னிந்தியதேவாலயங்களில் தீண்டாதார் பிரவேசத்தை வற்புறுத்திக்கிளர்ச்சிசெய்யத்தீர்மானிக்கப்பட்டது.

முக்யமாக ஸ்ரீரங்கத்தில் ஆலயப் பிரவேசக் கிளர்ச்சியை பலமாக நடத்த வேண்டுமென்று ஷை கமிட்டியில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு அதற்கு ஓர் கமிட்டியும் ஏற்படுத்தப்பட்டது.

## கிறிஸ்தவர்களின் களிப்பு.

சென்னை மந்திரி ஸபையில் கனம் வர்க்கி என்றவர் கல்வி மந்திரியாக நியமிக்கப்பட்டிருப்பதைக்கண்டு கிறிஸ்தவர்கள் களிக்கிறார்கள். பிரதம மந்திரியின் செய்கையையும், அவருடைய பக்ஷபாதமின்மையையும் ஒரு கூட்டத்தில் அவர்கள் பாராட்டினார்கள்.

## பரோடாவில் கலவரம்.

### படேல் பேசமுடியாமல் திரும்பினார்.

ஸர்தார் படேல் பரோடாவுக்குச்சென்று பெரிய கூட்டத்தில் பேச ஏற்பாடு செய்திருந்தார். வரவேற்பு ஏற்பாடு விசேஷமாயிருந்தது ஆயினும் பெரிய கூட்டம் கருப்புக் கொடியுடன் ஆர்ப்பாட்டம் செய்ததால் பெரிய கலவரம் ஏற்பட்டு ஸ்ரீமான் படேல் பேசமுடியாமல் திரும்பி விட்டார். பரோடாவில் ராணுவ பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது. மஹாராஷ்டிரர்— கூர்ஜ்ஜரர் விவாதம் அங்குஅதிகமாயிருக்கிறது.

## திருவாங்கூரில் பயமுறுத்தல்.

திருவாங்கூர் காங்கிரஸ் கமிட்டியார், சீக்கிரத்தில் பொறுப்பாக்ஷி வழங்காவிட்டாலும், ராஜீயக்கைதிகளை விடா விட்டாலும் அடக்குமுறையை நிறுத்தாவிட்டாலும் மறுபடியும் வரி மறுப்பு முதலிய சட்ட மறுப்பில் இறங்கப்போவதாக ஸர்க்காருக்கு எச்சரிக்கை செய்து 6 வார அவகாசமும் கொடுத்திருக்கிறதாம்.

# வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா.)

குரங்கிற்கும் மனிதருக்கும் தாதா ஒரு[illegible] பிதா வேறு! என ஓர் ஆராய்ச்சிக்க[illegible] கல்கத்தா கண்காக்ஷிசாலையிலே கூற[illegible] தற்கால சில மனிதர் செயல் தார்வி[illegible] கூறிய குரங்கே மனிதனுக்குகிறான் எ[illegible] ஸித்தாந்தத்திற்கு ஏற்றதாயிருக்கிறது?

பழயதே சிறந்தது! வக்கீல் சங்க பெ[illegible] விழாவில் பழய வக்கீல்களைப்போல் சிற[illegible] வாதிகளில்லை என்கிறார் ஒருவர்! ந[illegible] பண்டைய ஆகாரம் கீரை முதலியவைகளை[illegible] போல் பலமளிப்பது வேறெதுவுமில்லை [illegible] வைத்ய கலாசாலை தலைவர் டிரைநிங் கா[illegible] மாணவருக்குபதேசிக்கிறார்!

சலுகை சண்டை கூடாது! பாம்[illegible] ரேடியோவில் கனம் ஆகாகான் உலக ஷ[illegible] தானத்திற்கு வழி ஒரு ஜாதிக்கு ப்ரத்[illegible] சலுகை—ராஜகிய விஷயத்தில் கூடா[illegible] ஜாதிச்சண்டை கூடாதென்றார். யார் [illegible] பார்?

## அனந்தப்பூர்.

### அத்வைத ஸபா.

ஷை சபாவின் ஆதரவில் பிரம்மஸ்ரீ சுந்[illegible] சாஸ்திருலுவினால் மூன்று வருஷகா[illegible] மாக படிக்கப்பட்டு வந்த மஹாபாரதமு[illegible] ஹரி வம்சமும் போன ஞாயிற்றுக்கிழ[illegible] [22 1 39] ஸ்ரீகிருஷ்ணனின் கிரு[illegible] யில் முடிவடைந்து பட்டாபிஷேகம் நட[illegible] தப்பட்டது. அதின் முடிவைக் கொண்[illegible] டாட ஓர் சமாராதனை நடத்தப் பட்ட[illegible] அன்று சாயங்கலம் வேதபாராயணமு[illegible] கிருஷ்ணபட ஊர்வலமும் நடத்தப்பட்ட[illegible] தேவி பாகவதம் ஆரம்பமாகிறது. ந. நி.

## "தார்மிக சக்ரவர்த்தி" பிருது.

### கோச்சி மஹாராஜாவுக்கு வழங்கப்பட்ட[illegible]

சென்ற வருஷம் சென்னையில் நட[illegible] அகில பாரதீய ஸநாதன வித்வத் பரிஷ[illegible] னால் கொச்சி மஹாராஜாவுக்கு அளிக்கப்ப[illegible] டிருந்த "தார்மிகசக்ரவர்த்தி" என்ற பிரு[illegible] அடங்கிய தங்க மெடல் மஹாராஜாவுக்[illegible] 29உ யன்று அளிக்கப்பட்டது.

ஸ்ரீமான் என். நடேசய்யர் முதலிய ஸ[illegible] தன பிரமுகர்கள் பலர் அச்சமயம் அங்[illegible] விஜயமாகியிருந்தனர். பரிஷத்தின் தலை[illegible] ராயிருந்த ஸ்ரீமதித்யாதி ஸ்ரீயதுகிரி ஸம்ப[illegible] குமாராமானுஜ ஜீயர்ஸ்வாமிகளும் இதற்க[illegible] கொச்சிக்கு எழுந்தருளி தாமே நேரில் இ[illegible] பிருதத்தை மஹாராஜாவுக்குச் சூட்டின[illegible] அச்சமயம் மஹாராஜாவின் தர்மஉறுதியை[illegible] பற்றியும் மற்ற குணங்களைப்பற்றியும் சி[illegible] கித்து ஸ்ரீ ஜீயர்ஸ்வாமிகள் ஸம்ஸ்கிருதத்தி[illegible] சிறந்த பிரஸங்கமொன்று செய்தார்,

மஹாராஜாவினால் நடத்தப்பட்ட தர்ப[illegible] நிமித்தமாக மாகாணத்தின் பலவிடங்களி[illegible] ருந்தும் அனேக பிரமுகர்கள் கொச்சி வி[illegible] யம் செய்து மஹாராஜாவின் நிர்வாஹத்தை[illegible] பாராட்டி விசேஷமாக பிரஸங்கம் புரிந்தன[illegible]

## புதிய ஜட்ஜுகள்.

சென்னை ஹைகோர்ட்டில் ஸ்ரீமான் மா[illegible] வன் நாயர் விலகிய ஸ்தானத்தில் ஸ்ரீ மா[illegible] ஸோமய்யா என்ற கனவான் சாச்வத ஜ[illegible] ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜஸ்டிஸ் கிங்[illegible] ராஜாவில் போவதால் அவருக்குப்பதிலாக ஒ[illegible] வெள்ளைக்காரர் தத்காலிகமாக நியமிக்கப்ப[illegible] டிருக்கிறார்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்யஹூ தை-மீ 20௳

## காங்கிரஸில் நெருக்கடி நிலைமை

திரிபுரி காங்கிரஸ் தலைமைப் பதவி விஷயமாக காங்கிரஸ் தலைவர்களுள் விவாத மேற்பட்டதைக் கொண்டும், ஸ்ரீமான் போஸ் வெற்றியடைந்திருப்பதைக்கொண்டும், காங்கிரஸிலும், இந்திய ராஜிய நிலைமையிலும் நெருக்கடி ஏற்படுமென்று தலைவர்களின் கூற்றுக்களாலேயே நினைக்கவேண்டியிருக்கிறது. பொதுவாக ஒருவரே சேர்ந்தாற்போல் இரண்டு வருஷம் தலைவர் பதவி வகிப்பதென்று வழக்கத்திலில்லை. ஆயினும் சென்ற இரண்டுவர்ஷங்களில் ஸ்ரீமான் நேரு தொடர்ந்து இரண்டு வருஷம் தலைமைப் பதவியை வகித்தார். இதற்கு விசேஷ காரணமிருந்ததுடன் நேருவிற்குப் போட்டியில்லாததும் ஓர் காரமாயிருந்ததென்று ஸ்ரீ படேல் ஸமாதானம் கூறினார். இந்த ந்யாயத்தை அநுஸரித்து ஸ்ரீமான் போஸ் மீண்டும் தாமே தலைமைப் பதவிக்கு நிற்கப்போவதாகச் சில தினங்களுக்கு முன் அறிவித்தார். கார்யக்கமிட்டி மெம்பர்களான ஸ்ரீமான் படேல் முதலிய பிரபலஸ்தர்கள் காந்திஜியின் அநுமதிபெற்று பட்டாபி ஸீதாராமய்யாவே நிற்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டனர். ஸ்ரீமான் போஸே மறுபடி நிற்பதற்கு விசேஷ காரணமொன்றும் இப்போதில்லையென்றும், ஸமஷ்டி எதிர்ப்புத்திட்டமானது காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்ட விஷயமாததால் எந்தத் தலைவரும் அதைப் புறக்கணிக்க முடியாதென்றும், இந்த விசேஷ காரணத்திற்காக ஸ்ரீ போஸே இருந்தாகவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லையென்றும் அபிப்பிராயப்பட்டனர். ஆயினும் ஸ்ரீமான் போஸ் தாம் விலக இணங்கவில்லை. காந்திஜியும், மற்ற காங்கிரஸ் தலைவர்களும் தம்மை ஆதரிக்காததுஸ்ரீ போஸுக்கு ஸ்பஷ்டமாகத்தெரிந்திருந்தும் அவர் பிடிவாதம் செய்தார். அத்துடன் அவர் காங்கிரஸ் தலைவர்களுக்குள், மிதவாதிகள், தீவ்ர வாதிகள், என்ற பிரிவையும் வெளியிட்டு, தம்மை எதிர்க்கும், காந்திஜி, படேல் போன்றவர்களை மிதவாத கோஷ்டியினராக விலக்கிவிட்டு தீவ்ரவாதிகளுடைய பிரதிநிதியாகத் தாம நிற்கப்போவதாக அறிவித்தார். ஸமஷ்டியை ஏற்றுக்கொண்டுவிட மிதவாதிகள் "ரூழ்ச்சி" செய்வதாயும் ஸமஷ்டி மந்திரிகளின் ஜாப்தாவைக் கூட அவர்கள் தங்களுக்குள் தயார் செய்துவைத்துக்கொண்டிருப்பதாயும், அந்த எண்ணத்தை நிறைவேற்றவே டாக்டர் பட்டாபியை அவர்கள் நிற்கவைத்திருப்பதாயும் சொல்லலானார். காங்கிரஸில் ஏதேச்சாதிகாரிகள் சிலர் இருப்பதாக ஸ்ரீ போஸ்பகிரங்கமாகக் குறை சொல்லவும் தயங்கவில்லை. ஆகவே பலத்த போட்டியுடன் தேர்தல் நடைபெற்றது.

ஸுபாஷ் போஸ் நூறு ஓட்டுக்களுக் கதிகமாகப் பெற்று வெற்றியடைந்தார். குறிப்பிட்ட ஒரு கொள்கையை ஆதாரமாகக் கொண்டு இவர் வெற்றி யடைந்திருப்பதாக நிலைக்க வேண்டியிருப்பதால், அந்தக் கொள்கையே வெற்றி யடைந்திருப்பதாக ஜனநாயக சாஸ்திரப்படி நினைப்பது ஸாதாரணமானது. காந்திஜியுள்பட மிதவாதிகளை எதிர்த்து நின்று இவர் வெற்றி பெற்றதால், பெரும்பாலோரான காங்கிரஸ் காரர்கள் காந்திஜியையோ, அவர் கொள்கைகளையோ ஏற்கவில்லையென்று திட்டமாக அர்த்தம் செய்ய வேண்டியிருக்கிறது. அதை ஸ்ரீமான் காந்திஜியே ஒரு அறிக்கை மூலம் வெளியிட்டிருக்கிறார். ஸுபாஷ் போஸ் மறுபடியும் தலைவராக வருவதைத் தாம் ஆக்ஷேபித்தாயும், பட்டாபியை ஆதரித்ததாயும், இப்போது காங்கிரஸ் ஓட்டர்கள் ஓட் செய்திருப்பதிலிருந்துபட்டாபியை ஆதரித்ததனக்கே தோல்வி ஏற்பட்டிருப்பதாயும், ஆகையால் இப்போதுள்ள தீவ்ரவாதிகளான மெஜாரிடிக் கக்ஷியாரின் கொள்கைப்படி நடப்பவர்களே இனி கார்யக் கமிட்டியில் இருக்கவேண்டியதென்றும் இப்போதுள்ள மிதவாதிகள் விலகிவிட வேண்டியதே உசிதமென்றும் காந்திஜி அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார். மாகாண மந்திரிகளும் இதுவரையில் கார்யக்கமிட்டியின் அபிப்பிராயப்படி நடந்து வந்தவர்களாகையால் இனி அவர்களுடைய நிலைமைகஷ்டமானதயிருக்குமென்றும் அவர்கள், ராஜிநாமா செய்வதோ, வேலை செய்வதோ புதிய கார்யக்கமிட்டியின் அபிப்பிராயத்தையே அநுஸரித்ததாயிருக்குமென்றும் காந்திஜீ கூறுகிறார். காந்திஜியின் இந்த அறிக்கையால், தலைவர்களுள் திட்டமாக அபிப்பிராய பேதமிருப்பதும், தம்மை சேர்ந்தவர்கள் விலகி விட வேண்டுமென்று காந்திஜி வழி காட்டி யிருப்பதும் தெளிவாக தெரிகிறது. இந்த ஆலோசனைப்படி, படேல் முதலியவர்கள் விலகி நிற்கவும், ஆலோசனை கூறுவதிலிருந்து ஒதுங்கி நிற்கவும் முற்பட்டால், இவர்களை அநுஸரித்து சில மாகாண மந்திரிகளும் விலகிவிட நேரிடும். ஆகவே, காங்கிரஸில் பிளவு ஏற்படுவதுடன் அதன் மூலமாக தேசத்தில் ராஜிய நெருக்கடியும் ஏற்படக்கூடும்.

ஆனால் ஸ்ரீமான் போஸ் இப்படியெல்லாம் பிளவு ஏற்படாதென்று சொல்லுகிறார். ஏற்கனவே, தீவ்ர வாதியான ஒரு தலைவரின் கீழ் கார்யக்கமிட்டி மிதவாதிகள் ஒற்றுமைத்தது போல், இப்போதும் ஒத்துழைக்க இடமிருப்பதாயும், தலைவர் பதவிக்கும் ஓர் மிதவாதியைப்புகுத்தச்சிலர் முயற்சித்ததையே தாம் எதிர்த்ததாயும், மற்றபடி காங்கிரஸ் வேலைகளெல்லாம் முன்போலவே நடைபெறுமென்றும் ஸ்ரீ போஸ் கூறுகிறார். ஆயினும் காந்திஜி மைனாரிடிகளான மிதவாதிகளுக்குக் காட்டியுள்ள வழியைப்பார்த்தால் பிளவுஏற்படுவது நிச்சயமென்று பல ராஜிய வாதிகள் நினைக்கிறார்கள். எப்படியும் எதிர்கால நிலைமையானது தலைவர்களின் புத்திசாலித்தனத்தையும், பொறுப்பையும் ஒற்றுமையையும் பொறுத்ததாக இருக்கிறது.

ஸ்ரீ போஸுக்குக்கிடைத்த வெற்றியைப் பரிசீலித்தால் இதில் சில விசேஷங்கள் புலப்படும். காங்கிரஸ் காரர்கள் ஒற்றுமையை விருத்தி செய்யவேண்டி, ஒற்றுமைக்கு விரோதியான ஜாதி, மத பேதங்களை விட்டு விடவேண்டும் என்று பொது ஜனங்களுக்கு உபதேசிக்கிறார்கள். ஆயினும் தற்போது பெரிய தலைவர்களுக்குள்ளேயே, தங்கள் தங்கள் மாகாணம், பாஷை விஷயமாக பேத புத்தி அதிகமாகிவிட்டது. தமிழ் தெலுங்கு, கூர்ஜரம் மஹாராஷ்ட்ரம், வங்காளி, பிஹாரி, முதலிய பாஷை, மாகாண வேற்றுமைகளைத் தலைவர்களே ஆதரித்து வளர்க்கிறார்கள். இந்த வேற்றுமையின் பின்னமும் ஸ்ரீபோஸ் எலெக்ஷனில் ஒருவாறு பிரதி பலிக்கிறதெனலாம்.

மேலும், அநேக மாகாணங்கள், அபேத வாதம் போன்ற தீவ்ரவாதத்தில் மூழ்கிகொண்டிருப்பதும் இந்த எலெக்ஷனிலிருந்து வெளியாகிறது. மத்யமாகாணம், பிஹார், கோளம் போன்றவிடங்களில் பதிவான வோட்டுக்களைக் கவனித்தால் இது நன்கு புலனாகும்.

காங்கிரஸ்காரர்கள் வெளியில் நின்று பேசியபோது ஜனங்களை வசப்படுத்தப் பல விதத் தீவ்ர திட்டங்களைப் பேசினார்கள். ஆனால் அவர்கள் பதவியேற்றதும் அவைகளை நிறைவேற்றமுடியவில்லை. தீவ்ர வாதிகளோ, வாக்குறுதிப்படி செய்யவேண்டுமென்று மந்திரிகளை நிர்ப்பந்திக்கிறார்கள். மிதவாத மந்திரிகளையும், மிதவாதக் காங்கிரஸ் நிர்வாஹிகளையும் விலக்கிவிட்டுத் தாங்கள் புகுந்து தீவ்ர திட்டத்தை நிறைவேற்றி வைக்க இப்போது தீவ்ரவாதிகள் விரும்புகிறார்கள். நிர்வாஹத்தில் புகுந்தால் அவர்களும் பின்வாங்கவேண்டி வருமென்பது நிச்சயம். ஆயினும் தீவ்ர மனோபாவத்தை விருத்திசெய்த குற்றம், தற்போது மிதவாதிகளாக வர்ணிக்கப்படுகிறவர்களால் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதை அவர்களாலேயே அடக்கமுடியவில்லை. போஸ்வெற்றியிலிருந்து இந்த உண்மையும் வெளியாகிறது.

## குறிப்பு.

### டாக்டர் ராஜனின் அலக்ஷ்யப் பேச்சு!

சென்னை ராஜாங்க ஸபையில் கனம் ராஜன் தமது அருமையான ஸுகாதார மசோதாவை ஆஜர்செய்து பேசுகையில், அந்த மசோதாவிற்கு மாகாணமெங்கும் நல்ல ஆதரவு இருந்துவருவதாயும், ஆனால் ஒரு வர்ணாச்ரமி மட்டும் இந்த மசோதாவை ஆக்ஷேபிப்பதாயும், வர்ணாச்ரம தர்மங்களுக்கு இந்த மசோதா பாதகம் விளைப்பதாக அவர் கூறுகிறாரென்றும் ஆயினும், அந்த வர்ணாச்ரமியினுடைய வார்த்தைக்கு எவ்வளவு மதிப்பு வைக்கவேண்டுமோ அதை வைத்து, அந்த அபிப்பிராயத்தைத் தள்ளிவிடுவதே தமது கடமையென்றும் வெகு அலக்ஷ்யமாகப் பேசியிருக்கிறார்.

மெஜாரிடி பலம் படைத்த காங்கிரஸ் மந்திரிகள் இம்மாதிரியே எதிர்கக்ஷியாரை அலக்ஷ்யமாய் நடத்தும் கொடுமையைப்பற்றி அநேகர் புகார் செய்து வருகிறார்கள். இதன் விபரீத பலனையும் அவர்கள் அநுபவிக்க நேர்ந்திருக்கிறது. இனியாவது எதிர் அபிப்பிராயங்களை மதிக்கும் குணம் இவர்களுக்கு ஏற்படுமென்று நம்புவோம்.

வர்ணாச்ரம ஸ்வராஜ்யஸங்கத்தார், பொது ஸுகாதார மசோதாவிலுள்ள சில தர்ம விருத்தமான அம்சங்களை முன்னிட்டு அந்த மசோதாவை ஆக்ஷேபித்திருக்கிறார்கள். ஆகையால் அந்த ஸங்கத்தைச் சேர்ந்த ஒருவருடைய ஆக்ஷேபமானது அந்த ஸபையின் அபிப்பிராயத்தையே வெளியிடுவதாகும். அந்த ஸங்கத்தில் ஆயிரக்கணக்கான மெம்பர்கள் இருக்கிறார்கள். ஆதலால் ஒருவர்ணாச்ரமி மட்டுமே ஆக்ஷேபித்தாரென்று கனம் ராஜன் கூறுவது அர்த்தமற்றதாகும்.

அந்த மசோதாவில் ஸமூஹ- மதாசாரங்களுக்கு இடையூறு விளைக்கக் கூடிய அம்சங்களிருப்பதை ஸநாதனத் தலைவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஸுகாதார இலாகாவிலுள்ள எந்த ஜாதியானும், ஒரு பிராம்மணன் அல்லது ஆசாரமுள்ள ஜாதி ஹிந்துவினுடைய வீட்டில் நினைத்தபோது நிர்ப்பந்தமாக நுழைய அதிகாரமிருக்கிறது. இது ஆலயப் பிரவேசச் சட்டத்தை விட கொடியதல்லவா? தேவால உத்ஸவகாலத்திலும், வேறு ஸந்தர்பங்களிலும் ஸுகாதாரமென்ற வியாஜத்தால் பொது ஜனங்களுடைய ஆசாரத்தை பாதிக்கக் கூடிய நிர்பந்தங்கள் இருப்பதாக அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

டாக்டர் ராஜன், அவர்களுடைய ஆக்ஷேபங்களை ஒவ்வொன்றாக எடுத்துச் சமாதானம் கூறியிருக்கவேண்டியதே அவருடைய தெளிவான கடமையாகும். தார்மிகர்களுடைய ஒவ்வொரு ஆக்ஷேபங்களுக்கும் விஸ்தாரமாக பதில் கூறாவிட்டாலும் சுருக்கமாக கனம் மந்திரி பதில் சொல்லியிருக்கலாம். அப்போது மத்யஸ்தர்கள் அதன் நியாயங்களை வெகு ஸுலபமாக அறிந்து கொண்டிருப்பார்கள் டாக்டர் ராஜனின் அலக்ஷ்யப்பேச்சுக்கும் தகுந்த பதில் கொடுக்கப்பட்டிருக்கும்.

இம்மாதிரி எதிர்கக்ஷியாரை அலக்ஷ்யம் செய்வதை இவர்களிடமிருந்தே கற்றுக் கொண்டிருக்கும் தீவ்ர வாதிகள், இப்போது கனம் ராஜனைப்போன்றவர்களையோ, அல்லது காந்திஜியையோ அலக்ஷ்யமாகப் பேசவும், அகௌரவமாக நடத்தவும் முன்வந்திருப்பதை கனம் மந்திரியும் அவரது ஸகாக்களும் பார்த்துவருகிறார்கள்.



63

## அகில பாரதீய ஸ்வராஜ்ய ஸங்கத்தின் 11-வது மகாதிவேசனத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) இந்த மகாதிவேசனமானது கீழே குறிப்பிடப்பட்ட மஹானுபாவர்கள் பரலோகம் சென்றதைக் குறித்து அநுதாபம் தெரிவிக்கிறது; ஸ்வர்க்கம் சென்றவையான அவர்களின் ஆத்மாக்கள் சாசுவதமான சாந்தியை அடைவதற்கு ஜகதீசுவரனிடம் பிரார்த்தனை செய்கிறது; அவர்களின் நெருங்கின உறவினர்களுக்கு அதிவேசனத்தார் தங்களுடைய அநுதாபத்தைத்தெரிவிக்கிறார்கள்:-

1. ஸ்ரீ மஹாமஹோபாத்யாய கிருஷ்ண சாஸ்திரிகள், 2. பண்டித காசிநாத சாஸ்திரிகள், (கர்ம சாஸ்திரி) 3. ஸ்வாமி பிர்மானந்த ஸரஸ்வதி, 4 ஸ்ரீமான் பாடியாலா அரசர், 5. ஸ்ரீமான் பண்டித ரணவீரதத்த திரிபாடி, ஸாமவேத அத்யபகர் (காசி) 6. ராஜா சந்திரசூட பிரஸாதஸிம்ஹ பகதூர் (கிதோர்) 7. ஸ்ரீமான் N. ஸ்ரீநிவாஸாசார்யார், (வைஸ் பிரஸிடெண்ட் மதருஸ் சங்கம்.) 8. ராவ்பகதூர், ஸர்தார் ஜ்வாலாஸஹாய், மாஜித்தலைவர் வர்ணாச்ரம சங்கம் (பஞ்சாப்), 9 ஸ்ரீ நாராயண சங்கரதேவ சங்கர பிராணாசார்யர், (அகமதபாத்) 10. ஸ்ரீ கோவர்த்தன தாஸ் பாய், வக்கீல், (ராஜ்கோட்) 11. ஸ்வாமி ஸ்வரூபானந்த மண்டலேச்வார், 12. பகவான் உபேந்திராசார்யார், 13. ஆசார்ய ஸ்ரீ வாஸுதேவ சியாம்ஜீ (அகமதாபாத்) 14. பண்டித கிரிஜாசங்கர சாஸ்திரி (அகமதபாத்) 15. மஹாமஹோபாத்யாய முகுந்தஜா (பக்ஷி) காசி. 16. ஸ்ரீஜனார்த்தன ராவ் முஜும்தார் (டிமர்ணி) 17. ஸ்ரீநாராயணஜீபந்த் (சந்தாஸ்)

### தர்ம பிரசார வழிகள்.

(2) நம்முடைய வைதிக தர்மம், வைதிக ஸம்ஸ்காரம், பழைய வழக்கங்கள், இவைகளை வேருடன் களைவதற்காக, உள்ளும் புறமும் பலமான ஆக்கிரமணங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன; எதிரிகளின் ஏமாற்றல்களால் மயங்கி, ஹிந்து ஜனங்கள், இன்ன செய்வதென்று அறியாமல் தினந்தோறும் தாழ்ந்த நிலைமையை அடைந்துகொண்டிருக்கிறார்கள் என்பது, பாரத நாட்டின் தற்கால நிலைமையைப்பற்றி யாலோசனை செய்கிற இந்த மகாதிவேசனத்தின் அனுபவத்தில் புலப்படுகிறது.

இந்த ஸ்திதியில் ஸநாதன தார்மிகள் கீழே குறிப்பிடப்பட்டிருக்கிற ஸாதனங்களைக் கொண்டு - கைதூக்கி விடுவதற்காகப் பலமான முயற்சிகள் செய்யவேண்டும்.

(அ) அகில பாரதீய ஸம்ஸ்கிருத விசுவவித்யாலயம் (Univasity) ஸ்தாபித்தல்.

(ஆ) நகரங்கள் முதல் கிராமங்கள் வரை, அங்கங்கே ஸநாதன வைதிக ஸம்ஸ்காரங்களைப் பரிபாலிப்பதற்காக, வித்தியாலயங்களை ஸ்தாபித்தல்; ஏற்கனவே இருக்கும் இவ்வித வித்யாலயங்களில் தர்மங்களைக் கற்பிப்பதற்காகச் சிறந்த ஏற்பாடுகளைச்செய்தல்.

(இ) ஸநாதன வைதிக தர்மங்களின் ஸித்தாந்தங்கள், ரகஸ்யங்கள், இவைகளை ஹிந்து ஜனங்களுக்குப் போதித்தல், தற்கால நிலைமையை அவர்களுக்குத் தெரியப்படுத்தி, அதைச் சீர்படுத்துவதற்காகக் கிராமங்கள் தோறும் ஸநாதன தர்ம சம்பந்தமான புஸ்தகங்கள் நிறைந்த புஸ்தக சாலைகளை ஸ்தாபித்தல். வர்த்தமானபத்திரங்கள் (Newspapers) மூலமாகவோ அல்லது உபதேசகர்கள் மூலமாகவோ, தர்மப் பிரசாரம் செய்விப்பதற்காகப் பலமான முயற்சிகளைச் செய்தல்.

(ஈ) தர்மாதாய வருமானங்களைப் பாதுகாத்தலைப்பற்றி விசேஷமாகக் கவனித்தல்; அவைகள் யோக்கியதையற்ற டிரஸ்டிகளின் கையிலகப்பட்டுத் துர்விநியோகம் செய்யப்படாதபடி காத்தல்.

(உ) ஸநாதன தர்ம உபதேசகர்கள், கதை செய்பவர்கள், பிரசாரகர்கள், பத்திராதிபர்கள், இவர்களை நியமித்தல்; மேலும் தர்மவீரதளம், ஸநாதன தர்மஸேவக மண்டலம், இவைகளை ஸ்தாபிப்பதற்காக முயற்சி செய்தல்.

(ஊ) அஸெம்பிளி, கௌன்ஸில், முனிசிப்பல் போர்டு முதலான சபைகளுக்கு ஸநாதநிகளான மெம்பர்களுக்கு "வோட்டு"ச் செய்து அவர்களையே அந்தச் சபைகளுக்கு அனுப்பும்படி பலமான முயற்சி செய்தல்.

(எ) பசுக்களை ரக்ஷிப்பதற்காகத் தீர்க்காலோசனை செய்தல், ஆயுர்வேத வித்யையையும், விவசாயத்தையும் விருத்தி செய்தல்.

(ஏ) சீர்திருத்தக்காரர் என்று சொல்லப்படும் எதிரிகளுக்கு ஸநாதன தார்மிகள் பொருள் உதவிசெய்யவாவது, அவ்வெதிரிகளுடன் சேர்க்கை வைத்துக் கொள்ளவாவது, கூடாதென்று தடுத்தல்.

(ஐ) தெய்வாலயம் முதலிய தர்மஸ்தானங்களை எல்லாவிதத்தாலும் ஸம்ரக்ஷணை செய்தல்.

(ஒ) பாரத நாட்டிலுள்ள மடங்கள், ஆலயங்கள், ஸம்பிரதாயங்கள், மற்ற ஸநாதன தர்மஸ்தாபனங்கள், இவைகளைத் தர்மம் வழுவாது, கூடி ஆலோசித்து நடத்தும்படி செய்தல்; அவைகளை ஆராய்ந்து சீர்திருத்தல்.

(ஓ) அவசியம் நேரிடும்போது "தர்மாக்கிரகம்" (தர்மத்தில் உறுதி கொள்ளல்) செய்வதற்காகத் தயார் செய்தல். மேலே குறிப்பிடப்பட்ட காரியங்களைத் தனிமையாகவோ, ஒன்றுகூடியோ, எவர்கள் செல்கிறார்களோ, அவர்களை உற்சாகப்படுத்தல், அவர்களுடன் சேர்ந்து உதவி புரிதலுமாம்.

### கோ ரக்ஷணம்.

(3) தர்மப்பிரதானமானதும் கிருஷிப்பிரதானமுமான பாரத நாட்டில், பசுக்களின் ரக்ஷணத்துக்காகச் சட்டங்கள் வெகு சீக்கிரமாகச் செய்ய வேண்டியது. மிகவும் அவசியமானதென்று இந்தமஹா திவேசனத்தினர் அபிப்பிராயம் கொள்கிறார்கள். பெரும்பாலான மாகாணங்களில் கௌன்ஸில்கள் தங்களுக்குச் சட்டம் இயற்றுவதற்கு அதிகாரம் கிடைத்திருந்தும், ஜனப்பிரதிநிதிகள் இந்தப் பெரிய விஷயத்தில் சற்றுவது கவலையெடுத்துக்கொள்ளவில்லை யென்பதைப்பற்றி வருத்தத்துடன் வெளியிடவேண்டியிருக்கிறது.

ஆகையால், கூடுமான உபாயங்களால், பாரத நாட்டில் பசுவைக்கொல்லுதல், என்பதைக்கட்டோடு நிறுத்துவதற்காகச் சட்டஸபைகளில் முயற்சித்தல் அவசியமானதென்று இந்த அதிவேசனம் கருதுகிறது.

### மத விஷயத்தில் சட்டம் செய்தல்.

(4) ஹிந்துஜனங்களுக்கு விரோதம் செய்வதுடன் "காங்கிரஸ்" ஸர்க்கார் "பம்பாயில் தீண்டாதாருக்கு ஆலயப்பிரவேச அனுமதிச் சட்டம்" மலபாரில் அந்நியஜர்களுக்கு ஆலயப்பிரவேசச் சட்டம், முதலான சட்டங்களைச் சிருஷ்டி செய்து ஸநாதன ஹிந்துக்களுக்கு மிக்க அந்நியாயம் செய்திருக்கிறார்கள்.

மேலும் "விவாஹ ரத்து மசோதா" "தர்மதாயங்களின் வருமானத்தைக் குறித்த மசோதா", இவ்விதமான தர்மத்தைக்கெடுக்கக்கூடியமசோதாக்களைக்கௌன்ஸில்களில் மேன்மேலும் கொண்டு வருகிறார்கள் என்பதை இந்த மஹாதிவேசனத்தார் துக்கத்துடன் காண்கிறார்கள். இவ்விதமான தர்ம விரோதச்சட்டங்களை இந்த அதிவேசனத்தார் பலமாகக் கண்டிக்கிறார்கள். மேலும் இவ்வித தர்மத்துரோகமான சட்டங்களால் தங்கள் தர்மம், மரியாதை, இவைகள் கெடுக்கப்படுவதை இனி பொருத்திருக்க முடியாதென்றும், இவ்விதமான அக்கிரமச்சட்டங்களால் ஏற்படுகிற அமைதியின்மை (கலகம்)க்குப் பாத்தியப்பட்டவர்கள் "காங்கிரஸ்" ஸர்க்காரேதான் என்றும் இந்த சம்மேளனத்தார் "காங்கிஸ்"காரர்களுக்கு அறிவிக்கிறார்கள்.

(தொடரும்)

## ஆலயப்பிரவேச எதிர்ப்பு ஜதா.

### மலையாளத்தில் ஏற்பாடு.

மலையாள ஆலயப்பிரவேச மசோதாவிற்கு கவர்னர் ஸம்மதியளித்து விட்டார். சீக்ரத்தில் ரெபெரெண்டம் எடுக்க ஏற்பாடு நடக்கும். ஆகம விதிகளின் படி ஆலயத்தின் பரிசுத்தியைக்காப்பாற்ற பொது ஜனங்களிடையில் தீவ்ர பிரசாரம் செய்ய வேண்டும். இதற்காக மலையாளத்தில் சுற்றுப் பிரயாணம் செய்ய ஓர் தார்மிக ஜதா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காசி ஸ்ரீமான் யூ பி கிருஷ்ணமாசாரியார் இதற்குத்தலைவராக இருப்பார். 30 யுவர்கள் இந்த ஜதாவில் தற்காலம் இருப்பார்கள். பிப்ரவரி 2௳யில் பாலக்காட்டிலிருந்து புறப்பட்டு பொன்னானிதாலூகாவில் பிரசாரம் நடத்தி மாதக்கடைசியில் குருவாயூர் போய் அங்கும் தீவ்ர பிரசாரம் செய்யப்படும்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Nellore.

# தென்னாற்காடு ஜில்லா

# ஸநாதனதர்ம மஹாநாடு.

வரவேற்புத்தலைவர்

ஸ்ரீமான் தி. ஈ. சடகோபாசாரியாரின் பிரஸங்கம்.

(26—1—39 தொடர்ச்சி)

ஆனால் இந்த விஷயம் எந்த ஸந்தர்ப்பத்தில் எந்த காரணத்தை உத்தேசித்து நமது சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்பதை ஒருவரும் கவனித்ததாகத் தெரியவில்லை. ஸ்த்ரீகள் அபலைகளாகையால் அவர்களை பால்யத்தில் தகப்பனாரும், யௌவனகாலத்தில் பர்த்தாவும், வயது முதிர்ந்த காலத்தில் பிள்ளைகளும் ரக்ஷிக்கவேண்டுமென்று சொல்லிப் பிறகு ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ர்யம் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு ஸ்வாதந்த்ரயம் என்றால் ஜீவனார்த்தமாகத் தன்னையே நம்பி இருப்பதென்று பொருள். வேறுவிதமாய் அர்த்தம்கொண்டால் ஸந்தர்ப்பத்துக்கு இசையாது. ஆகையால் இங்கு ஸ்த்ரீகளை புருஷர்கள் எல்லா காலங்களிலும் ஆதரித்துப் போஷிக்கவேண்டியது கடமையென்றும், அவர்களைத் தங்கள் ஜீவனோபாய விஷயமாய்த் தங்கள் கையையே பார்த்திருக்கும்படி விடுவது தவறுதலென்றும் விதிக்கப்பட்டிருக்கிறதே தவிர ஸ்த்ரீகளுக்கு அடிமைத்தனத்தை விதித்ததாக புத்தியுள்ளவர்கள் நினைக்க இடமிருக்கிறதாவென்பது எல்லோரும் கவனிக்கவேண்டியது. இப்படி ஸ்திரீகளை அருமைப் பொருளாய் வைத்து புஷ்பம்போலவும், ரத்னம்போலவும் ரக்ஷிக்கவேண்டுமென்று நம் க்ரந்தங்கள் யாவும் அறுதியிடுகின்றன. விவாஹ மந்த்ரத்தில் முதலெடுப்பில் கன்னிகையைப் பார்த்து 'நீ உன் பதியின் வீட்டில் மாமியார், நாத்தனார் முதலிய எல்லோருக்கும் மஹாராணியாய் இருக்கவேண்டும். உன் பதியின் தலையின்மீது பூஷணமாய் விளங்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது.' இதெல்லாம் ஸ்த்ரீகளுக்கு கௌரவத்தைச் செய்யும் வழியா, வேறு என்பதை நன்கு கவனிக்கவேண்டும். எந்தவீட்டில் நாட்டுப்பெண் கண்ணீர் பூமியில் விழுகிறதோ அந்த வீடு உடனே நாசமடையும் என்று மனு உறுதியாய்க் கூறியிருக்கிறார். இதுகளெல்லாவற்றையும் கவனித்தால் ஸ்த்ரீகளுக்கு உண்மையான கௌரவமும், அன்பும், பூஜையும் நம் நாட்டில் நடைபெறுகிறதே தவிர வேறெங்குமில்லையென்பதும், மீதி தேசங்களில் ஸ்வாதந்த்ரியம் முதலிய பேச்சுகள் எல்லாம் மேல்பூச்சே தவிர உண்மையில் ஸ்த்ரீகள் அவ்விடங்களில் ஜீவனோபாயமில்லாமல் படும் கஷ்டம் கணக்கில்லையென்றும், அது காரணமாகவே அங்கு ஸ்த்ரீகள் கற்பற்றுத் திரிவது ஸஹஜமாயிருக்கிறதென்றும் அத்தேசங்களில் போய் நேரில் பார்த்தவர் பலர் சொல்லிக் கேட்கிறோம். ஆகையால் இவ்வித துர்தசையை நம் நாட்டுக்குள் புகுரவிட்டு நமது ஒப்பற்ற இல்லற வாழ்க்கையைக் குலைக்கவேண்டுமென்று நம் ஜனங்களே முயற்சிப்பதைப் பார்த்தால் அளவற்ற துக்கம் மனதில் உண்டாகிறது.

பத்னீ என்கிற பதத்துக்கு யஞ்ஞம் முதலிய தர்மகார்யங்களில் பதியுடன்கூட இருந்து நடத்தும் அதிகாரம் வாய்ந்தவளென்று முன்பே கூறினோம். ஆகையால் விவாஹம் என்பது தர்மாநுஷ்டானத்துக்கு யோக்யதையைத் தரும் கர்ம விசேஷம் என்று ஸித்திக்கிறது. இதை சாஸ்த்ர ஸம்பந்தமான கர்மமல்ல. அவரவர் தம்தம் இஷ்டப்படிச் செய்துகொள்ளும் தக்கால ஏற்பாடு என்று சொல்வதும் அதன்படி நம் சட்டங்களை மாற்றிக்கொள்ள வேண்டுமென்றுரைப்பதும் கொஞ்சமும் யுக்தமாகாது. விவாஹம் ஒரு வைதிக ஸம்ஸ்காரமென்றே நம் சாஸ்த்ரங்களின் கொள்கை. ஆகையால் விவாஹ விஷயத்தைப்பற்றி எந்த சட்டம் செய்தாலும் அதை மதஸம்பந்தமான விஷயத்தில் பிரவேசிப்பதாகவே கொள்ளவேண்டும். ஏற்கனவே விவாக வயதைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் சாரதாச் சட்டத்தால் நம் மதத்துக்குப் பெருங்கேடு விளைவிக்கப்பட்டிருக்கிறது. அதை நிவர்த்தி செய்வதற்கு ஓயாமல் நம்மில் ஆஸ்திகர்கள் அனைவரும் முயற்சி செய்யவேண்டிய தவசியம். அதை ஏதோ நாம் ஒப்புக்கொண்டு விட்டதுபோலும். அதற்குமேல் இன்னும் பலவாறாக நம் விவாஹ க்ரமங்களை அழிப்பதற்காக புதுசட்டங்கள் செய்யத்துணிவுடன் பலர் முன்வருவதை நாம் ஸர்வ ப்ரயத்னமும் செய்து தடைசெய்யவேண்டிய தவச்யம்.

நம்முடைய சாஸ்த்ரங்களில் ஏற்பட்ட க்ரமங்கள் கவனித்துப் பார்த்தால் இயற்கையை அநுஸரித்து அவரவர்களுக்குத் தகுந்தபடி மேன்மையை அடையவும் அது வழியாக உலகமே மேன்மையை அடையவும் வழிகாட்டுகின்றன. மேல்நாட்டு நிபுணர்கள் கூட மனுஷ்யர்கள் செய்யும் கார்யங்களின் ப்ரதா[ன] நோக்கம் அதிக ஸங்கியையுள்ள ஜனங்களுக்கு அதிகமான ந[ன்]மையைத் தருவதுதான் என்று கூறுகிறார்கள். அவர்கள் ந[ம்] மஹரிஷிகள்போல் யோகமஹிமை வாய்ந்தவர்களல்லவாகையா[ல்] ஸர்வபூதங்களுக்கும் நன்மையுண்டாக்குவதே மனுஷ்யர்களி[ன்] உண்மையான நோக்கமென்று சொல்ல அவர்களுக்குத் தோன்[ற]வில்லை. அவ்வித ஸம்ஸ்காரம் இல்லாததால் அவர்கள் மனதி[ல்] அவ்வித பாவமே உதிக்க இடமுண்டாகவில்லை. ஆகையா[ல்] அவர்கள் தங்கள் யுக்திக் கெட்டியவரையில் தம் நோக்கத்தை[ச்] சொன்னார்கள். ஆனால் அதை எப்படி நிறைவேற்றுகிறதென்கி[ற] விஷயத்திலும் அவர்களுக்கு நிச்சய ஞானம் ஏற்படாததா[ல்] பல பேர் பல வழிகளைச் சொல்லி இன்னும் நிலைபெறுமலே த[டு]டித் தடுமாறுவதை நாம் நேரில் காண்கிறோம். இவ்வித அ[ஞ்]ஞானம்தான் மேல்நாட்டில் ஏற்படும் குளர்பாடுகளுக்கெல்லா[ம்] காரணம். நம்பெரியோர்கள் மஹர்ஷிகளானபடியால் அவர்க[ள்] தங்கள் ஞானதிருஷ்டியினாலும் வேதமாகிற தீபத்தின் ஸஹாய[த்]தாலும் தத்வத்தை ஸாக்ஷாத்தாக அறிந்து ஸர்வபூதங்களுக்[கும்] அநுகூலமான கார்யங்களாகிற தர்மங்களை வ்யக்தமாகக்கூ[றி] அவைகளை அநுஷ்டிக்கவேண்டிய ப்ரகாரங்களையும் விளக்கியிரு[க்]கிறார்கள். இந்த தர்மங்கள் ஸர்வலோகத்துக்கும் அநுகூலமான கார்யங்கள் என்பதற்கு ஸம்சயமேயில்லை. அநுகூலமென்னு[ம்] பதத்தினாலேயே இது விளங்கும். இதற்கு கரையை அநுஸரி[ப்ப]தென்று பொருள். அதாவது ஒரு நதியில் ஜலம்போகு[ம்] நோக்கை அநுஸரித்துச் செல்வது என்பதாகும். பகவானா[ல்] ஸ்ருஷ்டிக்கப்பட்ட இப் பிரபஞ்சத்தின் அமைப்பையும் அ[தி]லுள்ள பலவகைப்பட்ட ஸ்ருஷ்டிகளின் ஸ்வரூபத்தையும் ஸ்வ[பா]பாவத்தையும் அநுஸரித்து அவ்விதம் அமைத்தவனுடைய க[ருத்]த்தை யறிந்து அதற்கு அநுகுணமாய் நடப்பதுதான் அநுகூ[ல] நடையென்றும், தர்ம மார்க்கமென்றும் கூறப்படுகிறது அதற்கு விரோதமாய் நடப்பது ஆற்றில் எதிர் நீச்சு நீந்துவதுபோல் ப்ரதிகூல நடையென்றும், அதர்மமென்றும், தனக்கும் பிறர்க்கும் தீங்கை விளைவிக்குமென்றும், கூறப்படுகிறது இதன் தத்வத்தை பூர்ணமாய் நம்நாட்டில் அறிந்து நடவடிக்கை நடந்துவந்தா[ல]தான் இதுவரையில் வேறெந்த கஷ்டம் வந்தாலும் நம் வைதிக மார்க்கத்திலடங்கிய ஜன ஸமூஹத்துக்கு இல்லற ஸௌகமும் ஸமூஹ யோகக்ஷேமமும் நிலைத்திருந்தது. நமது ராஜாக்களில் வெகுச் சிறந்தவர்களாகக் கொண்டாடப்படும் ஸ்ரீராமர் முதலிய[வ]வர்களின் சிறப்பை கவிகள் வர்ணிக்கும்போது அவர்கள் நான்கு வர்ணத்தார்களையும் அவரவர்க்குள் வரம்புக்குள்ளடங்கி யிருக்கும்படி வ்யவஸ்தை செய்து பாதுகார்த்தார்கள் என்பதைப் பெரும்புகழாய்க் கூறியிருக்கிறார்கள். இதனால் சாதுர்வர்ண்யம் என்று வடமொழியில் வழங்கும் நான்கு ஜாதிக்கட்டுப்பாட்டடங்கிய ஆர்ய ஜனஸமூஹம் அதாவது நம் வைதிக மதத்தைச் சேர்ந்த ஜனஸமூஹம் (இதில் அநுலோம ப்ரதிலோம ஜாதிகளும் அதாவது சண்டாளர் முதலியவர்களும் அடங்கினவர்களென்றே கொள்ளவேண்டும்) வரப்பு வாய்க்கால் முதலியது ஒதுங்கப்பட்ட செய்கால் நிலம்போலும் இப்படி ஜாதிவரம்பில்லாத ம்லேச்ச ஜாதிகளென்று நம் முன்னோர்களால் குறிக்கப்பட்ட அநார்ய ஜனங்கள் காடு காம்புகள்போல் தர்ம வ்யவஸ்தை இல்லாதவைகளாகவும் பாவிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இப்போது நம் சீர்திருத்தக்காரர் வெகு அக்கறையுடன் உத்கோஷித்துச் செய்யும் ப்ரயத்னங்கள் எல்லாம் செய்காலைக் காடாக்குவதிலேயே முடிவு பெறுமே தவிர வேறில்லையென்பதை நிச்சயமாய் வைத்துக் கொள்ளலாம். காட்டைத் திருத்திச் செய்காலாக்குவது கண்டிருக்கிறோம். செய்காலைக் காடாக்கும் இந்த மார்க்கம் புதிதாகவே தோன்றுகிறது. எல்லாமறியும் இறைவன் விடும்வழி எதுவோ நாமறியோம். அவன் ஏற்படுத்திவைத்த தர்ம மார்க்கத்தை ஸம்ரக்ஷிக்கவேண்டியது அவன் பொறுப்பென்று நாமெல்லோரும் த்ரிகரண சுத்தியுடன் அவனைப் போற்றிப் பணிந்து பிரார்த்தித்தால் அவன் தன் உண்மையான பக்தர்களுக்கு ஆபத்துகாலத்தில் உதவி புரியாமல் கைவிடமாட்டானென்பது நிச்சயம்.

முற்றிற்று.



### யக்ஞம் ஹிம்ஸையா?

யக்ஞம் என்ற வடமொழி யஜ் பூஜை செய்ய என்ற அர்த்தம் கொண்ட பகுதியிலிருந்து வந்திருக்கிறது. யாருக்கு பூஜை செய்கிறது, யார் செய்கிறது, எப்படிச்செய்கிறது என்று கேள்விகள் பிறக்கின்றன. காசரணாதி அவயவங்களோடு நன்மை தீமையெனப் பகுத்தறிவுள்ள மனிதனே பூஜை செய்ய அர்ஹனாவான். எங்கும் நிறைந்துள்ள பகவானை, அசேதனமான அர்ச்சாதி பிம்பங்களிலும் இருப்பதாய் நினைத்த பழக்கத்தால் நம்மை சுற்றிலுமுள்ள சேதனங்களிலும் நிறைந்திருப்பவன் அவனே எனும் திடமான பிரஞ்ஜை ஏற்பட்டு வழிப்படும் மார்க்கம் தேட வேண்டும். மனதை நிலைப்படுத்துதல் எனும் புஷ்பத்தால் அக்கடவுளை வழிபடுதல் மிகச்சிறந்த முறை. அதைக்கையாடுதல் பழக்கத்தாலல்லது சாத்தியமல்ல.

மேற்கண்ட வழிபாட்டை, அகந்தை வழியாய்ச் செல்கிறவர்களை ஆகர்ஷிக்கும் தன்மைவாய்ந்தவனெனப் பொருள்படக் கூடிய பெயர் வாய்ந்த நம் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, சுலபமாகச் செய்யும்விதம் சொல்லியிருக்கிறார். அதாவது அவ்வவர்களுக்குரிய கடமைகளை ஒழுங்காய் செய்வது அவரவர்கள் 'தங்கள் வேலை செய்வது கடவுள் வழிபாடாகுமா? ஆச்சரியமாய்த் தோன்றும். எந்த சுலபமான காரியமாயினும் பலபேர் சஹாயம் வேண்டும். எல்லாக் காரியமும் ஒருவனே செய்யமாளாது. ஓர் ஊசியின் விலை ஒரு பை. அதைச் செய்யக் கருமான், இரும்புச் சுரங்க வேலைக்காரன், உலைவைக்கக்கரி ஆள் முதலிய பல ஆட்கள் தேவை. ஊசிக்காக கொடுத்த பை பலபேருக்கு ஊதியமாவதோடு, திறமை வாய்ந்த வேலை ஏற்படக் காரணமுமாகிறது. அவ்வவர்கள் வேலைகளை அவரவர்கள் எழுங்காய்க் கடவுளின் கட்டளையென மதித்துச் செய்துவிட்டால் உலகம் முன்னேற்றம்பெற வேறு வழி எதுவும் உண்டோ? ஆகையால் ஸ்வதர்மத்தை அநுஷ்டிப்பதால் கடவுளின் வழிபாடு சித்தியடையும். ஸ்வதர்மத்தை அனுஷ்டிக்க வேண்டிய முறை சுருதிகளில் மறைந்தும், ஸ்மிருதிகளில் விரித்தும் காண்கிறது. அந்த சுருதி ஸ்மிருதிகள் தன் ஆஞ்ஞையென்று ஸ்ரீகண்ணன் கீதையிலும் திட்டமாய் வரைந்துளான்.

ஸ்வதர்மாநுஷ்டானத்தின் பயனுகிய பசுபந்தம், ஸோம யாகம் வாஜபேயம் முதலியவை பிராம்மணர்களால் செய்யப்பட வேண்டியவை. அப்படிச்செய்து வருவதில் ஏதோ ஒன்று குண்டூரில் சமீபத்தில் நடந்த முன் வந்ததை தர்ம சூக்ஷ்மம் தெரியாத சிலர் "ஹிம்ஸை" யென்ற போக்கின் பேரில் விக்கினப்படுத்தினராம். ராஜன் ஆணையின் பேரில் கொலை செய்யும் கொலையாளிக்குப்பாபமில்லை. அவ்விதமே வேதாஞ்ஞையில் யாகத்தில் நடத்தும் பசு ஹிம்ஸை இம்சையென்று கருதப்படாது. போலி அறிவாளர் விபரீதப் பொருள்கொள்வார்களென மதித்து இம்மாதிரியான யஞ்ஞங்களுக்கு 'அத்வரம்' அத்துவரமென்றே பெயரிட்டார்கள். அதன் பொருள் "இம்ஸையல்லாதது" எனப்படும். அத்துவைதம் என்ற பதத்திற்கு "இரண்டல்லது" எனப்பொருள். வெளி நோக்கத்திற்கு இரண்டாய்க்காணப்படும். உற்று நோக்கின் ஒன்றே என்று வற்புறுத்த எதிர் மறையில் சொல்லியவாறு, இம்சையாய்க் காணப்படினும் கடவுளுக்கு அர்ப்பணபுத்தியோடு நடக்கிறபடியாலும், யாகத்திற்கு எதிர்மறையில் அத்துவரம் என்ற பெயர் வந்திருக்கிறது. இது ஒருவித வழிபாடு.

ஜீவன், ஓடியாடும் பிராணிகளுக்கு மாத்திரமின்றி மரம் முதலியவைகளுக்கும் உண்டு. மனிதர் மூலவர்க்கங்களைக் கொண்டே ஜீவிக்கவேண்டியிருக்கிறது. அவை இம்சையல்லவா! புலால் உண்ணும் ஜனங்களின் ஆகாரத்திற்காகக் கணக்கற்ற ஜந்துக்கள் பிரதிதினம் கொல்லப்பட்டுவருகிறது. இந்த ஹிம்சையை, ஹிம்சையாய்க் கருதாமல் விட்டுவிட்டு, சிற்சில கிராம தேவாலயங்களில் வழக்கமாய்ப் பலிகொடுத்து வருகிறதை "அஹிம்ஸாதர்மம்" என்ற போலி வேஷத்தில் தடுத்து அதர்மக் குழியில் விழுகிறார்கள். மிருகங்களை மட்டும் வண்டியில் கட்டி இம்சித்திருந்த நாம், நாகரீகமென்ற சுயநயப்பித்து ஏறஏற, மனிதர் இழுக்கும் வண்டியிலும் கூசாமல் ஏற ஆரம்பித்து விட்டோம்.

உரிய தர்மத்தைச் செய்யவருபவனைத் தடுப்பது அநியாயம். இவைகள் மதக்கொள்கைகள். மதாசாரங்கள் இவைகளில் தாங்கள் தலையிடாமல் ஒதுங்கியிருப்பதாக மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தி அவர்கள் வாக்குறுதி செய்திருக்கிறார்கள். அஹிம்ஸாதர்ம விரதம் பூண்டொழுகும் காங்கிரஸ் ராஜாங்கத்தார் சிறுபான்மையோரான ஸநாதனிகளை இம்சிக்காமல் அவரவர்களுக்குரிய தர்மம் செய்வதில் இடையூறுகள் வாமல் பாதுகாப்பார்கள் என நம்பப்படுகிறது. யக்ஞபுருஷன்.

## கொன்றைவேந்தன்.

(by T. S. Vaidyanatha Sastrigal)

(26—1—39 வாரத்தொடர்ச்சி)

53 நான்முறை தெரிந்து சீலத்தொழுகு
54 நெஞ்சை யொளித்தொருவஞ்சகம் இல்லை
55 நோநோன்பு சீராகாது
56 நைபவரெனினும் நொய்ய உரையேல்

सन्मार्गे चर शास्त्रविधिज्ञः
नान्यदमानसगोचरमनृतं ।
हृद्यं यदि न तपो न सुतप्तं
भव्येष्वपि हि न भाष्यमभव्यं ॥

Follow the good Path knowing the methods prescribed in sastras.

No untruth can be uttered without the knowledge of the heart.

The penance done unwhole-heartedly becomes imperfect

Don't speak niggardly even towards your subordinates.

57 நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்
58 நோன்பென்பது கொன்று தின்னாமை
59 பண்ணிய பயிரில் புண்ணியந் தெரியும்
60 பாலோடாயினும் காலம் அறிந்துண்

अणुरपि भवति महितगुणशीलः
व्रतमिह परममहिंसितभुक्तं ।
प्राग्भवसुकृतमनुफलति सस्यं
क्षीरोदनमपि काले भोज्यं ॥

Though small in form a man has been praised for his merits.

It is the great ceremony where animals are not killed and eaten.

A person gets his yields according to the deeds of his previous birth.

Take your food in time even though it is prepared with milk.

61 பிசம்பெணி பாரந்தாங்கும்
62 புலையும் கொலையும் களவும் தவிர்
63 பூரியோர்க்கில்லை சீரிய ஒழுக்கம்
64 பெற்றோர்க்கில்லை சுற்றமும் சினமும்

स्तन्यविवृद्धो भारवहः स्यात
संभृतकरणस्य हि संसिद्धिः
जहिहि हतिं स्तेयं मधु मांसं ।
नीचानां न हि शीलमुदारं
द्वेष्यः प्रिय इति न भिदा विदुषां ॥

A person who has been nourished with mother's milk can bear a heavy load. or

A person accomplishes his purpose very easily if he has already gathered ways and means (for it.)

Leave the habit of drink, killing and eating animals and also stealing.

There is no good behaviour for the low class people.

Nobody becomes a friend or foe for the Learned.

65 பேதமை என்பது மாதர்க்கணிகலம்
66 பையச்சென்றால் வையந்தாங்கும்
67 பொல்லாங்கென்பவை எல்லாம் தவிர்
68 போனகம் என்பது தானுழந்துண்டல்

अबलामण्डन मप्रागल्भ्यं
मृदु ऋजुगमनं जगदभिनन्द्यं ।
त्यज सर्वमसाधु सुदुश्चरितं
वरमन्नमिहोद्यमसंकलितं ॥

Innocense is the ornament of a woman.

Going smoothly in the righteous path will be praised by the Public.

Avoid all bad deeds.

A good dinner is one that has been earned by one's efforts.

69 மருந்தேயாயினும் விருந்தோடுண்
70 மாரியல்லது காரியமில்லை
71 மின்னுக்கெல்லாம் பின்னுக்குமழை
72 மீகாமனில்லா மரக்கலம் ஓடாது

भेषजमपि भुञ्जीतातिथिभिः
वृष्टि र्नो यदि कार्यं नान्यत् ।
पुरतो विद्युत् परतो वर्षं
नाविकनाशे न चलेन्नौका

Even it is medicine share it with your guests.

If there is no rain nothing is to be done

Frequent lightning precedes rain.

A ship will never move in the absence of a sailor.

73 முற்பகல்செய்யின் பிற்பகல் விளையும்
74 மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்
75 மெத்தையில்படுத்தல் நித்திரைக்கழகு
76 மேழிச்செல்வம் கோழைபடாது

प्रातः कृतमिह सुफलति सायं
भाषित ममृतं ज्येष्ठाभिहितं ।
निद्रासुखदं तूले शयनं
कृषिलब्धं वित्तं न विनष्टं ॥

Action, done previously, bears fruit subsequently.

The sayings of elders are considered as Nector.

It is always comfortable to sleep in the bed of cotton.

Wealth produced by cultivation never decays.

(தொடரும்)


Books by Mr. S. Aiyadurai Iyer.

| | R. | A. | P. |
|---|---|---|---|
| Advaida Siddhantham | 0 | 8 | 0 |
| Ramayana as an illustration of Yoga Sastra | 0 | 8 | 0 |
| Bharatham & Bhagavatham in the light of Yoga Sastra | 0 | 4 | 0 |
| பொதுமதபோதினி | 0 | 4 | 0 |
| 22. பாராயணத் திருப்புகழ் | 0 | 2 | 0 |
| 23. வேல், மயில் விருத்தம். | 0 | 1 | 0 |
| 24. திருப்புகழ் விருத்தியுரை. | 8 | 0 | 0 |
| 25. திராவிட வேதத்திரட்டு | 3 | 8 | 0 |

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தன ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்,

# யோக சாஸ்திர நிருபணம்.

இராமர் மூலாதாரத்தைக்குறித்து ஸம்யமம் செய்து ஸமாதியிலிருந்ததால் அவ்விடத்தில் உள்ள கெட்ட கர்மங்களின் விருத்திகள் யாவும் எரிந்துபோனதைராக்கதர்களின் வதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரம் திருசிகி ப்ரஹ்மோபநிஷத்தில் ஸமாதி கர்மங்களை எரித்து விடுவதாகச்சொல்லப்பட்டிருக்கிறது. கீதையின் 4 வது அத்யாயம் 37 வது சுலோகத்திலும் ஞானம் கர்மங்களை எரித்து விடுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்திரஜித்தின் வதம் "மோஹம்" அழிந்தது என்று சொல்லலாம். கும்பகர்ண வதம் தமோகுணம் ஸ்வாதீனமானதாகவும் இராவண வதத்தை இரஜோ குணமும் இந்திரியங்களும் ஸ்வாதீனமானதாகசொல்லலாம். விபீஷணருக்கு பட்டம் கட்டினதை ஸத்வ குணம் மேலிட்டதாகச் சொல்லலாம்.

இராவண வதமானது இந்திரியங்களை யோகாநுஷ்டானத்தால் வச்யமானதாகச் சொல்ல வேறு காரணங்களு மிருக்கின்றன. யோக நிஷ்டையால் இந்திரிய நிக்ரகம் செய்துபிருணுயாமம் செய்கையில் சரீரத்தில் நடுக்கமும் மயிர்கூச்சலும் உண்டாவதாக யோக சூடாமணி உபநிஷத்தில் சொல்லியிருக்கிறது அதே சின்னங்கள் இராவணனுடைய யுத்தம் செய்யும் போது நேர்ந்ததாக இராமாயணத்திலும் சொல்லி யிருக்கிறது. இராமாயணம் யுத்த காண்டம் 56-வது ஸர்க்கத்தில் ஹனுமாரால் "அகம்பனன்" யென்ற அரக்கன் வதமானதாயும் அதே காண்டம் 76வது ஸர்க்கத்தில் அங்கதனல் கம்பனன் யென்ற அரக்கன் வதமானதாகச் சொல்லி யிருப்பதால் மத்ய காலத்தில் சரீரத்தில் கம்பனமாகிற நடுக்கமிருந்ததை காட்டுகிறது. அதே யுத்த காண்டம் 109வது ஸர்க்கத்தில் ராவணனுடன் இராமர் யுத்தம் செய்யும்போது ஒரு முகூர்த்த காலம் மயிர்கூச்சல் சரீரத்தில் உண்டானதை காட்டக்கூடிய விதமாக யுத்தம் நடந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. "முகூர்த்தம் அபவத் யுத்தம் துமுலம் ரோம ஹர்ஷணம்"

மேலும்முக்கிய அரக்கவீரர்களுடையபெயரும் சரீரத்திலுள்ள பாகங்களைக்குறிப்பதாக அருத்தம்செய்ய இடமுண்டு. அவையாவன ப்ரஹஸ்தன், அதிகாயன், மகாகாயன், கும்பகர்ணன், மஹாபார்ச்வன், மஹோதரன், அதேவிதமாக இராவணனுடைய பெண்சாதி பெயரும் மந்தஉதரி, அதே விதமாய் வானரஸேனையிலும் முக்யமானவர்களின் பெயரும் ஸுக்ரீவன், அங்கதன், நளன், நீலன், யென்றும் பெயர்களிருப்பதால் அந்த யுத்தமானது சரீரத்திலும் நடந்ததாக யெண்ண இடமுண்டு. ஸீதையின் அக்னி ப்ரவேசத்தை ப்ரஹ்ம வித்தை மாயையிலிருந்து விடுபட்டு சுத்தமானதாகச்சொல்லலாம். இலங்கையில் இராமர் தன் தகப்பனாகிற தசரதரை பார்த்ததானது ஸமாதியில் ஆத்மதர்சனமானதாக சொல்லலாம். இராமர் இராவணனுடன் சண்டை செய்த போது இந்திரன் அனுப்பிய ஆயிரம் குதிரைகள் கட்டிய தேரிலிருந்து சண்டை செய்ததாக சொல்லியிருப்பதை இராமர் இந்திரதேவதைக்கு பாத்தியப்பட்ட சிரஸிலுள்ள ஸஹஸ்ரார சக்கிரத்திலிருந்துஸமாதி செய்ததாகச்சொல்லலாம். இந்திரலோகத்திலிருக்கும் இந்திரனுக்கு ஆயிரம் குதிரைகள் கட்டிய தேர் யிருப்பதாக வேறு புருணங்களில் சொல்லப்படாததால் அந்த இரதம் சிரஸிலுள்ள ஸஹஸ்ரார சக்கிரம் தான் என்று நிச்சயமாகச் சொல்லலாம். மேலும் இராமர் செய்தஸமாதியானது அவர் எல்லா ஜீவன்களுக்குள்ளிருக்கும் ஆத்மாவானதால் எல்லா ஜீவர்களின் பாபங்களும் தொலைந்து எல்லா ஜீவர்களும் சுகத்தையடைந்தார்கள் என்று சொல்லலாம்.

இராமாயணம் உத்திர காண்டத்தில் இராமர் இரண்டு முக்கியமான கார்யங்களை செய்ததாகச்சொல்லப் பட்டிருக்கிறது. அவைகளில் ஒன்று ஸீதையை வால்மீகியின் ஆச்ரமத்திற்குப்பக்கத்திலுள்ள காட்டில் கொண்டு போய் விட்டதும், ஸீதையை வால்மீகி தனியாக இருப்பதைக்கண்டு தன் ஆச்ரமத்திற்கு கூட்டிப்போனதும் அவருடைய ஆச்ரமத்தில் ஸீதை குசன், லவன் என்று இருபிள்ளைகளை பெற்றதும் ஸீதை ப்ரஹ்ம வித்தையானதால் அவளை நிர்விகல்ப ஸமாதியாகிற லவணாஸுர வதத்தை செய்து ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடையுமுன் பரித்யாகம் செய்தது கீதா வாக்கியத்திற்கும் உபநிஷத் வாக்யத்திற்கும் ஒத்திருக்கிறது. ஸீதையின் பிள்ளைகளாகிற குசன், லவன் இருவர்களும் யோக சாஸ்த்ரமென்றும் அவர்கள் இருவரும் இராமாயணத்தை பாடினர்கள் என்பதும் இராமயணம் யோக சாஸ்திர நிருபணம் என்பதை உறுதிப்படுத்துவதாயும் முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. மற்றொரு விஷயமான லவணாஸுரனைக்கொன்றது ஸ்ரீராமர் நிர்விகல்ப சமாதியை செய்ததாக அருத்தம் செய்ய இடமுண்டு, ஸீதையை பரித்யாகம் செய்த பிறகு பார்கவர், ச்யவனர் இன்னும் சில ரிஷிகள் இராமரிடம் லவணாஸுரன் என்ற ஒரு அரக்கனிருப்பதாயும் அவன் ரிஷிகளுடைய தபஸுகளை கெடுப்பதாயும் சொன்னதின் பேரில் இராமர் அந்த லவணாஸுரனைக் கொன்று அவனுடைய பட்டணமாகிற மதுபுரியில் பன்னிரெண்டு வருஷம் ஆண்டு வரும்படி தன் தம்பியாகிற சத்துருக்னனை அனுப்பியதாயும் அவன் அந்தப்படி செய்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தசரித்திரத்தால் இராமர் பன்னிரெண்டு வருஷங்கள் நிர்விகல்ப ஸமாதி செய்து பேரின்பத்தை அடைந்தார் என்று அருத்தம் செய்ய இடமுண்டு. "லவண" என்ற பதத்தை "ரவண" என்று மாற்ற இடமுண்டு. ஏனென்றால் ஸம்ஸ்கிருத பாஷையில் "ல" வுக்கும் "ர" வுக்கும் பேதமில்லை. ஆகையால் "லவணன்" என்பதை "ரவணன்" என்று மாற்றலாம். இப்படி மாத்தினால் "ரவணன்" என்பது "ராவணன்" என்ற பதத்திற்கு ஸம்பந்தப்பட்டதாக ஆகிறது. ஆகையால் லவணாஸுரனை ராவணனுடைய மருமகனாக வால்மீகி சொல்லியிருப்பதும் பொருத்தமாக யிருக்கிறது. "ரவ" என்ற பதத்திற்கு "சப்தம்" என்று அருத்தமாதலாலும் "சப்தமானது" விருத்திகளை உண்டாக்கக்கூடியதாதலாலும் விருத்திகள் யோக நிஷ்டையைக்கெடுக்கிறதாதலாலும் அந்த விருத்திகளை அடக்கக்கூடிய "சேதனு" சக்தியாகிற சத்துருக்னனை அனுப்பி லவணாசுரனை கொன்று வரும்படி அனுப்பினதானது இராமர் தன்னுடைய சேதனு சக்தியால் சப்தம் கேளாதபடிக்கும் அதினால் விருத்திகள் உண்டாகாதபடிக்கும் செய்து நிர்விகல்ப ஸமாதி செய்தார் என்று அருத்தம் செய்ய இடமுண்டு. மதுபுரியில் சத்துருக்னன் பன்னிரெண்டு வருஷம் ஆண்டு வந்தான் என்பதும் இராமர் பன்னிரெண்டு வருஷம் நிர்விகல்ப ஸமாதி செய்து பேரின்பமாகிற மதுவை அனுபவித்தார் என்று அருத்தம் செய்யலாம் பிறகு இராமர் பிரஹ்மலோகம் போனதாக சொல்லியிருப்பதானது எல்லா ஜீவன்களிலும் அந்தர்யாமியாயிருக்கும் ஆத்மாவுக்கு இராமர் அவதாரத்தால் கிடைத்தஜாஸ்தியான விஷ்ணுவின் அம்சம் திரும்பவும் பரப்ரஹ்ம லோகம்போய் விஷ்ணுவுடன்சேர்ந்ததென்று அருத்தம் செய்ய இடமுண்டு.

அய்யாத்துரை அய்யர்.

---

## பழுவூர்.
### கீர்வாண வாணீ பரிஷத்.

இச்சபையின் 6 வது கூட்டம் தை 9௨ (22-1-39) ஞாயிறு மாலை 3-30 மணிக்கு பிரம்மஸ்ரீ எஸ். வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் பக்கத்து ஊர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் அநேக பிரமுகர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். ஆரம்பத்தில் "கந்தசாமி" என்ற மாணவனுடைய மங்களாசரணத்திற்குப் பிறகு தலைவர் இச்சபையின் முக்ய நோக்கத்தையும், ஒவ்வொரு சபைக்கும் எல்லோரும் வந்து சபையை அபிவிருத்திசெய்ய வேண்டியதையும் எடுத்துச்சொன்னர்கள். பிறகு எல். எஸ். ராமச்சந்திர கனபாடிகள் அவர்கள் "ஸத்ஸங்கம்" என்னும் விஷயத்தை ஸம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் எடுத்துரைத்தார்கள். பிறகு ஆங்கரை ராஜகோபால தீக்ஷிதர் அவர்கள் "கீதையின் ஆவசியகம்" என்னும் விஷயத்தை தமிழில் உபந்யஸித்தார்கள். பிறகு "சாமிநாதன், யக்ஞேச்வான்" என்ற மாணவர்களால் வேதாத்யயனம் அவச்யம் செய்ய வேண்டுமென்ற விஷயமாக சிறு சம்பாஷணை செய்யப்பட்டது. பிறகு காரியதரிசி பி. ஆர். நாகேச்வர சாஸ்திரி அவர்களால் இச்சபையின் போஷகரான ரிடயர்ட் டிப்டி கலெக்டர் பி. ராமச்சந்திர அய்யர் அவர்களுக்கும் தலைவருக்கும் மற்றும் உள்ள ஆஸ்திக மகா ஜனங்களுக்கும் வந்தனம் தெரிவிக்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

K. N. நடேச சர்மா.

---


உ

ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

## ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

மூலம் நாகரத்திலும், தமிழிலும்,

ஸ்ரீமான் G. V. கணேசய்யர், B.A., B.L. எழுதிய தமிழுரையுடனும், விசேஷ குறிப்புகளுடனும் கூடியது.

ஸ்ரீ வித்யை, ஸ்ரீ பாஸ்கராயருடைய சரித்திரம், ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷா ச்லோகங்கள் முதலியன அடங்கியவை.

டிம்மி ⅛ அளவில் சுமார் 1000 பக்கங்கள் கொண்டது. மூழு காலிகோ பயின்டு.

ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர், ஸ்ரீ சக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ 4.] [தபால் V. P. P. சிலவு தனி

## மூகபஞ்சசதியின் முதல் பாகம். "ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது, மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது.

தபால் சிலவு வேறு] [விலை அணு 0—8—0

ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு விலை அணு 6.

பிரும்மஸ்ரீ அருட்கவி ந. சுப்ரமண்ய அய்யர். அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ நகர விமர்சனம். | 0 | 12 | 0 |
| ஸ்ரீ குரு விமர்சனம். | 0 | 5 | 0 |
| வரிவஸ்யா ரஹஸ்யம். | 1 | 0 | 0 |
| ஸ்ரீ லலிதாத்ரிசதீ பாஷ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீவித்யாஸபர்யாபத்ததி | 2 | 0 | 0 |

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனர்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.




67

# வெளியூர்ச் செய்திகள்.

## நன்னிலத்தில்
### ஸ்ரீ ஆவணி ஜகத்குரு ஸ்வாமிகள்,

13-1-1939ல் இவ்வூருக்கு விஜயம் செய்திருக்கும் ஸ்ரீ ஆவணி, ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ வித்யாரண்ய பாரதி ஸ்வாமிகள் அவர்களுக்கு விசேஷமான உபசரிப்புடன் பிரதி தினமும் உத்தியோகஸ்தர்களாலும், அசேஷ கிராம மகா ஜனங்களாலும் பிக்ஷை, பாத பூஜை முதலியன செவ்வனே பக்தி சிரத்தையுடன் நடந்து வருகின்றன. ஸ்ரீஸ்வாமிகளால் பூஜிக்கப்படும் "ஸ்ரீ சாரதா, சந்திரமௌளி, வித்யா சங்கர" மூர்த்திகளை விமானத்தில் நவரத்னங்களிழைத்த ஆபரணங்களினாலும், புஷ்பங்களினாலும் அலங்கரித்து, இரவு 7 மணி முதல் 9மணி வரையில் நடைபெறும் லலிதா ஸஹஸ்ரநாமம், அஷ்டோத்ர குங்குமார்ச்சனைகளைக் கண்ணாரக்கண்டு களித்துக்கிருதார்த்தர்களாகின்றனர். பூஜை முடிந்ததும், சாஸ்திர விசாரம் செய்கையில் பிரும்மஸ்ரீ T. S. வைத்யநாதசாஸ்திரிகளால் கர்ம மீமாம்ஸா சாஸ்திரத்திலிருந்தும், ஸ்ரீபதஞ்சலி பகவானியற்றிய மஹா பாஷ்யத்திலிருந்தும், வ்யவஹரிக்கப்படும் விஷயங்களையும் ஸம்ஸ்கிருத பாஷையின் மாதுர்யத்தையும் சிரவணம் செய்தும்; ஷை யூர் உத்யோகஸ்தர் ஸ்ரீ T. V. வேணுகோபாலய்யர் அவர்களது இனிய சாரீர ஸம்பத்துடன் கானம் செய்யப்படும் ராகமாலிகை, ஸங்கீதஸாஹித்யங்களையும் எல்லோரும் ஆநந்திக்கின்றனர்.

அநேகமாக ஒவ்வொரு தினங்களிலும் பூஜை நடந்ததும் தக்க வித்வான்கள் உபந்யாஸம் செய்து வருகின்றனர். உள்ளூர் பிருமஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் பக்தியைப் பற்றியும், கொடுமுடி ராஜகோபால சாஸ்திரிகள் நித்ய கர்மாநுஷ்டானம் பற்றியும், ஸ்ரீமான் E. சூர்ய நாராயணய்யர் அவர்கள் 'ஸ்திரீ தர்மம்' என்பது பற்றியும் ஸ்ரீ T S. வைத்யநாத சாஸ்திரிகள் "விஷய வைராக்யமே மேலான சாதனம் என்பதுபற்றியும், ஹெட்மாஸ்டர் N. R. சுப்ரமண்யய்யரவர்கள் ஸகல மத தத்வங்களும், வைதிக மதத்தில் தோன்றும் ஸம்சயங்களும்" என்பது பற்றியும் உபந்யாஸம் செய்தார்கள். பக்தைகளான ஸ்திரீகள் சேர்ந்து பாதபூஜை செய்தது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு உபன்யாஸத்தின் முடிவிலும் ஸ்ரீஸ்வாமிகள் ஸங்க்ரஹமாக தமது கருத்தை வெகு அழகாகவும், அகாலமான போதிலும் கேட்ககேட்க திகட்டாமலிருக்கும்படி மதத் தத்வங்களையுபதேசித்தருளினார்., அநேக தினங்கள் "குரு பக்தி," "ஆனந்த ஸ்வரூபம்", "கர்ம யோகம்," "பக்தி யோகம்," ஞான யோகம்" என்பன பற்றி பல உபன்யாஸங்கள் மிகஉருக்கமாகவும் இனிய சாரீர வன்மையுடனும் பல திருஷ்டாந்தங்கள் மூலமாகவும் பண்டித, பாமர, ஸ்திரீ, பால ரஞ்ஜகமாகவும், ஸ்ரீஜகத்குரு ஆதி பகவத்பாதாளது "பஜகோவிந்தம், மனீஷாபஞ்சகம், சிவானந்தலஹரீ, பகவத் கீதை, கடோபனிஷத், சாந்தோக்யம் இவைகளிலிருந்து ஸாமான விஷயங்களைக் கோர்வையாகவும் உபன்யசித்துக் கடைசியாக, எல்லோரும் கேட்டு ஆனந்திப்பதுடன் நின்றுவிடாமல் ஒவ்வொருவரும் ஸ்வகர்மாநுஷ்டானத்தை அவச்யம் தவறாமல் செய்யவேண்டுமென்பதை வற்புறுத்தியும், ஸ்ரீமதாசார்யனது பஜகோவிந்தம் முதலிய லகுவான முறையில் வேதாந்த தத்வங்களை போதிக்கின்ற புஸ்தகங்களைத் தாங்களும் படித்துக் குழந்தைகளுக்கும் போதிக்கும்படி உபதேசித்தருளினார்கள். ஒவ்வொரு பண்டிதர்கள் செய்த உபன்யாஸங்களும், ஸ்ரீஜகத்குருவாளது உபன்யாஸங்களும் மிகவிரிவானதால் எழுத இயலாததுபற்றி வருந்துகிறோம். ஷை ஸ்ரீஜகத்குரு ஸ்வாமிகளின் நன்னில விஜயயாத்திரையில் முக்கியமான பங்கெடுத்துக்கொண்ட ஸ்ரீமான்களான குன்னம் ஸ்ரீசுப்ரமணியய்யருடையவும், தாசில்தார் ஸ்ரீராமசுப்பிரமணியய்யரவர்களுடையவும் கைங்கர்யம் மிகவும் சிலாகிக்கக் கூடியதாகும்.

ஆசார்ய பக்த மஹா ஜனங்கள்.

---

## சாயனுபுரம்.
### ஸனுதன தர்ம ஸமாஜம்.

வெகுதான்ய வருஷம் தைமீ 10௨ (23-1-39) திங்கள்கிழமை மாலை 6 மணிக்கு கும்பகோணம் தாலூகா சாயனுபுரம் அக்கிரஹாரத்தில் பிரம்மஸ்ரீ ஏ. ஆர். சுந்திரேச சாஸ்திரிகள் அவர்கள் கிரஹத்தில் சபை ஒன்று கூடப்பட்டது வந்திருந்த ஆஸ்திக மகா ஜனங்கள் அந்த சபைக்கு (ஸனுதன தர்ம சமாஜம்) என்ற பெயரையும் ஷை சமாஜத்துக்கு ஏ. ஆர். சுந்திரேச சாஸ்திரிகள் அவர்களை அக்ராஸனுதிபதியாகவும் ஆர் வெங்கட்ராமய்யரைகாரியதர்சியாகவும் ஏகமனதோடு தேர்ந்தெடுத்தார்கள்.

மாத்தூரை பிரம்மஸ்ரீ வேதமூர்த்தி ராமபத்திர சாஸ்திரிகள் அவர்களாலும் வடபாதி ஸாஹித்ய சிரோமணி ஸாஹித்ய விசாரத எம். கே. வெங்கடராம சாஸ்திரிகள் அவர்களாலும் முறையே பிராம்மண்யம், ஸனுதன தர்மம் என்றால் என்ன. என்பதைப்பற்றி, எளிய நடையில் உபன்யசிக்கப்பட்டது. கடைசியாக இந்த சபைக்கு ஆர்யதர்மம்பத்திரிகை ஒன்று வரவழிக்க வேண்டியது அவசியமென்றும் அடுத்த சபை கூடுவதற்குள் ஷை பத்திரிகை வந்து சேர ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது கடைசியாக வந்தனேபசாரத்துடன் சபை முடிவை அடைந்தது.

### 2-வது கூட்டம்.

நாளது வெகுதான்ய வருஷம் தைமீ 14 ஷை சபையின் இரண்டாவது கூட்டமானது நடைபெற்றது. அன்றயதினம் பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் ப்ரசங்கபானு வைத்யநாத சாஸ்திரிகள் அவர்களால் ப்ராமணர்களுக்கு ஷட் கர்மங்கள் முக்யமென்று எளிய தமிழ் நடையில் உபன்யசிக்கப்பட்டது.

கடைசியில் வடபாதி ஸாஹித்யசிரோமணி ஸாஹித்ய விசாரத எம். கே. வெங்கட்ராம சாஸ்திரிகளால் வந்தனேபசாரம் சொல்லப்பட்டு கலைக்கப்பட்டது. ஸனுதனிகள்.

---

## ராஜா கலேஜ் திருவையார்.
### வித்யா விகாஸனி ஸபா.

ஷைசபையின் வருஷாந்திரக் கொண்டாட்டம் திவான் பஹதூர் வி எம். விஸ்வநாத ராவ், டிஸ்டிக்ட் கலெக்டர், தஞ்சாவூர் அவர்கள் தலைமையில் 4—2—39 சனிக்கிழமை 4-மணிக்கு காலேஜில் நடைபெறும்.

பி ஆர் நடேசய்யர், அட்வகேட், தஞ்சாவூர் அவர்கள் காலம் சென்ற M. S. வைத்திநாத சாஸ்திரியார் அவர்கள் போட்டோவை திறப்பார்கள்.

R. ரங்காசாரியர் அவர்கள், சரஸ்வதி மஹால், தஞ்சாவூர், ஸம்ஸ்க்ருதத்தில் ஓர் சொர்பொழிவு நிகழ்த்துவார். என்று அறிவிக்கப்படுகிறது.

---

## பெரியகுளம்.
### தர்ம ஸம்வர்த்தினி பிராம்மண ஸபா.

மாறுதலடைந்த ஷை பெயருடன் 11—3—38 முதல் ஒரு சபை உண்டாயிற்று அதின் நோக்கம் சுருதி, ஸ்ம்ருதிகளின் தத்வத்தை பிராம்மணர்களின் மனதில் ஊன்றி பதியச்செய்தல், அதற்காக பிராம்மண சிறுவர்களுக்கு ஸ்வரத்துடன் சந்தியாவந்தனம், ஸஹஸ்ரநாமம் முதலியவைகள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. அதுவும் தவிர ஏழைப் பிராம்மணர்களுக்கு தன்னால் முடிந்தவரையில் உதவிசெய்ய முயலுகிறது, அமாவாஸ்யை பௌர்ணமி தினங்களில் சாஸ்த்ர, புராணங்களின் ப்ரவசனம் நடைபெறுகிறது. இதை முன்னுக்குக் கொண்டுவர ரொம்பவும் முயற்சி எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

இந்த சபை 1924-ம் வருஷத்தில் தர்ம சம்வர்த்தினி ஸபா என்று ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருஷங்கள் நன்றாய் நடைபெற்றது. பிறகு சபை ஒழுங்காய் நடைபெறாமல் 1937ம் வருஷம் இதன் பெயரே இல்லாமல் போய்விட்டது.

மறுபடி 11—8—38 அன்று ஸ்ரீ புருஷோத்தம சாஸ்திரிகள், முனிஸிபல் கமிஷனர் அவர்கள் தலைமையில் சபை கூட்டப்பட்டு "தர்ம சம்வர்த்தினி பிராம்மண சபா" என்று புதுப்பெயர் கொடுக்கப்பட்டு புத்துயிர் அளிக்கப்பட்டது. டைரக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பொழுது சபை நன்றாய் நடந்து வருகிறது.

சபையின் முன்னேற்றத் திற்கு இடையூறாக பணத்தட்டு இருக்கிறது. சபைக்கு தனியாகவோ அல்லது எந்த சபையோ தங்களாலியன்ற பணத்தை ஷை சபையின் செகிரிடரி நாகபூஷணம் அவர்களுக்கு அனுப்பும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

நாகபூஷணம் அய்யர்.
ஸெகரிடரி

---

# மதிப்புரை.

## சில்பஸ்ரீ.

இப் பெயர்கொண்ட, மாதாந்திரப் பத்திரிகையின் பொங்கல் வெளியீடு நமக்குக் கிடைத்திருக்கிறது: பத்திரிகையின் பெயருக்கு ஏற்றபடி பாரததேசத்திய சில்பங்கள் பலவும் இதில் விளங்குகின்றன. கவிதை, ஸங்கீதம். சித்திரம், நாட்டியம், சில்பம் போன்ற அநேக கலைகளைப்பற்றி இப் பத்திரிகையில் சிறந்த கட்டுரைகள் வெளியாகியிருப்பதுடன், புதுக்கல்பனைகள், அநுஷ்டானப் பகுதி, மொழிபெயர்ப்புப் பகுதி முதலிய தலைப்புகளின் கீழ் மிக்க உபயோகமுள்ள பல அரிய வியாஸங்களும் காணப்படுகின்றன. முக்யமாக தமிழ் பாஷையின் சுவையை அநுபவியாதவர்களையும், தமிழின் ரஸத்தை அநுபவிக்கும்படி செய்வதும் இதன் நோக்கமென்று தெரிகிறது.

உயர்ந்த நோக்கத்துடன் வெளிவந்துள்ள இப் பத்திரிகைக்கு ரஸிகர்களின் தக்க ஆதரவு கிடைத்து இது மேன்மையுடன் விளங்கிவரவேண்டுமென்று விரும்புகிறோம். வருஷ சந்தா ரூ 4—0—0 தனி பிரதி விலை அறையணு. 5 நம்பர் லஸ் மைலாப்பூர் சென்னை என்ற விலாஸத்தில் கிடைக்கும்.

215269

## "மாத்வ மித்திரன்" ஏகாதசி நிர்ணயம்

### ஓர் பதில்.

22—12—38 வெளியான ஆரிய தர்மம் 9-வது பக்கத்தில் மாத்வ மித்திரனில் வெளியான ஏகாதசி நிர்ணயம் என்ற ஓர் கடிதத்திற்கு பதில் எழுதப் பட்டு மாத்வ மித்திரன் பத்திராதிபரின் குறிப்பும் ஆக்ஷேபிக்கப் பட்டிருப்பதால் இப்பத்திரிகையிலேயே அந்த நிருபத்திற்கு சமாதானம் கூறப்படுகிறது.

மாத்வ வகுப்பு ஸ்ரீவியாஸராஜ மடத்து சிஷ்யர்களில் ஒரு சிலர் அவர்களின் ஆசாரியன் நிர்ணயம் செய்த ஏகாதசியை கைவிட்டு அன்று அவர்கள் போஜனம் செய்ததுமன்றி அந்த ஆசார்யன் தினம் ஆராதித்து வரும் பிருந்தாவனஸ்தர்களான அவருடைய குருமார்களுக்கும் போஜனம் செய்வித்தனர் என்று மாத்வ மித்திரனில் ஒருவாறு குறை கூறப்பட்டிருந்தது. அவ்வாறு செய்ததே சரி என்று ஆரிய தர்மம் நிருபர் ஓர் வியாஸராஜ மடத்து சிஷ்யர் வாதிக்கிறார். இவ்வாறு ஏன் நடத்தப்பட்டது என்பதற்கு காரணம் தனது தவறே என்று ஸ்பஷ்டமாய் ஒப்புக்கொள்கிறார். ஆசாரியன் நிர்ணயம் செய்து கொடுத்த உபவாஸம் செய்யும் நாள் இன்னதென்று முந்திய தினமே கிடைத்த தகவல் இவருக்கு ஆதாரமற்றிருந்ததாம். ஆதாரமுள்ளதென்று ஒரு சிலர் தான் எண்ணினார்களாம். அவர்கள் மட்டில் ஆசாரியனின் அனுஷ்டானப்படி அனுஷ்டித்தார்கள் என்று வியக்தமாகத் தான் எழுதுகிறார். இதுவரையிலும் அந்த தகவல் யாவராலும் மறுதளிக்கப்படாமல் பலரால் பல ஊர்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரம சுத்தமான உண்மையானதாய் இருக்கையில் அதை சிலர் புறக்கணித்ததிலிருந்து இவருக்கு இன்ன தகவல் நம்பத் தகுந்ததென்றும் இன்னதகவல் புறக்கணிக்கத்தகுந்ததென்றும் அறியும் சக்தி இல்லை என்று ஸ்பஷ்டமாய் ஒப்புக்கொள்வதாய் ஏற்படுகிறது. தான்மட்டிலுமன்று 100க்கு 97பேர் வியாஸராஜமடத்தார் இந்நகரில் இவ்வாறு அறியவில்லை என்று இவர் பறைசாற்றுவதால், இவர் தம்கோஷ்டியினரையே குறை கூறுவதாய் ஏற்படுகிறது. அந்த தகவலில் சந்தேகிக்க சிறிதும் இடம் இல்லை என்றும், இந்நகரிலுள்ள ஒரு பெரிய சர்க்கார் உத்தியோகத்திலிருந்து வந்தவருக்கு தபால் மூலமாய் கிடைத்திருக்கிறதென்றும் ஆசாரியன் நிர்ணயம் செய்த நாளில் தான் உபவாஸம் செய்வது பகவத்ப்ரீதிக்கு காரணமாகு மென்றும் சரியான யோஜனை பெற்று இந்நகரில் வியாஸராஜ மடத்து சிஷ்யர்களில் அநேகர் உபவாஸம் செய்தனர். வியாஸராயர் அக்கிரகாரம் தேவஸ்தானத்திலும் அவ்வாறே தான் அனுஷ்டிக்கப் பட்டது. இந்த வியாஸராஜ மடத்து சிஷ்யன் போன்றவர்கள் சிலர் தான் ஆசார்யாளின் அனுஷ்டானத்திற்கு விரோதமாய் அனுஷ்டித்தனர்.

பாம்பரையான ரிகார்டு புறக்கணிக்கப்படுகிறதே என்றும் "யத்ராதிகா ஸாமதா என்ற பிரமாணத்தின் ஆனுபூர்வியை விளக்க வேண்டும்" என்றும் "உலகம் முழுதும் பிரசுரிக்கப்படும் பஞ்சாங்கங்களை வரவழைத்து ஏகாதசி நிர்ணயம் செய்வது ஸாத்யமா" என்றும் 'பாஷ்ய தீபிகா சாரியார் முதலிய மூன்று பிருந்தாவனங்கள் வெகு காலமாய் நதி தீரம் ஸம்பிரதாயத்தார்களின் மேற் பார்வையிலேயே இருப்பதால் அந்த சம்பிரதாயமே அனுஷ்டிக்கப் பட்டு வருகிறது' என்றும் இவர் பலவாறு கூறுவதிலிருந்தே தனது ஆசாரியன் அனுஷ்டானமும் நிர்ணயமும் தன்னையும் தன்கோஷ்டியினரையும் தன் ஆளுகைக் குட்பட்டிருக்கும் ஆசாரியனின் பிருந்தாவனங்களையும் கட்டுப் படுத்தாது என்று விளங்குகிறது.

இவர் தன் அனுஷ்டானத்திற்கு ஆதாரவாய் அழைத்திடும் நதிதீரம் ஆசாரியாரின் புதல்வரும் திருச்சானூர் அத்வைத காலேஜ் அத்யாபகருமான நதீதீரம் ஸ்ரீனிவாஸாசாரியார் தனது ஆசாரியன் நிஷ்கரிஷித்த நாளில் தான் ஏகாதசியை அனுஷ்டித்ததாயும் "ஏன் எங்கள்மீது இவ்வாறெல்லாம் பழிசுமத்தப் படுகிறது" என்றும் நேரில் என்னிடம் அறிவித்தார்.

ஏகாதசி உபவாஸதினத்தன்று தசமீ ஸம்பந்தம் இல்லையா என்று மாத்வர்களில் பலர் பலவிதமாய் சோதனை செய்வதுபோல் வியாஸராஜமடத்தார் தேசாந்தர பஞ்சாங்கத்தையும் வாக்ய பஞ்சாங்கத்தையும் கூட பார்ப்பது வழக்கம் என்றும் அதன்படி அவர்களுக்கு ஒரே ஏகாதசி என்றும் 1936ல் மாத்வ மித்திரனில் வெளியாயிருந்தது. தேசாந்தர பஞ்சாங்கத்தை பார்ப்பது வியாஸராஜ மடத்தாரின் சம்பிரதாயமல்லவென்று நதீதீரம் ஆசாரியார் சொல்வதாயும் ஏகாதசி இரண்டு என்றும் ஸ்ரீமான் M. ராமாராவ் ஹிந்து பத்திரிகையில் எழுதினார். அன்று முதல் தேசாந்தர பஞ்சாங்கத்தை பார்ப்பது வழக்கமென்று ஒரு சிலரும், பார்ப்பது வழக்கமல்லவென்று ஒரு சிலரும், வியாஸராஜ மடத்தார்களில் இந்நகரில் கக்ஷிபேதம் ஏற்பட்டது. தற்போது வியாஸராஜ மடம் ஆசாரியன் தேசாந்தரமான சவனூர் பஞ்சாங்கத்தைப் பார்த்து ஏகாதசி நிர்ணயம் செய்து அனுஷ்டிப்பதாக தெரிந்தவுடன் பார்க்க வேண்டுமென்று சொல்லி வந்தவர்கள் ஜயகோஷம் செய்து அவ்வாறு அனுஷ்டித்தனர். பார்க்க வேண்டாமென்று சொல்லி வந்த இந்த நிருபர் 'ஓர் வியாஸராஜ மடத்து சிஷ்யன்' போன்றவர்கள் தமது கக்ஷியை விட்டுக் கொடுக்க மனமில்லாமல் விபரமாய் பேசத்துடங்கினர். ஆசாரியனையும் புறக்கணிக்க முன் வந்தனர். என் கக்ஷியை ஒரு நாளும் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று இவர் நிச்சயித்து விட்டார் போலும். தர்மம் அந்தரங்க பக்தியுடன் ஏகாந்தமாய் அனுஷ்டிக்கப்பட அர்ஹதையானதேயன்றி கக்ஷி பேசிக்கொண்டு இதராளுடைய ஆக்ஞையையும் நிர்ப்பந்தத்தையும் பொருத்ததன்று.

பாகவத ரங்கநாதாசாரியார்.

### தநுர்மாஸ் பஜனையும் ராதா கல்யாணமும்.

மாம்பலம் பஜனை ஸபையினுதாவில் தநுர் மாதம் காலையில் கிரிப்ரதக்ஷிணம் மிக அழகாக ஸ்ரீ ராமசந்திர ஹரிஹிதலைமையில் நடந்தது. சிலநாள் ஸ்ரீ காம் ஹம்ஸபரிவ்ராஜக ஸ்ரீமத் சிவாநந்தகிரி ஸ்ரீபாதராஜஸ்வாமிகளும் கூடவிருந்து அநுக்ரஹம் செய்தார்கள்.

சென்ற ஞாயன்று ஸ்ரீ ஸ்வாமிகளால் ஹநுமத்வஜம் காட்டப்பட்ட ஸ்ரீ ராமமந்திரம் எனும் கிருஹத்தில் ஸ்ரீ ராதாகல்யாணம் மிக சிறப்பாக நடந்தது. பக்தர்கள் பிரார்த்தனையின்படி ஸ்ரீ வத்ஸ ஸோமதேவசர்மா அவர்கள் "மேகர்மேதுராம்" என்ற சுலோகம் பூர்வார்த்தம்மாத்ரம் ஒருமணி உபன்யஸித்தார். பிரும்மஸ்ரீ அப்புசாமி சாஸ்திரிகள் முதலிய பல பண்டிதர்கள் விஜடம் செய்தனர். ஸ்ரீ குருபக்த கங்காதரய்யர் வீட்டிலிருந்து விவாஹ வரிசை வந்தது. ஸ்ரீ V ராமசந்திர அய்யர் தன் பிதாவுடன் ஸ்ரீ ஹரிஹி ஸ்ரீ சர்மா ஆகியவர்களுக்கு விதிப்படி குருபூஜை செய்தார், 2 மணிக்கு பஜனை பூர்த்தியாகிற்று. வந்த அந்தணருக்கு ஆராதனம் நடந்தது. திங்களன்று மிக விமர்சையாக ஆஞ்ஜநேய உத்ஸவம் நடந்தது. ந கி.

### ஆங்கரை.

#### வேதபாடசாலை வார்ஷிக சபை.

லால்குடி தாலூகா ஆங்கறை மகாக்ரஹாரத்தில் 1-வருஷ காலமாக கிராம மகாஜனங்களுடைய ஆதரவில் வேத பாடசாலை நடத்தப்பட்டு வருகிறது. காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ கைலாஸ நாதவாஜபேயியவர் புத்திரரும் ஸ்வயம் ஆதானம்செய்து அக்னிஹோத்ரம் ஸோமபூர்வகமாக, அனுஷ்டானம் செய்து வருபவருமான பிரம்மஸ்ரீ அருணாசலதீக்ஷிதவர்கள் அத்யாபனம் செய்து வருகிறார்கள். ப்ரக்ருதம் 8-பிரம்மசாரிகள் அத்யயனம் செய்கிறார்கள். 4-பையன்கள் பத பாகத்தையும் 4-பையன்கள் சாகா பாகத்தையும் அத்யயனம் செய்கிறார்கள். நாளது தைமீ தேதியன்று வைசூர் அரண்மனை வித்வானும் ஸ்ரீ சிருங்கேரி மடத்து வித்வானுமான பிரம்மஸ்ரீ வெள்ளூர் ராமச்சந்திர சாஸ்திரிகளின் ஆத்யக்ஷத்தில் ஷை பாடசாலையின் வித்யார்த்திகளை பரீக்ஷிக்கலாயிற்று. பிரம்மஸ்ரீ அருணாசல தீக்ஷிதாவர்கள் மிகவும் ச்ரத்தை வகித்து அத்யயனம் செய்துவைப்பதால் பரீக்ஷையில் பையன்கள் உத்தம ரீதியில் பதிலளித்தார்கள். அன்றையதினம் ராத்திரி 8-மணிக்குமேல் ஷை பிரம்மஸ்ரீ, ராமச்சந்திர சாஸ்திரிகள் "வைதிக தர்ம" விஷயமாக மிகவும் அருமையாக உபந்யஸித்தார்கள். அசேஷக்ராம மகாஜனங்களுடைய ஆதரவினால் ஷை வேதபாடசாலையானது ரொம்பவும் மேன்மை அடைந்து அநேக வித்யார்திகளுக்கு உபகாரகமாக வேண்டுமென்றும், அசேஷக்ராம மகா ஜனங்களுக்கும் ஆயுராரோக்ய பாக்யாதிகளை கொடுத்தருளவேண்டுமென்றும் பகவானை ப்ரார்த்தித்து சபை பரிபூர்த்தியாயிற்று.

A. M ஜகதீசய்யர்.


### அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருப்புகழ் பாராயண திருமுறை | 1 | 4 | 0 |
| 2. | நால்வர் சரித்திரம் காலிகோ | 0 | 12 | 0 |
| 3. | " ராப்பர் | 0 | 10 | 0 |
| 4. | பாரதசாரம் | 1 | 2 | 0 |
| 5. | ஸ்ரீ ராமாயண வினவிடை | 1 | 8 | 0 |
| 6. | பஞ்சரத்னம் | 0 | 12 | 0 |
| 7. | ஷண்முக விஜயம், | 0 | 12 | 0 |
| 8. | ஸ்ரீபாலஷண்முக விஜயம் | 0 | 8 | 0 |
| 9. | ருக்மணி | 0 | 8 | 0 |
| 10, | தேசிங்குராஜன் | 0 | 10 | 0 |
| 11. | ராஜாதேசிங்கு | 0 | 5 | 0 |
| 12. | திருக்குறள் நீதிக்கதைகள். | 0 | 10 | 0 |
| 13. | தசகுமார சரித்திரம் | 0 | 6 | 0 |
| 14 | திருப்புகழ் ரத்னமாலை | 0 | 3 | 0 |
| 15. | கந்தாலங்காரம் | 0 | 2 | 0 |
| 16 | திருஞான சம்பந்தர் | 0 | 2 | 6 |
| 17. | விசாரசன்மர் | 0 | 3 | 0 |
| 18. | மூர்த்தி நாயனர் | 0 | 3 | 0 |
| 19. | திருநாவுக்கரசர். | 0 | 2 | 0 |
| 20. | குகன். | 0 | 4 | 0 |
| 21. | திருவகுப்பு | 0 | 4 | 0 |


ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆரியதர்மம்
4 6
24 9-2-1939

215270.

1095

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

வாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 24 | கும்பகோணம் கலி5039 பகுதான்ய-ளு தை-மீ 27உ 1939-ளு பிப்ரவரி-மீ 9உ | லா 6

TO THE REGISTRAR OF BOOKS
23 FEB 1939
MADRAS

## கும்பகோணம் பாங்கி, லிமிடெட், கும்பகோணம்.

(1904-ம்ளு ஸ்தாபிக்கப்பட்டது)

லோகல் ஸப் ஆபீஸ்:— யானையடி ரோடு.
கிளை ஆபீஸ்கள்:— மன்னார்குடி & நாகபட்டணம்.
ஸப் ஆபீஸ்கள்: – நன்னிலம் & அய்யம்பேட்டை.

3—2—1939 எடுக்கப்பட்ட கோஷ்பாரா.

**மூலதனம், செல்லுகள்.**

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1 | மூலதனம் (வரவு வந்த பங்குத் தொகைகள்) .... | 2,82,575 | 0 | 0 |
| 2 | க்ஷேமநிதிகள், காப்புநிதிகள் .... | 2,09,753 | 6 | 1 |
| 3 | தவணை, நடப்பு, சேவிங்ஸ் முதலிய டிபாஸிட்டுகள் .... | 11,73,341 | 6 | 2 |
| 4 | இதர செல்லுகள் .... | 3,903 | 6 | 10 |
| 5 | மற்ற இனங்கள் .... | 32,9:1 | 12 | 11 |
| | மொத்தம் .... | 17,02,555 | 0 | 0 |

**சொத்துகள், இருப்புகள்.**

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1 | ஆபீஸ் சாமான்கள், கட்டிடங்கள், ஸ்தாவரங்கள் .... | 73,378 | 5 | 5 |
| 2 | இன்வெஸ்ட்டுமென்டுகள்:— சர்க்கார், ஸ்டேட்சடன் பத்திரங்கள் .... | 2,17,313 | 9 | 6 |
| | இதர இனங்கள் .... | 80,240 | 13 | 8 |
| 3 | வரவேண்டிய கடன்கள், வசூலிக்க வேண்டிய உண்டியல்கள், அதிக பத்துகள் உள்பட .... | 11,80,612 | 8 | 4 |
| 4 | சில்லரை இனங்கள் .... | 35,128 | 0 | 11 |
| 5 | இருப்பு:— ரொக்கமும், இதர பாங்கிகளிலும் .... | 1,15,881 | 10 | 2 |
| | மொத்தம் .... | 17,02,555 | 0 | 0 |

கும்பகோணம்,
7—2—1939.

S. மஹாலிங்க அய்யர் B.A., B.L.,
மானேஜிங் டைரெக்டர்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

## வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா.)

தார்மிக சக்கரவர்த்தி வாழி!! கொச்சி மன்னருக்கு 76 வயது பூர்த்தியாகி சென்ற வாரம் 77 ஆண்டு ஆரம்பமாயிற்று. அன்று ரூ1008 மேல் கோட் ஸ்வாமிகளால் ஸம்ஸ்கிருதத்தில் கௌரவபத்திரம் படிக்கப்பட்டது. பிரம்மஸ்ரீ ராவ்சாஹிப் நடேசய்யர் தங்க பதக்கமளித்தார். ராஜஸ்ரீ நி. ராமஸ்வாமி அய்யர் வெள்ளிப்பெட்டியில் அந்த பத்ரத்தை அளித்தார். ஸ்ரீ சோமதேவ சர்மா பரிஷத்தின் அறிக்கையை அளித்தார்.

ஸமூஹத்தாரின் சிரத்தை! மலையாள தேசத்தில் ஒவ்வோர் ஊரிலும் ஸமூஹமடம் என்றோர் நிர்வாகஸபை உண்டு. எர்ணாகுளத்திலுள்ள அத்தகைய ஓர் ஸங்கத்தவர் தர்ப்பாருக்கு வந்த ஸ்ரீஸ்வாமிகள் தலைமையில் ஸ்ரீ வே. ஸோமதேவ சர்மாவை ஓர் தர்மப்ரவசனம் செய்யும்படி கோரினர். அச்சமயம் ஸ்ரீ வாஸுதேவ ராஜா என்னும் கொல்லங்கோட் ராஜாவும் கொச்சி ராஜ்ய காரியதரிசியும் மற்றும் பற்பல உயர்தர உத்யோகஸ்தர்களும் வந்திருந்தனர்.

பூங்குள்ளத்தில் ஆஸ்தி கதை! பிரும்மஸ்ரீ பாலராமய்யர் எனும் மில் மேனேஜரும் ஸ்ரீமான் டி. ஆர். ராமச்சந்திரய்யர் தேவுமான பெரியார் ஆங்குள்ள பாடசாலை மாணவர் வேத பாராயணம் செய்ய பூர்ண கலசத்துடன் இந்த கோஷ்டியை வரவேற்று உபசரித்தார். பக்தர்களது வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ ஸ்வாமிகளும் ஸ்ரீ ஸோமதேவ சர்மாவும் தர்மத்தைக்குறித்து உபன்யஸித்தார்கள்.

மற்றோரறிய உபன்யாஸம்! பிரும்மஸ்ரீ ராவ்சாஹிப் நடேசய்யரவர்களும் பிரும்மஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி அய்யர்வாளும் எர்ணாகுளத்தில் மிக அழகிய தர்ம உபன்யாஸம் செய்தனர். பல உத்யோகஸ்தர் சூழ்ந்திருந்தனர்.

ஓர் ஸ்ரீமுக படனம்! ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் ஆலயப்பிரவேச மசோதாவை எதிர்த்து வேலை செய்யும் ஸ்ரீமான் "மஹீசதமக" கொல்லங்கோடு வாசுதேவ ராஜாவிற்களித்த ஸ்ரீமுகம் டாக்டர் சங்கரய்யர் ஸ்ரீ நடேசய்யர்வாள் ஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி அய்யர்வாள் முன்னிலையில் ஸ்ரீ வத்ஸ வெ. சோமதேவ சர்மாவால் படிக்கப்பட்டது.

அனைவரும் வருக! கோளத்தில் அ. பா. வ ஸ்வாராஜ்ய ஸங்க ஆதரவில் இம்மாதம் 25 26 தேதிகளில் ஓர் ஸநாதந தர்ம மஹாஸபை கூடுகிறது. ஸ்ரீ காஞ்சி மடத்தின் சார்பாக முன்னதாகவே பல பண்டிதர்கள் தர்மப்ரசாரம் செய்கின்றனர்.

கிழக்கும் மேற்கும்! ஸ்ரீமான் ஜஸ்டிஸ் வரதாசாரியாரும் ஸ்ரீ வி. ராஜாஜியும் எத்தகைய வைதிக மதச்ரத்தை உள்ளவர் என உலகறியும். வக்கீல் சங்கவிழாவில் இருவரும் பேசிதத்தம் அபிப்ராயத்தை வெளியிட்டனர் பரஸ்பரம் இது தலையங்கப்போலவே இருந்தது.

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பிறந்த தினக் கொண்டாட்டம்.

சென்ற ஜனவரி 29, 30, 31,ம் தேதிகளில் தஞ்சை மேல வீதியில் உள்ள ராஜன் கட்டிடத்தில் தலைப்பிற்கண்ட கொண்டாட்டம் சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவரும், "ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்" பத்திராதிபருமான ஸ்வாமி ஸர்வஞ்ஞாநந்தாது அக்கிராஸனத்தின் கீழ் தஞ்சை ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தார்களினால் அடியிற் கண்டவாறு நிரம்பவும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. 29-1-39 காலையில் வேத பாராயணம் பஜனை, ஏழைகளுக்கு ஸமாராதனை முதலியவைகள் வெகு நன்றாக நடைபெற்றன, அன்று மாலை சுமார் 2 மணி நேரம் "ஸத்ய ஸ்வரூபம் பற்றி பிரும்மஸ்ரீ சிமிழி வெங்கட்டராம சாஸ்திரி அவர்களினால் பற்பல ஆதாரங்களுடன் உபந்யாஸம் நடந்தது. 30-1-39 ஸ்ரீமான்கள் வி. நாராயணாசாரியார் B. A. L. T. T. S சபாபதி பிள்ளை (ரிடையர்டு ஜில்லா ரிஜிஸ்டிரார்) இவ்விருவர்களும் முறையே 'ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அருளிய நற்செய்தி" முறையே "ராமாயணமும், ஐங்கியமும்,, என்பது பற்றியும் நிரம்பவும் அழகாக பலமேற்கோள்களுடனும் உபந்யஸித்தனர் மூன்றுவது தினம் 31-1-39ந்தேதி மாலை "ஸமய வாழ்க்கை" பற்றி அக்கிராஸனர் ஸர்வஞ்ஞாநந்தர் சுமார் ஒருமணி நேரம் சபையோர்கள் யாவரும் மனம் உருகும்படி பேசினர். கொண்டாட்டம் மேற்கண்டவாறு முடிவு பெற்றவுடன் சுமார் 2 மணி நேரம் சேங்காலிபுரம் ஸ்ரீ குகதாஸ் எஸ். வி. நடராஜய்யரது ஸங்கீதக்கச்சேரி தகுந்த உபசாதகர்களுடன் பக்தி ததும்ப நடைபெற்றதானது கூடியிருந்த பக்தர்கள், உத்யோகஸ்தர்கள் ஸ்திரீகள் எல்லோரையும் ஆனந்த கண்ணீர் சொரியும்படி செய்தது.

பிறகு வி. நாயணாசாரியார் பி. எ. எல். டி அவர்கள் தஞ்சை ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தினர்கள் சார்பாக எல்லா உபந்யாசகர்களுக்கும், தலைமை வகித்த ஸர்வஞ்ஞாநந்தருக்கும், இக்கொண்டாட்டத்தை நிரம்பவும், அழகாகப் பலவித கிராமங்களுக்கிடையில் நடத்திய ஸங்கத்தினர்களுக்கும், பற்பல வேலைகளில் ஆழ்ந்து மூழ்கியிருக்கின்ற சங்கீத வித்வான் குகதாஸ் நடராஜய்யர் அவர்களுக்கும் வந்தனம் கூறுகையில் சுமார் 20 நிமிஷம் "தஞ்சை ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் மீதுள்ள குகதாஸ் அவர்களது அன்பு, அவரது பக்திரஸம் நிறைந்துள்ள சங்கீதம், அவரிடம் பதிப்பித்துள்ள காமகோடி பீடாதிபதி ஜகத்குருவினது பிரேமை முதலியன பற்றிக் குறிப்பிட்டனர். இரவு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரது படஊர்வலம் நாத ஸ்வரத்தியத்துடன் நடைபெற்றுக் கொண்டாட்டம் முடிவுபெற்றது.

ஓர் நிருபர்.

## ஸாமவேதத்தில் ஓர் ஸந்தேஹம்.

ஸாமகர்கள் அத்யயனம் செய்கிற "வேயகான" த்தில் "ப்ருஹதியில்" "யாஇந்த்ரபுஜ ஆப" என்கிற மூன்று ஸாமங்களில் இரண்டாவது ஸாமத்தில் "ஸுவர்வாங்அ" என்கிற பதத்தை சிலர் "ஸுவர்" என்பதை ப்ரதமஸ்வரத்திலும் சொல்ல வேண்டு மென்றும் அதே மாதிரியாக அத்யயனமும் செய்துவருகிறார்கள். சிலர் புஸ்தகத்தில் இருக்கிறபடியே "ஸுவர்வாங்அ" என்பதை முழுவதும் த்விதீயஸ்வரத்தில் அத்யயனம் செய்து வருகிறார்கள். ஷடிபதமானது புஸ்தகத்தில் இருப்பதே ஸரியானதா அல்லது "ஸுவர்" என்பதை ப்ரதம ஸ்வரத்திலும் "வாங்அ" என்பதை த்விதீய ஸ்வரத்திலும் சொல்ல வேண்டுமா, என்பதை வித்வான்கள் லக்ஷணத்தோடு தெரிவித்தால் ஸாமகர்கள் எல்லோரும் ஒரே விதமாய் சொல்லுவதற்கு ஸௌகர்ய மாயிருக்கும்.

ஸாமவித்யார்த்தி வ. ராஜகோபலன்.

## ஓர் தர்ம சாஸ்த்ர ஸந்தேஹம்.

ஒருவன் ஸபிண்டீகரணத்தில் நிமித்தஸ்தானத்தில் அல்லது பித்ருஸ்தானத்தில் புஜித்தல், வைதரணீகோதானம் வாங்குதல்—இவைகளுக்கு எந்த விதமான ப்ராயச்சித்தம் செய்யவேண்டும்? எவ்வளவு காலம் க்ரமித்துச் செய்யவேண்டும்? எப்போது ஆலய பூஜை முதலிய வைதிக கார்யங்களுக்கு அர்ஹனுகிறான்? என்கிற விஷயத்தை, தர்மசாஸ்த்ரங்களறிந்த பெரியோர்கள் க்ருபை செய்து ப்ரமாணத்துடன் பதிலெழுதவேணும்.

T. ரெங்கராமானுஜன்.
ஸ்ரீரங்கம்.

## ஓர் தர்ம ஸந்தேஹம்.

அஷ்டகாசிராத்தம என்பது ஸப்தமாக யஞ்ஞ ஸம்ஸ்தையில் சேர்க்கப் பட்டிருக்கிற படியால் பாகயஞ்ஞம் என்று ஏற்படுகிறது.

2 மேலும் இகர்ஷ

"अपूपं चतुश्शरावं श्रपयति"

என்ற ஸூத்ரத்தின் பாஷ்யத்தில்

पत्न्यवहन्तीत्यादि विधिना अपूपं श्रपयति,

என்றிருப்பதால் பத்நீ அவஹநநாதிகள் அவச்யகம் என்று ஏற்படுகிறது.

3 ஆதலால் இந்த அஷ்டகையைன்ற பாகயஜ்ஞம் களாலேயே அனுஷ்டிக்கத்தக்கது என்று ஏற்படுகிறது,

இதில் பிரம்ஹசாரிக்கோ, விதுரர்களுக்கோ அஷ்டகாசிராத்தம் அனுஷ்டிக்க அர்ஹதை உண்டா என்பது தான் சந்தேஹம்.

லோகத்தில இதோடு சேர்த்து கோர்க்கப் பட்டஔபாஸனநிகளை விதுராதிகள் அனுட்டிக்காத போதிலும் இந்தஅஷ்டகையை மட்டிலும் அனுஷ்டிக்கிறதாகத்தெரிகிறது அது ஸரியானது தானா? சாஸ்திர விருத்தமா. இந்த அஷ்டகையை அனுஷ்டித்தால் வைச்வதேவாதி பாகயஜ்ஞங்களையும் விதுராதிகள் அனுஷ்டிக்க பிரதானத்தில் அதிகாரமில்லையென்றால் ப்ராயச்சித்தக நியாயமில்லை என்று ஏற்படுகிறது. இல்லாவிடில் மாஸிசிரார்த்தாதிகளுக்கும் நியாயமால் விதுரர்களால் தர்ப்பணம் செய்ய ஸங்கிக்கும் என்று தோன்றுகிறது.

ஆதலால் இது விஷயங்களை ஆஸ்திகர்கள் நிஷ்பக்ஷபாதிகளான தர்மவித்ரேஸர்களை இந்த பத்ரிகா மூலம் அடியேனுக்கு ஐயமற ஆதாரத்தோடு ஸமாதானம் எழுதி அனுக்ரஹிக்கும் படி ஸவிநயம் ப்ரார்த்திக்கிறேன்.

ஓர் தர்ம விசித்ஸு

## கேரள ஸனாதநதர்ம மஹாநாடு.
### பாலக்காட்டில் நடைபெறும்.

பிப்ரவரி 25, 26.

கேரள ஆலயப்பிரவேசச் சட்டமானது நமது மத உரிமைகளைப் பாதிப்பதுடன் ஆகம சாஸ்திர விருத்தமாயும், கோவில்களின் சுத்தி அழிப்பதாயுமிருப்பதால் அதைக் கண்டிக்கவும், எதிர்த்து பிரசாரம் செய்யவும் அகில இந்திய வர்ணாச்ரமஸ்வாராஜ்ய ஸங்கத்தின் ஆதரவில் பிப்ரவரீ 25, 26 தேதிகளில் பாலக்காடு பி. எஸ். வி. ஹாலில் கான்பரன்ஸ் நடத்த ஏற்பாடாகியிருக்கிறது. 24உ கொடியேற்றுவிழா நடக்கும்.

ஸ்ரீமான் கோமன் நாயர் பி.ஏ.,பி எல்., அவர்கள் உபசாரணைக் கமிட்டித்தலைவராயும், டாக்டர் சங்கரநாராயண அய்யர் கார்யதர்சியாயும், மாஜி போலீஸ் இன்ஸ்பெக்டரான ஸ்ரீமான் டி. எஸ். ராமநாத அய்யர் உதவி கார்யதர்சியாயும் கொண்ட உபசாரணை ஸபை ஏற்படுத்தப்பட்டது.

ஆஸ்திகர்கள் ஏராளமாக விஜயம் செய்து மஹாநாட்டை வெற்றிகரமாக நடத்திவைக்க வேண்டுமென்று கார்யதர்சி கேட்டுக்கொள்கிறார்.



75

## ஸ்ரீவித்யோல்லாஸினீ ஸபா.

சென்னை நாராயணமுதலி வீதி ஸம்ஸ்கிருத கலாசாலையில் ஸ்தாபித்துள்ள மேற்கண்ட ஸபையின் கூட்டமொன்று (6—2—39) திங்கட்கிழமை மாலை நான்கு மணிக்கு நடைபெற்றது. கலாசாலை உபாத்தியாயர்களும் மாணவர்களும் இன்னும் ஸ்ரீராமாநுஜஸித்தாந்தவைஜயந்தி பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ-உ-வே. வித்வான் வடகரை இராமாநுஜாச்சாரியார் முதலான பலஸம்ஸ்க்ருதாபிமானிகளும் பல இதரப் பிரமுகர்களும் குழுமியிருந்தனர். மேற்படி பாடசாலை ஸாஹித்ய உபாத்தியாயர் ஸ்ரீமான் உ-வே. ஜி. பக்ஷிராஜ அய்யங்கார் (ஸாஹித்யசிரோமணி) தலைமை வகித்தார் கடவுள் வணக்கம் செய்தவுடன் காரியதரிசி டி. வி. ஸ்ரீநிவாஸன் சென்ற சபைக் கூட்டத்தின் யாதாஸ்தைப்படித்தார். பிறகு மாணவர்களிருவரால் ஸுபாஷிதகத்யமும் பத்யங்களும் இனிமையாகச் சொல்லப்பட்டன. பின் பள்ளி மாணவன் "C. S. சேதுராமன்" பொறுமை என்ற விஷயத்தைப்பற்றி வடமொழியில் நன்கு பேசினான். இதர வித்யார்த்திகளும் அதே விஷயத்தைப் பேசினார்கள். பின்பு மேற்படி ஸ்கூல் தலைமையாசிரியர் ஸ்ரீ-உ.வே. T. S. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் (ந்யாயசிரோமணி) அந்த விஷயத்தை மிகத் தெளிவாக விரித்துரைத்தார். முடிவாக அக்ராஸனாதிபதியவர்கள் மேற்கண்ட விஷயத்தைத் தக்க மேற்கோளுடனும் நவீன திருஷ்டாந்தங்களைக் காண்பித்தும் முக்கியமாக மாணவர்களுக்குப் பொறுமை அத்தியாவசியமென்றும் அதை கைவிட்டால் நற்பெயர் கிடைக்கமாட்டாவென்றும் இதற்கு அண்ணாமலை யூனிவர்ஸிடியின் சில சப்பவங்களே தகுந்த நிதரிசனங்களென்றும் கூறி வித்யார்த்திகள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் குறிப்பிட்டு ஓர் இனிய சொற்பொழிவு நிகழ்த்தினார். பின்பு சென்னை எஸ்பிளனேட் வாவிள்ளாபிரஸ்ஸின் கிரந்த பரிசோதகர் ஸ்ரீமான் உ-வே. வித்வான் பாலவேடு ஸ்ரீநிவாஸ ராமாநுஜாச்சாரியாரால் ஸபையைக் குறித்து அழகிய நடையில் கற்பனை செய்யப்பட்ட சில ச்லோகங்கள் நன்கு படிக்கப்பட்டன, கடைசியாகக் காரியதரிசி வந்தனோபசாரங் கூறவும் மங்களவாழ்த்துடன் சபை இனிது கலைந்தது,

கார்யதர்சி.

## திண்டுக்கல்.
### வேதபாடசாலை

ஹிந்துமதாபிமான சங்கத்தின் ஆதரவிலும் ஷை ஸபா காரியதரிசி பிரும்ஹஸ்ரீ R. பாலசுப்ரமண்யய்யர் K. தியாகராஜ தீக்ஷதர் B.A., L.T., அவர்களின் நன் முயற்சியாலும் சென்ற ஈசுவர-ஹூ ஆனி-மீ முதற்கொண்டு இவ்வூர் கோபால சமுத்ரகரை ஸ்ரீ ஆஞ்சநேயர் கோவிலில் வேதபாடசாலை ஆரம்பித்து நடத்திவருகிறார்கள். ஷை பாடசாலையில் உபநயனம் ஆனவர்களும் அனுபநீதர்களும் சேர்க்கப்பட்டு பிரதிதினமும் 1மணி நேரம் உபநீதர்களுக்கு மட்டும் வேத பாகமும் இவர்களுக்கும் வேத இதரபாகமும் கற்பிக்கப்பட்டுவருகிறது. ஷை பாடசாலைக்கு போதகாசிரியராக சீர்காழி பிர்ம்ஹஸ்ரீ N. ராமஸ்வாமி கனபாடிகள் நியமித்து ஷையார் மிக்வும் சிரத்தையும் உத்ஸாகத்தோடும் போதித்துவருகிறார். மாணவர்கள் பக்தி சிரத்தையாகவே நடந்துகொள்ளுகிறார்கள். உபநீதர்களுக்கு ஸந்யாவந்தனம் ஸமிதாதானம் பிரும்ஹயஜ்ஞ பூருஷஸூக்தம் ருத்ரம் முதலியனவும் இவர்களுக்கும் விஷ்ணு ஸகஸ்ரநாமம் பூராவும் தேவாலய ஸ்தோத்திரங்களும் இதுவரை சொல்லிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் நடந்து வருகிறது. மாணவர்கள் யாவருக்கும் ஸ்கூல் படிப்பிருப்பதால் ஒரு மணிக்குமேல் அவர்களுக்கும் அவகாசம் இல்லாததால் அதிகம் அப்யஸிக்க இடமில்லை பையன்களுக்கு பரீக்ஷைகள் வைக்கப்பட்டு அதற்கு தகுந்த பரிசுகளும் கொடுக்கப்படுகிறது. 35 பையன்களுக்கு குறைபாமல் வருகிறார்கள் ஷையார்களுக்கு மேன்மேலும் உத்ஸாகம் உண்டாவதன்பொருட்டு நாளது ஹூ தைமீ 9ம் தேதியன்று ஷை பாடசாலையின் பிரதமவார்ஷீகோத்ஸவம் அகில பாரதீய வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய ஸங்கக் காரியாத்யக்ஷரான பிரும்ஹ-ஸ்ரீ மதுரை N நடேசய்யர் அவர்கள் முன்னிலையில் கொண்டாடப்பட்டு அன்று காலை உள்ளூர் வைதிக ஆஸ்திகர்கள் யாவரும் சேர்ந்து மாணவர்களுடன் மங்கள வாத்யத்துடனும் வேதபாராயணத்துடனும் ஊர்வலம் வந்து மாலை அக்ராஸனர் ஸபையில் வேதகோஷம் நடந்து பிற்பாடு அக்ராஸனர் அவர்களால் அவர்களால் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. அதுசமயம் ஸ்ரீ சிருங்ககிரி ஆசார்யாளிடமிருந்து ஆசிக்கடிதமும், ஸ்ரீ காமகோடி பீடாதிபதி மகாசன்னிதானதினிடமிருந்து வியாஸாக்ஷதஆசிக் கடிதமும் மாணவர்களுக்கு பரிசுக்காக புஸ்தகங்களும் ஆசாரியாள் படங்களும் அனுப்பப்பட்டதை வழங்கப்பட்டது. பல ஆஸ்திகர்களிடம் இருந்தும் ஆசிக் கடிதங்கள் வாசிக்கப்பட்டன.

பிறகு அக்ராசனர் முடிவுரையாக ஸநாதன தர்மத்தை உபன்யஸித்து பிற்பாடு சோளவந்தான் வேதசாஸ்திர அத்யாபகர் ஸ்ரீ யஜ்ஞேச்வா தீக்ஷிதாவர்களால் வேத மஹிமையும் அத்யயனத்தின் அவசியமும் என்பதையும் பற்றி உபன்யாஸம் செய்யப்பட்டு பின் அக்ராஸனர் தற்கால நிலையையும் நாம் நடக்க வேண்டியதையும் விரிவாகச் சொல்லி இப்பாடசாலை நடந்துவருவது மிகவும் ச்ரேயசானகார்யம் இதேபோன்று ஆங்காங்கும் நடைபெற்றால் ஸநாதனதர்மம் அழியப்படாமல் இருக்குமென்றும் சிறுவர்களை ஆசீர்வதித்தும் அவர்கள் நடக்கவேண்டிய முறையையும் சொல்லி கொண்டாட்டம் முடிவுற்றது. அதனின்றும் மாணவர்கள் அதிக சந்தோஷத்தோடுவந்து கற்றுவருகிறார்கள். ஷை பாடசாலைக்கு இவ்வூர் ஆஸ்திகர்கள் ரிடயர்ட் இஞ்சினீர் S. ராமஸ்வாமி அய்யர், C. சுந்தரமய்யர் அவர்களும் மற்றும் பல ஆஸ்திகர்களும் மாதச் சந்தா கொடுத்து ஷை தர்மம் நீடித்துவரச்செய்வதால் ஷையார்கள் நல்ல க்ஷேமத்தை அடைந்து மேன்மேலும் ச்ரத்தைகொள்ள ஈசுவரன் கிருபைசெய்ய வேண்டும் இதே போன்று மற்ற நகரங்களிலும் கிருமங்களிலும் ஆஸ்திகர்கள் முன்வர வேண்டியே இதை எழுதலுற்றேன்.

ஓர் ஆஸ்திகன்.

## ஸுபாஷ் போஸ் அறிக்கை.
### காங்கிரஸில் பிளவு ஏற்படாதாம்!

காங்கிரஸ் தலைவர் எலெக்ஷன் விஷயமாக காந்திஜி வெளியிட்டிருந்த அறிக்கைக்குப் பதிலாக ஸ்ரீமான் போஸ் ஒரு பதில் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இந்த எலெக்ஷனில், காந்திஜி கொள்கையைப்பற்றிய விவாத மேற்படவில்லையென்றும் அவருக்குத் தோல்வியேற்பட்டதாகக் கருத நியாயமில்லையென்றும், தாம் எப்போதும் காந்திஜியையே பின்பற்றி நிற்கப் போவதாயும், காங்கிரஸில் பிளவு ஏற்படாதென்றும் அவர் சொல்லுகிறார்.

சாந்தி நிகேதனத்தில், டாகூர், நேரு, போஸ் ஆகியவர்கள் ஸந்தித்துப் பேசினார்கள். பிளவு ஏற்படாமல் தடுக்க டாக்டர் முயற்சி செய்வார்.

## திருத்தம்.

அறிவிப்பு

இன்று நமது பத்திரிகை 2வது பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'ஓர் தர்ம ஸந்தேஹம்' என் விஷயமானது ப்ரூப் திருத்தம் செய்யப்படாமல் தவறுதலாய் வைக்கப்பட்டுவிட்டது. ஆகையால் அதிலுள்ள பிழைகளை வாசகர்கள் திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

## காந்திஜி மனைவி கைதியானார்.

ராஜ்கோட் ஸத்யாக்ரஹத்தில் காந்திஜி மனைவி ஸ்ரீ மதி கஸ்தூரிபாயும் படேலின் பெண்ணும் சேர்ந்து சட்ட மறுப்புச்செய்த காரணமாகக்கைது செய்யப்பட்டு அந்த ஸம்ஸ்தான பங்களா ஒன்றில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

## ஸேத் பஜாஜின் ஸத்யாக்ரஹம்.

ஜயப்பூரில் நுழையக் கூடாதென்று ஸ்ரீமான் யமுனாலால் பஜாஜுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவை மீறி அவர் அவ்வூரில் பிரவேசிக்கச்சட்ட மறுப்புச் செய்தார். அதிகாரிகள் அவரைக்கைது செய்து 320 மைலுக்கு அப்பாலுள்ள வட மதுரையில் கொண்டுபோய் விடுதலை செய்தனர். அவர் மறுபடியும் தடையுத்தரவை மீறிஜயப்பூருக்கு வந்து கைதியாகியிருக்கிறார். ராஜ்கோட், ஜயப்பர் ஸம்ஸ்தான அநீதிகளை உடனே பரிஹரிக்கவேண்டுமென்று காந்திஜி வைஸ்ராயிக்கு வேண்டுகோளிவிடுத்திருக்கிறார்.

## பக்ரீ பசு வதத்தகராறு.
### பல விடங்களில் கலஹம்

முஸ்லீம்களின் பண்டிகையான பக்ரீத்தில் பசுவதை செய்யும் வழக்கத்தை முன்னிட்டு பல விடங்களில் ஹிந்துக்களுக்கும், மஹம்மதியர்களுக்கும் பெரிய சச்சரவு ஏற்பட்டு சொத்து, உயிர் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத்தெரிகிறது.

டோரா இஸ்மேல்கான் என்ற ஊரில் 10 பேர் ஹிந்துக்கள் கொல்லப்பட்டும் 2 லக்ஷம் பொருமானமுள்ள சொத்துக்கு நாசமேற்பட்டும், கடைகள் கொளுத்தப்பட்டும் பெரிய கலஹம் நடந்தது.

## இந்தியா சட்ட ஸபை
### கெடு நீடிப்பு.

இந்தியா சட்ட ஸபையின் கெடுவானது சீக்கிரத்தில் முடிவடைவதால் அதன் பிறகு மறுபடியும் எலெக்ஷன் நடத்தப்படவேண்டுமென்றும், இந்த ஸபையையே இன்னும் நீடித்து வைக்கக் கூடாதென்றும் ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி அனுப்பியிருந்த தீர்மானத்தை கவர்னர் ஜனரல் நிராகரித்துவிட்டார்.

## 6-2-39-ஹூ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

| | |
|---|---|
| நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி 48 பட்டணம்படி மூட்டை | 3—4—0 |
| ஷைஇரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 48 ஷை உள்ள மூட்டை | 3—0—0 |
| அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 48பவுண்டு உள்ள மூட்டை | 7—1—0 |
| ஷைஇரண்டாம்தரம் நெல்லூர்சம்பா 48 பவுண்டு உள்ள மூட்டை | 6-15—0 |
| தேங்காய் எண்ணை 64 சேர் நிறை | 5—0—0 |

☞ தாசில்தார்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்யஹு தை-மீ 27உ

## சட்டமும் மதமும்.

சென்னை ஹைகோர்ட் நீதிபதியான ஸ்ரீமான் வரதாசாரியர் அவர்கள் மேற்கண்ட விஷயத்தைப் பற்றிச் சிலதினங்களுக்குமுன் ஓர் சிறந்தப் பிரஸங்கம் செய்துள்ளார். ஹிந்துமதத்தின் பெருமையையும், அதன் மூலம் ஏற்பட்டுள்ள ஸமூஹ வ்யவஸ்தை, குடும்ப தர்மங்கள், பரலோக, இஹலோக ஹிதங்கள் ஆகியவற்றின் உண்மையை அறியமுடியாத சில சீர்திருத்தக்காரர்கள் அவைகளை தனிப்பில் மேயும் ரீதியில் விமர்சித்து, தவருன அபிப்பிராயங்களைக்கொண்டு தாங்கள் குழப்பமடைவதுடன் பிறரையும் குழப்பமடையும்படி தற்போது செய்து வருகிறார்கள். ஸ்ரீவரதாசாரியரின் பிரஸங்கமானது உபபாதன தோரணையிருவிருந்த போதிலும் மேற்கண்ட நவீனர்களின் தர்வாதம் ஒவ்வொன்றிற்கும் தக்க வழியில் பதில் அளிப்பதாகவே இருக்கிறது. அவ்வுபன்யாஸமானது நமது வைதிக மதத்தின் அமைப்பையும், அதன் மூலம் ஸ்திரப்பட்டிருக்கிற நமது ஸமூஹ வ்யவஸ்தை முதலியவைகளையும் விவரிப்பதுடன் அவைகளின் உண்மையான நோக்கத்தையும் விளக்குவதாயிருக்கிறது.

இந்தியாவில் அந்நியரின் ஆக்ஷிசேர்ப்பந்தம் ஏற்படுவதற்கு முன் நமக்கு மதமே சட்டமாக அமைந்திருந்தது. மனிதனாகப் பிறந்தவன் ஆமுஷ்மிகத்தில் அடைய வேண்டிய பிரதான லக்ஷ்யமொன்று முக்யமாகக்கருதப்பட்டு அதற்கேற்ற வகையிலேயே ஐஹிக தர்மங்கள் வகுக்கப்பட்டும் மதச்சட்டம் செய்திருக்கிறது. லௌகிகச் சட்டமென்றும், வைதிகச் சட்டமென்றும் தனித்தனியாக இருந்ததில்லை. மதவிதியே சட்டமாக இருந்துவந்தது. ஆமுஷ்மிக, ஸுக்ருத துஷ்க்ருதங்களை ஸம்பந்தித்த விஷயங்களே மதங்களாக கருதப்பட்டுவருகின்றன. தற்காலத்தியவர்கள் விவாஹச்சட்டம் போன்றவைகளை கேவல லௌகிகமாக நினைத்துவிடுகிறார்கள். விவாஹத்தில் ஆமுஷ்மிக விஷயம் ஸம்பந்தப்பட்டிருப்பதைக் கவனித்தால் அது மதவிஷயமாகிறதுடன் அதை லௌகிகச்சட்டத்தால் கவிழ்க்கமுடியாதென்பது விளங்கும். ஆயினும் நவீனர்கள் லௌகிகச் சட்டங்களுக்கே பிராபல்யம் கொடுத்து ஆமுஷ்மிக பலனைப்பற்றிய தர்மங்களை மீறவோ, மாற்றவோ, அழிக்கவோ முயலுவது அநியாயமென்று ஸ்ரீ வரதாசாரியர் எடுத்துக்காட்டினார்.

அரசன், மதச்சட்டங்களுக்கு உட்பட்டவனு, அந்தச் சட்டத்தைமாற்ற அவனுக்கு அதிகாரமுண்டா என்கிற பெரிய விவாதத்திலும் ஸ்ரீ வரதாசாரியர் தெளிவாயும், உறுதியாயும் அபிப்ராயம் வெளியிட்டிருக்கிறார். அரசன் வேதம் அல்லது ஸ்மிருதிச் சட்டத்தின்படியேதான் நடக்கவேண்டியவனென்றும், ஸ்மிருதிவிதிகளை மாற்றுவதற்கு அவன் அதிகாரியல்லவென்றும் அவர் சொல்லியுள்ளார்.

நமது ஸ்திரீகள் விஷயத்தில் நாம் நன்றாக நடப்பதில்லை யென்றும், அவர்களைதுன்புறுத்துவதாயும், அவர்களுக்கு எஜமான த்வமோ, ஸ்வதந்த்ரமோ நாம் கொடுப்பதில்லை யென்றும் பிறநாட்டார் பழிகூறுவதற்கும் ஸ்ரீவரதாசாரியார் தக்க பதில் அளித்திருக்கிறார். நமது ஸ்திரீகள் புருஷனுடைய சரீரத்தில் பாதியாக பாவிக்கப்பட்டு வருவதையும், மத ஸம்பந்தமான வைதிக ஸம்ஸ்காரங்களைவைகளிலும் ஸ்திரீயில்லாமல், புருஷனுக்கு மாத்திரம் அதிகாரம் கொடுக்கப் படாததிலிருந்து ஸ்திரீகளுக்குப் பெரிய அந்தஸ்து கொடுக்கப்பட்டிருப்பதும் விளங்கு மென்றும், குடும்ப நிர்வாஹவிஷயத்திலும், சொத்துரிமை விஷயத்திலும் ஸ்திரீகளுக்கு ஸ்வாமித்வம் தாராளமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் விளக்கினார்.

ஸ்வாதந்திரியத்தைப்பற்றிய வரையில் நமது மதச்சட்டங்கள் ஸ்திரீகளுக்குச் சில நிர்பந்தங்களை ஏற்படுத்தியிருப்பது உண்மையே. தற்காலத்தில் ஸ்திரீ ஸ்வாதந்திரியமென்பது அவர்களிஷ்டப்படி கணவனைத் தேடிக்கொள்வதும், மனம்போனபடி யெல்லாம் காரியம் செய்து கொண்டும், பேசிக்கொண்டும் திரிவது தானென்று நினைக்கப்படுகிறது. இத்தகைய ஆபாஸ ஸ்வதந்திரத்தை நமது மதச்சட்டம் அளிக்கவில்லை யென்பது நிஜமே. அம்மாதிரி ஸ்வாதந்திரியமளிப்பது மதத்திற்கும், ஸமூஹ, குடும்பதர்மங்களுக்கும் விருத்தமென்பதே நமது முன்னோர் செய்துள்ள வ்யவஸ்தையாகும். இந்த வ்யவஸ்தை நிலைத்து நிற்பதால் தான்நம் தேசநாகரீகமும் ஸ்திரீகளின் உயர்வும் மற்ற தேசத்தை விட இன்றும் அழியாமலிருக்கிற தென்பதை விவேகிகள் ஒப்பியிருக்கிறார்கள். ஆகையால் கனம் வரதாசாரியர், நமது ஸ்திரீகளுக்கு ஸ்வாதந்திரியம் கொடுக்கப்படாவிடினும் ஸ்வாமித்வம் கொடுக்கப்பட்டிருப்பதிலிருந்து அவர்களுக்கு நமது மதம் செய்துள்ள கௌரவம் மற்ற தேசத்தை விட அதிகமென்றார். இவ்வாறு கனம் வரதாசாரியார் பேசியதை அக்கூட்டத்தில் தலைமை வஹித்த கனம் ராஜகோபாலாசாரியரும் பெரும்பாலானஅம்சங்களில் அங்கீகரித்துப் பேசினார். மதமும் சட்டமும் வெவ்வேறாக இருந்ததில்லையென்றும் பிராசீனகாலத்தில் மதமே சட்டமாக விளங்கியதென்றும், ஆயினும் காலக்கிரமத்தில் மதச்சட்டத்வத லௌகிகச் சட்டம் அழுத்த ஆரம்பித்ததென்றும் மாமியார், நாட்டுப்பெண் உதாஹரணமூலம் ஒப்புக்கொண்டார். ஆயினும் மதசிரத்தை குறையும்போது லௌகிகச் சட்ட நிர்பந்தத்தால் தான் அந்த சிரத்தையை உண்டாக்க வேண்டியிருக்கிறதென்றும், ஆதலால் தங்கள் கக்ஷியார் மதத்தில் பிரவேசித்துச் சட்டம் செய்வதானது மதசிரத்தையை அதிகரிக்கச் செய்யும் உபாயமேயல்லது, அழிக்கச் செய்யும் காரியமல்லவென்ற சமத்காரமாகப் பேசினார். இந்த அபிப்பிராயம் தமாஷாகக் கூறப்பட்டதாகுமேயல்லது கனம் வரதாசாரியார் விளக்கிய தத்வங்களை மறக்கக் கூடியதாகாது.

## குறிப்புகள்.

### ஸம்ஸ்தானங்களில் அநீதியான கிளர்ச்சி.

சுதேச ஸம்ஸ்தானங்களில் நடக்கும் ராஜீயக் கிளர்ச்சியால் இந்தியாவில் பெரிய நெருக்கடி ஏற்படக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. முக்யமாக, ராஜ்கோட், ஜயப்பூர் ஸம்ஸ்தானங்களில் சில தினங்களாக நடந்துவரும் ஸம்பவங்கள் ராஜீயவாதிகளின் மனதைக் கலக்கி வருகின்றன. ஜயப்பூரில் ஸ்ரீமான் பஜாஜ் இரண்டுதடவை சட்டமறுப்புச்செய்து கைதியாகியிருக்கிறார். ராஜ்கோட்டில் காந்திஜி மனைவி சட்டமறுப்புச்செய்து கைதியாகியிருக்கிறார். இரு ஸம்ஸ்தானங்களிலும் பெரிய அமளி ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவெங்கும் இதே பேச்சாக இருக்கிறது.

இவ்விரு ஸம்ஸ்தான விஷயங்களிலும் காந்திஜி அதிக கவனம் செலுத்தி கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆதரவு கொடுத்து வருவதே இது பிரபலப்பட்டதற்கு காரணமாகும். நியாயம் வழங்கும்படி காந்திஜி வைஸ்ராயை வற்புறுத்துகிறார். இதில் கவர்ன்மெண்டார் பணியாவிட்டால் பப்பாய் மந்திரி ஸபையின் ராஜிநாமா மூலம் பெரிய ராஜ்ய நெருக்கடியை உண்டுபண்ணப்போவதாக ஸ்ரீ படேல் வெளியிட்டிருக்கிறார்.

இவ்விரு ஸம்ஸ்தானங்களிலும் கவர்ன்மெண்டார் நடந்து கொண்டது பிசகாயிருப்பினும் அதற்காக இந்தியாவையே பாதிக்ககூடிய அவ்வளவு பெரிய கிளர்ச்சி நடத்துவது நியாயமா, என்ற கேள்வி பிறப்பது ஸஹஜம். ஸமஷ்டி திட்டம் அமுலுக்கு வரும் முன்பு ஸம்ஸ்தானங்களைத் தங்கள் கையில் சிக்க வைத்துக்கொள்ளக் காங்கிரஸ்காரர்கள் ஏற்பாடு செய்திருப்பதின் காரணமாகவே இந்த விபரீதங்கள் ஏற்படலாயின. ஆயினும் ஸம்ஸ்தானங்களில் பிரஜைகளின் உரிமையைப்பாதுகாக்கவே தாங்கள் பாடுபடுவதாக காங்கிரஸ் தலைவர்கள் பசப்பி வருகிறார்கள். இதுஉண்மையாவென்பது ஸந்தேஹமாகவே இருக்கிறது.

ஹைதராபாத் விஷயத்தில் இது வெளியாகிறது. ஹைதராபாத்திலுள்ள பிரஜைகளான ஹிந்துக்களின் உரிமைகள் பிடுங்கப்படுகின்றன. ஹிந்துக்கள் உயிரையும் மதியாது ஸத்யாக்ரஹத்தில் இறங்கி உரிமைக்கு போராடுகிறார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் ஜயிலுக்குப்போய் விட்டார்கள். ஹிந்து ஸமூஹ பரிபாலகர்களான தலைவர்கள் பலர் அந்த இயக்கத்திற்கு விசேஷ ஆதரவு கொடுத்து வெளியூர்களிலிருந்தும் ஏராளமானவர்களை அனுப்பிப் பெரிய கிளர்ச்சி நடத்துகிறார்கள். உரிமைக்குப் போராடுவதாகப் பெருமை பேசும் காங்கிரஸானது, ஹைதராபாத் விஷயத்தில் என்ன செய்தது? வாய்திறக்கவில்லையே? காந்திஜியோ மற்ற தலைவர்களோ ஒரு பேச்சும் பேசவில்லையே? ராஜகோட்டிலும், ஜயப்பூரிலும் அல்பவிஷயத்திற்காகப் பெரிய அமளி நடத்தும் காந்தியின் கண்களில் ஹைதராபாத் போராட்டம் விஷயமாகாதது ஏனோ? இதன் காரணம் மறைவானதன்று. ஹைதராபாத் ஒரு மஹம்மதிய ஸம்ஸ்தானம் அல்லவா? அங்கு காங்கிரஸ் நுழைந்தால் இந்தியா வெங்கு முள்ள மஹம்மதியர்கள் காங்கிரஸை நசுக்கி விடுவார்களன்றோ? ஹிந்து ராஜ்யங்களைக் குலைக்கவே காங்கிரஸ் முனைந்திருக்கிறதென்று டாக்டர் மூஞ்ஜே கூறுவது உண்மையல்லவா?



## தம்புராக்களின் குட்டிக்கரணம்!

திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்தைப்பற்றி ஆழுவாஞ்சேரி தம்புராக்கள் என்பவர் சில தினங்களுக்கு முன் பலமாக ஆதரித்துப்பேசினாராம். இவர் ஏற்கனவே இந்த விளம்பரத்தை வெகு கடுமையாக ஆக்ஷேபித்தவர். கோவிலில் தெய்வ ஸான்னித்யம் போய்விட்டதென்று கூக்குரலிட்டவர். அத்தகையவர் இப்போது குட்டிக்கரணம் போட்டிருப்பது அதிசயமில்லை. ஏனெனில் வருஷத்தில் சுமார் இரண்டு லக்ஷம் ரூபாய்வரையில் திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தார் இவருக்கு ஊதியம் கொடுத்துவருகிறார்கள். இவ்வளவு பெரிய தொகையை இழக்க எவர்தான் துணியக் கூடும்? இது எப்படியிருப்பினும், இவர் பேசியுள்ள விரோதத்தை நம்மவர்கள் கவனிக்கவேணும்.

காசி விச்வேச்வர் கோவிலில் எல்லா ஜாதியாரும் போகிறார்களாம். எல்லோரும் ஸ்வாமியைத்தொட்டு பூஜிக்கிறார்களாம். அது போல திருவாங்கூரிலும் ஏன் செய்யக்கூடாதென்று இவர் கக்ஷிபேசுகிறார். காசியில் நடக்கும் விஷயத்திற்கு அங்கு ஏதாவது சாஸ்திர, ஸம்பிரதாய ஆதாரமிருக்கலாம். அது வெகு நீண்டகாலமாக நடந்துவருகிறது. அங்கு ஏற்பட்டுள்ள ஆகமத்தின் ஆசாரமென்னவோ! காசியைப்போல் இந்தியாவில் வேறு எங்கும் நடைபெறுவதாகவும் தெரியவில்லை.

திருவாங்கூரில் நேற்று வரை இந்த தாராசாரம் இருந்ததா? ஸ்ரீ பத்மநாப ஸ்வாமிக்கு முன்னால் இருக்கும் ஒற்றைக்கல்லில் கூட ஒருவரையும் பூஜகர்கள் அநுமதிப்பது வழக்கமில்லை அந்தக்கல்லை தொட்டு விட்டால் கூட அசுத்தி ஏற்பட்டு விட்டதாக பூஜகர்கள் கூறுவது வழக்கமல்லவா? அத்தகைய விடத்தில் இப்போது திடீரென்று காசிக் கோவில் நியாயம் பேசுவது வேடிக்கையாயிருக்கிறது. காசிக்கோவில் நியாயம் இங்கு உசிதமானுல், இந்த தம்புராக்களும், இவர் தலைமையிலுள்ள மற்ற பூஜகர்களும் காசியைப்போல் எல்லா ஜாதியார்களும் தாங்களே ஸ்வாமியைத்தொட்டு பூஜை செய்து கொள்ளும்படி விட்டு விட்டு பூஜாரி உத்யோகத்திலிருந்து விலகி விடுவார்களா?

## அரசனுக்கு அதிகாரமுண்டாம்!

மேலும் இந்த தம்புருக்கள் இன்னொரு விநோதமும் பேசியிருக்கிறார்கள். அரசன் சாஸ்திரவிதிகளை மாற்றவோ, மீறவோ பாத்யமுள்ளவனும். ஸ்மிருதிகள் அவனைக்கட்டுப் படுத்தாதாம். ஏற்கனவே இவர் அரசனுக்கு அதிகாரமில்லையென வாதித்தவர். இப்போது விபரீதம் பேசுகிறார். காரணம் தெளிவானதே.

சென்னையில் ஹைகோர்ட் ஜட்ஜியும், பிரபல நீதி நிபுணருமான ஸ்ரீ வரதாசாரியார் அவர்கள் சிலதினங்களுக்கு முன் செய்த பிரஸங்கமொன்றில் "அரசனுக்கு தன்னிஷ்டப்படி மதவிஷயமான சட்டம் செய்யவோ, மாற்றவோ, அதிகாரம் கிடையாதென்றும், ஸ்மிருதி விதிகளை அநுஸரித்தே அவன் நடக்க வேண்டியவனென்றும் ஹிந்துலா நிபுணரான அவர் பேசியிருக்கிறார்.

இந்த தம்புரா பிரஹஸ்பதியை அந்த ஹைகோர்ட் ஜட்ஜ் யோஜனை கேட்காதது பிசகுபோலும்? சென்ற வருஷம் சென்னையில் நடந்த வித்வத் பரிஷத்தின்போது இந்த தம்புராக்கள் எங்கே பதுங்கிக்கிடந்தாரோ தெரியவில்லை. அந்த பரிஷத்திக்கு நேரில் வந்து இவர் தமது கைவரிசையைக் காட்டியிருக்கலாமே. அங்கு இவருக்கு வித்வத் சிரேஷ்டர்கள் நல்ல புத்தி கற்பித்திருப்பார்களே? இப்போதும் ஸமீபத்தில் பாலக்காட்டில் நடக்கப்போகும் தார்மிகர்கள் கூட்டத்தில் வந்து இதைப் பேச துணிவாரா?

## காங்கிரஸ் தீவ்ரவாதிகள்.

### கல்கத்தாவில் ஆலோசனை.

ஸ்ரீமான் போஸ் காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை அநுஸரித்து அவர் தமது கக்ஷியாருடன் காங்கிரஸின் எதிர்கால வேலைத்திட்டத்தை யோஜிக்கவும், திரிபுரம் காங்கிரஸில் தமக்குப் பின்பலம் அதிகம் சேர்த்துக்கொள்வதற்கும் தீவ்ரவாதிகளெனப்படுவோரின் கூட்டமொன்றை 7உயன்று நடத்தினர் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் அநேகர் இதற்கு வந்தனர்.

சென்னை ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்காரும் வந்தார். அந்தரங்க ஆலோசனை நடந்தது.

திரிபுரம் காங்கிரஸில்கொண்டுவரவேண்டிய தீர்மானங்களைப்பற்றியும் யோஜிக்கப்பட்டதாம். ஆறு மாத அவகாசத்திற்குள் ஸமஷ்டி திட்டத்தை திருத்தாவிட்டால் சட்ட மறுப்பு ஆரம்பிக்க வேண்டுமென்பது போஸின் கோரிக்கையாம். இதை காந்தி கக்ஷியாரும் காங்கிரஸும் ஏற்குமா வென்பது பிறகு தான் தெரியும். காரியக்கமிட்டி அமைப்பிலும் மாறுதல் நடக்குமாம். போஸ் கொள்கையை காங்கிரஸ் ஏற்காவிடில் அவர் தலைவர் பதவியை விட்டு விடுவாராம். காங்கிரஸ் அதை ஏற்றால் காந்திக்கக்ஷியார் காரியக் கமிட்டியை விட்டு விலகி விடுவார்கள். காந்திஜியைப்பின் பற்றும் மந்திரிகளும் ராஜிநாமா செய்ய நேரும்.

ஆகவே திரிபுரம் காங்கிரஸ் முடிவைப்பொறுத்தே காங்கிரஸின் கதி இருக்கும்.

காந்தி கக்ஷியாரும் தங்கள் நிலைமையை ஆலோசிக்க பிப்ரவரி2?உ கூடுவார்களென்று தெரிகிறது அவர்களும் தங்கள்பலத்தைத்திரட்டி பரீக்ஷிக்க உத்தேசிப்பார்கள். இப்போதிருகக்ஷியாருக்கும் அபிப்பிராய பேதம் முற்றிவந்த போதிலும் கடைசியாக நல்ல ஸமரஸ ஏற்பாடுநடக்குமென்றும் இப்போதுள்ள நிலைமையில் காந்திஜியை விரோதித்துக்கொள்ளுவதோ, விலக்கி விடுவதோ, நடக்காதென்றும் பலர் நம்பிக்கொண்டிருக்கிறார்களாம்.

## மனுஸ்மிருதிமீது கோபம்.

சென்னை ராஜாங்க ஸபையில் எஸ்டேட் ம்சோதா விவாதகாலத்தில் கனம் பிரதம மந்திரி நிலமானது ஜமீன்தாருக்குச் சொந்தமா, ரயித்துக்குச் சொந்தமா என்றதைப்பற்றிப் பேசுகையில் ரயித்துக்கே சொந்தமென்பதை மனுஸ்மிருதி ஆதாரத்தை கொண்டு விளக்கினார்.

இது திருநெல்வேலி திராவிட மெம்பர் ஒருவருக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. மனு ஆர்யனென்றும், அவர் திராவிடருக்கு விரோதமாயும் ஆர்யர்களுக்கு சாதகமாயும் ஸ்வயநலத்துடன் ஸ்மிருதிஎழுதினாரென்றும் அது இக்காலத்திற்கு பிரயோஜனப்படாதென்றும் வெகு ஆத்திரத்துடன் பேசினார். ஆத்திர காலத்தில் புத்தி மாறுமென்பது உலக அநுபவஸித்தம். இந்தியாவிற்கன்றி உலகத்திற்கே, நேர்மையானதும், நிஷ்பக்ஷபாதமானதுமான ராஜநீதியைக்காட்டினது மனுஸ்மிருதியென்பது அன்னியர்களும் ஒப்பிய விஷயம். இந்த முதலியர்கூற்றுக்காக மனுஸ்மிருதியின் கௌரவம் குறையாது. மார்தளிர் ஒட்டகைக்கு ஒக்காளிக்குமானல் மாமரத்திற்கு அகௌரவமென்ன?

## காந்திஜிக்கு சீர்திருத்த ஸ்திரீகளின் எச்சரிக்கை.

பள்ளிக்கூடங்களிலும், காலேஜிகளிலும் புருஷர்களுடன் சேர்ந்து படிக்கும் சில யௌவனஸ்திரீகள் காந்திஜிக்கு ஓர் புகார் கடிதமெழுதினார்கள். தங்களுடன் படிக்கும் யௌவனமுள்ள புருஷர்கள் பலரும் ஸன்மார்கம் தவறி தங்களைத்துன்பப்படுத்துவதாயும், அந்த புருஷர்களிடமிருந்து ஸ்திரீகள் தப்புதது சிரமமாயிருப்பதாயும் தெரிவித்தார்கள்.

இதை காந்திஜி ஹரிஜனப் பத்திரிகையில் பிரஸ்தாபித்து மாணவிகளைக் கெட்ட நோக்கத்துடன் துன்பப்படுத்தும் மாணுக்கர்களை பலமாகக் கண்டித்தார். பொதுஜனங்கள் இந்த மாணவர்களின் கெட்ட காரியத்தை பிரஸித்தப்படுத்தி கண்டிக்கவேண்டுமென்றார்.

மேலும், மாணவிகளும் பள்ளிக்கூடம் போகையில் பிறர் தங்களைக்கண்டு மோஹம் அடையவேண்டுமென்ற நோக்கத்துடன் ஆடம்பர ஆடைகளையும், அலங்காரங்களையும் அணிந்து செல்லக்கூடாதென்றும் சாதாரணமான ஏழைக்கான ஆடம்பரமற்ற உடைகளிலேயே வெளியில் செல்லவேண்டுமென்றும் கூறினார். இதைக்கண்டு அந்த ஸ்திரீகளுக்கு காந்திஜி மீது ஆத்திரம் பொங்கிற்று. தாங்கள் ஆடம்பரமாக அலங்கரித்து புருஷர்களை மயக்குவதாக காந்திஜி கூறியது தவறென்றும் தங்களை உள்ளே அடங்கியிருக்கும்படி காந்திஜி கூறுவது கர்நாடகப் பேச்சாயிருப்பதாயும், புருஷர்களுடன் கலந்து ஸம உரிமையை அடையவே தாங்கள் நிச்சயித்திருப்பதாயும், ஆதலால் புருஷமாணவர்களை ஸன்மார்க்கத்திலிருக்கும்படி காந்திஜி போதிப்பதே நியாயமென்றும் பதில் எழுதியிருக்கிறார்கள்.

ஆந்திரதேசத்திலிருந்து ஒரு ஸ்திரி காந்திஜிக்கு எழுதியிருப்பதில் ஆடம்பரமற்ற, ஏழை ஸ்திரீ மாணவர்களைக்கூட புருஷ மாணவர் துன்புறுத்துவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## மலையாள ஆலயபிரவேச சட்டம்.

மேற்படி சட்டத்திற்கான விதிகளை சென்னை கவர்ன்மெண்டார் தயார் செய்து விட்டார்கள்.

அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. திருப்புகழ் பாராயண திருமுறை | 1 | 4 | 0 |
| 2. நால்வர் சரித்திரம் காலிகோ | 0 | 12 | 0 |
| 3. „ ராப்பர் | 0 | 10 | 0 |
| 4. பாரதசாரம் | 1 | 2 | 0 |
| 5. ஸ்ரீ ராமாயண வினவிடை | 1 | 8 | 0 |
| 6. பஞ்சரத்னம் | 0 | 12 | 0 |
| 7. ஷண்முக விஜயம், | 0 | 12 | 0 |
| 8. ஸ்ரீபாலஷண்முக விஜயம் | 0 | 8 | 0 |
| 9. ருக்மணி | 0 | 8 | 0 |
| 10 தேசிங்குராஜன் | 0 | 10 | 0 |
| 11. ராஜாதேசிங்கு | 0 | 5 | 0 |

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Nellore.

## திருச்செந்தூர் தேவஸ்தானம்.

எக்ஸிகூடிவ் ஆபீஸர் நியமனம்.

(நமது விசேஷ நிருபர்.)

சர்க்காரால் நோடிபிகேஷன் செய்யப்பட்ட செந்திில்மாநகர் ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி கோயிலில் 150 சம்பளத்தில் ஸூப்ரண்டாயிருந்த ஸ்ரீமான் பகவதிக்கவுண்டர் பி. எ. பி. எல். தற்போது சென்னை தேவஸ்தான போர்டார்கள் 250 சம்பளத்தில் மேற்படி தேவஸ்தானத்துக்கு எக்ஸிக்யூடிவ் ஆபீஸராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

## ஆழ்வார்திருநகரி தேவஸ்தானம்.

நிர்வாகிகளுக்குள் தாவா.

ஆழ்வார்திருநகரி ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் கோயிலுக்கு ரிலிஜியஸ் எண்டோமெண்ட் போர்டார்களால் கோவில்பட்டி வக்கீல் ஸ்ரீமான் எல். ஆர். குருசாமிநாயிடு எக்ஸிகூடிவ் ஆபீஸராய் நியமிக்கப்பட்டு இண்டீரிம் டிரஸ்டியிடமிருந்து சார்ஜ் வாங்கிக்கொண்டு கோயில் காரியங்களை கவனித்துவருகிறார். இக் கோயில் ஸூப்ரண்டாயிருந்துவரும் ஸ்ரீமான் ஆ. எஸ். பெரியநம்பி பிள்ளையையும் தம்மிடம் சார்ஜ் கொடுக்குமாறு 30-1-39ல் எக்ஸிக்யூடிவ் ஆபீஸரால் நோட்டீஸ் கொடுக்கப்பட்டதெனவும் எண்டோமெண்ட் போர்டாரிடமிருந்து தமக்கு யாதொரு ஆர்டரும் வாராமையால் தன்னால்ஒன்றும்செய்யமுடியாதென ஸூப்ரண்டெண்டால் பதில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாயும் சொல்லப்படுவதுடன் இத் தாவா விஷயம் இரு நிர்வாகிகளாலும் தேவஸ்தான போர்டுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாயும் சொல்லப்படுகிறது. ஆழ்வார் தேவஸ்தானத்துக்கு இரு நிர்வாகிகள் ஜாஸ்தியான சம்பளத்திலிருப்பது நியாயமாயில்லையெனத் தெரிவதால் ஸூப்ரண்டுக்குப் பதில் கோயிலின் வைதீக உள் நிர்வாஹங்களை கவனிக்கும் நிலையில் உள்த்துரை மானேஜராக ஒருவர் நியமிக்கப்படவேண்டுமெனவும் நெல்லை டிஸ்ரிக்ட் ஸநாதனசபா நிர்வாக கமிட்டி அங்கத்தினரும் காஸ்பாண்டெண்டு மான ஸ்ரீ. அ. தே. ராமாநுஜய்யங்கார் ஷை உள் நிர்வாக மானேஜராக நியமனம் செய்யப்படுவது மிகவும் நலமெனவும் கண்டு திருநகரி பிரமுகர்களாலும் மகாஜனங்களாலும் சென்னை எண்டோமெண்ட் போர்டுக்கு தகவல் அனுப்பப்பட்டிருப்பதாய்த் தெரிவதுடன் ஸ்ரீமான் அ. தே. ராமாநுஜய்யங்கார் நியமிக்கப்படுவாரெனவும் சொல்லப்படுகிறது.

நமது விசேஷ நிருபர்.

## ராதாகல்யாணம்.

குடந்தை.

5—2—39 பானுவாரத்தன்று மேலக் காவேரி ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஸந்நிதித் தெருவில் அக்ரஹாரவாசிகளின் முயற்சியால் வழக்கம்போல் ராதாகல்யாண மகோற்சவம் அழகிய ஸ்ரீ கிருஷ்ணபடத்துக்கு அலங்காரம் அஷ்டபதி பஜனை, பிராம்மண ஸந்தர்ப்பணை முதலிய விமரிசையுடன் கொண்டாடப்பட்டது. மாலையில் விக்ரபாண்டியம் பிர்ம்மஸ்ரீ கோபாலசாஸ்திரிகள் அவர்களால் ஜயதேவ சரித்திரமும் அஷ்டபதி மகிமையும் வெகு அழகாகப் ப்ரவசனம் செய்யப்பட்டது. இதில் லலித கலா வல்லப ஸ்ரீமான் வரதிராஜ பாகவதர் அவர்களால் ருக்மணி கல்யாணம் ஹரிகதை சுமார் 4½-மணி நேரம் செய்யப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ணபகவானின் பால லீலைகளும் இடையிடையே சிர்நிருத்தத்தையொட்டிய ஹாஸ்யங்களும் ஸநாதனதர்மத்தின் மேன்மையும் 'ச்ருத்வா குணான்' என்ற சுலோகங்களின் விசேஷார்த்தமும் எல்லாருடைய மனதையும் பரவசப்படுத்தி இரவில் அகாலமாயினும் அனைவரையும் சந்தோஷிக்கச் செய்தன.

சோலையப்ப தெருவிலும் ராதாகல்யாண மகோற்சவம் மேற்கண்டவாறே சுபத்ராகல்யாண ஹரிகதையுடன் நடத்தப்பட்டதாக அறிகிறோம்.

நமது நிருபர்.

## மதிப்புரை

### ஸ்ரீ வித்யா பூஜை பத்ததி.

பிரம்மஸ்ரீ நடிமிண்டி ஸுப்ரம்மண்ய சாஸ்திரிகளால் தொகுக்கப்பட்டு சென்னை பிரம்மவித்யா விமர்சினீ ஸபையால் பிரசுரிக்கப்பட்டது.

ஸ்ரீ வித்யை உபாஸிக்கிறவர்களுக்கு உபயோகமானது. இந்நூல் பாசுராம கல்ப ஸூத்திரத்தில் விதிக்கப்பட்டதும் நித்யோற்சவத்தில் விஸ்தரிக்கப்பட்டதுமான துவார பூஜை முதற்கொண்டு விசேஷ அர்க்யம் விடுதல் வரையிலுள்ள கிரியைகள் யாவும் பூர்ணமாக இங்குசேர்க்கப்பட்டிருக்கின்றன. நித்யோற்சவத்தில் காட்டப்பட்டவாறு பதினொன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்ட பூஜை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு பிற தந்திரங்களிலிருந்து திரட்டப்பட்ட விசேஷங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்தர்யாகம், சதுராயதன பூஜை, காமகலா விமர்சம், ஹோமம் என்ற இந்நான்கு அம்சங்களினால் வேறு புஸ்தகங்களைக்காட்டிலும் இப்புத்தகத்துக்குள்ள மேன்மை நன்கு விளங்கும். பகிர்யாகத்தைக்காட்டிலும் சிறந்ததென ஒப்புக்கொள்ளப்பட்ட அந்தர்யாகமானது இதற்கு முன் அச்சியற்றப்பட்ட வெளியீடுகளில் முழுமையாகவும் ஸாங்கோபாங்கமாயும் வெளியிடப்படவில்லை. இந்த நூலிலோ நன்கு வெளியிடப்பட்டிருக்கிறது என்பதும் இதன் சிறப்பை அதிகப்படுத்துகிறது. இவ்வாறே கணபதி, சூர்யன், விஷ்ணு, பரமேச்வரன் ஆகியவர்களின் சதுராயதன பூஜை மனதிற் பதியும் படியான தியானத்துடனும் ஷோடசோபசார விளக்கத்துடனும் இங்கு குறிக்கப்பட்டுள்ள, பூஜையின் அங்கமான வைதிக ஹோமத்துக்கு வேண்டிய முழு விவரமும் இந்நூலில் இணைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே கலசஸ்தாபனம், ஸாமான்ய அர்க்யம் விசேஷார்க்யம், அக்னி, சூர்யன், சந்திரன், கலார்ச்சனை, சுத்தி பாத்திரார்ச்சனை, தூபம், தீபம், நைவேத்யம், நீராசனம், புஷ்பாஞ்சலி இவைகளை சமர்பிக்குங்கால் தேவையான வைதிக மந்திரங்கள் பல வேறு நூல்களிலிருந்து திரட்டப்பட்டிருப்பதால் பண்டிதர்களின் மனதை கவர்கின்றன. நித்யோஸ்தவத்தில் சொல்லப்படாத பஞ்சபஞ்சிகா பூஜை ஞானார்ணவம் முதலிய கிரந்தங்களிலிருந்து வெகு விஸ்தாரமாக இங்கு காட்டப்பட்டிருக்கிறது.

அதிக விஸ்தாரமான இந்த வித்யாபூஜையைச் சுருக்கி உபயோகத்திற்கேற்றவாறு தொகுத்து முக்கியமானவற்றை விட்டுவிடாமல் பூஜை செய்கிறவரின் சௌகரியத்தின் பொருட்டு பூஜையின் கிரமத்தை தெளிவாக விளக்கும் மனதைக் கவரும்படியான சித்திரங்களை ஆங்காங்கு அமைத்து அனுபந்தத்தில் அபிஷேகத்துக்கு உபயோகமாயுள்ள ஸ்ரீ ஸூக்தம் முதலியனவும் சோதிக்கப்பட்ட அர்ச்சனைக்கு வேண்டிய ஸஹஸ்ரநாமம், த்ரிசதீ நாமங்களும் ஸ்ரீவித்யைக்கு மூலபூதமான த்ரிபுரா, தேவி, பாவனா, ரிக்வேத உபநிஷத்துகளும் சேர்க்கப்பட்டு அழகிய தேவநாகர எழுத்தில் அச்சிடப்பட்டு இது வெளியிடப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒருபக்கப் பதிப்பு காலிகோ | ரூ. 3—8—0 |
| „ அட்டை | ரூ. 3—0—0 |
| இருபக்கப் பதிப்பு | ரூ 2—0—0 |

கிடைக்குமிடங்கள்:—

ஸ்ரீ பிரம்மவித்யா விமர்சினீஸபை 178, லாய்ட்ஸ் ரோடு ராயப்பேட்டை மதராஸ்.

அல்லது

பாலமனோரமா பிரஸ், மைலாப்பூர் மதராஸ்.

அல்லது

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

என்ற விலாசத்துக்கு எழுதி பெறலாம்.

குறிப்பு:— ஸ்ரீ வித்யா ஸபர்யாவாஸனா (அச்சில்).

## பிரபல ஸநாதனதர்மி காலமானார்.

ஸ்ரீ வைகுண்டம் பிரபல வக்கீலும் ஸ்ரீ வைகுண்டநாதர் ஸ்ரீ வைகுண மங்கை திருப்புளியங்குடி தேவஸ்தானங்களின் டிரஸ்டியுமான ஸ்ரீமான் எஸ். வி. கிருஷ்ணய்யர் சென்றவாரம் திடீரென காலமானது வருந்தத்தக்கதாம். பிரபல ஸநாதனியான ஸ்ரீமான் ஐயர் ஸநாதன ப்ரசாரத்தில் தீவிரமாய் ஈடுபட்டுழைத்துவந்தவராவர்.

நவிநி.

## கடன் நிவாரணச் சட்டம்.

புரோநோட்டு விஷயத்தில் செல்லுபடியுள்ளதே.

சென்னை ஹைகோர்ட் தீர்ப்பு.

சென்னை கவர்ன்மெண்டார் இயற்றிய கடன் நிவாரணச் சட்டமானது புரோநோட்டுக்கள் விஷயத்தில் செல்லுபடியாகுமா என்ற விஷயத்தைப்பற்றி சென்னை ஹைகோர்ட்டில் புல்பெஞ்சில் விசாரணைநடைபெற்றதை நேயர்கள் அறிவார்கள்.

மேற்படி சட்டமானது புரோநோட் விஷயத்திலும் செல்லுபடியுள்ளதுதானென்றும், இத்தகைய சட்டம் செய்ய மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அதிகாரமிருப்பதாயும் ஜட்ஜிகள் தீர்ப்புக் கூறினார்கள்.

## பரோடா ராஜா காலமானார்.

படோரா ஸம்ஸ்தான அரசரான கெயிக்வார் நேற்றுமுன் பம்பாயில் காலமானார். இவர் மிகுந்த தைர்யசாலியெனப் புகழப்பட்டவர். பெரும்பாலும் மேற்றிசைகளிலேயே வஸித்துவந்தார். தீவ்ர ஆசாரத் திருத்தக்காரர். மத விருத்தமான பலசட்டங்களை தமது ஸம்ஸ்தானத்தில் இயற்றிவைத்திருக்கிறார்.

(8ம் பக்கம் டிப்பணியின் தொடர்ச்சி)

(4) "एवं तु केचित्........दधि दध्यू शब्द-न्यायेन सैव शक्तिः" என்ற (55ம் பக்கம்) தத்வ டீகைக்கு "सैव अभिधारूपैव" என்று டிப்பணி காண்கிறது. இதன் கருத்து என்ன? சக்தி அபிதாரூபைதானே. "ஸைவ" பதத்துக்கு இதுவா பொருள். ஸ்ரீஸ்வாமி காட்டியிருக்கிற ந்யாயம் என்ன? இந்த டீகை, ச்ருதப்ரகாசிகையிலுள்ள "யத்வா" பக்ஷத்தின் அர்த்தாநுவாதமல்லவா? இந்தப் பக்ஷத்தின் ஸ்வரூபத்தை, ச்ருதப்ரகாசிகை, பாவப்ரகாசிகை, வ்ருத்தி ஸூத்ரமஹாபாஷ்யம், "ஸர்வே ஸர்வபதாதேசா:—" என்ற ந்யாயம், இவைகளைக்கொண்டு நன்றாக நிச்சயித்துக்கொண்டால், இந்த டிப்பணியின் வைபரீத்யம் வெளியாகும்.



## அகில பாரதீய ஸ்வராஜ்ய ஸங்கத்தின் 11-வது மகாநிவேசனத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்.

(சென்ற வாரத்தொடர்ச்சி.)

டெல்லி சிவன் கோவில் ஸத்யாக்ரஹம்.

5. டெல்லிச் சிவன்கோவில் விஷயமாய்ப் பூர்ண உதவிசெய்ய இந்தச்சம்மேளனத்தார் சித்தமாயிருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். இந்தச் சம்மேளனத்தினிடமிருந்து எல்லாவிதமான ஸஹாயத்தையும் எதிர்பார்க்கலாமென்றும் டில்லியில் வசிக்கிற ஹிந்து ஜனங்களுக்குச் சம்மேளனத்தார் அறிவிக்கிறார்கள். தங்கள் கோரிக்கை நிறைவேறும்வரை, அவர்கள் 'தர்மாக்கிரகத்தை நிறுத்திவிடக்கூடாதென்றும் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார்கள்.

அகில பாரதீய தார்மிக ஜனங்களின் கோரிக்கையை ஆதரவுசெய்து, மிகவும் சீக்கிரத்தில் யாதொருதடையுமன்னியில் "டில்லி"ச் சிவமந்திரத்தை வர்ணாசிரம தர்மிகளிகளிடம் ஒப்புவித்துவிடவேண்டுமென்றும், தர்மாக்கிரகம் செய்தவர்களான வீர ஹிந்துக்களைக் காவலிலிருந்து விடுதலைசெய்யவேண்டுமென்றும், மகாத்மாக்களான ஸாதுக்கள், ரிஷிகுலத்துப் பிர்ம்மசாரிகள், ஸம்ஸ்கிருத பாடசாலை மாணுக்கர்கள், தாங்களாகவே ஸேவை புரிந்தோர், இவர்கள்பேரில் போலீஸ்காரர் செய்த அக்கிரமத்தைக் குறித்து விசாரணைசெய்வதற்காக நிஷ்பக்ஷபாதமான ஒரு கமிட்டியை நியமித்து விசாரிக்க வேண்டுமென்றும், விசாரணையில் குற்றவாளிகளென்று கண்டுபிடிக்கப்பட்டவர்களுக்குத்தகுந்தபடி தண்டனை விதிக்கவேண்டுமென்றும், இந்திய சர்க்காரிடம் சம்மேளனத்தார் வற்புறுத்துகிறார்கள்.

மேற்கண்ட காரியத்தைச் சரிவர நிறைவேற்றும்படி, டெல்லி நகர வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கத்தார்க்கு இந்தச் சம்மேளனம் கட்டளையிடுகிறது.

தெய்வப்பிரார்த்தனை நடத்த வேண்டுகோள்.

பலபல பக்கங்களிலிருந்தும் தர்மத்துக்குச் சங்கடங்கள் நேரிட்டிருக்கின்றன. அவைகளுக்குக் கீழே குறிப்பிட்ட பிரகாரம் பரிஹாரங்களை உடனே செய்யவேண்டும்.

ராகமற்றவர்களான தபஸ்விகள், மகாத்மாக்கள், இவர்களின் கோருதலின்படி, பாரத நாட்டிலுள்ள எல்லா ஸநாதனிகளும், தங்கள் தங்கள் நம்பிக்கைப்படிக்கும், தங்கள் தங்கள் உபாஸனைக் கிரமப்படிக்கும், தங்கள் தங்கள் இஷ்டதெய்வங்களுக்குப் பூஜையைத் தினந்தோறும் இயன்ற அளவில் நியமித்துடன் ஸங்கல்பம் செய்துகொண்டு, அனுஷ்டித்து வரவேண்டும். ஸங்கல்பம் வருமாறு.

(இன்ன) கோத்திரத்திற் பிறந்தோறும் (இன்ன) சர்மா தர்மத்துக்கு ஏற்பட்டிருக்கிற இடர்களை (இந்த) தைவ பிஸாதத்தால் விலக்குதல் மூலமாகத் தர்மத்தை ஸ்தாபிக்க விரும்பி (இந்த) மந்திரத்தை ஜபம் செய்கிறேன். இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்கிறேன்.

இவ்விதமாகக் கோடிக் கணக்கான தர்மவான்கள், ஒவ்வொருவரும், பக்தியுடனும், தீவிரமான நம்பிக்கையுடனும் அநுஷ்டானம் செய்யத் தொடங்கினால் கோரின காரியம் அவசியம் நிறைவேறும்; பயனும் கைகூடும்.

எந்த நல்லோர்களுக்கு இந்த ஸங்கல்ப விஷயம் தெரியவருகிறதோ, அவர்கள் காரியாலயங்களுக்கு அதை அனுப்புவதுடன், மஹாநுபாவர்களையும் உற்சாகப் படுத்த வேண்டும்.

இவ்விதம் நடக்குமென்று இந்த மகாநிவேசனத்தார் மிகவும் நம்பியிருக்கிறார்கள்.

ஸ்வதேசி பிரசாரம்.

ஜனத்தொகையின் செல்வ நிலைமை வளர்வதற்கு உபயோகப்படக்கூடியதான ஸ்வதேசிப்பிரசாரம் முதலியவைகளில், ஸநாதனதர்மிகளுக்கு அபிமானம் இருக்கவேண்டும். இவ்விஷயத்தில் எல்லோரையும் மகாநிவேசனத்தின் (Subjects Committee) விஷயாலோசனைக் கம்மிட்டி வற்புறுத்துகிறது.

ஸமஷ்டி எதிர்ப்பு.

(Govt. of India Act) சட்டத்தில் Feederation என்பது எவ்விதமாய்க் கூறப்பட்டிருக்கிறதோ, அது எல்லாப்படியாலும் அந்யாயமானது; ஒத்துக் கொள்ளத்தகாதது. ஏனெனில், அதில் தர்மத்தை ரக்ஷிக்கக்கூடியதான யாதொரு விதியையும் காணோம், அதில் பொது அரசாங்கத்தின் ஒழுங்குமில்லை.

ஹிந்துக்களின் நன்மையை முற்றிலும் கெடுக்கக்கூடியதான (Poona Pact Communal awardம் அதில் சேர்ந்திருக்கிறதாகையால் அதை அவசியம் ரத்துச் செய்யவேண்டும் என்று இந்த மஹாநிவேசனம் முறையிடுகிறது.

காங்கிரஸுக்கு அதிகாரமில்லை.

"காங்கிரஸ்" என்பது British Indiaவில் எல்லாச் சாதியார்களுக்கும் பொதுச் சபையாயிருப்பதால், ஹிந்துக்களின் நன்மையைக் காப்பாற்றக்கூடியதல்லவென்பது, அனுபவத்தால் தெரியவருகிறது. மேலும் ஹிந்துக்களின் ஹிதத்துக்குக் கெடுதி செய்யக்கூடிய Communal award ஹிந்து ஜாதியின் ஒற்றுமையைத் தகர்க்கக்கூடியதான Poona Pact இவைகளையும் "காங்கிரஸ்" அங்கீகரிக்கிறது. முஸ்லீம் ஜனங்களுக்குத் துண்டாகப் பிரதிநிதிகள் இருக்கவேண்டுமென்பதையும் ஒத்துக்கொள்கிறது. மேலும் சிற்சில மாகாணங்களில் நியமிக்கப்பட்டிருக்கிற மந்திரி மண்டலம் "Ministry"களும், ஹிந்துக்களின் பழக்கவழக்கங்கள், தர்மம் இவைகளைக் காப்பதில் எல்லாவிதத்தாலும் சக்தியற்றவை. ஆகையால் ஹிந்து முஸ்லீம் விஷயங்களில் ஹிந்துக்களின் சார்பாக எடுத்துக் கூறுவதற்கு, "Indian National Congress" அதிகாரமற்றது.

இந்தூர் செய்கை கண்டனம்.

இந்தூர் ராஜ்யத்திலுள்ள வர்ணாசிரம தர்மரக்ஷணி சபையார், அந்தியஜர்களைப் பற்றியதான, மகாராஜாவின் ஆக்ஞையைப் பற்றி [Memorial] மகஜர் அனுப்பியிருப்பதில், அதை நன்றாய்க் கவனித்து, வர்ணாசிரம தர்மிகளின் அதிகாரத்தையும், மரியாதையையும், காப்பாற்றும் படிக்கும், மேலே கண்ட உத்திரவை ரத்து செய்யும்படிக்கும், மகாராஜாதிராஜ இந்தூர் மகாராஜா அவர்களை இந்த மகாநிவேசனத்தார் மன்றாடிக் கேட்டுகொள்கிறார்கள்.

ஹிந்தி ஆதரவு.

எவ்விதம் செய்தால் பாரதநாடு முழுவதிலும் ஹிந்தியே பொதுப் பாஷையாக ஆகுமோ, அவ்விதம் அதைப் பாவச்செய்ய வேண்டுவது அவசியம் என்று இந்தச் சங்கம் அபிப்பிராயப் படுகிறது.

"ஹிந்துஸ்தானி" யென்னும் பெயரைக் கொண்டு ஹிந்தியில் உருதி பாஷையைப்புகவிட வேண்டுமென்ற துஷ்பிரயத்னத்தை அதிவேசனத்தார் பலமாய்க் கண்டிக்கிறார்கள்.

உறுதிமொழியை மாற்றக்கூடாது.

[Secretary of state for Indin in council] அவர்கள் ஹிந்து ஜனங்களின் செல்வம் ஸ்வாதந்திரியம் [civil liberties] இவைகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற உறுதியை மாற்றக் கூடாது. அவ்வுறுதி, 1935ஹு 301வது Govt of India Actனால் ரத்தாகிவிட்டதாகத் தெரிகிறது. அவ்விதம் செய்தல், ராஜநீதிக்கும், தர்மத்துக்கும் விரோதமானது.

ஆதலால் அந்த உட்பிரிவை உடனே ரத்துச் செய்யவேண்டுமென்று, அகில பாரதவர்ஷ வர்ணாசிரம ஸ்வாராஜ்ய ஸங்கத்தின் 11-வது அதிவேசனம் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறது.

ஸம்ஸ்கிருத பண்டிதர்களின் கஷ்டம்.

ராஜபுதானா போர்டார் பாடசாலை (school) களில் ஸம்ஸ்கிருதத்தையோ ஹிந்தியையோ கற்பிக்கிற உபாத்தியாயர்கள் (Graduates) (பி ஏ. எம். ஏ.) ஆக இருக்கவேண்டுமென்று உத்திரவிட்டு, ஸம்ஸ்கிருத வித்வான்களின் தொழிலைக் கோடரிகொண்டு சிதைத்துவிட்டார்கள். அதைக்கண்டு இந்த அதிவேசனம் மிகவும் துக்கமடைவதைத் தெரிவிப்பதுடன் இந்தப் புதிய உத்திரவைச் சீக்கிரமாக ரத்துசெய்ய வேண்டுமென்றும் முன்போல் அத்யாபகர்களின் யோக்கியதையைக் காப்பாற்றவேண்டுமென்றும் ஷை போர்டைக் கேட்டுக்கொள்கிறது.

ஸினிமாப்பட கண்டனம்.

இன்றைக்கும் நாளைக்கும் (தற்காலத்தில்) சித்திர படங்கள் (cinema) மூலமாய் மாசற்ற மனோநிலையைக் கெடுக்கக்கூடிய படங்களை, படம் காட்டுவோர் வெளிப்படுத்தி வைதிக தர்மத்தை நாசம் செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

மேலும் நம்முடைய தேவதைகள் அவதார புருஷர்கள், தொழத்தகுந்தவர்களான ஆதர்ச புருஷர்கள், இவர்களை ஏளனம் செய்கிறார்கள்.

நியாயம்பெறுவதற்காகக் கீழேகுறிப்பிடப்பட்ட மகாநுபாவர்களைத் தற்காலச் ஸமிதி (Drorisional Committee) ஆக இம்மகாநிவேசனத்தார் நியமிக்கிறார்கள்.

(1) கோ. ஜீவனதாஸ்ஜீ (அமிருதசரஸ்) மற்றும் 13 பெயர்கள்.

தீண்டாதாரிடம் அபிமானம்.

"ஹரிஜனங்கள்" என்று சொல்லப்படுகிறவர்களின் விஷயத்தில் வகுப்புத்துவேஷம் காட்டுகிறவர்களை இம்மகாநிவேசனம் பலமாய்க் கண்டிக்கிறது; மேலும் தாழ்த்தப்பட்ட வகுப்பார்க்குச் செல்வத்தால் உயர்வு, நல்வாழ்க்கை இவைகளில் இம்மகாநிவேசனத்தார் அனுதாபம் கொள்கிறார்கள்.

வைதிக ஆசரணைகள்.

வைதிகதர்மத்தை யனுஷ்டிக்கிற ஹிந்துக்கள், இவ்வுலகில் இன்பத்துடன் வாழவேண்டியது இன்றியமையாததாகையால், கீழே விவரித்திருக்கிற காரியங்கள் எல்லாம் பூர்ணமாய்ச் செய்யப்படவேண்டும்.

(1) வேதசாஸ்திர புராணங்களில் கூறப்பட்டபடி, வர்ணாசிரம மர்யாதையைக் காத்தல் வேண்டும்.

(2) ஜாதிப்பிரிவு (பிராம்மண க்ஷத்திரியர்) நியமப்படியே இருத்தலால், வர்ணதர்மத்தை ரக்ஷித்தல் வேண்டும்.

(3) தொடத்தகுந்தவர், தீண்டாதார் என்ற வியவஸ்தையே ஹிந்து தர்மத்துக்கு மூலம் (ஆணிவேர்) ஆக இருக்கிறது. இதை முற்றிலும் காத்தல் வேண்டும்.

(4) வேதசாஸ்திரங்கள் ஆகமங்கள் இவைகளில் விதிக்கப்பட்டிருக்கிற பிரகாரம், தேவாலயங்கள் நிர்மாணம் செய்யப்பட்டிருப்பதால், அவைகளில் (அந்தியஜர்கள்) தீண்டாதார் பிரவேசித்தல் ஒருக்காலும் தகாது.

(5) ஹிந்துக்களுக்குள் விவாஹமென்பது மிகவும் தார்மிகமான ஸம்ஸ்காரம் என்று கருதப்படுகிறது. அது இகலோகம், பரலோகம், இவைகளின் பலன்களைப் பெறுவதற்காகவும் அவைகளைப் பிரயோசனப்படுத்திக்

(தொடர்ச்சி 8 பக்கம் பார்க்க)

(7ம் பக்கத்தொடர்ச்சி)

கொள்வதற்காக மூவ்விதமான ருணங்களைத் தீர்ப்பதற்காகவும், சாஸ்திர ரீதியாய் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஆதலால் "சாரதாச் சட்டம்" விவாகரத்து மசோதா, மதப்பிரஷ்டர்களை மறுபடியும் ஜாதியில் சேர்த்துக்கொள்ளுதல், விதவா விவாஹம், முதலான அதர்மச் சட்டங்கள் மூலமாகத் தர்மத்தைக் கெடுத்தல் கூடாது.

(6) (கோ) பசுக்களில் 33கோடி தேவதைகளும் இருப்பதால், அவை தொழத் தகுந்தவை. ஆகையால் ஹிந்துஸ்தானத்தில்(நம்நாட்டில்) ஒரு பசுவையாவது கொல்லக்கூடாது.

(7) ஹிந்துக்களின் புண்ய தீர்த்தங்களுக்குச் சமீபத்தில், அவர்கள் மனதைப் புண்படுத்தக் கூடியதும், அல்லது அவர்களின் அனுஷ்டானத்துக்குக் கெடுதி விளைக்கக் கூடியதான யாதொரு அக்கிரமக் கார்யமும் செய்யக்கூடாது.

(8) கோவில்களிலும், அவைகளுக்குச் சமீபத்திலும், உற்சவ காலங்களில் ரஸ்தாக்களிலும் வாத்தியம் வாசித்தல் ஹிந்துக்களுக்கு அவசியமான சாஸ்திரீயவிதியே, இதை எவ்விதத்திலும் தடுத்தல்கூடாது.

(9) ஹிந்துக்களுக்குச் சம்ஸ்கிருத பாஷையே தாய்மொழி; இந்தப் பாஷையிலேயே எல்லாச் சாஸ்திரங்களுமிருப்பதால் இந்தப் பாஷையும் சாஸ்திரங்களைப்போல் போற்றத்தகுந்தது. ஆகையால் ஒவ்வொரு ஸ்கூலிலும், காலேஜிலும் இந்தப் பாஷையைக் கற்பிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

(10) தேவநாகரி ஹிந்தி பாஷை ஹிந்துக்களுக்குப் பொதுவான பாஷையே; ஆதலால் கோர்ட்டு முதலான வியஹாரஸ்தலங்களில் இதற்குப் பிரதான்யம் கொடுக்கவேண்டும்.

(11) ஹிந்துக்களின் உற்சவக் காலங்களிலும், தர்ம ஸம்மேளன காலங்களிலும், கூட்டங்களில் அந்ய மதஸ்தர்களின் தர்ம விரோதமான உபந்யாஸங்களைச் செய்ய விடக்கூடாது.

(12) ஹிந்து தர்மரீதியாகப் பிராமணர்கள் பூஜ்யர்கள் (போற்றத் தகுந்தவர்கள்) என்று கருதப்படுகிலது; அவர்கள் உபாத்தியாயர்களாயிருப்பதை அந்தியஜர் முதலான மற்றோர்கள் கெடுப்பது மிகவும் இகழத் தக்கது; பிராமணர்களுக்கு ஏன் உயர்வு? அவர்களிடம் ஏன் பக்ஷபாதம்? இந்த நினைவுகளைக் கட்டோடு ஒழிக்கவேண்டும்.

(13) ஆண்குழந்தைகளையும், பெண்பிள்ளைகளையும் சேர்த்து ஒரே இடத்தில் கல்வி கற்பித்தல் கூடாது.

(14) ஹிந்துக்களின் பிராசீன பரம்பரை, மரியாதை, வழக்கங்கள், இவைகள் தர்ம சாஸ்திரங்களில் கூறப்பட்ட பிரகாரம் ஆசரணையிலிருப்பதால், அவைகளுக்கு யாதொரு தீங்கும் செய்யக்கூடாது.

(15) சட்டசபைகளில் இதுவரை ஹிந்து தர்மங்களுக்கும் ஆசாரணைகளுக்கும் விரோதமாக ஏற்பட்ட சட்டங்களை ரத்துசெய்வதுடன், இனிமேல் இவ்விதச் சட்டங்களைக் கொண்டுவரக்கூடாதென்று கண்டிப்பாய்த் தடைசெய்யவும் வேண்டும்.

ஹிந்துக்களின், விசேஷத்தையும், ஸநாதன தர்மிகளின் தர்ம விஷயத்திலும், அதிகார விஷயத்திலும், ராஜநீதி விஷயத்திலும், நான்கு பக்கங்களிலிருந்தும், பிரிட்டிஷ் சர்க்காராலும், மற்றும் பிறராலும் ஏற்பட்டிருக்கிற ஆக்கிரமணங்களை ரத்துசெய்யமட்டும் முயற்சி செய்தல் போதாது, சங்கங்கள் மூலமாய்ப் பலமாய்ப் பிரசாரம்செய்தும், தர்மவீரதளங்களைச் சேர்த்தும், மிகவும் விழிப்புடன் தன் பெலத்தைச் சேர்த்து வைக்கவேண்டும். அதனால் ஸநாதன ஹிந்துக்கள் மீது இனி யாதொரு கெடுதியும் செய்வதற்கு மற்றவர்களுக்குத் தைரியம் வாரதபடி முயற்சி செய்தலும் வேண்டும்.

# அகார ஆரம்ப மங்களார்த்தம்.

## தத்வடீகை டிப்பணியின் போக்கு.

(ஒரு மஹாமஹோபாத்யாயர் எழுதுகிறார்.)

ஸ்ரீபாஷ்யத்தின் முதல் ச்லோகத்தை வ்யாக்யானிக்கையில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்

अकारोपक्रमथ.............. नञोऽप्यत्र शुभत्वं स्यात् वैकल्यप्रतिषेधत:" என்று ஸாதித்திருக்கிறார்.

(1) அகாரம் விஷ்ணுவாசகம். அந்த அர்த்தத்துக்கு இங்கு விவக்ஷையில்லாவிட்டாலும், அன்யார்த்தமான இந்த அகாரம், விஷ்ணுவைத் தெரிவிக்கும் சக்தியுள்ளதாகையால் இங்கு இது மங்களமாகிறது.

(2) நஞ் நிஷேதார்த்தகமாகையால், இது அமங்களம் என்றல்லவா ஆசங்கை. இது ஸரியல்ல. நிஷேதிக்கப்படுவது அசுபமாயிருந்தால் அங்கு நிஷேதம் சுபமாகவும், நிஷேதிக்கப்படுவது சுபமாயிருந்தால் அங்கு நிஷேதம் அசுபமாகவும் திருகிறது. ப்ரக்ருதத்திலோ நிஷேதிக்கப்படும்வைகல்யம்(குறைவு) அசுபமாகையால் அதன் நிஷேதம் சுபமாகிறது.

இப்படி இரு பக்ஷங்கள் உள்ளன. இந்த டீகையும், "अत्र भगवद्या ........ नञो निषेधवाचित्वे अपि ........ என்று ச்ருதப்ரகாசிகையில் காட்டிய இரண்டு பக்ஷங்களையே காட்டியிருக்கிறது.

டீகையில் "नञोऽप्यत्र என்றும் अतोऽप्यत्र" என்றும் இரண்டு விதமாய்ப்பாடங்கள் புஸ்தகங்களில்காணப்படுகின்றன. முதல்பாடத்தையே கோடம்பாக்கம் பதிப்பும், இரண்டாம்பாடத்தையே தெலுங்கு லிபிப்பதிப்பும் ஆதரிக்கின்றன. சென்னை நாகரலிபிப்பதிப்பிலோ இரண்டாம் பாடம் முக்கியமாகவும், முதல் பாடம் அப்ரதானமாகவும் போடப்பட்டிருப்பதுடன் "अत इति अशब्दात् सार्वविभक्तिकस्तसि:; अकारस्येत्यर्थ:" என்று ஒரு டிப்பணியும் காணப்படுகின்றது.

நஞர்த்தமான அபாவம் அசுபமாகையால் இங்கு அமங்களமன்றோ என்கிற சங்கையைத் தீர்க்கும் ஸமாதானத்தை எழுதும் பொழுது "நஞோऽப்யத்ர" என்ற பாடமே முக்யமாயிருப்பது உசிதம். ச்ருதப்ரகாசிகையிலும் "நஞோ நிஷேதவாசித்வே அபி........" என்றே இருக்கிறது. இந்தப் பாடத்தில் தான் "நஞோऽபி" என்று விரோதஸூசகமான அபி சப்தத்துக்கு ஸ்வாரஸ்யம் உள்ளது. டிப்பணிப்ரகாரம் அகாரம் என்று அர்த்தம் கொண்டால் "அதோऽபி" என்பதிலுள்ள அபிக்குப் பொருத்தம் அழகாய் ஏற்படுகிறதா? "நஞ்" என்பதின் அர்த்தம்போல "அ" என்பதின் அர்த்தம் ஸர்வாத்மநா அசுபமாகுமா? இது விஷ்ணுவையும் சொல்லக்கூடியதல்லவா? நஞர்த்தமோ ஸர்வாத்மநா அசுபமே.

இங்கு நஞ்ஜினுடைய 'அ" ஆகையால் அசுபமென்று அபி சப்தத்துக்குப் பலம் கட்டுவதைவிட "நஞோऽபி" என்கிற பாடத்தையே முக்கியமாகக் கொள்வது உசிதமல்லவா?

மேலும், கவி ஸிம்ஹமான ஸ்ரீஸ்வாமியின் ஸ்ரீஸூக்தியில் கீழ்ப்பட்ட கவியின் க்ருதியில் போல "அத:" என்கிற விடத்தில் அ சப்தத்தை வைத்தும் "ஸார்வவிபக்திகஸ்தஸி:" என்று சொல்லியும் "அகாரஸ்ய" என்று விவரணம் செய்வது உசிதமன்று.

இது, "தபரஸ்தத்காலஸ்ய" என்கிற பாணிநி ஸூத்ரப்ரகாரம் "அத்" என்ற சப்தம் என்று நினைத்து அதனுடைய ஷஷ்டி என்ற எண்ணத்தால் "अत·=ह्रस्वाकारस्य" என்று ஒருவர் இவ்விடத்துக்கு எழுதியிருந்த டிப்பணியை ஒத்ததாகவே இருக்கிறது. ஸ்ரீ ஸ்வாமிக்கு "அகாரஸ்ய" என்று திருவுள்ளம் இருந்தால் "அஸ்யாப்யத்ர" என்றே எழுதியிருக்கக் கூடுமே. ஸ்ரீஸ்வாமியின் திருவுள்ளம் இப்படியிராதென்று உறுதியாகக் கூறலாம்.

உண்மையில், இந்தப் பாடத்திலும் "अतोऽपि = वक्ष्यमाणहेतोरपि" என்று வ்யாக்யானிப்பது உசிதம். மேலே காட்டும் வைகல்யப்ரதிஷேதம் ஹேது. இந்த ரீதியை "आतश्च मन्यामहे" "एतेन" "इदमपि" என்றுள்ள ப்ரௌடக்ரந்த வாக்யங்களில் காணலாம். கீழில் ஒரு ஹேதுவைச் சொல்லியிருக்கிறபடியால் இங்கு அபிசப்தத்துக்கு இடமுண்டு

(2) "प्रयोगत: स्थिति: स्थेमा प्रलयाद्युद्दशासनात्" என்று 14ம் பக்கத்தில் தத்வடீகை பங்க்தி இருக்கிறது. இதில் விதேயம் என்ன? மேல் காணும் பஞ்சம்யந்தப்படி "ஸ்தேம" பதத்துக்கு ஸ்தேம சப்தம் என்று அர்த்தம் சொல்லவேண்டும். அப்படியானால் "ஸ்திதி: ஸ்தேமா" என்பது எப்படிச் சேருகிறது? கீழில் காட்டியிருக்கிறபடி இங்கேயும் விவரணம் என்று சொல்ல முடியுமா? மற்றப் பதங்கள் சேரவேண்டாமா? இங்கேயே முராரிகவியின் நாடகத்தில் ஐந்தாவது அங்கத்திலும் இந்த ப்ரயோகம் இருக்க, இதை விட்டு விட்டு ஆறும் அங்கத்தை ஸ்ரீஸ்வாமி எடுத்துக்கொள்ளக் காரணம் என்ன? "பஹுலாதீநாம்" என்ற ஆதிபதத்தால் எவைகளை எடுத்துக்கொள்வது? இவற்றையெல்லாம் விமர்சித்து இங்கே ஒரு டிப்பணி எழுதியிருந்தால் ஸௌகர்யமாயிராதா?

(3) ........अप्रत्ययस्य कथंचित्कर्मार्थकत्वसंभवादिति भाव:" என்று 52ம் பக்கத்தில் டிப்பணி இருக்கிறது. இப்படி எவ்விதமாகவாவது கர்மார்த்தகத்வத்தை ஸாதித்துவிட்டால் "வ்யாஸஸ்தாவந்த கடதே, விஜ்ஞாஸாநவயாத். அத ஏவ" என்ற முன் வாக்யம் நிலைக்குமா? டீகையில் "கதம்சித்" என்று பேசப்படவில்லையே! டீகையின் அர்த்தமே வேறல்லவா?

திவான்பகதூர், ராமநுஜாசாரியார். அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| திருவாய்மொழி (3 வால்யூம்) | 7 | 8 | 0 |
| கீதார்த்தசங்கிரப் பாட்டுகள் | 0 | 6 | 0 |
| ஸ்ரீமத் கீதாபாஷ்யம் (3 வால்யூம்) | 3 | 0 | 0 |
| யதீந்த்ரமத தீபிகை. | 4 | 0 | 0 |
| ராமாயணசாரம் (பைண்ட்) | 1 | 8 | 0 |
| ௸ (ராப்பர்) | 1 | 4 | 0 |
| சித்திர ராமாயணம் (பூஜையில் இருக்கக்கூடியது). | 1 | 0 | 0 |
| ராமாயணஸாரம்,(ராப்பர்),சித்திர ராமாயணம், இரண்டும் சேர்த்து. | 2 | 0 | 0 |

ஸ்ரீ ஸ்தவம்.

மூலம் நாகரத்திலும்தமிழிலும் சிரோமணி ஸ்ரீநிவாஸராகவாசாரியரால் எழுதிய உரையுடன் விலை அணா 0—4—0

N. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள். பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிவகீதிமாலா. | 0 | 4 | 0 |
| ராமாஷ்டோத்தரம். | 0 | 1 | 0 |
| சங்கரபகவத்பாதாள். | 0 | 8 | 0 |
| தமிழ் சிக்ஷாரோக | 0 | 4 | 0 |

கிடைக்குமிடம்:— ஸ்ரீஜனார்தந ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்,



# ஸ்ரீரங்கம்.

## லக்ஷார்ச்சனை.

உபயகாவேரி மத்யத்தில் விளங்கும் ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் அஷ்ட லக்ஷ்ம்யலங்கிருதமான ஆதிசங்கரபகவத் பாதாளாலயத்தில் நாளது பஹுதான்யஷு தைமீ உ (20—1—39) சுக்ரவாரம் முதல் ஆரம்பித்து 16உ (29—1—39) முடிய 10 நாட்களில் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாளுக்கு லக்ஷார்ச்சனை மஹோத்ஸவம் அதிவிமர்சையாய் நடந்தேறியது. அவ்வமயம் தினந்தோறும் காலையில் ருத்ராபிஷேகமும் 10 ஆசார்யஸஹஸ்ரநாமார்ச்சனையும் பிருமண ஸந்தர்ப்பணையும் சிறப்பாக நடந்தது. ௸ 10 தினங்களிலும் ராத்திரி ௸ ஆலயத்தில் ஆசார்யாள் ஸந்நிதியில் பழூவூர் வேதாந்த பாடசாலை அத்யக்ஷர் வேதாந்த சிரோமணி பிர்ம்மஸ்ரீ S. V. சுப்ரமணிய சாஸ்திரிகளால் பகவத்கீதை உபந்யசிக்கப்பட்டது. ஆசார்யாளால் உபதேசிக்கப்பட்ட அத்வைத தத்வத்தை ஸகல ஜனங்களும் ஸுலபமாக அறியுமாறு அநேக லௌகிக திருஷ்டாந்தங்களுடன் மிகவும் ஸ்வாரஸ்யமாக உபந்யசித்தார்கள். கடைசி நாள் உபந்யாஸம் முடிந்ததும் பிர்ம்மஸ்ரீ குருபக்த சிகாமணி, சாஸ்திரப்ரஸாரபூஷணம் T. K. பாலசுப்ரமணியய்யரவர்கள் பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகளுக்கு வந்தனோபசாரம் கூறுவதற்காக ஆரம்பித்து, கீதை சுலோகத்தைச் சொல்லி, எப்படி ப்ரவாஹம் எவ்வளவு அதிகமாக இருந்தபோதிலும், பாத்திரங்களின் அளவுக்குத் தகுந்தபடிதான் ஜலத்தை எடுக்கமுடிகிறதோ, அப்படியே கீதையில் மிகவும் விசேஷமான தத்வங்கள் இருந்தபோதிலும் அவரவர்களுடைய புத்திக்குத்தகுந்தபடிதான் விஷயங்களை கிரஹிக்க முடிகிறதென்று சொல்லி ப்ரக்ருதத்தில் ப்ரஹ்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்கள், ஆசார்யாளுடைய அனுக்ரஹத்தால், மிகவும் எளிய நடையில் பண்டிதர் முதல் பாமர ஜனங்கள் ஈறாக எல்லோருக்கும் ஸுலபமாய் புரியும்படி அநேக லௌகிக திருஷ்டாந்தங்களுடன் உபந்யஸித்ததானது மிகவும் சிலாகிக்கத்தக்கதென்றும், கேட்டவர்களெல்லோருக்குமிக்க ஸந்தோஷத்தை விளைவித்ததென்றும், வெகுவாக புகழ்ந்தார்கள். பிறகு ஸ்ரீமதாசார்யாளின் பிரேரணையின்பேரில் பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகளுக்கு கீதோபந்யாஸசதுரர் என்ற பிருதை அளிப்பதாகச் சொல்லி ஒரு கலாபத் வெண்பட்டையும் மேற்கண்ட பிருதுபத்திரிகையையும் ஸம்மானமாகக் கொடுத்து மேன்மேலும் பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகளுக்கு சிரேயஸ்ஸை அனுக்ரஹிக்கும்படி ஸ்ரீமதாசார்யாளை பிரார்த்தித்து முடித்தார்கள்.

K. S. வெங்கடராம சாஸ்திரிகள்.

# மேல்மங்கலம்.

## கொடிய துக்கம்.

மிகுந்த வைதீக சிரத்தாவானுகிய தீக்ஷிதர் எம். எஸ். வெங்கட்டராமய்யரவர்களுக்கு ஸீமந்த புத்திரனுக உதித்த சுந்தரம் என்ற நாமமுடைய சுமார் 15 வயதுள்ள பாலன் நாளது தைமீ 16உ பானுவாரம் காலை சுமார் 10½ மணிக்கு அகால மரணமடைந்து பானுஜோதியில் கலந்து விட்டான். ௸ பையனுடைய குணமோ அப்ரமேயமானது. பையன் இவ்வருஷம் S. S. L. C. க்கு செலக்ஷன் ஆகி பரீக்ஷைக்குப் பணம் கட்டியிருக்கிறான். ௸ பையன் தனது உபனயன ஸம்ஸ்காரமானது முதல் ப்ராதஸ்னான, ஸந்தியாவந்தன, ஜப, ஆலய தர்சனாதி நித்ய கர்மாநுஷ்டானங்களை காலம் தவறிச் செய்தது கிடையாது. இவ்வயதிலேயே கணிதம், இங்கிலீஷ் முதலிய படிப்புகளில் போல் ஸம்ஸ்கிருதத்திலும் அபூர்வ ஞானமுடையவன். பூர்வாசாரத்தில் மிகுந்த பற்றுதலுள்ளவன். இயற்கையாகவே ப்ரபு வம்சத்துப்பையனுகையால் தன்னுடன் படிக்கும் ஏழைப்பையன்களுக்கு பணம், ஆகாரம் வஸ்திரம் முதலிய எவ்வளவோ உபகாரணங்களால் வேண்டிய உதவி செய்திருக்கிறான். அவன் மரணதினத்தன்று உபாத்யாயர்கள் உள்பட சுமார் 100 பையன்களுக்குமேல் வெளியூர்களிலிருந்து கால் நடையாகவும், சைக்கிள்களிலும் வந்து குவிந்து குடல் தெரிக்க ரோதனம் செய்த காக்ஷியைப்பார்த்தோர், மனம் பதறுகின்றனர்.

ஆஸ்திக மஹாஜனங்கள்.

# மீராபாய்.

துஷ்ட ஸம்ஹார சிஷ்ட பரிபாலனார்த்தம் அவதரித்த ஸ்ரீ கோபாலனிடம் பரம பக்தியைப் பாராட்டிய ஸ்த்ரீரத்னம் மீராபாய். இவள் ராஜபுதனத்தைச் சேர்ந்த மீவாட் தேசத்தில் மீராதா என்ற கிராமத்தில் பிறந்தவள். இவளது பெற்றோர்கள் நல்ல அந்தஸ்து வாய்ந்தவர்கள். நல்ல விஷ்ணு பக்தர்கள். தன் புதல்விக்குச் சிறுவயது முதல் பகவத் கதைகளைப் புகட்டி நல்லவழியிலேயே மனதைச் செல்லும்படி செய்து வந்தனர். காலம் செல்லச் செல்ல இவள் தேச பாஷையாகிய ஹிந்தியில் நல்ல தேர்ச்சியடைந்து அதிலேயே பகவத் ஸ்தோத்ரங்களைக் கவனம் செய்யும் சக்தியையும் பெற்றாள்.

மீரா சிறு குழந்தையாயிருக்கும்போது தன் தகப்பனுடன் விளையாடிக்கொண்டிருந்தாள், அப்போது அவ்வூரில் ஓர் கல்யாணம் நடந்து மணமகனும் மணமகளும் வீதியில் ஊர்வலம் சென்றனர். அதைப் பார்த்துக் குழந்தை தகப்பனை இது என்னவென்று வினவ, அவர் இந்தப் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் கல்யாணம். ஊர்கோலம் செல்கின்றனர் என்றுரைத்தார். இதைக்கேட்டதும் மீரா,தந்தையே! எனக்கெப்போது கல்யாணம்? என் கணவன் யார்? நான் எப்போது இவ்விதம் ஊர்வலம் செல்வதென வினவ அவளது தந்தை தான் ஆராதித்து வந்த 'கிரிதாரி' என்ற க்ருஷ்ண விக்ரஹத்தைக் காட்டி இவன் தான் உன் கணவன் என்றார் அதுமுதல் அந்த விக்ரஹத்தையே தன் கணவனுக பாவித்து அதற்கு சகலவிதமான உபசாரங்களும் செய்து வந்தவர் மீராபாய்.

மீராபாய்க்குத் தக்க வயது வந்தது அவளது அழகையும், அரிய குணங்களையும் தெய்வபக்தியையும் கண்டு அவள் தந்தை அவளுக்குகந்த கணவனைத் தேடலானான். இவ்விஷயம் தெரிந்ததும் மீராபாய் தகப்பனிடம் தந்தையே! எனக்கு தாங்கள் முன்னமே கிரிதர்தான் கணவன் என்று சொல்லியிருக்கிறீர்கள் நானும் அப்படியே பாவித்து இதுவரை நடந்துவந்திருக்கிறேன். இப்போது என்னைவேறொருவனுக்கு மணம் செய்விப்பதழகோவென, அவள் தந்தை பெண்ணே! நீ குழந்தையாயிருக்கும்போது உனக்கு விளையாட்டாகச் சொன்ன வார்த்தையது. உலகத்தில் உள்ளவர்களைப்போல் நீ இருக்கவேண்டுமேல்லவா. ஆகையால் நீ ஒரு ராஜகுமாரனை மணந்து அவனுடன் வாழவேண்டுவதவசியம் என்றார். தனக்கு அது இஷ்டமில்லையென்று மீரா எவ்வளவு சொல்லியும் தகப்பன் பந்துக்கள் முதலியவர்கள் நிர்ப்பந்தத்தினுல் அவர்களுடைய வார்த்தைக்குக் கட்டுப்படவேண்டியவளானுள் ஆனுல் மீராவின்மனம்மட்டும் கிரிதரைவிட்டுவேறெங்கும் செல்லவேயில்லை.

கடைசியாக அவளது தகப்பனார் உதயபுரி அரசனான கும்பராணு என்ற ஓர் ராஜபுத்ர மன்னனுக்கு மீராவை விவாகம் செய்வித்தார். கும்பராணுவும் நல்ல நடிப்பாளியாயும் தெய்வ பக்தியுள்ளவராகவும் இருந்ததால் புருஷனும் மனைவியும் மனமொத்துவாழ்ந்து வந்தனர்.

இவ்விதம் காலம் செல்லச் செல்ல மீராவுக்கு நாளுக்கு நாள் ஈச்வர பக்தியதிகரித்து எப்போது ம்க்ருஷ்ண பஜனத்திலேயே தன் காலத்தைக் கழித்து வந்தாள். அரண்மனைக்கருகில் ஒரு கோயில்கட்டி அதில் க்ருஷ்ணனைப் பிரதிஷ்டைசெய்து அங்கேயே எப்போதும் பஜனைசெய்து காலங்கழித்தாள். இவ்வுத்தமியின் க்யாதி எங்கும் பரவ, க்ருஷ்ண பக்தர்கள் திரள்திரளாய் இவளிருக்குமிடம் வந்து இவளை தர்சித்து ஆனந்தமடைந்தனர்.

அக்காலத்தில் டில்லியில் அக்பர் சக்ரவர்த்தி அரசுபுரிந்தார். இவருக்கு மத த்வேஷமில்லை. ஸாதுக்களுடன் பழகும் ஆசையுள்ளவர். இவர் மீராவைக் காணவிரும்பினார். ரஜபுத்ர ஸ்திரீகளை யாரும் காணமுடியாது. ஆனால் மீராவை பகவத் பக்தர்கள் தர்சிக்கலாம். ஆகையால் அக்பர், தான் சேன் என்ற சங்கீத வித்வானுடன் கலந்தாலோசித்து இருவரும் பைராகி வேஷம் தரித்து உதயபுரிசென்று க்ருஷ்ணாலயத்தில் மீராவை தர்சிப்பதே நல்ல மார்க்கம் என நிச்சயித்து அவ்விதமே செய்தனர்.

க்ருஷ்ணாலயத்தில் அநேக பக்தர்கள் மத்தியில் மிகுந்த பக்தியுடன் பஜனைசெய்து கொண்டிருக்கும் மீராவை அக்பரும் தான் சேனும் கண்டு பரமானந்தமடைந்து, இவளது தர்சனத்தால் தாங்கள் தன்யர்களானதாய் உள்ளம் மகிழ்ந்தார்கள். புதிதாய்வந்த இரண்டு ஸாதுக்களையும் கண்டதும் மீரா அவர்களை நன்குபசரிக்கும்படி வேலையாட்களுக்குத்தாவிட்டாள். அப்போது அக்பர் மீராவிடம் சென்று அம்மா தங்களையும் தங்கள் இஷ்டதெய்வமான கண்ணனையும் தர்சிக்கவும், தாங்கள் கண்ணனைப் புகழ்ந்து பாடுவதைக் கேட்டானந்திக்கவுமே நாங்கள் வந்தோம். எங்கள் இஷ்டம் நிறைவேறிற்று. நாங்கள் தன்யர்களானோம். எங்கள் பசியெல்லாம் பறந்தது. இந்த முத்து மாலையைத் தங்கள் க்ருஷ்ணனுக்குக் காணிக்கையாக தயவுபெய்து அங்கீகரிக்கவேண்டும்' என்று கூறி தன் கழுத்திலிருந்து ஓர் மாலையைக் கழற்றி மீராவிடம் கொடுத்தார்.

(தொடரும்)

இராமசந்திர ஹரி:

ப்ரும்மஸ்ரீ குகதாஸ் S. V. நடராஜய்யர் பிரசுரங்கள்.

| | ரூ | அ. | ப. |
|---|---|---|---|
| அத்யாத்யயோகம் or ஆத்மபயிற்சி ராப்பர் | 2 | 8 | 0 |
| காலிகோ | 3 | 0 | 0 |
| சுப்ரமண்ய ப்ரஸன்ன மாலாமந்த்ரம் | 0 | 2 | 0 |
| ஸ்ரீ நாரதபக்தி ஸூத்ரம் | 0 | 12 | 0 |

ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

215270




மார்சலியே

சுவாஸப்பைகளில் கடமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்





## வெளியூர்ச் செய்திகள்.

### திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

தமிழ்த்திருநாட் கோண்டாட்டம்:—

திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் சங்கராந்தி யன்று (14-1-39) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு தமிழ்த்திருநாட் கொண்டாட்டம் ஆரம்பமாகியது. கடவுள்வாழ்த்துக்குப்பின்னர் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸவேதாந்தாசாரியார் "ப்ரஹ்லாதாழ்வான் பெருமை" என்ற விஷயம் பற்றி அரியதோர் உபன்யாஸம் செய்தார். மறுநாள் 15உ ஞாயிற்றுகிழமை அதேயிடத்தில் மாலை 4 மணி முதல் 6 மணி வரை ஸ்ரீ ஆர். கேசவய்யங்கார் அவர்களால் "கோதாதத்வம்" என்ற விஷயம் உபந்யஸிக்கப்பெற்றது.

வகுளமாலைத் திருநாட் கோண்டாட்டம்:—

திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் 22-1-39உ ஞாயன்று மாலை 4மணிக்கு "வகுளமாலைத் திருநாட் கொண்டாட்டம்" தொடங்கிற்று. திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தலைவர் ஸ்ரீ ஆர். கேசவய்யங்காரவர்கள் உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்து திருமயிலை ஸ்ரீ யஸ். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களைத்தலைமை தாங்குமாறு கேட்டுக்கொள்ள அதை ஸ்ரீ வி. நரசிம்மாச்சாரியார் ஆமோதிக்க, கடலூர் அட்வகேட் டி. இ. சடகோபாச்சாரியார் அநுஸரித்துப்பேச, டாக்டர் ராகவனும், பா தூர் ராகவாசாரியரும் வடமொழியில் வாழ்த்துக்கூற சங்கக்காரியதரிசி தென்மொழியில் சிலவாழ்த்துப்பாக்கள் பாட தலைவருக்கு மாலையிட, காரியதரிசி வகுளமாலையின் வாலாற்றைச் சுருக்கிக்கூற, தலைமை வஹித்த ஐயங்காரவர்கள் சில அரிய விஷயங்கள் நன்கு எடுத்துரைக்க, சங்கத்தலைவர் காரியதரிசி வந்தனோபசாரம் அளிக்க கொண்டாட்டம் மாலை 6 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

உபந்யாஸம்:—

தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் 29-1-39உ ஞாயிறன்று மாலை 4மணி முதல் 5.45 மணி வரை குறிஞ்சிப்பாடி வித்வான் ஸ்ரீ வி. எஸ். துரைசாமி அய்யங்காரவர்களால் பொருளாளன் என்ற விஷயம் வெகு அழகாக உபன்யஸிக்கப்பெற்றது.

ப. ரெ. திருமலை அய்யங்கார்.

## நன்னிலம்.

### ஒரு பெரிய சங்கீதவித்வான் கௌரவிக்கப்பட்டார்.

தியாகப்பிரம்ம தினக் கோண்டாட்டம்.

28-1-39 சனிக்கிழமை மாலை 2-மணிக்கு நன்னிலத்தில் காரனேஷன் சத்திரத்தில் தியாகராஜதினம் ப்ரம்மஸ்ரீ ஸ்ரீ ரங்காச்சாரி அவர்கள் தலைமை கீழ் ஆரம்பிக்கப்பட்டது அவர் தியாகப்ரம்மது தத்துவங்களைப்பற்றியும், அவர் சரித்திரத்தைப்பற்றியும், சபையில் உள்ளவர்களது மனம் உருகுமாறு பிரசங்கம் செய்தார். அச்சமயம் பல ஊர்களிலிருந்து பிரமுகர்களும், பல வித்வான்களும், பண்டிதர்களும், உத்யோகஸ்தர்களும், விஜயம் செய்திருந்தனர்.

மாலை 3-மணிக்கு சங்கீதவித்வான் மகாராஜபுரம் விஸ்வநாதய்யர் அவர்களுக்கு, தியாகப்ரம்மதினக் கொண்டாட்ட கமிட்டி மெம்பர்களால், அங்கு வந்திருந்தவர்கள் விருப்பத்தின் மேல் "சங்கீதபூபதி" என்னும் கௌரவப்பட்டம் ஸ்ரீ ரங்காச்சாரியரால் பாராட்டி அளிக்கப்பட்டது.

பட்டமளிக்கும் சமயம், பாபநாசம் சிவன் டைகர்வரதாச்சாரியார், இன்னும் பல வித்வான்களிடமிருந்து தாங்கள் வரமுடியாமற் போனதற்கு வருந்துவதாகவும், பட்டமளிக்கப்பட்ட மகாராஜபுரம் ஸ்ரீமான் விஸ்வநாதய்யரைப்பற்றி சிலாகித்து மேற்படியாருடைய சங்கீதத்தின் திறமையைப்பற்றியும் அவருக்கு மரியாதை செய்வதை புகழ்ந்தும், கடிதங்கள் வந்துசபையில் வாசிக்கப்பட்டன பாபநாசம் சிவன் அவர்கள் எழுதிய கடிதம் முக்கியமாக கவனிக்கத்தது. அன்று மாலை 4-மணிக்கு ஸ்ரீமான் மதுரை மணி அவர்கள் சங்கீதக்கச்சேரி நடத்தினர். இரவு 8மணிக்கு சிதம்பரம் ப்ரம்மஸ்ரீ ஸ்ரீ ரங்காச்சாரியால் "நந்தனார்" சரித்திர காலக்ஷேபம் நடைபெற்றது.

29—1—39 மாலை 2-மணிக்கு கும்பகோணம் முத்துஸ்வாமி அவர்களால் சங்கீத விகடம் நடைபெற்றது. பிறகு மாலை 4-மணிக்கு "சங்கீதபூபதி" ஸ்ரீமான் மகாராஜபுரம் விஸ்வநாதய்யர் அவர்களது பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. அன்று கச்சேரி சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல் இருந்தது. இரவு 8-மணிக்கு ப்ரம்மஸ்ரீ நல்லூர் விஸ்வநாத பாகவதர் அவர்களால் "கபீர்தாஸ்" காலக்ஷேபம் நடைபெற்றது.

## சென்னை.

### ஸ்வபோதானந்த ஸ்வாமிகளின் குருவாராதனை.

சென்னை கெவர்ன்மெண்டு டெலிக்ருப் ஆபீஸில் காஷியர் உத்தியோகம் செய்தும், அநேக வருஷகாலம் தைமாதத்தில் ஸ்ரீ ராதா கல்யாண உற்சவமும், பிரும்ஹண ஸமாராதனையும் மற்ற இதர எல்லா ஜாதிகளுக்கும் விசேஷ அன்னதானம் செய்துவந்த பால சுப்பிரமணிய அய்யர் என்ற பெரியவர் அவரது 72 வயதில் ஸ்வபோதானந்தர் என்ற அபிதானத்துடன் ஸந்யாஸம் கொண்டு ஸித்திடைந்தாரான அவ்வருக்கு, சென்ற வெள்ளிக்கிழமை (3—2—39) தினம் இப்ருஹ்மி சாயபு தெருவு நெம்பர் 9-வது கிரஹத்தில், அப் பெரியவர் ஆராதித்துவந்த ஸ்ரீ ராதாகிருஷ்ண மீனாக்ஷி சுந்தரேசுவரர் படங்களுக்கும், அப்பெரியாரின் திருவுருப் படத்திற்கும் மிக்க ரமணீயமாய் அலங்காரம் செய்யப்பட்டு, மஹன்யாஸபூஜை, ஆராதனம், வேதபாராயணம், திவ்யநாம ஸங்கீர்த்தன பஜனையும் நடந்தது. சென்னையில் பல பேட்டைகளிலிருந்து பஜனையில் ஈடுபடும் பிராம்மண கோஷ்டிகள் பலர் வந்து ஈடுபட்டார்கள்.

மாம்பலம் ராமசந்திர ஹரி:பக்தி என்னும் விஷயத்தை மிக்க ரஸமாய் சொற்பொழிவு செய்தார். இரவு 8-மணிக்கு மங்களம்பாடி யாவருக்கும் பிரஸாத தாம்பூலம் வழங்கப்பட்டது. கும்பகோணம் ஸமீபம் நாச்சியார் கோவில் மாத்தூர் கிராமத்தில் உள்ள அப்பெரியவரின் ஸமாதிக்கும் அன்று பூஜை விநியோகங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு நடந்தது.

B. வைத்தினாதய்யர்.

மறுநாள் 30—1—39 மாலை 4-மணிக்கு பூதலூர் ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கோட்வாத்யக் கச்சேரி நடைபெற்றது. இரவு 8-மணிக்கு ப்ரம்மஸ்ரீ திருவையாறு அண்ணாசாமி பாகவதரால் "ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்" சரித்திரம் மிகவும் விமரிசையாக நடத்தப்பட்டு, தியாகராஜ உற்சவம் இனிது முடிவடைந்தது. மேற்படி வைபவங்களில் திருமருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யரும், திருவாலங்காடு சுந்தரேசய்யரும், குத்தாலம் குப்புசாமிபிள்ளையும், கும்பகோணம் ரங்கு அய்யங்காரும் இன்னும் பல வித்வான்களும் கலந்துகொண்டனர்.

ஒரு நிருபர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

83

85

ஆர்யதர்மம்
4 ௵ 7
24 16-2-1939

215279

1096 | 1096 87

215271

28 FEB 1939
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ் 24 | கும்பகோணம் கலி 5039 பஹுதான்ய-ஹு மாசி-மீ 5உ 1939-ஹு பிப்ரவரி-மீ 16உ | ஸ 7

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணு 1.

**விளம்பர விகிதம்**

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு. 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## ஸமஷ்டி கோர்ட் ஜட்ஜ்.

ஸ்ரீமான் வரதாசாரியர் நியமனம்.

ஸ்ரீமான் ஜயகர் காலி செய்த ஸமஷ்டி கோர்ட் ஜட்ஜ் பதவிக்கு சென்னை ஹைகோர்ட் ஜட்ஜான ஸ்ரீமான் கனம் வரதாசாரியர் அவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறதாக ஸர்க்கார் அறிக்கை வெளியாகியிருக்கிறது.

## கான்பூரில் கோர கலஹம்.

33 பேர் மரணம்.

கான்பூரில் ஹிந்துக்களின் ஒரு கல்யாண ஊர்வலமானது ஓர் மசூதி முன்பாக மேள வாத்யத்துடன் சென்றபோது முஸ்லீம்கள் தடுத்தார்கள். ஹிந்துக்கள் பிடிவாதம் செய்தனர். இருகக்ஷியாருக்கும் சச்சரவு ஏற்பட்டு பெரிய கலஹமாக முற்றிவிட்டது. போலீஸ் துப்பாக்கி பிரயோகமும் நடந்தது. இதுவரையில் 24 ஹிந்துக்களும் 9 மஹம்மதியர்களுமாக 33 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது. கடைகளுக்கும் வீடுகளுக்கும் தீவைத்து ஏராளமான நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. ராணுவ பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது

## திருவாங்கூர் ராஜீயக் கிளர்ச்சி.

உண்மையல்லவென்று மூஞ்சே கூறுகிறார்.

ஹிந்து மஹாஸபைத் தலைவரான மூஞ்சே சேலம் முதலிய இடங்களுக்குப் போய் விட்டு திருவனந்தபுரம் சென்றார்.

அங்கு நடக்கும் பொறுப்பாக்ஷி கிளர்ச்சியென்ற ராஜீயக் கிளர்ச்சியின் உண்மையைப் பற்றி அவர் அங்கு நன்கு விசாரணைசெய்து, அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார். அங்கு ராஜீய நோக்கத்துடன் கிளர்ச்சி நடை[illegible] வில்லையென்றும், வகுப்பு நலத்தையும் சுய நலத்தையும் நோக்கமாகக்கொண்டே சிலரால் கிளர்ச்சி நடத்தப்படுவதாயும் டாக்டர் மூஞ்சே அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்.

## அண்ணாமலை யூனிவர்ஸிடி. மீண்டும் தொல்லை.

மாணவர்கள் மறியல்.

அண்ணாமலை ஸர்வகலாசாலையில் சிறிது அமைதி ஏற்பட்டுவருந்தருவாயில் மாணவர்கள் மறுபடியும் தொல்லை விளைத்திருப்பதாகத் தெரிகிறது.

தள்ளப்பட்ட சில மாணவர்களையும் மறுபடியும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று சான்ஸலரிடம் இதர மாணக்கர்கள் வற்புறுத்தினர். அவர் ஸம்மதிக்காததால் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து மாடிப் படிகளில் படுத்துக்கொண்டு மறியல் வேலையும் செய்துவருகிறார்கள்.

## காந்தி—ஆகான் உடன்பாடு.

ஸ்ரீமான் காந்தி ஸமீபத்தில் கனம் ஆகாகானுடன் பர்டோலியில் ஸந்தித்துப் பேசினார். அதிலிருந்து ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை விஷயமாக இருவருக்கும் ஓர் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாயும், முஸ்லீம் தலைவர்கள் இதைப் பரிசீலித்து வருவதாயும், முஸ்லீம் லீக் இந்த ஒப்பந்தத்திற்கு இணங்காவிடில் ஆகாகான் தம்மிஷ்டப்படி இதை நிறைவேற்றப் போவதாயும் வெளியிட்டிருக்கிறார்.

## கும்பகோணம் பெரிய தெருவில் ரயில்வே டிகெட்டு ஆபீசு.

[நமது விசேஷ நிருபர்.]

கும்பகோணம், பீப்--14உ

தென் இந்தியா ரயில்வே அதிகாரிகள் பொது ஜனநலத்தைக் கருதி இந்நகர் பெரிய தெருவில் ரயில்வே டிக்கட்டு பெற ஓர் ஆபீஸ் வைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஆபீசிலிருந்து டிக்கெட்டுகளை பெறுபவர்கள் ரயில்வே ஸ்டேஷனுக்கு [illegible] தொ[illegible]ருக்கு போக பஸ் வஸதியும் செய்ய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறதாகவும் அறிகிறேன். புக்கிங் ஆபீஸ் கூடிய சீக்கிரம் திறந்து விடுவார்கள் என்று தெரிகிறது.

## கும்பகோணத்தில் தபால் வசதி.

சப் போஸ்டாபீஸ் வைக்க மகஜர்.

கும்பகோணம், பீப் 14உ

இந்நகர் உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், பாங்கர்கள் எல்லோரும் 15-1-39ல் ஓர் மகஜர் போஸ்டு மாஸ்டர் ஜனாலுக்கு அனுப்பி இருக்கிறார்கள். தாமதித்து தபால்களை ரயிலடியில் போஸ்டு செய்வதை இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ் வருவதற்கு 10 நிமிஷங்கள் முன்பாக பெட்டியிலிருந்து எடுக்க வேண்டும் என்றும், நகரில் தபால் பெட்டிகளில் தபால்களை எடுக்கும் நேரம் தெளிவாக எழுதிவைக்கவேணும் என்றும், தாமதத்திற்கு (Late Fee) அரையணு ஸ்டாம்பு ஒட்ட வசதி செய்யவேணும் என்றும், (இப்பொழுது லேட்பீ ஒரு அணு ஸ்டாம்பு இருந்துவருகிறது), நகரின் மத்தியில் டவுன் ஹால் ரஸ்தாவிலாவது, மடத்துதெருவிலாவது, ஒரு சப்போஸ்டாபீசை வைக்கவேணும் என்றும் அந்த மகஜரில் குறிப்பிட்டிருக்கிறது. இவ்விஷயம் தபால் அதிகாரிகளின் கவனத்தைப் பெற்றுவருகிறது. இந்த பொதுஜன சவுகரியத்தை சீக்கிரம் தபால்இலாகாஅதிகாரிகள் செய்ய தவறமாட்டார்களென்று நம்புகிறோம்.

நமது விசேஷ நிருபர்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

## ஸந்த்யோ பாஸனை.

### 1. ஸூர்ய தேவதை.

வித்யாப்யாஸ இலாகா உத்யோகஸ்தர் ஒருவர் ஒருநாள் ஸ்ரீ மஹா ஸ்வாமிகளிடம் சொன்னதாவது:—

வி:— நான் சரிபார்க்கும்படி நேரிடுகிற பள்ளிக்கூடங்களிலுள்ள சிறு பையன்களுடன் நெருங்கிப் பழக எனக்கு அடிக்கடி ஸந்தர்ப்பம் ஏற்படுகிறது. அநேகமாய்ப் பிராஹ்மணப் பையன்களே ஜாஸ்தியாயிருக்கிறார்கள். அவர்களில் ஸந்த்யாவந்தனம் செய்கிற பையன்கள், ஏதோ பேருக்குப் பண்ணுகிறார்களே தவிர, அது ஒரு கடவுள் வழிபாடு என்றுகூட உணர்வதாகத் தோன்றவில்லை. அவர்களுக்கு உபயோகப்படும்படியாக ஏதேனும் சில விஷயங்களைச் சொல்வீர்களேயானால், அவர்களுக்கு நானே போதிக்க ஸௌகரியமாயிருக்கும்.

ம:— சரிபார்க்கவேண்டியதென்ற ஸர்க்கார் கிரமத்துடன் இருந்துவிடாமல், பையன்களையும் முன்னுக்குக் கொண்டுவர இது ஒரு ஸந்தர்ப்பமென்று நீங்கள் உபயோகிக்க நினைப்பதைப்பற்றி மிகவும் ஸந்தோஷப்படுகிறேன். உபாத்யாயர்களோ, மேல் அதிகாரிகளோ, வித்யாப்யாஸ ஸம்பந்தமான எல்லா உத்யோகஸ்தர்களுமே, இச் சிறுவர்களுக்கு, நன்கு பதியக்கூடிய இளம் மனதுள்ள காலத்தில், நல்ல பயிற்சியைக் கொடுக்கவேண்டியதான பெரிய பொறுப்பை வஹிக்கிறோம் என்று ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருந்தால் நன்றாயிருக்கும். பள்ளிக்கூடத்தில் ஏற்பட்ட பாடத்தைச் சொல்லிக் கொடுப்பதுடன் நிறுத்திக்கொண்டு, சிறுவர்களின் நடத்தை, அத்யாத்ம சிரேயஸ் முதலியவைகளைக் கொஞ்சமேனும் கவனிக்காமலிருந்தால், பெரும் குற்றமேயாகும். அதிலும், பையன்களின் இளம் மனதை மாற்ற ஸௌகர்யம் கிடைத்ததென்று, தங்களுக்குக் கிடைத்திருக்கும் ஸந்தர்ப்பங்களை விபரீதமாக உபயோகப்படுத்திக் கொள்பவர்கள் மிகவும் தோஷிகளாவார்கள்.

வி.— இக் கொள்கையை எப்பொழுதும் மறவாமலேயிருந்து வருகிறேன். எங்கு போனாலும் அங்குள்ள பையன்களைத் தருவித்து ஏதேனும் நல்லதாக உபதேசம்செய்துவிட்டுத் தான் போகிறதென்று வைத்துக் கொண்டிருக்கிறேன். அந்த கார்யத்தை நன்கு நடத்த உத்தேசித்தே தான், தங்களிடம் அதற்கு உபயோகப்படக்கூடிய சில உபதேசங்களை அபேக்ஷித்தேன்.

ம:—இவைகளைக் கேட்டுப் பையன்களுக்கு அனுகூலமில்லையென்றாலும் கூட, தங்களுக்கு நிச்சயமாய் பிரயோஜனமிருக்குமே?

வி:—அப்படியே தான்.

ம:—ஆகையால் பையன்களை பொருட்படுத்தாமல் உங்களுக்கே உபயோகப் படக்கூடியதான கேள்விகளையே கேளுங்கள்.

வி:—ஸந்த்யோபாஸனை விஷயமாக முதலில் கேட்க வேண்டியதாகத் தோன்றுகிற கேள்வி, ஸந்த்யோபாஸனையில் உபாஸ்ய தேவதை யார்? என்பதே.

ம:—அதற்குமுன், ஸாதாரணமாய் ஸந்த்யோபாஸனை என்றால் என்ன அர்த்தம் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் சொல்லுங்கள்.

வி:—உதிக்கிற சூர்யன், அஸ்தமிக்கிற சூர்யன், உச்சியிலிருக்கிற சூர்யன், இவர்களை உபாஸிப்பது.

ம:—மிகவும் ஸரிசேர்த்துச் சொன்னால், சூர்யனை உபாஸிப்பது என்றாகுமல்லவா?

வி:—ஆம்.

ம:—ஸந்த்யா கர்மா என்பது சூர்யனை உபாஸிப்பது என்று சொல்லிக் கொண்டே, ஸந்த்யையில் உபாஸ்யன் யார் என்று கேட்கிறீர்களே? இது அனுவசியக் கேள்வியில்லையா?

வி:— அப்படிப் பார்த்தால் அனுவசியக் கேள்வி தான். வாஸ்தவமாக நான் கேட்க உத்தேசித்தது— உபாஸிக்கப் படுகிற சூர்யன் யார்— என்று தான்.

ம.—ஸாதாரணமாய் சூர்யன் என்றால் யார் என்று கிரஹித்திருக்கிறீர்கள்?

வி:—ஆகாசத்தில் பிரகாசமாய்த் தோன்றும் மண்டலமே சூர்யன்.

ம:—அப்படியானால், அந்தப் பிரகாச மண்டலமே உபாஸிக்கப் படுகிறது.

வி.—ஆனால், பௌதிக சாஸ்திர ரீதியாக, அந்த தேஜோமண்டலம் எப்பொழுதும் மிகவும் உக்கிரமாக எரிந்து கொண்டிருக்கிற அசேதன வஸ்து என்றல்லவா சொல்கிறார்கள்? சேதனர்களான நம் போலுள்ளவர்களால் உபாஸிக்கத் தகுந்த யோக்கியதை அதற்கு எப்படி யிருக்கும்? நம் பிரார்த்தனைகளைக் கேட்கவாவது அவைகளுக்குப் பிரதி செய்யவாவது அம்மண்டலத்திற்கு எப்படி ஸாத்தியப்படும்? சில மேற்கு தேசத்திய வித்வான்கள், நம் பூர்வீகர்கள் எரிந்து கொண்டிருக்கிற ஓர் அசேதன பிம்பத்தைக் குறித்தே ஸ்துதி செய்ததாகச் சொல்கிறார்கள். அப்படி நம் பூர்வீகர்கள் மூடர்களென்று நான் நம்பத் தயாரில்லை.

ம:— மிகவும் வாஸ்தவம். அவர்கள் ஒருக்காலும் அவ்வளவு மூடர்கள் இல்லை தான்.

வி:— அப்படியானால், தாங்கள் ஸ்துதி செய்யும் படியாக ஸூர்ய பிம்பத்தில் என்ன விசேஷத்தைக்கண்டார்கள்?

ம:— அசேதனத்தைப் பார்த்து ஸ்துதி செய்வது நியாயமாகாதென்று நீங்களே சொன்னீர்களே?

வி:— ஆம்.

ம:— ஸ்துதி செய்ய வேண்டுமானால், ஸ்துதி செய்யப்படுகிறவன் எப்படி யிருக்க வேண்டும்?

வி:— அசேதனமில்லாமல் சேதனமாயிருக்க வேண்டு மென்பது முதலில் அவசியம்.

ம:— இரண்டாவதாக?

வி:—நம் பிரார்த்தனையைக் காது கொடுத்துக் கேட்டுப் பூர்த்தி செய்து கொடுக்கச் சக்தியுமிருக்க வேண்டும்.

ம:— வாஸ்தவம். நம் முன்னோர்கள் மூடர்களுமில்லை. ஆனால் ஸூர்யனைப்பார்த்து ஸ்துதி செய்தார்கள். நம்மையும் ஸ்துதிக்கச் சொல்கிறார்கள். ஆகையால் அவர்களுடைய பார்வையில், ஸூர்யன் என்பது வெறும் பிரகாசமுள்ள மண்டலம் என்பதை விட வேறாகவே தோன்றி யிருக்கவேண்டுமல்லா?

வி:— ஆம். அதற்கு சைதன்யமும், நம் பிரார்த்தனையைக் கேட்கக்கூடிய திறமையும், நமக்கு உதவிசெய்யக்கூடிய சக்தியும், இருக்கிறதாகவே பாவித்திருப்பார்கள்.

ம:— 'நாம்' என்று சொன்னீர்களே அந்த வார்த்தை, இப்பொழுது ஸ்துதிப்பதற்காகக் கையைத்தூக்குகிற இப்பொழுது ஜீவித்திருக்கிறவர்களை மாத்திரம் குறிக்காமல், சென்ற காலத்திலும் இனி வரப்போகும் காலத்திலுமுள்ள அனந்தமான பரம்பரைகள் யாவற்றையுமே அந்த "நாம்" என்பதில் சேர்க்க வேண்டுமல்லவா?

வி:— ஆம்.

ம:— ஆகையால், ஸூர்யன் என்று உபாஸிக்கப்படுகிறவரின் ஞானத்திற்காவது சக்திக்காவது தேசகாலங்களினால் எல்லையிட முடியாதல்லவா?

வி:— அப்படியே.

ம:— ஸந்த்யையில் உபாஸிக்கப்படுகிறவர் யார் என்று நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் கிடைத்துவிட்டது. நம் பிரார்த்தனைகளைக் கேட்டு உதவக்கூடியதான, ஸர்வக்ஞமான, ஸர்வசக்தமான, ஒரு சேதன வஸ்து என்று கிடைத்திருக்கிறது.

வி:— அப்படியானால், ஸூர்யமண்டலத்தில் வஸிக்கும் ஒரு தேவன் என்று அர்த்தமா?

ம:— அப்படியே. ஸூர்ய மண்டலம் அவருக்கு வாஸஸ்தானம் என்பது மாத்திரமில்லை, அதுவே அவருடைய ஸ்தூல சரீரமும் ஆகும்.

வி:— நம் ஸ்தூல சரீரங்களுக்கு உயிர் கொடுத்துக்கொண்டு நாம் எப்படியிருக்கிறோமோ, அதேமாதிரி அந்த தேவன் ஸூர்ய மண்டலத்திற்கு உயிர் கொடுத்துக் கொண்டிருக்கிறான் என்று?

ம:— ஆம்.

வி:— அப்படியானால், நம்மைப்போல் அவனும் சரீரியே ஆவான். நம்மால் உபாஸிக்கப்படும் தன்மையை எப்படி அடைந்தான்? நாம் ஸேவிக்கும்படியான உயர்ந்த ஞானமும் சக்தியும் எப்படி அவனுக்கு ஏற்பட்டது?

ம:— முன் ஜன்மத்தில் அதற்கு தகுந்த கர்மாவையும் வல்லமையையும் பெற்றிருப்பதால், நாம் அவனுக்கு மரியாதை காட்டியே தீரவேண்டும்.

வி:— வாஸ்தவம்.

ம:—உங்கள் மேல் அதிகாரிகளைப் போல் ஸூர்யதேவனும் ஜீவனாயிருக்கிறபடியால், நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தால் உதவி செய்வார். அவரை உதாஸீனம் செய்து வெறுத்தால், கெடுதலும் செய்வார். ஆகையால் உங்கள் நன்மையை உத்தேசித்தே, நீங்கள் அவரைத் தொழுது அவருடைய நல்ல எண்ணத்தைப் பெற வேண்டியதுண்டு. (தொடரும்)

## மதுரை.

### ஸத்ஸம்ப்ரதாய ஸபையின் ஏழாம் வருஷோத்ஸவ அழைப்பு.

நிகழும் வெகுதான்யஹு மாசிமீ 6, 7, 8, (1939ஹு பிப்ரவரிமீ 17, 18, 19) வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் எம்பெருமான் திருவருளால் இச் சபையின் ஏழாம் வருஷோத்ஸவம் மதுரைத் தெற்குச் சித்திரைவீதியிலிருக்கும் ஆயிரவைசிய காசுக்காரச் செட்டிப்பிள்ளைகளுக்குச் சொந்தமான வெள்ளியம்பல மண்டபத்தில் இனிது நடைபெறும்.

அப்பொழுது கோவில் ஸ்ரீ. உபய வேதாந்த வித்வான் மெய்யு வய்யங்கார் ஸ்வாமி அக்ராஸனத்தில் சிறந்தவித்வான்கள் அரிய பெரிய விஷயங்களைக் குறித்து உபந்யஸிப்பார்கள்.

ஆஸ்திகரனைவரும் விஜயம் செய்து உத்ஸவத்தைச் சிறப்பிவிக்கப் பிரார்த்திக்கிறோம்.

S. சுந்தாராஜ அய்யங்கார்.
காரியதரிசி.

---

K. V. சுப்ரமணிய சாஸ்திரிகள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்த்ர: | 1 | 0 | 0 |
| ஸூனீதிகுசமாலா | 0 | 8 | 0 |

கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்,



# மூக பஞ்ச சதீ

## மந்தஸ்மித சதகம்.

1. பத்நீமோ வய மஞ்ஜலிம் ப்ரதிதினம் பந்தச்சிதே தேஹிநாம்
கந்தர்ப்பாகம தந்திரமூல குரவே கல்யாண கேளீபுவே |
காமாக்ஷ்யா கனஸாரபுஷ்பரஜஸே காமத்ருஹச்சக்ஷுஷாம்
மந்தார ஸ்தபகப்ரபா மத முஷே மந்தஸ்மித ஜ்யோதிஷே ||

தேஹினாம்—பிராணிகளுடைய, பந்தச்சிதே—பாபஸம்பந்தத்தை ஒழிக்கிறதாயும், கந்தர்ப்பாகமதந்த்ரமூலகுரவே—கோகோஹ சாஸ்திரத்தின் அநுஷ்டானத்தைக் கண்டுபிடித்த ஆதி குருவாயும், கல்யாண கேளீபுவே–மங்களங்களின் விளையாட்டிடமாயும், காமத்ருஹ:—பரமசிவனுடைய, சக்ஷுஷாம்–கண்களுக்கு, கனஸாரபுஷ்பரஜஸே—(மலர்ச்சியை உண்டுபண்ணுகிற) பச்சைக்கற்பூரப்பொடியாயும், மந்தாரஸ்தபகப்ரபாமதமுஷே—மந்தாரப் பூங்கொத்தின் காந்திக்குள்ள கர்வத்தை அடக்குகிறதாயுமுள்ள, காமாக்ஷ்யா:—காமாக்ஷியினுடைய, மந்தஸ்மிதஜ்யோதிஷே — புன்சிரிப்பின் ஒளிக்கு, வயம்—நாம், ப்ரதிதினம்—ஒவ்வொருநாளும், அஞ்ஜலிம்—கை கூப்புதலை, பத்நீம:— செய்கிறோம.

குறிப்பு— காமத்ருஹ: என்பதை கந்தர்ப்பாகம் என்றவிடத்திலும் சேர்த்துக்கொள்ளலாம்.

2. ஸத்ரீசே நவமல்லிகா ஸுமனஸாம் நாஸாக்ர முக்தாமணே:
ஆசார்யாய ம்ருணாள காண்டமஹஸாம் நைஸர்க்கிகாய த்விஷே |
ஸ்வர் துன்யா ஸஹயுத்வநே ஹிமிருசேரர்த்தாஸனத்யாஸினே
காமாக்ஷ்யா: ஸ்மிதமஞ்ஜரீ தவளிமாத்வைதாய தஸ்மை நம: ||

நவமல்லிகா ஸுமநஸாம்—கோடமல்லிப் பூக்களுக்கு, ஸத்ரீசே, ஸமானமாயும், நாஸாக்ரமுக்தாமணே:—புல்லாக்கு முத்துக்கு, ஆசார்டாய—ஆசாரியனாயும், ம்ருணாளகாண்டமஹஸாம்— தாமரை தண்டின் காந்திகளுக்கு, நைஸர்கிகாய—ஸ்வபாவமான, த்விஷே—சத்ருவாயும், ஸ்வர்துந்யா—கங்கையோடு, ஸஹயுத்வநே—கூடிச் சண்டையிடுகிறதாயும், ஹிமருசே:—சந்திரனுடைய, அர்த்தாஸனத்யாஸிநே–ஆஸனத்தின் பாதியில் அமருகிறதாயுமிருக்கிற, தஸ்மை—அந்த, காமாக்ஷ்யா:—காமாக்ஷியினுடைய, ஸ்மிதமஞ்ஜரீதவளிமாத்வைதாய—புன்சிரிப்பின் ஒரே வெளுப்பிற்கு, நம:—நமஸ்காரம். குறிப்பு—புன்சிரிப்பின் காந்தியை வெளுப்பாகக் கவிகள் வர்ணிக்கிற வழக்கமாகையால் இங்கே வெளுப்பான வஸ்துக்கள் உபமானங்களாகக் கூறப்படுகின்றன.

3. கர்ப்பூர த்யுதி சாதுரீமதிதராம் அல்பீயஸீம் குர்வதீ
தௌர்பாக்யோதமே ப ஸம்விதததீ தௌஷாகரீணாம் த்விஷாம் |
க்ஷுல்லானேவ மனோக்ஞ மல்லிநிகரான் புல்லாநபி வ்யஞ்ஜதீ
காமாக்ஷ்யா ம்ருதுள ஸ்மிதாம்சு லஹரீ காமப்ரஸூரஸ்து மே ||

கர்ப்பூரத்யுதிசாதுரீம்—கற்பூரக் கட்டியின் அழகிய காந்தியை, அதிதராம்—மிகவும், அல்பீயஸீம்—சிறியதாக, குர்வதீ—செய்கிறதாயும், தௌஷாகரீணாம்—சந்திரனுடையவைகளான, த்விஷாம்—காந்திகளுக்கு, தௌர்பாக்யோதய, மேவ அழகில்லாமையையே, ஸம்விதததீ—செய்கிறதாயும், புல்லாந்—மலர்ந்த, மநோஜ்ஞமல்லிநிகராநபி—நல்ல மல்லிகைப்பூக்களையும், க்ஷுல்லான் ஏவ வ்யஞ்ஜதீ தோன்றும்படியாகச் செய்கிறதாயுமிருக்கிற காமாக்ஷ்யா காமாக்ஷியினுடைய ம்ருதுலஸ்மிதாம்சுலஹரீ— மனோஜ்ஞமாய்மென்மேலும் வளரும் மந்தஹாஸத்தின் சோபை மே—எனக்கு காமப்ரஸூ—இஷ்டத்தைக் கொடுப்பதாக, அஸ்து—ஆகட்டும்.

4. யா பீனஸ்தநமண்டலோபரி லஸத்கர்ப்பூர லேபாயதே
யா நீலேக்ஷணராத்ரி காந்தி ததிஷு ஜ்யோத்ஸ்நாப்ரரோஹாயதே |
யா ஸௌந்தர்யதுனீ தரங்கததிஷு வ்யாலோல ஹம்ஸாயதே |
காமாக்ஷ்யா: சிசிரீகரோது ஹ்ருதயம் ஸா மே ஸ்மித ப்ரா சுரீ ||

(தொடரும்)

## காந்தி—அகாகான் ஒப்பந்த விவரம்.

இரு வகுப்பினருக்கு மிடையே ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் ஒப்பந்தத்தின் சில முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:—

(1) சர்க்கார் முனிசிபல் உத்தியோகங்களில் ஜனத்தொகையை ஆதாரமாகக் கொண்டு பிரதிநிதித்துவம் வழங்கப்படும்; இல்லையேல் முஸ்லீம்கள் சிறுபான்மையினராக உள்ள மாகாணங்களில் முஸ்லீம்களுக்காக எவ்வளவு அதிகப்படியானப் பிரதிநிதித்துவம் அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அதுவும் முஸ்லீம்கள் மெஜாரிடியாக உள்ள மாகாணங்களில் ஹிந்துக்களுக்கு எவ்வளவு அதிகப்படியானப் பிரதிநிதித்துவம் அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அதுவும் வழங்கப்படும்.

(2) குறைந்தபட்ச பரீட்சை நிபந்தனைகளை அபேட்சகர்கள் நிறைவேற்றி வைப்பார்களானால் மேற்கண்டயாதிரியே உத்தியோகங்களில் வீதாசாரம் திட்டப்படுத்தப்படும்.

(3) 'ஹிந்துஸ்தானி' என்பது பொது பாஷையாக விருக்கும்; இதற்கு இலக்கணம் ஒன்று எழுதப்படவேண்டும்; அகராதி ஒன்றும் தயாரிக்கப்படவேண்டும். இவ்விரண்டையும் தயாரிப்பதில் முஸ்லீம்களல்லாதவர்களுக்கு எவ்வளவு பங்கு உண்டோ அவ்வளவே பங்குதான் முஸ்லீம் கல்வியாளருக்கும் உண்டு.

(4) எல்லைப் புறத்திலுள்ள சுயேச்சை வாய்ந்த ஜாதியாரின் அந்தஸ்து நேப்பாளத்திலுள்ளவர்களைப் போன்றே இருக்கவேண்டும். இவர்களை நிர்வகிக்கும் பொறுப்பு எல்லைப்புற சிவில் நிர்வாகிகளது வசமிருக்க வேண்டும். யு—பி.

## சென்னைபட்ஜட்

### 170 லக்ஷம் துண்டு விழுமாம்

சென்னை கவர்ன்மெண்டார் இவ்வருஷத்திய வரவு செலவு திட்டத்தைத் தயார்செய்துவிட்டதாயும் 170 லக்ஷம் ரூபாய் துண்டு விழுமென்றும் பத்திரிகைகளில் பிரஸ்தாபிக்கப்படுகிறது

## மந்திரிகளும் ஸத்யாக்ரஹம் செய்வார்களாம்.

### ஒரிஸாவில் நெருக்கடி.

ஒரிஸா மாகாண ஸம்ஸ்தானங்கள் விஷயமாகப் பெரிய நெருக்கடி ஏற்படுமென்றும் காங்கிரஸ் மந்திரிகளே ஸத்யாக்ரஹம் செய்து சிறை செல்ல நேரிடலாமென்றும் பிரதம மந்திரி ஓரிடத்தில் பேசினார்,

---

## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றாம் பதிபபு)

பிராம்மணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம்:—
பட்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல் திருச்சிரை,



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்

பகுதான்யஹூ மாசி-மீ 5உ

## ஸம்ஸ்தான மன்னர்களின் நிலைமையும் கடமையும்.

ஹரிபுரா நகரத்தில் 15உ நடைபெற்ற அகில இந்திய ஸம்ஸ்தான பிரஜைகளின் மஹாநாட்டில் ஸ்ரீமான் ஜவஹர்லால்நேரு தலைமை வகித்துத் தெளிவாயும், விரிவாயும் உறுதியாயும் ஸம்ஸ்தான மன்னர்களின் நிலைமை, கடமைகளைப்பற்றிக் கூறியிருக்கிறார். தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தில் அவர் சிறிதும் விட்டுக்கொடாமலும், தைர்யமாயும் நேர்மையாயும் பேசியிருக்கிறாரென்று சொல்லத் தடையில்லை.

பிராசீன காலம் முதல் நம் தேசத்தில் இருந்துவரும் ஸ்வதேச ஸம்ஸ்தானங்கள் நமது நாகரிகத்திற்கும், வித்யைகளுக்கும், மற்ற உயர்வுகளுக்கும் ஓர் சின்னம்போல் விளங்கிவந்தனவென்பது நிஜமே. ஆதலால் ஸ்வதேச ஸம்ஸ்தானங்களை அப்படியே காத்துவரவேண்டியது மிக்க அவச்யமென்று ஹிந்து ஸபைத் தலைவர்களான டாக்டர் மூஞ்ஜே முதலியவர்கள் அபிப்ராயப்படுவது நியாயமே. ஆயினும் அதே ஸமயத்தில், அந்த ஸம்ஸ்தான மன்னர்களிடம் பிரஜைகளுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்திக்குக் காரணமென்னவென்பதையும், மன்னர்கள் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்து வருகிறார்களாவென்பதையும் நாம் கவனிக்கவேண்டியது அவச்யமே. அப்படிக் கவனிக்கப் புகுந்தால் கிளர்ச்சிக்காரர்களிடம் மட்டும் ஒருதலை பக்ஷமான குற்றத்தைச் சாற்றுவது நியாயமாகாதென்றும், மன்னர்கள் மீதும் இந்தப் பொறுப்பைச் சுமத்துவது தவறல்லவென்றும் பலர் நினைக்கக்கூடும். இந்த நோக்கத்துடனேயே ஸ்ரீமான் நேரு சுதேச மன்னர்களிடம் பற்பல தவறுகளை எடுத்துக் காட்டி பிரஜைகளின் கிளர்ச்சி நியாயமென்று வாதிக்கிறார்.

பொதுவாகவே அரசனுடைய பிரஜா ரக்ஷணை கார்யமானது மிகப்புனிதமானது. அது ஒரு தபஸ்ஸுக்கு ஒப்பானது. தனது ஸுகங்களையும் இழந்து பிரஜைகளின் க்ஷேமத்திற்குப் பாடுபடவேண்டியதே அரசனுடைய தர்மமாகும். பிரஜைகளிடமிருந்து வசூலிக்கப்படும் வரியானது பிரஜைகளுடைய க்ஷேமத்திற்கே செலவிடப்படவேண்டுமென்ற பரிசுத்தமான கொள்கையுடன் அவர்கள் நடக்கவேணும். முக்யமாக அரசன் தனது இந்திரியங்களுக்கு அடிமைப்பட்டு அவைகளைத்திருப்தி செய்துவைக்கும் கார்யத்திலீடுபடக்கூடாது அத்தகைய சபலனான அரசனை பிரஜைகள் வெகு சீக்கிரத்தில் நீக்கிவிடுவார்கள். இந்திரியங்களுக்கு வசப்பட்டுநிற்கும் அரசன் பிரஜைகளின் கார்யங்களை ஸரிவரக்கவனிக்கமாட்டானல்லவா?

இப்போதுள்ள ஸ்வதேச ஸம்ஸ்தானங்களில் மேற்கண்ட குறைகள் பரவ ஆரம்பித்திருப்பதாக ஸ்ரீமான் நேரு சொல்லுகிறார். பிரஜைகளுக்கும், அரசர்களுக்கும் உள்ள ஸம்பந்தம் இப்போது குறைந்து வருகிறது: அரசர்கள் பிரஜைகளின் க்ஷேம லாபாதிகளில் கவனம் செலுத்தாமல் பொழுது போக்கி வருகிறார்கள். மேலும் அவர்கள் தங்கள் பிரஜைகளின் மத்தியில் தங்கி அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைப் பரிஹரிக்காமல் நினைத்தபோதெல்லாம் மேற்றிசைகளில் உல்லாஸ பிரயாணமும், உல்லாஸவாஸமும் செய்து காலம் கழிக்கிறார்கள். டிராமா, சினிமா குதிரைப்பந்தயம் முதலானவைகளிலும், வேறு தாமஸங்களிலும் பிரஜைகளின் வரிப்பணத்தை நாசமாக்கிவிடுகிறார்களென்றும் ஸ்ரீமான் நேரு விஸ்தாரமாக எடுத்துக்காட்டுகிறார்.

மேலும் ஸம்ஸ்தான அரசர்கள் பிரிடிஷ் ஏகாதிபத்யத்தின் ஓர் சின்னமாகவே தற்போது விளங்கிவருகிறார்கள். அவர்கள் பராதீனப்பட்டுக்கிடக்கிறார்கள். அரசர்களென்றபட்டம் பெயருக்கு மாத்திரமிருக்கிறதேயன்றி உண்மையில் ஸம்ஸ்தானங்களில் அரசாளுபவர்கள் பிரிடிஷ் அதிகாரிகளேயாவார்கள் அவர்களுடைய சொற்படி ஆடும் ஒரு பொம்மையாகவே சுதேச அரசர்கள் இருந்து வருகிறார்கள். ஆதலால் பிரஜைகள் அரசனோடு சண்டையிடுவதாகத் தோன்றினாலும் உண்மையில் பிரிடிஷ் ராஜாங்கத்தை எதிர்த்துத்தான் கிளர்ச்சி நடத்தவேண்டியிருக்கிறதென்றும் ஆதலால் பிரிடிஷ் இந்திய நிலைமையும் ஸம்ஸ்தான நிலைமையு ஒன்றாகவே இருப்பதாயும் இக்காரணத்தைக்கொண்டு காங்கிரஸானது முக்யமாக ஸம்ஸ்தான விஷயத்தை மேற்போட்டுக் கொண்டு கிளர்ச்சி நடத்தவேண்டியது அவச்யமாகிவிட்டதாயும் நேருஜி கூறுகிறார்

மேற்கண்டவாறும் வேறு பலவும் சுதேச மன்னர்களைப்பற்றி ஸ்ரீமான்நேரு கூறியிருப்பதில் சிலவற்றை மறுப்பது சிரமஸாத்யமாகும். அநேக அரசர்கள் பத்து லக்ஷக்கணக்கான பணத்தை நாசமாக்கி அடிக்கடி ஐரோப்பா அமெரிக்கா போன்ற இடங்களில் தமாஷாகச் சுற்றுவது வழக்கமாயிருந்துவருகிறதைப் பார்க்கிறோம். கவர்னர், வைஸ்ராய் போன்ற வெள்ளைக்கார அதிகாரிகளுக்கு கணக்கற்ற பணம் செலவழித்து விருந்து நடத்திக்களிப்பதும், ஸம்ஸ்தானங்களில் ஸஹஜமாயிருந்துவருகிறது. ஆகையால் பிரஜைகள் பொறுக்காமல் பெரிய கிளர்ச்சியில் இறங்கிவிட்டதாக ராஜீயவாதிகள் நினைக்கிறார்கள்.

ஆகையால் சுதேச மன்னர்கள் நல்ல நிலைமைக்கு வரவேண்டுமானால் அவர்கள் உடனே சீர் திருந்தவேண்டியது அவச்யமாகிறது. பிரஜாரக்ஷணமொன்றையே முக்யக் கருத்தாகக்கொண்டு அவர்கள் அரசு செலுத்தி பிரஜைகளுடைய நன்மதிப்பைப்பெற முயற்சிக்கவேணும். மனுவும், சுக்ரநீதி, முதலியவைகளும் காட்டிய வழியில் ராஜதர்மத்தை நடத்திவரவேண்டும். இப்போது, இந்தியாவெங்கும் ஸம்ஸ்தான பிரஜைகளின் கிளர்ச்சி வலுத்துவிட்டது. காந்திஜியினுடையவும் காங்கிரஸினுடையவும் ஆதரவு அதற்கு அதிகரித்துவருகிறது. இப்போது அது உச்சஸ்தானத்தை அடைந்து நெருக்கடியான நிலைமைக்கு வந்துகொண்டிருக்கிறது. ஹரிபுரா மஹாநாட்டுத் தீர்மானங்கள் மிக உக்ரமாயிருந்தபோதிலும் அவை ஸம்ஸ்தான பிரஜைகளின் அதிருப்தியை விளக்கக்கூடியவைகளாயிருப்பதில் ஸந்தேஹமில்லை.

ஸம்ஸ்தானாதிபதிகள் "இதோ ப்ரஷ்ட:" "ததோ ப்ரஷ்ட:" என்ற நிலைமைக்கு ஆளாகக் கூடிய அபாயம் வெகுதூரத்திலில்லையென்று நினைக்கப் போதிய சின்னங்கள் தோன்றியிருக்கின்றன. பிரஜைகளின் அதிருப்திக்கு ஆளாகியும், பிரிடிஷ் அதிகாரிகளின் வெறுப்புக்குப் பாத்திரமாகியும் திருசங்குபோல் மன்னர் திண்டாடவேண்டிய நிலைமைக்கு இடம் கொடாமல் தபஸ்ஸாலும், தியாகத்தாலும், அன்பாலும் தங்களது பிரஜைகளை வசப்படுத்திக்கொண்டு நல்லாட்சி செலுத்த அவர்கள் முன்வருவது நலமென்று நினைக்கிறோம்.

## குறிப்புகள்.

### ஆதாரமற்ற பழியேன்?

தேவகோட்டைக்கு ஸமீபமுள்ள கிராமமொன்றில் நூறு நீண்டாதார் குடும்பத்தினர் ஏற்கனவே கிறிஸ்தவமதத்தில் சேர்க்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் தற்போது சுத்திச் சடங்கு செய்விக்கப்பட்டு மறுபடியும் ஹிந்துமதத்திற்குத் திருப்பப்பட்டார்களாம். இந்தக் கார்யம் வெகு ஆடம்பரமாக நடத்தப்பட்டது. கனம் பிரதமமந்திரி முதலியவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்கள் கூட்டமும் பிரஸங்கமும் நடைபெற்றனவாம்.

நீண்டாதார் பிரதிநிதி யொருவர் பேசுகையில் தாங்கள் கிறிஸ்தவமதத்தில் புகுந்தால் ஏராள விசேஷஸௌகர்யம் ஏற்படுமென்று வஞ்சிக்கப்பட்டு ஏமாந்துவிட்டதாயும், அந்த மதத்தில் சேருவதால் பணம் அதிகம் கிடைத்து ஸுகஜீவனம் செய்யலாமென்று தங்களை ஏமாற்றினார்களென்றும் இதனாலேயே தாங்கள் கிறிஸ்தவமதம் புகுந்ததாயும், ஆனால் அங்கு போன பிறகு ஒரு ஸௌக்யமும் கிடைக்கவில்லை யென்றும், கஷ்டம் அதிகமாக இருந்ததென்றும் விவாகம் செய்யவேண்டுமானால் அதற்கு 3 ரூ. வரி கொடுக்கும்படி பாதிரிகள் நிர்ப்பந்தித்தாயும், ஆதலால் இந்த மாதிரி பல நிர்ப்பந்தங்களை முன்னிட்டுத்தான் மறுபடியும் ஹிந்துமதத்திற்குத் திரும்பியதாயும் கூறினார்.

இச்சமயம் சில நீண்டாமைவிலக்கு வாதிகள் பேசியதில், ஜாதி ஹிந்துக்கள் நீண்டாதாரை ஹிம்ஸித்ததே அவர்கள் கிறிஸ்தவமதம் மாறியதற்குக் காரணமென்று பழிகூறினார்கள். இது அவர்களுடைய பல்லவியல்லவா? நீண்டாதாரே, தாங்கள் பண ஆசையாலும் பாதிரிகளின் பசப்பு வார்த்தைகளாலும் ஏமாந்து மதம்மாறியதாகப் பஹிரங்கமாக ஒப்புக்கொள்ளுகையில் நமது சீர்திருத்தவாதிகள் மதமாற்றத்திற்கு ஜாதிஹிந்துக்களின் கொடுமையே காரணமென்று கூறுவது வீண்பழியே ஆகும். இந்த மதமாற்றச் சுத்திச் சடங்குகளால் ஹிந்து மதத்திற்கு ஏற்பட்ட நன்மையென்னவென்பதைப் பற்றி அவரவர் தம்தம் உணர்ச்சிக்கேற்றபடியே நினைப்பார்கள்.



### மூட நம்பிக்கை எங்கு இல்லை?

உலகத்திலுள்ள கத்தோலிக்க மதஸ்தர்களின் பிரதான குருவான போப் என்பவர் இறந்துபோய்விட்டார். அவரது மரணச் சடங்குகளைப்பற்றிப் பத்திரிகைகளில் சில விவரங்கள் வெளியாகி இருக்கின்றன. ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி இறந்த ஸமயத்திலும் கிறிஸ்தவர் மரணச்சடங்கு ஸம்பிரதாயங்கள் பல வெளிப்பப்பட்டன.

ஹிந்து மதத்தில் மூடநம்பிக்கை பரவியிருப்பதாயும் அந்த நம்பிக்கையுடன் அர்த்தமற்ற சடங்குகள் பல ஏற்பட்டிருப்பதாயும் பாதிரிகளும் மற்றவர்களும் நம்மைப் பரிஹஸிப்பது வழக்கமானது. இதைக்கண்டு ஏமார்ந்து கூத்தாடும் சில நவீனபித்தர்களான நம்மவர்களும் நமது ஆசாரங்களை நகையாடித் திரிந்துவருகிறார்கள். ஆயினும் இவ்விருபதாவது நூற்றாண்டில் மிக நாகரிகம் வாய்ந்ததாக மதிக்கப்படும் கிறிஸ்தவாதி மதங்கள் எல்லாவற்றிலும் மூடநம்பிக்கைகளும் அர்த்தமற்ற சடங்குகளும் நிறம்பியிருப்பதை நமது நவீனர்கள் கவனித்தார்களாவென்பது தெரியவில்லை.

போப் குருவினுடைய சவத்தைச் சுற்றி 16 பேர்கள் தீப்பந்தம் பிடித்து நிற்கவேண்டியது மதவிதியாம். அவருடைய சிஷ்யர்களான அநேகப் பாதிரிமார்கள் அந்த சவத்தின் கால்களை முத்தமிடவேண்டியது விதியாம். அப்படியே பாதிரிகள் முத்தமிட்டனராம். இதற்கு அர்த்தமென்னவோ? மற்றொரு விநோதமும் நடந்ததாம். போப் குரு இறந்த பிறகு ஒரு பாதிரி ஒரு வெள்ளிச் சுத்தியை எடுத்துக்கொண்டுபோய் சவத்தின் நெற்றியில் அவருடைய பெயரைச் சொல்லி மூன்று தரம் அந்த சுத்தியால் தட்டினாராம். இப்படிச் செய்வது ஓர் மதவிதியாம். இம்மாதிரி செய்த பிறகு அந்தப்பாதிரியார், "போப்குரு இறந்துவிட்டது நிச்சயம்" என்று பஹிரங்கமாகக் கூறுவாராம். இறந்துபோனது நிச்சயமாகத் தெரிந்திருக்கையில்கூட இந்த மாதிரி சுத்தியால் நெற்றியில் அடித்துக் கூப்பிட்டு பரீக்ஷை செய்வதென்பதின் பிரயோஜனம் விளங்கவில்லை. ஆயினும் இது ஓர் மத ஸம்பந்தமான கார்யமாதலால் இதில் யுக்தி விசாரத்திற்கு இடமில்லை. இது அர்த்தமற்ற ஸம்பிரதாயமாயும், மூடநம்பிக்கை நிறைந்ததாயிருக்கிறதென்பதை நவீனர்கள் மறுக்கமுடியாது. கிறிஸ்தவத்தில் இந்தமாதிரி இன்னும் எவ்வளவோ சடங்குகள் இருக்கின்றன. ஆஸ்திகர்களைப் பற்றியவரை இவை பரிஹாஸத்திற்கு இடமானவைகளல்ல. இவைகள் மத விதிகளாகையால் பக்திசிரத்தையுடன் செய்யவேண்டிய சடங்குகளேயாகும். இந்த மாதிரி யுக்திக்குப் பொருந்தாத மதவிதிகள் எல்லாமதத்திலும்கணக்கில்லாமலிருப்பதால், சில பாதிரிகளும், நம்மில் தோன்றிய சில நவீன குதர்க்கவாதிகளும் ஹிந்து மதத்தை மட்டும் பழித்துத்திரிவதற்கு நியாயமில்லையென்பதை இதன் மூலம் உணர்வது அவச்யமாகும்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Nellore.

### உண்மையைச் சொல்லுகிறார்.

பிரொபஸர் வில்ஸன் என்ற வெள்ளைக்கார மேதாவியொருவர் இந்தியாவைச் சுற்றிப் பார்த்துவிட்டு சீமை திரும்பினார். அவர் அபிப்பிராயம் கூறுகையில், காந்திஜியும், ஸ்ரீ நேருவும் மேற்றிசையாரையே எல்லா வழிகளிலும் பின்பற்றிவருகிறார்களென்றும் அவர்களுடைய ராஜீய ஸமூஹத் திட்டங்கள் யாவும் மேற்றிசைகளிலிருந்து காப்பியடிக்கப்பட்டவைகளேயன்றி வேறல்லவென்றும் அவர் கூறினார். இது முற்றிலும் உண்மையே. இந்தியாவில் காங்கிரஸ் காரர்களால் வகுக்கப்படும் ராஜீயப் திட்டங்களும், ராஜீயப் பிரசார முறைகளும் முற்றிலும் மேற்றிசைப் போக்கை அநுஸரித்தவையாகவே இருக்கவில்லையா?

காந்திஜியும், நேருவும் தாங்கள் செய்யும் எந்த வேலைக்கும் மேற்றிசை நிபுணர்களுடைய வேலைத் திட்டங்களையே ஆதாரமாகக் கொள்ளுகின்றனர். ஜனநாயகம், ஓட்டு, எலக்ஷன் போன்றவைகள் மேற்றிசையிலிருந்து இறக்குமதியானவைகளே.

ஸ்ரீமான் நேரு உலக நிலையை அநுஸரித்தே இந்தியாவைக் கவனிக்கவேண்டுமென்று ஓரே மூச்சாக வற்புறுத்திவருகிறார். சில வருஷங்களுக்கு முன் பெரிய நேருவின் தலைமையில் வெளியான "நேரு ரிபோர்ட்" என்ற ராஜீயத் திட்டமும் பெரும்பாலும் சீமையாரின் திட்டங்களையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறதென்று புகார் ஏற்பட்டது. ஹிந்துக்களின் பழக்கவழக்கங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும் ஏற்றபடி பழையகால முறையை அநுஸரித்து ஒரு ராஜீயத்திட்டம் காங்கிரஸால் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதா? வீணாக அர்த்தமற்ற தேசியக் கூச்சல்போடுவதில் பயனென்ன?

### மதத்தால் மன நிம்மதி.

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் சென்னையில் பேசியபோது, மனிதனுக்கு மன நிம்மதி ஏற்படுவதற்கு மதமே ஒத்தாசை செய்யக்கூடியதென்றும், மத விதியை அநுஸரிப்பதால் அமைதி ஏற்படுவதாயும், தேவாலயங்கள் இத்தகைய மன நிம்மதி ஏற்பட தகுந்த ஸாதனங்களென்றும், கூறினார். பெரிய ஆசாரத் திருத்தக்காரராகிய இவருக்கு, மதத்தைப் பற்றியும், நமது தேவாலயங்களைப்பற்றியும் இத்தகைய அபிப்பிராயம் இருப்பது நவீனர்களால் கவனிக்கத்தக்கது.

### டெல்லி சிவன்கோவில் தர்மாக்கிரஹம்.

1130 பேர் சிறைசென்றனர்.

டெல்லியில் நடந்துவரும் சிவன் கோவில் தர்மாக்கிரஹம் விஷயமாக இதுவரையில் 1130 தார்மிக வீரர்கள் தர்மாக்ரஹம்செய்து சிறை சென்றதாக இந்தியா சட்டஸபையில் ஒரு கேள்விக்குப் பதில் கூறப்பட்டது.

### காந்தி—போஸ் ஸந்திப்பு.

காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் ஸுபாஷ் போஸ் வார்தாவுக்கு வந்து காந்திஜியுடன் ராஜீய நிலைமையைப்பற்றிப் பேசினர்.

ஸ்ரீ. படேல் முதலிய பல மெம்பர்கள் கார்யக்கமிட்டியிலிருந்து ராஜிநாமா செய்து ஒதுங்கிவிட நிச்சயித்திருப்பதாயும், பேச்சு நடந்தது. ஸமாஸம் ஏற்படுமென்று நம்பப் படுகிறதாம்.

22உயன்று வார்தாவில் கார்யக்கமிட்டிக் கூட்டம் நடத்த நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அதில்தான் நிலைமை நிச்சயமாகக் கூடும்.

### முஸ்லீம் விவாக ரத்து மசோதா சட்டமாயிற்று.

இந்தியா சட்டஸபையில் கொண்டுவரப்பட்டிருந்த முஸ்லீம் விவாக ரத்து மசோதா நிறைவேறிவிட்டது.

சிந்தில் கொண்டுவரப்பட்டிருந்த வரதக்ஷிணை மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு அநுப்பப்பட்டது.

### கேரள ஸநாதன தர்மக் கூட்டம்.

உபசரணைக்கமிட்டி அறிக்கை

நமது மதவிரோதிகள், புராதனமானதும், புனிதமானதுமான நமது மதத்திற்கு தீங்கிழைக்கவும் கோவில்களை ரொம்ப நாட்களாகவும் வழக்கமாகவும் இல்லாதபடி எல்லா ஜாதியார்களுக்கு திறந்துவிடுவதையும் செய்ய ரொம்பவும் சரியான இடத்தைக் கண்டுபிடித்தார்கள். ஏனென்றால் அவர்கள் முதலில் எந்த கேரளதேசத்தில் ரொம்பவும் சுத்தமும், ஆசாரமும் கோவில்களில் பார்க்கப்பட்டதோ அந்த தேசத்தை பாதிக்கும்படி மசோதா இயற்றினார்கள். இந்த கேரள தேசத்திலேதான் உலகம் போற்றும் மகிமைவாய்ந்த ஸ்ரீ சங்கரகுரு பிறந்தார். வைஷ்ணவமதத்தின் ஹ்ருதயம் போன்றவரான குலசேகராழ்வார் பிறந்ததும் இந்த இடமே தான். அவர்கள் எங்கே குருவும், வாயுவும் ஐக்கியமானதோ அந்த ஊரான குருவாயூரை பாதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவ்வூரின் சான்னித்தியத்தை கோவில்களை திறந்துவிட்டு அழிப்பது ஸஹிக்க முடியாததாகும்.

ஆகையினால் நமது கோவில்களின் பரிசுத்தத்தை காப்பாற்ற இம்மாதம் 25, 26ந்தேதிகளில் மலபார் தேசத்தின் முக்கிய ஸ்தலமான பாலகாட்டில் ஷை கான்பரன்ஸ் நடைபெறும்.

ஷை சபைக்கு அபிமானிகள் யாவரும் நூற்றுக்கணக்கில் வந்து கூடி நமது குறைகளை எடுத்துரைத்து யோஜனையற்றதும், நியாயமில்லாததுமான இச்சட்டத்தின் எதிர்ப்பை காட்டுவோம்.

K. A. சங்கரநாராயணய்யர், செக்ரடரி.

### 15-2-39-ஹூ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

| | |
|---|---|
| நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி 48 பட்டணம்படி மூட்டை | 3—5—0 |
| ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 48 ஷை உள்ள மூட்டை | 3—0—0 |
| அரிசி முதல்தரம் வெள்ளைசிறுமணி 48 பவுண்டு உள்ள மூட்டை | 7—1—0 |
| ஷை இரண்டாம்தரம் நெல்லூர்சம்பா 48 பவுண்டு உள்ள மூட்டை | 6-15—0 |
| தேங்காய் எண்ணை 64 சேர் நிறை | 5—0—0 |

ஷை தாசில்தார்.

## திருவேடகம்.

வாஹந கைங்கரியம்

ஸ்ரீ ஹாலாஸ்ய க்ஷேத்திரத்திற்கு (மதுரைக்கு) 12 மைல்கள் மேற்கே உள்ளதும், பாண்டி 14 க்ஷேத்திரங்களில் மேலானதும், ஸ்ரீஞானசம்பந்தமூர்த்திஸ்வாமிகளால் புகழ்ந்து பாடப்பெற்றதுமான திருவேடகம் என்னும் திவ்ய சிவ க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஏலவார் குழலி அம்பாளுடன் கூடிய ஸ்ரீ ஏடகநாதஸ்வாமிக்கு நாட்டுக்கோட்டை தனவைஸ்யர்கள் பலரால் அநேக வாஹனங்கள் உபயமாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் ஷை தேவஸ்தானத்தின் பரம்பரை டிரஸ்டியும், சிவநேசச் செல்வருமான தேவகோட்டை உ. ரூம.மெ. சு. செ. சு. சுப்பிரமணியஞ்செட்டியாரவர்களின் குடும்பஸ்தர்களும் ஷை தேவகோட்டை அள. வெ. கரு. கருப்பஞ்செட்டியாரவர்களின் குடும்பஸ்தர்களும்சேர்ந்து சுமார் ரூ 11000 (பதினோராயிரம் ரூபாய்) மதிப்பு உள்ள இரண்டு வெள்ளி ரிஷபவாஹனங்கள் வெகு அழகாக செய்வித்து ஷை தேவஸ்தானத்திற்கு உபயம் செய்தது போற்றத்தக்கது.

மேலும் 10—2—39உ வெள்ளிக்கிழமை பகலில் ஷை வெள்ளி வாஹனங்களுக்கும் இதற்கு முன் புதிதாக செய்து வைத்திருந்த மற்ற வாஹனங்களுக்கும் வேத ஆகம சாஸ்திர விதிகளின்படி பஞ்ச கலச கும்ப ஜப ஹோம சம்ப்ரோக்ஷணை முதலான சம்ஸ்காரங்களை, ஷை திருவேடகத்தில் உ. ரூம. மெ. சுப. சேவு. மெய்யப்ப செட்டியாரவர்களால் நடத்தப்பட்டுவரும் வேதசாஸ்திர பாடசாலை அத்யாபகர் பிரம்மஸ்ரீ கிருஷ்ண சாமி கனபாடியள் அவர்கள் வகையராக்களின் சாதகாசாரியத்தைக்கொண்டு செய்வித்தும் ஸ்ரீ ஏடக நாதருக்கு மஹன்யாச பூர்வமாக ஏகாதச ருத்திர ஜெபம் செய்து 108 கலசங்களால் விசேஷ அபிஷேக ஆராதனை நெய்வேத்தியங்கள் செய்தும் அன்று இரவு ஸ்ரீ பஞ்சமூர்த்திகளையும் வெள்ளி வாஹனங்களில் ஆரோஹணித்து நன்கு அலங்கரித்து பக்தர்களுக்கு காக்ஷி கொடுக்க பவனி வந்தது கண்கொள்ளாக் காக்ஷியாயிருந்தது. அவ்வாறு பவனிவரும் காலத்தில் இராமனுதபுரம் ஸ்ரீனிவாசனும் திருக்குவலை ஞானசம்பந்தமும் வாசித்த நாதசுரமானது அதிக ஜெனங்களை பக்தியில் ஈடுபடும்படிச் செய்தது.

நாட்டுக்கோட்டை தன வைஸ்யர்களும், மற்ற ஆஸ்திகர்களும் சேர்ந்து கூடிய சீக்கிரம் பிரம்ம உத்ஸவத்தையும் ஆரம்பித்து நடத்திவைப்பார்கள் என்று வெகு ஆவலுடன் பக்த ஜெனங்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஒருநிருபர்

---

### மூகபஞ்சசதியின் முதல் பாகம். "ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது, மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது. தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0 ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு விலை அணா 6.

---

## திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

பிராட்டி வைபவ உபந்யாஸம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ அஹோபிலமடத்தில் 12—12—39உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணி முதல் 6-30-மணிவரை கோயம்புத்தூர் அட்வொகேட் ஸ்ரீ. பி. யஸ். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களால் பிராட்டி வைபவம் எனும் விஷயம் விரிவாக உபந்யஸிக்கப் பெற்றது. எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் உள்ள சம்பந்தத்தையும், அவர்களில் பிராட்டிக்குள்ள வாசியைக் குறித்தும் அதிலும் இராமாவதாரத்தில் சீதாபிராட்டியின் சீர்மையை அவதாரம், வாழ்க்கை, வாத்ஸல்யம், அநுக்ரஹம், சாணாகதி என்ற தலைப்பின் கீழ் வால்மீகி சுலோகங்களையும் கம்பராமாயணப் பாக்களையும் ஆழ்வார் பாடல்களையும், சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு அமோகமாக அமைத்து வெகு அழகாக பிரசங்கம் செய்தார். அவைக்கு வந்திருந்த ஸ்ரீநிவாஸய்யங்கார், முக்கூர் ராஜகோபாலாசாரியார் உபந்யாஸகருக்கு முகமன்கூற, காரியதரிசி வந்தனோபசாரம் வழங்க, ஸபை இரவு 7-மணிக்கு நிறைவெய்தியது.

ப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி

---

## தேவாலய பூஜகர்களின நிலைமை.

தேவஸ்தான போர்டுத் தலைவரான ஸ்ரீமான் கொண்டப்பா ஆழ்வார்திருநகரியில் பேசும்போது ஓர் முக்ய விஷயத்தை வெளியிட்டதாகத் தெரிகிறது. அதாவது:—

தேவாலய பூஜகர்கள் ஒன்றும் அறியாதவர்களாயிருப்பதைப்பற்றிப் புகார் ஏற்பட்டிருக்கிறது. வெகு சீக்கிரத்தில் தேவஸ்தானச் சட்டம் சட்டஸபையில் சீர்திருத்தப்படப்போகிறது. அப்போது ஒவ்வொரு தேவஸ்தான போர்டுக்கும், ஆகமபாடசாலைவைத்து நடத்த அதிகாரம் கொடுக்கப்போவதாயும் அதன் பிறகு, ஆகமவிதிப்படி பூஜை செய்யத்தெரியாத பூஜகர்கள் கர்ப்பகிரஹத்திற்குள் நுழையக்கூட முடியாதபடி சட்ட நிர்ப்பந்தம் ஏற்படுத்தப் போவதாயும் பேசினார்.

தேவஸ்தான போர்டின் பிரதான நிர்வாஹியான இவரே பூஜாரிகள் மீது குறையிருப்பதை அறிந்து அதைத் திருத்த சிரமமெடுத்துக்கொண்டிருப்பது சந்தோஷகாமான செய்தியாகும்.

தேவாலயங்களில் ஆலயப்பிரவேசாதிகளால் தெய்வத்தின் ஸான்னித்யத்தை அழித்துவிடக்கூடாதென்று தார்மிகர்களான நாம் வற்புறுத்தி எதிர்க்கிறோம். தீண்டாதார் பிரவேசத்தால் தெய்வஸாந்நித்யம் போய்விடுவதுபோல், பூஜைக் குறைவாலும், அதற்கான மந்திர தந்திர லோபத்தினாலும் ஸான்னித்யம் குறைந்துபோவது ஸஹஜமென்று, சாஸ்திரவிதியே கூறுகிறது.

பூஜகர்களுக்கு ஆகமங்களில் பயிற்சி செய்துவைக்க தேவாலய அதிகாரிகள் முயற்சிப்பதில்லை. பூஜகர்களும் பிறந்தவுடனேயே ஜீவனத்தைக் கருதி கோவிலில் நுழைந்துவிடுகிறார்கள். ஸாதாரணமாக பாஷா ஞானம்கூட அவர்களுக்கு ஏற்படுவதில்லை. வேதங்கள், ஆகம விதிகள் இவைகளைப்பற்றி அவர்கள் பரம்பரையிலேயே பிரஸக்தியில்லாததால் அக்ஞானம் நிறைந்தவர்களாயிருக்கிறார்கள். தெய்வசக்தி யேற்படுவதும், அதை நிலை நிறுத்துவதும் பூஜையைப் பொறுத்திருந்தும், இத்தகைய பெரிய பொறுப்பை நிறைவேற்றப் பூஜகர்கள் கடமைப் பட்டிருந்தும், இவ்விஷயத்தில் நீண்ட காலமாக அசிரத்தை காட்டப்பட்டு வந்திருக்கிறது. இப்போது எந்தக் கோவிலில் நுழைந்தாலும் பூஜகர்கள் ஒன்றுமறியாத மூடர்களாகவே இருந்துவருவதை அறியாதாரில்லை.

அவர்கள் வாய்திறந்து மந்திரங்களைச் சொல்ல இசைவதில்லை. நிரையும் மணியோசையும் வாத்தியசப்தமும் அவர்களுடைய மானத்தைக் காப்பாற்ற ஏற்பட்டனபோலும், ஏதாவது ஸந்தர்ப்பத்தில் அர்ச்சனை முதலியவைகளுக்காக அவர்கள் வாய் திறப்பார்களேயானால் அந்த க்ஷணமே ஸ்வாமி அவிடத்தை விட்டு விலகி ஓடிப்போய்விடும். அவ்வளவு அபத்தமான சொற்களை பொழிவார்கள், வெகு இடங்களில் டிரஸ்டிகள் பூஜகர்களின் யோக்யதையை அறிய முயற்சிப்பதில்லை, அவர்களை பிரஹஸ்பதிகளாகவே நினைத்து ஏமாந்து நிற்கிறார்கள், பூஜகர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றத் தவறுமலிருக்கும்படி கண்டிக்க டிரஸ்டிகளுக்கு அதிகாரமிருந்தும் சோமைத்தனத்தாலும் தாக்ஷிண்யத்தாலும் அதை டிரஸ்டிகள் உபயோகிப்பதில்லை,

தேவாலயங்கள் உண்மையாக இருக்க வேணுமானால், அவைகளால், தேசத்திற்கு க்ஷேமம் ஏற்படவேண்டுமானால், உடனே நம் ஜனங்கள் பூஜகர்களை நல் வழிக்குக் கொண்டுவா சிரத்தைகாட்டவேணும். ஸரியான பரீக்ஷை நடத்தி பூஜை பரிசயமில்லாதவர்களை விலக்கிவைக்க டிரஸ்டிகள் முன்வா வேணும்.

இந்த முக்யமான சீர்திருத்தம் எப்போது ஏற்படப்போகிறதோ அறியோம்.

தேவஸ்தான போர்டுத் தலைவர் ஸ்ரீமான் கொண்டப்பா அவர்கள், வெகு சீக்கிரத்தில் இவ்விஷயமாகச் சட்டம் ஏற்படப்போவதாயும், அதன்பின் பூஜை தெரியாதவர்கள் கர்ப்பகிரஹத்திற்குள் நுழைய விடப்படமாட்டார்களென்றும் ஆழ்வார்திருநகரியில் உறுதி கூறியிருப்பது ஆஸ்திகர்களுக்கு ஆறுதலைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது.

ஓர் ஆஸ்திகன்.

---

உ

ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

### ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

மூலம் நாகரத்திலும், தமிழிலும்,

ஸ்ரீமான் G. V. கணேசய்யர், B.A., B.L. எழுதிய தமிழுரையுடனும், விசேஷ குறிப்புகளுடனும் கூடியது.

ஸ்ரீ வித்யை, ஸ்ரீ பாஸ்கரராயருடைய சரித்திரம், ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷா ச்லோகங்கள் முதலியன அடங்கியவை.

டிம்மி $\frac{1}{8}$ அளவில் சுமார் 1000 பக்கங்கள் கொண்டது. முழு காலிகோ பயிண்டு.

ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர், ஸ்ரீ சக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ 4.] [தபால் V. P. P. செலவு தனி

---



## தேவாலய தத்வம்.

ஸ்ரீ சிவப்பிரகாச ஆனந்தகிரி ஸ்வாமிகள்.

சேங்காலிபுரத்தில் செய்த பிரஸங்கம்.

ஹிந்துக்களுடைய ஆலய தத்வம் சாமானிய ஜனங்களும், ஜனங்களுடைய தலைவரென்று சொல்லிக்கொள்பவர்களும், ராஜாங்க நிர்வாகிகளும் நன்றாகத்தெரிந்து கொள்ளாததினால், வேதசாஸ்திரங்களை நம்பின ஜன சமூகத்திற்கு விரோதமாக பல சாஸ்திர விரோதமான சட்டங்களை ஏற்படுத்துவதுபோல ஆலயப்ரவேசம் முதலான பிரயத்நங்களுக்காகச் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. கிறிஸ்துவர்களுக்கு Church போலவும் மஹமதியர்களுடைய Mosque போலவும் அவர்கள் நமது ஆலயங்களை நினைக்கிறார்கள். மேற்சொன்ன இரண்டு இடங்கள் சாமான்ய ஜனங்கள் ஒரு ஆசாரியனுக்குக் கீழ்பட்டு அடங்கி ஒன்றுகூடி கடவுள் விஷயமான ப்ரார்த்தனைகளைச்செய்து கொள்ள ஏற்பட்ட ஸ்தாபனங்களாகும். நமது ஆலயங்களோ மஹான்களான மந்திர சித்தர்களால் வெகு காலம் அத்யாத்ம மார்க்கத்தினுழைத்துச் சம்பாதிக்கப்பட்ட. சாஸ்திர முறை தவறாமல் ரக்ஷிக்கப்பட்ட, அத்யாத்ம சக்தி ரூபமான ஐச்வரிய நீதியானது சர்வ ஜனங்களுடைய உபயோகத்திற்காகவும், அந்த உபயோகத்தை முறைப்படி அடையத்தகுந்த யோக்யதை யுடையவர்களால் அடையும் படிக்கு அனுகூலமாக மைனர் சொத்து கார்டியன் வசத்தில் ஒப்பிவிக்கப் பட்டதைப்போலத் தர்மகர்த்தர்கள் வசம் ஆலயமென்கிற பாத்திரத்தில் பொக்கிஷம் (இரும்புப்பெட்டியில்) வைத்துச்சம்ரக்ஷிக்கப் படவேண்டி கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலயத்தில் இந்த அத்யாத்ம சக்திரூபமான நிதியிலிருந்து எந்த ஜனங்களும் தங்களுடைய அத்யாத்ம வாழ்க்கைக்கு இன்றியமையாத ஐச்வரிய வீரியத்தை எலக்டிரிக் காண்டு விலை கொடுத்து வாங்குவது போல் ஜன்ம ஸித்தமான யோக்யதா தாரதம்யம் என்ற விலையைத்தங்களுடைய ஸதாசாரங்களுடன் சேர்த்துக் கொடுத்துக் கிரமமாக அடைய வேண்டிய நிலையிலிருக்கிறார்கள். இந்த தெய்வீக சக்திநிறைந்த ஆலயத்திற்கு தர்ம கர்த்தாவோ, தேசத்தரசனோ டிரஸ்டியேயாவான். ஸ்வதந்திர பாத்யதைக்கொண்டாடக்கூடிய ஸ்வாமியாகான். இது சாஸ்திர நிச்சயம். இந்த சாஸ்திர நிச்சயத்தின் பேரில் தான் சாஸ்திரநிச்சயத்தில் அபிமானமுள்ள ஜனங்களுக்கு அத்யாத்ம சக்தி ரூபமான அந்த மந்திர வீரியம் தேவதா ரூபமாக நின்று அவர்களிடமிருந்து கிடைக்கும் பல உபகாரணங்களை யேற்று சந்துஷ்டியடைந்து அதற்கு பலனாக அவர்களுடைய இஷ்ட கார்யங்களை பூர்த்தி செய்து கொடுக்கிறது.

சாஸ்த்ரீயமான முறைகள் தவிர் நியமங்களுக்குப் பங்கம் உண்டாகுங் காலத்தில் நிதி ரூபமான இந்த மந்திர வீரியம் தனது தெய்வீகத் தன்மையை மாற்றிக்கொள்ளுமே யொழிய தேவதா பிம்பங்களிலிருக்கும் அந்த மந்திர வீரியமட்டும் எளிதில் நஷ்டமடைவதில்லை. சாத்வீகமான அந்தத்தெய்வத் தன்மை மாறி ராஜஸமான கொடூரமான ரௌத்ரவீரியமாக ஆகி ஜன சமூகத்தையும் பிராணி வர்க்கத்தையும் தபிக்கச்செய்யும். அக்னியானது கிரமமாக உபயோகப்படுங் காலத்தில் அன்னத்தைப்பக்குவப்படுத்திக்கொடுத்து ரக்ஷிப்பதுபோலவும் அதே அக்னியை மூட்டாளான ஒருவன் தனது இடுப்பிலுள்ள வஸ்திரத்தில் வைத்துக் கட்டிக்கொண்டால் அவனையே எரிப்பது போலாகும்.

இக்காலத்தில் ஆலயங்களில் சில அனுசாரங்களும் சாஸ்திரத்தால் விலக்கப்படாத சில அனதிகாரிகளும் கிரமமின்றி ஆலயங்களில் நுழைந்து கைங்கர்யங்கள் செய்து வருகிறார்களே? அதைப்போல் எல்லோரும் ஏன் ஆலயங்களில் போய் தரிசனஞ் செய்து பலனையடையக் கூடாது என்று கேட்கிறார்கள். கைங்கர்யபார்களான அனுசார அனதிகாரிகள் தெய்வத்தின் கைங்கர்யபார்களாயிருக்கும் வரையில் அவர்களிடத்திலுள்ள பிழைகளுக்காகத் தெய்வத்தின் காருண்ய மகிமையினால் உடனுக்குடன் தண்டிக்கப் படுகிறார்களில்லை. அவர்கள் ஆலய சம்பந்தத்தை யொழித்து வெளிப்படுங் காலத்தில் தாங்கள் செய்து வந்த பிழைகள். அனுஷ்டித்த அனுசாரங்கள் இவைகளுக்காகத் தெய்வத்தால் அவசியம் தண்டிக்கப் படுகிறார்கள். ஆகையால், ஆலயங்களில் அனுசாரங்களும், நியமக்குறைவுகளும் சாஸ்திர சம்மதமில்லாத அனுஷ்டானங்களுமில்லாமலிருக்கும்படி கவனித்து ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பையுடைய தர்மகர்த்தாக்கள், ராஜாங்க நிர்வாகிகள், இன்னும் அதிகமாக அனுசாரங்களையும் ஆலயத்திற்குள் புகுத்துவார்களானால் இரண்டு விதமான குற்றங்களுக்கு ஆளாகிறார்கள். இதன் பயனாக என்ன விளையுமென்றால் தெய்வத்தின் அனுக்ரஹத்தையும், சாந்தத்தையும், சௌக்கியத்தையும் அடைய வேண்டிய ஆலயத்தில் பொது ஜனங்கள் அவற்றை யடையாமல் போவதுடன் அந்த ஆலயங்கள் காலக்ரமத்தில் சண்டை சச்சரவுகள் கூடினவைகளாக ஆகி கொலைக் களங்கள் போலகிவிடும். இவற்றிற் கெல்லாங் காரணம் மந்திர சக்தி ரூபமாய் அமைந்த அந்த தெய்வத்தின் ரௌத்திர ரூபமேயாகும் இத்தகைய ஒரு நிலை அரசனுக்கும் தேசத்திற்கு நாசகரமானது. இதை புத்திமான்களான எவர்கள்தான் இச்சிப்பார்கள்? தேவாலயங்களை தர்மகர்த்தர்களும் அரசாங்கத்தார்களும் ஒழுங்கில்லாமல் வைத்து நடத்துவதைவிட ஆலயங்களில் எவரையும் தர்சனத்திற்காக விடாமல் வேத ஆகம முறைப்படி அதிகாரிகளான பூஜகர்களைக் கொண்டு காலங்களில் பூஜை, நைவேத்யம், ஆராதனைகள் மட்டுஞ் செய்து வருவார்களானால் அது அளவில்லாத நன்மையை ஜனங்களுக்கும் மற்றும் பிராணி வர்க்கங்களுக்கும் கொடுக்குமென்று சாஸ்திரங்களின் உட்கருத்தை யறிந்த மகான்கள் நிச்சயமாகச் சொல்லுகின்றனர். இதுவரையிலும் நான் சொன்னதிலிருந்து ஒன்று உங்களுக்கு வெளிப்படையாகப் புலப்படவேண்டும். ஆலயம் ராஷ்ட்ரத்திற்கே, ஜனசமூகத்தில் க்ஷேமத்தைக்கொடுக்கவேண்டி ஏற்பட்டது. அதை தர்மபுத்தியுள்ள எந்த மூர்க்கனும் கெடுக்க முயற்சிப் பாரானால் அது கூடிய சீக்கிரத்தில் ஜனங்களுக்கும் ராஷ்ட்ரத்திற்கும் ஏற்படப் போகிற ஒரு மகத்தான அபாயத்தையே சூசிப்பிக்கிறது. ஆதலால் ஆலயப்ரவேச சட்டம் போன்றவைகளை ஆஸ்திகர்களான புத்திமான்கள் எவரும் கனவிலும் விரும்ப மாட்டார்கள்.

K. S. வெங்கட்ராமய்யர்.

---

(3ம் காலம் தொடர்ச்சி)

ருக்கிறது. ஆதலால் அவ்விரண்டையும் ஒழிப்பது மிகவும் கடினமான காரியமே. இக்காரணத்தினாலல்லவா யக்ஷரூபம் தரித்த தர்மராஜருக்கு தர்மபுத்திரர்,புருஷர்களுக்கு ஜயிக்கமுடியாத சத்ரு கோபம் என்றும் தீராத வியாதி போசை என்றும் கூறினர்.

(தொடரும்) ராமச்சந்திர ஹரி:

---

## அஹிம்ஸை.

அஹிம்ஸை என்பது மனுதர்மத்தின் முதல் ஆதாரம். அஹிம்ஸையாவது ஒருவருக்கும் ஒருவித துன்பத்தையும் எக்காரணத்தாலும் செய்யாதிருத்தலே. அனேகருக்கு மனுதர்மத்தின் விவரங்கள் தெரியாமலிருந்தாலும் அதன் முதல் ஆதாரமான அஹிம்ஸாதர்மத்தை யாவருமறிவர். இது யாவராலும் போற்றப்படுவதனாலேயே மனுதர்மத்தின் பெருமை நன்கு விளங்குகிறது.

இந்த தர்மம் யோக ஸாதனமெனக் கூறப்படுகிறது. யோகமென்றால் மனவடக்கம் என்று பொருள். இதற்கு அஹிம்ஸை ஓர் முக்கிய மார்க்கமென்பது சாஸ்த்ர ஸம்மதம். என் மனதை அடக்கவேண்டும்? மனதை அடக்காவிடில் நமக்கென்ன கஷ்டம் நேரிடும் என்பதைச் சற்று யோசிப்போம்.

மனம் என்பது ஓர் அபூர்வ ஸ்ருஷ்டி. நமக்கு அநேக அவயவங்களிருக்கின்றன. கண்ணை மூடலாம். காலை அசைக்கலாம். கையை நீட்டலாம். வாயைத் திறக்கலாம். ஆனால் மனதைமட்டும் நாம் அடக்க முடியாது. இதன் சக்தி மிக ஆச்சர்யமானது. அது எப்போதும் ஏதாவது வேலைசெய்து கொண்டே இருக்கிறது. ஒரு வஸ்துவைப் பார்த்தால் அதில் ஆசை கொள்ளுகிறது. சில ஸமயம் பாபமான விஷயங்களையும் சில ஸமயம் புண்யமான விஷயங்களையும் நினைக்கிறது. நாம் ஒரு விஷயம் நினைத்தால் மனம் வேறு நினைக்கிறது. இவ்விதம் நம் மனம் நமக்கடங்காமல் நம்மை அதன் இஷ்டம் போல் இழுத்துச்செல்லுகிறது.

பாபத்திற்கு முக்ய காரணமான மனமே சரீரமென்ற சிறையில் நாம் அடைபடக் காரணம். இச் சிறையினின்றும் நாம் விடுபடவேண்டுமெனில் மனதை அடக்காது ஒருக்காலும் முடியாது. இதன் சக்தியைப் பற்றி ஒருவர் கூறுவதாவது:— குடம் போலுள்ள வயிற்றிலுள்ள நெருப்பு அடங்கி விட்டது. காமப்பேச்சு ஒழிந்துவிட்டது. ஐம்புலன்கள் திக்குகள் தோறும் ஓடி ஓடி விழுந்துவிட்டன. இவ்விதம் தைவச் செயலால் என் சத்ருக்கள் ஒழிந்தும் மனம் என்ற ஒன்றுமட்டும் என் வசப்படவில்லை. யான் என் செய்வேன், எங்கு செல்வேன்."

இப்படிப்பட்ட மனதை யடக்குவது மிகக் கடினமான காரியம். மக்களிற் சிறந்தவனும் கண்ணனின் தோழனுமான அர்ச்சுனனே இம் மனதைக் கண்டஞ்சிக் கண்ணனை நோக்கி மனதைக் கட்டுவது மிகவும் கடினமென நினைக்கிறேன் என்றதற்குக் கண்ணன் சஞ்சல ஸ்வபாவமுள்ள மனதை அடக்குவது கடினமே. ஆனால் அதை வழக்கத்தினாலும் ஆசையின்மையினாலும் அடக்கிவிடலாம் என்றார்.

மனதையடக்கக்கண்ணன் கூறும் முறைகள் இரண்டு. அவை பழக்கம், ஆசையின்மை, ஆசைக்கும் மனதிற்கும் ஸம்பந்தமென்ன? இது நாம் முக்கியமாய் அரியவேண்டிய விஷயம். மனதைப் பாப மார்க்கத்தில் இழுத்துச் செல்வது மனஸ். இதை இவ்விதம் செய்யும்படி தூண்டுகிறவர்கள் காமம் என்ற ஆசையும், க்ரோதம் என்ற சினமுமே இவர்கள் ரஜோ குணத்திலிருந்துண்டானவர்கள் பெருந்திண்டிக்காரர்கள். மஹா பாபிகள் இவர்களை நீ சத்துருவாக நினைக்க வேண்டும். ஆத்மாவைக்கெடுக்கும் நரகத்வாரங்கள் மூன்றையும் விலக்க வேண்டும். இவைகளை ஒழிக்காவிடில் மனம் அடங்கவே அடங்காது. அக்னியானது புகையால் சூழப்பட்டிருப்பது போலும் கண்ணாடி அழுக்கடைந்திருப்பது போலும் இம்மனமானது காம க்ரோதம் என்ற பாபிகளால் இவ்வுலகம் கவரப்பட்டி

(தொடர்ச்சி 2ம் காலம் பார்க்க)

## "ப்ரஸ்தானபேதம்"

"ப்ரஸ்தானபேதம்" என்ற இந்த க்ரந்தம் "அத்வைதஸித்தி" முதலிய உயர்ந்த க்ரந்தங்களை இயற்றிய "மதுஸூதனஸரஸ்வதீ" அவர்களால் ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றப்பட்டது. இதில் ஆஸ்திகமதத்தை போதிக்கக் கூடிய சாஸ்த்ரங்கள் மொத்தம் எவ்வளவு, அவைகளின் முக்கியமான ப்ரயோஜனமென்ன, ஒவ்வொன்றிலும் பொதுவாக எந்தெந்த விஷயங்கள் சொல்லப்படுகின்றன, அவைகள் ஆத்மஞானத்தை அடைவதற்கு எப்படி உபயோகப்படுகின்றன, என்ற விஷயம் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறப்பட்டிருக்கிறது. எல்லா ஆஸ்திகர்களும் இந்த க்ரந்தத்தை சுலபமாக தெரிந்துகொள்வதின் பொருட்டு இப்பொழுது இக்க்ரந்தம் தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்படுகிறது.

अथ सर्वेषां शास्त्राणां भगवत्येव तात्पर्यं साक्षात्परम्परयावेति समासेन तेषां प्रस्थान भेदोऽत्रोद्दिश्यते।

எல்லா சாஸ்த்ரங்களுக்கும் ஸாக்ஷாத்தாகவோ அல்லது பரம்பரையாகவோ (நேர்முகமாகவோ மறைமுகமாகவோ) ஆத்மாவை போதிப்பதில் தான் தாத்பர்யம். ஆகையால் எந்தெந்த சாஸ்த்ரம் எந்தெந்த வழியாக ஆத்மாவை போதிக்கிறது என்று இக்க்ரந்தத்தில் சுருக்கமாக சொல்லப்படுகிறது.

तथाहि—ऋग्वेदो यजुर्वेदस्सामवेदोथर्ववेद इति वेदाश्चत्वारः। शिक्षा, व्याकरणं निरुक्तं छन्दो ज्यौतिषं कल्प इति वेदाङ्गानि षट्। पुराणन्यायमीमांसाधर्मशास्त्राणिचेति चत्वार्युपाङ्गानि। अत्रोपपुराणानामपि पुराणेन्तर्भावः, वैशेषिक शास्त्रस्य न्याये, वेदान्तशास्त्रस्य मीमांसायां, महाभारतरामायणयोः साङ्ख्यपातञ्जलवैष्णवादीनां च धर्मशास्त्रे; एवं मिलित्वा चतुर्दश विद्याः। तथाचोक्तं याज्ञवल्क्येन— "पुराणन्यायमीमांसाधर्म शास्त्राङ्गमिश्रिताः। वेदाः स्थानानि विद्यानां धर्मस्य च चतुर्दश" ॥

மொத்தம் 14 சாஸ்த்ரங்கள். ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வவேதம், என்று வேதங்கள் 4; சிக்ஷை, வியாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம், கல்பம், என்று அங்கங்கள் 6; புராணம், நியாயம், மீமாம்ஸை, தர்மசாஸ்திரம், என்று உபாங்கங்கள் 4; ஆக மொத்தம் 14. நாரஸிம்ம புராணம் முதலிய உபபுராணங்களை புராணங்களுடனும் வைசேஷிக சாஸ்த்ரத்தை நியாய சாஸ்த்ரத்துடனும் வேதாந்த சாஸ்த்ரத்தை மீமாம்ஸையுடனும் மஹாபாரதம், ராமாயணம், ஸாங்க்யம், யோகம், பாசுபதம், வைஷ்ணவம் முதலிய க்ரந்தங்களை தர்ம சாஸ்த்ரங்களுடனும் சேர்த்துவிட்டால் மேற்குறிப்பிட்ட 14 சாஸ்த்ரங்களுக்குள் அடங்கிவிடுகின்றன. இப்படியே யாக்ஞவல்கியராலும் சொல்லப்பட்டிருக்கிறது—"புராணம் நியாயம், மீமாம்ஸை, தர்மசாஸ்திரம், 6 அங்கங்கள், இவைகளுடன் கூடிய நான்கு வேதங்களும், வித்யைக்கும் தர்மத்திற்கும் ஸ்தானங்கள்"

एता एव चतुर्भिरुपवेदैस्सहिता अष्टादशविद्या भवन्ति। आयुर्वेदो धनुर्वेदो गान्धर्ववेदोऽर्थ शास्त्रं चेति चत्वारउपवेदाः। सर्वेषां चास्तिकानामेतान्येव शास्त्रप्रस्थानानि। अन्येषामप्येकदेशिनामेतेष्वेवान्तर्भावात्।

மேற்கூறிய 14 சாஸ்த்ரங்களுடன், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், அர்தசாஸ்த்ரம் என்று 4 உபவேதங்களையும் சேர்த்தால் 18 சாஸ்த்ரங்கள் ஆகின்றன. ஆஸ்திகர்களுடைய சாஸ்த்ரங்கள் இவ்வளவுதான். "ஏகதேசிகள்" என்று சொல்லப்படுகிற சிலருடைய சாஸ்த்ரங்களும் மேற்கூறிய 18 சாஸ்த்ரங்களுக்குள்ளேயே அடங்கியிருக்கின்றன,

(தொடரும்)

R. முத்துகிருஷ்ண சாஸ்திரி.

## வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா.)

விசித்ரப் போக்கு! உலகின் போக்கு மிக மிக விசித்ரமானது. ஸபையின் போக்கிற்கேற்றவரை தலைவராக தேர்ந்தெடுத்து அவர் கூறும் அரிய விஷயத்தை ஏற்பது நலம், வழக்கம், உசிதமுமாம். ஜைனர்கள் ஸபைக்கு இரண்டாம் முறை அரசியலில் புதுந்த ஓர் பெரியாரழைக்கப்பட்டார். அவரும் ஏதாவது பேசவேண்டுமே என பேசியது அதை விட விசித்ரம்!!

ஸந்தேஹத்திற்கிடம்!! தேசிய ஸபை இருதலைவரிடையே சிக்கிற்று. இரு தலைசஹம் தன்கொள்கையில் மிக அதிதீவ்ரமான பிடிவாதமுள்ளவை!! மற்ற குட்டித் தலைகள் அனைத்தும் "பிளவில்லை! பிளவில்லை!" என கூறி பலத்த பிளவேற்படுமோ என ஸந்தேஹத்தை உண்டு பண்ணுகின்றன!!

ஆறுமாத நோடீசா? சுபாஷ்வசு ஆறு மாதத்திற்குள் ஸ்வாராஜ்யமளிக்காவிடில் ஸாத்விக எதிர்ப்பு துவக்குவோம் என உத்கோஷிக்கிறார்! பொறு! பொறு என்கிறார் காந்திஜீ பாரகோடியில் செல்லும் இருமபமும் தேச நன்மைக்கே எனலாம்! ஆனால் மதத்தைக் கெடுத்தால் இருபலமும் தீதே! தலை நிருந்துமா?

லண்டன் கொந்தளிப்பு!! ஐரிஷ் குடியரசு கக்ஷி செய்யும் பயங்கரமான வேலையைக் கண்டு லண்டனில் மிக பரபரப்பேற்பட்டுளது!! பொதுவாக எல்லா இடங்களிலும் இவ்வாண்டு தீமையையே அதிகமளிக்கிறது! காரணமென்ன? தர்ம லோபமே!!

அமைதியையகற்றுமரசியல்!! ஜகதாயகத்தில் கக்ஷி பேதங்களால் நாளுக்கு நாள் பேதமும் கலகமும் நிந்தையும் வளருமே தவிர ஒரு நாளும் முடிவடையாது. அமைதியாக வாழும் பல குடும்பங்களை இது விழுங்கி எங்கும் அமைதியின்மையை விளப்பியது! அரசியல் சுகம்!

உள்ளத்தைக்கொண்டு சந்தோஷி! என்பது மிக அரிய உபதேசம்! சென்னையில் ஓர் உயர்குலத்துதித்த படிப்பாளி யுவா உள்ள வேலையை விட்டு அதிக சம்பாத்யம் தேட ஆகாய விமான ஓட்டி வேலை பயின்றார். விமானத்துடன் வீழ்ந்திறந்தார்! மரணத்தைத்தடுக்க முடியாதெனினும் அபமிருத்யுவிற்காளாகாமலிருக்கலாமன்றோ?

ஓர் பிரார்த்தனை! நமதுபத்ரிகையில் உலக விருத்தாந்தத்தை விட தர்ம விஷயமே அதிகம் வேண்டு மென்றும் அச்சுப்பிழைகள் இல்லாதபடி திருத்த வேண்டு மென்றும் நமதுபத்ரிகா வாசகர் பலர் விரும்புகின்றனர்.

### கிறிஸ்தவ மதகுரு மரணம்.

உலகத்திலுள்ள கத்தோலிக்கர்களின் மத குருவான போப் ஆண்டவர் ரோம் நகரில் சில தினங்களுக்கு முன் காலஞ்சென்றார். 2 லக்ஷம் ஜனங்களுக்கு மேல் கூடி அவருடைய உடலை தரிசிக்க வந்தார்களாம்.

### கும்பகோணம்.
### கீழ கருணைகொல்லைத் தெரு தனுர்மாத ஸமாராதனை.

திருக்குடந்தைமாநகரின்கண் நாகேச்வரஸ்வாமி திருமஞ்சன வீதி ஸ்ரீ பகவத் படித்துறை தென்பாகத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ பகவத்பிள்ளையார் ஆலயத்தின் மேல்புறம் (அதாவது) கீழ கருணைகொல்லைத் தெருவில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ ராதாக்ருஷ்ணானந்த பஜனைமடத்தில் பகுதான்ய-ஹு தை-மீ 29வ (11—2—39) சனிக்கிழமை காலையில் ஸ்ரீ ராதாகல்யாணமும் அன்று மத்தியானம் ஸமாராதனையும் இரவு 8 மணிக்குமேல் பஜனை கோஷ்டியுடன் வீதிப்ரதக்ஷிணமும் வெகு விமரிசையாய் நடைபெற்றது.

இந்த உத்ஸவம் பலநாட்களாக நின்றிருந்து இவ்வருஷம் பல கனதனவான்களின் பேருதவியால் நடைபெற்றது.

ஒரு நிருபர்.

### திருப்பூந்துருத்தி.
### ஸ்ரீ நாராயணதீர்த்த குருஸ்வாமிகள் ஆராதனை.

நிகழும் வெகுதான்ய-ஹு மாசி-மீ 16வ (27—2—39) திங்கள்கிழமை சுக்லபக்ஷம் அஷ்டமிதிதி கூடிய சுபதினத்தில் "ஸ்ரீ நாராயணதீர்த்த குருஸ்வாமிகள் ஆராதனை" வழக்கம்போல் நடப்பதால் அன்பர்கள் அனைவரும் வந்து தரிசித்து இம்மை மறுமை நலன்களையும் அடைந்து உய்யுமாறு பிரார்திக்கிறேன்.

ஒரு பக்தன்.

### ஓம் மண்டலியை ஒழிக்க முயற்சி.
### கோர்ட் நடவடிக்கை.

காராச்சியில் "ஓம் மண்டலி" என்ற பெயருடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஓர் ஸ்தாபனமானது சிறு பெண்களை ஏமாற்றிக் குடும்பத்தைவிட்டு அப்புறப்படுத்தி தங்கள் வசத்தில் அடக்கிவைத்துக்கொண்டு வரும் பெரிய அக்கிரமத்தை அங்குள்ள ஹிந்துக் குடும்பிகள் பலமாக எதிர்க்க முற்பட்டுவிட்டார்கள். கோர்ட் உத்தரவின்மேல் இதுவரையில் அநேகப்பெண்கள் மீட்கப்பட்டுவிட்டார்கள் மேலும் கோர்ட்டார் அந்த ஸ்தாபனத்தின் மீது பல குற்றங்களைச் சாட்டி விசாரிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

### பம்பாயில் தற்கொலைகள்.
### வேலை கிடைக்காத காரணம்.

பம்பாய் சட்டஸபையில் ஒரு கேள்விக்கு பதில் கூறுகையில் இவ்வருஷத்தில் ஆயிரம் பேர்களுக்குமேல் பம்பாயில் தற்கொலை செய்துகொண்டதாயும் இதில் பெரும்பாகம் வேலையில்லாத் திண்டாட்டமே காரணமென்றும் சொல்லப்பட்டது.


## ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

நாகரலிபியில் மூலமும், நாமாவளியும். விலை அணு 0—5—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு விலை அணு 0—4—0.
தபால்செலவு அணு 0—1—0




### திருவிடமருதூர்.
### ஸ்ரீஜோதிர்மய மஹாலிங்கஸ்வாமி நியமாத்யயனவேதபாடசாலையின் 5 வது வருஷப் பூர்த்திக்கொண்டாட்டம்.

மேற்படி பாடசாலையானது மஹான் த்விவேதி ப்ரும்மஸ்ரீ விச்வேச்வர சாஸ்திரிகள் அவர்களால், ஸ்ரீ பரமாசார்யாள் அவர்களுடைய அனுக்ரஹத்தையும் ஸ்ரீ சாம்ப மத்யார்ஜுனேச்வருடைய க்ருபையையும் முன்னிட்டு, சென்ற ஸ்ரீமுகஹு தைமீ ஆரம்பிக்கப்பட்டு ஈச்வர வருஷம் ஆவணிமீ வரையில் ஷை யாரால் நடத்தப்பட்டு வந்தது. மேற்படியாரின் காலத்திற்குப் பிறகு அவருடைய தர்மபத்னியான லக்ஷ்மி அம்மாளால் ஷை சாஸ்திரிகளின் பிரியப்படி நடத்தப்பட்டுவருகிறது. ஷை யாரின் சிஷ்யர்களான ப்ரும்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சிரௌதிகளாலும் ராமச்சந்திர சாஸ்திரிகளாலும், ஸாமயாஜுஷ காவ்ய பாடங்கள் பையன்களுக்கு சொல்லி வைக்கப்பட்டு வருகின்றன. ஷை பாடசாலையின் 5 வது வருஷப்பூர்த்தி கொண்டாட்டமானது 1-2--39 புதன்கிழமை பகல் 3 மணிக்கு மகாதானத்தெரு வெங்கட்டராம சாஸ்திரிகள் க்ரஹத்தில் வேப்பத்தூர் ஸ்ரீ நரஸிம்மய்யர் அவர்கள் அக்ராஸனத்தின்கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் சுமார் 150 பேர்கள் வரை வந்திருந்தார்கள். திருக்கருகாவூர் ப்ரும்மஸ்ரீ டி. எல் சுப்பைய்யர் அவர்கள் வேதமும் வேதாத்யயனமும் என்னும் விஷயத்தைப் பற்றி உபன்யஸித்தார். அதில், வர்ணாச்ரம தர்மத்திற்கு லோபம் ஏற்பட்டுவரும் இக்காலத்தில் வேதாத்யயனத்திற்கென்று பாடசாலை ஏற்பட்டு, பலபிள்ளைகள் வேதாத்யயனம் செய்து வருவது மிகவும் மெச்சத்தக்கது என்றும், இப்பாடசாலைக்கு யாதொரு மூலதனமும் இல்லாமல் ஆஸ்திகமுள்ள பல கனதனவான்களுடைய த்ரவ்ய சகாயத்தாலும் ஜோதிர்மய மகாலிங்கேசுவருடைய க்ருபையாலும் யாதொரு குறை வன்னியிலும் வித்யார்த்திகளுக்கு, இலவசமாக அன்னபானாதிகளும் வித்யாப்யாஸமும் அளிக்கப்பட்டு வருவது மெச்சத் தகுந்தது என்றும்; ஒவ்வொரு வருஷமும் மாணாக்கர்கள் மைசூர் புதுக்கோட்டை முதலிய ஸம்ஸ்தானங்களின் வித்வத் ஸபைகளிலும், சம்மானங்களும், சர்டிபிகேட்டும் பெற்று வந்திருக்கிறார்கள். இந்த வருஷமும் 4 பேர் மைசூரிலும், 2 பேர் புதுக்கோட்டையிலும் சம்மானம் சர்டிபிகேட் பெற்று வந்திருக்கிறார்கள். இப்பொழுது 21 மாணாக்கர்கள் வித்யாப்யாஸம் செய்து வருகிறார்கள்.

வேதாத்யயனமானது பிராமணர்களுக்கு முக்கியம். அதை ஆசாரத்துடன் அத்யயனம் செய்தால் எல்லா நன்மைகளும் தானுக வேஷித்திக்கும். இதைக்கண்ணுறும் கனதனவான்கள் யாவரும் தங்களாலான உதவி செய்து மேற்படி பாடசாலையை முன்னுக்குக் கொண்டு வர வேண்டு மென்று உபன்யஸித்தார்கள்.

பிறகு, திப்பிராஜபுரம் ப்ரும்மஸ்ரீ நாராயண சிரௌதிகளாலும், திருவிடமருதூர் வெங்கட்டராம சிரௌதிகளாலும், வேதாத்யயனத்தையும் வேத பாராயணத்தையும் பற்றி உபன்யஸிக்கப்பட்டது.

பின்பு, கோனேரிராஜபுரம் பிரும்மஸ்ரீ: சாம்பசிவய்யர் அவர்களால் பாடசாலையின் வரவு செலவு கணக்குகளை சரிபார்க்கப் பட்டு நன்றாக நடந்து வருகிறது என்று எழுதியிருந்த ரிபோர்ட்டை ஷையூர் ப்ரும்மஸ்ரீ: சிவராமையர் அவர்களால் சபையோர்களுக்கு படித்துக் காண்பிக்கப் பட்டது.

### திருக்கோவிலூர்.
### ஆரிய தர்மாபிவிருத்தினி பிராம்மண மஹா சபை.
### 26-வது வருஷோத்ஸவம்

நிகழும் வெகுதான்யஹு மாசிமீ 7, 8வ களுக்குச் சரியான 1939-ஹு பிப்ரவரிமீ 18, 19-வ ஸ்திரவாரம், பானுவாரம் இந்த தினங்களில் ஷை உத்ஸவம் இந்நகர் ஸ்ரீ திருவிக்கிரம ஸ்வாமி ஸன்னதி வஸந்த மண்டபத்தில் நடைபெறும்.

அச்சமயம் சென்னை மைலாப்பூர் தர்மரக்ஷாமணி பிர்மஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் B. A. B. L. Advocate அக்ராசனம் வகிப்பார்கள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்கள் தமது ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான்களை சபைக்கு விஜயம் செய்வித்து சபையை நடத்தி வைக்க அனுக்கிரஹித்துள்ளார்கள்.

ஸநாதன தர்மாபிமானிகள் அன்பர்களுடன் வந்திருந்து சிரவணித்து பெரும்பேறடைய வேண்டுகிறோம்.

உபந்நியாசகர்கள்.

1. ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான்கள். 2. ஸநாதன தர்மரக்ஷகர் பிர்ம-ஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷதர் அவர்கள். 3 பிர்ம-ஸ்ரீ பிரசங்கவா ஸாஹித்திய வாங்முக பூஷண தர்மஸேவா துரந்தர வே. ஸோமதேவ சர்மா அவர்கள். 4. பிர்ம-ஸ்ரீ உப. வே. ஆராவமுது ஆச்சாரியார் அவர்கள் ஸமஸ்கிருத பண்டிதர், போர்டு ஹைஸ்கூல், திருக்கோயிலூர். 5. பிர்ம-ஸ்ரீ உப. வே. T. A தாந்தாச்சாரியார் அவர்கள் B. A., வக்கீல், கள்ளக்குறிச்சி. (டிஸ்டிரிக்ட் போர்ட் மெம்பர்.)

இவர்களும் இன்னும் சில பண்டிதர்களும் விஜயம் செய்து அடியிற்கண்ட விஷயங்களைக் குறித்து உபந்நியாசம் பண்ணுவார்கள்.

விஷயம்:—1. பக்தி 2 ஸநாதநதர்மம் 3. ஸத்யம் 4 ஆஸ்திக்யத்தின் அவசியம் 5 ஸத்ஸங்கம் 6 அகல்யா சாபவிமோசனம். 7 பீஷ்மப்ரதிக்ஞை. 8. மானிடப்பிறவியின் பயன். 9. பரலோக நிச்சயம்.

பிரதி தினமும் காலை 7-30-மணி முதல் 11-மணிவரையிலும் மாலை 3-மணி முதல் 8-மணி வரையிலும் உபந்நியாசங்கள் நடைபெறும்.

பின்பு ப்ரும்மஸ்ரீ டி. வி. வெங்கட்டராம சாஸ்திரிகளால் கோனேரிராஜபுரம்ராமசுவாமி சிரௌதிகளால் நடத்தப்பட்டு வரும் வேத பாராயண தர்மத்தையும், இதைப்போன்ற தர்மத்தை ஆதரித்து நடந்துவரும்படி செய்விக்கும் ஆஸ்திகர்கள் யாவருக்கும் சர்வ மங்களமும் ஸ்ரீ சாம்ப மத்யார்ஜுனேச்வரரின் கடாக்ஷத்தால் உண்டாகவேண்டு மென்று உபந்யஸிக்கப்பட்டு அக்ராஸனாவர்களால் முடிவுரை கூறப்பட்டு, அங்கு வந்திருந்தவர்களுக்கும் அக்ராஸனருக்கும் சந்தண தாம்பூலாதிகள் வழங்கி பாடசாலையின் 5 வது வருஷப்பூர்த்திக் கொண்டாட்டம் இனிது நடந்தது.

N. N. ராஜன்.

### ஓர் அறிவிப்பு.

நமது 2-2-39 ஆர்யதர்மத்தில் எனது நண்பர் ஸ்ரீமான் பாகவத ரங்கனாசாரியார் என்னைப்பற்றிப்ரஸ்தாபித்திருப்பதால் பின்வருமாறு அறிவிக்கிறேன். ஏகாதசியைப் பற்றி ஓர் வியாஸராஜ மடத்தார் எழுதின கடிதத்தையும் அதன் பதிலையும் நான் அறிவேன். இரண்டின் உக்தி ப்ரத்யுக்திகளின் பொருத்தத்தை வாசகர்களாகிய நாம் அறிவோம். முடிவில் எழுதப்பட்ட 'தர்மம் அந்தரங்க பக்தியுடன் ஏகாந்தமாய் அனுஷ்டிக்கபட அர்ஹதையானதே யன்றி கக்ஷி பேசிக்கொண்டு இதராளுடைய ஆக்ஞையையும் நிர்ப்பந்தத்தையும் பொறுத்ததன்று' என்ற விஷயம் ஸர்வ ஸம்மதமானது. இதன் உண்மையை யறிந்து நமது நண்பர் தாமே முதலில் தமது பத்திரிகையில் பிறர் ஏகாதசி தர்மத்தைப்பற்றி பிரசுரிக்காமலிருந்தால் அவ்வுண்மையை அனுஷ்டித்துக்காட்டியிருப்பது போலாகும்.

எம். ராம ராவ்.

### திப்பிராஜபுரம்.
### பிரும்மவித்யா ஸபா.

7—1—39வ ஸ்திரவாரத்தில் ப்ரும்மஸ்ரீ மந்திரமூர்த்தி கிருஷ்ணசாஸ்திரிகள் அவர்கள் தேவீபாகவதோக்த சுக, வியாஸ ஸம்வாதத்தில் "ஸ்ரீசக்ர" மஹிமை பற்றியும் பிரும்ம வித்யா உபதேசத்தைப்பற்றியும் காயத்ரி மஹிமைப்பற்றியும் உபன்யஸித்தார்.

14—1—39வ ஸ்திரவாரத்தில் ப்ரும்மஸ்ரீ பஞ்ஞாடு ராமாயணம் சாம்பவசிவ சாஸ்திரிகளவர்களால் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் "ஸீதா கல்யாணம்" கட்டத்தை வெகு அழகாகவும் விசேஷ கான ரஸத்துடனும் ப்ரஸங்கம் செய்யப்பட்டு, மகாஸங்கரமண புண்ணியகாலத்தை உத்தேசித்து சர்க்கரை தாம்பூலங்கள் வழங்கப்பட்டன.

21—1—39வ ஸ்திரவாரத்தில் பிரும்மஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகளவர்கள். தேவீபாகவதோக்த சுகவியாஸ ஸம்வாதத்தில் "கர்மானுஷ்டான க்ரமம்" என்கிற விஷயத்தைப் பற்றி ஸதஸ்யர்களுக்கு எடுத்து போதித்தார்.

28—1—39வ ஸ்திரவாரத்தில் ப்ரும்மஸ்ரீ சாம்பசிவ சாஸ்திரிகள் அவர்கள் "ஸுக்ரீவ பட்டாபிஷேகம்" என்னும் கட்டத்தை தன்னுடைய இன்னிசை சாரீர சம்பத்துடனும், வால்மீகி ராமாயணம், இன்னும் இதர க்ரந்தங்களிலுள்ள விசேஷ தாத்பரியங்களுடனும் சொல்லி உத்கோஷித்தார்.

### ஸ்ரீமத் வால்மீகி ராமாயண பட்டாபிஷேகம்.

சென்ற 7, 8மீ காலமாக நரசிங்கம் பேட்டை பிரும்மஸ்ரீ ஸ்ரீ ராமாயணம் ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண திவ்ய கதாகாலக்ஷேபம் நடந்து வருவதில் நாளது மாசி-மீ 5வ வியாழக்கிழமை தினம் ஸ்ரீஸீதா ராமச்சந்திர மூர்த்தியின் மகுடாபிஷேக மஹோத்ஸவ வைபவம் நடத்துவதாய் நிச்சயித்திருக்கிறார்கள். யாவரும் விஜயம் செய்து க்ருதார்த்தர்களாகக் கோரப்படுகிறது.

பிரும்ம வித்யா ஸபா வருஷாந்திர பூர்த்திக் கொண்டாட்டம் நாளது மாசிமீ 7வ சனிக்கிழமை தினம் நடத்துவதாயும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு நிருபர்.

215271

97

## கேரள ஸநாதநதர்ம மஹாநாடு.

அகில இந்திய ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவில் கேரள ஸநாதநதர்ம மஹாநாடு நாளது பிப்ரவரி-மீ 25, 26உ-களில் பாலக்காட்டில் நடைபெற விருப்பதாகக் கேள்வியுற்று பரமானந்தத்தை அடைகிறோம். சமீபத்தில் வாரணாசியில் நடந்த மஹாநாடு யேர்களுக்கு ஞாபகமிருக்கலாம். சென்னையில் சென்றவாண்டிற்கு முன்னாண்டு லலிதாஸதநத்தில் நடந்த ரீதியில் தற்போது பாலக்காட்டில் நடைபெறுமாகில் பெருத்த லாபம் உண்டு. ஏற்கனவே அங்கு சநாதநதர்ம ப்ரசாரம் தீவிரமாக நடைபெற்றுவருவதாகத் தெரிகிறது. டாக்டர் சங்கரநாராயண அய்யர் அதிசாமர்த்தியசாலி; நிபுணர்; அனைவரையும் ஆநந்திப்பிக்கும் தார்மிகர். அவரது அமைச்சில் அமைந்து நடக்கும் மஹாநாடு வெற்றிபெறும் என்பதில் சிறிதும் ஐயமின்று. நம்நாட்டில் பல பாகங்களிலிருக்கும் சநாதநிகளனைவரும் யாகசாலைக்குச் செல்வதுபோல் பாலக்காட்டுக்குச் சென்று தர்மக்கொடியை நன்கு நாட்டவேண்டும்.

கேரளநாட்டில் உண்டான சோதி முன்னர் உலகிருளை நீக்கிற்று. அப் புண்ணிய பூமிக்கு யாத்திரையாகச் சென்று பகவத் ஸங்கல்பத்துக்கு அநுசரித்து நிற்கவேண்டும். சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை. அவரவர்க்குரிய நிலைகளில் நிற்றலே அமைதி தரும். மாற்றுலக்கிடங்கொடேல். தூய தலங்கள் தூய்மையுடன் இருக்கப்பார்த்தலே தூமறையோர் முதற்கடமை. மடாதிபதிகளும் முழுப்பங்குகொண்டு பூர்ணமாக அநுக்ரஹிக்க இக்காரியம் இலகுவில் இனிது நிறைவேறும். ஆஸ்திகம் ஓங்குக. நாஸ்திகம் அழிக. வேதம் வாழ்க அந்தணர் வாழ்க. மநுமறை மல்குக. அறம் வளர்க. பெரியோர் சேர்க. சநாதநதர்மம் சாந்தி முற்றுக. பெரியார் சேர்க. தார்மிகர் அணைக. சமயங்கள் வளர்க. கோயில் பொங்குக. அனைவரும் ஒற்றுக. பொங்கும் மங்களம் எங்குந்தங்குக.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

## ஆழ்வார்திருநகரி.

### உபயவேதாந்த கலாசாலை.

### தேவஸ்தானபோர்டு பிரஸிடெண்டின் பிரசங்கம்.

(நமது விசேஷ நிருபர்).

சென்னை ரிலிஜியஸ் எண்டோமெண்ட் போர்டு தலைவர் ஸ்ரீமான் எ. கொண்டப்பா திருநெல்வேலி ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்கையில் ஸ்ரீவைகுண்டம் ஆழ்வார் திருநகரி தேவஸ்தானங்களுக்கும் விஜயமாகி தர்சனம் செய்துகொண்டார் கோயில் டிரஸ்டிகளால் வரவேற்றுபசரிக்கப்பட்டது. 11—2—39 சனிக்கிழமை மாலை திருநகரி உபயவேதாந்த கலாசாலையின் 19வது ஆண்டு வைபவ கொண்டாட்டத்தை கனம் பிரஸிடெண்ட் தலைமை வகித்து நடத்திவைத்தார். ஆரம்பத்தில் கலாசாலை ருப்பாண்டால் வருடாந்திர அறிக்கை படிக்கப்பட்டும் பிரஸிடெண்டுக்கு வரவேற்புபத்திரம் அளிக்கப்பட்டும் முடிந்ததும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் நிர்வாஹ மானேஜர் ஸ்ரீமான் டி. கோவிந்தய்யங்கார், பாஞ்சராத்ர வைகானஸ ஆராதன முறையும் ஸ்ரீ ஆண்டாள் வைபவமும் என்பதுபற்றி பிரசங்கிக்கையில் ஒவ்வொரு முக்ய கோயில்களிலும் ஆகம பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டுமெனவும் அதற்கு பிரஸிடெண்ட் முயற்சிக்கவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

பிரஸிடெண்ட் ஸ்ரீமான் எ. கொண்டப்பாவால் ஆங்கிலத்தில் பிரசங்கிக்கப்பட்டதை கோயில் நிர்வாக ஆபீஸர் ஸ்ரீமான் எல். ஆர். குருசாமிநாயிடுவால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது, உபாத்யாயர்களும், மாணவர்களும் கலாசாலை அபிவிருத்திக்காக உழைக்கவேண்டுமெனவும் ஈக்கள் தேனை சேகரித்து பிறர்க்கு உதவுவதுபோல் மாணவர்களும் விஷயங்களை கிரஹித்து பின்னால் யாவர்க்கும் பயன்படுமாறு செய்யவேண்டுமெனவும் படிப்புகளிலும் மதசம்பந்தமான படிப்பு அறிவே மிக சிரேஷ்டமெனவும் அவைதான் மரணத்துக்குப் பின்னும் உதவுவதாயும் பிரஸ்தாபித்து, விரைவில் போர்டு சீர்திருத்த சட்டமொன்று சட்டசபையில் நிறைவேற விருப்பதாயும் அதில் தேவஸ்தான போர்டுக்கு ஆகமசாஸ்திர பாடசாலைகள் நடத்த அதிகாரங்கள் கொடுக்கப்படலாமெனவும் அதற்குப் பின் அறைகுறையாய் பயின்ற பூஜகர்கள் கோயில் கர்பக்ரகபிரவேசம் செய்ய முடியாதெனவும் பொதுவாக எம்மதத்திலும் பகவத் பக்தியையே போதிக்கப்படுகிறதாயினும் ஸ்ரீ வைஷ்ணவ சம்ப்ரதாயத்தில் எந்த மனுஷ்யனும் பகவானுக்கும் பகவத் அடியார்களுக்கும் தாஸாநுதாஸன் என்ற உயர்ந்த வேதாந்தத்தை போதிக்கப்படுவதால் பரியாதைகளுக்காக கோயில்களில் தகராறு செய்வோர் எவ்வளவு பெரியவர்களாயினும் அவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களாகவே கருதப்படமாட்டார்களெனவும் ஆகையால் எவ்வகையிலும் யாவரும் ஒத்துப்போவதே மேலெனவும் சொல்லி முடித்தார். வந்தனோபசாரத்துடன் வைபவம் முடிவெய்தியது.

## ஸ்ரீமத் ராமாயண பட்டாபிஷேகம்.

சென்னை திருவல்லிக்கேணி வெங்கடாசல செட்டிதெரு ஸ்ரீ பாண்டுரங்க தேவஸ்தானத்தில் சென்ற அக்டோபர்-மீ முதல் மாம்பலத்திலுள்ள ப்ரம்மஸ்ரீ உடையாளூர் அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மனோரம்யமான நடையில் பிரசங்கம் செய்யப்பட்டு வந்தது. அப்போதைக்கப்போது ஸீதா கல்யாணம், பாதுகா பட்டாபிஷேகம், ஸுக்ரீவ பட்டாபிஷேகம், அங்குளியப்ரதானம், விபீஷண சரணாகதி முதலிய பிரமயங்களில் மஹா ஜனங்கள் சாஸ்திரிகள் அவர்களை கௌரவித்து வந்தனர். கதாப்ரவசன சம்பூர்த்தி 5-2-39 ஞாயிற்றுக்கிழமை வைபவமாய் நடந்தேறியது. ஸ்ரீ ஸீதாராம பட்டாபிஷேக மஹோத்ஸவம் பொது ஜனங்களால் நன்கு கொண்டாடப்பட்டது. அன்று மடம் நன்கு அலங்கரிக்கப்பட்டு ஹநுமத் சமேத ராம லக்ஷ்மண ஸீதா விக்ரஹங்கள் ப்ரத்யேகமாய் அபிஷேக ஆராதனைகளுடன் அலங்கரிக்கப்பட்டு காலை 10 முதல் 12 மணி வரை அர்ச்சனைகள் நடந்தன. பிறகு பட்டாபிஷேக கட்டம் பாராயணம் நடந்ததும் சுமார் 250 ஜனங்கள் சந்தர்ப்பணை நடந்தது. இரவு 8 மணி முதல் 10 மணி வரை கதாப்ரவசனம் நடந்தது. அநேக கனதனவான்கள் விஜயம் செய்தனர். பிரும்மஸ்ரீ சாஸ்திரிகளவர்களும் திருப்திகரமாக வஸ்திரங்களாலும் சம்பாவனைகளாலும் கௌரவிக்கப்பட்டார். மாஜி ஜட்ஜ் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் முதலியோர் வைபவத்தைப்பற்றிப் புகழ்ந்து கூறினர். ஹிந்து ஹைஸ்கூல் உபாத்யாயர் ஸ்ரீமான் பி. எஸ். வைத்தியநாதஸ்வாமி அய்யர் முதலியோர் மிகுந்த சிரத்தையுடன் ஆரம்பம் முதல் இந்த ராமாயண காலக்ஷேபத்தை நன்கு நடத்தி சம்பூர்த்தி தினமன்று பொது ஸந்தர்ப்பணையையும் சிறப்புற நடத்திவைத்தது புகழத்தக்கதாகும்.

வெங்கட்ராமன்.

## சிவகெங்கை

### உபந்யாஸம்

இவ்வூரில் 6-2-39உ முதல் 10-ம் தேதி முடிய 5நாட்களில் சநாதன தர்ம பிரசாரகர் மதுரை ப்ரும்மஸ்ரீ M. N. சுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்கள் சநாதன தர்மத்தைப் பற்றி உபந்யாஸங்கள் செய்தார்கள். ஷை யார் மதுரை சேதுபதி ஹைஸ்கூல் சமஸ்கிருத பண்டிதராக இருந்தவர். தினம் ராத்திரி 8-30மணி முதல் 10மணி வரை பிரசங்கம் செய்தார்கள். ஸநாதனிகள் பலபேர் கூடியிருந்து அன்புடன் கேட்க வந்தார்கள்

முதல் நாள் 6-2-39உ ஸநாதன தர்மத்தின் பெருமையையும் இது சாஸ்வதம் என்பதையும் இதை ஏந்தக் காரணத்தைக் கொண்டும் எக்காலத்திலும் மாற்ற முடியாதென்றும். இதற்காதாரம் சுருதி, ஸ்ம்ருதி இதிஹாஸங்கள் என்பதையும் 7-2-39 யன்று பக்தியைப் பற்றியும், பக்திதர்மத்திலும் கர்மாவிலும் பூர்ணசம்பந்த முள்ளது என்பதையும், 8-2-39யில் தர்மத்தினுடைய ஸ்வரூபமாயும் இதன் ஸ்வரூபம்.

9-2-39யில் ஆசாரத்தின் பெருமையையும் அதன் ஸ்வரூபத்தையும் இதை உபதேசிப்பதற்கு வேதசாஸ்த்ர பண்டிதர்களும் ஸதாசாரம் உடையவர்களே அதிகாரிகள் என்றும்

10-2-39யில் நடந்துவரும் துராசாரங்களின் கண்டனமும். சந்தியாவந்தனத்தின் பெருமையையும் ஸதாசாரமே லோகத்தினுடைய ஸ்திதிக்கு ஹேதுவென்றும் விவாஹம் ஆலயம் இவைகளின் அழகான முறையையும் உபந்யஸித்து எல்லோருக்கும் வேதசாஸ்திர புராணங்களில் நம்பிக்கையையும் துராசாரத்தின் நிவர்த்தியையும் யேற்படும்படி செய்து எல்லோருக்கும் சந்தோஷத்தை உண்டு பண்ணினர்கள். ஆஸ்திக ஜனங்களுடைய கூட்டம் சுமார் 500 ஜனங்கள் வரைவந்திருந்து கேட்டு ஆனந்தித்தனர் இந்த உபந்யாசங்களின் மத்தியில் ஆர்ய தர்ம பத்திரிகையை ஆஸ்திகர்கள் எல்லோரும் ஆதரித்தல் அவசியம் என்றும் தெரிவித்தனர்.

ஷை உபந்யாஸங்கள் சிவகெங்கை பெட்டை அக்ரஹாரத் தெருவில் வக்கீல் ஸ்ரீமான் K. ஹரிஹரய்யரவர்கள் கிருஹத்தில் நடைபெற்றது. ஒரு நிருபர்.

## ஸாமஸ்வர ஸந்தேகத்திற்கு விடை.

"ஸ்வ:" என்பது ஜாத்யமாயிருந்த போதிலும் இந்த இரண்டாவது ஸாமத்தில் மட்டும் ஸாமதந்த்ரத்தில் படிக்கப்பட்ட 'நவ' என்கிற ஸூத்ரத்தினால் ஏற்படுகிறபடி புஸ்தகத்தில் இருக்கிறபடியே "த்விதீய" ஸ்வரத்தில் கானம் செய்வது தான் ஸலக்ஷணமாகும்.

ராமனாத ச்ரௌதிகள்.

G. V. கணேச அய்யர், B. A., B. L.
அவர்கள் மொழிபெயர்த்தது.
'ஸௌந்தர்ய லஹரீ.'
காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் செலவு பிரத்யேகம்.
கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

99

ஆரியதர்மம்

4 ஸ 8

24

23-2-1939

25272

1097|97

101

215272

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 FEB 1939
MADRAS

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ்தகம் 24 | கும்பகோணம் கலி 5039 பகுதான்ய-ஹூ மாசி-மீ 12உ 1939-ஹூ பிப்ரவரி-மீ 23உ | வாரம் 8

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

## கால்வியா அரசரின் கருணை.

### குடிகளின் கடனை ஸர்க்காரே கொடுப்பார்.

கால்வியா என்ற ஸம்ஸ்தானத்தின் மன்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடன்பட்டுள்ள வியவஸாயிகளின் கடன்களை ஸர்க்காரே கொடுத்துத் தீர்த்து விடுவார்களென்றும், அந்தத் தொகையை நீண்ட காலத் தவணையில் சிறுகச்சிறுக குடிகளிடமிருந்து ஸர்க்கார் வசூலித்துக் கொள்ளுவார்களென்றும் கூறியிருக்கிறார்.

## ஓம் மண்டிலித் தலைவர்

### கைதியானார்.

காராச்சியில், குல ஸ்திரீகளைக் கெடுக்க ஏற்பட்டுள்ள ஓம்—மண்டலீ என்ற ஸ்தாபனத்தில் தலைவரான, லேக்ராஜு என்பவரும், மற்றொரு ஸ்திரீயும் கைதுசெய்யப்பட்டார்கள். இவர்கள் மீது ஸ்திரீகளைக் கெடுத்ததாக வழக்குத் தொடரப்படும். லேக்ராஜ் என்பவர் அநேக ஸ்திரீகளை தம் வசம் அடைத்து வைத்துக்கொண்டு விபசாரம் செய்ய முயற்சித்ததாக கேஸ் நடக்கிறது.

இந்த மண்டலியில் உத்ஸாஹத்துடன் சேர்ந்த சில ஸ்திரீகளே கோர்ட்டில் மேற்கண்ட குற்றங்களை ருஜுசெய்து ஸாக்ஷியம் கொடுத்தனர்.

## 55 வயதில் சீட்டு.

### சென்னை ஸர்க்கார் உத்திரவு.

சென்னை கவர்ன்மெண்டார் செய்துள்ள ஓர் உத்திரவில், இனிமேல் ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் 55 வயதிலேயே பென்ஷன் பெற்று விலகிவிடவேண்டுமென்றும், 60 வயது என்ற நியமம் ரத்துசெய்யப்பட்டு விட்டதாயும் கூறியிருக்கிறார்கள்.

## ஸ்ரீ. ஸவர்க்காரின் சாட்டை.

கல்கத்தாவில் நடந்த ஹிந்துஸபைக் கூட்டத்தில் தலைமைவகித்த ஸ்ரீமான் ஸவர்க்கார் காங்கிரஸ்காரர்களுக்குச் சாட்டை கொடுத்துப் பேசினார். காங்கிரஸ் கவர்ன்மெண்டுகள், ஹிந்துக்களின் நன்மைகளை புறக்கணித்துவிட்டு முஸ்லீம்களை திருப்திசெய்யும் வேலையில் இறங்கியிருப்பதாயும், ஏராளமான ஸர்க்கார் உத்யோகங்களை மஹம்மதியர்களுக்குக் கொடுத்துவருவதாயும், காங்கிரஸ் மந்திரிஸபைகள் எலெக்ஷன் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையென்றும், ஹிந்துக்களின் நன்மையை கவனிப்பவர்களுக்கே ஹிந்துக்கள் வோட்டுக்கொடுக்க வேணுமென்றும், மஹம்மதியர் இணங்கி வாராத நிலைமையில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை பிரயத்னமானது குருடன் கண்ணுக்கு மூக்குக்கண்ணாடி போடுவதுபோலிருக்கிறதென்றும் ஸ்ரீமான் ஸவர்க்கார் கூறினார்.

## கனம் சாஸ்திரியார் ரஜாவில் போகிறார்.

### ஸர்வகலாசாலை நிலைமை.

### பிராமணரல்லாத வைஸ்சான்ஸலர்.

அண்ணாமலை ஸர்வகலாசாலையில் நெருக்கடி தீரவில்லை. மாணவர்கள் மறியல் நிற்கவில்லை. கருப்புக்கொடி ஊர்வலம் நடந்தது. கனம் சாஸ்திரியார் 2 மாத ரஜாவில் விலகிப் போகிறார். டாக்டர் பி. வி. நாராயணஸ்வாமி நாயுடு என்பவர் தாத்காலிக வைஸ்சான்ஸலராக நியமிக்கப்பட்டிருக்கிறாராம்.

## காந்திஜிமீது ஜெர்மன் பத்திரிகை கோபம்.

ஜர்மனியிலுள்ள யூதர்கள் ஹிட்லர் உத்திரவுகளுக்கு விரோதமாக ஸத்யாக்ரஹம் செய்யும்படி காந்திஜி சொல்லியதை ஜர்மன் பத்திரிகையொன்று பலமாகக் கண்டிக்கிறது. காந்திஜி தமது தேச விஷயத்தைக் கவனித்துக்கொள்ளட்டுமென்றும், இந்தியாவில் அவருடைய காரியமொன்றும் இதுவரையில் பலிக்கவில்லையென்றும், 8 கோடி முஸ்லீம்களுக்கு காந்திஜி பயந்து யூதர்களுக்கு ஸத்யாக்ரஹ உபதேசம்செய்வதாயும், இல்லையேல் பாலஸ்தீனத்தில் யூதர் குடியேறுவதை காந்தி ஆக்ஷேபிக்க நியாயமில்லையென்றும் தம் தேசத்தில் தாம் வெற்றி பெற்றபிறகு, பிற தேசங்களுக்கு வரலாமென்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

## ஹைதராபாத் ஸத்யாக்ரஹம் நிறுத்த உத்திரவு.

லூடியானாவில் பண்டித நேருவின் தலைமையில் நடந்த அகில இந்திய ஸுதேச ஸம்ஸ்தான மஹாநாட்டில், ஹைத்ராபாத்தில் ஆர்ய ஸமாஜிகளும், ஹிந்து ஸபையாரும் சேர்ந்து நடத்தும் ஸத்யாக்ரஹத்தை நிறுத்தும்படி ஆலோசனை கூறத் தீர்மானிக்கப்பட்டதாம், மதஸம்பந்தமான ஸத்யாக்ரஹத்திற்கு இது ஏற்ற ஸமயமல்லவென்றும், இதனால் வகுப்பு மனஸ்தாபம் அதிகரிக்குமென்றும் காரணம் கூறப்படுகிறது.

## ராகவேந்திர ராவ் நியமனம்.

திவான் பஹதூர் ஸர் ராமஸ்வாமி முதலியார் வைஸ்ராய் நிர்வாஹ ஸபையில் வியாபார மெம்பராக நியமிக்கப்பட்டு விட்டதால், அவருடைய ஸ்தானத்திற்கு இந்தியாமந்திரி ஸபையில் மத்யமாகாணத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் ராகவேந்திர ராவ் நியமிக்கப் பட்டிருக்கிறார். இவர் பழைய காங்கிரஸ் வாதி. ஸ்வராஜ்யக் கக்ஷியிலிருந்து ஸர்க்கார் கக்ஷிக்குத் தாவியவர். மத்யமாகாண கவர்னராக ஆக்ட் செய்தவர்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

ஸந்த்யோ பாஸனை.

## 2. கடவுள் வழிபாடு.

வி:—ஆனாலும், என் உத்யோகத்திற்கு ஏற்பட்ட கடமைகளைத் தவறாமல் நான் செய்து வந்தேனேயானால், என்னுடைய மேல் அதிகாரியின் திருப்தியையாவது அதிருப்தியையாவது நான் கவனிப்பானேன்? கடமையைச் செலுத்துவதில் கிடைக்கக் கூடிய அனுகூலம் எனக்குப் போதும்; கடமையிலிருந்து நழுவாமலிருந்தால் நான் யாருக்குப் பயப்படவேண்டும்?

ம:—வாஸ்தவம்.

வி:—இந்த நிலையை நான் காப்பாற்றிவந்தால், மேல் அதிகாரியின் திருப்தியை நான் எதிர்பார்க்க வேண்டியதற்கு அவசியமில்லையே?

ம:—இல்லை.

வி:—அதேமாதிரி சாஸ்திரங்களில் எனக்கு விதிக்கப்பட்டிருக்கும் கடமைகளைத் தவறாமல் நான் செய்து வந்தேனேயானால், மேலான தேவன் உட்பட எந்த ஜீவனுடையவும் திருப்தியையாவது கோபத்தையாவது நான் கவனிக்கவேண்டியதில்லையே?

ம:—வாஸ்தவம்.

வி:—அப்படியானால், ஸூர்யதேவனுடைய உபாஸனையை விட்டு விடலாமா?

ம:—விட்டு விடலாம். ஆனால், ஒன்று மாத்திரம் கவனித்துக்கொள்ள வேண்டும். உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடமைகளில் அந்த உபாஸனையும் சேர்ந்திருந்தால் விட்டு விடுவது ஸாத்தியமில்லை.

வி:—அதென்ன?

ம:—யோக்யமாய் ஒழுங்காய் தன் கடமைகளை நடத்தி வருகிற உத்யோகஸ்தர் தனக்கு அடுத்த மேலான அதிகாரியின் திருப்தியையாவது, அதிருப்தியையாவது கவனிக்க வேண்டாமென்றது வாஸ்தவமே. ஆனால், தனக்கு ஏற்பட்ட கடமைகளை ஸரிவர நடத்தக் கடமைப்பட்டிருக்கிறோம், அவசியம் நடத்தியே தீரவேண்டும் என்று நினைப்பதிலிருந்தே, இந்த மேல் அதிகாரி இல்லாமல் போனாலும் அவருக்கும் தனக்கும் மேலாக இன்னொரு அதிகாரி இருக்கிறார் என்ற பாவனையும், அவருடைய திருப்தியை ஸம்பாதிக்கவேண்டும், அவருக்கு அதிருப்தி ஏற்படாமலிருக்கவேண்டும் என்ற எண்ணமும், உள்ளூர இருப்பதாகவே தெரிகிறது. அந்த மேலான அதிகாரியை நேரில் தெரிந்திருக்கவேண்டுமென்பதில்லை. ராஜாவாக இருக்கட்டும்; ஸர்க்கார் என்று இருக்கட்டும்; தனக்குமேல் சக்திவாய்ந்தவனாக ஒருவன் இருக்கிறான் என்ற எண்ணம் உத்யோக முறைகளை நடத்தும் போதெல்லாம் கூடவே இருக்கும். இவன் வேலையைக் கண்டு ஒப்பவும், தவறுதல்களைக் கண்டு கண்டிக்கவும், அந்த மேல் அதிகாரிக்கு வல்லமை உண்டு; அந்த மேல் அதிகாரியே இவனுக்கும் இவனுக்கடுத்த மேல் அதிகாரிக்கும் நியந்தாவாகிறான். உனக்கடுத்த மேல் அதிகாரி விஷயமாய் நீ இப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று அந்த அதிகாரி கட்டளையிட்டால், அதை மீறி நடக்க முடியாது. மீறினால், தனக்கடுத்த மேல் அதிகாரியின் அதிருப்தியுடன், அந்த அதிகாரியின் அதிருப்தியும் ஏற்படும்.

வி:—வாஸ்தவம்.

ம:—அதேமாதிரி, உங்களுக்கும் ஆதித்யனுக்கும் மேல்பட்டு இருவரையும் ஆளக் கூடிய சக்தி பெற்ற ஒருவன், ஆதித்யன் விஷயமாய் நீங்கள் இவ்விதம் நடக்க வேண்டுமென்று சொன்னால், அதை நீங்கள் உதாஸீனம் செய்ய முடியாது; அதன்படி நடந்தே தீரவேண்டும். இல்லையென்றால், ஆதித்யனுடைய அதிருப்தியுடன், அந்த மேலானவருடைய அதிருப்தியையும் ஸம்பாதிக்க நேரிடும்.

வி.—ஸரி. அப்படியானால், ஆதித்யனைப் பார்த்து நான் வந்தனம் செய்தாலும்கூட, என் கருத்து அந்த மேலானவனைத் திருப்தி செய்விப்பதில் அல்லவா இருக்கும்? ஆதித்யனை வழிபாடு செய்வதும் அந்த மேலானவனை வழிபாடு செய்வதேயாகாதா?

ம:—அதினால் என்ன?

வி:—ஆதித்யனைவிட மேலானவர் ஒருவர் உண்டென்று நினைத்துக்கொண்டு, வாஸ்தவத்தில் அவருடைய திருப்தியை நோக்கமாகக்கொண்டு, வெளிப்பார்வைக்கு ஆதித்யனுக்கு செய்யப்படும் வழிபாடுகள் எல்லாமே அந்த மேலானவரின் உபாஸனையே ஆகாதா?

ம:—அப்படித் தான்.

வி:—அப்படியிருக்க, உபாஸ்யன் ஆதித்யன் என்று சொன்னீர்களே?

ம:—ஆம். அந்த மேலானவனைப் பற்றித் தெரிந்துகொள்ளாத மனுஷ்யர்களுக்கு நான் சொன்னதே ஸரி. தெரிந்துகொள்ள சக்தியுள்ளவர்களுக்கு உபாஸ்யன் அந்த மேலானவனே ஆவான். அவருக்கே ஹிரண்யகர்ப்பர் என்று பெயர். அவரே ஆதித்யனிடத்திலும் மற்ற எல்லாத் தேவதைகளிடத்திலும் இருந்துகொண்டு அவர்களுக்கு ஸ்திதியைக் கொடுக்கிறார். அவர் ஸூர்ய மண்டலத்தில் மாத்திரமிருக்கிறார் என்றிராமல், ஸகல பதார்த்தங்களிலும் இருந்து வருகிறார். ஸகல பூதங்களுக்கும் ஸர்வாத்மாவாக விளங்குகிறவர் அவரே.

வி:—நமக்கு நம் ஸ்தூல சரீரத்தில் "நான்" என்ற பாவனையிருப்பது போல, இந்த ஸர்வ சரீரியான புருஷருக்கு ஸர்வ ஜகத்திலும் "நான் என்ற புத்தி இருக்குமல்லவா?

ம:—இருக்கும்.

வி:—அப்படியானால், அவருக்கும் எனக்கும் வித்யாஸம், "நான்" என்ற புத்தி இருக்கிறது இல்லை என்ற அம்சத்தில் இல்லை. எவ்வளவு தீவிரமாக, எவ்வளவு தூரம், எவ்வளவு பெரிதாக அந்தப் புத்தி இருக்கிறதென்பதில் மாத்திரம் தான் வித்யாஸமென்று தோன்றுகிறது. என் அஹம் பாவனை சிறியது. அவருடையது பெரிது. இவ்வளவு தானே?

ம:—ஆம்.

வி:—அஹம் பாவனையுள்ளவர் ஜீவன் என்றிருந்தால், இவரும் என்னைப்போல் ஜீவனேயாவார்?

ம:—அப்படித் தான் இவரை "ப்ரதமஜன்"—முதலில் தோன்றினவன்—என்றும் சொல்வார்கள்.

வி:—இந்த மேலான புருஷன் கூட என்னைப்போல ஜீவகோஷ்டியிலேயே சேர்ந்தவராயிருந்தால், ஆதித்யதேவரை உபாஸிப்பதற்கு நான் சொன்ன ஆக்ஷேபணைகள் இவருக்கும் தானே பொருந்தும்?

ம:—நீங்கள் உபாஸ்யனாக யார் தான் இருக்கவேண்டுமென்று நினைக்கிறீர்கள்?

வி:—ஜீவகோஷ்டியில் சேராத மேலான ஒரு சக்தியாக இருக்கவேண்டும்.

ம:—ஸந்த்யையில் உபாஸிக்கப்படுவதும் அப்படிப்பட்ட ஒரு சக்தி என்றே வைத்துக் கொள்ளுங்கள். அதையே ஈசுவரன் என்றும் அந்தர்யாமி என்றும் சொல்கிறோம்.

வி:—ஆளப்படுகிற அல்லது நியமனம் செய்யப்படுகிற ஜகத்திற்கு ஸம்பந்தப்படுத்தி அவரைப்பற்றி வியவஹரிக்கும் ஸமயத்தில் தான் ஈசுவரன், அந்தர்யாமி என்ற சப்தங்கள் உசிதமாகும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

ம:—வாஸ்தவம்.

வி:—ஜகத்திற்கு ஸம்பந்தப்படுத்தாமல், அவருடைய தத்வத்தைத் தெரிந்துகொள்ள முடியாது என்றிராது. ஜகத்தின் ஸம்பந்தம் அவருக்கு வெளிப்பட்டதேயாகும். இன்னொரு பதார்த்தத்திற்கு எவ்வித ஸம்பந்தமுமே யன்னியில் தனக்கு ஸ்வதந்திரமாக ஸ்வரூப நிலை ஒன்று இருந்தே தீரவேண்டும்.

ம:—மிகவும் வாஸ்தவம். அந்த ஸம்பந்தப்படாத ஸ்வரூபத்தையே ப்ரஹ்மம் என்கிறோம்.

வி:—அப்படியானால், ஜகத்தை அபேக்ஷித்து வியவஹரிக்கப்படும் ஈசுவர தத்வத்தைவிட, அந்த ப்ரஹ்மத்தையே உபாஸிப்பது தானே நியாயமாகும்?

ம.—நீங்கள் சொல்கிறபடியே தான். ஸந்த்யையில் உபாஸிக்கப்படுகிறது அந்த நிர்விசேஷப் ப்ரஹ்மமே

வி:—தாங்கள் சொல்வது எனக்கு அர்த்தமாகவில்லை. முதலில் ஸூர்ய மண்டலமே உபாஸ்யமென்று சொன்னீர்கள். அது ஜடமல்லவாவென்று நான் கேட்ட பிறகு, உபாஸ்யன் ஆதித்யதேவனேயாவான் என்றீர்கள். அவரும் என்னைப்போல பரிச்சின்ன ஜீவன் தானே என்று கேட்டதும், ஸர்வ சரீரியாயிருக்கிற ஹிரண்யகர்ப்பரே உபாஸ்யர் என்று சொன்னீர்கள். ஸர்வசரீரியாயிருந்தாலும் அஹம்பாவனையிருப்பதால் அவரும் ஒரு ஜீவன் தானே என்று கேட்ட பிறகு, ஜகந்நியந்தாவான ஈசுவரன் தான் வாஸ்தவமான உபாஸ்யர் என்று சொன்னீர்கள். அவரும் ப்ரஹ்மத்தின் ஸாபேக்ஷிகமான அம்சம் தானே என்று நான் சொன்னதும், உபாஸ்யம் அந்த ப்ரஹ்மம் தான் என்று சொல்கிறீர்கள்.

ம:—ஆமாம்.

வி:—இத்தனை வாக்கியங்களையும் எப்படி ஒருங்குப்படுத்துவதென்று தெரியவில்லை.

ம:—அதில் என்கே சிரமம்?


தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றும் பதிப்பு)

பிராம்மணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. ப்ரத்யேகம்.
கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல் திருச்சிரை

உ
ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:
ஸ்ரீ லலிதா
ஸஹஸ்ர நாமம்.
மூலம் நாகரத்திலும், தமிழிலும்,

ஸ்ரீமான் G. V. கணேசய்யர், B.A., B.L.
எழுதிய தமிழுரையுடனும், விசேஷ
குறிப்புகளுடனும் கூடியது.
ஸ்ரீ வித்யை, ஸ்ரீ பாஸ்கரராயருடைய சரித்திரம், ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷா ச்லோகங்கள் முதலியன அடங்கியவை.
டிம்மி ⅛ அளவில் சுமார் 1000 பக்கங்கள் கொண்டது. முழு காலிகோ பயின்டு.
ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர்,
ஸ்ரீ சக்ரம் படங்களுடன் கூடியது.
விலை ரூ 4.] [தபால் V. P. P. சிலவு தனி




103

# மூக பஞ்ச சதீ.

## மந்தஸ்மிதசதகம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

யா - எந்த, ஸ்மிதப்ராசுரீ - நிறைந்த புன்சிரிப்பானது, பீநஸ்தநமண்டலோபரி - பெருத்த ஸ்தந மண்டலத்தின்மேல், லஸத் கர்ப்பூரலேபாயதே - பிரகாசிக்கிற பச்சைக்கர்ப்பூர பூச்சாகத் தோன்றுகிறதோ, யா - எந்தப் புன்சிரிப்பானது, நீலேக்ஷண காந்தி ராத்ரி ததிஷு - கருத்த கண்களின் காந்தியாகிற இராக்காலக் கூட்டத்தில், ஜ்யோத்ஸ்நா ப்ரரோஹாயதே - புதிய நிலாவாகத் தோன்றுகிறதோ, யா - எந்தப் பொன்சிரிப்பானது, ஸௌந்தர்யதுநீ தரங்கததிஷு - அழகு என்கிற நதியின் அலைகளில், வ்யாலோல ஹம்ஸாயதே - ஸஞ்சரிக்கிற ஹம்ஸமாகத் தோன்றுகிறதோ, ஸா - அத்தகைய, காமாக்ஷ்யா: - காமாக்ஷியினுடைய, ஸ்மித ப்ராசுரீ - நிறைந்த புன்சிரிப்பானது, மே - என்னுடைய, ஹ்ருதயம் - மனதை, சிசிரீகரோது - குளிரச்செய்யட்டும்.

5. யேஷாம் கச்சதி பூர்வபக்ஷஸரணிம்
கௌமுத்வத: ச்வேதிமா
யேஷாம் ஸந்தத மாருருக்ஷதி துலாகக்ஷ்யாம்
சரத் சந்த்ரமா: |
யேஷாமிச்சதி கம்புரப்யஸுலபாம் அந்தேவ
ஸத் ப்ரக்ரியாப்
காமாக்ஷ்யா மமதாம் ஹரந்து மம தே ஹாஸ
த்விஷா மங்குரா: ||

கௌமுத்வத: - ஆம்பலுடையதான, ச்வேதிமா - வெண்மையானது, யேஷாம் - எவைகளுக்கு, பூர்வபக்ஷஸரணிம் - பூர்வபக்ஷமென்கிற நிலைமையை, கச்சதி - அடைகிறதோ, சரத்சந்திரமா: - சரத்காலத்திய சந்திரன், யேஷாம் - எவைகளின், துலாகக்ஷ்யாம் - துல்யமாயிருக்கும் நிலைமையை, ஸந்ததம் - எப்போதும், ஆருருக்ஷதி - அடையவிரும்புகிறதோ, கம்பூரபி - சங்குகூட, அஸுலபாம் - கிடைக்க அரிதான, யேஷாம் - எவைகளுக்கு, அந்தேவஸத் ப்ராக்ரியாம் - சிஷ்யனாயிருக்கும் நிலைமையை, இச்சதி - ஆசைப்படுகிறதோ, தே - அந்த, காமாக்ஷ்யா: - காமாக்ஷியினுடைய, ஹாஸத்விஷாம் அங்குரா: - புன்சிரிப்புக் காந்திகளின் முளைகள், மம - என்னுடைய, மமதாம் - அஹங்காரத்தை, ஹரந்து - போக்கடிக்கட்டும்.

6 ஆசாஸீமஸு ஸந்ததம் விததீ நைசாகரீம்
[வ்யாக்ரியாம்
காசாநா மபிமான பங்க கலனு கௌசல்ய
[மாபிப்ரதீ |
ஈசானேந விலோகிதா ஸகுதுகம் காமாக்ஷிதே
கல்மஷ
க்லேசா பாயகரீ சகாஸ்தி லஹரீ மந்தஸ்மித
[ஜ்யோதிஷாம் ||

காமாக்ஷி - ஏ காமாக்ஷி!, ஸந்ததம் - எப்போதும், ஆசாஸு - திக்குகளில், நைசாகரீம் வ்யாக்ரியாம் - சந்திரனுடையதான ரீதியை, விததீ - செய்கிறதாயும், காசாநாம் - நாணல்பூக்களுடைய அபிமான பங்க கலனு கௌசல்யம் - கொழுப்பை அடக்கும் ஸாமர்த்தியத்தை, ஆபிப்ரதீ - அடைந்திருப்பதாயும், ஈசானேன - பரமசிவனால், ஸகுதுகம் - ஆவலோடுகூட, விலோகிதா - பார்க்கப்பட்டதாயும், கல்மஷக்லேசாபாயகரீ - பாபங்களால் ஏற்படும் கஷ்டங்களை போக்கடிக்கிறதாயுமுள்ள, தே - உன்னுடைய, மந்தஸ்மித ஜ்யோதிஷாம் லஹரீ - புன்சிரிப்புக்கூட்டமானது, சகாஸ்தி - விளங்குகிறது.

குறிப்பு:— ஸ்ரீ அம்பாளின் புன்சிரிப்பின் ஒளியானது திக்குகளில் பரவும்போது, அங்கு சந்திரன் விளங்குகின்றானேவென்று எண்ணும்படியாயிருக்கிறது.

7. ஆருடஸ்ய ஸமுன்னதஸ்தநதடீ ஸாம்ராஜ்ய
ஸிம்ஹாஸனம்
கந்தர்ப்பஸ்ய விபோ: ஜகத்ரயஜய ப்ராகட்ய
முத்ராநிதே: |
யஸ்யா: சாமர சாதுரீம் கலயதே ரச்மிச்சடா
சஞ்சலா
ஸா மந்தஸ்மித மஞ்ஜரீ பவது ந: காமாய
காமாக்ஷி! தே ||

ஸமுன்னதஸ்தனதடீ ஸாம்ராஜ்ய ஸிம்ஹாஸனம் - உயர்ந்த ஸ்தன பாரங்களென்கிற ஸிம்ஹாஸனத்தில், ஆருடஸ்ய - ஏறியிருப்பவனும், ஜகத்ரய ஜய ப்ராகட்யமுத்ராநிதே: - மூன்று உலகங்களையும் ஜயிக்கிறவனும், விபோ: - ஸாமர்த்தியமுள்ளவனுமிருக்கிற, கந்தர்ப்பஸ்ய - மன்மதனுக்கு, சாமர சாதுரீம் - சாமரத்தின் நிலைமையை, யஸ்யா - எந்த புன்சிரிப்பினுடைய, சஞ்சலாரச்மிச்சடா - அசைகிற காந்தியானது, கலயதே - அடைகிறதோ, காமாக்ஷி - ஏ! காமாக்ஷி! ஸா - அப்படிப்பட்ட, தே - உனது மந்தஸ்மிதமஞ்ஜரீ - புன்சிரிப்பின் கூட்டமானது, ந: - நம்முடைய காமாய - இஷ்டத்தை நிறைவேற்றுவதாக, பவது - ஆகட்டும்.

குறிப்பு:—புன் சிரிப்பின் காந்தியானது அம்பாளின் ஸ்தன தடத்தில் பாவி அசையும்போது அவ்விடத்தில் வீற்றிருக்கும் மன்மதராஜனுக்குச் சாமரம் வீசுவது போலிருக்கிறது.

8. சம்போர்யா பரிரம்ப ஸம்ப்ரமவிதௌ நைர்மல்ய
[ஸீமா நிதி:
கீர்வாணீவ் தரங்கிணீ க்ருத ம்ருது ஸ்யந்தாம்
களிந்தாத்மஜாம் |
கல்மாஷீ குருதே களங்க ஸுஷமாம்
கண்டஸ்தலீ சும்பினீம்
காமாக்ஷ்யா: ஸ்மிதகந்தளீ பவது ஸா கல்யாண
[ஸந்தோஹினீ ||

நைர்மல்ய ஸீமாநிதி: - ரொம்பவும் வெளுத்த, யா - எந்தப் புன்சிரிப்பானது, க்ருத ம்ருதுஸ்யந்தாம் - மெதுவாக ஓடுகிற, களிந்தாத்மஜாம் - யமுனையை, நைர்மல்ய ஸீமாநிதி: கீர்வாணீ தரங்கிணீவ - தேவ கங்கையைப்போல, பரிரம்ப ஸம்ப்ரமவிதௌ - அவஸரமாக ஆலிங்கனம் செய்துகொண்ட ஸமயத்தில், சம்போ: - சிவனுடைய, கண்டஸ்தலீசும்பினீம் - கழுத்திலிருக்கிற, கலங்க ஸுஷமாம் - கருப்பு நிறத்தை, கல்மாஷீகுருதே - வெண்மையும் கருமையும் கலந்த நிறமுள்ளதாகச் செய்கிறதோ, ஸா - அப்படிப் பட்ட, காமாக்ஷ்யா: காமாக்ஷியினுடைய, ஸ்மித கந்தளீ - உயர்ந்த புன்சிரிப்பானது, கல்யாண ஸந்தோஹினீ - மேன்மையை உண்டு பண்ணுவதாக, பவது - ஆகட்டும்.

குறிப்பு:— பரமசிவனுடைய கருப்புக் காந்தியும், அம்பாளுடைய சிரிப்பின் வெளுப்புக் காந்தியும் சேர்ந்திருப்பது கங்கையும், யமுனையும் சேர்ந்தால்போலிருக்கிறது.

9. ஜேதும் ஹாரலதாமிவ ஸ்தனதடீம் ஸஞ்ஜக்
முஷீ ஸந்ததம்
கந்தும் நிர்மலதாமிவ த்விகுணிதாம் மக்னு
க்ருபாஸ்ரோதஸி |
லப்தும் விஸ்மநீயதாமிவ ஹரம் ராகாகுலம்
குர்வதீ
மஞ்ஜுஸ்தே ஸ்மிதமஞ்ஜரீ பவ பயம் மத்னாது
காமாக்ஷி! மே ||

காமாக்ஷி - ஏ காமாக்ஷியே! ஹாரலதாம் - முத்து மாலையை, ஜேதுமிவ - ஜயிப்பதற்குப் போல், ஸந்ததம் - எப்பேதும், ஸ்தன தடீம் - ஸ்தன பிரதேசத்தை, ஸஞ்ஜக்முஷீ - அடைவதாயும், த்விகுணிதாம் - இரண்டு மடங்களான, நிர்மலதாம் - வெண்மையை கந்தும் இவ - அடைவதற்குப்போல், க்ருபாஸ்ரோதஸி - கருணை ப்ரவாஹத்தில், மக்னு - முழுகியதாயும், விஸ்மயநீயதாம் - ஆச்சர்யகாமான தன்மையை, லப்தும் இவ - அடைவதற்குப்போல் ஹரம் - பரமசிவனை, ராகாகுலம் - மோஹித்தவனாக, குர்வதீ - செய்கிறதாயும், மஞ்ஜு - அழகாயுமிருக்கிற, தே - உனது, ஸ்மித மஞ்ஜரீ - புன்சிரிப்பானது, மே - எனது, பவபயம் - ஸம்ஸார பீதியை, மத்னாது - போக்கடிக்கட்டும்.

(தொடரும்)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்யஹு மாசி-மீ 12உ

## 'ஹிந்துஸ்தானம் ஹிந்துக்களுடையதே".

சிறிதுகாலமாக நம் தேசத்தில் ஹிந்துக்களல்லாதவர்களுடைய, முக்யமாக மஹம்மதியர்களுடைய கிளர்ச்சியும், பயமுறுத்தலும் அதிகரித்துவருகிறது. இத்தேசத்தின் சாச்வத பிரஜைகளாயும், மெஜாரிடிகளாயுமுள்ள ஹிந்துக்களைப்போல் தங்களுக்கும் ஸமமாக உரிமைகள் ஏற்படவேண்டுமென்று மஹம்மதியர்கள் பலத்த கிளர்ச்சி நடத்தி சிறிது வெற்றியும் பெற்று வருகிறார்கள். மஹம்மதியர்களுடைய மிதமிஞ்சின கோரிக்கைகளுக்கு காங்கிரஸ்காரர்களாகிய ராஜீய வாதிகளின் ஆதரவு சிறிது கிடைத்திருப்பதால் மஹம்மதியர்கள் தங்கள் கோரிக்கைகளை பெருப்படுத்திக்கொண்டுவிட்டார்கள். இதனால் இந்திய ராஜீய நிலைமையில் சிடுக்குகளும் அமைதியின்மையும் ஏற்பட்டு வருவதால், எப்படியாவது ஹிந்துக்களின் உரிமையைக் குறைத்துக்கொண்டாவது மஹம்மதியர்களுடைய திருப்தியை பூர்த்திசெய்து வைக்க நினைக்கப்படுகிறது.

இந்த நிலைமையில் ஹிந்துக்களின் நியாயமான கக்ஷிகளையும், பாத்தியங்களையும் வற்புறுத்திச் சொல்ல ஹிந்து ஸபைத்தலைவர்கள் முற்பட வேண்டியதாயிற்று. எல்லா நாகரீக தேசத்திலும், அந்தந்த தேசப் பிரஜைகளுடையவும் குடியேறியவர்களுடையவும் பாத்யங்களைப் பற்றி என்ன கொள்கை யநுஷ்டிக்கப் படுகிறதோ, எவ்விதச் சட்டதிட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றனவோ, அவைகளை யநுஸரித்து நம் தேசத்திலும், இதர பிரஜைகளுக்கு ஸௌகர்யம் செய்துகொடுப்பதை ஹிந்து ஸபைத் தலைவர் மறுக்கவில்லை. ஆயினும் ஹிந்து முஸ்லீம் பிரச்னையில் பொது நியாயம் கூட மறக்கப்பட்டு அளவுக்கு மீறிய பாத்யத்தை அன்னியர்கள் விரும்புவது நியாயமல்லவென்பதைத் தக்க நியாயத்துடன் ஹிந்து ஸபைத்தலைவர்கள் பிரசாரம் மூலம் வெளியிட்டு வருகிறார்கள்.

ஹிந்துஸ்தானமெனப் பெயர் வஹிக்கும் நம் தேசமானது ஹிந்துக்களுடையதே என்பதை ஸ்ரீமான் ஸவர்க்கார் எடுத்துக்காட்டுகிறார். எவ்வளவு அன்னியர்கள் இங்கு வந்து கூடினாலும் இத்தேசமானது ஸ்ருஷ்டிகாலம் முதல் ஹிந்துக்களுடையதென்பதும், ஹிந்துக்களே இத்தேசத்தின் முக்ய பிரஜைகளென்பதையும் ஸ்ரீ ஸவர்க்கார் உறுதியாய் கூறுகிறார். இன்று இங்கு குடியேறியுள்ளவர்கள் தம் தம் தேசத்திற்குத் திரும்பிப் போய்விட்டபோதிலும் இங்கு சாச்வதமாகத் தங்கியிருக்கவேண்டியவர்கள் ஹிந்துக்களே யல்லவா? மேலும் பெருத்த மெஜாரிடி பிரஜைகளாக இருப்பவர்கள் ஹிந்துக்களே என்பதையும் யோஜித்தால் மைனாரிடிகளான குடியேறிய பிரஜைகள் ஸ்திரமற்றவர்களென்பது விளங்குகிறதென ஸ்ரீமான் ஸவர்க்கார் நிரூபணம் செய்கிறார். மற்ற நாடுகளில், தேசப் பிரஜைகளுக்கும் குடியேறியவர்களுக்கும் ஏற்பட்டுள்ள வித்யாஸங்கள் எப்படியிருக்கின்றனவென்பதை பராமர்சிப்பதும் அவச்யமாகிறது. எந்த தேசத்திலும் மைனாரிடி ஸமூஹத்தின் ரக்ஷணையானது முக்ய தர்மமாகக் கருதப்பட்டே வருகிறது. அவர்களுக்கு நீதி வழங்கவும் அந்த தேசங்கள் கட்டுப்பட்டிருக்கின்றன. ஆயினும் எந்த தேசத்திலும் மெஜாரிடிகளாயும், தேச பிரஜைகளாயுமுள்ளவர்களின் உரிமைகளும், மற்ற ஸௌகரியங்களும் மைனாரிடியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதாகத் தெரியவில்லை. இங்கிலாந்தில் பற்பல தேசத்தியவர்கள் குடியேறி யிருக்கிறார்கள். ஆயினும் அத் தேசமானது ஆங்கிலேயர்களுடையதே அல்லது மற்றவர்களுக்கு எவ்வித பாத்யமும் இல்லை.

துருக்கியில் குடியேறியிருக்கும் வெள்ளைக்காரர்களுக்கு துருக்கிநாடு ஸொந்தமாகிவிடாது. துருக்கியர்களுக்கு, தேசப்பிரஜைகளென்ற தோரணையில் அமைந்துள்ள பாத்யமும், மற்றதும் ஆங்கிலேயர் போன்ற அன்னியருக்கு கொடுக்கப்படுமா?

இந்த நியாயத்தை அநுஸரித்துப் பார்த்தால் இந்தியாவில் சிறுபான்மை வகுப்பினராகிய மஹம்மதியர்கள் நம் தேசத்தில் ஸொந்த பிரஜைகளாகிய ஹிந்துக்களுக்கு ஸமமாகவோ, மேலாகவோகூட உரிமையை விரும்புவதும், அதற்காக பயமுறுத்துவதும் கண்டிக்கத்தக்கதென்பதை ஸ்ரீஸவர்க்கார் போன்றவர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள். மைனாரியாகிய மஹம்மதிய ஸமூஹமானது ஸாதாரணமான நீதிகளையும், தனது ஸமூஹ ஸம்ரக்ஷணைத்திற்கான ஏற்பாட்டையும் பெற மட்டும் தகுதியுள்ளதேயல்லது மெஜாரிடி வகுப்புக்கு ஸமமாக உரிமை கொண்டாடுவதும், அதற்காக பயமுறுத்துவதும் தகாதென்று ஸ்ரீ ஸவர்க்கார் போன்றவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள்.

பாலஸ்தீனத்தில் அரேபியர்கள் யூதர்களை குடியேறவிடவே மறுக்கிறார்கள். அரபிய நாடு அரபியருடையதே என்றும், இதரர்கள் குடியேறினால் தேச ஜனங்களுக்கு நாளடைவில் சிரமம் சேருமென்றும் அரேபியர்கள் நினைக்கிறார்கள். ஜர்மனியில் ஹிட்லர் அந்த தேசம் தங்கள் ஜாதியாருடையதென்றும், மற்றவர்களுக்கு நியாயமான பாதுகாப்பு அளிக்கப்படுவதை மட்டுமே எதிர்பார்க்க உரிமையுண்டென்றும் சொல்லுகிறார். ஏறக்குறைய எல்லா தேசங்களிலும் இந்த நியாயமே இருந்து வருகிறது.

இந்தியாவில் மட்டும் மெஜாரிடியாரும், தேச ஜனங்களாயுமுள்ள ஹிந்துக்களுக்கு ஸமமாகவோ அதிகப்படியாகவோகூட மஹம்மதியர்கள் உரிமை கொண்டாடவோ, அதைப் பெறவோ நியாயமிருக்கிறதாவென்று ஸ்ரீ ஸவர்க்கார் கேட்கிறார்.

ஸ்ரீ ஸவர்க்கார் டாக்டர் மூஞ்ஜே போன்ற ஹிந்துத்தலைவர்களின் மேற்கண்ட வாதத்தின் தத்வத்தை ஹிந்து ஜனங்கள் உணர்ச்சியுடன் கவனிப்பார்களா?

## பக்ஷபாதமா? பயங்கொள்ளித்தனமா?

ஹரிபுராவில் நடைபெற்ற ஸம்ஸ்தான பிரஜைகளின் மஹாநாட்டில், ஹைதராபாத் ஸத்யாக்ரஹத்தைப்பற்றிச் செய்துள்ள தீர்மானம் பக்ஷபாதமானதாயும், பயங்கொள்ளித்தனம் நிறைந்ததாயுமிருக்கிறது. ராஜ்கோட், ஜயப்பூர், திருவாங்கூர் முதலிய விடங்களில் நடக்கும் ஸத்யாக்ரஹங்களை ஆதரித்தும், தேசத்தாரனைவரும் அதை ஆமோதிக்கவேண்டுமென்றும் அந்த ஸபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க ஹைதராபாத் ஸத்யாக்ரஹத்தை மட்டும் நிறுத்திவிடவேணுமென்றும் அதற்கு ஆதரவளிக்க முடியாதென்றும் மேற்படி ஸபை தீர்மானித்தது மிக்க விநோதமாயிருக்கிறது.

இதற்குக் கூறியுள்ள காரணமும் ஆச்சர்யகரமாயிருக்கிறது.

இச்சமயம் மதசம்பந்தமான போராட்டங்களுக்கு காலமல்லவென்றும், அதனால் வகுப்பு மனஸ்தாபனங்கள் வளர ஹேதுவாகுமென்றும் அத் தீர்மானத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது.

ஹைதராபாத்தில் ஹிந்துக்களின் மத உரிமைகளுக்கும், தொழுகை ஸ்வதந்திரத்திற்கும் பெருத்த இடையூறு ஏற்பட்டிருக்கிறது. அதனால் அங்குள்ள தார்மிக ஹிந்து பிரஜைகள் அடைந்துள்ள கஷ்டம் கொஞ்சமல்ல மதஸம்பந்தமான ஊர்வலங்களும் தடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலைமையில் ஸாதாரண பிரஜா உரிமைகளைக் கூடத் தடைப்படுத்தியிருப்பதை எதிர்த்து ஸத்யாக்ரஹம் நடத்துவது எப்படி அநுசிதமாகும்? ஹைதராபாத்தில் மஹம்மதியர்களின் த்வேஷம் வளருமென்ற பயங்கொள்ளித்தனத்தைத் தவிர இதற்கு வேறு நியாயமான காரணம் சொல்லமுடியுமா?

மத உரிமைக்கும், ராஜீய உரிமைக்கும் வித்யாஸம் கற்பிப்பதும் அஸாத்யம், அநியாயம். பிரஜைகளுடைய ராஜீய உரிமை எவ்வளவு புனிதமானதென்றும், உயர்ந்ததென்றும், நினைக்கப்படுகிறதோ அதைவிட ஆயிரம் பங்கு மத உரிமை மேலானது. ராஜீய உரிமைக்காக ஸத்யாக்ரஹம் நடத்தலாமாயின் மத உரிமைக்காகவும் ஏன் நடத்தக்கூடாது? காங்கிரஸ்காரர்கள் பிரஜா உரிமையைக் காக்கும் வேஷம் இதுதானா? காந்திஜியோ ஹைதராபாத்தில் ராஜீய ஸத்யாக்ரஹம் கூட தற்போது நடத்தக்கூடாதென்கிறார். முஸ்லீம்களை எதிர்ப்பதில் பயங்கொள்ளித்தனமே இதற்குக்காரணம்.

உண்மையில், ராஜீய உரிமையைவிட மத உரிமையே ஸ்திரமானது, ராஜ்யம் அடிக்கடி மாறக்கூடியது. மதமோ பரலோக ஸம்பந்தமுள்ள ஸ்திரமான உரிமை. மஹம்மதியர்களுக்கு ராஜீய உரிமையைவிட மத உரிமையே பெரிதாயிருப்பதும் கவனிக்கத்தக்கதல்லவா?

## சென்னைமாகாண வரவு செலவு திட்டம்.

### புதிய வரிகள்.

### சம்பள வெட்டு.

1939—40 வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தை கனம் பிரதமமந்திரி 21உ யன்று சட்டஸபையில் அஜர்படுத்தி ஓர் விரிவான பிரஸங்கமும் செய்தார். இவ்வருஷத்தில் எதிர்பாராத நிலைமையில் சில இனங்களில் வருமானம் லக்ஷக்கணக்கில் குறைந்துவிட்டது. கோர்ட்கட்டணம், ரிஜிஸ்ட்ரேஷன்



போன்ற இனங்களில் வருமானம் குறைந்துவிட்டது. மதுவிலக்கு சேலத்தைத்தவிர, சித்தூர், கடப்பை ஜில்லாக்களில் ஏற்பட்டதாலும் பெருத்த வருமான நஷ்டமாகிவிட்டது.

இதைத்தவிர, தெலுங்கு ஜில்லா சிலவற்றிலும், தமிழ் ஜில்லாக்கள் சிலவற்றிலும் பஞ்சம், அதிகமழை புயல் சேதம் முதலியவைகளால் நஷ்டம்.

இவ்வாறு 42 லக்ஷத்திற்குமேல் வருமானக்குறைவும், அதிகச் செலவும் ஏற்படவிருப்பதைப் புதிய சில வரிகள்மூலம் ஸரிபடுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. சாராயவரி, புகையிலைவரி, பெட்ரோல் விற்பனைவரி, குறிப்பிட்ட சில வியாபாரவரி, உத்யோகஸ்தர் சம்பள வெட்டு முதலியவைகளால் வருவாயை அதிகப்படுத்த உத்தேசிக்கிறார்கள். இவ்வளவு செய்தும் 17 லக்ஷம் துண்டு விழுமென்று தெரிகிறது. 150 லக்ஷம் ரூபாய் கடன் வாங்க நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு ஜில்லாவில் பூர்ண மதுவிலக்கு நடத்த திட்டம் ஏற்பாடுசெய்யப்படும். ஸர்க்கார் உத்யோகஸ்தர்களின் சம்பளத்தை குறைக்கும்யோஜனை இருப்பதாக கனம் மந்திரி கூறினார். 50ரூபாய் வாங்குகிறவர்களுக்கு 5 ரூபாயும், 100க்கு 10-ம் இவ்வாறாக உத்யோகஸ்தர்களின் சம்பளம்குறைக்கப்படுமென்று தெரிகிறது. இது அகிலஇந்திய ஸர்விஸிலிருப்பவர்கள்விஷயத்தில்மட்டும், ஏற்படுமென்றும், மாகாண ஸர்விஸிலிருப்பவர்களை பாதிக்காதென்றும் தெரிகிறது, பெரிய உத்யோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைக்க இந்தியா மந்திரிக்குத்தான் அதிகாரமிருப்பதால் அவருக்கும் அதைப்பற்றி எழுதியிருப்பதாக கனம் மந்திரி கூறினார். நிலவரி வஜா விஷயம் சென்ற வருஷம்போலவே செய்யப்படுமென்றும், அதிக வஜா விஷயம் யோஜனையிலிருப்பதாயும் அவர் சொன்னார்.

## பூணூல்தரிக்கவும், ஸந்தியா வந்தனம் செய்யவும் தடை.

### ஹைதராபாத் தர்பார்.

### கைதிகளின் உபவாஸம்.

ஹைதராபாத்தில் நடந்துவரும் ஸத்யாக்ரஹ நிமித்தமாக தண்டிக்கப்பட்டவர்களில் பலர் சில தினங்களாக உபவாஸ ஹடம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

சிறையில் பூணூல் தரிக்கவும், ஸந்தியா வந்தனம் செய்யவும் ஸர்க்கார் அனுமதி கொடுக்காமல் தடை செய்திருக்கிறார்களாம். இந்தத்தடை காரணமாகவே கைதிகள் தங்கள் உரிமையைக் காத்துக்கொள்ள பட்டினி ஹடம் போட்டுவருகிறதாகத் தெரிகிறது.

## விவாஹரத்து மசோதா விவாதம் ஒத்திவைக்கப்பட்டது.

### நல்ல ஆதரவில்லை.

இந்தியா சட்டஸபையில் டாக்டர் தேஷ்முக் ஹிந்து ஸ்திரீகளின் விவாஹரத்து விஷயமாகக் கொண்டுவந்திருக்கும் மசோதாவின் விவாதம் இரண்டு தினங்களுக்கு முன் ஸபையில் ஆரம்பிக்கப்பட்டது. ஸநாதன தர்ம பிரதிநிதியான ஸ்ரீமான் பைஜநாத் பஜோரியா இந்த மசோதாவை எதிர்த்துப் பேசுகையில், இது இன்னும் தேச மஹா ஜனங்களின் கவனத்தைப் பெறவில்லையென்றும், வெகு பேர்களிடமிருந்து அபிப்பிராயம் வரவில்லையென்றும் ஆகலால் விவாதத்தை ஒத்திவைக்கவேண்டும் கோரினார்.

கனம் என். என். ஸர்க்கார் இதை ஆதரித்துப் பேசுகையில் இரண்டு மாகாண கவர்ன்மெண்டுகளின் அபிப்பிராயம் கிடைத்திருப்பதாயும் அது இந்த மசோதாவுக்கு ஸாதகமாக இல்லையென்றும் ஆதலால் இன்னும் சில காலத்திற்கு இந்த விவாதத்தை ஒத்திவைப்பதே நலமென்றும் கூறினார். டாக்டர் தேஷ்முகரும் இந்த யோஜனைக்கு ஸம்மதித்ததால் விவாதம் ஒத்திவைக்கப்பட்டது.

## ஸ்திரீ மந்திரியும் ஸத்யாக்ரஹம் செய்வார்.

ஐக்ய மாகாண மந்திரியான ஸ்ரீமதி விஜயலக்ஷ்மீபண்டிட் ராஜ்கோட் ஸத்யாக்ரஹத்தில் சேர்ந்து சட்டமறுப்புச் செய்யத் தயாராக இருக்கிறார். இவ்விஷயமாக காந்திஜியின் ஆலோசனையையும் அவர் கேட்டார். ஸமயம் நேரும்போது தாமும், தமது புருஷனும் அதில் சேரப்போவதாக அவர் வெளியிட்டிருக்கிறார்.

## லிம்பிடி ஸம்ஸ்தானத்தில் கலவரம்.

### ஸனாதநிகள் மீது பழி.

லிம்பிடி ஸம்ஸ்தானத்திய பிரஜாமண்டலத்தின் கூட்டத்தில் தலைமைவகிக்க ஸ்ரீமான் தர்பார் கோபாலதேசாய் லிம்பிடிக்கு வந்தார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸ்டேஷனில் கூடி இவரைத் தடுத்தனர். இவர் இறங்கியிருந்த வீடு ஜனக்கூட்டத்தால் முற்றுகைபோடப்பட்டுவிட்டதால் ஸ்ரீமான். கோபால் தேசாய் வெளிவரமுடியாமல் போய்விட்டது தடியும், ஆயுதமும் கொண்டு பலமான கலவரம் நடந்தது.

இக் கலஹம் ஸநாதநிகளால் செய்யப்பட்டதென்று பத்திரிகைகள் பழிசுமத்தி எழுதுகின்றன. உண்மை விவரம் வெளிவருவதை எதிர்பார்போம்.

## காந்திஜிக்கு, ஸர். ஸி. பி. பதில்.

### பொய்களை நம்புவதா.?

திருவாங்கூர் ராஜீயக் கிளர்ச்சி நிலைமையைப் பற்றி காந்திஜீ ஒரு கட்டுரை வரைந்து அத்தேச நிர்வாஹத்தையும், முக்யமாக திவான் செய்கையையும் கண்டித்து எழுதியிருந்தார். ராஜீயக் கைதிகள் துன்பப்படுத்தப் படுவதாயும் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு திவான் ஸர். ஸி. பி. தக்கபதில் கொடுத்திருக்கிறார். காந்திஜீ உண்மையற்ற விவரங்களை நம்பிக்கொண்டு பழி கூறுவது எப்போதும் வழக்கமென்றும், யாரோ எழுதிய பொய் தகவல்களைக் கொண்டு குறை கூறுவது அழகாயில்லையென்றும் எடுத்துக் காட்டி ஒவ்வொன்றையும் ஸர். ஸி. பி மறுத்திருக்கிறார்.

முக்யமாக, திருவாங்கூரில் யதேச்சாதிகாரம் தாண்டவமாடுகிறதாக காந்திஜீ சொல்லியதற்கு ஸர். ஸி. பி. குத்திக்காட்டும் தோரணையில் பதில் சொல்லியிருக்கிறார். அதாவது:

திருவாங்கூரில் எவ்வளவு யதேச்சாதிகாரமிருப்பதாக காந்திஜி நினைக்கிறாரோ, அதைவிட அதிகமாகவே காந்திஜியின் தலைமையிலுள்ள காங்கிரஸ் நிர்வாஹத்தில் யதேச்சாதிகாரம் தாண்டவமாடுவதாக தேசத்தில் ருஜுவாகியிருப்பதை ஸர். ஸி. பி. சுட்டிக்காட்டியிருக்கிறார்.

சுபாஷ்போஸ் எலெக்ஷனின்போது ஏற்பட்ட நிலைமையை ஸர். ஸி. பி. சொல்லிக்காட்டினார்போலும்!

## வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா.)

வருந்துகிறார்! இலங்கை சட்டசபையில் பெண்களுக்கு குமாஸ்தா வேலைகொடுக்க ஓர் சட்டம்வர அது வேண்டுமென்பதற்கும் கூடாதென்பதற்கும் ஸமமாக ஓட்டுகிடைக்க தலைவர் மனச்சாக்ஷிக்கு விரோதமாக கூடாதென்பதற்கு ஓட்டு கொடுத்தாராம். அது சம்ப்ரதாயமாம்! பாதி பேர் தர்மாபிமானி அல்லவா?

புதுவை கொடுமை! கவர்னர் கக்ஷிகளைக் கூட்டி சமாதானம் செய்யும்போதே அநாமதேயக் கடிதம் எழுதி விட்டு ஒருவரைக் கொன்று ஓர் கால்வாயில் புதைத்தனர். ஜநநாயக பலனிது!

நம்மேதிரில் அவர் பாடுவரா? மைலாப்பூரில் ஓர் சபையில் சிலர் ஓர் மஹம்மதியர் தலைமையில் தம்பதி தம்பதிகளாக பாடிக்காட்டினர். விரைவில் ஆட்டவும் ஆடுவர்! நம்மெதிரில் மிலேச்சர் இப்படி செய்வாரா?

ஏதோ மர்மமுளது! அண்ணாமலை சர்வகலாசாலையில் வெகுநாளாக புகைந்திருந்த தீ கிளம்பி அவிந்து மறுபடியும் பலமாக கிளம்புகிறது! எங்கோ ஓரிடத்தில் அம்பலத்திற்கு வாராத சில குறைவிருக்கின்றது! அதைத் தேடி அகற்றினாலன்றி சண்டை ஓயாது!

தர்மத்திற்கே பெருமை! ஆழ்ந்த வர்ணாச்ரமியான ஸ்ரீமான் ஜஸ்டிஸ் வரதாசார்ய ஸ்வாமி ஸமஷ்டி கோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டது தர்மத்திற்கும் தார்மிகருக்கும் பெருமை!!

அம்பாலாவிடம் கற்க! ஷி தர்பார் விவசாயிகள் கடனைத் தானே அளித்து சிறிது சிறிதாக அவர்களிடமிருந்து தொகையைப் பெருகிறது! சென்னை அந்த பாடத்தைகற்கலாகாதா?

காசிராஜன் வழி!! தற்கால அரசியர் கிளர்ச்சி அங்கும் கிளம்ப கிராமபஞ்சாயத்தைப் பலப்படுத்தி அதன் மூலமவர் சுய ஆக்ஷி அளிக்கிறார். இதன் மூலம் வீண் செலவு குறையும்!

6 ஆண்டு அகண்ட பஜனை!! மத்ய மாகாணத்தில் ஓர் யோகி தீண்டாமை விலக்கு ஆலயப்ரவேசம் முதலிய அதர்மசட்டங்களை ஒழிக்க 6 வருஷம் அகண்ட பஜனையும் 6 வருஷம் பகலில் பஜனையும் செய்ய ஆரம்பித்திருக்கிறார். 12 வருஷம் குஹையிலிருந்தவர் இவர்.

சிவராத்திரி மஹிமை! ஸ்ரீசங்கரமடத்திலும் ஸ்ரீ மல்லிகேச்வரர் ஆலயத்திலும் ஸ்ரீவத்ஸ. ஸோமதேவ சர்மாவால் ஆயிரக்கணக்கான பக்தர்களிடையே உபன்யஸிக்கப்பட்டது.

ஓரிய உபன்யாஸம்! பிரும்மஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் ஸ்ரீமஹாபாரதத்தில் கவசகுண்டலதான கட்டத்தில் பிரும்மஸ்ரீ சர்மாவுக்கு ஓர் ரத்நமோதிரத்தை யளித்து பாரதம் போன்ற உற்ற க்ரந்தங்களையும் கேட்பதும் அதன்படி அநுஷ்டிப்பதும் மிக சிறந்த வழி என கூறி சர்மாவை கொண்டாடினர்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Nellore.

# ப்ரஸ்தானபேதம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

ननु नास्तिकानामपि प्रस्थानान्तराणिसन्ति, तान्येतेष्वनन्तर्भावित्वपृथग्गणयितुमुचितानि । तथाहि-- शून्यवादेनैकं प्रस्थानं माध्यमिकानाम् । क्षणिकवि ज्ञानमात्रेणान्ययोगाचाराणाम् । ज्ञानाकारानुमेय-- क्षणिक बाह्यार्थवादेनापरं सौत्रान्तिकानाम् । प्रत्यक्ष सलक्षणक्षणिकबाह्यार्थवादेनापरं वैभाषिकाणाम् । एवं सौगतानां प्रस्थानचतुष्टयम् । तथा देहात्मवादे नैकं प्रस्थानं चार्वाकाणाम् । एवं देहातिरिक्तदेहपरिमाणात्मवादेन द्वितीयं प्रस्थानं दिगम्बराणाम् । एवं मिलित्वा नास्तिकानां षट् प्रस्थानानि । तानि कस्मान्नोच्यन्ते ॥

ஓர் ஆக்ஷேபம். நாஸ்திகர்களுடைய மதத்தை போதிக்கக்கூடிய சாஸ்திரங்கள் 6 இருக்கின்றன. அவைகள் மேற்கூறப்பட்ட 18 சாஸ்திரங்களிலும் சேராததால் தனியாக கணக்கிடுவதுதான் நியாயம். அவைகளுக்குள் பௌத்தமதத்தை போதிக்கக்கூடிய சாஸ்திரங்கள் நான்கு.

1. நமக்கு ஏற்படக்கூடிய ஞானமும், அதன் விஷயமும், உண்மையல்ல; எல்லாம் சூன்யம்தான் என்று "மாத்யமிகர்கள்" என்று கூறப்படும் சில பௌத்தர்கள் சொல்லுகிறார்கள். இவர்களை "சூன்யவாதிகள் என்று கூறப்படும் சில பௌத்தர்கள் சொல்லுகிறார்கள். இவர்களை "சூன்யவாதிகள்" என்றும் சொல்வதுண்டு.

2 விஷயம் இல்லாது போனாலும் ஞானம் என்பது ஒன்றுண்டு. அதுவும் ஓர் க்ஷண காலம் இருக்கக் கூடியது" என்று யோகாசாரர்கள் என்ற சில பௌத்தர்கள் சொல்லுகிறார்கள்.

3 ஞானத்தால் அநுமானம் பண்ணக் கூடிய விஷயம் ஒன்றிருக்கிறதென்றும் அதுவும் க்ஷணிகமென்றும் "ஸௌத்ராந்திகர்கள்" என்ற சில பௌத்தர்களுடைய அபிப்ராயம்.

4 "ஞானத்தைப் போல் க்ஷணிகமான விஷயத்திற்கு ப்ரத்யக்ஷமுண்டு" என்று "வைபாஷிகர்கள்" என்ற சில பௌத்தர்களுடைய அபிப்ராயம். இது தான் மேற்கூறப்பட்ட நான்கு பௌத்த சாஸ்திரங்களுக்குமுள் முக்கியமான வித்தியாசம்.

5. அப்படியே சரீரத்தையே ஆத்மாவென்று கூறக்கூடிய "சார்வாகர்களுடைய சாஸ்திரமொன்று.

6. சரீரத்தைக் காட்டிலும் வேறாக இருந்த போதிலும் சரீரபரிமாணத்தை உடையது ஆத்மா என்று கூறுகிற திகம்பார்களுடைய சாஸ்திரமொன்று.

இந்த ஆறு சாஸ்திரங்களையும் "நாஸ்திக ஷட்தர்சனம்" என்றும் சொல்வதுண்டு. ஆகவே எல்லா சாஸ்திரங்களையும் சுருக்கமாக கூறுகிற இக்கிரந்தத்தில் ஏன் நாஸ்திகர்களுடைய தர்சனங்களைப் பற்றி ஒன்றுமே சொல்லப்படவில்லை.

सत्यम् । वेदबाह्यत्वात्तेषां म्लेच्छादि प्रस्थानवत्परम्परयापि पुरुषार्थानुपयोगित्वादुपेक्षणीयत्वमेव । इह च साक्षात् परम्परया वा पुमर्थोपयोगिनां वेदोपकरणानामेव प्रस्थानानां भेदो दर्शितः । ततो नन्यूनत्वशङ्कावकाशः ॥

சமாதானம். ஆமாம். நாஸ்திகர்களுடைய தர்சனங்கள் 6 இருக்கின்றன. ஆனால் அவைகள் மிலேச்சர்களுடைய சாஸ்திரங்களைப் போல் வேதத்திற்கு விருத்தமான அர்த்தத்தை கூறுகிறபடியால் ஆஸ்திகர்களுடைய புருஷார்த்தத்தைப் போதிப்பதில் எவ்வகையிலும் உபயோகப்படுவதில்லை. இந்த கிரந்தத்தில் ஸாக்ஷாத்தாகவோ, பாரம்பரையாகவோ ஆஸ்திகர்களுடைய புருஷார்த்தத்தை போதிக்கக் கூடிய சாஸ்திரங்களைப்பப்பற்றியே கூறப்படுகிறது. ஆகவே நாஸ்திக சாஸ்திரங்களைப் பற்றி கூறாததால் இந்த கிரந்தத்திற்கு ஒன்றும் குறைவில்லை.

अथ संक्षेपेणैषां प्रस्थानानां स्वरूप भेदे हेतुः प्रयोजन भेद उच्यते बालानां व्युत्पत्तये ।

சாஸ்திரங்களின் வேறுபாட்டிற்குக் காரணம் அவைகளுடைய "அவாந்தரப்பிரயோஜன"த்தின் வேறுபாடுதான். எல்லா சாஸ்திரங்களுக்கும் ஆத்மாவைப் போதிப்பதில் தான் தாத்பர்யம் என்று மேலே குறிப்பிடப்பட்டது. இருந்தாலும் ஒவ்வொரு சாஸ்திரத்திற்கும் தனித்தனியாக ஓர் பிரயோஜனமிருக்கிறது. அதுதான் "அவாந்தரப்பிரயோஜனம்" எனப்படும். அதைக்கொண்டுதான் "மீமாம்ஸை"யைக் காட்டிலும் "நியாயம்" வேறுபட்டதென்றும், நியாயத்தைக் காட்டிலும் "வியாகரணம்" வேறுபட்டதென்றும் சொல்லப்படுகிறது. ஆகவே சாஸ்திரங்களில் அதிக பரிசயமில்லாதவர்களுக்கு போதிப்பதின் பொருட்டு ஒவ்வொரு சாஸ்திரத்திற்கும் பிரயோஜனமென்ன' என்று சுருக்கமாக கீழே சொல்லப்படுகிறது.

तत्र धर्मब्रह्मप्रतिपादक मपौरुषेयं प्रमाणवाक्यं वेदः । सचमन्त्रब्राह्मणात्मकः तत्र मन्त्रा अनुष्ठानकारक भूतद्रव्यदेवता प्रकाशकाः । तेपि त्रिविधाः ऋग्यजुस्साम भेदात् । तत्र पादबद्ध गायत्र्यादि छन्दो विशिष्टा ऋचः, "अग्नि मीळे पुरोहितमि"त्याद्याः । ता एव गीतिविशिष्टास्सामानि । तदुभयविलक्षणानि यजूंषि । "अग्नीदग्नीन्विहर" त्यादि संबोधनरूपा निगदमन्त्रा अपि यजुरन्तर्भूता एव । तदेवं निरूपिता मन्त्राः ।

தர்மத்தையும், பிரம்மத்தையும், போதிக்கக்கூடிய வாக்யங்கள் "வேதம்" என்று சொல்லபடும். அந்த வேதத்திற்கு "மந்திரம்" என்றும், "பிராம்மணம்" என்றும் இரண்டு பாகங்கள். அவைகளுக்குள் கர்மானுஷ்டான காலத்தில் அந்த கர்மாவைச் சேர்ந்த தேவதையையோ அல்லது திரவ்யத்தையோபற்றி கூறுகிற பாகங்கள் "மந்திரங்கள்" எனப்படும். அந்த மந்திரங்களும் "ரிக்" "யஜுஸ்" "ஸாம" என்று மூவகைப் படும். பாதக்கணக்குடன் கூடிய "காயத்ரீ" முதலிய சந்தஸ்ஸுகளுடைய மந்திரங்கள் 'ரிக்' என்று சொல்லப்படுகின்றன.

"अग्निमीळेपुरोहितम्"

முதலிய மந்திரங்கள் இதற்கு உதாஹரணம்.

கானத்துடன் கூடிய ரிக்குகளே "ஸாம" என்று சொல்லப்படுகின்றன. இவைகளைத் தவிர மற்றவைகளெல்லாம் யஜுஸ்ஸுகள்.

"अग्नीदग्नीन्विहर"

முதலிய மந்திரங்கள் ஸம்போதன ரூபமாக இருப்பதால் "நிகதம்" என்று சொல்லப்படுகின்றன. இவைகளும் "யஜுஸ்" என்றவைக்குள் சேர்ந்தவைகள். இவ்விதமாக மந்திரங்களைப்பற்றி சொல்லப்பட்டன.

ब्राह्मणमपि त्रिविधम्, विधिरूपमर्थवादरूपं, तदुभयविलक्षणरूपं चेति । तत्र शब्द भावना विधिरिति भाट्टाः । नियोगो विधिरिति प्राभाकराः । इष्टसाधनता विधिरिति तार्किकादय स्सर्वे ।

"ப்ராம்மணம்" என்ற வேதபாகமும், விதி, அர்தவாதம் இவ்விரண்டிலும் சேராத சில பாகங்கள், என்று மூவகைப்படும். புருஷனுக்கு ப்ரவிருத்தியை உண்டு பண்ணி வைக்கக்கூடியதாயும், "यजेत", "यष्टव्यः" முதலிய சப்தங்களிலிருக்க கூடியதாயும், "சப்தபாவனை" என்று சொல்லப் படுகிறதுமான ஓர் வியாபாரத்தையே "விதி" என்று பட்டமதத்தைப் பின் பற்றியவர்கள் சொல்லுகிறார்கள்.

கர்மாக்களிலிருந்து ஏற்படக் கூடிய "அபூர்வத்தையே" விதி என்று 'ப்ரபாகர மதத்தைப் பின் பற்றியவர்கள் கூறுகிறார்கள். தார்கிகர்களும் மற்றவர்களும் கர்மாக்களிலிருக்கிற "இஷ்டத்தை சாதிக்க கூடிய தன்மையையே விதி" என்று சொல்லுகிறார்கள்.

(தொடரும்)

ஆர். முத்துகிருஷ்ண சாஸ்திரி.

## சென்னை.

### ஸ்ரீ வித்யோல்லாஸினீஸபா.

சென்னை நாராயணமுதலி வீதியிலுள்ள K. A. C. தர்மசாலையில் சம்ஸ்கிருத உயர்தரக் கலாசாலையில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வரும் மேற்கண்ட சபையின் கூட்டமொன்று 17—2—39 வெள்ளிக்கிழமை மாலை ஷை கலாசாலை உதவி ஆசிரியர் ஸ்ரீமான் உ. வே. K. R. ராஜகோபாலாச்சாரியார் (நியாய வியாகரண சிரோமணி) அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. அச்சமயம் வாவிள்ள பிரஸ்கிரந்த பரிசோதகர் ஸ்ரீமான் பாலவேடு. ஸ்ரீனிவாஸராமாநுஜாச்சாரியார் முதலிய பல சம்ஸ்கிருத பண்டிதர்கள் விஜயஞ்செய்திருந்தனர். தெய்வ வழிபாடு நடந்தவுடன் ஷை சபைக் காரியதரிசி D. V. ஸ்ரீனிவாஸனால் சென்ற கூட்டச் சுருக்கம் படிக்கப்பட்டது. பிறகு உப காரியதரிசி K. ரங்காச்சாரி என்னும் மாணவன் "தேகசுகவழி" என்னும் விஷயத்தை வடமொழியில் உபன்யஸித்தான். பின் பல மாணாக்கர்கள் ஷை விஷயத்தைப்பற்றி பேசினர். மேற்கண்ட ஸ்கூல் தலைமை ஆசிரியர் T. S. ஸ்ரீனிவாஸ அய்யங்கார், நமக்கு நித்திய கர்மாவாக, மனு முதலிய பெரியோர்களால் விதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு கர்மாவும், நவீன முறைப்படி நமது தேக சௌகர்யத்திற்காகவும் ஆகிறது என்றும், ஒவ்வொருவரும் அவரவர்களுக்கு ஏற்பட்ட கர்மாக்களை செய்துகொண்டுவந்தால் அதுவே தேகத்திற்குச் சுகந்தருமென்றும், தெளிவாக எடுத்துரைத்தார். முடிவில். அக்கிராஸனாதிபதியவர்கள் மேற்கண்ட விஷயத்தைக் குறித்து முடிவுரையாக எளிய நடையில் மிகவும் அழகாகவும் விரிவாகவும் வடமொழியில் நீண்டதொரு பிரசங்கஞ் செய்தார். பின் சபைக் காரியதரிசி தலைவருக்கும், கூட்டத்திற் பிரசன்னமாயிருந்த பல வித்வான்களுக்கும், நன்றியறிதலைத் தெரிவித்து வந்தனோபசாரங்கூற மங்கள வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

இச்சபை அடுத்த திரயோதசி தினம் கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருநிருபர்.

K. V. சுப்ரமணிய சாஸ்திரிகள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்தரர் | 1 | 0 | 0 |
| ஸௌனீதிருசமாலா | 0 | 8 | 0 |

கிடைக்குமிடம்:—

ஸ்ரீஜனார்தன ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்



# சுகோபாக்யானம்.

திப்பிராஜபுரம் ப்ரம்மவித்யா ஸபையில் ப்ரும்மஸ்ரீ மந்திரமூர்த்தி க்ருஷ்ண சாஸ்திரிகளால் உபன்யஸிக்கப்பட்டது.

ஸ்ரீ நாரதபகவானுடைய உபதேசத்தால் வ்யாஸபகவான் ஏகாக்ஷர மஹாமந்த்ரத்தைக் கொண்டு சித்சக்தியை அர்த்தனாரீச்வர ரூபிணியாய் த்யானம் செய்துகொண்டு 100 வருஷம் தபஸ்செய்ய ஈச்வரன்வந்து மஹானுபாவனான புத்ரனை அடைவீரென்று வரன் கொடுத்து போனபிறகு. ஓர் தினத்தில் ஹோமார்த்தமாய் அரணிகடைய ஆரம்பித்த போது நமக்கு புத்ரன் எப்படி ஜனிப்பான் என்று நினைத்தக்ஷணத்தில் க்ருதாசீ என்ற தேவஸ்த்ரீயானவள் ச்ருங்கார சேஷ்டையுடன் எதிரில் தோன்றியதை பார்த்தவனுய் காமவிகாரம் உண்டானாலுங்கூட விவேகத்தால் இவள் வாஸ்த்ரீயே தவிர தர்ம பத்னீயாகாள் என்று மனதைத் திடப்படுத்திக் கொள்ளும் ஸமயத்தில் இவருடைய சுக்லமானது அரணிக்கட்டையில் விழுந்தது. உடனே இதையறிந்த க்ருதாசியானவள் சாபத்துக்கு பயந்து மிகவும் அழகான கிளிரூபத்தை எடுத்துக்கொண்டு பறந்து போய்விட்டாள். உடனே அரணிகட்டையில் 3 வயது குழந்தையாக ப்ரும்மதேஜஸ் ஜ்வலிக்குப்படியாக குழந்தை விளையாடியதை பார்த்து ஆச்சர்ய உத்ஸாஹத்துடன் மஹர்ஷி மண்டலங்களை வரவழைத்து ஜாதகர்மம் செய்யுங்காலத்தில் தேவர்கள் 18வாத்யங்களை உத்கோஷிக்க, அப்ஸரஸ்த்ரீநாட்யமாட, தும்புருநாரதர்கள் ஆசீர்வாதகானத்தைச் செய்து புஷ்பவர்ஷம் வர்ஷிக்க, வேதகோஷத்துடன் ஜனனோத்ஸவம் நடந்தது. பிறகு இவருக்கு முன் 2 பக்ஷிகள் சேர்ந்து தன் குஞ்சை போஷிப்பதைப் பார்த்து புத்ரனை அடையவிரும்பியதாலும் சுக்லமோசனகாலத்தில் க்ருதாசியின் கிளிரூபத்தை பார்த்ததாலும் சுக என்று நாமகரணம் செய்து உபநயநமும் 5வது வயதில் செய்துவிடவேண்டுமென்று நினைத்த க்ஷணத்தில் 5வயது குழந்தையாக உடனே வ்ருத்தியடைந்தது உடனே தேவர்கள் யக்ஞோபவீதம் வஸ்த்ரம் பௌஞ்ஜி அஜிநம் தெண்டம் இதுகளை பூமியிலிட்டார்கள். உடனே உபநயநம் செய்து ப்ருஹஸ்பதி பகவானிடம் குருகுலவாஸம் செய்வித்த ஸர்வவித்யாபாரங்கதராய் குருதக்ஷிணை கொடுத்துவிட்டு வ்யாஸரிடம்வந்து தான் அப்யஸித்த வித்யாவிமர்சனம் செய்துவருங்காலத்தில் ஸ்ரீ சுகரை விவாஹம் செய்துகொள்ளும்படி ஆக்ஞாபித்து யத்னம் செய்வதை ஸ்ரீ சுகர் பார்த்து விவாஹமூலமாய் குடும்ப பந்தத்தையும் உலக வ்யவஹாரத்தையும் யோசித்து மிகவும் பயந்தவராய் தன்னுடைய வைராக்ய லக்ஷணத்தை உலகானுபவ ஸித்தமான சாஸ்த்ரதாரங்களைக்காட்டி விவாஹத்தை அங்கீகரிக்கவில்லை.

இதற்கு பதில்வ்யாஸபகவான் க்ரஹஸ்தாச்ரமத்தை மிகவும் புகழ்ந்து க்ரஹஸ்தாச்ரம தர்மத்தால் தேவர்கள பித்ருக்கள் ப்ரும்மஞான் வாயஸம் முதலான ஜந்துக்கள் ரிஷிகள் த்ருப்தியடைந்து உலகில் ஸஸ்ய வ்ருத்தியையும் க்ஷேமத்தையும் அனுக்ரஹிக்கிற மூலமாய் வம்சாபிவ்ருத்தியுண்டாகி முக்கடன் தீர்ந்து சித்தசுத்தியுண்டாகி ஜீவன் முக்தனாயிருந்து விதேஹ முக்தியும் பெறலாம். நம்முன்னோராகிய வஸிஷ்டாதி மஹர்ஷிகளும் இவ்விதமே க்ரஹஸ்தாச்ரமம் வஹித்து மஹாஸித்திகளைப் பெற்றிருக்கிறார்கள். ஸ்ரீ சுகர் வ்யாஸரின் உபதேச மொழிகளை உல்லங்கனம் செய்து பிதாவை நமஸ்கரித்து ஆகாமி ஸஞ்சித ப்ராரப்தமென்றும் கர்மங்கள் தலையுப்படியாய் தத்வோபதேசம் வேறுவிதத்தில் அனுக்ரஹிக்கவேண்டுமென்று கேட்டதின்பேரில் வியாஸர் உபதேசிக்கத் துடங்கினர்.

உபதேசக்ரமம்:—ப்ருஹதாரண்யக உபனிஷத்தில் முதலாவது அத்யாயம் 4-வது ப்ரும்மணத்தின் பூர்வார்த்தத்தில் அவித்யா நிமித்தம் ஜகத்ருஷ்டியென்றும், உத்தரார்த்தத்தில் ப்ரும்மவித்யா நிமித்தம் ஜகத் ஸர்வம் ப்ரும்மமயம் என்பதாகிய க்ஞானம் என்றும் சொல்லியிருப்பதை சுருக்கமாய் தேவீ பாகவதத்தில் காட்டி உபதேசிக்கிறார்.

தேவீபாகவதத்தில் முதலாவது ஸ்கந்தம் 15-வது அத்யாயத்திலும் 9-3லும் சொல்லியபடி மஹார்ணவ ஸமுத்ரத்தில் பக்ஷியின் முட்டைபோல் மிதந்து வெகுகாலத்திற்குப் பிறகு முட்டை உடைந்தபின் ஆலிலைபோலாகி அதில் 3வயது குழந்தைபோல் விளங்குகிற மஹாவிருட் புருஷன் தான் தனிமையாக யிருப்பதாலும் தன்னைத்தவிர அகாதமான ஜலமே எங்கும் காணுகிறபடியாலும் தனக்கு பயமுண்டாகி அழுத தத்ஸமயத்தில் சித்சக்தி என்ற ப்ரும்ம வித்யையானவள் அசரீரவாக்கினால், "ஸர்வம் கல்விதமேவாஹம் நான்யதஸ்தி ஸனாதனம்" என்று உபதேசித்தாள். இந்த வாக்யமானது 4 வேத ஸாரமான 4 மஹாவாக்யங்களுடைய மஹாஸாரமான ஒரே வாக்யமாக யிருக்கிறபடியால் ஷை விருட்புருஷன் இந்த வாக்யத்தை கேட்டு உச்சரித்து அர்தவிசாரம் செய்து ஊஹிக்கையில் ஸர்வபதலக்ஷ்யமானயிந்த மஹார்ணவ ஜலமும் மைத்ததும் நானேதான், என்னைத்தவிர வேறு வஸ்து இல்லை என்று க்ஞானம் உண்டானதும் பயம் நீங்கியதே தவிர ஸந்தோஷமுண்டாகவில்லை. தனக்கு இன்பமுண்டாவதற்கும் ஷை மஹாவாக்யத்தின் ஸர்வம் என்ற பதத்துக்கு அர்த்தம் விளங்குவதற்கும் 2வது வஸ்துவை அபேக்ஷித்தார். உடனே ச்ரத்தா மேதா பக்தி, காந்தி, சாந்தி முதலான 22 குணங்களுக்கு அதிதேவதைகளான ஸர்வாலங்கார ஸௌந்தர்யவதியாய் மந்தஹாஸத்துடன் தன் முன்னிலையில் தோன்றினாள். பார்த்து ஆனந்தமடைந்தார். தத்ஸமயம் தேவி சொல்லுகிறாள் தங்களுடைய ரோமகூபங்களிலிருந்து கோடி கோடி ப்ரும்மாண்டங்களை உண்டாக்கப் போகிறேன். ஒவ்வொரு அண்டங்களிலும் க்ஷீராப்தியில் சேஷசாயியாகிய ஸ்ரீமன்னாராயணனுடைய நாபிகமலத்தில் ப்ரும்மதேவர் உண்டாகி உலகத்தை ஸ்ருஷ்டிக்கப் போகிறார். பகவான் பாலன கர்த்தாவாக விளங்கப்போகிறார். ப்ரும்மதேவருடைய புருவ மைய்யத்திலிருந்து ருத்ரன் ஆவிர்பவித்து ஸம்ஹார கர்த்தாவாக விளங்கப்போகிறார். நான் தங்களிடமே வாஸம்பண்ணப் போகிறேன் என்று சொன்னதும் இந்த வாக்யம் சொன்னது யார் என்று கேட்டார். நமக்கெல்லாம் காரண வஸ்துவாகிய ப்ரும்மவித்யையினால் உபதேசிக்கப்பட்ட மஹாவாக்யம். இது ஸர்வ வேதஸாரமான மஹாவாக்யம். இதை ஸதா யிடைவிடாமல் உச்சரித்துவருகிற நம் முதலானோர்க்கு அனுஸந்தானத்தால் நானும் நீங்களும் மைத்த ப்ரம்மாண்டங்களும் ஸர்வம் ப்ரும்மமயம் எல்லாம் நானே தவிர வேறு வஸ்து இல்லை என்ற க்ஞானமுண்டாகி ஆநந்தானுபவம் உண்டாகும். ஸர்வ ஸந்தேஹ விகல்பங்களும் நசிக்கும் என்று தேவி சொல்லிய ஷை மஹாவாக்யத்தை பகவான் ப்ரும்மதேவருக்கு உபதேசித்தார். ப்ரும்மா நாரதருக்கு உபதேசித்தார். நாரதர் எனக்கு உபதேசித்தார் என்று சொல்லி வ்யாஸபகவான் ஸ்ரீசுகருக்கு உபதேசித்து ஷை மஹாவாக்யத்துக்கு பாஷ்யமாக தான் செய்த 18000 ச்லோகம் 12 ஸ்கந்தமாகிய 318 அத்யாயமுள்ள தேவீபாகவதத்தையும் சுகருக்கு உபதேசித்தார். நமது நிருபர்.

# கொன்றைவேந்தன்.

(by T. S. Vaidyanatha Sastrigal)

(2—2—39 வாரத்தொடர்ச்சி)

77 மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
78 மோனம் என்பது ஞானவரம்பு
79 வளவனாயினும் அளவறிந்தழித்துண்
80 வானஞ்சுருங்கின் தானம் சுருங்கும்

कृतममि नश्यति विहिते चोद्ये
मौनं गदितं निष्ठा ज्ञाने ।
धनिकोऽपि मित स्त्यागे भोगे
क्षामं दानं क्षामे वर्षे ॥

A sacred action, even it is done properly, will perish if its authority is questioned.

Silence is the border of True - Self - Realisation.

Though you are rich, be moderate in spending and eating.

Charity becomes lessened if there is meagre rain.

81 விருந்திலோர்க்கில்லை பொருந்திய ஒழுக்கம்
82 வீரன்கேண்மை கூறம்பாகும்
83 வுரவோர் என்கை இரவாதிருத்தல்
84 ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு

अतिथिषु यो नहि साधु नं गृही ।
वीरासङ्गो निशितो बाणः ।
प्रभुता ननु साऽयाचितवृत्तिः
व्यवसित बुद्धि र्भवति समृद्धः ॥
न चलं यस्य मनः स समृद्धः ॥

He is not a true house-holder who has not got any inclination to welcome guests.

He possesses a keen arrow who keeps company with a hero.

Living by begging is not advisable for a mighty man.

He is rich who controls his mind. or He is rich who desires nothing.

85 வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை
86 வேந்தன் சீறின் ஆந்துணையில்லை
87 வையந்தோறும் தெய்வந்தொழு
88 வொத்த இடத்து நித்திரைகொள்

सत्त्वे शुद्धे का दुश्चिन्ता
सेव्ये कुपिते को नु शरण्यः ।
सर्वगत न्नुहि विभु मोशानं
समभूमितले कुरु सुखशयनं

There is no room for hypocrisy in a pure mind.

Where is shelter for him who has incurred the wrath of his master?

Pray God who is Omniscient and Omnipotent.

Take your bed on the even floor.

89 வோதார்க்கில்லை உணர்வொடுஒழுக்கம்
90 வோரொருவனைப் பேசாதிரு.

नावेदविदां ज्ञानं शीलं
नुहि तं नो यदि भावय तूष्णीं ॥

A man never acquires knowledge and builds his character without the study of Vedas.

Pray silently, if you cannot praise Him.

मात्राभिः षोडशभिः कलितं
नीति निबन्धन तन्त्री क्वणितं ।
सहृदयहृदयङ्गमतांमियतां
साहित्यशिरोमणि गीतमिदं ॥

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க.)

## சேங்காலிபுரம்.

இவ்வூரில் சேங்காலிபுரம் ப்ரொவிஷன் ஸ்டோர்ஸ் லிமிடெட் என்ற பெயருடன் ஓர் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இக் கம்பெனியின் மூலதனம் ரூபாய் பதினாயிரம். இப்பதினாயிரம் ரூபாயும் ஒரு ஷேர் பத்து ரூபாயாக ஆயிரம் ஷேர்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

இக் கம்பெனியானது நேற்று புதன் கிழமை 22—2—39 அன்று ஆரம்பிக்கப் பட்டது. இதின் முதல் டைரக்டர்கள் ஸ்ரீமான்கள்:— கே. எஸ். கோபாலன். எஸ். தியாகராஜன். எஸ். சக்ரபாணி அய்யர். எஸ். நாராயணசாமிய்யர். எஸ் பாலகிருஷ்ண அய்யங்கார். ம. சுப்ரமண்ய அய்யர் அவர்கள் ஆவார்கள். இக் கம்பெனி ஆரம்பிப்பதில் மிகுந்த உற்சாகமும், ஊக்கமும்காட்டி உழைத்தவர்களுள் ஸ்ரீமான் கே. எஸ். வெங்கட்டராமய்யர் அவர்களும் ஒருவர் ஆவார்.

மளிகை சாமான்கள் இதர ஷாப் சாமான்களும் விற்பதற்காக முதலில் ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. வெளியூர்சென்று சாமான்கள் வாங்கும் தொல்லை நீங்கும் என்பது ஒரு முக்கியமான சௌகரியம். மேலும் சாமான்கள் உயர்ந்ததாகவும், சுத்தமாகவும், மலிவாகவும் இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது என்றும் தெரிகிறது. இக் கம்பெனி நாளடைவில் விருத்தியடைவதோடு பொதுஜன ஆதரவையும், நம்பிக்கையையும் அடையுமென்று நம்புகிறேன். மற்ற கிராமங்களும் இந்த முறையைப் பின்பற்றுவது கிராம க்ஷேமத்திற்கு ஹேதுவாகும்.

ஒரு நிருபர்.

## மேல்மங்கலம்.

### ஆஸ்திக மஹாஜன சபை.

பஹுதான்ய-ஞு மாசி-மீ 5, 6-ம்உ களில் மாலை 4-மணிமுதல் 6-மணிவரை சபை அத்யக்ஷர் பிரம்மஸ்ரீ பிராஞ்சேரி சுப்பிரமணிய அய்யர் அவர்களின் தலைமையின்கீழ் சபை கூடிற்று.

5-ம்உ பிரம்மஸ்ரீ கோமடம் சங்கர கனபாடிகள் சிவராத்திரி மஹாத்ம்யம் என்னும் விஷயம்பற்றியும், 6-ம்உ பிரம்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் தேவாலய தத்வம் என்னும் விஷயம்பற்றியும் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். சபைக் காரியதரிசியால் வந்தனம் கூறப்பெற்று சபை 6-ம்உ மாலை 6-மணிக்கு இனிது நிறைவெய்தியது.

காரியதரிசி.

## பால்யவிவாகம்

### அறிவு விருத்திக்கு பால்ய மணம்.

1939ஞு பிப்ரவரி-மீ 12உ "ஹனுமான்" பத்திரிகையில் கீழ்க்கண்ட ஸமாசாரம் காணப்படுகிறது.

"இங்கிலாந்தில் மனோதத்துவ நிபுணர்களின் மகாநாடு ஒன்று ஸமீபத்தில் கூடிற்று அதில் இங்கிலாந்தின் நிலைமை இப்போது இருப்பதுபோலவே இருக்குமானால் அறிவு க்ஷீணித்துப்போகுமென்று எல்லா நிபுணர்களும் எச்சரிக்கை செய்தார்கள். டாக்டர் லயனல் எஸ் பென்ரோஸ் என்றவர் அந்த நிலையை மாற்றுவதற்கு ஒருவழி சொன்னார். தொழிலில் திறமைவாய்ந்த ஆண் பெண்கள் இளமையிலேயே மணம் செய்து கொள்ளவேண்டும். ஸந்ததி விருத்தியாகிறதென்று அவர்கள் பயப்படக்கூடாது. இது தான் அறிவு க்ஷீணித்துப்போகாமல் விருத்தியாவதற்கு தகுந்த பாதுகாப்பு என்றார்."

எல்லாவற்றிற்கும் கண்ணைமூடிக்கொண்டு மேல்நிசையாரையே பின்பற்றுபவர்களுக்கு பால்யவிவாகம், பிரஜாவிருத்தி முதலியவைகளை ஒழிக்கப்பாடுபவர்களுமான நமது தேச சீர்திருத்தக்காரர்கள் இதைக் கவனித்தாவது திருந்துவார்களா?

P. N. நாராயணசாஸ்திரி, செங்கற்பட்டு.

## ஒரு விக்ஞாபனம்.

சென்னைக் கவர்ன்மெண்டார், மலையாள ஜில்லா ஆலயப்ரவேச சட்டம்செய்து, அதை அமுலுக்குக் கொண்டுவருவதிலும் தீவிரமாய் முயற்சிக்கிறார்கள். அதை உத்தேசித்து பிப்ரவரி 25, 26உகளில் மலையாள வர்ணாசிரம மகாநாடு பாலக்காட்டில் நடக்கப் போவதாயும் ஹிந்து, சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளில் காணப்படுகிறது. அது வாஸ்தவமானால், ஜில்லா வித்யாஸம் பார்க்காமல் நமது மாகாணத்தில் உள்ள எல்லோரும் பெருவாரியாக அதற்கு விஜயம்செய்து வெற்றிகரமாய் நடத்திவைப்பதுடன் ஷை சட்டத்தை கவர்ன்மெண்டார் வாபஸ் வாங்கிக் கொள்ளும்படி செய்யவேண்டுவது மிகவும் அவசயம். பொது ஜனங்கள் விசேஷமாய் விஜயம்செய்வதுடன் சென்னை மாகாண வர்ணாசிரம ஸ்வராஜ்ய ஸங்கத்தாரும், விசேஷப் பங்கெடுத்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

P. N. நாராயணசாஸ்திரி.

## செங்கற்பட்டு.

### வேதபாடசாலை.

செங்கற்பட்டு ஜில்லா திருவள்ளூரில் தாசில்தாராயிருக்கும் தார்மிக ப்ரபுவான பிரம்மஸ்ரீ த்வாரகாநாத் அய்யர் அவர்கள் க்ருஹத்தில், செங்கற்பட்டில் இருக்கும் வித்வான் புடார்ஜுன சர்மா அவர்களால், சிவராத்திரிமுதல் இரண்டு நாட்கள் ஸ்ரீ ஹாலாஸ்ய மாஹாத்மியத்திலுள்ள சில சிவ சரித்ரங்கள் உபன்யஸிக்கப்பட்டது. ஷை அய்யர் அவர்கள் தன் க்ருஹத்திலேயே ஒரு நியம வேத பாடசாலையும் நடத்தி வருகிறார்கள். ஒருவித ஸௌகர்ய குறைவும் ஷை பாடசாலையில் கிடையாது. இன்னும் வித்யார்த்திகள் வந்தாலும் சேர்த்துக்கொள்வார்களென்று தெரிகிறது.

விருப்பமுள்ளவர்கள் M. த்வாரகாநாத அய்யர் தாசில்தார், திருவள்ளூர் செங்கற்பட்டு ஜில்லா என்னும் விலாஸத்திற்கு எழுதிக்கொள்ளலாம்.

ஒரு நிருபர்.

## திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கம்.

### திருமழிசையாழ்வார் திருநாட்கொண்டாடம்

திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ ஆஹோபில மடத்தில் 3-2-39 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு திருமழிசையாழ்வார் திருநாட் கொண்டாட்டம் ஆரம்பமாகியது.

ஸ்ரீ குருச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார் "திருமழிசைப்பிரான் வைபவம்" என்ற விஷயம்பற்றி விரிவானதோர் உபந்யாஸம் செய்தார்.

5-2-39 ஞாயிற்று கிழமை மாலை 4 மணி முதல் 6 மணி வரை அதே இடத்தில் 'திருச்சந்த விருத்தம்' என்னும் விஷயம் பற்றி ஸ்ரீ ஆர். கேசவய்யங்கார் அதி அற்புதமான ஓர் உபந்யாசம் செய்தார்.

காரியதரிசி.

## பழூர்.

### கீர்வாணவாணி பரிஷத்

இச்சபையின் 7வது கூட்டம் பகுதான்ய ஞு மாசிமீ 8உ (19—2—39) ஞாயிறு மாலை 3-30க்கு பழூர் வேதபாடசாலையில் ரிடயர்ட் டிப்டிகலக்டர் ஸ்ரீ. P. ராமச்சந்திர அய்யர் அவர்கள் தலைமையில் கூடிற்று.

அவ்வமயம் பக்கத்து ஊர்களிலிருந்தும் அநேக ஆஸ்திகர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள், முதலில் மாத்ருபூதம் என்ற மாணவனுடைய மங்களாசரணத்திற்குப் பிறகு ப்ரஹ்மஸ்ரீ S. V. சுப்பிரமணிய சாஸ்த்ரிகள் "ஸந்தியோபாஸனம்" என்னும் விஷயத்தை விரிவாகத் தமிழில் உபன்யஸித்தார்கள். ஸந்தியாவந்தனத்தின் முக்ய அம்சங்களான அர்க்கிய ப்ரதானம், உபாஸனம், காயத்ரீ ஜபம் இவற்றை நன்கு எடுத்துரைத்தார்கள். பிறகு உள்ளூர் மகா-ா-ஸ்ரீ சிதம்பர அய்யர் அவர்கள் அதே விஷயத்தை லௌகிக உதாஹரணங்களுடனும், ஸந்தியாவந்தனத்தினால் உண்டாகும் வைத்ய சாஸ்த்ரீயான குணங்களையும் அழகாகத் தமிழில் எடுத்துரைத்தார்கள். பிறகு மன்னார்குடி தாலூகா சொக்கனூர் ஸ்ரீயுத வெங்கடாங்காசாரியார் அவர்களும் ஷை விஷயத்தைத் தமிழில் எடுத்துரைத்தார்கள். பின்பு பாடசாலை மாணவர்களான சுப்பிரமணியன் பரமேஸ்வரன் என்பவர்களால் 'கிராமவாஸமும் நகரவாஸமும்' என்பதைப்பற்றி சம்ஸ்கிருதத்தில் சம்பாஷணை செய்யப்பட்டது. அதில் கிராம வாஸமே சிறந்ததென்று நிரூபிக்கப் பட்டது. காரியதரிசி பி. ஆர். நாகேச்வர சாஸ்த்ரியின் வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்தது.

கே. என். நடேச சர்மா.

(7ம் பக்கத்தொடர்ச்சி.)

This piece of Literary work has been composed by one who has been conferred a degree of 'Sahitya Siromani' in Oriental studies by the Madras University; each foot of this piece contains only sixteen Matras. May this song, attuned to veena named 'Neethi Nibaudhana', please the aesthatic Public.


மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
"ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B.A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது, மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது. தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0 ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு விலை அணா 6.

"கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

தபால் செலவு வேறு] [விலை அணா 0 8 0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்தன பிரின்டிங் ஒர்க்ஸ், லிமிடெட் டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.




## திப்பிராஜபுரம்.

### ஸ்ரீ பிரும்ம வித்யா ஸபா.

18—2—39உ ஸ்திரவாரத்தன்று ஷை ஸபாவின் வருஷபூர்த்தி வைபவம் மிகவும் நன்கு கொண்டாடப்பட்டது. மாலை 4மணிக்கு ஸநாதனதர்மாபிமானியான திருக்கருகாவூர் ப்ரும்மஸ்ரீ T.L. சுப்பய்யர் அவர்கள் "ஸநாதனதர்மம்" என்னும் விஷயத்தைப் பற்றி, கும்பகோணம் மகா-ா-ஸ்ரீ A. சுப்பிரமணியய்யர் அவர்கள் நடத்திவரும் வேதாந்தபாடசாலை அத்யக்ஷகரான வித்வான் ஆங்கரை ப்ரும்மஸ்ரீ ரெங்கஸாமி சாஸ்திரிகள் அவர்களின் திவ்ய அக்கிராஸனம் வஹிக்க, 2மணி நேரம் உபன்யசித்தார். சென்ற 7, 8 மாதகாலமாக ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ப்ரும்மஸ்ரீ நாசிங்கம் பேட்டை ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் ப்ரஸங்கம் செய்யப்பட்டு வந்ததில் சென்ற மாசி-மீ 5உ ஸ்ரீ ஸீதா ராமச்சந்திர மூர்த்திக்கு பட்டாபிஷேக மஹோத்ஸவம் நடந்ததை குறித்து ஸ்லாகித்து பேசிவிட்டு ஸநாதனதர்மம் என்றால் என்ன என்றும் அதற்கு அத்தாக்ஷி அதை அனுஷ்டிக்க வேண்டிய மனுஷ்ய ஜன்மாவின் கடமையை நன்கு எடுத்துக்காட்டின "ராமோ விக்ரஹவான் தர்ம:" என்றால்போல் ராமாவதாரத்தைப் பற்றி சொல்லும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தைத் தவிர வேறில்லை என்றும், மனுஷ்யன் எந்தகாலத்திலும், தேசத்திலும், கர்மானுஷ்டானத்தை கைவிடக்கூடாது என்றும் கர்மானுஷ்டான பானுயிருக்கிற எவனுக்கும் புருஷார்த்தங்களும் சரீர சுக லோகங்களும் தானேகிட்டும் என்றும் அக்னி, காயத்ரி முதலிய இவைகள் அவசியம் நம் பிரும்மணர்களாலே கைவிடப்படக்கூடாத இன்றியமையாத வேதாந்த தத்வங்கள் என்றும் சொல்லி ஸநாதனதர்மம் க்ஷீணதசையை கொஞ்சம் அடைந்தாலும் ஒரு நாளும் நசிக்காது ஏனென்றால் அதனுடைய பெயரினாலேயே என்று சொல்லி முடித்தார்.

பிறகு இரவு 8மணிக்கு ப்ரும்மஸ்ரீ T. L. சுப்பய்யர் அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் முதலில் அக்கிராஸனப்ரஸங்கம் 10 நிமிஷம் ஆனபிறகு "வேதாந்தஸாரம்" என்னும் விஷயத்தைப்பற்றி விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்த ப்ரகாரம் ஷை விஷயத்தைப்பற்றி நிரம்ப அறிந்தவரும், ஸ்வயம் அனுஷ்டாதாவாயுமிருக்கிற ஆங்கரை வித்வான் ப்ரும்மஸ்ரீ ரெங்கஸாமி சாஸ்திரிகளவர்கள் உபன்யாஸம் வெகு அழகாயும் புனிதமாயும் செய்தார்கள். "ஸத்யம் பிரும்ம, ஜகன்மித்யா, ஜீவ: பிரும்ம ஏக ரூபா:" இத்துடன் வேதாந்தஸாரம், அத்வைதமத சித்தாந்தம், இந்த தத்வங்களை தெரிந்து கொள்வதுதான் ஞானம், ஸம்ஸாரமாகிய பந்தத்திலிருந்து விடுபடுவதே மோக்ஷம். மோக்ஷத்தை விரும்புகிறவனுக்கு ஈச்வர ப்ரஸாதம் தேவை என்றும், அதற்கு சித்தசுத்தியை பக்தியினாலும், நிஷ்காம்ய கர்மா செய்வதினாலும் அடையலாம் என்றும், எல்லாவற்றிற்கும் நமக்கு வேத சாஸ்திரங்கள், உபநிஷத்துக்கள், ச்ருதி ஸ்ம்ருதிபுராணாதி இதிஹாஸங்கள்தான் ப்ரமாணம் என்றும், கர்மகாண்டத்துக்குப் பிறகுதான் ஞான காண்டம் என்றும், கிருமி கீடாதி பிரும்ம பட்டம் பர்யந்தம் நச்வரம், அசாச்வதம் என்றும் அகண்ட சத்சித் ஆனந்த கனீபூதமான ப்ரும்மம் தான் ஸத்யம். அதற்கு ஸ்ரீபிரும்ம வித்யா தான் ஸாதனம். அவித்யை விலகினால் வித்யா ப்ராப்தி என்றும் ஸபையினுடைய லக்ஷ்யங்களைப் பற்றி ஸ்லாகித்தும் சுமார் 2-மணி நேரம் வெகு சாமர்த்தியமாகவும், நன்றாகவும் உத்கோஷித்தார்.

## ஸ்ரீ காஞ்சீ காமகோடிபீடம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்.

பகுதான்ய வருஷத்திய

# பிரம்மோத்ஸவ மஹோத்ஸவம்.

ஸ்ரீ மகாமேரு சிகரத்தில் ஸாக்ஷாத் ஸ்ரீபுரவாஸினியாய் பஞ்சப்ருஹ்மாகார மஞ்சத்தில் ஸ்ரீ காமேச்வராங்க பரியங்கத்தில் வீற்றிருப்பவளாய் பிரபஞ்ச ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கின்ற பிரம்ம விஷ்ணு ருத்ராதிகளுக்கு அவ்வித சக்தியைக் கொடுத்து ஆக்ஞைசெய்யும் பஞ்சகிருத்திய பாராயணியாயுமுள்ள பராசக்தியான ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தரி தேவியானவள் இப்புவியிலுள்ள ஆன்மகோடிகளுக்கு தர்மாதி சகல புருஷார்த்தங்களையும் அனுக்ரஹிக்குமாறு அகில பூமண்டலாலங்காரமாயும் ஸ்ரீ ஹரிஹராதி ஸமஸ்த தேவதைகளின் ஸான்னித்யம் பெற்றதும், த்ரயஸ்த்ரிம்சத்கோடி தேவதா ஸேவிதமாயும் இப் பிரபஞ்சத்திலுள்ள ஸமஸ்த புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் பிரதானமாயுமிருக்கின்ற ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தில் உருத்ரகோடியில் ஸ்ரீ ஏகாம்ரநாதரென்று புகழப்பட்டு வருகின்ற ஸ்ரீ மஹா காமேச்வரரூபிணியாயும், ஸ்ரீ புண்ணிய கோடியில் ஸ்ரீ வரதராஜரென்று ஸ்துதிக்கப் பட்டு வருகிற ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்வரூபிணியாயும், "ஸ்ரீ காமகோடியில்" பிலாகாச ரூபிணியாயும் கன்னிகாரூபிணியாயும் விசேஷமாய்த் தன்னுடைய ஸமஸ்த ஆவரண சக்திகளுடன் யந்திரரூபிணியாயும் விளங்கா நிற்க

மார்க்கண்டேய ஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறபடி ஜகத்குரு ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யரவர்களால் உத்தாரணம் செய்யப்பட்ட ஸ்ரீ காமகோடி ஸ்ரீ சக்ரத்தில் ஸான்னித்யமடைந்துவிளங்கும் ஸ்ரீ காமாக்ஷி தேவிக்கு நாளது பகுதான்ய-ஞு மாசி-மீ 12க்கு 1939-ஞு பிப்ரவரி-மீ 23உ குருவாரம் முதல் விசேஷ மஹோத்ஸவம் வேத பாராயணாதி ஸந்தர்ப்பணை வைபவங்களோடு உபக்ரமித்து த்வஜாரோகணம் முதல் 11நாள் உத்ஸவங்கள் நடந்தேறியபின், மார்க்கண்டேய புராணத்தில் ஸ்ரீ காமாக்ஷி விலாசத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஸ்ரீ ஜகன்மாதாவினால் தேவர்களுக்கு தந்தருளப்பட்ட திவ்ய ஸேவையாகிய விசுவரூப தரிசனமும் அன்று முதல் வழக்கம்போல் விடாயாற்றி உத்ஸவங்களும் நடக்கிறபடியால் அக்காலங்களில் ஆஸ்திகர்கள் அனைவரும் வந்திருந்து ஸ்ரீ காமாக்ஷி திவ்யமங்களமூர்த்தியை தர்சித்து ஐஹிகாமுஷ்மிக பல புருஷார்த்தங்களையும் ஜன்மஸாபல்யத்தையும் அடையுமாறு கோருகின்றனம்.

K. சுப்புஸ்வாமி அய்யர்,
ஸ்ரீமடம் ஸ்ரீ கார்யம் & ஏஜண்டு.
P. R. விச்வநாதய்யர், மானேஜர்.

பிறகு அக்ராஸனர் அரைமணி நேரம் அத்வைத சாஸ்திர மஹிமையைப் பற்றி வெகு அழகாகவும், தான் ஆராய்ச்சி பண்ணின அளவு மிகவும் தெளிவாகவும் ஸதஸ்யர்களுக்கு எடுத்துச் சொன்னார். பிறகு அங்கு வந்தவருள் சித்தமல்லி ப்ரம்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களும், ப்ரும்மஸ்ரீ உள்ளூர் வித்வான் மந்திர மூர்த்தி கிருஷ்ண சாஸ்திரிகளவர்களும், ஸபையின் நோக்கத்தை ஸ்லாகித்தும், உபன்யாசிக்கப்பட்ட விஷயத்தைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். பிறகு ப்ரும்மஸ்ரீ சாம்பசிவ சாஸ்திரிகள் அவர்கள் அன்று விஜயம் செய்திருந்த ப்ரும்மஸ்ரீ T. L. சுப்பையர் அவர்களும், ப்ரும்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களும் கம்பீரமாயும், நன்றாயும், ரொம்ப உத்க்ருஷ்டமாயும் ப்ரஸங்கித்த ஒரு மஹிமையை, சாயந்திரம் நடத்த தர்மோபதேசத்தையும், இரவில் நடந்த ஞானோபதேசத்தை யும், ஒருமிக்க ஸதஸ்யர்களுக்குக் கேட்டு ஆனந்திக்க அவதரித்த சந்திர சூர்யர்கள் என்றும், அதற்கு சாக்ஷணம் அன்று அமாவாஸ்யை திதி யானபடியால், சந்திர சூர்யர்களாகிய இரண்டு ஜோதிகளும் ஒரே காலத்தில் ப்ரகாசிக்க ஹேது இருக்கிறது என்றும் சொல்லி ஸ்லாகித்தார். பிறகு ஸெகரிடரி T S. வெங்கிட்ட ராமய்யர் அவர்களின் வந்தனோபசாரத்துடனும், பிறகு ஸெகரிடரி அவர்கள் வந்தனோபசாரங்களுடனும் பிரும்மஸ்ரீ நாராயணஸாமி ச்ரௌதிகளுடைய ஸ்தோத்திர பூர்வகமான கவன ஸ்லோகங்களுடனும் சந்தனம், புஷ்பம் நைவேத்ய விநியோகங்களுடனும் ஸபையின் வருஷ பூர்த்தி இன்று கொண்டாடப்பட்டது.

நமது நிருபர்.

## விஷ்ணுபுரம்.

### மஹா பூஜா.

விஷ்ணுபுரத்தில் பிறந்து வளர்ந்து வசித்தவர்களும், விஷ்ணுபுரத்திற்கு அலங்காரமாக இருந்த ப்ரும்மஸ்ரீ சாஸ்த்ர ரத்னாகரம் அப்பா சாஸ்த்ரிகள் அவர்களிடத்தில் பூர்ணமான வித்யாப்யாஸம் செய்தவர்களும், பரமசிவ பக்தர்களும், பூஜை, வைச்வதேவம் முதலிய ஷட்கர்ம நிரதர்களுமான ப்ரும்மஸ்ரீ சிவசுப்ரமண்யய்யர் அவர்கள் என்கிற மஹா புருஷர் கிருஹஸ்தாச்ரம தர்மத்தை ஒன்றுகூட விடாமல் தேகத்திற்கு மிகவும் அசக்தி வரும் வரையில் அனுஷ்டித்துவந்து அந்தியகாலத்தில் ஆதுர ஸன்யா ஸாசிரமப்படி ஸன்யாஸம் செய்துகொண்டு பகுதான்யஞு- தை-மீ 29உ. அஷ்டமி சனிக்கிழமை மாலை 3மணிக்கு ப்ரும்மலோக ப்ராப்தி அடைந்தார்கள். நாளது மாசி-மீ 9உ திங்கட்கிழமை மஹா பூஜை. பந்திமான்கள் எல்லோரும் வந்து தரிசிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

என். பஞ்சாபகேசய்யர்.

## சீர்காழி.

### ஸ்ரீமத் ராமாயண பட்டாபிஷேகம்

இவ்வூர் திருமஞ்சன வீதியில். இரண்டு மாதகாலமாக பிக்ஷாண்டார் கோவில் ஸ்ரீமத் ராமாயண கதாம்ருத வருஷக பிரசங்க ரத்னம் வேதமூர்த்தி பிரும்மஸ்ரீ பாகவத கௌஸ்துபம் கோபால பாகவதர் அவர்களால் தமது குமாரர்கள் பாலசுப்பிரமண்யம் பிரதர்ஸ் அவர்களின் இனிய சங்கீதகான பின் பாட்டுடன் நடத்தப்பட்டுவந்த ஸ்ரீமத் ராமாயண கதாகாலக்ஷேபத்தில் 19—23—9 ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணிக்கு ஸ்ரீராம பட்டாபிஷேக மகோத்ஸவம் நடத்தப்பட்டது ஏராளமான ஆஸ்திக பக்தர்கள் விஜயம் செய்து பாகவதர் அவர்களுக்கும் விசேஷ சன்மானங்கள் செய்து பெருமைப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

இதுவரையில் இவ்வூரில் இம்மாதிரி காலக்ஷேபம் யாரும் செய்ததுமில்லை. இத்தனை ஜனங்கள் விஜயம் செய்து யாவரும் பார்த்ததுமில்லை என ஷை பாகவதர் அவர்களின் காலக்ஷேபத்தை பற்றியும் செல்வர்களாக இருக்கும் அன்னவர் குமாரர்கள் சங்கீத கானத்தையும் புகழாதவர்களில்லை.

21-2-39 செவ்வாய்கிழமை அநேகர் வேண்டுகோளுக்கிணங்கி சங்கீதகான சிகாமணிகளாகிய பாலசுப்பிரமண்யம் பிரதர்ஸ் அவர்களின் கதாகாலக்ஷேபம் ருக்மணீகல்யாணம் நடைபெறும்.

ராஜகோபாலய்யர்.

215272


அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்
அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது


அமிர்தாஞ்சனம்

## மீராபாய்.

(முன் தொடர்பு)

விலை மதிக்கமுடியாத அம்முத்து மாலையைக்கண்ட மீரா சாதுக்களே, நீங்கள் துறவிகளாகக் காண்கிறீர்கள். இம்மாலையோ விலைமதிக்கமுடியாததாயிருக்கிறது. இது உங்களுக்குக் கிடைத்த வகை யாது என வினவினாள். உடனே அக்பர், தேவீ, நாங்கள் கிருஷ்ண பக்தர்கள். மதுரை, பிருந்தாவனம், கோகுலம் முதலிய இடங்களில் யாத்திரை செய்து ஒருநாள் யமுனையில் ஸ்நானம் செய்யும்பொழுது இம்மாலை எங்களுக்குக் கிடைத்தது. விலையுயர்ந்த இம்மாலை கண்ணனுக்கே உகந்தது என்றெண்ணி இங்கு வந்து இதை யளித்தோம்' எனக் கேட்ட மீராபாய் மிகவும் சந்தோஷித்து அம்மாலையைப் பெற்றுக் கிருஷ்ணன் கழுத்தில் போட்டாள். பிறகு அக்பரும் தோழரும் டில்லிக்குச் சென்றனர்.

இவ்விதம் இரண்டு பைராகிகள் வந்து மீராவிற்கு முத்துமாலை கொடுத்த விஷயம் ராணாவின் செவிக்கெட்டியது. அவர் ஆச்சர்யமுடையவராய் கோயிலுக்கு வந்து அம்மாலையைக் கண்டு அதன் அழகிலிருந்து இது ஒரு அரசன் அணிந்ததாகத்தானிருக்க வேண்டுமென்று நிச்சயித்து விசாரிக்குங்கால் வந்தவர்களின் உண்மையை அறிந்தார். உடனே இராணாவுக்கு மீராவிடம் வெறுப்பு ஏற்பட்டது. இதுவரையில் இல்லாமல் தன் காலத்தில் இராஜஸ்திரீயை ஓர் மகம்மதியன் கண்டு பேச நேரிட்டதே என்று வருந்தி மீராவை அந்நாட்டை விட்டு வெளியே செல்ல உத்தரவிட்டார்.

அரசனின் ஆக்ஞையை அறிந்த மீராபாய் அந்நாட்டை விட்டு வெளியேறி வேறு ஓரிடத்தில் தன் க்ருஷ்ணனுக்கு ஓர் கோயில் நிர்மாணித்து பக்தகோஷ்டிகளுடன் பஜனை செய்து கொண்டிருந்தார்.

இந்த இடத்திலும் அநேக பக்தர்கள்வந்து மீராவை தர்சித்து பஜனானந்தத்தில் மூழ்கிக் கொண்டிருந்தனர். இவளது புகழ் விசேஷமாய் எங்கும் பரவுவதைக் கேட்ட ராணா எப்படியாவது இவளைக் கொன்றுவிட வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் பல தந்திரங்கள் செய்தான். ஒரு ஸமயம் ஒரு நல்ல ஸர்ப்பத்தைப் பிடித்து அதை ஒரு பெட்டிக்குள் அடைத்து, இதில் ஒரு பெரிய புஷ்பமாலை இருக்கிறது. இதைக் கிருஷ்ணனுக்கு போடவேண்டும் என்று சொல்லி மீராவிடம் கொடுக்கும்படி அனுப்பினான். பெட்டியைத் திறந்தவுடன் பாம்பினால் கடிக்கப்பட்டு மீரா உயிர் துறப்பாள் என்பது ராணாவின் எண்ணம். ஆனால் அவனன்றி அணுவுமசையாதாதலால் மீரா அதை வாங்கித் திறந்து பார்க்கும்போது அது உண்மையான புஷ்பமாலையாகவேயிருந்தது.

மற்றோர் முறை ஓர் கிண்ணத்தில் கொடிய விஷத்தை யனுப்பி இது க்ருஷ்ண சரணாம்ருதம் என்று பானம் பண்ணச்சொன்னான். அவள் அதைப் பானம் செய்தவுடன் அது விஷமென்று தெரிவிப்பதற்கறிகுறியாய் அவளுடைய க்ருஷ்ணன் விக்ரஹம் கறுத்துவிட்டது. மீராவுக்கு ஒன்றும் நேரவில்லை. பிறகு ராணாவானவர் இவளைக்கொல்வது தன்னாலாகாத காரியம் என்று தெரிந்து இவளால் தனக்கு மிகவும் மானஹானி ஏற்படுவதாயும் ஆகையால் இவள்எப்படியாவது உயிர்துறக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

மீராவானவள் கணவன் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து உயிரை விடுவதற்காக ஸமீபத்திலிருந்த ஓர் நதியில் போய் விழுந்தாள் உடனே கண்ணன் அவளை கரை ஏற்றி "மீரா நீ குற்றமற்றவள். உன் கணவன் வார்த்தைக்காக நீ உயிர் துறப்பதாக நினைத்த சரீரம் வேறு. இப்போதிருக்கும் இந்த சரீரம் வேறு. இது நான் உனக்குக் கொடுத்தது. இனி நீ பிருந்தாவனம் சென்று க்ருஷ்ண பக்தி செய்துகொண்டிரு" என்று சொல்லி மறைந்தார்.

உடனே மீராபாய் பிருந்தாவனம் சென்று பக்தகோஷ்டிகளுடன் கண்ணனை பஜித்துக் கொண்டிருந்தாள்.

மீராபாய் மிவார் நாட்டைவிட்டுச் சென்றது முதல் அந்நாட்டிலுள்ளவர்கள் பஞ்சத்தால் வருந்தினார்கள். குடிகள் ராணாவை வெறுத்தனர். இப்போது ராணாவுக்கு மீரா விஷயமாய்த் தான் நடந்துகொண்டது தப்பு என்பது தெரியவந்தது. அவனது கோபம் தணிந்தது. மீராவைத் துன்புறுத்தியது அவன் மனம் சகிக்கவில்லை. பிருந்தாவனத்தில் வசிக்கும் மீராவைப் பார்ப்பதற்காக மாறு வேஷத்துடன் பிருந்தாவனம் சென்று மீராவின் அடிபணிந்து தன் குற்றங்களை மன்னிக்கும்படி வேண்டினான். மீராபாய் "ஸ்வாமி உலகத்தை ரக்ஷிக்கும் ஸர்வவல்லமையுள்ள கண்ணனிருக்கையில் நான் யார் உமது குற்றத்தை மன்னிக்க, ஆதலால் இங்கு விளங்கும் கண்ணனைச்சரணமடையும்" என்றுபதேசித்தாள். உடனே ராணா தன் நிஜ ரூபத்தைக் காட்டி உன் பக்தியின் பெருமையை அறியாது நான் செய்த தப்புக்களை மறந்து என்னை ஏற்றுக்கொள் என்றான்.

மீராபாய் கண்ணீர் வடித்து கணவன் பாதத்தில் விழுந்து 'நாதா இந்த ஏழையின் ஞாபகம் தங்களுக்கு வந்தது என் பாக்யம். தாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை. எல்லாம் கண்ணன் செயல். அவனைப்பணிவோம்' என்று சொல்லி கணவனைத் தேற்றி கண்ணன்மீது இரண்டு பாடல்கள் பாடினாள். உடனே அங்கிருந்த கிருஷ்ண விக்ரஹம் தனது மார்பில் இடங்கொடுக்க மீரா அதற்குட்புகுந்து இரண்டறக்கலந்தாள்.

S. இராமசந்த்ரஹரி:

---


## அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. திருப்புகழ் பாராயண திருமுறை | 1 | 4 | 0 |
| 2, நால்வர் சரித்திரம் காலிகோ | 0 | 12 | 0 |
| 3. " ராப்பர் | 0 | 10 | 0 |
| 4. பாரதசாரம் | 1 | 2 | 0 |
| 5. ஸ்ரீ ராமாயண வினாவிடை | 1 | 8 | 0 |
| 6. பஞ்சரத்னம் | 0 | 12 | 0 |
| 7. ஷண்முக விஜயம், | 0 | 12 | 0 |
| 8. ஸ்ரீபாலஷண்முக விஜயம் | 0 | 8 | 0 |
| 9. ருக்மணி | 0 | 8 | 0 |
| 10. தேசிங்குராஜன் | 0 | 10 | 0 |
| 11. ராஜாதேசிங்கு | 0 | 5 | 0 |
| 12. திருக்குறள் நீதிக்கதைகள். | 0 | 10 | 0 |
| 13. தசகுமார சரித்திரம் | 0 | 6 | 0 |
| 14. திருப்புகழ் ரத்னமாலை | 0 | 3 | 0 |
| 15. கந்தரலங்காரம் | 0 | 2 | 0 |
| 16. திருஞான சம்பந்தர் | 0 | 2 | 6 |
| 17. விசாரசன்மர் | 0 | 3 | 0 |
| 18. மூர்த்தி நாயனார் | 0 | 3 | 0 |
| 19. திருநாவுக்கரசர். | 0 | 2 | 0 |
| 20. குகன். | 0 | 4 | 0 |
| 21. திருவகுப்பு | 0 | 4 | 0 |
| 22. பாராயணத் திருப்புகழ் | 0 | 2 | 0 |
| 23. வேல், மயில் விருத்தம். | 0 | 1 | 0 |
| 24. திருப்புகழ் விருத்தியுரை. | 8 | 0 | 0 |
| 25. திராவிட வேதத்திரட்டு | 3 | 8 | 0 |

கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஓர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

4 ௯ 9

24 2-3-1939

215273

1444

1444

215273

115

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 24 | கும்பகோணம் கலி5039 பகுதான்ய-வரு மாசி-மீ 19உ 1939-வரு மார்ச்சு-மீ 2உ | வா 9

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

### ராஜிநாமா அங்கீகாரம்.

ஸர்தார் படேல் முதலிய காங்கிரஸ் கார்யக்கமிட்டி மெம்பர்கள் 13 பேரும் அனுப்பிய ராஜிநாமாவை ஸ்ரீமான் போஸ் அங்கீகரித்து விட்டார்.

புதிய கார்யக்கமிட்டி மெம்பர்களை நியமிக்கவும் அவர் ஏற்பாடு செய்து வருகிறார். அதுவரை ஸுபாஷ் போஸும் சரத்சந்திர போஸும் ஸகல கார்யங்களையும் அதிகார தோரணையில் கவனித்து வருவார்கள்.

சட்ட ஸபை வேலைகளை மேற்பார்வையிட்டு வந்த பார்லிமெண்டரி சப் கமிட்டியும் கலைந்து விட்டதால் அதன் வேலையையும் போஸ் ஸஹோதரர்களே பார்த்து வருவார்கள்.

காந்திஜீ திரிபுரா காங்கிரசுக்கு வருவது சந்தேஹமென்று சுபாஷ் போசுக்குக்கடிதம் எழுதியிருக்கிறார். எவ்வளவு அசௌகர்யமிருந்தபோதிலும் ஸ்ரீமான் போஸ் 5உயன்று திரிபுரிக்கு புறப்படுவாரென்று தெரிகிறது.

சென்னை மந்திரிகள் பலரும் திரிபுரிக்கு புறப்பட்டு விட்டார்கள்.

### ஸ்பெயின் சண்டை ஓய்வு.

ஸ்பெயின் குடியரசைத் தாக்கி ஜனரல் பிராங்கோ நடத்திவந்த யுத்தத்தில் அவர் பெரும்பாலும் வெற்றியடைந்து அத்தேசத்தை ஆக்ரமித்துக்கொண்டு விட்டார்.

பிராங்கோ அரசாட்சியை தாங்கள் அங்கீகரிப்பதாக பிரிட்டனும், பிரான்ஸும் வெளியிட்டிருக்கின்றன.

### காந்திஜியின் ராஜ்கோட் விஜயம்.
ஸத்யாக்ரஹம் நிறுத்தப்பட்டது.

ராஜ்கோட்டிலிருந்து முரண்பட்டவைகளும், உண்மையற்றவைகளுமான செய்திகள் வெளிவந்துகொண்டிருப்பதால் அவைகளின் உண்மையை அறியவும், அந்த தேச மஹாராஜாவுடன் ராஜிபேசவும் காந்திஜி ராஜ்கோட்டுக்குப் புறப்பட்டுப்போயிருக்கிறார். தாற்காலிகமாக ராஜ்கோட் ஸத்யாக்ரஹம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

### கவர்னர் மரணம்.

வங்காள கவர்னரான லார்டு பிரபோன் சில தினங்களுக்கு காலகதி அடைந்தார். அவருக்கு வயது 43 தான். இந்தியாவில் எல்லாப் பிரிவினருடையவும் நன்மதிப்பை இவர் பெற்றிருந்தார்.

உத்யோகம் வகிக்கும் காலத்திலேயே கவர்னர்கள் இறப்பது இதுவரை நேர்ந்ததில்லை.

### ஒரு லக்ஷம் தொண்டர் வருவார்கள்.
ஹைதராபாத் ஸத்யாக்ரஹம்.

ஹைதராபாத்தில் ஹிந்துக்களின் மத உரிமையைக் காப்பாற்ற நடந்துவரும் ஸத்யாக்ரஹத்திற்கு ஆர்ய ஸமாஜிகள் ஒரு லக்ஷம் தொண்டர்களை சேர்க்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள், இந்தியாவிலுள்ள 2500 ஆர்ய ஸமாஜக் கிளைஸபைகளுக்கும் இதுவிஷயமாக சுற்றுக்கடிதம் அனுப்பட்டிருக்கிறது.

### ஹிந்துக் கோவிலில்
மஹம்மதியருக்கு உபசாரம்.

மைசூர் திவானான ஸர் மீர்ஸா இஸ்மேயில் உடுப்பிக்கு வந்தார். அங்கு அவருக்கு ஹிந்துக்கள் விசேஷ உபசாரம் நடத்தினர். பாலிமார் மடாதிபதிகளும் வேறு பல பொது ஸ்தாபனங்களும் திவானை ஸந்தித்து மரியாதை செய்தனர்.

உடுப்பி கோவிலுக்கு இஸ்மேயில் அழைத்துக்கொண்டு போகப்பட்டார். அங்கு அவருக்கு கோவில் மரியாதைகள் செய்யப்பட்டு உபசாரங்களும் தேவாலய அதிகாரிகளால் செய்யப்பட்டனவாம்.

### 23 ஆயிரம் ரூபாய் செலவு.

கனம் வைஸ்ராய் அவர்கள் தென்னிந்தியாவிற்கு வந்துபோனதில் ரயில்வே லயன்களிலும் போலீஸ் பந்தோபஸ்து செய்ததற்காக சென்னை ஸர்க்கார் 23 ஆயிரம் வரையில் செலவு செய்ததாக பதில்கூறப்பட்டது.

### பாங்கு பணத்தைக் கையாடியவர்.
3 வருஷக் கடுங்காவல்.

ஸ்ரீமான் நுங்கம்பாக்கம் கிருஷ்ணமாசாரியர் என்பவர் கிறிஸ்தியன் கோவாபிரேடிவ் ஸெண்ட்ரல் பாங்கி பணம் ஒரு லக்ஷத்து 20 ஆயிரத்தைக் கையாடிய குற்றத்திற்காக ஹைகோர்ட்டாரால் 3 வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். எதிரி 5 வருஷமாக மோசம் செய்வதையே ஓர் தொழிலாக வைத்துக்கொண்டிருந்தாரென்று ஸர்க்கார் வக்கீல் தெரிவித்தார். எதிரி தன் குற்றங்களை ஒப்புக்கொண்டதால் ஜட்ஜ் கருணைகூர்ந்து குறைந்த தண்டனை விதித்தார்.

### ஓம்— மண்டலி தலைவர்மீது கேஸ்.
சிஷ்யையின் விநோத வாக்குமூலம்.

ஓம் மண்டலி ஸ்தாபகரான தாத லேக்ராஜ் என்பவர் மீது ஸிந்து ஹைதராபாத் கோர்ட்டிலும், வேறு பல கோர்ட்டிலும் கேஸ் தொடரப்பட்டிருக்கிறது. ஹைதராபாத் கோர்ட்டில் அவர்மீது கேஸ் விசாரணை நடக்கும்போது அவருடைய அந்தரங்க சிஷ்யையான ஒரு ஸ்திரீ வாக்குமூலம் கொடுத்தாள்.

லேக்ராஜ் தம்முடைய சிஷ்யைகளை நாட்டியமாடும்படி செய்து மகிழ்ச்சியடைவதென்றும், பிரம்ம வித்யையை உபதேசித்த யுவதிகளை சிஷ்யைகளென்ற தோரணையில் கட்டி முத்தமிடுவது அவருடைய வழக்கமென்றும், சிஷ்யைகள் இதை கெட்ட எண்ணமாக பாவிப்பதில்லையென்றும், தாதா லேக்ராஜ் கிருஷ்ணபகவானைப்போல் பாபமற்றவரென்றும் அந்த சிஷ்யை வாக்குமூலம் கொடுத்தாள். என்னே! வெட்கக்கேடு?

லேக்ராஜ் வசம் சிக்கிக்கொண்டிருக்கிற குல ஸ்திரீகளை விடுவிக்க ஸிந்து பிரதமமந்திரி பலத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார். அந்த மாகாணமெங்கும் இதே பேச்சாகவும் பரப்பாகவுமிருக்கிறதாம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

## ஸந்த்யோபாஸனை.

### 3. உபாஸ்ய பேதம்.

வி:— ஒரு உபாஸனையில் உபாஸ்யம் ஒன்றுதான் இருக்க முடியும். ஸூர்ய மண்டலம் அல்லது ஹிரண்ய கர்ப்பர் அல்லது ஈசுவரன் அல்லது பிரஹ்மம் என்றெல்லாம் எப்படி இருக்க முடியும்?

ம:— ஸூர்யமண்டலம் அல்லது ஆதித்ய தேவன், அல்லது, அல்லது, என்று நான் சொல்லவேயில்லையே?

வி:— அப்படியானால், ஸூர்ய மண்டலமும், ஆதித்யதேவனும், ஹிரண்ய கர்ப்பரும், ஈசுவரனும், பிரஹ்மாவும் எல்லாம் சேர்ந்து உபாஸ்யம் என்று தங்கள் அபிப்பிராயமா?

ம:— நான் அப்படியும் சொல்லவில்லை.

வி:— தங்கள் வாக்கியங்களை நான் எப்படித்தான் அர்த்தம்பண்ணிக் கொள்கிறது?

ம:— உபாஸ்யன் ஆதித்யதேவன் என்று நான் எப்பொழுது சொன்னேன்?

வி:— ஸ்தூலமாய் ஜடமாய் எரிந்துகொண்டிருக்கிற கோளக பிண்டம் உபாஸ்யமாகாது என்று நான் சொன்னவுடன்.

ம:— நீங்கள் அவ்விதம் சொல்வதற்கு முன், அப்பிண்டமே உபாஸ்யமென்று சொன்னேன் அல்லவா?

வி:—ஆம்.

ம:— ஸூர்யமண்டலம் வேண்டுமானாலும் உபாஸ்யமாயிருக்கட்டும்; ஆதித்ய தேவன் வேண்டுமானாலும் உபாஸ்யனாயிருக்கட்டும், என்று விகல்ப பக்ஷமாக நான் சொல்லவேயில்லை. உள்ளிருக்கிற சேதனனை அறிய முடியாதவனுக்கு ஸ்தூலமான பிம்பமே உபாஸ்யம். அசேதனத்தை உபாஸ்யமாக ஒப்புக்கொள்ளத் தயாரில்லாதவனுக்கு ஆதித்ய தேவனே உபாஸ்யன் ஆகையால் உபாஸ்யம் ஒன்றுதான்.

உபாஸனை செய்யும் ஸாதகனுடைய யோக்கியதைக்குத் தக்கபடி உபாஸ்யத்தின் தன்மை மாறியிருக்கும். இன்னம் கொஞ்சம் விசாரித்து ஆதித்ய தேவனையும் உபாஸ்யனாக ஒப்புக்கொள்ளாத பக்தனுக்கு, உபாஸ்ய வஸ்து இன்னம் ஸூக்ஷ்மமாகும்போது, ஹிரண்யகர்ப்பர் என்கிறோம். இதுவும் போதாது, திருப்திகாமாயில்லையென்று நினைக்கும் பக்தன் விஷயத்தில், நீ உபாஸிப்பது பரமேசுவரனை என்போம். ஈசுவரத் தன்மையும்கூட அவரைப் பரிச்சேதப்படுத்துகிறதென்று நினைக்க ஆரம்பிக்கும்போது, அபரிச்சின்னமான பிரஹ்மமே தான் உபாஸ்யம் என்று சொல்கிறோம்.

வி.— இதினால், ஸந்த்யையில் உபாஸனைக்கு விஷயமானவர் யார் என்று தீர்மானமாகச் சொல்லமுடியாது, உபாஸகனுடைய மனப்பரிபாகம் புத்தியின் பரிசுத்தி முதலியவைகளைக் கவனித்துத் தான் சொல்லமுடியும், என்று தாங்கள் சொல்வது?

ம:— உபாஸகனை விட்டுவிட்டால் உபாஸ்யமே ஏது? உபாஸகனின் தன்மையை வைத்துத்தான் உபாஸ்யத்தின் தன்மையைத் தீர்மானிக்கவேண்டும்.

வி:—அதெப்படி?

ம:— உதாஹரணத்திற்காக என்னையே எடுத்துக்கொள்வோம். நீங்கள் எல்லாரும் என்னிடம் மரியாதை காட்டுகிறீர்கள். உங்களுடைய மரியாதைக்கு விஷயம் பொதுவாக நான் என்றிருந்தாலும், உங்கள் மனோபாவத்திற்குத் தக்கபடி அது வெவ்வேறாகும். ஸாமான்ய ஜனங்கள் பளபளவென்று பிரகாசிக்கிற பிருதுகளால் சூழப்பட்டிருக்கிற என்னைப் பார்த்து ஸந்தோஷித்து மரியாதை செய்வார்கள். அவர்களுடைய மனோபாவமும் மரியாதையும் அந்த பிருதுகளுக்கே சேர்ந்தன; என்வரை வரா. ஏனென்றால், நான் இல்லாமல் வேறு யாரேனும் இதே பிருதுகளுடன் வந்தால், இதே மரியாதையைக் காட்டுவார்கள். ஆகையால் அவர்கள் செய்யும் மரியாதை வாஸ்தவத்தில் எனக்கு இல்லை, என் பிருதுகளுக்கே. சிலர் நான் வகிக்கும் ஸ்தானத்திற்காகவும் நான் இருக்கும் ஆசிரமத்திற்காகவும் என்னை மதிப்பார்கள்; யார் இந்த ஸ்தானத்திலாவது ஆசிரமத்திலாவது இருந்தாலும் இதே மரியாதையை அவரிடம் வைப்பார்கள். ஆகையால் அவர்கள் செய்யும் மரியாதை இந்த ஸ்தானத்திற்கும் ஆசிரமத்துக்குமே தவிர எனக்கு இல்லை. மற்றும் சிலர் அந்த ஸ்தானத்தையாவது ஆசிரமத்தையாவது கவனிக்காமல், நான் எங்கே போனாலும் எப்படியிருந்தாலும், சுசுரூஷை செய்வார்கள். அவர்களுடைய மரியாதைக்கு விஷயம் என் ஸ்தூல சரீரம். இன்னம் சிலர் என் சரீரம் கருப்பாகவோ, அவலக்ஷணமாகவோ, வியாதியினால் பீடிக்கப்பட்டோ, எப்படியிருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல், என் மனது சுத்தமாகவும் நல்ல ஸ்வபாவத்துடனும், என் புத்தி தெளிவாகவும் நல்ல வைதுஷ்யம் அல்லது வேறு மேலான யோக்கியதையுடனும், இருப்பதாகத் தோன்றினால் அதற்காக என்னிடம் மதிப்புவைப்பார்கள். உங்கள் எல்லாரிடத்திலும் இருப்பது போல என்னிடத்திலும் பிரகாசிக்கிற சைதன்யாம்சத்திற்காக என்னிடம் மரியாதை வைக்கிறவர்கள் மிகவும் ஸ்வல்பம்.

வி:— தங்களிடம் வருகிற எல்லா பக்தர்களுடைய மனதும் ஒரேமாதிரி பரிபக்குவதசையை அடைந்திருக்க முடியாதென்பது வாஸ்தவமே.

ம:— அப்படியே ஸாமான்யமாகக் கவனித்தால், பிருதுகளுக்காக மரியாதை செய்கிறவர்களும், ஸ்தானம் ஆசிரமத்தை உத்தேசித்து மரியாதை செய்கிறவர்களும், என் சரீரத்திற்கு மரியாதை செய்கிறவர்களும், மனோபுத்திகளுக்கு மரியாதை செய்கிறவர்களும், உள்ளிருக்கிற சைதன்யாம்சத்திற்கு மரியாதை செய்கிறவர்களும், எல்லாருமே தங்கள் தங்கள் மரியாதையைக் காட்டும் பொருட்டு வந்தனம் செய்வது ஒரே விதமாகத்தான் இருக்கும். அவர்களைப்பற்றி கவனிக்காமலே, அவர்கள் வந்தனம் செய்வது யாருக்கு என்று சொல்லுங்கள்.

வி:— பதில் சொல்வது மிகவும் சிரமம் தான்.

ம:— இதேமாதிரிதான் எந்த உபாஸனையிலும். வெளிப்பார்வையில், பிருதுகளுக்காக என்னிடம் மரியாதைவைக்கிறவனுக்கும் ஆத்ம சைதன்யத்திற்காக மரியாதை வைக்கிறவனுக்கும் வித்தியாஸம் தெரியாது. அப்படியே, மூடபக்தியுடன் ஸூர்ய ஜ்யோதிஸ்ஸைப் பார்த்து பிரார்த்திக்கிற பக்தனுக்கும், அபரிச்சின்னமாயிருக்கும் பிரஹ்மத்திற்கு இது ஒரு வெளிப்படையான குறிப்பு என்று அதே ஜ்யோதிஸ்ஸை உபாஸிக்கிற பக்தனுக்கும், வெளிப்பார்வையில் வித்தியாஸம் தெரியாது. ஆகையால், ஸந்த்யையில் உபாஸ்யன் யார் என்ற கேள்விக்கு நான் சொல்லிக்கொண்டுவந்த விதமாகத்தான் பதில் சொல்லமுடியும். அதாவது, பிரகாசித்துக்கொண்டிருக்கிற மண்டலத்திற்குமேல் யோசிக்க சக்தியற்றவனுக்கு அம் மண்டலமே உபாஸ்யம்; எவ்வளவு பிரகாசமாயிருந்தாலும் அசேதனம் தானே, அதை உபாஸிப்பதா, என்று நினைப்பவருக்கு அதித்யதேவனே உபாஸ்யன்; அவனையும் தன்னுடன் பரிச்சின்ன ஜீவகோஷ்டியில் சேர்க்கிறவனுக்கு ஸர்வ சரீரியான ஹிரண்ய கர்ப்பரே உபாஸ்யர்; எவ்வளவு பெரியவராயிருந்தாலும் அவரும் ஜீவன்தானே என்று நினைப்பவனுக்கு உபாஸ்யர் ஈசுவரனே யாவார்; ஈசுவரனும் ஸவிசேஷர் தானே என்று நினைப்பவனுக்கு அகண்டமான பிரஹ்மமே உபாஸ்யமாகும்.

வி:— ஸந்த்யோபாஸனை யென்று சிறிதாகத் தோன்றுகிற இந்த கர்மாவிலேயே மேல் மேல் போவதற்கு வேண்டிய எல்லாப் படிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று இப்பொழுது நன்கு தெரிந்துகொண்டேன்.

ம:— இதுமாத்திரமல்ல, இன்னம் கொஞ்சதூரம் ஆலோசித்துப் பார்த்தால், கர்மம், பக்தி, ஞானம் என்ற மூன்று ஸாதனங்களுமே இந்த நித்திய கர்மாவில் அங்கங்கே அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று நன்கு உணர்வீர்கள். ஆனால் இது வேறு விஷயம். ஸந்த்யாவந்தனம் சிறிதாகத் தோன்றினபோதிலும், அதுவே உத்தமமான மேல்படிகளுக்குக் கொண்டுபோய்விடப் போதுமானது. ஸாமான்யர்களுக்கு எப்படி உபயோகமோ, அப்படியே மேலானபடியிலிருக்கும் ஸாதகனுக்கும் உபயோகமாகும். இதன் பெருமையை உணராமலிருப்பதும் கார்யத்தில் உதாஸீனம் செய்வதும் பெரும் அசட்டுத்தனமாகும்.

## காஞ்சீபுரம்.

### ஸ்ரீ காஞ்சீ ஸனாதனதர்ம ஸேவா ஸங்கம்.

மேற்படி ஸங்கத்தின் ஆதரவில் ஆஸ்திக ஹிந்துக்களின் பொதுக்கூட்டமொன்று 1939-ஸூ பிப்ரவரி, 22உ புதவாரம் பெரிய காஞ்சீபுரம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காமகோடிபீட ஸ்ரீ சங்கராசார்யாள் ஸ்ரீமடத்தில் கூடியது. ஸபைக்கு ஸ்ரீ மடம் வித்வான் பிரம்மஸ்ரீ R K வெங்கட்ராம சாஸ்திரிகள் தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டார்.

ஸனாதனதர்ம ஸேவாஸங்கத்தின் கார்யதர்சி ஸ்ரீமான் M. K. ராமசந்திர சர்மா அவர்கள் பாலக்காட்டில் பிப்ரவரி 25, 26உ களில் கூடப்போகும் ஸனாதனதர்ம கான்பரன்ஸைப்பற்றியும் அன்று யோசிக்கவேண்டிய விஷயங்களைப்பற்றியும் கூறியதின்மீது பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டன,

1. ஆலயப்ரவேச முதலிய அதார்மிக சட்டங்களைக் கண்டித்து ஷை சட்டங்களை ரத்து செய்விப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யும்படிக்கும்.

2. நாளது பிப்ரவரி-மீ 25, 26உகளில் பாலக்காட்டில் நடக்கப்போகும் ஸனாதனதர்ம கான்பரன்ஸுக்கு ஸ்ரீமான் M. K. ராமசந்திர சர்மா அவர்களை இவ்வூர் வர்ணாசிரம தார்மிகர்களின் பிரதிநிதியாக அனுப்பும்படிக்கு தீர்மானிக்கப்பட்டது.

3. இவ்வூரிலிருந்து ஓர் பிரதிநிதியையனுப்பப் பிடிக்கும் செலவுக்காக ஸ்ரீ ஆசார்யாள் கருணையுடனனுப்பியிருக்கும் பண உதவி பெற்றுக்கொள்ளப்பட்டு இச் சபையின் பக்தி பூர்வமான வந்தனத்தையும் தெரிவிக்கும் படிக்கும்.

4. மேற்படி தீர்மானங்களை பத்திரிகைகளுக்கும், பாலக்காடு கான்பரன்ஸு கார்யதர்சிக்கும் ஸ்ரீ ஆசார்யாளுக்கும் அனுப்பும்படி தீர்மானிக்கப்பட்டது,

அக்ராஸனருக்கு வந்தனம் கூறி ஸபை கலைந்தது.

R. K. வெங்கட்ராம சாஸ்திரி.



# மூக பஞ்ச சதீ.

## மந்தஸ்மிதசதகம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

10. ச்வேதாபி ப்ரகடம் நிசாகர ருசாம் மாலின்ய மாதன்வதீ |
சீதாபி ஸ்மரபாவகம் பசுபதே:ஸந்துக்ஷயந்தீ ஸதா |
ஸ்வாபாவ்யாத் அதராச்ரிதாபி நமதாம் உச்சைர் திசந்தீ கதிம் காமாக்ஷி!
ஸ்புடம் அந்தரா ஸ்புரது ந:த்வன்மந்தஹாஸ ப்ரபா ||

காமாக்ஷி ஏ! காமாக்ஷியே! ச்வேதாபி— வெளுப்பாயிருந்த போதிலும். நிசாகர ருசாம்— சந்திரனுடைய காந்திகளுக்கு. ப்ரகடம்— அதிகமாக மாலின்யம்— கருநிறத்தை. ஆதன்வதீ உண்டாக்குகிறதாயும். சீதா குளிர்ந்ததா யிருந்தபோதிலும். ஸதா- எப்போதும். பசுபதே-: பரமசிவனுக்கு. ஸ்மர பாவகம்- மன்மதாக்னியை. ஸந்துக்ஷயந்தீ- மூட்டுகிறதாயும். ஸ்வாபாவ்யாத் ஸ்வபாவமாக. அதராச்ரிதாபி- கீழ் உதடை ஆச்ரயித்திருந்தபோதிலும். நமதாம்- ஸேவிப்பவர்களுக்கு. உச்சை: கதிம்- உயர்ந்த நிலைமையை. திசந்தீ- கொடுக்கிறதாயுமிருக்கிற. த்வன்மந்தஹாஸப்ரபா உன்னுடைய புன்சிரிப்பின காந்தியானது. ந: நம்முடைய. அந்த: உள்ளில் ஸ்புடம்- நன்றாக. ஸ்புரது- விளங்கட்டும்.

11. வக்த்ர ஸ்ரீ ஸரஸீஜலே தரளிதப்ரூவல்லி கல்லோலிதே |
காளிம்னா தததீ கடாக்ஷஜனுஷா மாதுவ்ரதீம் வ்யாப்ருதிம் |
நிர்நித்ராமல புண்டரீக குஹநா பாண்டித்யம் ஆபிப்ரதீ காமாக்ஷ்யா: ஸ்மித சாதுரீ மம மன: காதர்யமுன் மூலயேத் |

தரளித ப்ரூவல்லி கல்லோலிதே- அசைகிற புருவங்களென்கிற அலைகளுள்ள. வக்த்ரஸ்ரீ ஸரஸீஜலே- முகக்காந்தியாகிற தாமரைக்குள நீரில். நிர்நித்ரா மல புண்டரீக குஹநா பாண்டித்யம்- மலர்ந்த வெண்டாமரையை வஞ்சிப்பதிலுள்ள ஸாமர்த்தியத்தை (வெண்டாமரையின் காந்தியை) ஆபிப்ரதீ- அடைகிறதாயும். கடா க்ஷஜனுஷா- கடைக்கண் பார்வையிலிருந்து உண்டான. காளிம்னா- கருப்பினால், மாதுவ்ரதீம்- வண்டுகளுடையதான வ்யாப்ருதிம்- பாவுதலை தததீ- வஹிப்பதாயுமிருக்கிற. காமாக்ஷ்யா:- காமாக்ஷியினுடைய. ஸ்மித சாதுரீ- புன்சிரிப்பின் அழகானது மம- என்னுடைய. மன: காதர்யம்- மனதிலிருக்கும் கவலையை. உன்மூலயேத்- அடியோடு ஒழிக்கட்டும்.

குறிப்பு. அம்பாளுடைய முக காந்தி ப்ரவாஹம் பரவியிருப்பது ஒரு தடாகம் போலிருக்கிறது. தடாகத்தில் வெண்டாமரையும் வண்டும் இருக்குமல்லவா? அம்பாளுடைய புன் சிரிப்பு வெண்டாமரை போலவும், கடைக்கண் காந்தி வண்டு போலவும் இருக்கின்றன.

12. நித்யம் பாதிதபந்து ஜீவ மதரம் மைத்ரீ ஜுஷம் பல்லவை: |
சுத்தஸ்ய த்விஜமண்டலஸ்ய ச திரஸ்கர்த்தாரமப்யாச்ரிதா |
யா வைமல்ய வதீ ஸதைவ நமதாம் சேத: புனீதே தராம் |
காமாக்ஷ்யா: ஹ்ருதயம் ப்ரஸாதயது மே ஸா மந்த ஹாஸ ப்ரபா ||

நித்யம்- எப்போதும். பாதிதபந்து ஜீவம்- பந்துக்களுடைய ஜீவனை பாதிக்கிறதாயும் (சம்பாத்தம் பூவுக்கு ஸமமாயும்) பல்லவை: துஷ்டர்களோடு (தளிர்களோடு) மைத்ரீ ஜுஷம்- சினேஹமுள்ளதாயும். சுத்தஸ்ய-த்விஜமண்டலஸ்ய- சுத்தமான பிராம்மண ஸமூஹத்திற்கு (வெளுப்பான பற்களுடைய ஸமூஹத்திற்கு) திரஸ்கர்த்தாரம்- அவமானம் செய்வதாயும் (மறைப்பதாயும்) உள்ள அதரம்- உதட்டை (கீழ் மனிதனை) ஆச்ரிதாபி- ஆச்ரயித்திருந்த போதிலும் யா- எந்த புன் சிரிப்பானது. வைமல்யவதீ- பாபமற்றதாயிருந்து கொண்டு (வெளுப்பாயிருந்து கொண்டு) ஸதைவ- எப்போதும் நமதாம்- ஸேவிப்பவர்களுடைய சேத:- மனதை புனீதே தராம்- மிகவும் பரிசுத்தமாக்குகிறதோ. ஸா- அப்படிப்பட்ட காமாக்ஷ்யா:- காமாக்ஷியினுடைய. மந்தஹாஸ ப்ரபா- புன்சிரிப்பின் காந்தியானது. மே- என்னுடைய ஹ்ருதயம்-மனதை. ப்ரஸாதயது தெளிவிக்கட்டும்.

குறிப்பு- பிராம்மணர்களையும், பந்துக்களையும் உபத்ரவித்தும் கெட்டவர்களோடு சேர்ந்துமிருக்கும் ஒரு கீழ்பட்ட மனிதனை அண்டி நிற்கும் ஒரு வஸ்து, ஸ்வயம் பாபமற்றதாய், தன்னிடம் வணங்கிநிற்பவர்களின் மனத்தையும் பரிசுத்தப்படுத்துவது ஆச்சர்யமல்லவா என்று சிலேஷையால் வேடிக்கையாகப்பேசப்படுகிறது

13 த்ருஹ்யந்தீ தமஸே முஹு: குமுதினீஸாஹாய மாபிப்ரதீ |
யாந்தீ சந்த்ர கிசோர சேகர வபுஸ்ஸௌதாங்கணே ப்ரேங்கணம் |
ஞானம்போநிதி வீசிகாம் ஸுமநஸாம் கூலங்கஷாம் குர்வதீ |
காமாக்ஷ்யா: ஸ்மித கௌமுதீ ஹரதுமே ஸம்ஸார தாபோதயம் ||

முஹு:- அடிக்கடி தமஸே- இருளை (அஞ்ஞானத்தை) த்ருஹ்யந்தீ போக்கடிக்கிறதாயும். குமுதினீ ஸாஹாய்யம் ஆம்பலுக்கு உதவியை (ஆம்பலோடு ஒற்றுமையை) ஆபிப்ரதீ- அடைகிறதாயும் சந்த்ர கிசோர சேகர வபுஸ்ஸௌதாங்கணே- சந்த்ரசேகரனுடைய சரீரமாகிற உப்பரிகையில். ப்ரேங்கணம் யாந்தீ- உலாவுகிறதாயும். ஸுமனஸாம்-தேவதைகளுடைய. ஞானம்போநிதி வீசிகாம், ஞானமென்கிற ஸமுத்ரத்தின் அலையை. கூலங்கஷாம் குர்வதீ- அதிகமாக்குகிறதாயுமிருக்கிற. காமாக்ஷ்யா:- காமாக்ஷியினுடைய ஸ்மித கௌமுதீ- புன்சிரிப்பாகிற நிலாவானது. மே- எனது ஸம்ஸார தாபோதயம்- ஸம்ஸார தாபத்தின் உத்பத்தியை. ஹரது- போக்கடிக்கட்டும்.

குறிப்பு- நிலா இருளை நீக்கும். ஆம்பலுக்குத்துணையாயிருக்கும். மாளிகைத்தளத்தில் தவழும். ஸமுத்திரத்தை அலைபுரள வளர்க்கும். இந்தக்காரியங்களை அம்பாளுடைய புன்சிரிப்பு நிலாவும் செய்கிறது.

14. காச்மீரத்ரவதாது கர்தமருசா கல்மாஷதாம் பிப்ரதீ |
ஹம்ஸௌகைரிவ குர்வதீபரிசிதிம் ஹாரீக்ருதைர் மௌக்திகை: |
வக்ஷோஜந்ம துஷார சைல கடகே ஸஞ்சாரமாதந்வதீ |
காமாக்ஷ்யா ம்ருதுளஸ்மித த்யுதிமயீ பாகீரதி பாஸதே ||

காமாக்ஷ்யா:- காமாக்ஷியினுடைய ம்ருதுளஸ்மித த்யுதிமயீ அழகான மந்த ஹாஸகாந்தியாகிற பாகீரதீ- கங்கையானது. காச்மீரத்ரவதாது கர்தமருசா- குங்குமக்குழம்பின் காந்தியால். கல்மாஷதாம்- பிப்ரதீ- கலங்கின நிலைமை அடைந்ததாயும். ஹாரீக்ருதை: மௌக்திகை:- ஹாரத்திலுள்ள முத்துக்களோடு. ஹம்ஸௌகைரிவ பரிசிதம்- ஹம்ஸக்கூட்டங்களோடு ஸஹவாஸத்தை. குர்வதீ- செய்கிறதாயும் வக்ஷோஜன்ம துஷார சைலகடகே- ஸ்தனபாரங்களாகிற ஹிமய மலையின் தாழ்வரையில். ஸஞ்சாரம் ஆதன்வதீ ஸஞ்சாரத்தைச்செய்கிறதாயும் பாஸதே- விளங்குகிறது.

குறிப்பு- கங்கை ஹிமயமலையிலிருந்து வெளியாகி, ஸரஸ்வதி நதியோடு கலக்கும்போது வேறொரு நிறம் பெற்று, ஆங்காங்கு அன்ன பக்ஷிகளோடு கூடியதாயிருக்கும். அம்பாளுடைய புன்சிரி என்னும் கங்கைக்கும் இவைகள் பொருந்தியிருக்கின்றன.

(தொடரும்.)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்

பகுதான்யஞு மாசி-மீ 17உ

## மதவிஷயத்தில் சுய நிர்ணயம் வேண்டாமா ?

கேரள ஸநாதனதர்ம ஸம்மேளனமானது பாலக்காட்டில் மிக்க வெற்றிகரமாக நடந்து முடிந்தது. அந்த தேசத்தில் மிகச்செல்வாக்குப் பெற்றவர்களும் சிறந்த தார்மிகர்களுமான ஸர் கொல்லங்கோடு வாஸுதேவ ராஜா, ஸ்ரீயுத ஜாமோரின், ஸ்ரீ கோமன் நாயர், டாக்டர் சங்கரநாராயண அய்யர் போன்றவர்கள், நமது ஸநாதன தர்மத்திற்கு ஏற்பட்டுள்ள உபத்ரவங்களைப்பற்றியும், முக்யமாக ஆலயப்பிரவேசச் சட்டத்தைப்பற்றியும் வெகு தீவ்ரமான அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். சென்னை சட்டஸபையில் மலையாள ஆலயப்பிரவேச சட்டம் இயற்றியபின் தார்மிக ஸமூஹமானது, நம்பிக்கையிழந்ததுபோலவும் பரிஹாரம் தேடச் சக்தியற்றதுபோலவும் தவித்து உத்ஸாஹக்குறைவடைந்திருக்கும் நிலைமையில் இந்த மஹாநாடானது நம்மவர்களைத் தட்டியெழுப்பி தைர்யமூட்டுவதாயும், பிரதிப் பிரயோஜனத்தைக் கருதாமல் நமது கடமைச் செய்துகொண்டு போகும்படி வழிகாட்டுவதாயுமிருப்பது விசேஷமானது. இந்த மஹாநாட்டின் கிளர்ச்சிமூலம் அத்தேச ஜனங்கள் ஒன்றுபட்டு, அங்கு ஏற்படவிருக்கும் பெரிய அதர்மத்தை ஸகல வழிகளிலும் முறியடிக்க முன்வருவார்களென்று தார்மிகஉலகம் ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

அங்கு பேசிய தலைவர்கள் யாவரும் ஒருமுகமாக ஆலயப்பிரவேச அநீதியைப் பலமாகக் கண்டித்ததுடன், நமக்கு மத விஷயத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பெரிய அனர்த்தத்தை முக்யமாகக் குறிப்பிட்டார்கள். இத்தேசத்தில் தற்போது இருந்துவரும் ஏனைய மதஸ்தர்கள் அனுபவத்துவரும் மத ஸ்வாதந்த்ரியத்தைப் பார்க்கையில் ஹிந்து மதத்தினர், அதிலும் முக்யமாக வைதிக தர்மத்தை அனுஸரிப்பவர்களின் கதியானது மிகவும் அபாயகரமானதாக இருந்துவருவது தெரியவரும். கிறிஸ்தவர், மஹம்மதியர் போன்றவர்களின் மத விஷயத்தில் சட்டஸபைகளோ, தனிப்பட்டவர்களோ பிரவேசிக்க முடியாமல் பந்தோபஸ்து ஏற்பட்டிருக்கிறது. அந்த ஸமூஹத்தாரும் தங்கள் மதாசார விஷயமான நிர்ணயங்களைப் பிறர் நிச்சயிக்க இடம் கொடுக்காமல் தாங்களே அந்த உரிமைகளை வஹித்து வருகிறார்கள். இந்த தத்வமானது ஹிந்துமத விஷயத்தில்மட்டும் விபரீதமாக இருப்பது விசனிக்கத்தக்கது.

கவர்ன்மெண்டாரும் ஹிந்து மதத்தில் பிரவேசித்து விபரீதம் செய்வதுடன், ஹிந்துக்களில் சிலரும் அந்த அநீதிக்கு உடந்தையாயிருந்து தங்கள் சிண்டைப் பிறரிடம் சிக்கவைத்துக்கொள்ளும் இழிவான கார்யத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

ராஜ்ய விஷயத்தில் சுயநிர்ணயக் கொள்கையானது தற்காலம் எங்கும் பலமாக வற்புறுத்தப்படுகிறது. இந்தியாவில் தீவ்ரவாதிகள் மிதவாதிகள் உள்பட எல்லாவித ராஜ்ய வாதிகளும் இந்தியர்களுக்கு வேண்டிய ராஜ்ய ஸ்வதந்த்ரம் எத்தகையதென்பதை இந்தியர்களே கூடி யோசித்து நிர்ணயிக்க வேண்டுமேயல்லது ஆங்கிலேயர் முதலிய அன்னியர்கள் நிர்ணயிக்க அதிகாரம் கிடையாதென்று பெரும் கிளர்ச்சி செய்கிறார்கள். இந்தியர்களுடைய பழக்க வழக்கங்களுக்கும், மனப்போக்குக்கும் ஏற்றபடி வேண்டியதை நிர்ணயிக்க இந்தியர்களால் முடியுமேயல்லது அந்நியர்களால் முடியாதென்பது இவர்களுடைய வாதமாகும். இது நியாயமென்றும், உண்மை நிறம்பியதென்றும் யாவரும் ஒப்புக்கொள்ளத் தடையில்லை.

ஆனால் ராஜ்ய அம்சத்திலேயே இந்த சுய நிர்ணயக் கொள்கை நியாயமாயிருக்கையில் முற்றிலும் மத ஸம்பந்தமான விஷயங்களில் சுயநிர்ணயக் கொள்கை இருக்கவேண்டியதின் அவச்யத்தைப் பாமரர் கூட மறுக்க முடியாது. அப்படியிருந்தும் தற்போதிய ராஜியவாதிகளாகக் கிளம்பியுள்ளவர் இந்த நியாயத்தை அறிந்தவர்களாயிருந்தும் விதண்டாவாதத்தினாலும், இருமாப்பினாலும், கக்ஷிபலச் செனுகையாலும் ஹிந்துக்களின் மதவிஷயமான சுயநிர்ணயக் கொள்கையைக் குலைக்க முற்பட்டிருக்கிறார்கள்.

ஜன ஸமூஹமனைத்தையும் பொதுவாக ஸம்பந்திக்கக் கூடிய விஷயங்களில் இவர்கள் சட்டதிட்டம் செய்ய அதிகாரம் படைத்திருந்தபோதிலும், ஒவ்வொரு வகுப்பாருக்கும் தனித்தனியாக ஏற்பட்ட மத விஷயத்தில் ஒரேவிதமான வழியைக் காட்டி நிர்ப்பந்திப்பது எவ்வளவு அநீதி! கிறிஸ்தவர்களுக்கு மதாசாரம் ஒருமாதிரி, ஜைன, பௌத்தாதிகளுக்கு ஒருமாதிரி. ஹிந்துக்களுக்குள்ளேயே இருக்கும் பற்பலப் பிரிவுகளும் ஒவ்வொரு மாதிரியாக ஆசாரங்களை அநுஷ்டித்து வருகின்றன. அந்தந்த மதஸ்தர்களும், அந்தந்தப் பிரிவினரும் தங்களுக்கு இஷ்டமானதும், பிடித்தமானதுமான மத விஷயத்தை நிர்ணயித்துக்கொண்டே ஆசரிக்கின்றன. அத்தகைய நிர்ணயத்தைச் செய்வது அவர்களுடைய உரிமையே. பிறர் இதில் தலையிட்டு "உனக்கு இதுதான் வேண்டும்" என்று நிர்ணயிப்பது பரிஹாஸாஸ்பதமாயிருப்பதுடன், ராஜிய மத தத்வங்களுக்கும் பிரஜா உரிமைகளுக்கும் முரண்பட்டவையென்பது நிச்சயம்.

இப்போதைய காங்கிரஸ ஸர்க்கார் நமக்கு மதச் சட்டாம்பிள்ளையாகத் தோன்றி மத தத்வத்தை நமக்கு நிர்ணயித்துக்கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். இதற்கு, மஹம்மதியர், கிறிஸ்தவர், ஐரோப்பியர், பஞ்சமர், போன்ற பற்பலஜாதி மதஸ்தர்கள் நிறம்பிய சட்டஸபையை உதவியாக உபயோகிக்கின்றனர். அவர்களெல்லோரும் சேர்ந்து ஹிந்து மததத்வம் இன்னதுதானென்று நமக்கு நிர்ணயித்துச் சொல்லுவார்களாம். அதன்படியேதான் நாம் ஆசரிக்கவேண்டும் இல்லையேல் சட்டமூலமான தண்டனையோ வேறு நிர்பந்தமோ ஏற்படும்.

இதுதான் தற்போதிய ஸர்க்காரின் கொள்கை. வேதம் பௌருஷேயமென்று சட்டஸபையில் நிர்ணயிக்கலாம். ஜாதி வியவஸ்தைகளும் ஜாதி நியமங்களும் வெறும் கற்பனையென்று முடிவுசெய்யலாம். இன்ன வயதில் இன்னமாதிரிதான் விவாஹ தர்மத்தைச் செய்யவேண்டுமென்று சட்டஸபை கட்டளையிடலாம். எவ்வளவு மதபக்தியுள்ள வைதிகதார்மியும் இந்த நிர்ணயப்படியே ஆசரிக்கவேணும். இத்தகைய அதிக்ரமமான கொள்கையின் கீழ் வைதிகர்கள் சிரமப்படவேண்டியிருக்கிறது. இந்தப் பெரிய அனர்த்தத்தை நிவர்த்தித்தாலல்லது நாம் அடிக்கடி கஷ்டப்படுத்தப்படுவோம் என்பதில் தடையில்லை. மஹம்மதியர்களுக்கும், கிருஸ்தவர்களுக்கும் மதவிஷயத்தில் சுய நிர்ணய உரிமையிருப்பதை இந்தக் காங்கிரஸ் அதிகாரிகள் அசைக்கமுடியவில்லை. அந்த நியாயத்தை ஏன் நம்மிடம் காட்டக் கூடாது?

நம்மை மட்டும் விரட்டுவானேன்? இதற்கு நமது தௌர்பல்யமும், உறுதியற்ற நிலைமையும் காரணமேயல்லது வேறில்லை. இத்தகைய பெரிய அனர்த்தத்திலிருந்து நாம் விடுபட்டு மற்ற மதஸ்தர்களைப்போல் பூர்ண மத உரிமையை அடையவேண்டுமானால் கேரள மஹாநாட்டில் நமது தலைவர்கள் கூறிய யோஜனைகளை தார்மிகர்கள் கட்டுப்பாடுடன் நிறைவேற்றிவைக்க வேண்டியது ஆவச்யகமானது.

### ஸர் பட்டம்.

பெடரல் கோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருந்த ஸ்ரீமான் ஜஸ்டிஸ் வரதாசாரியர் அவர்களுக்கு ராஜசக்ரவர்த்தியால் ஸர், பட்டம் கொடுக்கப்பட்டது.

கனம் வரதாசாரியர் 2 தினங்களுக்கு முன் டில்லி சேர்ந்து பெடரல் கோர்ட் ஜட்ஜ் பதவியை ஏற்றுக்கொண்டார்.

### காந்திஜியிடம் நம்பிக்கை.

தமிழ்நாடு காங்கிரஸ் காரர்களின் அறிக்கை.

தமிழ்நாட்டிலிருந்து திரிபுரி காங்கிரஸுக்கு பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறவர்களில் 187 பேர்கள் வரையில் தங்களுக்கு காந்திஜியிடமும் அவருடைய வேலைத்திட்டத்திலும் பூர்ண நம்பிக்கையிருப்பதாகக் கடிதமூலம் மாகாணத்தலைவருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். சட்டஸபை மெம்பர்களிலும் பெரும்பாலோர் தங்களுக்கு காந்திஜியிடம் நம்பிக்கை யிருப்பதாகக் கூறி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

### ஸர். கே. வி. ரெட்டியின் மனப்போக்கு !

சென்னை வரவு செலவு திட்டத்தைப்பற்றி ராஜாங்க ஸபையில் விவாதம் நடக்கையில், ஸர். கே. வி. ரெட்டியார் மது விலக்கைத் தாக்கி ஓர் அபிப்பிராயம் வெளியிட்டார். மதுவிலக்கு மூலம் ஸர்க்காருக்கு ஏராளமான நஷ்டத்தை ஏற்படுத்திக்கொண்டு, அதை ஸமாளிப்பதற்காகப் புதிய வரிகளை விதிப்பது அநியாயமென்று அவர் வாதித்தார்.

கணக்கற்ற குடிகாரர்களின் நன்மைக்காக குடிப்பழக்கமில்லாத அநேக ஏழைகள் ஏன் புதிய வரிகொடுத்துக் கஷ்டப்படவேண்டுமென்றும் அவர் கேட்டார்.

புதிய வரிமூலம் கலால் வருமானத்தை ஸரிக்கட்டிக்கொள்ளும் கொள்கையைவிட, குடியை விலக்காமல் விட்டுவதும் அந்த வருமானத்தை இழக்காமலிருப்பதுமே நல்லதென்று அவர் அபிப்பிராயத்தை தெரிவித்தார்.



# —கேரள—
# ஸநாதன தர்ம ஸம்மேளனம்.

## பாலக்காட்டில் நடந்தேறிய விபரம்.

## ஆலயப்பிரவேசச் சட்ட கண்டனம்.

ஏற்கனவே பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டிருந்தபடி கேரள ஸநாதனதர்ம மஹாநாடானது பாலக்காட்டில் 25, 26 தேதிகளில் மிகுந்த உத்ஸாஹத்துடன் நடந்தேறியது. கேரளத்திலிருந்தும், வெளி ஜில்லாக்களிலிருந்தும் அனேக பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். நம்பூதிரிகள் மிகவும் அதிகமாக வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. 500 பேர்கள் வரையில் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

மாஜி ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீமான் எம். ஆர். சங்கரய்யரவர்களால் ஹநுமத் த்வஜம் ஏற்றி வைக்கப்பட்டது. அப்போது வேத கோஷங்களும், வாத்ய கோஷங்களும் முழங்கின.

பிரம்மஸ்ரீ என். நடேசய்யர் முதலிய ஸநாதநத் தலைவர்களுக்கு பூர்ணகும்பம் கொடுத்து மரியாதைகள் செய்யப்பட்டன. ஊர்வலமும் நடந்தது.

முதல் தினம் மாலை 2 மணிக்கு மஹாநாடு ஆரம்பமாகியது. ஸ்ரீமான்களான கொல்லங்கோடு ஸர். வாஸுதேவ ராஜா, ராவ்பஹதூர் கிருஷ்ணவர்ம ராஜா, ராவ்சாஹிப் என். நடேசய்யர், ஸ்ரீ. உதயவர்ம ராஜா, புன்னத்தூர் ராஜா, டி. எஸ். ராமஸ்வாமி அய்யர் சென்னை, எம். கே. ராமசந்திர சர்மா காஞ்சீ, எஸ். ஸுப்ரமண்ய அய்யர், தேவகோட்டை. எம். ஆர். சங்கரய்யர், மாஜி ஜில்லாஜட்ஜ். பண்டிட் யு. பி. கிருஷ்ணமாசாரியர். எம். கே. வைத்தியநாதய்யர், எஸ். மஹாலிங்கய்யர் கும்பகோணம், தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்திரிகள், பண்டிட் ஸோமதேவ சர்மா போன்ற லௌகிக வைதிக பிரமுகர்கள் பலர் விஜயமாகியிருந்தனர், பிரபல பண்டிதர்களும் பலர் வந்திருந்தார்கள்.

கொல்லங்கோடு ஸர். வாஸுதேவ ராஜா அவர்கள் மஹாநாட்டை ஆரம்பம் செய்து வைத்து வெகு உருக்கமாக பிரஸங்கமொன்று செய்தார். முக்யமாக ஆலயப்பிரவேசச் சட்டமானது மத உரிமையைத் தகர்ப்பதாயிருப்பதாயும், இத்தகைய சட்டத்தைச் செய்ய சென்னை சட்டஸபைக்கு அதிகாரம் கிடையாதென்றும், பிரபல சட்ட நிபுணர்களிடமிருந்து இம்மாதிரி அபிப்பிராயம் தமக்குக் கிடைத்திருப்பதாயும், அதை வைத்துக்கொண்டு கோர்ட்டுகளில் நடவடிக்கை நடத்த உத்தேசமிருப்பதாயும், அடுத்த எலக்ஷனில் மதத்திற்குப் பாதுகாப்பு அளிக்க வாக்குறுதி கொடுப்பவர்களுக்கே வோட்போடவேண்டுமென்றும் வேறு பல முக்ய விஷயங்களையும் ஸர். வாஸுதேவ ராஜா குறிப்பிட்டுப் பேசினர்.

முக்யமாக கனம் ஜாமோரின் இந்த மஹாநாட்டில் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டதைப் பாராட்டிப் பேசினர்.

உபசரணைக் கமிட்டித் தலைவரான ஸ்ரீமான் கோமன் நாயர், பி. ஏ., பி. எல். அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்று அழகிய பிரஸங்கம் செய்தார். ஆலயப்பிரவேசச் சட்டத்தை எதிர்த்து பிரிவிகௌன்ஸில் வரையில் வழக்காடவேண்டுமென்பதை இவர் முக்கியமாகக் குறிப்பிட்டார்.

ஸ்ரீமான் கோமன் நாயரால் பிரேரேபிக்கப்பட்டும், மாஜி ஜில்லா ஜட்ஜ், ஸ்ரீ. சங்கரய்யரால் ஆதரிக்கப்பட்டும், ராவ் ஸாஹிப். நடேசய்யரால் ஆமோதிக்கப்பட்டும், கனம் ஜாமோரின் அவர்கள் மஹாநாட்டில் தலைமை வஹித்தார்.

தலைவர் தற்காலம் தர்மங்களுக்கு லோபம் ஏற்பட்டு வருவதைக் குறிப்பிட்டு, ஹிந்துக்கள் ஸ்வதர்ம த்யாகம் செய்துவிட்டு பரதர்மங்களைப் பின்பற்றி வருவதை மிகுந்த வருத்தத்துடன் பிரஸ்தாபித்தார். மஹம்மதியர், கிறிஸ்தவர் போன்ற இதரர்கள் தங்கள் தங்களுக்கு தனியான மத சின்னங்களும், மத உரிமைகளும் வைத்துக்கொண்டிருக்கையில் ஹிந்துக்கள்மட்டும் அவைகளை அலக்ஷ்யம் செய்து வருவதாயும், நான்கு ஜாதிகளையும், ஸங்கர ஜாதிகளையும், அவர்களுடைய தனித்தனியான தர்மங்களையும் ஒப்புக் கொள்ளுவதே வர்ணாச்ரமதர்மத்தின் அடிப்படையான கொள்கையென்றும், மத விஷயத்தில் ஸமத்வமென்பது கிடையாதென்றும், ஆலயப்பிரவேசச் சட்டம் நிர்ப்பந்தகரமானதென்றும் அதைச் செய்ய ஒருவருக்கும் அதிகாரமில்லையென்றும், ஆலயப்பிரவேசம் ஏற்பட்டால் கேரளத்தில் தர்மம் நசித்து ருஷ்யா தேசத்தைப்போல் மதமே அழிந்து விடுமென்றும் அவர் கூறினர்.

மேலும் திருவாங்கூர் ஆலயப்பிரவேசமானது பலிக்கவில்லையென்றும், அந்தக் கோயிலில் தீண்டாதார் போவது இப்போது குறைந்துவருகிறதென்றும், ஜாதி ஹிந்துக்கள் போவதை நிறுத்திவிட்டார்களென்றும், ஏதோ சில வெளியூர் யாத்ரீகர்களே போகிறார்களென்றும், திருவாங்கூர் ஸம்ஸ்தான உத்யோகஸ்தர்களும், ரிடயரானவர்களும், வேறு சிலரும் ஸர்க்கார் கட்டுப்பாட்டிற்கு உடன்பட்டு கோவிலுக்குள் போய்வருவதாயும், தீண்டாதார் அங்கு ஆலயப்பிரவேசம் வேண்டாமென்று சொல்லுவதாயும் ஸ்ரீ ஜாமோரின் கூறிவிட்டு, மலையாள ஆலயப்பிரவேசச் சட்டத்தை எதிர்த்துப் போராட வேண்டிய யோஜனைகளையும் குறிப்பிட்டார்.

தலைவரின் பிரசங்கம் முடிந்தபின் பலவிடங்களிலிருந்தும் 150 பேர்களிடமிருந்து வந்திருந்த ஆசிச்செய்திகளை டாக்டர் ஸ்ரீ சங்கரநாராயண அய்யர் ஸபையில் படித்தார். ஸ்ரீ காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், ஸ்ரீ சங்கேச்வர மடம், ஸ்ரீ கோவர்த்தன மடம், ஸ்ரீ வானமாமலை மடம் ஸ்ரீ ராகவேந்திர மத்வமடம், உடுப்பி மடம், ராவ்பகதூர் பாண்டே, நாகபுரி. பிரின்ஸ்பல் குப்தா, ஆமதாபாத். பண்டித ஸத்யேந்திர தத்தர், மஹாமஹோபாத்ய ஸ்ரீ அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள், கும்பகோணம், எல்லூர், காஞ்சீபுரம் பிராம்மண ஸபைகள், திவான்பகதூர் கோவிந்ததாஸ்சதுர்ப்புஜதாஸ் ஸி. வி. வெங்கட்டரமணய்யங்கார் கோயம்புத்தூர் முதலிய அநேக இடங்களிலிருந்து ஆசிச்செய்திகள் வந்திருந்தன. ஸ்ரீ ஜகத்குரு காமகோடி பீடாதிபதியவர்கள் ஸ்ரீமுகத்துடன் பிரஸாதமும் அனுப்பியிருந்தார்கள்.

விஷயாலோசனைக் கமிட்டி கூடி மஹாநாட்டில் செய்யவேண்டிய தீர்மானங்களைத் தயாரித்தது, தீர்மானங்கள் ஸபையில் விவாதிக்கப்பட்டு பலத்த உத்ஸாஹத்தினிடையே நிறைவேறின. தீர்மானங்களின்பேரில் பலர் வெகு தீவ்ரமாகப் பேசினர்.

தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்திரிகளும், பண்டிட் ஸ்ரீ ஸோமதேவ சர்மாவும் ஆலயப்பிரவேசச் சட்டத்தைக் கண்டித்தும், காங்கிரஸ் மந்திரி ஸபைச் செய்கையை ஆக்ஷேபித்தும் பிரஸங்கம் புரிந்தனர்.

### வித்வத் பரிஷத்.

அகில பாரதீய வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய ஸங்கத்தின் ஆதரவில் காலை 8-மணிக்கு ஓர் வித்வத் பரிஷத்து நடந்தேறியது.

வித்வான் ஸ்ரீமான் வரிக்கரன்சேரி நம்பூதிரிபாத் அவர்கள் பரிஷத்தில் தலைமை வகித்தார்கள்.

பிரம்மஸ்ரீ சாஸ்திர திலகம், கண்ணமங்கலம் அய்யா சாஸ்திரிகள் பரிஷத்தை ஆரம்பித்துவைத்து ஸம்ஸ்கிருதத்தில் பிரஸங்கம் செய்தார்.

பிரம்மஸ்ரீ வேதாந்த விசாரத அம்பி சாஸ்திரிகள் வரவேற்பு பிரஸங்கம் செய்து பண்டிதர்களுக்கு நல்வரவு கூறினர்.

ஸ்ரீமான் ஏ. குப்புஸ்வாமி அய்யர் தலைமையில் திருவிடமருதூர் தர்ம வீரஜதாவும் இச்சமயம் அவ்விடம்வந்து சேர்ந்தது. இது ஆலயப்பிரவேசத்தை எதிர்த்து மலையாளத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து குருவாயூருக்குப் போய்சேரும்.

வித்வத் பரிஷத்தில் ஜாதி வியவஸ்தைகள் ஆகமவிதிகள் முதலியவைகளைப்பற்றி சாஸ்திர ரீதியாக அநேக முக்ய தீர்மானங்கள் செய்யப்பட்டன.

ஆலயப்ரவேசம் அசாஸ்திரீயமென்று தீர்மானிக்கப்பட்டது.

### டாக்டர் தேஷ்முக்கின் விவாஹ ரத்து மசோதாவிற்கு எதிர்ப்பு.

திண்டுக்கல்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை (26—2—39) மாலை 4 மணிக்கு ஸ்ரீஜகத்குரு மடத்தில் தர்ம ஸங்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் ப்ரம்ஹஸ்ரீ எம். எஸ். ஸ்ரீநிவாஸ ஐயரவர்கள் அக்ராஸனம் வஹித்தார்கள். ப்ரம்ஹஸ்ரீ கெ. தியாகராஜ தீக்ஷிதரவர்கள், பி. ஏ., எல். டி., ஷை மசோதாவிலடங்கிய ஆபாஸங்களையெல்லாம் எடுத்துக் காட்டி இது தர்ம சாஸ்திரங்களுக்கெல்லாம் விரோதம் என்றும் தர்ம நாடாகிய இப்பாரத பூமியில் வாழும் பாதிவ்ரத்ய தர்மத்தின் ஆணிவேரிலேயே கோடரியை வைக்கிறது என்றும் சொல்லி ஹிந்து ஸமூஹமானது சட்டசபையின் கையில் அகப்பட்டுத் தத்தளிக்கும் ஸத்தர்மத்தை காக்க முன்வர வேண்டுமென்றும் ஓர் அரிய உபன்யாஸம செய்தார்.

பின்னர் ஷை சட்டத்தை எதிர்க்கும் சில தீர்மானங்களும், பி. வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய ஸங்க கார்யதர்சியும் ஸநாதன தர்மாவலம்பியுமான பண்டித மோஹனலால் அக்னிஹோத்ரியின் மரணத்தைக் குறித்த ஓர் அனுதாப தீர்மானமும் ஏகமனதாய் செய்யப்பட்டன.

கார்யதர்சி.

### ஜயப்பூரில் ஸமாதானம்.

ஜயப்பூருக்குப் புதிய மந்திரி வந்திருப்பதையும், வைஸ்ராய் அவ்விடம் விஜயமாகியிருப்பதையும் முன்னிட்டு ஜயப்பூரில் ராஜி ஏற்பட்டுவிடுமென்றும், தடையுத்தரவுகள் வாபீஸ் பெறப்படுமென்றும், ஸ்ரீமான் பஜாஜ் முதலிய எல்லா ராஜீயக் கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்களென்றும் சொல்லப்படுகிறது.

## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா.)

ஆயிரத்தில் ஒருவரே! ஸ்ரீமான் பஜோரியா இந்திய சட்டஸபையில் கிடைத்த ஸமயத்தை வீணாக்காமல் ஸமயம் வந்தபோதெல்லாம் தைர்யத்துடன் தர்ம யுத்தம் புரிகிருர். விவாஹாத்து மசோதாவை ஒத்தி வைத்ததற்கு அவரே முழு முதற்காரணம்! அவர் வாழி!

நல்ல பலிபீடம்! அதர்மத்தை ஒழிக்க ஸ்ரீ குருவாயூரப்பனே கங்கணதாரி. பஞ்சமர் ஆலயப்ரவேசத்திற்கு ஷை சங்கத்தார் அந்த ஊரில் கார்யாலயம் ஏற்படுத்தியதும் இந்து மத பரிபாலசங்கம் அந்த ஆலய அதிகாரிகளுக்கு நோடீஸ் கொடுத்ததும் அதர்ம சட்டம் ஒழியவே!!

பெருந்தன்மையற்ற சொற்கள்! பல பத்திரிகைகளில் பழக்கத்திற்கு வந்துவிட்டன! கம்பிநீட்டினுன். அறுத்துக்கொண்டாள். அமிக்கிக்கொண்டாள். கலாடா. சீட்டு வாங்கிக் கொண்டாள். இத்தகைய கண்யமான சொற்களை நமது உயர்ந்த ஆர்யதர்மத்தில் எழுதா வண்ணம் நிருபர்களை வேண்டுகிறோம்.

கேரள தர்மஸபை! ஸ்ரீமான் சங்கய்யரவர்கள் முயற்சியால் பாலக்காட்டில் சென்ற சனி ஞாயர்களில் மிகச் சிறப்பாக ஷை ஸபை நடந்தது பல பிராமணோத்தமர்கள் அதில் ஊக்கமெடுத்துக்கொண்டனர்! மிக வெற்றிகரமாக நடந்தது!!

மூலஸ்தானம்! உத்ஸவ மூர்த்திகளைப் போல் பல தார்மிக வீரர்கள் ஆங்காங்கு ஊக்கத்துடன் ப்ரசாரம் செய்கின்றனர். எல்லாவற்றிற்கும் ஆதி மூலம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடமென்பது கூறுமலே விளங்கும்! நாஸ்திக ப்ரவாகத்தைத் தடுக்க நம்மால் இயலுமா? என்ற பலரை இங்கு வந்து கர்மாவைச் செய், பலனை நாடாதே என்று உபதேசித்து பல ஊர்களிலிருந்து அனுப்பியது ஸ்ரீ பீடமே! இதை சென்னை மாகாண ஸபை எனலாம்!

குறிப்பிடத்தக்கவை!:— பிரும்மஸ்ரீ மதுரை நடேசய்யர்வாள் சொந்தமாக நடத்தும் ஸம்ஸ்கிருத பாடசாலை மாணவிகள் உள்ளூர் மாணவிகள் இவர்கள் கூறிய ஸ்துதி பாடங்கள் திருவிடைமருதூர் தர்ம வீர்ஜாதா அநுமத்வஜத்துடன் ஸ்ரீமதாசார்ய ஸன்னிதியில் மந்த்ர பூர்வ நமஸ்காரம் செய்தது. ஸ்ரீ பெங்களூர் கிருஷ்ண பாகவதர் பிருகிருதத்தை ஒட்டி செய்த பீஷ்மாசரித கதை

தர்ம உத்ஸாஹம்!:— ஒவ்வோர் வைதிகரும் நாலணு கொடுத்து ப்ரவேசம் செய்ததுடன் நல்ல உபன்யாஸங்களை நன்கு ஆமோதித்து மற்றும் பல உபன்யாஸங்கள் புரிய வேண்டியதும் அங்குள்ள அனைவரும் தவறுமல் ப்ராத ஸ்நாநம் செய்து ஒழுங்காக நித்ய கர்மா செய்வதும் மிக கொண்டாடத்தக்கதாம்.

விராம காலத்தில் வருக!:—மதாபிமானமும் ப்ரவசன சக்தியும் வாய்ந்த பண்டிதர்கள் வெய்யில் கால விராமத்தில் தவறுமல் குருவாயூருக்கு வந்துகட்டாய தர்மப்ரசாரம் செய்யும் படி வேண்டுகிறேன். அதற்காக ஏற்பட்ட ஓர் ஸமிதி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் டாக்டர் சங்கரய்யர் பாலகாட் என்ற விடத்திற்கு எழுதவும்.

ஷோடசபதிவிருதைகள் யார்?:— அவர்களிடம் தனித்தனியுள்ள சிறந்த குணம் யாது? இவைகளெல்லாம் ஸ்ரீ ஸீதாபிராட்டியினிடம் அமைந்துளதாக ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீமத் ராமாயணத்தில் கூறப்படுகிறது. இவை எந்த பெரியாரால் எந்த நூலில் கூறப்பட்டுள தென்பதை நமது

## கும்பகோணம் வர்த்தமானங்கள்.

(நமது விசேஷ நிருபர்).

கும்பகோணம், பீப், 28உ

காலேஜ் பழைய மாணவர் கழகம். வழக்கம்போல் வருடாந்திரக் கூட்டம் சென்னை உயர்தாநீதிமன்ற நீதிபதி ஸ்ரீமான் கே. எஸ். கிருஷ்ணஸாமி ஐயங்கார் அக்கிராசனத்தில் 26உ காலேஜில் நடைபெற்றது. இவர் இக் காலேஜில் படித்து உயர்ந்த பதவியை அடைந்தவர். தன் குடும்பத்தை க்ஷேமமாக இருக்கவும், அதன் கியாதியைத் தேடவும் எல்லோரும் விரும்புவார்கள். அதுபோன்று தான் படித்த ஸ்தாபனத்தை சந்தோஷத்துடன் பாராட்டிப் பேசி, அதில் படிப்பவர்கள் காலேஜ் கீர்த்தியை அதிகரிக்கச் செய்யவேணும் என்றும், குரு சிஷ்ய பாவம் பாதகண்டத்தின் பெருமையாகையால் அதை வளர்த்துவர மாணவர்கள் பின் வாங்கலாகாதென்றும், குருவுக்கு எவ்விதத்திலும் அடங்கி, கட்டுப்பாட்டுடன், நல்லொழுக்கத்துடனும் நடத்தல் வேணும் என்றும், ராஜீய வாழ்வில் அனுஷ்டிக்கப்படும் ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம், கல்லூரிக்கு வாராமல் நின்றுவிட பிரசாரம் செய்தல் முதலிய தீய வழக்கங்களை படிப்பவர்களிடையே மாணவர்கள் கைக்கொள்ளக்கூடாதென்றும், குறை இருந்தால் சாவதானமான வழியில் நிவர்த்திபெறவேணும் என்றும், மாகாணத்தில் சில சம்பவத்தை அறிய வருத்தமுண்டாகிறதென்றும், மாணவர்களின் படிப்பையே முக்கியமாகக் கருதி, பெற்றோர்கள் மாணவர்களின் பிற்கால, க்ஷேமத்தை கருதியுள்ள உன்னத லக்ஷியத்தை நாசமாக்கலாகாதென்றும், விளையாட்டைக் காட்டிலும் கல்வியை விசேஷமாகக் கற்று மேதாவிகளாகவேணும் என்றும், இந்தக் கல்லூரி என்றென்றும் பிரகாசமாய் விளங்கிவரவேணும் என்றும், இதை மூடிவிடுவதாக மண்ணிற் பிறந்த எவருமே நினைக்கமாட்டார்களென்றும், கணித வள்ளல் ராமானுஜன் போன்ற பல பெரிய மேதாவிகளை வருங்காலத்தில் இக் கல்லூரி பெற்று பெருமைப்படவேண்டும் என்றும் பிரார்த்திப்பதாக அரிய சொற்பொழி வாற்றினர்கள்.

மகாபாரதம் ஆசிரியர் உருவப்படம் திறந்துவைக்கப்பட்டது. தமிழ் நாட்டிற்கு ஸ்ரீ மகாபாரதத்தை தமிழில் எழுதிவைத்தருள்ள பெரியார் பாஷாபாரத தூர்ந்தர மகாமகோபாத்யாய பண்டிட் ம. வீ. ராமானுஜாசாரியாருடைய உருவப்படத்தை 26-2-39 மாலை 5-மணிக்கு, மேற்படி மகாபாரதத்தை தமிழில் எழுத உதவிய பாரத சிம்மம் மத்வசாஸ்திர சர்பூர்ண மகாமகோபாத்யாய கா. பே. ராமசந்திராசார்யார் அவர்களால் கல்லூரியில் திறந்துவைக்கப்பட்டது. ஸ்ரீ ராமானுஜாசாரியாரை அவர் பெரிதும் பாராட்டி பேசினர்.

திவான்பகதூர் ரகுநாதராவ் உருவப்படம். திவான்பகதூர் ஆர். ரகுநாதராவ் உருவப் படத்தை ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸ்ரீமான் கே. எஸ். கிருஷ்ணஸாமி ஐயங்கார் 25-2-39ல் காலேஜில் திறந்துவைத்து அவருடைய பெரிய சக்தி பெருமைகளை விசேஷமாக எடுத்துரைத்தார்.

---

பத்திரிகையில் ஸம்ப்ரதாயம் மதிக் தோர் வெளியிடின் பலர் நன்மை பெறுவர்! என வேண்டுகிறேன்.

---

மகாபாரதம் ஆசிரியருக்கு பண முடிப்பு. ஸ்ரீ மகாமகோபாத்யாய ம. வி. ராமானுஜாசாரியாருக்கு 1764 ரூ. பண முடிப்பை 27—2—39ல் ஷை நிதி கமிட்டியின் சார்பாக அவருக்கு ஹைகோர்ட்டு ஜட்ஜால் கல்லூரி வைபவத்தில் கொடுக்கப்பட்டது. இத் தொகையில் சேர்ந்து ரூ. 50ஐ திருவாவடுதுறை ஆதீனம் கட்டளை ஸ்ரீ மீனாக்ஷி சுந்தர தம்பிரான் அவர்கள் தனியே சமர்ப்பித்து ஓர் சால்வையையும் சன்மானித்தார்கள். ஸ்ரீ காசி மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் ஸ்வாமிகள் ரூ. 100 தனியாக சன்மானிக்க செய்திருந்தார்கள்.

ஹிந்தி கான்பரன்ஸ். ஹிந்தியை வியாபகமாக்கும் பொருட்டும், அதற்கு தடை செய்வதை நிவர்த்திக்கவும் தமிழ்நாடு ஹிந்தி பிரசாரகர்கள் மகாநாடு 26உ இந்நகர் டவுன் ஹைஸ்கூலில் சென்னை சட்டசபை டிப்டி பேச்சாளர் ஸ்ரீமதி ருக்மணிலக்ஷ்மிபதி தலைமையில் நடைபெற்றது. சம்பிரதாயமாக நடக்கிறபடி கான்பரன்ஸை மாஜி மந்திரி கனம் யாகூப்ஹஸன் திறந்துவைத்துப் பேசினர். இவர் பேசியதில் பிராமணர்களை தூஷிக்கவே முக்கியமாக தோன்றிய கூட்டந்தான் ஹிந்தி எதிர்ப்புக்காரர்கள் என்று போர்வை போற்றி தாண்டவ மாடுகிறது என்று காக்கி ஆத்திரத்துடன் அதி தீவிரமாய் பேசினர். காங்கிரஸையும் அழிக்கவும் எதிர்ப்பு கக்ஷி முயல்வது பலிக்குமா என்று கேட்டார். அக்கிராசனர் பிரசங்கம் நடந்தது. முக்யமாக ஹிந்தியை எல்லா வகுப்பிலும் அரசாங்கம் வைக்க வேணும் என்றும், ஹிந்தி உபாத்தியாயர் சம்பளத்தை அதிகமாக்கவும் கோரி பல தீர்மானங்களும் செய்யப்பட்டன.

காங்கிரஸ் கூட்டம். ஸ்ரீமான் டி. எஸ். இராமபத்திர உடையார் தலைமையில் 26உ. மாலை காந்திபார்க்கில் சென்னை சட்டசபை டிப்டி பேச்சாளர் ஸ்ரீமதி ருக்மணிலக்ஷ்மிபதி தற்கால ராஜீய நிலைமைபற்றி உபந்நியஸித்தார்.

மடாதிபதி விஜயம். உடுப்பி மடாதிபதி ஸ்ரீ வித்யமான்ய தீர்த்தஸ்வாமி குடந்தை க்ஷேத்திரத்திற்கு 25உ விஜயம் செய்திருக்கிறார்கள். ஒருவாரகாலம் இங்கு எழுந்தருளி இருந்து ஸ்ரீ பகவத்கீதை உபந்நியாஸம் செய்வார்கள் என்று தெரிகிறது.

கும்பகோணம் சூதாட்ட வழக்கு. 21-2-39 இரவில் நாகேஸ்வரர் வடக்கு வீதியில் கன்னடிய மடத்தில் சூதாடியதாக 26 பேர்கள்பேரில் போலீஸார் நடவடிக்கை எடுத்துக்கொண்டு, அவர்களை இன்று சப்கலெக்டரிடம் ஆஜர்செய்தனர். சார்ஜ் ஷீட்டு கொடுக்க வேண்டியதற்காக 8-3-39க்கு வாய்தா போடப்பட்டிருக்கிறது.

நகர ஸபை தேர்தல். முனிசிபல் 5-வது காலியான ஒரு கவுன்சிலர் ஸ்தானத்திற்கு டாக்டர் எம். கே. சுப்பிரமணியம் போட்டியே இல்லாமல் ஜயம் பெற்றிருக்கிறார். இவர் ஒரு சமயம் 6-வது வார்டில் பிரின்ஸிபலுக்காக நின்று வெற்றி பெற்று பிறகு கவுன்சிலர் பதவியை ராஜிநாமா செய்தார். இவர் சுயேச்சையான காங்கிரஸ் கொள்கையுள்ள உத்தமர் என்று குறிப்பிடுதல் மிகையாகாது.

நகருக்குள் பஸ் விடலாகாது. பெரியதெருவிலிருந்து ரயிலடிக்கு பஸ் விடுவதை அனுமதிக்கலாகாதென்று முனிஸிபல் சபை தீர்மானித்து விட்டது. இத்தீர்மானம் ஏழை வண்டிக்காரர்களின் அன்றாடம் பிழைப்பை காப்பாற்றியதாகும்.

---



127

121



## திருக்கோவிலூர்.

### ஆரியதர்மாபிவிருத்திநீ பிராம்மண மகாஸபையின் 26-வது வருஷோத்ஸவம்.

தாமரக்ஷாமணி ஸ்ரீ. கே. பாலஸுப்ரமண்ய அய்யர் தலைமை வஹித்தார்.

பத்திரிகைகளில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி ஷை சபையின் 26வது வருஷோத்ஸவம் 1939-ஹூ பிப்ரவரி-மீ 18, 19, 20 தேதிகளில் வெகு விமரிசையாக நடந்து முடிந்தது.

முதல்நாள் ஸ்திரவாரம் நடவடிக்கைகள் அன்று அமாவாஸையாகையால் காலையில் ஆரம்பிப்பது நிறுத்தப்பட்டு மாலை 3 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு தலைவர் சென்னை அட்வகேட் தர்மரக்ஷாமணி பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களையும் ஆசார்யாளாயும் விஜயம் செய்த மகான் தஞ்சாவூர் ஸ்வாமிகள் அவர்களையும் பிரம்மஸ்ரீ ஸநாதனதர்ம ரக்ஷகர் சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்களையும் ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகள் அவர்களால் பிரம்மஸ்ரீ ஸோமதேவ சர்மா அவர்களுக்குஅனுப்பியிருந்ததும்ஷையாரால் ஸபைக்கு அனுப்பியதுமான ஆசார்யப் பிரஸாதத்துடனும் மேளவாத்யங்களுடனும் பிராம்மணர்கள் புடைசூழ நிரந்தர அக்ராஸனர் பிரம்மஸ்ரீ வக்கீல் நாராயணசாமி அய்யர் அவர்கள் கிருஹத்திலிருந்து மரியாதைகளுடன் திருவிக்ரமஸ்வாமி வஸந்த மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது. பிறகு பகவானுக்கு நிவேதனம் செய்து கல்பூர ஆர்த்தி செய்யப்பட்டபின் எல்லோருக்கும் ஸ்வாமியின் பிரஸாதமும் ஸ்ரீ மதாசாரியப் பிரஸாதமும் பிரும்மஸ்ரீ சேங்காலிபுரம் தீக்ஷிதர் அவர்களால் அனுக்கிரஹித்து கொடுக்கப்பட்டது.

அதன் பிறகு வழக்கம்போல் சாந்திபாடம் சொல்லப்பட்டது. பின் நிரந்தர அக்ராஸனர் வக்கீல் நாராயணசாமி அய்யர் அவர்கள் தலைவர் பிரேரணைக்காக சுமார் ½-மணி வரையில் தலைவர் பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களை அறிமுகப்படுத்தி அவர்களுடைய குணநிசயங்களைப்பற்றியும் அவர்கள் தகப்பனர் வி. கிருஷ்ணசாமி அய்யர்வாள் அவர்கள் குணங்களைப்பற்றியும் விஸ்தாரமாக சொல்லப்பட்டு பிரேரணை செய்யப்பட்டு ஷையார் அக்ராஸனத்தில் அமர்ந்தார்கள். பிரம்மஸ்ரீ பிரஸங்கவா சோமதேவ சர்மா அவர்கள் தனக்கு கொச்சி தர்பாருக்கு போய் வந்ததின் காரணமாக உடம்பு அசௌகரியத்தை முன்னிட்டு வர இயலாததற்கு வருந்துவதாக அனுப்பிய கடிதத்தை ஸபையில் வக்கீல் நாராயணசாமி அய்யரால் படிக்கப்பட்டது.

பிறகு அக்ராஸனர் ஸ்ரீ பாலசுப்பிரமணிய அய்யரால் முகவுரையாக ஸநாதனதர்மம் என்பதுபற்றி மிக அழகாக ஒன்னரை மணி சாவகாசம் உபந்யஸிக்கப்பட்டதில் ஸநாதன தர்மம் சாச்வதமென்றும் அது ஈசுவராஞை என்றும் அது அழியத்தக்கதல்லவென்றும் ஷை தர்மத்தினுல்தான் உலகங்களே நிற்கிறதென்றும் ஈஸ்வரன் அழிவதானுல் அது அழியுமென்றும் இடையில் அப்படித் தோன்றினுலும் அதினுல் பயப்படவேண்டாமென்றும் நாம் மாத்திரம் கடமைகளை சரிவர நடத்தவேண்டுமென்றும் அனேக சுலோகங்களைக்கொண்டும் தமது அனுபவவாக்கால் அபாரபடிப்புக்குத் தக்கபடி உபன்யஸித்ததும் பிறருடைய உபன்னியாஸமுடிவில் அதன் ஸங்கிரஹத்தை சொல்வதும் மிகவும் வியக்கத்தக்க

கள்ளக்குரிச்சி வக்கீல் டி. ஏ. பிரம்மஸ்ரீ உப. வே. தாதாசாரியார் அவர்கள் அகல்யா சாபவிமோசனம் என்பதுபற்றி பேசுகையில் அகலிகையின் சரித்திரத்தைப்பற்றியும் மகாத்மா கௌதமரைப்பற்றியும் ஸ்ரீராமரின் பாத மகிமைகளைப்பற்றியும் வாக்குரிடாக முக்கால் மணிவரை பேசினர்கள். பிறகு சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் பொதுவாக ½-மணி உபந்யஸித்தார்கள். இத்துடன் ஸந்தியாகாலத்திற்கு நிறுத்தப்பட்டது.

பிறகு ஸந்தியாவந்தனத்திற்கப்புறம் தஞ்சாவூர் ஸ்வாமிகள் அவர்கள் ஆசார்யஸ்தானத்தில் அமர்ந்து ஸத்யம் என்பதுபற்றிச் சொல்லுகையில் இந்த ஸ்தூல ஸூக்ஷ்ம, காரண ஆகிய மூன்று சரீரங்களைப்பற்றியும் அதன தன் காரியங்களைப்பற்றியும் பிராரப்த, ஆகாமி ஸஞ்சிதங்களுள் நாம் அனுபவிக்கும் நன்மை தீமைகளைப்பற்றியும் நாம் எங்கிருந்து வந்திருக்கிறோமோ அந்த இடத்திற்கே மறுபடி போய்ச் சேரவேண்டுமென்றும் அவர்கள் ஸ்வாநுபவத்தைக் கொண்டு விஸ்தாரமாக சுமார் 10-மணிவரையில் இரவில் பேசினர்கள். ஷை ஸ்வாமிகள் ஆசார்யஸ்தானத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்தால் நமது ஆசார்யாளேபோல் ஜனங்கள் மனஸுக்குத் தோன்றியது குறிப்பிடத்தகுந்தது. இத்துடன் ஸ்திரவாரம் சபை பூர்த்தியாகியது.

19—2—39 பானுவாரதினத்தன்று காலை 8-மணிக்கு சபை கூடியது. ஆரம்பத்தில் இவ்வூர் திருவிக்கிரமாவதாரம் பற்றியும், கோவல் வீரட்டானம் வீரஸ்தானே ஸ்வாஸ்வாக்ஷேத்ர பாடல்களாகிற படைகள் (கூற்றம் வந்து) என்ற பாடலை எடுத்துக் கொண்டு இந்த இரண்டு க்ஷேத்ரங்களைப் பற்றியும் 1-மணிவரையில் அக்ராஸனர் ஸ்ரீ பாலசுப்பிரமணிய அய்யரவர்கள் நன்ருக உபன்யஸித்தார்கள்.

பிறகு சேலம் அட்வகேட் பிரம்மஸ்ரீ ஒய். கே. சேஷய்யர் அவர்கள் ஆஸ்திக்யத்தின் அவசியம் என்பதுபற்றிப் பேசுகையில் தற்கால ராஜாங்க நிலைமையைப்பற்றியும் இந்த ஸமயத்தில் ஆஸ்திகர்கள் செய்யவேண்டியதென்ன என்பதையும் ஆஸ்திக்யமென்பது என்ன என்பதுபற்றியும் தமது ஸநாதன தர்ம உத்வேகத்தில் 1½-மணிவரையில் அத்புதமாக பேசினர்கள். ஷையார் சேலத்திலிருந்து தமது சொந்த காரில் அக்ராஸனர் முதலியவர்களை வஸந்த மண்டபத்திற்கு மரியாதைகளுடன் அழைத்துச்செல்லும் சமயத்தில் வந்ததானது எல்லோரையும் அவர் எதிர்கொண்டழைப்பதாகவும் அவர்களுக்கு ஸநாதநதர்மத்தில் இருக்கும் அதிக உத்வேகத்தை காட்டக்கூடியதாயும் அந்த ஸமயம் அப்படி நேர்ந்தது ஸநாதநதர்மத்தின் அபிவிருத்திக்கு ஹேஷ்யத்தை காட்டியது.

பிறகு இவ்வூர் ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதர் பிரும்மஸ்ரீ உப. வே. ஆராவமுதாசார்யஸ்வாமி அவர்கள் ஸத்ஸங்கம் என்பது பற்றி பேசுகையில் இதுமாதிரி ஸாதுக்களுடைய ஸங்கமே ஸத்ஸங்கமென்றும் மற்ற எல்லாவற்றிற்கும் ஸத்ஸங்கமே காரணமென்றும் கலியுகத்தில் ஸங்கத்தினுல்தான் எல்லாம் ஸாதிக்கமுடியுமென்றும் ஸ்கூல்களில் ஹிந்து தர்ம சாஸ்திரங்களுக்கு முரணாக பாடபுத்தகங்கள் வைக்கப்பட்டு போதிக்கப்படுகின்றன. அதனுல் மாணவர்களுக்கு நம் மதத்தில் அவநம்பிக்கை ஆரம்பத்திலேயே ஏற்படுவதற்கு காரணமாகிறது. அதை தடுக்க முயலவேண்டுமென்றும் நன்ருகப் பேசினர்கள். இத்துடன் காலை 11மணியாகிவிட்டபடியால் ஸபை கலைந்தது.

பிறகு மத்யானம் 3-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. பகுப்பாளையம் பிரும்மஸ்ரீ வீரராகவ

என்பதுபற்றிப் பேசுகையில் பலகோடி ஜன்மங்களிற் செய்த ஸுகிருதத்தினுல் மானிடப் பிறவி கிடைத்திருக்கிறதென்றும், அதிலும் பிராம்மண்யம் அரிதென்றும் அப்படிப்பட்ட இந்த ஜன்மத்தை வீணாக்காமல் நமக்கு விதியினுல் ஏற்பட்டிருக்கும் ஸ்நாந ஸந்தியா ஜபஹோமங்களையும் ஈசுவரர் ஆராதநங்களையும் ச்ரத்தையுடன் முடிந்தவரையிலாவது செய்து இதனுல் மேன்மைபெற்று மோக்ஷமடையவேண்டும் என்பதை ஸ்ரீமத் ராமாயணத்திலிருந்தும் காவ்யங்களிலிருந்தும் மேற்கோளுடன் முக்கால் மணி வரையில் பேசினர்கள்.

அதன் பிறகு சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் பீஷ்மப் பிரதிக்ஞை என்பதுபற்றி மாலை 6½-மணி வரையில் பேசினர்கள். ஷையார் பேசும் ஸமயம் ஜனங்கள் திரளாக ஸ்திரீகளும் புருஷர்களும் வந்திருந்தார்கள். ஷையார் பேசுகையில் பீஷ்மரின் உத்பத்தி, அவருடைய த்ருடவிருதம், அவருடைய இரு பிரதிக்ஞைகள் அதை அவர் நிறைவேற்றியது, அதனுல் உலகத்திற்கு ஏற்பட்ட க்ஷேமங்கள், பீஷ்ம என்பதின் சப்தார்த்தம், பீஷ்மரால் கடைசியில் உபதேசிக்கப்பட்ட ஸகல தர்மங்கள், பிறகு பகவானிடத்தில் அவர் மோக்ஷமடைவது, இதுகளைப்பற்றி தமது பெரிய த்வனியினுலும், அவருக்கு ஏற்பட்டிருக்கும் மகாபாரதம், ஸ்ரீமத் ராமாயணம் முதலிய கிரந்த நிருடிகளைக்கொண்டும் மிக ரமணீயமாக உபந்யஸித்தார்கள் இத்துடன் ஸந்தியாவந்தனத்திற்கு ஸபை கலைந்தது.

இதன் பிறகு இரவு 8-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது தஞ்சாவூர் பிக்ஷு ஸந்யாஸி ஸ்வாமிகள் அவர்கள் பக்தி என்பது பற்றிப் பேசுகையில் ஜனங்கள் திரளாக வந்திருந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் உபந்யாஸ முறையில்லாமல் உபதேச முறையில் எப்படிப்பட்டவரும் நடுக்கமுறும்படிக்கும், பிரமிக்கும்படிக்கும், ஆச்சர்யமடையும்படிக்கும் உள்ளம் பூரிக்கும்படிக்கும், பசுமரத்தாணி போல் மனதில் பதியும்படிக்கும், கர்மகாண்ட ரீதியாயும, வேதாந்த சாஸ்திர ரீதியாயும், ஆலயம் என்பது என்னவென்பதையும் அதில் சாஸ்திர விதிப்பிரகாரம் பிரவேசிக்க அர்ஹதையுள்ளவர்கள் மாத்திரம் போகலாமென்றும் இல்லாவிட்டால் ஒருவருமே போகாமல் பூஜைகள் மாத்திரம் நடத்தினுல் உலகத்திற்கு க்ஷேமமுண்டு, இல்லாவிட்டால் பீடையுண்டு. ஆகையால் அவரவர்கள் ஜாக்கிரதையாய் நடக்கவேண்டும் என்றும், ஒருக்காலும் ஸாதுக்கள் பயப்படவேண்டாமென்றும் அதிசயமாக உபந்யஸித்தார்கள்.

20-2-39 அன்று காலை 8 மணிக்கு சபை ஆரம்பமாகியது. இதில் அக்ராஸனர் சில ஸ்தோத்திரங்களைப் பாடினர்கள். அர்த்தமும் சொன்னர்கள்.

பிறகு சேங்காலிபுரம் தீக்ஷிதர் அவர்கள் பரலோக நிச்சயம், ஸத்யம் இவைகளைப் பற்றி ராமாயணத்திலிருந்து உதாஹரணங்களைக்காட்டி உபந்யஸித்தார்கள். பிறகு காரியதரிசி ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளால் வருஷாந்திர அறிக்கை படிக்கப்பட்டது. அதன் பிறகு முடிவுரையாக அக்ராஸனர் பாலசுப்ரமணிய அய்யாவர்கள் 1 மணி பொதுவாக மிக அழகாக உபன்யஸித்தார்கள். பிறகு பிரும்மஸ்ரீ நிரந்தர அக்ராஸனர் வக்கீல் நாராயணஸாமி அய்யரால் வந்தனேபசாரம் சொல்லப்பட்டும், அக்ராஸனர் வேத வாக்கியங்களினுல் ஆசீர்வதிக்கப்பட்டும் மற்றவர்களுக்கு மரியாதைகளும் ஆசீர்வாத வாக்கியங்களால் அநுக்கிரஹிக்கப்பட்டும் இவ்வருஷம் ஸபை இனிது முடிவடைந்தது. சுபம்.

ஸ்ரீநிவாஸ சாஸ்திரியள் காரியதரிசி.

## ப்ரஸ்தானபேதம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

विधिरपि चतुर्विधः, उत्पत्त्यधिकारविनियोगप्रयोगभेदात्। तत्रकर्मस्वरूपमात्रबोधको विधिरुत्पत्तिविधिः, "आग्नेयोष्टा कपालो भवति" इत्यादिः। सेतिकर्तव्यताकस्य यागादेः फलसंबन्धबोधको विधिरधिकारविधिः, "दर्शपूर्णमासाभ्यां स्वर्गकामो यजेत" इत्यादिः। अङ्गसम्बन्धबोधको विधिर्विनियोगविधिः, "व्रीहिभिर्यजेत" "समिधो यजति" इत्यादिः। साङ्गप्रधानकर्मप्रयोगैक्यबोधकः पूर्वोक्त विधित्रय मेलनरूपः प्रयोगविधिः। सच श्रौतइत्येके, कल्प्यइत्यपरे ॥

விதியும், உத்பத்திவிதி, அதிகாரிவிதி, விநியோகவிதி, ப்ரயோகவிதி என்று நான்கு வகைப்படும். அவைகளுள் கர்மஸ்வரூபத்தை மட்டும் போதிக்கக்கூடியவிதி "உத்பத்திவிதி" என்று சொல்லப்படுகிறது.

"आग्ने योष्टाकपालो भवति"

முதலிய வாக்யங்கள் உதாஹரணம். தேவதையும் த்ரவ்யமும் கர்மாவின் ஸ்வரூபம். மேற்கூறப்பட்ட வாக்யத்தில் அக்னி என்ற தேவதையும் புரோடாசம் என்ற த்ரவ்யமும் மட்டுந்தான் போதிக்கப்படுகிறது. ஆகவே இது உத்பத்திவிதியாகும்.

அங்கங்களுடன் கூடிய ப்ரதான கர்மாவிற்கு பல ஸம்பந்தத்தைப் போதிக்கக்கூடிய விதி "அதிகாரவிதி" எனப்படும்.

"दर्श पूर्ण मासाभ्यांस्वर्गकामोयजेत"

முதலிய வாக்யங்கள் உதாஹரணம். இந்த வாக்யத்தில் அங்கங்களுடன் கூடிய "தர்சபூர்ணமாஸம்" என்ற யாகத்திற்கு ஸ்வர்கம், பலம் என்று சொல்லப்படுகிறது.

ப்ரதான கர்மாவிற்கு அங்கஸம்பந்தத்தை போதிக்கக்கூடிய விதி விநியோகவிதியாகும்.

"व्रीहिभिर्यजेत" समिधो यजति"

முதலிய வாக்யங்கள் உதாஹரணம். இந்த வாக்யங்களில் "தர்சபூர்ணமாஸம்" என்ற ப்ரதான யாகத்திற்கு முறையே நெல்லுகளும், "ஸமித்" என்ற யாகமும் அங்கங்களாக விதிக்கப்படுகின்றன.

அங்கம் ப்ரதானம் எல்லாவற்றையும் சேர்த்து ஓர் ப்ரயோகத்தைப் போதிக்கக்கூடிய விதி "ப்ரயோகவிதி" எனப்படும். இந்த விதி சுருதியிலேயே இருக்கிறதென்று சிலர் சொல்லுகிறார்கள். அங்க வாக்யங்களையும் ப்ரதான வாக்யங்களையும் சேர்த்து "ப்ரயோகவிதி"யை நாம் கல்பிக்கவேண்டும் மற்றும் சிலர்.

कर्मस्वरूपञ्चद्विविधं, गुणकर्मार्थकर्मचेति। तत्र क्रतुकर्मकारकाण्याश्रित्य विहितं गुणकर्म। तदपि चतुर्विधं उत्पत्त्याप्तिविकृति संस्कृतिभेदात्। तत्र "वसन्ते ब्राह्मणोऽग्नीनादधीत" "यूपं तक्षति" इत्यादावाधानतक्षणादिना संस्कारविशेषविशिष्टाग्नियूपादेरुत्पत्तिः। "स्वाध्यायोऽध्येतव्यः" "गां पयो दोग्धि" इत्यादावध्ययन दोहनादिना विद्यमानस्यैव स्वाध्यायपयः प्रभृतेः प्राप्तिः। "सोममभिषुणोति" "व्रीहीनवहन्ति" "आज्यं विलापयति" इत्यादाव भिषवावघातविलापने स्सोमादीनां विकारः। व्रीहीन्प्रोक्षति" "पत्न्यवेक्षते" इत्यादौ प्रोक्षणावेक्षणादिभि र्व्रीह्यादिद्रव्याणां संस्कारः। एतच्चतुष्टयं

மேற்கூறப்பட்ட கர்மாவும் "गुणकर्म" "अर्थकर्म". என்று இருவகைப்படும். அவைகளுக்குள் யாகத்திலுள்ள கர்மகாரகத்தை ஆச்ரயித்து விதிக்கக்கூடிய கர்மாவுக்கு 'குணகர்ம" என்று பெயர். அந்த "குணகர்மாவும்" "உத்பத்திகர்ம" "ஆப்திகர்ம" 'விகிருதிகர்ம' "ஸம்ஸ்கிருதி" கர்மாவென்று நான்கு விதம்.

"वसन्तेब्राह्मणोऽग्नीनादधीत" यूपंतक्षति"

முதலிய வாக்யங்கள் "உத்பத்திகுணகர்மா" வுக்கு உதாஹரணம். இந்த வாக்யங்களில் "अग्नीन्" "यूपं" என்ற கர்மகாரகங்களை ஆச்ரயித்து "आधानं" (குறிப்பிட்ட மந்திரங்களைச் சொல்லி குறிப்பிட்ட இடத்தில் வைத்தல்) तक्षणं (சதுக்குதல்) என்ற கர்மாக்கள் முறையே விதிக்கப்படுவதால் "குணகர்ம" என்று சொல்லப்படுகின்றன. ஆதானத்தாலும் தக்ஷணத்தாலும் யாகத்திற்கு உபயோகமான "ஆஹவனீயம்" முதலிய அக்னிகளும், யூபமும் உண்டுபண்ணப்படுவதால் இவ்விரண்டு கர்மாக்களும் "உத்பத்திகர்ம" என்று சொல்லப்படுகின்றன.

"स्वाध्यायोऽध्येतव्यः" "गां पयोदोग्धि"

என்ற வாக்யங்கள் ஆப்திகர்மாவுக்கு உதாஹரணம். அத்யயனத்தால் வேதமும் தோஹனத்தால் (கறப்பதால்) பாலும் அடையப்படுகிறது. ஆகவே இவ்விரண்டு கர்மாக்களும் "ஆப்திகர்மாக்கள்"

"सोममभिषुणोति" "व्रीहिनवहन्ति" "आज्यं विलापयति"

என்ற வாக்யங்கள் "விகிருதிகர்மா"வுக்கு உதாஹரணங்கள். "அபிஷவத்தால்" (நசுக்குவதால் ஸோமமென்ற கோடிக்கு மாறுதல் ஏற்படுகிறது. "அவஹனனத்தால்" (குத்துவதால்) நெல் மாறிவிடுகிறது. "விலாபனத்தால்" (உருக்குவதால்) கெட்டியாக இருந்த நெய் மாறிவிடுகிறது. ஆகவே "அபிஷவம்" "அவஹனனம்" 'விலாபனம்' முதலிய கர்மாக்கள், "விகிருதிகர்மாக்"கள் என்று சொல்லப்படுகின்றன.

"व्रीहीन्प्रोक्षति "पत्न्यवेक्षते"

முதலிய வாக்யங்கள், ஸம்ஸ்கிருதி கர்மாவுக்கு உதாஹரணங்கள். 'ப்ரோக்ஷணத்தால்' நெல்லுகளும், பத்நியினுடைய அவேக்ஷணத்தால் (பார்வையால்) ஆஜ்யத்திலும் ஏதோ ஒரு ஸம்ஸ்காரம் ஏற்படுவதால இவ்விரண்டு கர்மாக்களும் "ஸம்ஸ்கிருதிகர்"மாக்களாகின்றன.

இந்த நான்குவிதமான கர்மாக்களும் எப்பொழுதும் அங்கமாகவேதானிருக்கும்.

तथाक्रतुकारकाण्याश्रित्य विहितमर्थकर्म द्विविधमङ्गं प्रधानञ्चेति। अन्यार्थमङ्गम्। अनन्यार्थं प्रधानम्। अङ्गमपिद्विविधं, सन्निपत्योपकारकमारादुपकारकञ्चेति। तत्र प्रधानरूपनिर्वाहकं प्रथमम्। फलोपकारिद्वितीयम्। एवं संपूर्णाङ्गसंयुक्तो विधिः प्रकृतिः। विकलाङ्गसंयुक्तो विधिर्विकृतिः। तदुभय विलक्षणो विधिर्दर्विहोमः। एवमन्यदप्यूह्यम् तदेवं निरूपितो विधिभागः ॥

யாகத்திலுள்ள காரகங்களை ஆச்ரயித்து விதிக்கப்படும் கர்ம "அர்தகர்ம" என்று சொல்லப்படும் (பூர்வமீமாஸகர்களுடைய கிரந்தங்களை அநுசரித்துப் பார்ப்போமானால் இந்த லக்ஷணமே நிஷ்கிருஷ்டலக்ஷணமாக (முடிவான லக்ஷணமாக) இருக்கமுடியாது என்று தோன்றுகிறது.) அந்த கர்ம அங்கமாகவும் இருக்கும் ப்ராதானமாகவும் இருக்க விதிக்கப்பட்டிருந்தால் அங்கமென்றும் அப்படியில்லாதபோனால் "ப்ராதானம்" என்றும் சொல்லப்படுகிறது. அங்கமும் ஸன்னிபத்யோபகாரகம்" ஆராதுபகாரகம்" என்று இருவகைப்படும். பிரதானயாகஸ்வரூபமாகிய த்ரவியத்திற்கோ அல்லது தேவதைக்கோ உபகரித்தால் "ஸன்னியத்யோபகாரக"மென்றும், பலத்திற்கு உபகரித்தால்"ஆராதுபகாரக" மென்றும் கூறப்படுகிறது. எல்லா அங்கங்களுடன் கூடிய விதியை "ப்ரகிருதி" யென்றும் சில அங்கங்களால் குறைவுபட்டிருந்தால் "விகிருதி" என்றும் இவ்விரண்டுகளைக்காட்டிலும் மாறுபட்ட விதியை "தர்விஹோமம்" என்றும் சொல்லுகிறார்கள். இம்மாதிரியே மற்ற விஷயங்களையும் ஊஹித்துக்கொள்ளவேண்டும். இப்படி வேதத்திலுள்ள விதிபாகத்தைப்பற்றி சொல்லப்பட்டது.

प्राशस्त्यनिन्दान्यतरलक्षणया विधिशेषभूतं वाक्यमर्थवादः। सच त्रिविधः गुणवादोऽनुवादो भूतार्थवादश्चेति। तत्र प्रमाणान्तरविरुद्धार्थबोधको गुणवादः "आदित्योयूपः" इत्यादिः। प्रमाणान्तर प्राप्तार्थबोधकोऽनुवादः "अग्निर्हिमस्य भेषजम्" इत्यादिः। प्रमाणान्तराविरोधतत्प्राप्तिरहितार्थबोधको भूतार्थवादः "इन्द्रोवृत्रायवज्रमुदयच्छदिति। तदुक्तम् "विरोधे गुणवादः स्यादनुवादोवधारिते। भूतार्थवादस्तद्धानादर्थवाद स्त्रिधामतः" ॥ इति।

"यजेतस्वर्गकामः" முதலிய விதிகள் புருஷனுக்கு யாகத்தில் ப்ரவிருத்தியை உண்டு பண்ணுகின்றன. எவ்விஷயத்தில் ப்ரவிருத்தியை உண்டுபண்ணிவைக்கவேண்டுமோ அவ்விஷயத்தைப்பற்றி புகழ்ந்துபேசவேண்டும். அப்படியில்லாதபோனால் சுலபமாக புருஷனுக்கு ப்ரவிருத்தி ஏற்படுவதில்லை. ஆகவே விதி தன் காரியமாகிய ப்ரவிருத்தியை உண்டுபண்ணுவதின் பொருட்டு ஸ்துதியை விரும்புகிறது. "नकलञ्जं भक्षयेत्" முதலிய நிஷேதங்களும் நிந்தையை விரும்புகின்றன. இப்படி அவைகளால் விரும்பப்படுகிற ஸ்துதியையும், நிந்தையையும் போதிக்கக்கூடிய வாக்யங்கள் தான் "அர்தவாதம்" எனப்படும். விதிநிஷேதங்களால் அபேக்ஷிக்கப்படுகிற அர்த்தத்தைப்போதிப்பதால் விதிநிஷேதவாக்யங்களுடைய ஓர் அம்சமாகவும் அர்தவாதங்கள் ஆகிவிடுகின்றன. ஆகையால் அவைகள் "விதிசேஷம்" என்றும் "நிஷேதசேஷம்" என்றும் சொல்லப்படுகின்றன.

(தொடரும்)

ஆர். முத்துகிருஷ்ண சாஸ்திரி.

---

வே. ஸோ. சர்மவின் பிரசுரங்கள்.

| | ரூ. | அ. | ப |
|---|---|---|---|
| சங்கரோபதேசம். | 2 | 0 | 0 |
| பத்ம புராணம். | 0 | 12 | 0 |
| மார்கண்டேயபுராணம் | 0 | 6 | 0 |
| வாமந புராணம். | 0 | 6 | 6 |
| வைகுண்ட ஏகாதசி | 0 | 0 | 0 |
| ஸ்ரீ ஸ்துதிகுஸுமாஞ்சலி | 0 | 1 | 0 |
| ப்ரஹ்மவைவர்த்தபுராணம் | 0 | 12 | 0 |
| கூர்மபுராணம் | 0 | 6 | 0 |
| ப்ரஹ்ம புராணம் | 0 | 12 | 0 |

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் வொர்க்ஸ், லிமிடெட் டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.



## ஸ்வதேச வைத்யத்திற்கு வைத்ய இலாகா மந்திரியின் ஆதரவு.

இந்திய வைத்திய முறைகளின் முன்னேற்ற விஷயங்களில் வைத்திய இலாகா மந்திரி அவர்கள் போதுமான கவனம் செலுத்தவில்லையென்று பொதுஜனங்களிடையும், விசேஷமாக தேசிய வைத்யர்களிடையும் ஓர் வதந்தி சிலகாலமாகவே பத்ரிகை மூலமும், பிரஸங்கமூலமும் பிரஸித்தமாகிக் கொண்டு வருகிறது. ஆனால் இது உண்மையல்லவென்றும், வைத்ய இலாகா மந்திரியார் மனதில் தேசிய வைத்ய சாஸ்திரத்தின் அபிவிருத்தி செய்யும் பேராவல் நிரம்ப இருக்கிறதென்றும், அன்னாருடைய திருச்சி பிக்ஷாண்டார் கோவிலில் தர்ம வைத்தியசாலை ஆரம்ப விழா உபந்நியாஸத்தை நாங்கள் நேரில் கேட்டதிலிருந்து நன்கு வியக்தமாயிற்று. தற்சமயம் ஆங்கில வைத்தியர்களுக்குள்ள அந்தஸ்துக்கு அணுவும் குறைவில்லாமல் இந்திய வைத்தியர்களுக்கும் ஸம அந்தஸ்து ஏற்படும்படியான வழிகளை தான் செய்ய உத்தேசித்திருப்பதாக Dr. ராஜன் அவர்கள் அன்று சொல்லி, மேலும் இனிமேல் தேசிய வைத்தியத்தின் கலாசாலை, வைத்ய சாலை முதலிய ஸகல விஷயங்களுக்கும் இப்போது ரிஜிஸ்டர் ஆகியிருக்கும் சுதேச வைத்தியர்களினால் தேர்ந்தெடுக்கப்படும் ஸெண்ட்ரல் போர்டார் வசம் தானிருக்குமென்றும், அவ்வித ஸெண்ட்ரல் போர்டினுடைய அமைப்புக்காக இப்போது விதிநியமங்கள் தயாராகிக் கொண்டிருக்கிறதென்றும் சொன்னார்.

### ஸ்வதேச வைத்யர்களின் கடமை.

இப்போது நமது கடமை முக்கியமாக ஸர்க்காரின் காரியங்களுக்கு உதவிபுரிவதும் ஆலோசனை சொல்லுவதுமேயாம். இந்திய வைத்ய காரியங்களைச் செய்ய ஏற்படுத்தப்படும் ஸெண்டிரல் போர்டுக்கு சிறந்த தகுதியான வைத்தியர்களை நாம் முதலில் தேர்ந்தெடுத்து அநுப்பவேண்டும். அதற்காக உடனே ரிஜிஸ்டர் செய்துகொண்டிருக்கும் மதராஸ் மாகாணத்தில் உள்ள ஸகல தேசிய வைத்யர்களும் ஒருமைப்படவேண்டும். அவ்விதம் ஒருமைப்பட தற்சமயம் ஆங்காங்கு பற்பல பெயர்களுடன் இருக்கும் தேசிய வைத்தியர்களுடைய எல்லா ஸபைகளும் ஒன்றுபடவேண்டும். ஒன்றாக இராமல் தனித்தனி ஸபையுடன் தனித்தனி அபிப்பிராயத்துடனிருந்தால், தேசீய வைத்தியத்திற்கு உதவியளிக்க விரும்பும் சர்க்காருக்கு ஸரியான வழியில் நாம் ஸஹாயம் செய்ய ஸாத்தியமாகாது. தேசஸேவை என்ற நல்ல ஹிருதயத்தினால் செய்யப்படும், ஆனால் வாஸ்தவ தத்துவத்தில் தேசத்திற்குக் கெடுதலாக முடியக்கூடிய தான் மதுவிலக்குச் சட்டத்தில் சேர்க்கப் பட்டிருக்கும் ஆஸவாரிஷ்ட விஷயங்களைப் பற்றி ஸர்க்காருக்கு ஒரு முகமாக விஷயத்தை எடுத்து போதிக்கவுமியலாது.

மேற்சொன்ன பல காரணங்களால் மதராஸ் மாகாண ரிஜிஸ்டர்டு வைத்யர்களின் ஒரு சங்கம் உடனே அமைக்கவேண்டுவது நமது முதல் கடமையல்லா? ஆதலால் நமது மாகாணத்தில் உள்ள பற்பல வைத்திய ஸபைகளின் காரியதரிசிகளையும், தனிப்பட்ட வைத்யர்களையும் மேற்சொன்னவாறு ஒரு ஸபையாக ஏற்படுத்தவேண்டிய முயற்சியைத் தாமதியாது செய்யப் பிரார்த்திக்கின்றேன். இது விஷயத்திற்கு தமது அபிப்பிராயத்தை உடனே கீழ்கண்ட விலாஸதாருக்கு தயைசெய்து எழுதக் கோருகிறேன். ஒவ்வொருவரும் உடனே ஊக்கம் கொள்ள வேண்டும். காலம் தாமதித்தால் காரியம் நாசமாகும்.

V. B. நடராஜ சாஸ்திரி.

ஆயுர் வேதா சாரிய. பொது காரியதரிசி

தென்னூர் ரோடு

திருச்சினாப்பள்ளி.

## நன்னிலம்.

### ஸ்ரீஆவணி ஜகத்குரு ஸ்வாமிகள் புறப்பாடு.

ஸ்ரீ சிங்கேரி (ஆவணி) ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ வித்யாரண்ய பாரதீஸ்வாமிகள் சுமார் 6 வார காலம் இங்கு விஜயம் செய்திருந்து 20-2-39 இரவு திருவாரூருக்கு விஜயம் செய்தார். இவ்விடம் ஸ்ரீ 'சங்கர விஜயத்தை'ப் பல பகுதிகளாகப் பிரித்து மிக உருக்கமாகவும், கர்மத்திலும் ஞானத்திலும் யாவருக்கும் பற்றுதலுண்டாகும்படி அனேக உபந்யாஸங்கள் செய்து அநுக்ரஹித்தார்கள். கடைசியில் கிராம மஹாஜனங்களுக்கும் உத்யோகஸ்தர்களுக்கும் மந்த்ராக்ஷதாநுக்ரஹம் செய்கையில், உள்ளூர் பிரும்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகளுக்கு ஷை யார் ஸ்காந்த ப்ரவசனம் செய்ததற்காகவும், வேதாத்யயனம், கர்மாநுஷ்டானம் முதலிய ஸத்கர்மங்களுக்காகவும், சால்வை, ப்ரஸாதங்கள் வழங்கப்பட்டன.

பிரும்மஸ்ரீ சிரோமணி T. S. வைத்தினாத சாஸ்திரிகள் பிரதிதினமும் பூஜாகாலங்களில் 'வியாகரணம், மீமாம்ஸை, தர்க்கம்' முதலிய சாஸ்திரங்களிலிருந்து வாக்யார்த்த விசாரம் செய்ததுபற்றி ஸந்தோஷித்து ஸ்ரீ ஸ்வாமிகள் ஷை சாஸ்திரிகளுக்கு ஓர் ப்ரசஸ்தி பத்திரிகையையும், சால்வையையும், மந்த்ராக்ஷதங்களுடன் ஸன்மானித்து அநுக்ரஹித்தார்கள். ஷை பத்திரிகையில் கண்டிருப்பது:—

ஸாஹித்ய சிரோமணி, பிரும்மஸ்ரீ தி. சா. வைத்யநாத சாஸ்திரிகள் வ்யாகரண, மீமாம்ஸா, ந்யாய, ஸாஹித்ய, சாஸ்திரங்களில் நல்ல பாண்டித்யம் பெற்றவர். "ஆர்ய தர்ம" பத்திரிகையில் அவர்களால் எழுதப்பட்டுவரும் "நீதி நிபந்தனம்" ஆலோகனம் செய்யப்பட்டு ஸந்தோஷிக்கப்பட்டது. இந்த முகாமில் ப்ரதிதினமும் பூஜாகாலங்களில் அவர்களது சாஸ்திரஸேவை பிரசம்ஸிக்கத் தக்கதாயிருந்தது.

ஸந்நிதானத்தில் அவர்களால் அர்ப்பணஞ் செய்யப்பட்ட "நீதி நிபந்தனத்தின் மூன்றுவது தளம் "ஸ்ரீ வேணுகோபால ஸ்துதி கீதம்' என்ற க்ருதி அங்கீகரிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டது. ஷை சாஸ்திரிகளுக்கு ஸ்ரீ சாரதா சந்திரமௌளீச்வரஸ்வாமியின் பரிபூர்ணாநுக்ரஹம் லப்யமாகும்படி நாராயணஸ்மரணம்.

ஸ்ரீ வித்யாரண்ய பாரதீ.

இவ்விதம் அநுக்ரஹித்து பக்தகோடிகள் பின்தொடர திருவாரூர் யாத்திரை சென்றனர். மறுநாட்காலை 6-30 மணிக்கு திருவாரூர் நகரவாஸிகளால் கோவில் பிருதுகளுடன் விசேஷ மேளவாத்ய, பஜனை கோஷ்டிகளுடனும் ஊர்வலமாக அழைத்து வரவேற்கப்பட்டார்கள்.

குறிப்பு:— "நீதி நிபந்தனத்தின்" முதல் இரண்டு தளங்களும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு பாதாளிடம் சென்ற நவம்பர் மாதத்தில் அர்ப்பணம் செய்யப்பட்டு அநுமோதிக்கப்பட்ட விபரம் அடுத்துவரும் ஸஞ்சிகையில் காண்க.

T. சீனிவாசய்யர்.

## கிருஷ்ணராயபுரத்தில் ஸோமயாக மஹோத்ஸவம்.

மேற்படி கிராமம் மிராசுதாரும் ரொம்பவும் சிஷ்டாளும் நித்யாக்னிஹோத்ரியுமான எம். வி. வெங்கிடராமய்யரவர்கள் பகுதான்யஞு மாசிமீ 8உ ஸோமயாக என்கிற யாகத்தை ஆரம்பித்து 12உ அவபிருதத்துடன் மிகவும் சிரத்தையாய் அனுஷ்டித்தார்கள். மேற்படி யாகத்திற்கு நெல்லிச்சேரி பிர்ம்மஸ்ரீராமனுதசிரௌதிகள் ஆத்வாம் செய்ததானது மிகவும் பாராட்டதக்கது. யஜமானனவர் செல்வவந்தர்களாய் இருந்த போதிலும் அதிக வைதீக சிஷ்டர். அத்யயனம் செய்தவர். சாஸ்திரங்களைகுரு முகமாய் நன்றாய்க் கற்றுணர்ந்தவர். நித்ய கர்மாவில் மிகவும் பக்தி கொண்டவர். இப்பேர்ப்பட்ட செல்வவந்தர்கள் கூட மேற்படி கார்யங்களில் ஈடுபடுகிறதைப்பார்த்தால் நமது ஸனாதன தர்மத்திற்கே ஜயக்கொடி போல் தோன்றுகிறது. யாகத்திற்கு வாகூர் பிரும்மஸ்ரீ வெங்கிடராம சாஸ்திரிகள் காலடி பிரும்மஸ்ரீ சங்கர சாஸ்திரிகள் யாகயஜமானருடைய குரு உள்ளூர் பிரும்மஸ்ரீ சுந்தரானன பாடிகள் மணக்கால் பிருமஸ்ரீ முத்துதீக்ஷிதர் புதுக்கோட்டை பிருமஸ்ரீ ராகவசாஸ்திரிகள் போலகம் பிரும்மஸ்ரீ சுந்தரசாஸ்திரிகள் பழூர் வேதாந்த பாடசாலை உபாத்தியாயர் பிரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் முதலிய பெரியோர்கள் விஜயம் செய்திருந்தார்கள். மேற்படி பெரியோர்களால் அநேக தர்மங்களைப் பற்றியும், கர்மாக்களைப் பற்றியும் உபன்யாஸங்கள் நடைபெற்றது.

மேற்படி யாகத்தில் பிராம்மண போஜனமும், ரித்விக்குகளுக்கும் வித்வான்களுக்கும் தக்ஷிணை விசேஷமாக செய்யப்பட்டது.

சுபம். ஸனாதன தர்மத்திற்கு ஜே!

எஸ். ராமசந்திரேஸ்வரன்.

## மேல்மங்கலம்.

### ஆஸ்திக மஹா ஜன சபை.

பஹுதான்யஞு மாசிமீ 10உ மங்கள வாரம் இரவு 9மணிக்கு சபைத்தலைவர் பிரும்மஸ்ரீ பிலாஞ்சேரி சுப்பிரமணிய அய்யாவர்களின் தலைமையில் குள்ளப்புறம் பிரும்மஸ்ரீ நாகேஸ்வர சாஸ்திரிகள் அவர்கள் கர்ம என்னும் விஷயம் பற்றி அரிய சொற்பொழி நிகழ்த்தினர்கள். சபைஉபதலைவர் பிரும்மஸ்ரீ ப. விஸ்வநாதய்யாவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்று சபை 11 மணிக்கு இனிது நிறைவெய்தியது. காரியதரிசி.

## சந்தேஹம்.

ஒரு அநாதை ஸ்திரீ மரித்தால் அவளுக்கு பர்த்தாவின் தம்பி ஷை யாரின் பிள்ளைகளிருக்க, ஸஹோதரன் பிள்ளை இருக்க, ஸஹோதரி பிள்ளை இருக்க இவர்களில் அவள் விஷயத்தில் அவளிடம் பணமில்லாதலால் கர்மா ஒருவரும் செய்யவில்லை. கர்மா செய்யாவிட்டால் தோஷம் யாருக்கு? கர்மா செய்தால் ஸ்ரேயஸ்ஸகம் என்பது யாருக்கு? என்பதை பத்திரிகையில் எழுதக்கேட்டுக் கொள்கிறேன்.

சந்தோக ச்ராத்தத்தில் அந்நஹோமம் மட்டுந்தான்செய்யவேண்டியதா, அஹவிஷ்டமும் செய்ய வேண்டியதா, மாதாபிதா தீக்ஷையில் கநிஷ்ட குமாரன் நிமந்த்ரணமும் பத்நிரஜஸ்வலையாயிருந்து ஸ்நானம் பண்ணின தினம் நிமந்த்ரணமும் செய்யலாமா இதெல்லாம் ஸாதாரணமான விஷயமான போதிலும் மறுபடி ஞாபகம் வர சாஸ்திவிதியை தெரிவிக்க வேண்டி இருக்கிறது.

எ. எம். ராமசந்திரன்

215273

125

## அஹிம்ஸை.

(முன் தொடர்ச்சி).

மனிதன் செய்யும் எல்லா பாபங்களுக்கும் காரணம் இந்த காமக்ரோதங்களே. இவைகளே உலகில் நடக்கும் எல்லா அநியாயங்களுக்கும் காரணமாகையால் இவைகளை ஜயித்தவனே வீரன். இவைகளுக்கு அடங்கிய மனதுக்கு அடிமைப்பட்டு அநேக தேசங்களை ஜயித்த வீரர் அநேகருளர். ஆனால் விசுவாமித்ரர் மனதையடக்கியவர். இச் சக்தியையடைய இவர் பட்ட ச்ரமம் சொல்லிலடங்காது. ஹநுமார் மனதை யடக்கியவர். சுகர், வ்யாஸர், பாராசர், வஸிஷ்டர் முதலியவர்களும் மனதை யடக்கியவர்களானதால் தான் அவர்களுக்கு அமாநுஷீகமான சக்திகள் இருந்தன.

காமக்ரோதங்களை யடக்க பகவான் கூறிய வழிகள் இரண்டு. அவை பழக்கம், ஆசையில்லாமை என்பவைகளே. பழக்கமாவது பகிரங்க ஸாதனமான மநு கூறும் நித்ய கர்மாநுஷ்டானங்களே. மனதை யடக்குவது கடினம். அதை ஸ்வாதீனப்படுத்த ஒவ்வொருவரும் சிறுவயதிலிருந்து முயலவேண்டும். அப்போதுதான் காலக்ரமத்தில் மனது ஸ்வாதீனப்படும். இந்நோக்கத்துடனேயே மநுவானவர் ஸ்நாநம், சௌசம், பூஜை, குருபக்தி, மாத்ருபக்தி, பித்ருபக்தி, ஆகார விதிகள் இவைகளை விதித்தாரேயல்லாது விளையாட்டாகவல்ல. மலையுச்சியையடைய எப்படிப் படிகள் வழியாய்ச் செல்லவேண்டியிருக்கிறதோ அப்படியே மனோ ஜயத்திற்கு மேற்சொன்னவை படிகளாகின்றன.

ஆசையின்மை என்ற மற்றொரு மார்க்கமே அஹிம்ஸாதர்மம். அதெப்படியெனில், ஆசையே பாபத்திற்குக் காரணமாகி அதைப் பூர்த்திசெய்ய பாஹிம்ஸை முதலிய துஷ்ட கார்யங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. பூர்த்தியாகாவிடில் கோப முண்டாகிறது. அது பாஹிம்ஸைக்குக் காரணமாகிறது.

யக்ஷப்ரசனத்தில் யுதிஷ்டிரர் "பிறருக்குத் துன்பம் செய்யாமை உத்தம தர்மம், மனதை யடக்கினவன் துக்கமடையான், எல்லா ப்ராணிகளுக்கும் நன்மை செய்பவனே ஸாது" என்றார்.

அஹிம்ஸா தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்வதெளிதேயன்றி, அஹங்கார மகங்காரங்களையுடைய நாம் கையாளுவது அரிதினுமரிது. எங்கும் ஸமமான பார்வையுடையவனாய் எல்லாவற்றிலும் தானிருப்பதாயும் எல்லாம் தன்னுள்ளிருப்பதாயும் பாவிக்கும் உண்மையான யோகிக்குத் துன்பம் என்பது கிடையாது. அவன் எங்கும் கடவுளையே காண்பானாகையால் அவன் மனம் வேறிடம் செல்லாது. இந்நிலையடைந்தவனுக்கு மறுபிறப்பில்லை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதை யடைவதற்கு மநு கூறும் முறைகளே சிறந்தவை அவைகளை சிறுவயது முதல் அப்யஸித்து வரவேண்டும். அதிலிருந்து அஹிம்ஸா தர்மம் தானகவே ஏற்படும். இதைக் கடைப்பிடித்தவர்களுக்குச் சத்ருக்களே ஒருவரும் இரார். இதையே புத்தர், இயேசு கிறிஸ்து முதலியவர்களும் கூறியுள்ளார்.

ஆகவே, அஹிம்ஸைக்கு மூலாதாரமான மநுதர்ம சாஸ்த்ராநுஷ்டானத்தை யாவரும் கைவிடாமல் அநுஷ்டிப்போமாக.

S. இராம சந்த்ர ஹரி:

## திருவல்லிக்கேணித் தமிழ் சங்கம்.

### திருமாலிருஞ் சோலைச் சிறப்பு.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ அஹோபில மடத்தில் 25.2-39 தேதி சனிக்கிழமை மாலை 6-மணிக்கு வேதாந்தாசார் கார்யதர்சி இருவரும் "திருமாலிருஞ் சோலை" எனும் விஷயம்பற்றி அரியதோர் உபந்யாசம் செய்தனர். சோலை மலைச்சிறப்பு, ஆழ்வார் அநுபவித்த பிரகாரம், ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாகம், எம்பெருமானார் ஈடுபாடு முதலியவற்றை நன்கு எடுத்து விளக்கினர். அம்பலைக்குச் சமீபத்தில் சென்று திரும்பிய சில ஆஸ்திகர்கள் இவ்விடத்துக்குப் பத்துமைல் தூரத்திலிருந்து இதற்காகவே வந்திருந்து கேட்டு ஆனந்தித்து தங்களிருப்பிடம் சென்றனர். சபை இரவு 7-30 மணிக்கு நிறைவெய்தியது.

ப. ரெ. திருமலை அய்யங்கார், காரியதரிசி.

## ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்வாமிகள்.

### அறுபதாண்டு நிறைவு விழா.

அஹோபிலமட திவ்யாஸ்தாநத்தில் தற்போது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரின் இன்னருளுக்கிலக்காகி நிற்கும் திருவிஞ்சிமேட்டிறைவரின் அறுபதாண்டு நிறைவு விழா சென்ற மாதத்தில் திருவரங்கம் எனத்திகழும் கோயிலில் தசாவதாரன் ஸந்நிதியில் திருமாசிங்கனின் திருவருளால் இனிது நிறைவெய்தியது கேள்வியுற்று யாவருக்கும் மகிழ்வுண்டாகுது. இவ்வழகியசிங்கரின் அருமை பெருமைகளை அறியாதார் அறியாதாரே. இவரது கல்வியின்கண் திடுகருணை அளத்தற்கரியது. பூர்வாச்ரமத்தில் இவர் சென்றநுபவியாத திவ்ய தேசமேஇல்லை என்னலாம். ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தைத் தழைத்தோங்கச் செய்வதற்காக இவ்வந்தணவயலர் அரும்பாடுபட்டது அறிஞர் அறிகுவர். இவரது கல்வித்திறனும், சொல்வன்மையும், பாந்தரோக்கமும் சம்ப்ரதாயாபிமானமும், சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் ஆற்றலும், உவமையற்றவை. பல வருடங்கட்குமுன் திருவல்லிக்கேணி கங்கைகொண்டான் மண்டபத்தில் நடந்த ஒரு பெரிய ஸதஸ்ஸில் அநேக பண்டிதர்கள் முன்னர் விஸ்தாரமாகப் பேசிய தருணம் மிகக் குறைவான அவகாசத்தில் அதுகாறும் குறிப்பிடாததான அபூர்வ விஷயத்தை இன்சொற்களால் பிரசங்கம் செய்ததைக் கேட்டு ஆநந்தமடைந்த அவையினர் 'இவர் மஹாபுருஷர்; மடாதிபதியாகவல்லவர்' எனக்கொண்டாடி மகிழ்ந்தனர். சில தினங்களுக்கு முன் வந்திருக்கும் மாத்வ மடாதிபதியைத் தரிசித்த காலத்து அவர் இவ்வழகியசிங்கரின் போற்றலை வியந்துகூறியது அளவிலா ஆநந்தத்தை அளித்துளது. இப்பெரியார் அநேக திடகாத்திரராய் எழுந்தருளியிருந்து அடியார்களை அநுக்ரஹிப்பாராக. இவர் ஸ்ரீ அழகிய சிங்கரின் சதாபிஷேக தினத்தன்றும், அச்சதாபிஷேகமலர் அரங்கேற்றிய நன்னாளிலும விலக்ஷணமான பிரஸங்கம் அருளிச் செய்தது செவிகளாரப் பருகும் பாக்கியம் பெற்றோம். இப்பெரியாரது சதாபிஷேகத்தையும் கண்டு மகிழ்வோமாக. நலம்.

ப. ரெ. திருமலை அய்யங்கார்.

## வன்னிகுல க்ஷத்திரிய முதல் மகாநாடு.

திருநாகேஸ்வரம், பிப்ரவரி 28௳

நேற்று 27௳ திருநாகேஸ்வரம் தேப்பெருமாநல்லூரில் சென்னை அட்வோகேட்டு ஸ்ரீமான் டி. எஸ். நடராஜபிள்ளை தலைமையில் கூடியது. ஸ்ரீமான் டி. வி. சதாசிவ பண்டாரத்தார் பிரதிநிதிகளை வரவேற்றார். சமூக முன்னேற்றத்தைப் பற்றி பல அறிஞர் பேசினார்கள். மகாநாடு சிறப்பாகவும், அமைதியாகவும் திருப்திகரமாயும் நடந்தது. பின் கண்ட முக்கிய தீர்மானங்கள் செய்யப்பட்டன:—

மதுவிலக்கை வரவேற்று அதை தஞ்சை ஜில்லாவுக்கு சர்க்கார் சீக்கிரம் கொண்டுவர வேண்டும் என்றும், நிலவரியில் 33⅓ சதம் குறைக்கவேணும் என்றும், 30 லக்ஷம் கொண்ட இச்சமூகத்துக்கு பொதுஸ்தாபனங்கள், உத்தியோகசாலைகள் முதலியவற்றில் தக்க அந்தஸ்தும் பிரதிநிதித்துவமும் கிடைக்கும்படி கவர்ன்மெண்டார் கருணை கூர்ந்து வசதி அளிக்கவேண்டும் என்றும், நில அடமான பாங்குகளில் சர்க்கார் கடன் கொடுப்பதிலும் வட்டிவிகிதத்தை 4½%வீதம் குறைத்துக்கொடுக்கவேண்டும் என்றும், தற்கால நில பொருமானத்தில் 100க்கு 75 வீதம் கடன் கொடுக்க வேண்டும் என்றும், சென்னைக்கு தனிபடை (சேனை) அமைத்து அதில் இச்சமூகத்தினருக்கு ஸ்தானங்களை அதிகமாக அளிக்கவேண்டும் என்றும், பப்ளிக்கு சர்விஸ் கமிஷன்போர்டு, ஹிந்துமத தேவஸ்தானபோர்டு இவைகளில் காலியாகவிருக்கிற ஸ்தானங்களில் ஏதேனும் ஒன்றை இச்சமூகதாருக்கு அளிக்கவேண்டுகிறதென்றும், மைனர் இனாம்தார்கள் மசோதா ஒன்றை கொண்டுவந்து ஏழைமக்களுக்கு உதவி புரிய வேண்டும் என்றும், கட்டாய ஆரம்பக் கல்வியை அரசாங்கத்தார் மாகாணம் முழுமையும் விரைவில் அநுஷ்டானத்துக்கு கொண்டுவரவேண்டும் என்றும், சுதேசி பொருள்களையே இச்சமூகத்தார் தீவிரமாக ஆதரித்து வரவேண்டும் என்றும், இச்சமூகதாருக்கு தனியாக ஓர் பத்திரிகையை அவசியம் ஆரம்பித்து நடத்திவரவேண்டும் என்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

——[நமது விசேஷ நிருபர்.]

## நல்லூர்ச்சேரி அருணாஜல சாஸ்திரி எழுதிய புஸ்தகங்கள்.

(1) பஞ்சநத ஸ்துதிமாலை, இது திருவையார் ஸ்தல புராணத்திலிருந்து அநேக மகரிஷிகளால் செய்யப்பட்ட ஸ்தோத்ரங்கள் அடங்கியது. சுமார் 8 அத்தியாயம் உள்ளது மூலம் மாத்திரம். விலை ரூ. 0 3 0

(2) சிவகீதையில் 4வது அத்தியாயம் ஸம்ஹிதையில் தேவரிஷிகிருத பரமேச்வர ஸ்தோத்ரம் பிரம்ரிஷி கிருத விஷ்ணு ஸ்தோத்ரமும் தமிழுரையுடன். விலை ரூ. 0 2 0

(3) ஸ்காந்தபுராணத்தில் ஸநத்குமார ஸம்ஹிதையில் மலயாசல கண்டத்தில் சிவதத்துவ ஸுதாநிதியிலுள்ள விபூதிதாரண மகிமா ருத்ராக்ஷ தாரண மஹிமா பில்வபத்திரார்ச்சன மகிமா (மூலம்மாத்திரம்).

விலை ரூ. 0 1 6

(4) தேவி அபாராதக்ஷமாபண ஸ்தோத்ரம் திருபுர ஸுந்தரீ ஸ்தோத்திரம் சாடு சுலோகங்களும் மூலம் மாத்திரம்.

விலை ரூ. 0 0 6

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜநார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்

4 ௵

24 11

16-3-1939

215274

140
1446
129
215274
27 MAR 1939

Registered No. M. 2913

# ஆரியதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 24 | கும்பகோணம் கலி5039 பகுதான்ய-ஞு பங்குனி-மீ 3உ 1939-ஞு மார்ச்சு-மீ 16உ | வ 11

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## காந்தி—வைஸ்ராய் ஸந்திப்பு.

நேற்று நடைபெற்றது.

ராஜ்கோட் விஷயமாகவும், பொதுவாக ஸம்ஸ்தான விஷயமாகவும் பேசுவதற்காக டேல்லியில் காந்திஜியும், கவர்னர் ஜனாலும் 15உயன்று ஸந்தித்தார்கள்.

ஸ்ரீ காந்தி ராஜ்கோட்டில் உபவாச சிரமத்தை நிவிர்த்திக்கவேண்டி ஸுகவாஸம் செய்து விட்டு, வைஸராயிடம் பேச வேண்டிய விஷயங்களைப்பற்றி தீர்க்காலோசனையும் செய்து வந்திருக்கிறார்.

## இந்தியாவிற்கு பொதுவுடமை ஏற்காது.

சென்னை கல்விமந்திரி கனம் வர்க்கீ, பொதுவுடமையைப்பற்றி திருநெல்வேலியில் அபிப்பிராயம் கூறுகையில் "இந்த புராதன புண்ணிய பூமியாகிய இந்தியாவிற்குள் பொதுவுடமைக் கொள்கை நுழையுமானால், நான் மௌனமாயிருக்கமாட்டேன். நான் ஒரு கத்தோலிக் மதஸ்தன் என்பதால் இதைச் சொல்லவில்லை. காந்திஜியின் ஸத்யம்—அஹிம்ஸைகளில் நம்பிக்கையுள்ள ஓர் இந்தியன் என்ற நிலைமையிலேயே இதைச் சொல்லுகிறேன். இனிமேல் பொதுவுடமைக் கொள்கையை எதிர்த்து ஓயாமல் தீவிர பிரசாரம் செய்வேன்" என்று பேசியிருக்கிறார்.

## ஓம் மண்டலி தகராறு.

விசாரணை செய்ய ஏற்பாடு.

காரச்சியில் ஓம்மண்டலி விஷயமான தகராறு முற்றிவிட்டது. ஹிந்து மந்திரிகள் இந்த மண்டலியை ஒழித்துவிடவேண்டுமென்றும், இல்லையேல் தாங்கள் ராஜிநாமா செய்துவிடுவதாயும் பிரதம மந்திரியிடம் தெரிவித்தார்கள். ஹிந்து ஸமூஹத்தினர் மிகுந்த கட்டுப்பாட்டுடன் ஆத்திரத்துடனும் இருக்கிறார்கள்.— ஓம் மண்டலியின் மீது [illegible] பட்டுள்ள குற்றங்களை விசாரிக்க ஓர் விசேஷ கோர்ட் நியமிக்க கவர்ன்மெண்டார் இசைந்திருக்கிறார்கள்.

## காந்தி படம் வைக்க ஆக்ஷேபம்.

சேலம் மஹம்மதியர்களின் கட்டுப்பாடு.

சேலத்திலுள்ள முனிஸிபல் ஸ்கூல்களில் காந்தி படம் வைக்கப்படவேண்டுமென்று முனிஸிபாலிடியில் செய்த தீர்மானத்திற்கிணங்க எல்லா பள்ளிக்கூடங்களிலும் அப்படம் வைக்கப்பட்டது.

ஆனால் மஹம்மதியர்களின் பள்ளிக்கூடங்களில் அதை வைக்க அவர்கள் விரும்பாததினால் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கூடம் அனுப்பாமல் கட்டுப்பாடு செய்துவிட்டனர். இதன்மேல் முனிஸிபாலிடியார் மஹம்மதியப் பள்ளிக்கூடங்களிலிருந்து படத்தை எடுத்துவிட்டார்கள்.

## ஹிந்துக்கள் மீது அவதூறு.

வங்காள மந்திரியின் மன்னிப்பு.

வங்காள பிரதமமந்திரியான கனம் பஸ்லுல்ஹக் என்பவர், வங்காள கவர்ன்மெண்டிலுள்ள ஸர்க்கார் உத்யோகஸ்தர்களான ஹிந்துக்கள், மந்திரிக்குக் கீழ்படிவதில்லையென்றும் ஒழுங்காக வேலைசெய்வதில்லையென்றும் வகுப்புவாதத்தில் மூழ்கியிருப்பதாயும் கூறினார்.

இதைக் கண்டித்து சட்டஸபையிலும், வெளியிலும் கிளர்ச்சி அதிகரித்துவிட்டதால் கனம் ஹக் தமது உண்மையற்ற கூற்றை வாபீஸ்பெற்று மன்னிப்பும் கேட்டுக்கொண்டார்.

## பிராங்கோவிற்கு சென்னை மந்திரி ஆதரவு.

மதத்தை அழித்த குடியரசு தொலைந்தது நல்லதே.

சென்னை கல்வி மந்திரியான கனம் வர்க்கீ வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் ஸ்பெயினில் குடியாசை முறித்து வெற்றியடைந்த ஜனால் பிராங்கோவை மதாபிமானிகள் யாவ[illegible] பிராங்கோ ஸர்க்காரைத் தாம் ஆதரிப்பதாயும் கூறியிருக்கிறார்.

அங்கு, குடியாசு நடத்திய கம்யூனிஸ்ட் அல்லது பொதுவுடமை வாதிகள் ஸ்பெயினில் பல அக்கிரமங்களைச் செய்துவந்ததாயும் முக்யமாக அவர்கள் மதங்களையும், மத சின்னங்களையும் அழித்து மதாபிமானிகளை துன்புறுத்தி வந்ததாயும், ஜெனால் பிராங்கோ நடத்திய உள்நாட்டு யுத்தமூலமாக மதத்தையும் அங்கு ஸ்தாபித்து விசேஷ நன்மை செய்திருப்பதாயும் இந்த உண்மையை அறியாமல் பலர் பிராங்கோவைப்பற்றி தப்பெண்ணம் கொண்டிருப்பது தகுதியல்லவென்றும் கனம் வர்க்கீ சொல்லியிருக்கிறார்.

காங்கிரஸ் தலைவர் போஸ், நேரு முதலிய அபேதவாதிகள் பிராங்கோவைக் கண்டித்தும், குடியாசை ஆதரித்தும் தந்தி கொடுத்தார்கள். காங்கிரஸ் மந்திரியான கனம் வர்க்கீ மட்டும் இதை ஒப்பவில்லை.

## புதிய ஹைகோர்ட் ஜட்ஜ்.

ஸ்ரீ பதஞ்ஜலி சாஸ்திரிகள் நியமனம்.

சென்னை ஹைகோட்டில் ஜஸ்டிஸ் வாதாசாரியர் ஸ்தானத்தில் ஸ்ரீமான் பதஞ்சலி சாஸ்திரியார் சாச்வத ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

டி. ராமகிருஷ்ணய்யங்கார் எழுதியது.
ஆண்டாள் திருமணம். 0 8 0
கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தன ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

## உண்மையான பக்தி.

### 1. பஜனையும் பக்தியும்.

ஒருநாள் ஸாயங்காலம் ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் முன்னிலையில் பொதுவாக நடந்து வந்த ஸம்பாஷணை மத்தியில் ஸங்கீதத்துடன் ஏற்பாடாய்ப் பஜனை செய்யும் விஷயமாக பேசும்படி ஏற்பட்டது. அப்பொழுது அங்கிருந்த ஒரு பக்தர் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

பக்தர்:— கண்டபடியெல்லாம் அலைகிற நம் மனதுக்கு இதுமாதிரி பஜனை செய்வது மிகவும் உத்ஸாஹத்தையும், சாந்தியையும் கொடுக்கிறது. இப்பொழுது ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் பஜனைக் கோஷ்டிகள் ஜாஸ்தியாகிக்கொண்டு வருவதைப் பார்க்க மிகவும் திருப்தியாயிருக்கிறது.

மஹாஸ்வாமிகள்:— எனக்கும் மிகவும் திருப்திதான். ஆனால் நம் வைதிக கர்மானுஷ்டானமும் குறைந்துகொண்டே வருகிறதாமே? அதெப்படி இருக்கலாம்?

ப:— ஸாமான்ய ஜனங்களுக்கு வைதிக கர்மத்தில் நம்பிக்கைக் குறைந்திருக்கிறதையே தான் முக்கிய காரணமாகக்கொண்டு ஈசுவரனைத் திருப்திசெய்ய பஜனையைக் கையாளுகிறார்கள்.

ம:— பஜனையில் பிரவிருத்திக்கிறவர்களில் சிலர் ஸந்த்யாவந்தனம் முதலான நித்ய கர்மாக்களைக்கூட கவனிக்காமலே விட்டு விடுவார்களென்று தோன்றுகிறது.

ப:— பஜனை செய்துகொண்டிருக்கும் போது ஸந்த்யா வந்தனத்தை விட்டுவிடலாமென்றே சொல்கிறார்கள். பஜனையே மேலான வழிபாடாயிருப்பதால், இன்னொரு வித வழிபாடாகிய கர்மா அனாவசியமாகும் என்று அவர்களின் அபிப்பிராயம்.

ம:— பொது நியாயமாக, பெரியதில் சின்னது அடங்கினது என்பது வாஸ்தவம். ஆனால் பகவானைத் திருப்தி செய்துவைக்கும் விஷயத்தில் கர்மாவைவிட பஜனைக்கு ஜாஸ்தி சக்தி உண்டென்று எப்படித் தெரியும்?

ப:— ஸாக்ஷாத்தாகவே பகவானைப் பிரார்த்திப்பது பஜனை. கர்மா என்பது வைதிகக்கிரியா கலாபங்கள் மூலமாய்த் தானே பிரார்த்திப்பதாகும்?

ம:— பகவானை நாம் யாரும் நேரில் பார்த்ததில்லையே?

ப:— இல்லை.

ம:— அவரை நாம் நேரில் கேட்க ஸாத்திய மில்லாததினாலும், அவருக்கு எது திருப்திகரமாயிருக்குமென்று நாமாகவே தெரிந்துகொள்ள வழியில்லையே?

ப:— இருந்தாலும், பகவானுடைய ஆக்ஞைகளடங்கிய வேதங்களிலிருந்து ஸுலபமாகத் தெரிந்துகொள்ளலாமல்லவா?

ம:— ஸ்மிருதிகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள். முக்கியமாக, பகவத் கீதையையும் சேர்த்துக்கொள்ளுங்கள். ஈசுவரனோடு மானஸிகமாகவும் நேருக்கு நேராகவும் ஸாக்ஷாத் ஸம்பந்தம் வைத்துக்கொள்ள பாக்கியமடைந்த பெரியோர்கள் பகவானுடைய அபிப்பிராயங்களை ஸந்தேஹமறத் தெரிந்தே அவர்கள் ஏற்படுத்தியவைகளல்லவா ஸ்மிருதிகள் என்பது?

ப:— ஆம்.

ம:— அவைகள் நமக்கு என்ன போதிக்கின்றன?

ப:— பக்தியைக் குறைவாகச் சொல்லியிரா.

ம:— வாஸ்தவம். ஆனால் பக்தி என்றால் என்ன என்ற கேள்வி மிஞ்சும். நீங்கள் சொல்லும் பஜனையா அல்லது கர்மாவா?

ப:— கர்மா எப்படி பக்தியாகும்?

ம:— வாஸ்தவத்தில், கர்மாதான் பக்தியாகுமென்றும், கர்மாவிற்கு விருத்தமாக வாவது கர்மாவை விட்டாவது இருக்கும் பஜனை பக்தியே யாகாதென்றும், நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

ப:— அதெப்படி?

ம:— "ஸ்வகர்மணா தம் அப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:" ஸ்வகர்மானுஷ்டானத்தினால் மனுஷியன் ஈசுவரனை ஆராதித்து ஸித்தி பெறுகிறான் என்று ஸந்தேஹத்திற்கு இடமன்னியில் பகவானே சொல்கிறார். இவ்விடத்தில் அவரவர்களுக்கு ஏற்பட்ட கர்மாவை அனுஷ்டிப்பதே தன்னை ஆராதனம் செய்யும் வழி என்ற தத்வத்தை விளக்கியிருக்கிறார்.

ப:— பகவானிடத்தில் பக்தியைக் காட்டுவதற்கு கர்மானுஷ்டானமென்ற ஒரே வழி தானா உண்டு?

ம:— கர்மா யாருக்கெல்லாம் விதிக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் இந்த வழிதான் உண்டு.

ப:— ஈசுவரனைப் பிரார்த்தித்துக்கொண்டு தியானம் செய்துகொண்டே காலத்தைக் கழிக்கிற பக்தன், வெளிக் கிரியைகளைச் செய்வதில் வேகமுள்ள பக்தனைவிட மேலானவன் இல்லை யென்று வைத்துக் கொண்டாலும்கூட, ஸமானமாக வாவது இருக்கமாட்டானா?

ம:— தாரதம்யம் சொல்வதற்கே இடமில்லை. ஒருவனுக்கு கர்மா விதிக்கப்பட்டிருக்கும் போது, அதை உதாஸீனம் செய்து விட்டு மானஸிகமாகப் பிரார்த்தனையோ தியானமோ, செய்கிறேனென்றால், அவன் பக்தனே ஆகமாட்டான்,

ப:— ஏன் அப்படி?

ம:— ஸாமான்யமாக ஒரு யஜமானனையும் சேவகர்களையும் கவனிப்போம். ஒரு ஸேவகன் எப்பொழுதும் யஜமானருக்கு முன்னால் நின்றுகொண்டு அவரை ஸ்துதித்துக் கொண்டேயிருக்கிறானென்று வைத்துக் கொள்வோம். எப்பொழுதாவது, அவனைப் பார்த்து அடுத்த அறையிலிருக்கும் ஒரு ஸாமானை எடுத்து வரும்படி யஜமான் சொல்ல, அதைக்கேட்ட அந்த ஸேவகன் "ஸ்வாமி! ஒரு க்ஷணம்கூட தங்கள் ஸன்னிதியை விட்டுப்போக ஸஹியேன். பெருந்தன்மை பொருந்தின அதி ரமணீயமான தங்களுடைய முகாரவிந்தத்தைப் பார்த்துக் கொண்டிருக்கக் கிடைத்திருக்கும் ஆனந்தத்தையும் பாக்கியத்தையும் ஒரு நிமிஷம் கூட இழக்க என்னால் முடியாது. எப்பொழுதும் உங்கள் கூடவேயிருந்துகொண்டு, உங்கள் முகத்தைப் பார்த்துக்கொண்டு, தங்களுடைய சிலாக்கியமான குணங்களைப் பாடித் தங்களை ஸ்துதித்துக் கொண்டிருக்கவே பிரியப்படுகிறேன். என்னை இந்த இடத்திலிருந்து அசையச் சொல்லாதீர்கள்" என்று பதிலளிக்கிறானென்றும் வைத்துக்கொள்வோம். மற்றொரு ஸேவகன் யஜமானருக்கு முன்னால் வருவதே கிடையாது; யஜமானனால் நேரிலோ வேறு மனுஷியர் மூலமாவோ கட்டளையிடப்பட்டிருக்கிற ஸகல கார்யங்களையும் கொஞ்சம்கூடத் தவறாமல் மிகவும் ஜாக்கிரதையாகச் செய்துவருவான்; யஜமானர் எங்கு திரும்பிப் பார்த்தாலும் தன் கட்டளையை பூர்ண மனதுடன் மிகவும் திருப்திகரமாக இந்த ஸேவகன் நடத்தியிருக்கிறானென்பதையே காண்கிறார்; ஆனால் தன் முன் அவனை நிற்கப் பார்க்கிறதில்லை. இவ்விரண்டு ஸேவகர்களில் எவனுக்கு யஜமான விசுவாஸம் ஜாஸ்தி? எவனிடம் யஜமானருக்கு ஜாஸ்தி திருப்தியிருக்கும்?

ப:— பின் சொன்னவனிடத்தில் தான்.

ம:— ஒரு பையன் தன் தகப்பனாரின் மடியிலேயே உட்கார்ந்துகொண்டு அவர் என்னச் சின்னக் கார்யம் சொன்னாலும் செய்ய மறுத்துக்கொண்டும், இன்னொரு பையன் எது சொன்னாலும் அதை அதை அப்படியே நடத்திவைக்க உடனே வெளியில் ஓடிக்கொண்டும், இருந்தால் அவருக்கு யாரிடத்தில் பிரீதி ஜாஸ்தி யேற்படும்?

ப:— சொன்னபடி கேட்கிறவரிடத்தில் தான்.

ம:— யஜமானர் அல்லது தகப்பனாருடைய முன்னிலையை விட்டு நகரமாட்டேனென்று சொல்கிற ஸேவகனுக்கு அல்லது பையனுக்குக் கொஞ்சமாவது பக்தி யிருக்கிறதென்று சொல்லமுடியுமா? அவன்தான் எது சொன்னாலும் கேட்கத் தயாரில்லையே!

ப:— சொன்னபடி கேட்காமலிருப்பதற்கும் பக்திக்கும் நேர் விரோதம் தான்.

ம:— அப்படியே தான். எந்த விதமாய்ப் பார்த்தாலும், பக்திக்கு முதல் அடையாளமே சொன்னபடி கேட்பது. ஏன் என்று கேட்காமல் பிரியத்துடன் சொன்னபடி நடக்கவேண்டும். தர்க்கம் செய்துகொண்டு முணுமுணுத்துக்கொண்டு நடப்பதும் பக்தியில் சேராது.

ப:— வாஸ்தவம்.

ம:— சுருதியும் ஸ்மிருதியும் என்னுடைய ஆக்ஞைகள் என்று பகவான் சொல்கிறார். இந்த ஆக்ஞைகளை உல்லங்கனம் செய்து கொண்டிருக்கிற காலத்திலாவது இந்த உல்லங்கனத்தையே அடிப்படையாக வைத்துக் கொண்டாவது பக்தி என்பது இருக்க முடியுமென்று யாராலும் சொல்ல ஸாத்தியப்படுமா?

ப:— கர்மாவுக்குப் பதிலாக பஜனை உபயோகப்படாதென்று தெரிந்துகொண்டேன்.

ம:— ஒருநாளும் பதிலாகாது.

ப:— அப்படியானால், பஜனைக்குத் தான் என்ன உபயோகம்? அவ்வளவும் வீணா?

ம:— யஜமானரால் கொடுக்கப்பட்ட கட்டளைகள் எல்லாவற்றையும் யதாக்கிரமமாய்ச் செய்து முடித்துவிட்டு, ஒழிந்த வேலைகளில் யஜமானருக்கு ஸமீபத்தில் போய் வேண்டுமானால் நிற்கட்டும். வேலை பாக்கியிருக்கும் போது அவ்விதம் போய் நிற்கக்கூடாது. அதேமாதிரி, தனக்கு ஏற்பட்ட ஸகல கர்மாக்களையும் முடித்துவிட்டு அப்புறமும் அவகாசம் இருந்தேயானால், ஈசுவரனைப் பிரார்த்தனை செய்யலாம், அவருடைய குணங்களை ஸ்துதித்துப் பாடலாம். கிடைத்த அவகாசத்தை இப்படி நன்றாக உபயோகித்துக் கொள்ளலாம். ஆகையால் கர்மானுஷ்டானத்திற்கு போக இடைவெளிகளில் கிடைக்கக் கூடிய அவகாசங்களுக்காக ஏற்பட்டது தான் பஜனை.

ப:— சுருதி ஸ்மிருதிகளால் விதிக்கப்பட்ட எல்லாக் கர்மாக்களையும் ஸரிவர முடித்துக் கொண்டு, அப்புறம் பஜனை செய்கிறதென்றால், பிராஹ்மணனுக்குப் பஜனை செய்ய அவகாசமே இராதென்று தோன்றுகிறது.

ம:— அப்படியல்ல. சோம்பேரிகளுக்குத்தான் பொழுது காணவில்லை யென்று தோன்றும். கார்யம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு எப்பொழுதும் அவகாசம் கிடைக்கும்.

ப:— எப்படியும், வைதிக கர்மாக்களுக்குப் போக மீதமுள்ள வேலையில் தான் பஜனைசெய்ய வேண்டுமென்றால், பிராஹ்மணரைத் தவிர இதர ஜாதியார்களுக்கே ஜாஸ்தி

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க).



ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

# மூகபஞ்சசதீ.

## மந்தஸ்மிதசதகம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

20. வக்த்ரேந்தோ: தவ சந்த்ரிகா ஸ்மிதருசி: வல்கு [ஸ்புரந்தீஸதாம்
ஸ்யாத் சேத் யுக்தமிதம் சகோர மனஸாம் [காமாக்ஷி கௌதூஹலம் |
ஏதச்சித்ரமஹர்நிசம் யததிகா மேகாம் ஸதா [காஹதே
பிம்போஷ்டத்யுமணி ப்ரபாஸ்வபி ச யத் பிம் [போக மாலம்பதே ||

காமாக்ஷி! - காமாக்ஷியே, தவ - உனது, வக்த்ரேந்தோ: - முகமாகிற சந்திரனுடைய, ஸ்மிதருசி: - புன்சிரிப்பின் காந்தியான, சந்த்ரிகா - நிலாவானது, வல்கு - அழகாக, ஸ்புரந்தீ - பிரகாசிக்கிறதாய், சகோரமனஸாம் - சகோர பக்ஷி போன்ற மனதுள்ள, ஸதாம் - ஸாதுக்களுக்கு, கௌதூஹலம் - ஆனந்தகரமாக ஸ்யாத்சேத் - இருக்குமானால், இதம் யுக்தம் - இது நியாயம், ச - ஆனால், அஹர்நிசம் - இராப்பகலாய், ஏகாம் - ஒரு விஷயத்தை, அதிகாம்-அதிகமாக, காஹயேத் - அடைகிறதென்பது யாதன்றோ அபி - இன்னும், ஸதா - எப்போதும், பிம்போஷ்டத்யுமணி ப்ரபாஸு - உதடுகளாகிற ஸூர்யனின் காந்திகளில், பிம்போகம் - அழகை, ஆலம்பதே யத் - அடைகிறதென்பது யாதொன்றோ, ஏதத் - இதுதான், சித்ரம் - ஆச்சர்யம்.

21. ஸாஹாய்யம் கலசாம்புதே: வஹதி தே காமாக்ஷி! [மந்தஸ்மிதம்
சோபா மோஷ்ட ருசா ச வித்ரும பவா மேதத் [பிதாம் ப்ருமஹே |
ஏத ஸ்மாத் உதிதாம் புராகில பபௌ சர்வ: [புராண: புமான்
ஏதன் மத்ய ஸமுத்பவாம் ரஸயதே மாதுர்ய [ரூபாம் ஸுதாம் ||

காமாக்ஷி! - காமாக்ஷியே!, தே - உனது, மந்தஸ்மிதம் - புன்சிரிப்பானது, கலசாம்புதே: - அகஸ்த்யருக்கு, ஸாஹாய்யம் - ஒத்தாசையாயிருக்கும் நிலைமையை, வஹதி - அடைகிறது, ஓஷ்டருசா - உதட்டின் காந்தியால், வித்ருமபவாம் - பவழக்கொடியினுடைய, சோபாம் ச - காந்தியையும், (வஹதி - அடைகிறது), ஏதத் பிதாம் - இந்த பேதத்தை, ப்ருமஹே - எடுத்துச் சொல்லுகிறோம், புரா - முன்பு, ஏதஸ்மாத் - இதிலிருந்து, உதிதாம் - உண்டானதை, சர்வ: - சிவன், பபௌ - குடித்தான், ஏதன் மத்ய ஸமுத்பவாம் - இதன் மத்யிலிருந்து உண்டான, மாதுர்யரூபாம் - மதுரமயமான, ஸுதாம் - அம்ருதத்தை, புராண: புமான் - புராணனான மனிதன், ரஸயதி அநுபவிக்கிறான்.

22. உத்துங்க ஸ்தன கும்ப சைல கடகே விஸ்தாரி [கஸ்தூரிகா பத்ர ஸ்ரீஜுஷி
சஞ்சலா: ஸ்மிதருச: காமாக்ஷி! தே கோமளா: |
ஸாந்த்யா தீதிதி ரஞ்ஜிதா இவ முஹு: ஸாந்த்ரா [தர ஜ்யோதிஷா
வ்யாலோலாமல சாரதாப்ர சகல வ்யாபார மாதன் [வதே ||

காமாக்ஷி! - காமாக்ஷியே!, தே - உனது, விஸ்தாரி கஸ்தூரிகாபத்ர ஸ்ரீஜுஷி - தாராளமாகப் பூசியுள்ள கஸ்தூரியின் காந்தியுள்ள, உத்துங்கஸ்தன கும்ப சைல கடகே - உயர்ந்த ஸ்தன பாரங்களாகிற பர்வத பிரதேசத்தில், சஞ்சலா: - ஸஞ்சரிக்கின்றவைகளாயும், கோமளா: - மனோக்ஞங்களாயும், ஸாந்த்ராதரஜ்யோதிஷா - நிறைந்த உதட்டின் காந்தியால், ஸந்த்யாதீதிரஞ்ஜிதா இவ - ஸந்தியாகால காந்தியால் சிவந்ததுபோன்றதுகளாயுமுள்ள, ஸ்மிதருச:- புன்சிரிப்பின் காந்திகள், வ்யாலோலாமல சாரதாப்ர சகல வ்யாபாரம் - அசைகிறதும் நிர்மலமுமான சரத்கால மேகங்களின் ரீதியை, முஹு: - அடிக்கடி, ஆதன்வதே - செய்கின்றன.

23. க்ஷீரம் தூரதஏவ திஷ்டது கதம் வைமல்ய [மாத்ராதிதம்
மாதஸ்தே ஸஹபாட வீதி மயதாம் மந்தஸ் [மிதைர் மஞ்ஜுளை: |
கிஞ்சேயம் து பிதாஸ்தி தோஹன வசாதேத்து [ஸஞ்ஜாயதே
காமாக்ஷி! ஸ்வயமர்த்திதம் ப்ரணமதாம் ஏதத்து [தோதுஹ்யதே ||

மாத: - தாயான, காமாக்ஷி! - ஏ காமாக்ஷியே, க்ஷீரம் - பாலானது, தூரத ஏவ - தூரத்திலேயே, திஷ்டது - இருக்கட்டும் இதம் - இந்த பாலானது, தே - உனது, மஞ்ஜுளை: - அழகு பொருந்திய, மந்தஸ்மிதை: - புன்சிரிப்புக்களோடு, ஸஹபாடவீதிம் - ஒத்திருக்கும் நிலைமையை, கதம் அயதாம் - எப்படி அடையமுடியும், கிஞ்ச - இன்னும், இயம்து பிதா - இந்த பேதமானது, அஸ்தி - இருக்கிறது, ஏதத்து - இந்தப் பாலோவென்றால், தோஹனவசாத் - கறப்பதாலேயே, ஸஞ்ஜாயதே - உண்டாகிறது, ஏதத்து - இந்தப் புன்சிரிப்போவென்றால், ப்ரணமதாம் - நமஸ்கரிப்பவர்களுடைய, அர்த்திதம் - ஆசைப்பட்டவைகளை, ஸ்வயம் - தானாகவே, தோதுஹ்யதே - சுரந்து கொடுக்கிறது.

24. கர்ப்பூரை ரம்ருதாம்சுபி: ஜநநி! தே காந்தைச்ச [சந்த்ராதபை:
முக்தா ஹார குணை: ம்ருணாள வலயை: மந்த [ஸ்மிதஸ்ரீரியம் |
ஸ்ரீ காஞ்சீச்வரி! ஸஜ்ஜநை: ஸமதயா காமாக்ஷி! [ஸம்ஸ்தூயதே
தத்தாத்ருக் மம தாபசாந்தி விதயே கிம் தேவி [மந்தாயதே ||

ஜநநி! - தாயே, தேவி - தேவியே, காஞ்சீச்வரி! - காஞ்சீநகர ஈச்வரியே, காமாக்ஷி! ஏ காமாக்ஷி, தே - உனது, இயம் - இந்த, மந்தஸ்மிதஸ்ரீ: - மந்தஹாஸ காந்தியானது, அம்ருதாம்சுபி: - அம்ருதம் போல் குளிமையான, கர்ப்பூரை: - பச்சக் கற்பூரத்தோடும், காந்தை: - அழகு பொருந்திய, சந்த்ராதபை: - நிலாவோடும், முக்தாஹாரகுணை: - முத்து ஹாரத்தின் நூல்களாயிருக்கிற, ம்ருணாளவலயை: - தாமரைத் தண்டுகளோடும், ஸமதயா - ஒத்திருப்பதாக, ஸஜ்ஜனை: - பெரியோர்களால், ஸம்ஸ்தூயதே - புகழப்படுகிறது, தத்தாத்ருக் - அப்படிப்பட்ட புன்சிரிப்பானது, மம - எனது, தாப சாந்தி விதயே - தாபத்தைக் குறைக்கும் விஷயத்தில், கிம் மந்தாயதே - ஏன் தாமஸிக்கிறது?

(தொடரும்.)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்

பகுதான்யஷு பங்குனி-மீ 3உ

## "தனக்கு வந்தால் தெரியும்—"

சென்னை கவர்ன்மெண்டார் விதிக்க உத்தேசித்திருக்கும் ஸாமான் விற்பனை வரியைப் பற்றித் தென்னிந்தியாவெங்கும் வியாபாரிகளின் கிளர்ச்சி வலுப்பட்டிருக்கிறது. கடைசாத்தியும், ஊர்வலம், பொதுக் கூட்டங்கள் நடத்தியும் இந்த வரியை வியாபாரிகள் வெகுவாகக் கண்டித்துவருகிறார்கள். காங்கிரஸ் எதிரிகளாயுள்ளவர்கள் தவிர, காங்கிரஸிடம் விசேஷ அபிமானம் வைத்தவர்களும், அதற்கு ஓட் செய்தவர்களுமான பொதுஜனங்கள்கூட காங்கிரஸ் மந்திரிகளின் புதியவரிக் கொள்கைகளை பலமாக ஆக்ஷேபிக்க முன்வந்திருக்கிறார்கள். "வரிகளைக் குறைப்பதாயும், வேறு நன்மைகளைச் செய்வதாயும் எலெக்ஷன் காலத்தில் வாக்குறுதி கொடுத்ததை நம்பியே காங்கிரஸுக்கு வோட்போட்டோம். காங்கிரஸ் ஆக்ஷியில் பாலும் தேனும் கலந்து ஓடுமென்று கூறப்பட்டதை நம்பினோம். எல்லாம் ஏமாற்றமாக முடிந்துவிட்டது. நம்மிடம் வோட் பெற்று நம்மையே உபத்ரவிப்பதா?" இது முதலான பேச்சுக்கள் பலவூர்களிலும் நடந்த கண்டனக்கூட்டங்களில் பேசப்பட்டு வருகின்றன.

காங்கிரஸ் ஆக்ஷியேற்பட்ட சிறிது காலத்திற்குள்ளேயே ஓட்டர்களுள் இவ்வளவு அதிருப்தி உண்டாகுமென்று ஒருவரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். நமது மாகாணத்தைப்பற்றிய வரையில் இப்போது எல்லா வகுப்பினரும் காங்கிரஸ் ஆக்ஷியில் இதற்குள்ளாகவே அலுப்பு அடைந்துவிட்டது ருஜுவாகிவருகிறது. வக்கீல்களுக்கு வருத்தம், வியாபாரிகளுக்கு வெறுப்பு, மிராசுதார்களுக்கு ஏமாற்றம், பண-நிலச்சொந்தக்காரர்களுக்கு பீதி. இந்தரீதியாகப் பார்த்தால் காங்கிரஸ் ஆக்ஷியால் அலுப்போ வெறுப்போ அடையாதவர் தற்போது இல்லையெனலாம். இந்த நிலைமையை ஸிருஷ்டித்துக்கொண்டது யார்? நாமல்லவோ? சாதுர்யமான பிரசாரத்தினாலும், நயமான வார்த்தையாலும் நம்மவர்கள் மோஹித்தும்; அளவு கடந்த உத்ஸாஹமடைந்தும் தீர்க்காலோசனையற்றும் நம் ஜனங்கள்நடந்துகொண்டதே இப்போதைய நிலைமைக்குக் காரணமாகும்.

எலெக்ஷன் ஸமயத்திலும், மற்ற காலத்திலும் தார்மிக ஸமூஹத்தார் சொல்லிய ஆலோசனைகளையும் தீர்மானங்களையும் பொது ஜனங்கள் அலக்ஷ்யம் செய்து நகையாடினார்கள். ஆலயப் பிரவேசமோ, சாரதாச் சட்டமோ கூடாதென்று தார்மிக ஸமூஹம் எதிர்த்தபோது, காங்கிரஸ் மயக்கமுள்ள உத்ஸாஹிகள் பலர் "ஏன் கூடாது" என்று வாதித்தார்கள். வேறு பலர் "ஆலயப்பிரவேசம் வைதிகர்களுக்குத்தானே கெடுதல், அதனால் நமக்கென்ன!" என்று அலக்ஷ்யம் செய்தார்கள். கோவில்கள் பொதுவாக இருக்கையில் ஏன் எல்லோரும்போகக்கூடாதென்று கக்ஷி பேசினார்கள். இதில் தார்மிக ஸமூஹத்தினர் செய்த ஆக்ஷேபத்தின் உள் கருத்தை அப்போது ஒருவரும் சிந்தித்துப் பார்க்கவில்லை.

ஆனால் இப்போது கவர்ன்மெண்டார் ஒவ்வொருவருடைய பணப் பையிலும் கை வைக்க முன் வந்த பிறகு ஜனங்கள் தங்கள் தவறைச் சிறிது உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

தார்மிக ஸமூஹமானது காங்கிரஸ் மந்திரிகள் இருப்பதை எதிர்க்கவில்லை. ஆயினும் நீண்டகாலப் பழக்கவழக்கங்களையும், உரிமைகளையும், வியவஸ்தைகளையும் அப்படியே காத்துவருவதாக உறுதி கூற வேண்டுமென்றே கேட்டார்கள். இந்தப் பொது ந்யாயத்தை அப்போது எதிர்த்தவர்கள் யாவரும் இப்போது தங்கள் உரிமைகளும், ஸௌகர்யங்களும் பறிக்கப்படுவதைக் கண்டு ஏமாந்துபோனோமே!" என்று பரிதவிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

காங்கிரஸைக் கட்டுப்படுத்த கன்ஸர்வேடிவ் கொள்கையுள்ள ஒரு தனிக் கக்ஷி வேண்டுமென்று தார்மிகர்கள் ஆதி முதல் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். இந்தக் கக்ஷியானது, லௌகிகம், வைதிகம் ஆகிய எல்லா வியவஸ்தைகளையும் காக்க வல்லதாயிருக்குமென்று நிரூபிக்கப்பட்டது. எல்லா ஜாதி மதஸ்தர்களுடையவும் உரிமையை ரக்ஷிக்கக் கூடியது. இந்தக் கொள்கையின் கீழ் கக்ஷி யேற்பட்டிருந்தால் எல்லோரும் பரஸ்பரம் ஒத்தாசை செய்துகொண்டு பிரஜா உரிமைகளை ரக்ஷித்து வரலாம். காங்கிரஸுக்கு எதிராகக் கக்ஷி ஏற்படுத்துவதா, என்ற மயக்கத்தில் இதை ஒருவரும் அப்போது லக்ஷ்யம் செய்யாமலிருந்துவிட்டார்கள். இப்போது ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உரிமைகளுக்குப் பங்கம் ஏற்பட ஆரம்பித்துவிட்டதைப் பார்த்த பிறகு தனிக் கக்ஷியொன்று இருக்கவேண்டிய அவசியத்தை உணர ஆரம்பித்திருக்கிறார்கள்.

இப்போது நம் தேச ராஜீயமானது காந்தீயம், அபேதவாதம், ஆகிய இரண்டுக்குள் அடங்கி நிற்கிறது. காந்தீயமானது பழைய வழியை அழித்தும், மத விஷயத்தில் புதிய ரோடுபோட்டும், அதன்வழியே ஜனங்களை அழைத்துச்செல்ல விரும்புகிறது. காந்தீயத்திற்கு மதம் ப்ரதானமாயும், ராஜீயம் இரண்டாவதாயுமிருக்கிறது. புதிய மதத்தைப் பலப்படுத்தவேண்டியதற்காகவே காந்தீயமானது ராஜீயத்திலும் நுழைந்திருக்கிறது.

மற்றொரு பிரிவான அபேத வாதத்திற்கோ, மதம் பொருட்டாக இல்லை. 'அரசர், ஜமீந்தார் பணக்காரர், நிலச்சுவான்தார் ஆகிய பிரிவுகளைத் தொலைத்துப் பாமர ஜனங்களை உத்தாரணம் செய்யவேண்டியதே முக்ய நோக்கமாக இருக்கிறது. ஆகவே மேற்கண்ட இரண்டு பிரிவுகளினும் எல்லா வகையான ஜனங்களுக்கும் தீங்கு நிறைந்திருப்பது ஸ்பஷ்டமானது.

மத உரிமை பாதிக்கப்படுகையில் ஸொத்துரிமைக் காரர்கள் அலக்ஷ்யமாயிராமல் பொது நியாயத்திற்குப் பரிந்து பேசவேண்டும். அப்படியே சொத்துரிமைப் பங்கம் ஏற்படும்போது மத உரிமை வாதிகள் மௌனமாக இருக்கக்கூடாது. இருவருக்கும் அடிப்படையான தீங்கு ஒன்றுனதே. ஆகையால் காந்தீயம் அபேதவாதம் இரண்டையும் எதிர்க்க கன்ஸர்வேடிவ் கக்ஷியொன்று வலுவாக ஏற்படவேண்டுமென்பதை இப்போதாவது ஜன உரிமை வாதிகள் உணர்வார்களா?

## குறிப்புகள்.

### வாக்குறுதி மீறிய காரியமல்லவா?

சென்னை கடன் நிவாரணச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு இன்று வரையில் ஏற்பட்டுள்ள பலனைப்பற்றி கனம் விளம்பர மந்திரி ஒரு குறிப்பை வெளியிட்டிருக்கிறார். 33 லக்ஷம் கடன் தொகையானது ஸராஸரியாக 16லக்ஷம் சொச்சம் ரூபாய்க்கு குறைக்கப்பட்டுவிட்டதாயும், கோர்ட்டில் டிக்ரி பெற்றிருந்த தொகைகளைக்கூட இந்தச் சட்டம் காரணமாக குறைத்துவிடவேண்டி வந்ததாயும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வளவு லக்ஷக்கணக்கான தொகைகளை இந்தச் சட்டம் காரணமாக இழந்தோர்ந்த பணக்காரர்களுடைய நிலைமையைப்பற்றி வருந்தவேண்டியிருக்கிறது. கடன்வாங்குகிறவர்கள், பணச்சொந்தக்காரர்களுக்கு வாக்குறுதி கொடுத்துத் தான் பணத்தைக் கடனாகப் பெறுகிறார்கள். வட்டி, திருப்பிக்கொடுக்கும் காலஎல்லை முதலிய பலவிஷயங்களிலும் பரஸ்பரம் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஒப்பந்தத்தை இஷ்டப்படி மீறலாமென்றும் வாக்குறுதிப்படி நடக்கவேண்டிய அவசியமில்லையென்றும் சட்டமூலமாக ஏற்படுத்திக்கொடுத்த ஸௌகர்யத்தாலேயே இவ்வளவு பெரிய தொகையைக் கொடுக்காமல் கடன்காரர்கள் தப்பிக்க முடிந்தது. இந்தமாதிரி சட்ட மூலம் இவ்வளவு பெரிய தொகையைக் குறைத்துவிடுவது அதிசயமில்லை. வட்டியைப்போல், அசல் தொகையையும் கொடுக்காமலோ அல்லது குறைத்துக் கொடுக்கவோ ஒரு சட்டம் இயற்றினால் இன்னும் பல லக்ஷக்கணக்கான கடன் தொகையைக் குறைத்து விடலாம். தீவ்ர வாதிகள், அல்லது அபேத வாதிகள் இந்த மாதிரி செய்துவிடத் துடிக்கிறார்கள்.

ஆயினும் ஜனங்கள், வாக்குறுதி மீறி நடக்கவும், நியாயத்தைத் தாண்டிப்போகவும் சர்க்காரே சட்டம் செய்து கொடுத்து வாக்குறுதியை அழிப்பது நியாயமா, தர்மமா என்ற கேள்வி மறைந்துவிடாது.

### காங்கிரஸ் மஹாஸபை.

திரிபுரி காங்கிரஸ் கூட்டம் நடந்தது முடிந்து விட்டது. சென்ற சிலவாரங்களாக தேசத்தில் நடந்த வார்த்தைப் போரிலிருந்து திரிபுரம் காங்கிரஸானது ஸூரத் காங்கிரஸைப் போல் அடிதடியில் முடிந்து பிளவுபட்டு விடுமென்று எங்கும் பயம் தோன்றியிருந்தது. காங்கிரஸ் கூட்டத்திலும் அதற்குச்சிறிது சின்னம் தோன்றியதாயினும் தலைவர்களுடைய புத்தி சாலித்தனத்தால் அதுலகுவாக ஸமாளிக்கப்பட்டுவிட்டது. ஆகவே சண்டை சச்சரவின்றி காங்கிரஸ் முடிந்ததே முதல் ஜயமாக நினைக்கப் படவேண்டும்.

இவ்வருஷக் காங்கிரஸில் ஏதோ உக்ரமான வேலைத்திட்டமும், அதற்கேற்ற தீர்மானமும் செய்யப் படப்போவதாகப் பிரஸ்தாபமிருந்து வந்தபடியும் ஒன்றும் நடக்கவில்லை. ஹரிபுர காங்கிரஸில் செய்யப்பட்ட தீர்மானங்களே மறுபடியும் சிறிது நீளமாக எழுதப்



பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. வேறு எவ்வித புதிய நிர்ணயமும் செய்யப்படவில்லை.

காங்கிரஸ் செய்துள்ள ஒரேஒரு முக்யத் தீர்மானம் தான் உருப்படியானது. அதாவது காந்திஜியிடமும், பழைய காரியக்கமிட்டி மெம்பர்களிடமும் நம்பிக்கையிருப்பதாக காங்கிரஸ்செய்த தீர்மானமேயாகும் இந்த ஒரு தீர்மானத்திற்காகத்தான் பதினாயிரக்கணக்கான பணம் செலவிடப்பட்டு, பலவித கஷ்டங்களையும் பாராமல் இந்த காங்கிரஸ் நடத்தப்பட்டது போலும்!

காந்திஜியிடமும், அவருடைய வேலைத்திட்டத்திலும் நம்பிக்கையிருப்பதாயும், அதன்படியே தலைவர் திட்டம் அமைக்க வேணுமென்றும் காங்கிரஸ் தீர்மானித்திருப்பதால் தேசத்திற்கு அபேத வாதிகளிடம் ஏற்பட்டிருந்த பீதி ஒருவாறு குறைந்திருக்கிறதெனச் சிலர் நினைக்கலாம்.

பிரிடிஷ் கவர்ன்மெண்டிற்கு ஆறு மாதத் தவணை கொடுத்து அதற்குள் ஸ்வதந்திரம், வழங்க வேண்டுமென்றும், இல்லையேல் சட்டமறுப்பு ஆரம்பிக்க வேண்டுமென்றும் சட்ட ஸபை வேலைகளை இன்னும் தீவ்ரமாக்க வேண்டுமென்றும் தீவ்ரவாதிகள் முயற்சித்தப்படி தீர்மானம் செய்யப்பட்டிருந்தால் தேசத்தில் பெரிய குழப்பமும், மிகுந்த அனர்த்தமும் ஏற்படுமென்பதில் ஸந்தேகமில்லை,

அத்தகைய பெரிய அபாயத்திற்கு அடிகோலாமல் பழைய கொள்கை படியே மேற்கொண்டு காரியம் நடத்த நிச்சயித்திருப்பது திருப்திகரமானது.

104 டிகிரி கடும் ஜுரமடிக்கையிலும் ஸ்ரீ போஸ் தமது கடமையை மதித்து காங்கிரஸுக்கு வந்தார். காங்கிரஸ் நகரில் தனக்கு மரணம் நேர்ந்தாலும் அவர் பொருட்படுத்தவில்லை.

காந்திஜியோ பட்டினி சிரமத்தால் காங்கிரஸுக்குவரவில்லை. ஆயினும இது காந்தி காங்கிரஸாக முடிந்தது. நோய்வாய்பட்டிருந்த போஸிடம் தலைவர்கள் கருணைகாட்டவில்லை. ஜனநாயகம், வோட்டு என்றெல்லாம் பேசிய தலைவர்கள் காந்திஜியின் ஏகதேசத் தலைமையே சிறந்ததெனத் தீர்மானித்தனர். நான்கு அணு கொடுத்த ஸாதாரண மெம்பராகக்கூட இல்லாத காந்திஜியின் ஏகதேச விருப்பப்படியே காங்கிரஸ் நடக்கவேணும். போஸ் எலெக்ஷனால் தமக்குத் தோல்வி ஏற்பட்டுவிட்டதாக காந்தி கூறியதை ஸமாதானப்படுத்தி அவருடைய மனதை திருப்தி செய்ய வேண்டியதே இந்த காங்கிரஸின் முக்ய நோக்கமாயிருந்துவிட்டது. ஸமஷ்டி ஸம்ஸ்தான விஷயம், சட்டஸபை ஆகிய மற்றப் பேச்செல்லாம் மாயமாய் மறைந்துவிட்டது.

### முஸ்லிம்களுக்கு காந்திஜி வாக்குறுதி!

ராஜ்கோட் ஸம்ஸ்தானத்தில் பிரஜைகளின் ராஜிய ஸ்வாதந்திரியத்திற்காகப் பெரிய போராட்டம் நடந்தது. ஹிந்துக்கள் உடல், பொருள், ஆவிகளைத் தத்தம் செய்து எவ்வளவோ தியாகம் செய்தார்கள். காந்திஜி கூட பட்டினிகிடந்து தியாகம் செய்ய வேண்டியதாயிற்று, இவ்வளவு கஷ்டப் பட்டு காரியஸித்தி உண்டாகக் கூடிய நிலைமையில் மஹம்மதியர்கள் புகுந்து தங்கள் பங்கை ஸ்தாபித்துக்கொள்ள வேலை செய்கிறார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் காங்கிரஸ்காரர்கள் தியாகம் செய்து ஏதோ சிறிது நன்மை ஏற்பட்டபோது, எவ்வித தியாகமும் செய்யாமலும், ஸ்வதந்திர இயக்கத்திற்கு வேண்டியளவு இடையூறுகளைச் செய்தும் வந்த மஹம்மதியர்கள், பலாத்காரத்தாலும் பயமுறுத்தலாலும் தங்கள் பங்கை வற்புறுத்தியடையவில்லையா?

அதே போல் ராஜ்கோட்டிலும் பலஸித்தி ஏற்படும் போலிருக்கையில் அவர்கள் தங்கள் பங்கையும், உரிமையையும் வற்புறுத்த ஆரம்பித்து விட்டார்கள். ஜின்னு வைஸ்ராயிடம் ஓடுகிறார். ராஜ்கோட் முஸ்லீம்கள் காந்திஜியைக் கண்டு தங்கள் உரிமையைப்பற்றி என்ன ஸங்கதி யென்று கேட்டார்கள்.

தங்கள், ஜாதி மதம், கலை, நாகரிகம் ஆகிய எதற்கும் பிறரால் தீங்கு நேராதபடியும், தனித்தொகுதி யேற்படுத்தியும் வகை செய்தாலல்லது தங்கள் மௌனமாயிருக்க முடியாதென்று எச்சரித்தன. அதற்கு காந்திஜி வழக்கம் போல் அவர்களிஷ்டப்படி எல்லாம் நடத்தி வைப்பதாக உறுதி கூறியுள்ளார். "மகம்மதியர்களுக்குத் தனித்தொகுதி கொடுப்பேன். மகம்மதியர்கள் கேட்காமலேயே அவர்களுக்கு மத ஸ்வதந்திரம் வாங்கி கொடுப்பேன். அவர்களுடைய கலை விருத்திக்கு எவ்வித தீங்கும் நேராதபடி செய்வேன், நானோ, காங்கிரஸோ, மஹமதியர்களின் மேற்கண்ட உரிமைகளுக்குச் சிறிதும் விரோதம் செய்யமாட்டோம்" என்று காந்திஜி மஹமதியர்களுக்கு வாக்குறுதி கொடுத்தாராம்.

மஹம்மதியர் விஷயத்தில் அவர்களிஷ்டப்படியே காந்திஜியும் காங்கிரஸும் ஆடவேண்டிய கதியிலிருக்கிறார்களென்பது தெரிந்த விஷயமே. காங்கிரஸுக்கோ, காந்திஜிக்கோ மஹம்மதியர்கள் ஏதாவது ஒரு விஷயத்திலாவது இணங்கி வந்ததுண்டா? தீண்டாதாரின் தனித்தொகுதிக்காக எரவாடாவில் உபவாஸம் மேற்கொண்டதுபோல் மஹம்மதியர்களின் தனித்தொகுதியையும் ஆக்ஷேபித்து காந்திஜி உபவாஸமிருக்கிறதுதானே! அது பலிக்குமா?

மஹம்மதியர்களுக்கு அவர்கள் கேட்காமலேயே மத ஸ்வதந்திரம்| கொடுப்பதாயும், காங்கிரஸானது அவர்களுடைய மத விஷயத்தில் ஒருக்காலும் பிரவேசிக்காதென்றும் வாக்குறுதி கொடுக்கும் காந்திஜி, வைதிக ஹிந்துக்களின் தர்மங்களும், ஆசாரங்களும் பற்பல ஜாதியினரின் ஓட்டு பலத்தைக் கொண்டு காங்கிரஸ் மந்திரிகளால் நாசமாக்கப்பட்டு, மத உரிமை நிர்ப்பந்தமாக அபகரிக்கப்பட்டும் வருவதை கவனிக்கவில்லையா? மஹம்மதியர்களுக்குக் காட்டும் நியாய புத்தியை ஹிந்துக்களிடமும் காட்ட வேண்டாமா? இம்மாதிரி பக்ஷபாதமாக நடப்பது "மஹாத்மா"க்களுக்கு ஏற்றதோ?

### காங்கிரஸ் செய்திகள்.

காங்கிரஸ் மஹாஸபை முடிந்துவிட்டது. ஸ்ரீமான் போஸ் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டும் அவர் ஒருநாள்கூட தலைமை வகிக்க முடியவில்லை. மௌலானா ஆஸாத் தான் தலைவராயிருந்தார்.

காங்கிரஸில் சுதேச ஸம்ஸ்தான விஷயம். ஊழல்கள் முதலியவைகளைப்பற்றிச் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன.

பண்டித கோவிந்தவல்லபபந்து, பழைய காரியக்கமிட்டிமீது நம்பிக்கையிருப்பதாயும், காந்தியைக் கலந்துகொண்டு அவரிஷ்டப்படி தலைவர் காங்கிரஸ் திட்டங்களையும் காரியக்கமிட்டியையும் நிர்த்தாரணம் செய்யவேண்டுமென்றும் கொண்டுவந்த தீர்மானமே முக்யமானது. இது மெஜாரிடி வோட்டுக்களால் நிறைவேறியது. அபேதவாதிகள் இதற்குக் கொண்டுவந்த திருத்தங்கள் தோற்றுப் போயின.

வங்கப் பிரதிநிதிகளில் சிலர் மேற்படித் தீர்மானத்தைப்பற்றிப் பெரிய கலவரம் செய்தார்கள். ஸ்ரீமான் நேரு அவர்களை அடக்கப் பார்த்தும் முடியவில்லை ஸ்ரீமான் சரத் போஸ் வந்து அவர்களை ஒதுங்கிப் போகச் சொன்னார்.

வேறு சில ஸம்பிரதாய காரியங்களைக் கவனித்துவிட்டு காங்கிரஸ் கலைந்துவிட்டது.

அடுத்த காங்கிரஸ், பீஹார் மாகாணத்தில் டிஸம்பர் கடைசியில் நடக்கும்,

ஸ்ரீமான் போஸ் காந்திஜியைக் கலந்துகொண்டு காரியக் கமிட்டி அமைப்பாராம்,

### ஸ்ரீமான் ஜீ. வி. லக்ஷ்மண சாஸ்திரியார் காலமானார்.

தஞ்சை வக்கீலும், பிரபல ஸநாதனியுமான ஸ்ரீமான் ஜீ. வி. லக்ஷ்மண சாஸ்திரியார் காலமான செய்தியைக் கேட்டு வருந்துகிறோம். ஸ்ரீமான் சாஸ்திரி உள்ளும் புறமும் ஒத்த உயர்ந்த தார்மிகராவார். ஸநாதன இயக்கங்களில் இவர் முன்னணியில் நின்று எவ்வளவோ காரியங்கள் செய்து வந்தார். தஞ்சையில் குருகுல ரீதியில் ஓர் பாடசாலையையும் நடத்தி வந்தார்கள். பிராம்மண ஸமூகத்தினுடையவும் பிராம்மண தர்மத்தினுடையவும் அபிவிருத்தி விஷயமாக அதிகம் பாடுபட்டு வந்தார்.

### குன்னக்குடி

ஷண்முக நாதபுரம்
ஸ்ரீ ஷண்முக வித்தியாசாலை
இரண்டாவது வருஷ கொண்டாட்டம்

2—3—39 காலை பிரம்மஸ்ரீ V. சிவராம கிருஷ்ண சாஸ்திரிகளால் தினசரி ஸ்ரீ மத் ராமாயணம் பிரவசனம் செய்து வந்தது சமாப்தி அன்று பட்டாபிஷேகமும் பிராம்மண சந்தர்ப்பணமும் நடந்து பெரியோர்களால் ஆசீர்வாதம் பெற்றமேல் மாலை அவர்களே Correspondent ஆக இருக்கிற ஷை வித்தியாசாலையின் வருஷ கொண்டாட்டம் மாலை 5 மணிக்கு திருப்பத்தூர் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ A. தியகராஜ அய்யர் அவர்கள் B.A., L.T., அவர்கள் தலைமையின் கீழ் கொண்டாட்டம் ஆரம்பிக்க பெற்று ராத்திரி 9½ மணிக்கு ஷை வைபவம் மங்களகரமாகவும் முற்று பெற்றது. திருப்பத்தூர் N. M. Middle School K. S. Venkat subramaiam Aiyar Avl B.A., L.T. ஸ்ரீ கிட்டு அய்யர் பிர்ம ஸ்ரீ சுப்பையா சாஸ்திரிகள் உபன்யாசங்கள் பெற்றோர்களுக்கும் சபையோர்களுக்கும் ஆனந்தத்தைவிளைத்தது போற்றதக்கது. ஷை பள்ளிகூடத்துக்கு இனாமாக ரூ. (30000) பொறுமான அழகான கட்டடத்தை அளித்ததுக்கு ஷை வித்தியாசாலை மானேஜர் ஸ்ரீ மான் கு ம சு குமரப்ப செட்டியார் அவர்களுக்கும் அக்கிரஸனர் அவர்களுக்கும் கரெஸ்பாண்டெண்டு V சிவசாமி ஸ்பெஷல் மாஜிட்ரேட் அவர்களால் மாலை சூட்டப்பட்டு வந்தன உபசாரங்கள் கூறப்பட்டது. கமிட்டியவர்களால் அன்ன போஜனம்சிற்றுண்டி அளித்தது மெச்சத்தக்கது. பலவான்குடி பாரதமாதா படைவந்து கொண்டாட்டத்தை சிறப்பித்தும் குழந்தைகள் நந்தனார் சரித்திரம் நடித்து காட்டியதும் போற்றத்தக்கது.

ஒரு நிருபர்.

# தர்மமும் வித்யாஸ்தானங்களும்.

மன்னார்குடியில் ஓர் பிரஸங்கம்.

இவ்வருஷத்திய மஹா சிவராத்ரி மஹோத்ஸவ ஸமயம் தொடர்ச்சியாக மூன்று உபன்யாசங்கள் மேலக்காவேரி பிரும்மஸ்ரீ சிவராம சாஸ்திரிகள் அவர்களால் செய்யப்பட்டன.

இரண்டாவது நாள் இரவு 8½-மணிக்கு மறுபடியும் உபன்யாசம் துவக்கப்பட்டது. "தர்மமும் வித்யாஸ்தானங்களும்" என்ற விஷயத்தைப்பற்றி ஷை சாஸ்திரிகள் உபன்யஸித்ததின் சுருக்கமாவது.

நேற்று ஈச்வரபக்தி அவச்யம் ஏற்பட வேண்டும் என்று சொன்னேன். அதற்கு சாதனம் என்னவென்பதை இன்று கூற வேண்டும். தர்மத்தை அனுஷ்டிப்பதுதான் அதற்கு ஸாதனமாகும். 'தர்மத்தை'பற்றி பழைய காலத்திலும் தற்காலத்திலும் பலவிதமான அபிப்ராயம் இருந்துவருகிறது. தன் புத்திசாலித்தனத்தை உபயோகப்படுத்தி பெரிய சாஸ்திரக் காரர்களெல்லாம் தனித் தனியாக தீர்மானித்து இங்கு வந்திருக்கிறார்கள். இதிலிருந்து நாம் எது 'தர்மம்' என்பதை தெரிந்துகொள்வது கஷ்டமாயிருக்கிறது. தர்மம் ஸூக்ஷ்மமானதாலும் இந்திரியங்களுக்கு தெரியாததாலும் தான் இவ்வளவு கஷ்டம் உண்டாகிறது. இது ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினால் அறிய முடியாததாக விருக்கிறது. இதே காரணத்தால் அனுமானமும் உபயோகப்படுவதில்லை. இந்த இரண்டுகளாலும் தெரிவிக்க முடியாததை நாம் பிறருக்கு எவ்விதம் நமது வார்த்தையால் போதிக்கமுடியும். நாம் தெரிந்து கொள்ளாததை பிறருக்குச் சொன்னால் பொய் சொன்ன அதர்மம்தான் ஏற்படும். இதை தெரிந்துகொள்ளாவிடில் நமக்கு உலக வாழ்க்கை ப்ரயோஜனம் ஈச்வரபக்தி முதலியவை ஏற்படமாட்டாது.

தர்மம் என்ற பெயரே உலகத்தை இது தரிக்கும் வஸ்து என்று காட்டுகின்றது. உலகத்தில் ஜனங்கள் சுகமாக வாழ்வதற்கும் ஜன்மாந்தரத்தில் இதற்கு ஸமானமானதோ மேலானதோ என்று சொல்லக்கூடிய சுகத்தை யடைவதற்கும் இதுவே ஸாதனமாகும். இதில் பலவிதமான பிரிவுண்டு ஆனால் எல்லாம் தர்மம் என்ற பதத்திற்கு பொருள்தான். இதை நாம் நன்கு தெரிந்துகொண்டு அநுஷ்டித்தால் கடவுளின் கருணை ஏற்படும்.

தற்சமயம் உலகத்தில் தர்மத்தின் பயனான சுகத்தை ஜனங்கள் விரும்புகின்றனரே தவிர தர்மத்தை விரும்பவில்லை. அதை சரியாய் தெரிந்துகொள்வதுமில்லை. தெரிந்துகொள்ள முயற்சி செய்வதுமில்லை. முன் காலத்தில் ஜனங்கள் அதை நன்கு உணர்ந்து சரியாய் அநுஷ்டித்ததால் சுகமாக வாழ்ந்து வந்தனர். எது தருமம் என்பதை நன்கு அறியாத பலர் அதை தேச காலங்களுக்கு ஏற்றவாறு அமைக்க முயலுகின்றனர். அது தர்மமன்று. எல்லா தேசங்களுக்கும் ஏற்றதான தருமங்கள் பல சாச்வதமாய் இருக்கின்றன. மந்த்ரங்களை கண்டுபிடித்தவர்கள் ரிஷிகளாவார்கள். நாம் ரிஷிகளல்ல. தர்மங்களை நன்குணருவதற்கு சில க்ரந்தங்களிருக்கின்றன. அவைதான் வேதங்கள். அத்தகைய வேதங்களை ரக்ஷிப்பதற்காக பல சாஸ்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன இவைகளுக்கெல்லாம் வித்யாஸ்தானங்களென்றும் தர்மஸ்தானங்களென்றும் பெயர். நான்கு வேதங்கள் ஆறு அங்கங்கள், 18 புராணங்கள் ந்யாய சாஸ்திரம் ஜைமினி மஹரிஷியால் செய்யப்பட்ட மீமாம்ஸா சாஸ்திரம், மநு முதலியவர்களால் செய்யப்பட்ட ஸ்ம்ருதிகள் இவைகள் பதினான்கும் தர்மத்தையறிய ஸாதனங்கள். இவைகளில் 14 உலகங்களுமே அடங்கியிருக்கின்றன. இவ்வுலகில் சுகமாய் இருப்பதற்கு வேண்டிய எல்லா ஸாதனங்களும் இதில் இருக்கின்றன. இதில் ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டு நாம் பல நாட்கள் ஆராய்ச்சி செய்யலாம். இவைகளில் கூறப்பட்ட தருமங்கள் தான் இதர மதக்ரந்தங்களில் கொஞ்சம் காணப்படுகின்றன.

நமது வேதங்களுடைய கால நிர்ணயம் இன்னும் ஒருவராலும் செய்யப்படவில்லை ஏன்? அதற்கு காலமில்லாததினால் தான். கால தேசாதீதமான கடவுளை காண்பிக்கும் ஒரு புஸ்தகம் ஒருகாலத்தில் ஏற்பட்டதானால் அதற்கு முன் கடவுளை அறிய ப்ரமாணங்கள் இல்லாமல் போய்விடும். நமது சாஸ்திரங்களிலிருந்தே தர்மங்களை யறிய வேண்டும். அறிந்து சரிவர அநுஷ்டித்தால் கடவுளுக்கு நம்மிடம் கருணை ஏற்படும் கடவுளின் கட்டளையான வேதத்தை நாம் சிரஸில் வஹித்து கொண்டாடி அதில் சொல்லப்பட்டமாதிரி செய்யவேண்டும் இதனால் மனிதனுக்கு அமைதி ஏற்பட்டு கடவுளிடம் பக்தி ஏற்படும்" என்று கூறி முடித்தார்கள்.

## ஸ்ரீ பகவத்பாதாளும் அவர்களின் கிரந்தங்களும்.

மூன்றாவது நாள் இரவு 8½-மணிக்கு வழக்கம் போல் உபன்யாஸம் ஆரம்பமாயிற்று.

"ஸ்ரீ பகவத்பாதர்களும் அவர்களின் க்ரந்தங்களும்" என்பதைப்பற்றி கூறுகையில் ஷை சாஸ்திரியள் செய்த உபன்யாசத்தின் சுருக்கமாவது.

ஈச்வரபக்தி முக்யமென்றும் அதற்கு கர்மாநுஷ்டானம் தான் ஸாதனமென்றும் இரண்டு தினங்களாய் சொன்னேன். இன்றைய தினம் கடவுளிடம் பக்தி செய்வதற்கும் நமது குருவிடம் பக்தி செய்வதற்கும் யாதொரு வித்யாஸமும் கிடையாதென்பதை சொல்லப்போகிறேன். நமக்கு குரு என்பவர் ஒரு தந்தை. இவரிடமிருந்து நாம் பிறந்த பிறகு மறுபடியும் நமக்கு பிறப்பில்லை. ஆகையால் இவர் நமக்கு கடைசி பிதா.

உபநிஷத்துக்கள் ஆசார்யனை தெய்வமாக எண்ணு என்று உபதேசிக்கின்றன. கடவுள் கண்ணிற்கு புலப்படாத தெய்வம். குரு என்பவர் நாம் பார்க்கக்கூடிய தெய்வம். இந்த தெய்வத்தின் தயவினால் பார்க்க முடியாத தைவத்தையும் நாம் பார்க்கலாம். ஸ்ரீ பகவத்பாதர்கள் என்றால் யார் என்பது உங்களுக்கு நன்றாய் தெரியும். நமக்கு அருள் புரிந்து காலடியில் அவதாரம் செய்த ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள்தான். பகவத்பாதர்கள் என்ற பெயரே இவர்கள் கடவுள் என்பதை தெரிவிக்கிறது. 'பாதர்' என்ற சப்தம் அவர்களின் மஹிமையை காண்பிவிக்கும் ஒரு அடையாளம். இவர்களின் சரித்திரம் பலபேர்களால் நன்கு எழுதப்பட்டிருக்கிறது இதை ஸ்ரீ சங்கர ஜயந்தி ஸமயத்தில் விசேஷமாய் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். இவாள் உலகத்திற்கு என்ன உபகாரம் செய்தார்கள் என்று பார்க்கவேண்டும். இவாள் என்ன செய்யவில்லை யென்பதைத் தான் நாம் கண்டுபிடிக்கவேண்டும். அது முடியாத காரியம். ஜனங்களுக்கு வேண்டிய சுகத்திற்கு சுகமான வழியை கண்டுபிடித்து அவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். அது தான் ஞானமார்க்கம். இதன் வழியாய் சென்றால் அழியாத அளவிடமுடியாத துக்கக் கலப்பில்லாத ஆனந்தத்தை ப்ராணிகள் அடையலாம். இந்த ஞானத்திற்கு ஆத்மஞானம் என்று பெயர். இந்த வழியால் கிடைக்கும் பலன் எல்லா பயன்களைவிட மேலானது. இதுதான் உபநிஷத்துக்களின் கருத்து என்பதை உலகத்திற்கு காண்பிவித்திருக்கிருக்கிறார்கள். இந்த ஞானம் வந்த பிறகு அவனுக்கு அறியாமையே கிடையாது. ஒரு சிறிய விஷயத்தை ஒரு குருவிடமிருந்து தெரிந்துகொண்டால் அதுவே நமக்கு ஆனந்தத்தை யளிக்கிறது. எதையறிந்த பிறகு அறியவேண்டிய விஷயமே உலகில் இல்லையோ அதை உபதேசித்த குரு மேலானவரே. அவர்கள் நமது ஆசார்யாள்தான். இவர்களுடைய அத்வைத மதத்தில் சொல்லப்பட்ட மோக்ஷத்தை பிறர் ஒப்புக்கொள்ளவில்லை. இவர் பிறருடைய மோக்ஷங்களை ஒப்புக்கொள்கிறார்.

இவர் காலத்தில் ஏற்பட்ட துர்மதங்களை ஜயித்து நல்ல மதங்களை ஸ்தாபித்தார். ஆகையால் இவர் லோககுரு. உலகில் எக்காலத்திலும் ஜனங்களுக்கு இன்றியமையாத சுகத்திற்காக இவர்கள் புஸ்தகங்கள் பல எழுதியிருக்கிறார்கள். அவைகளில் முக்யமானது 'ப்ரஸ்தானத்ரயம்' ஆகும் 10 உபநிஷத்துக்களின் பாஷ்யங்கள் கீதாபாஷ்யம் ஸூத்ரபாஷ்யம் இவைகள் தான். இது உத்தமாதிகாரிகளுக்காக. 'ப்ரகரணக்ரந்தங்கள்' பல செய்திருக்கிறார்கள். அது மத்யமாதிகாரிகளுக்கு. ஸமான்யர்களுக்கு 'ஸ்தோத்ரங்கள்' செய்திருக்கிறார்கள். கணேசர், அம்பிகை, சிவன், விஷ்ணு முதலிய எல்லா தேவர்களைப்பற்றியும் எழுதியிருக்கிறார்கள். இதிலிருந்து அவர்களின் பரந்த நோக்கம் வெளியாகவில்லையா? இதர மதஸ்தர்கள்கூட நமது ஆசாரியர்களின் க்ரந்தங்களை பார்த்து சந்தோஷமடைகிறார்கள். நமது ஆசாரியாளிடம் பக்தியை தெரிவிப்பது ஒரு ஆச்சர்யம். ஆஸேது ஹிமாசலம் யாத்ரை செய்து அவர்கள் துர்மதங்களை நிராகரித்தார்கள். அவர்களுடைய பரம்பரையில் தற்சமயம் ப்ரகாசித்துவரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியவர்களுக்கும் ஆதி ஆசார்யாளுக்கும் கொஞ்சம்கூட வித்யாஸமே இல்லை. அவாள் செய்த கர்மத்தை விட இவாள் செய்கிறது மேலானதென்றே கூறுவது மிகையாகாது. இதர மதஸ்தர்களை விட நமக்கு குருபக்தி குறைவென்பதே என்னுடைய அபிப்ராயம். குருபக்தியால் மேன்மையடைந்ததற்கு பல கதைகளும் உதாஹரணங்களும் உண்டு. மிகவும் சிர்குலைந்திருக்கும் இந்த சமயத்தில் அவாள் செய்யும் உபதேசங்களை நாம் எடுத்துகொண்டு அதன்படி நடந்தால் நமக்கு ஒரு குறையுமில்லை. நமக்கு கஷ்டம் ஏற்படும் சமயத்தில் நாம் அவாளை சரணமடைந்தால் க்ஷேமத்தையடையலாம். இங்கு வந்திருப்பவர்கள் ஒருவராவது குருபக்தி யில்லாதவர்கள் இல்லை. இன்னும் அதிகமாய் விருத்தியடைவதற்காக சொன்னேன். இந்த மூன்றுதினங்களாய் என்னுடைய வார்த்தைகளில் குணங்கள் இருக்குமானால் அவை என் ஆசாரியர்களுடையதே.

எனக்கு குருபக்தியுண்டாகும்படி நீங்கள் அநுக்ரஹிக்கவேண்டும். இவ்வளவு பொருமையுடன் என் வார்த்தைகளைக் கேட்டதற்கு வந்தனம். பெரிய பண்டிதர்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் இவ்வூரில் நான் துணிந்து பேசியது எனது ஆசாரியாளின் அருளே" என்று கூறி முடித்தவுடன் ரிடையர்டு போஸ்டுமாஸ்டர் ஸ்ரீ. பஞ்சாபகேசய்யர் அவர்களால் உபசார வார்த்தை கூறப்பட்டு பகவத் ப்ரஸாத விநியோகம் செய்யப்பட்டு ஆசார்யாளுக்கு வந்தனமளித்து சபை இனிது கலைந்தது.

சுபமஸ்து.

M. S. சுப்ரமணியன்.



## தேசிகன் தேன்மொழிகள்,
(2-ம் பக்கத் தொடர்ச்சி).

அவகாசம் கிடைக்குமென்று தோன்றுகிறது. அவர்களுக்கு வைதிககர்மாக்கள் மிகவும் குறைவு. ஆகையால் பஜனைக்கு அவர்களே முக்கியமான அதிகாரிகளாவார்களென்று தோன்றுகிறது.

ம:— அப்படியேதான். பஜனை என்பது பிராஹ்மணர்களைத் தவிர்த்து மற்றவர்களுக்கே முக்கியமாய் ஏற்பட்டது.

ப:— இவ்விஷயத்தில் பிராஹ்மணர்களுக்கு மற்றவர்களுடன் ஸமமான அதிகாரமில்லை யென்பது நியாயமாகுமா?

ம:— முன் சொல்லியபடி, அவர்களுக்கு அதிகாரமில்லையென்று யாரும் சொல்லவில்லை; அவகாசம் கிடைக்கும்போது வைத்துக்கொள்ளலாம். மேலும் பகவானை ஸ்தோத்திரம் செய்வதைவிட அவருடைய ஆக்ஞையை நிறைவேற்றுவதே மேலான பக்தி என்பதை மறந்துவிடாதீர்கள். இன்னொரு விதமாகவும் கவனித்துப் பாருங்கள்.

ப:— எப்படி?

ம:— யஜமானர் இட்ட வேலையைச் செய்வதைவிட அவருடைய முகத்தைப் பார்த்துக்கொண்டேயிருக்க நினைக்கும் ஸேவகனுக்கு அவ்விதம் பார்த்துக்கொண்டிருப்பதில் ஸுகமிருக்கிறது; வேலை செய்யப்போனால், இந்த ஸுகம் போய்விடுமே யென்று பயப்படுகிறான்.

ப:— அப்படியே.

ம:— ஆகையால், தான் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நிச்சயம் செய்வதில், தன்னுடைய திருப்தியைப் பெரிதாகப் பாராட்டிக்கொண்டானே தவிர, யஜமானரின் திருப்தியைக் கருதவேயில்லை.

ப:— ஆழ்ந்து கவனித்தால், அப்படியே தான் ஆகும்.

ம:— யஜமானரின் திருப்தியை விடத் தன் சொந்தத் திருப்தியே மேலானதென்று கருதி, யஜமானரின் திருப்தியை கவனிக்காமலோ, அலக்ஷ்யம் செய்தோ, இருந்துவருகிற ஸேவகனை எவ்விதத்தில் பக்தியுள்ளவனென்று சொல்லமுடியும்?

ப:— முடியாதுதான்.

ம:— அதேமாதிரி, பக்தன் என்று சொல்லிக் கொண்டு, பகவானுடைய ஆக்ஞைகளைக் கவனிக்காமல், உதாஸீனம் செய்து, விட்டுவிட்டு மனோஹரமான ஸங்கீதத்துடன் அவருடைய குணநிசயங்களைப் பாடி வருகிறேனென்றால், அவனை பக்தன் என்று ஒப்புக்கொள்ள முடியுமா?

ப:— நியாயமில்லை தான்.

ம:— தவிரவும், பகவானை அந்த மனிதன் தன்னுடைய ஸுகானுபவத்திற்காக ஏற்பட்ட, மிகவும் ரமணீயமான, ஒரு போக்ய பதார்த்தம் என்றே நினைத்திருக்கிறானல்லவா? ஸர்வக்ஞனாய், ஸர்வ சக்தனாய் இருக்கும் ஈசுவரனை இவனுடைய ஸந்தோஷத்திற்காக ஏற்பட்ட ஒரு விளையாட்டு ஸாமானாக இறக்கி மதித்துவிட்டால் இதைவிட அபசாரம் என்ன வேண்டும்? ஈசுவரனைப் போக்ய வஸ்துவாக்கி அனுபவிக்க நினைப்பது பெரும் அபசாரமாகும். அப்படி நினைப்பவன் ஒருநாளும் பக்தனாகமாட்டான். அவருடைய கட்டளைகளை அப்படியே நிறைவேற்றுவதுதான் வாஸ்தவமான பக்தி. காரியத்தில் அவருடைய வார்த்தையை உல்லங்கனம் செய்துகொண்டு, வாயால் மாத்திரம் பக்தனென்று சொல்லிக்கொள்வது மஹத்தான அபசாரமாகும். லஞ்சம் வாங்கின பணத்தை மடியில் வைத்துக்கொண்டே, நான் லஞ்சம் வாங்கவில்லையென்று வாதிக்கிறவனுடைய யோக்கியதையே இவனுடையதுமாகும். பக்தி யென்றால் வாக்கு, மனஸ், காயம், இம்மூன்றிலும் ஏகரூபமாய் ஒருமைப்பட்டிருக்கவேண்டும்.

## தேவஸ்தானச் சட்டத்தை விழுங்கிவிட்டது.

சென்னை காங்கிரஸ் ஸர்க்கார் இயற்றியுள்ள ஆலயப்பிரவேசச் சட்டமானது ஏற்கனவே யிருந்துவரும் தேவஸ்தானச் சட்டப்படி நமக்கிருந்த மத உரிமையையும் விழுங்கிவிட்டது. தேவஸ்தானச் சட்டம் 40வது பிரிவில் தேவாலயங்களைப் பற்றிய வரையில் மத ஸம்பந்தமான விஷயங்களில் பிறர் ப்ரவேசித்து எவ்வித மாறுதலும் செய்யக்கூடாமல் தடைசெய்து பாதுகாப்பளித்து வந்தது.

ஆலயப்பிரவேசம் ஏற்படாமல் இதுவரையில் தடைசெய்து வந்தது இந்தப்பிரிவுதான். ஆனால் இப்போது இயற்றப்பட்டுள்ள கோள ஆலயப்பிரவேசச் சட்டத்தில் மேற்படி 40வது பிரிவைக்கண்டு, அது இந்த ஆலயப்பிரவேசச் சட்ட விஷயத்தில் செல்லுபடியாகாதென்றும், இந்த விஷயம் தவிர மற்றவைகளுக்கு அந்த 40வது பிரிவு பிரயோகமாகுமென்றும் விதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் ஒரு தந்திரம் செய்யப்பட்டிருக்கிறது. ஆலயப்பிரவேசமானது ஒரு மத ஸம்பந்தமான விஷயமென்பதை கனம் பிரதம மந்திரி வாய் விட்டு ஒப்புக்கொள்ள இசையாமல் தந்திரமாகப் பேசியும் எழுதியும் வருகிறார். இதை மதஸம்பந்தமென்று ஒப்புக்கொண்டால், கவர்ன்மெண்டார் மதத்தில் பிரவேசிக்கக்கூடாதென்ற கக்ஷி வலுப்பட்டு அதன் மூலம் தமது நோக்கத்திற்கு பாதகம் ஏற்படக்கூடுமென்று அவர் நினைப்பதாகத்தெரிகிறது. ஆகையால், தீண்டாமையோ, ஆலயப்பிரவேசத்தடையோ, மத மூலமாக ஏற்பட்டதென்பதை அவர் வியவஹரிக்க மறுக்கிறார். மேற்கண்ட இரண்டும் நீண்டகாலமாக ஏற்பட்ட ஓர் பழக்க வழக்கமென்றும், அந்தப் பழக்க வழக்கம் காரணமாக ஏற்பட்ட சிரமங்களை "ஸமூஹ விஷயம்." என்ற சாக்குப்போக்கின் கீழ் கொண்டுவந்துதாம் சட்டமூலம் அவைகளைத் தொலைக்க சட்டமூலமான பின்பலம் ஏற்படுமென்றும் கனம் பிரதம மந்திரி நினைப்பதாகத்தெரிகிறது.

மேலும் பிரபல சட்டநிபுணர்கள் பலர் பணம் அல்லது சொத்து விஷயமாக மட்டும் தேவாலயங்களில் ஸர்க்கார் அதிகாரம் வகிக்கலாமேயல்லது மத ஸம்பந்தமுள்ளவைகளில் கவர்ன்மெண்டார் பிரவேசிப்பது சட்டவிருத்தமென்றும் உறுதியாக அபிப்பிராயப்பட்டிருப்பதால் கனம் பிரதமமந்திரி இந்த ஸங்கடத்தில் மாட்டிக்கொள்ள விரும்பவில்லை.

ஆதலால் அவர் தீண்டாமை, ஆலயப்பிரவேசத்தடை இரண்டையும் ஒருகாலத்தில் ஏற்பட்ட ஸமூஹப் பழக்கவழக்கத்தில். சேர்த்து அதில் மதஸம்பந்த மில்லையென்பதை ஸாதிக்க விரும்புகிறார்.

இது மதஸம்பந்தமா இல்லையாவென்பதை எப்படி அறிவது? கனம் மந்திரியின் கக்ஷிக்காரர்களாகிய சட்டஸபை மெம்பர்களும் கிறிஸ்தவ, மஹம்மதிய, பஞ்சம, ஐரோப்பிய பிரதிநிதிகளும் சேர்ந்து சட்டஸபையில் இதை முடிவுசெய்துவிடலாம்போலும்?

கோள ஸநாதனதர்ம மஹாநாட்டில் கூறப்பட்ட யோஜனையை அநுஸரித்து சட்டநிபுணர் உதவிகொண்டு பெடரல் கோர்ட்டிலோ, அல்லது வேறு உயர்தர கோர்ட்டிலோ நடவடிக்கைசெய்து நியாயம் பெறுவது மிக்க அவச்யமாகும்.

ஒருநிருபர்,

## "ஹரிஜன"ப் பெயருக்கு ஆக்ஷேபம்.

செங்கற்பட்டு முனிஸிபாலிடிக்குள்பட்ட சில சேரிகளுக்கு "ஹரிஜனபுரம்" என்று பெயர் வைக்கவேண்டுமென்று ஒருவர் தீர்மானம் கொண்டுவந்தார் தீண்டாத வகுப்பு மெம்பர் இதை ஆக்ஷேபித்தார். ஹரிஜன என்ற பெயர் தங்களுக்கு வேண்டாமென்றும், இது ஆக்ஷேபகரமாயிருப்பதாயும் சொன்னார். ஆதித்ராவிடப் பெயரே போதுமென்றார்.

மற்றொருவர் "சேரி" என்ற வார்த்தை இழிவானதல்லவென்றும் அதுவே இருப்பது போதுமென்றும் சொன்னார். தீர்மானம் வாபீஸ். செங்கற்பட்டு முனிஸிபல் சத்திரத்தில் பிராமணர்களுக்கென்று தனி இடம் ஒதுக்கிவைக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டதாம்.

ஷை சத்திரத்தில் மாம்ஸம் சமையல் செய்வதையோ சாப்பிடுவதையோ தடுக்க வேண்டுமென்று சிலர் கூறியதும் தோற்றுப் போயிற்றும்.


## C. S. தீக்ஷிதர் அண்டு கோ., பிரசுரங்கள்.

கும்பகோணம் C. S. தீக்ஷிதர் அண்டு கோ., வால் பிரசுரிக்கப்பட்ட அடியிற்கண்ட ஸம்ஸ்கிருதம், தமிழ் புஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்.

பள்ளிக்கூடங்களுக்கும், வியாபாரிகளுக்கும் வழக்கம்போல் கமிஷன் கொடுக்கப்படும். மேற்படி புஸ்தகங்களுக்கு அங்கீகாரமாயிருக்கின் விபரத்துக்கு எழுதவும்.

பண்டிட் S. வெங்கட்டரும சாஸ்திரிகள் இயற்றிய ஸம்ஸ்கிருத புஸ்தகங்கள் (தேவநாகரம்).

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | கதாகுஸுமமஞ்சரி முதல்பாகம் | 0 | 8 |
| 2. | ஷை இரண்டாவது | 0 | 10 |
| 3. | ஷை மூன்றாவது | 0 | 8 |
| 4 | விக்ரமார்க்க சரித்திரம் | 0 | 8 |
| 5 | ஸுபாஷித மஞ்சரி | 0 | 6 |
| 6. | போஜ சரித்திர ஸங்கிரகம் | 0 | 4 |
| 7. | சப்தமஞ்சரி | 0 | 5 |
| 8. | பிரதமபாடமஞ்சரி | 0 | 5 |

தமிழ் புஸ்தகங்கள்.

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1. | உத்தமர் சரித்திரம் மலர் | | 0 | 3 |
| 2. | ஷை | 2 | 0 | 4 |
| 3. | ஷை | 3 | 0 | 5 |
| 4. | ஷை | 4 | 0 | 5 |
| 5. | ஷை | 5 | 0 | 7 |

பண்டிட் T. R. கிருஷ்ணசாரியர் அச்சிட்ட ஸம்ஸ்கிருத (தேவநாகரம்).

| | | |
|---|---|---|
| மஹாபாரதம் 1செட் 18 பர்வமும் | 70 | 0 |
| வால்மீகி ராமாயணம் 1செட் | 25 | 0 |

பண்டிட் S வெங்கடரும சாஸ்திரிகள் இயற்றிய கதாகுஸுமமஞ்சரி, விக்ரமார்க்க சரித்திரம் இவைகளிலிருந்து 1939-ம்ஹூ S. S. L. C. பரீட்சைக்கு 'ஸெலக்ஷன் எடுக்கப்பட்டிருக்கிறது.

புதுக்கோட்டை,
A. ஸ்ரீனிவாஸராகவய்யங்கார் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ ஸூக்தபாஷ்யம் | 1 | 8 | 0 |
| பதினொரு சில்லரை ரஹஸ்யங்கள் ஸாரஸாரம் முதலியன | 2 | 12 | 0 |

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

## வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா.)

தர்மக்கேட்டால் உலகக்கேடு! நாளுக்கு நாள் நாட்டிலே பல்வகை கஷ்டங்கள் தோன்றுகின்றன. இன்னும் பலவரப் போகின்றன. என்பதற்கு அசுபசூசகங்கள் காண்கின்றன. சென்னை மகத்தன்று ஸ்ரீ சுப்மண்ய விக்ரம் விழ்ந்தது. இவைகளைக்கண்டேனும் தர்மத்துரோகம்செய்யாதிருக்க அரசாங்கம் முன்வருமா?

சிறு பிள்ளைத்தனம்! தேசியக்கொடியை கோபுரம் ரதம் முதலிய விடங்களில் ஏற்றுவதை கண்டிக்காமலிருப்பதற்கில்லை. ஆலயங்களுக்கு தனித்வஜங்களிருக்க நாளைக்கொரு கக்ஷியாக ஆளும் பேரதெல்லாம் அவரவர் கொடியை நாட்டிக் கொண்டே போனால் முடிவெங்கே! திருவண்ணாமலை கோபுரத்திலிருந்த தேசிய கொடியை தர்மகர்த்தா அகற்றியது முற்றிலும் நியாயமே!

விஷயம் ஸரி! ஆனால் யாரிவர்? நிஜாம் ஆளுகையால் ஹிந்துமத அனுஷ்டானத்திற்கு பங்கம் விளைவித்ததால் 6 லக்ஷம் ஸன்யாஸிகளைக் கொண்டு ஸத்யாக்ரஹம் செய்ய போவதாக ஓர் உத்தராதிமடம் ஸ்ரீசங்காசார்யர் கூறுவதாக தெரிகிறது! சுத்த வைதிக தர்மாபிமானியாயின் போற்றுவோம்.

அடிக்கடி ஊட்டுக! சென்னை கிருஸ்தவ கலாசாலையில் ஓர் வைதிக தர்மாபிமானியான ஆசார்யர் நமது வேதாந்தமழியா!, அதன் சிறப்பு உயரியதென அழகாக கூறினார். மாணவரிடையே அடிக்கடி நம் மதப்ரசாரம் அவச்யம்.

காசிக்குக்கூட ஆபத்தா? கலியில் யக்ஞாதி உயரிய ஸம்மந்தமில்லாவிடினும் ஸகல பாபங்களையுமகற்ற காசிநகரம் உளதென புராணங் கூறுகிறது. அதை நம்பி யாத்ரை செய்பவர் பலர். மொஹரம் ஹோலி பண்டிகையில் ஹிந்து முஸ்லீம் சண்டையால் யாத்ரிகர் போகாவண்ணம் அரசாங்கம் தடைசெய்தது வெகுதூரம் போய் பணச்செலவு செய்து சென்னைவாஸி பலர் ஸ்நானமின்றி திரும்பினர். என்ன ஆக்ஷி!

ராவ்பகதூர் யோகி! வடநாட்டிலே யோகாபிமானம் வலுத்துவருகிறது. ஓர் ஷை பட்டதாரி 15 நாள் பூமிக்குள் யோக மஹிமையால் மூச்சுவிடாமலிருந்து கரையேறினர்.

ஏமாற்றலா? ஏமாற்றமா? காந்திஜி பட்னி கிடந்தது கடவுள் மாயவழியால் என்கிறார். அவர் மனம்போனபடி கடவுள் கட்டளை போலும்! கடவுள் பெயரைக்கூறி ஆஸ்திக இந்தியரை வசப்படுத்துகிறாரா? அல்லது....?

படிப்பைவிட ஒழுக்கமே சிறந்தது? என கல்விமந்திரி திருச்சியில் கூறினர். பேச்சில் புலி தென்திசை மந்திரிகள்! கார்யத்தில்?

ஸ்ரீ நவக்ரஹ யக்ஞம்! பனையூர் ஆச்ரம தலைவர் ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் ஓர் வாரமாக உலக க்ஷேமத்திற்காகவும், ஷை ஆச்ரமம் தர்மப்ரசாரக ஸபை வைதிக தர்ம ஸபைகளின் அபிவிருத்தியை நாடியும் மைலாப்பூரில் அகண்டதீபம் யஜுஸ் ஸாம வேத பாராயணம் நவக்ரஹ ஜபம் ஹோமம் முதலியவைகளை பனையூர் குருகுல தலைவர் பக்ஷிதீர்த்தம் பிரும்மஸ்ரீ யக்ஞேச்வர தீக்ஷிதர் தலைமையில் நடத்தினார்கள். ஷை ஸபை வக்த குலகர்ணி முதலியோர் கூட இருந்தனர்.

## கும்பகோணம் வர்த்தமானம்

(நமது விசேஷ நிருபர்).

கும்பகோணம் மார்-13உ

பிரபல சூதாட்ட வழக்கை விசாரிக்கலாமா? கும்பகோணம் ஸப் கலெக்டர் ஸ்ரீமான் சிங்காரவேலு முதலியார் 3உ இவ்வழக்கை விசாரிக்க எடுத்துக்கொண்டார் இது சம்பந்தமாக சூதாடியவிடத்தில் சில சாமான்களை கைபற்ற வாரண்டு பிறப்பித்திருப்பதால் வேறு கோர்ட்டிற்கு இதை மாற்றவேண்டி. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தெரிவித்ததின் பேரில் 24-3-39க்கு வாயிதா குறிப்பிடப்பட்டது.

இலவச வாசகசாலை. காலஞ் சென்ற தேசபக்தர் ஸ்ரீமான் வி பந்துலு ஐயர் பெயரால் ஒருவாசகசாலையை இந்கர் மடத்து தெருவில் பண்டாரவடை ஜனப் அ. அப்துல் மஜித் திறந்துவைத்தார். அம்மாபேட்டை ஸ்ரீமான் பி வெங்கடராமஐயர் எம். எல். ஏ. ஸ்ரீபந்துலுஐயர் உருவப்படத்தை திறந்து வைத்தார். இருவரும் அவர் பெருமைகளைப் பாராட்டிப் பேசினர்கள்.

வர்த்தகர்கள் சங்கம் 9-3-39 மாலையில் காசிம்பஜார் மைதானத்தில் ஸ்ரீமான் சிங்காரம் செட்டியார் தலைமையில் கூடிய வர்த்தக சங்கத்தின் கூட்டத்தில் சென்னைசாங்கம் பண்டவிற்பனை வரி விகிதத்தை ஆக்ஷேபித்து தீர்மானங்கள் செய்யப்பட்டன. பலர் பேசினர்கள். சங்கத்தின் தலைவர் காங்கிரஸ் மகாசபை தலைவர் சுபாஷ்சந்திரபோஸுக்கும், மகாத்மா காந்திக்கும் தந்திமூல்யம் இந்த வரியைப்போடாமல் சென்னை கவர்ன்மென்டுக்கு உத்திரவிடும்படி தெரிவித்துக்கொண்டிருக்கிறார்.

10—3—39 மாலையில் வர்த்தகர்களின் விசேஷக்கூட்டம்கூடியதில் சங்கத்திற்கு தலைவராக ஸ்ரீமான் சிங்காரம் செட்டியாரையும், உபதலைவராக ஜனப்பு முகம்மது ஹுஸேனையும், கார்யதரிசிகளாக ஸ்ரீமான்கள் சி பழனியப்ப முதலியாரையும். டி. எஸ். ராஜகோபால ஐயங்காரையும் தெரிந்தெடுத்தார்கள். பொக்கிஷதாராக ஸ்ரீமான் எ. ஆர். ராமஐயர் நியமனம் பெற்றார்.

விசித்திர முனிஸிபல் மீட்டிங்கு. 9-3-39 கூடியது. முதலில் விசேஷக்கூட்டம் நடந்தது. கொசுக்கடிக்கு காரமான மலேரியல் திராவகத்தை பிரயோகம் செய்ய ஸ்ரீமான் ஓ. என். சுப்பிரமணியஐயர் கொண்டுவந்ததீர்மானம் நிறைவேறியது. இந்தக் கூட்டத்திற்குபின் கவுன்சில் சாதாரணக்கூட்டம் நடந்தது. சேர்மன் கவுனஸிலர்களை வெளியே போகிறபொழுதும், உள்ளே வருகிற பொழுதும் தனக்கு அறிவித்துவிட்டால் நலமாய் இருக்கும் என்று சொன்னார். இப்படிச் சொன்னதில் உபயோகப்பட ஆங்கிலப்பதங்கள் மிகவும் ஆக்ஷேபிக்கத் தக்கதென்று ஒரு கவுன்ஸிலர் மிகக் கடினமாய் ஆக்ஷேபித்துப் பேசினார். இதைப் பற்றி சேர்மென் வருத்த முணர்த்தினார். சற்று நேரத்திற் கெல்லாம் மற்றொரு கவுன்சிலர் மீட்டிங்கு ஹாலில் எழுந்து சேர்மெனை நோக்கி "சார் வாடர் சாப்பிட போகிறேன்" என்று தன் கட்டவிரலை காட்டினர் (சிரிப்பு) அவர் வெளியே போய் தீர்த்தம் சாப்பிட்டு வந்து மறுபடி சேர்மெனைக் கூப்பிட்டு "சார் நான் வந்துவிட்டேன்" என்று சொன்னார். (மறுபடி நீண்ட சிரிப்பு) சேர்மென் கவுன்சலரை மிகவும் கோபத்துடன் சற்று நோக்கினர். இது முடிந்த பிறகு ஸ்ரீ மதுரைவீரன் பிள்ளை காங்கிரஸ் கக்ஷியால் நிறைவேற்றிய, விற்பனை வரியை ஆக்ஷேபித்து அதை சென்னைசர்க்கார் கொண்டுவாதிருக்க தீர்மானத்தை கவுன்சிலில் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கபட்டுவிட்டது

## ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளின் ஸ்ரீமுகம்.

செங்கற்பட்டில் ஷை ஸ்ரீமுக ப்ரகடன வைபவம்:—12—?—39 ஞாயிற்றுக்கிழமை காலையில் ஈச்வரன் கோயில் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. ஸ்ரீ ஆதி பகவத் பாதாள் படத்துடனும் ஸ்ரீமுகத்துடனும் வேதபாராயணத்தோடு கோவில் பிரவேசம் செய்யப்பட்டது. பிறகு பூஜை தீபாராதனைகளுக்குப் பிறகு செங்கற்பட்டு ஜில்லாவிற்கு மடத்தின் பிரதிநிதிகளாய் நியமிக்கப்பட்டிருக்கும் வக்கீல் N. ராமனுஜ அய்யர் P. N. நாராயண சாஸ்திரி ஆகியவர்களால் அங்கு கூடியிருந்த மஹாஜனங்களுக்கு ஸ்ரீமுகம் படனம் செய்யப்பட்டு விஷயங்கள் உபன்யஸிக்கப்பட்டன பிறகு ப்ரம்மஸ்ரீ V. விச்வனாதய்யர் அவர்கள் அக்ராஸனத்தில் ஷை ஸ்ரீ முகத்தில் கண்டுள்ள ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் கும்பாபிஷேக ரதோத்ஸவ விஷயங்களுக்கு வஸூல் விஷயங்களைக் கவனிக்க பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், நாராயணசாமிஅய்யர், V. அகோரம் அய்யர், ராமபத்ரமய்யர் முதலியவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. பிறகு பிரஸாதங்கள் விநியோகிக்கப்பட்டு பூர்த்தியடைந்தது, —— ந. நி.

காங்கிரஸ் கவுன்சில் கக்ஷியில் செய்த தீர்மானத்தை கவுன்சிலில் நிறைவேற்ற அனுமதி பெற்ற பின்னர், இந்த தீர்மானம் காங்கிரஸ் கோஷ்டியார்களே காங்கிரஸ் கவர்ன்மெண்டு கொண்டுவந்த ஒரு மசோதாவை எதிர்க்கலாகாதென்றும், முனிசிபல் நிர்வாகத்திற்கு வெளியாக உள்ள விஷயத்தை கவுன்சில் தீர்மானிக்க உரிமை உண்டா என்றும் பலவாறு பிரச்னைகள் எழுப்ப கவுன்சிலின் கூட்டத்தில் ஞாபகம் வந்து விட்டதாக விவாதம் நடந்த தோரணையிலிருந்து ஊகிக்க வேண்டியதாக இருக்கிறது. இதுபற்றி வியாபாரக் கவுன்சிலர்களுள் தீவிரமான அதிருப்தியும் ஆத்திரமும் பெருகி இருக்கிறதாக அறிகிறேன்.

முனிஸிபல் காங்கிரஸ் கக்ஷிக் கூட்டம் சென்ற 11உ மாலை 7மணிக்கு டவுன்ஹைஸ்கூல் ரஸ்தாவில் உள்ள யானையடி முனிசிபல் ஸ்கூலில்முனிசிபல் காங்கிரஸ் கக்ஷியின் கூட்டம் கூடியது. அதனுடைய தலைவர்கூட்டத்தில் அக்கிராசனம் வகித்ததாயும், முனிசிபாலிடியில், கூட்ட நடவடிக்கைகளில், கக்ஷிக் கூட்டத்தில் நடந்து கொள்ளுகிற மாதிரியிலேயே கட்டுப்பாட்டுடன் நடப்பதில்லை என்றும், தன் இச்சைப்படி அடங்காமல் காரியங்களை அவரவர் செய்வதாயும், கக்ஷிக் கூட்டத்தில் தீர்க்காலோசனை செய்து முடிந்துபோன விஷயத்தை கவுன்சிலின் கூட்டத்தில் வேறு விதமாய் மாற்றியோ, தள்ளியோ விடுவது வருந்தத் தக்கதென்றும் பல கவுன்சிலர்கள் ஆத்திரப்பட்டுக் கண்டித்து பேசினர்களாம் இந்தக்காரணங்களாலும், இன்னம் பல்வேறு காரணங்களாலுமே கக்ஷி கார்யதரிசி ஒருவர் தன்ஸ்தானத்தை உதறித் தள்ளிவிட்டாராம். மேற்படி கூட்டத்தில் டவுன் காங்கிரஸ் கமிட்டி தலைவரும் கார்யதரிசியும் விற்பனை வரி தீர்மானம் கொண்டுவருவதுபற்றி ஆக்ஷேபித்துப் பேசினர்கள். கடுமையான வாதம் நடந்ததென தெரியவருகிறது.

மாட்டுச் சந்தை. நீலத்தநல்லூரில் தஞ்சை ஜில்லாபோர்டாரால்நடத்தப்படும் மாட்டுச்சந்தையில் இவ்வருடம் 5500மாடுகள் பலவிடங்களிருந்து வந்திருக்கிறது. ஏராளமான மிராசுதார்கள், விவசாயிகள் வந்து மாடுகள் வாங்குகிறார்கள். விவசாயக் காக்ஷியில் பொருக்கு விதைகள் சாகுபடி செய்யும் முறைகள் காட்டப்பட்டிருந்தது. காக்ஷியை கும்பகோணம் சப் கலெக்டர் ஸ்ரீமான் சிங்காரவேலு முதலியார் நேற்று 12உ திறந்துவைத்து திறமையாக வளர்த்த பொலிகாளை வைத்திருப்போருக்கு பரிசுகளையும் வழங்கினர்.



215274

## வெளியூர்ச் செய்திகள்.

### சேங்காலிபுரம்.

விவாஹ வைபவம்.

பிரும்மஸ்ரீ பிரஸங்கபானு வைத்தியனாத சாஸ்திரிகளவர்கள் கன்னிகைக்கு 1939-ளுஸ மார்ச்சுமீ 10உ சுக்கிரவாரத்தன்று விவாஹ வைபவம் ரொம்பவும் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான வைதிகர்களும் லௌகிகர்களும் வந்திருந்தனர்கள். விவாஹத்திற்கு மறுதினம் ஓர் பெரிய வித்வத்ஸதஸ் நடைபெற்றது. ஷை சபைக்கு லோக ப்ரஸித்தர்களான மஹாமஹோபாத்தியாயர் பிரும்ஹஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களும் சென்னை பிரபல வக்கீலும் உத்தம சனாதனிகளுமான பிருஹ்மஸ்ரீ தர்மரக்ஷகரான K. பாலசுப்பிரமணிய அய்யாவர்களும், சேங்காலிபுரம் பிரும்ஹஸ்ரீ பிரவசன துரீண வைதிக தர்ம சம்ரக்ஷக அனந்தராம தீக்ஷிதரவர்களும் திருவிடைமருதூர் பிரும்ஹஸ்ரீ சுப்பிரமண்ய சாஸ்திரிகளவர்களும் பிரும்ஹஸ்ரீ தேதியூர் சாக்ராயண சாஸ்திரிகளவர்களும் உள்ளூர் பிரும்ஹஸ்ரீ அப்பாஸ்வாமி சாஸ்திகரிகளவர்களும் உள்ளூர் ஆஹிதாக்னி ஸகாக்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

மஹாமஹோபாத்தியாய பிரும்ஹஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்கள் முதலில் ஸ்ரீ ருக்மணீ கல்யாணத்தில் ஸ்ரீ ருக்மணி தேவி பிரும்மணனிடத்தில் பகவானுக்கு எழுதியனுப்பிய பத்திரிகையிலுள்ள ஸ்லோகங்களில் முதல் ஸ்லோகத்தை வெகு அழகாகவும் உருக்கமாகவும் விசேஷார்த்தங்களுடனும் அற்புதமாக வர்ணித்தார்கள். மீதமுள்ள ஸ்லோகங்களையும் ஸ்ரீ ருக்கணி கல்யாண கட்டத்தையும் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரவர்களை சொல்லும்படிக்கு பிரும்ஹஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களே அனுக்கிரகித்தார்கள். தீக்ஷிதரவர்களும் பிரும்ஹஸ்ரீ சாஸ்திரிகளவர்கள் ஆக்ஞாபிரகாரம் அவர்கள் சொல்லிய ஸ்லோகத்திற்கு மேலுள்ள ஸ்லோகங்களையும் ருக்மணி கல்யாண கட்டத்தையும் வெகு அழகாக உபன்யஸித்தார்கள் பிறகு தர்மரக்ஷாமணி அய்யாவர்களை பிரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய சாஸ்திரிகள் முதலிய எல்லோருமாக கேட்டுக்கொண்டதின் பேரில் நமது வைதிக தேசத்தை மஹாகவிகள் அனுபவித்து வரைந்திருக்கும் வைபவத்தை ரஸத்துடன் கூடிய சொற்களால் சபையை திருப்திசெய்து வைத்தார்கள். முகூர்த்த தினத்தில் பிரும்ஹஸ்ரீ அத்வைதசபா பண்டிட் விச்வனாத சாஸ்திரிகள் விஜயம் செய்திருந்தார்கள். கோனேரிராஜபுரம் பிரும்ஹஸ்ரீ இராமய்யர் முதலிய பிரபல பிரபுக்களும் வந்திருந்தார்கள். பிரும்ஹஸ்ரீ வைத்தியனாத சாஸ்திரிகளவர்கள் ஏராளமான ஸம்மானங்களை வித்வான்களுக்கு தங்கள் ஜேஷ்டரும் பரம ஆஸ்திகர்களுமான அப்பாசாமி அய்யாவர்களை கொண்டு அளித்தார்கள். மிகச் சிறப்பாக விவாஹ வைபவம் நடந்தேறிற்று.

T. S. வெங்கடராமய்யர்.

### மேல்மங்கலம்.

ஆஸ்திக மஹா ஜனசபை

மாசிமீ 22-ம்உ சபை அத்யக்ஷர் ப்ரும்மஸ்ரீ பிலாஞ்சேரி சுப்பிரமண்ய அய்யாவர்களின் தலைமையின் கீழ் தர்மப்ரசாரகரான மதுரை ப்ரும்மஸ்ரீ M N சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்கள் மாலை 3½மணி முதல் 5½மணி வரை புருஷார்த்தம் என்னும் விஷயம் பற்றி அரிய சொற் பொழிவு நிகழ்த்தினார்கள். கார்யதரிசியால் வந்தனம் கூறப் பெற்று சபை இனிது நிறைவெய்தியது. 25-ம்உ சபை கூடி இச்சபையின் வார்ஷிக உத்ஸவத்தை ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவம் கிரமபித்து நடத்த தீர்மானம் செய்யப்பட்டது.

காரியதரிசி.

## ஸ்ரீ பாகவத உபன்யாஸம்.

வருஷாந்திர கொண்டாஸ்டம்.

கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் ஒருவருஷகாலமாக விக்கிரபாண்டியம் பிரும்மஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ பாகவதம் மிகவும் அழகாக உபன்யாசம் செய்து வருவது நமது ஆர்யதர்மம் மூலமாக தர்மாபிமானிகள் யாவரும் அறிந்ததே. 6—3—39ல் சுபத்ராகல்யாணம் மிகவும் மேன்மையாக உபன்யஸிக்கப்பட்டு உள்ளூர் ஸப்ஜட்ஜ் அய்யர் அவர்கள் சாஸ்திரிகளுக்கு பூமாலை சூட்டினர்.

10—3—39 வெள்ளிக்கிழமை தினம் ஸ்ரீ மடத்தில் சாஸ்திரிகள் பாகவதம் உபன்யாஸம் செய்ய ஆரம்பித்து ஒருவருஷம் பூர்த்தியாவதை உத்தேசித்து சாஸ்திரிகளை கௌரவித்தார்கள். மிகவும் சிரமமான பாகவத கிரந்தத்தை நமது சாஸ்திரிகள் சாதாரண ஜனங்கள் நன்றாக தெரிந்து கொள்ளும்படி மிகவும் சுலபமாக உபன்யாஸம் செய்யும் சாமர்த்தியத்தைப்பற்றி பிரும்மஸ்ரீ R. ஸ்வாமிநாத அய்யர் அவர்கள் புகழ்ந்து பேசினர். பிறகு கதாசிரவணம் செய்யும் மஹாஜனங்கள் சாஸ்திரிகளிடம் தங்கள் பிரீதியை தெரிவித்து கொள்வற்காக ஓர் நவரத்னமாலை செய்து ஸ்ரீமடம் ஏஜண்டு பிரும்மஸ்ரீ குப்புஸாமி அய்யர் அவர்களால் சாஸ்திரிகளுக்கு சம்மானம் செய்யப்பட்டது.

தற்மாலம் உபன்யாஸம் செய்யப் பட்டு வரும் தசம ஸ்கந்தத்தில் சுருதி கீதை நடந்து வருகிறது. இந்த விஷயம் சாஸ்திரிகள் உபன்யாஸம் செய்து வருவது அவருடைய உயர்ந்த வித்தையையும், ஸாமர்த்தியத்தையும் காட்டுகிறது.

தசமஸ் கந்தம் முடிந்து ஏகாதசத்வாதச ஸ்கந்தங்கள் முடிய இன்னும் இரண்டு மாதம் செல்லும். இதே மாதிரியாக ஸ்ரீபாகவதம் முடிந்த பிறகு மேன்மையிலும் சாஸ்திரிகளை ஸ்ரீமடத்தில் ஸ்ரீபதவத் கீதை, ஸ்ரீதேவி பாகவதம், ஸ்ரீமஹாபாரதம், ஸ்ரீ ஹாலாஸ்ய மஹாத்மியம், முதலிய கிரந்தங்களை உபன்யாஸம் செய்து வரும்படியும் அவருடைய யோக க்ஷேம சௌகரியங்களை கவனித்து நடத்த வேண்டியது நம் எல்லோருடைய முக்கியமான கடமை என்னும், பரம ஆஸ்திக மஹா ஜனங்களுக்கு இந்த ஆர்ய தர்மம் மூல்யமாய் தெரிவித்துக் கொள்ளுகிறேன்:

S. P. வெங்கடராமய்யர்.

பிரும்மஸ்ரீ அருட்கவி ந. சுப்ரமண்ய அய்யர். அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ நகர விமர்சனம். | 0 | 12 | C |
| ஸ்ரீ குரு விமர்சனம். | 0 | 5 | 0 |
| வரிவஸ்யா ரஹஸ்யம் | 1 | 0 | C |
| ஸ்ரீ லலிதாத்ரிசதீ பாஷ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீவித்யாஸபர்யாபத்ததி | 2 | 0 | C |

கிடைக்குமிடம்:— ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

## பெரியகுளம்.

இவ்வூரின் "தர்மசம்வர்த்தினி பிராம் சபா" ஆதரவில் சென்ற பிப்ரவரி ஞாயறு ஸ்ரீரங்கம் உப. வே. திரு. வேங் சார்ய சுவாமிகள் அவர்களால் குசேல திரமும், பிப்ரவரி 27உ முதல் மார்ச்சு முடிய மதுரை ஸநாதனதர்ம ப்ரச பிரும்மஸ்ரீ M. N. சுப்ரமணிய சாஸ்தி அவர்களால் மனுஷ்ய தத்வம், வே பக்தி, யோகம், கர்மயோகம், ஞானயே ஸ்திரீதர்மம் தற்காலம் பிராமணர்கள் ந வேண்டியதுகள் முதலாயுள்ள விஷயங்க செவ்வனே இனிய எளிய தமிழ்நடை ஸ்ருதி, ஸ்மிருதி முதலாயுள்ள கிரந்தங் லிருந்து ஆதாரங்களுடனும் பிரமாணங் டனு உபன்யஸித்தார்கள். இவ்வி மஹாஜனங்கள் மிகுந்த சிரத்தா மேலிட்டவர்களாக சாஸ்திரிகள் அவர் பன்முறையும் வந்து உபன்யஸிக்கவே மாய்க் கேட்டுக்கொண்டார்கள்.

5உ காலை சபைக்கென்று சிருஷ்டி திருக்கும் ஜயாரகவ மந்திரத்தில் பஹுகா கீழ்மங்கலம் பிரும்மஸ்ரீ விஸ்வநாத சாஸ் களால் ஆராதிக்கப்பட்டு வந்த விநா மூர்த்தியை விசேஷ அபிஷேக ஆரா யுடன் மஹாஜனங்களின் உத்ஸாஹத்துட பிரதிஷ்டை செய்யப்பட்டு ஷை கணபதி ஜயகணபதி யென்றும் திருநாம் சூட் பட்டது. பிரசாதங்கள் வழங்கி எல் சுபமாக முடிந்தது.

யக்ஞபூஷணம் காரியத

## ஆங்கரை.

ஆங்கரை அக்ரஹாரத்தில் சென்ற பவ சித்திரைமீ 15உ முதல் எட்டு பை களுக்கு அத்யன பாடசாலை அநேக திக மகாஜனங்களுடைய ஆதரவில் நட வந்தவரும் சனாதன தர்மத்தில் மிக ஊக்கம் உள்ளவரான ஸ்ரீ ஜகதீச அவர்கள் நாளதுளுஸ மாசிமீ 14உ ஞா றுக்கிழமை தன் பூத உடலை துறந்து ஈச யுஜ்யத்தை அடைந்தார். ஷையார் குடு தார்க்கு எனது அனுதாபத்தை தெரிவி துடன். ஷையார் நடத்தி வந்த பா சாலையும்... மேலும் நடந்தேறி வரவே மாயும் ஷைபாடசாலை விஷயமாய் ஈடுபட் ஆஸ்திகர்களையும் பிரார்த்திக்கிறேன்.

அருணாசலதீக்ஷி

## மதிப்புரை

மருத்துவக்குடி. குருமூர்த்திஅய்யரால் சுரிக்கப்பட்ட பிரமாதி வருஷத்திய பஞ் ங்கம் ஒன்று நம்பார்வைக்கு வரப்பெற்றோ நல்லக்காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட சொற்பவிலையான 2அணவுக்கு விற்பது பாக்யமே, இந்து மதத்திற்கு வேண்டிய வி யங்கள் பஞ்சாங்கத்தில் காணப்படுவதே திதி வார. நக்ஷத்திரயோகங்கள் பிழைய னியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

நீண்ட நாளாக போடப்பட்டு வருகிற குருமூர்த்திஐயர் என்ற ரப்பர்ஸ்டாம்புமுத் ரையும் குத்தியிருக்கிறது.

திருப்பந்துருத்தி. ஸ்ரீநாராயணதீர்த்தா ஜீவியசரித்திரத்தைப் பற்றி சென்னை கீர்த் ச்சாரியார் ஸ்ரீமான்.C.R.ஸ்ரீனிவாசய்யங் ரவர்களால் கிடைத்த சில ஆதாரங்களும்,ச னதி மகிமையும், சன்னதியில் பஜனை திவ் நாம சங்கீர்தனம் நடைபெறுகிற தேதி வி ரமும்,ஆராதனை மகா குருபூஜை நடக்கிறவி மும் ஸ்ரீகுருநாதன் உருவப்படமும் அ காக போடப்பட்டிருக்கிறது, ஒரு நிருப

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

## வளியூர்ச் செய்திகள்.

### திப்பிரஜபுரம் பிரும்ம வித்யா ஸபா.

—3—39உ சனிக்கிழமையன்றுவேதா ரோமணி ப்ரும்மஸ்ரீ வாசுதேவ சாஸ் ர் (கும்பகோணம்) கும்பகோணம் ஸ்ரீ டணி சாஸ்திரிகளுடையவும்,கிராமத்தார் டையவும் வேண்டுகோளுக்கிணங்கி 'வாஸ்ய தாத்பர்யம்" என்னும் விஷயத் பற்றி சொல்ல ஆரம்பித்து வேதம் ளருஷேயம் என்றும், அதன் ஆஞ் படிதான் நாம் நடக்க வேண்டும் என் கர்மாவை பலாபிஸந்தியில்லாமல் அவ அநுஷ்டித்து சித்த சுத்தித்வாரா மோ தை அடைய ஹேதுவாகும் என்றும், சரி நாம் செய்யவேண்டிய திரிஸந்த்யா ஸனத்தின் ரஹஸ்யம் மேல் சொன்ன தக்கு எப்படி ஒத்து இருக்கிறதென்றும் டதோர் ருசிகரமான ப்ரஸங்கம் செய் அப்பொழுது அவ்விடம் விஜயம் செய் த கொட்டாரம் வியாகரண சிரோமணி மஸ்ரீ ராமசுப்பிறமணிய சர்மா அவர்கள் ஞானமார்க்கமிருந்தாலும், உத்தமாதி பாகஇல்லாதவர்களுக்குநிஷ்காமமாய் கர் செய்வதினால் மிக்க சித்த பரிபாகம் து அதன் பிறகு ஷடி மோக்ஷ சம் பத்தை அடையலாம் என்று சொல்லி த்தார்.

### தர்மரக்ஷாமணி கே. பாலஸுப்ரமண்ய அய்யர் விஜயம்

2—3—39உ ஞாயிற்றுக்கிழமை ம் இரவு 7 மணிக்கு ஸ்பெஷலாக ஷடி பயின் ஆதரவில் உபன்யாஸம் ஏற்பாடு யப்பட்டது—அதற்கு மதுரூஸ் ப்ரபல வகேட்டும், தர்ம ரக்ஷாமணியுமான மஸ்ரீ K. பாலசுப்பிரமணிஅய்யர் அவர் ம், உத்தம வித்வத் சிரோமணியாகிய காஸிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷ அவர்களும், அதி குதூஹலத்துடன் க கோஷத்தினிடையே பூர்ண கும்பம் த்து வரவேற்கப்பட்டு, மிருந்த கா கோ தினிடயே உபன்யாஸம் செய்ய, ப்ரார்த் கப்பட்டு முதலில் ப்ரும்மஸ்ரீ K. பால ரமணிய அய்யர் அவர்கள் இப்பேர்ப் ட ஸபையின் அவசியத்தைப்பற்றியும், நதன தர்மத்தை நாம் கைவிடாமல் அவ சித்தால் இஹத்தில் மிகுந்த ச்ரேயஸ்ஸை டைவதுடன் நம்முடைய அத்வைத ஸித் தத்தின் முக்கிய கொள்கையான ஜீவப் மைக்கியத்துக்கும் காரணமாகும், ற்கு வேத சாஸ்திரங்களில் சொல்லியிரு ப ப்ரகாரம், மந்திரம், உபாஸனை இதுகளை டபிடித்தல் வேண்டும் என்றும், கடைசி காமாக்ஷியம்மன் பேரில் இரண்டு ஸ்தோ ரங்களை வெகு அழகாகச்சொல்லி தன் ப்ர கத்தை ஒருவாறு முடித்துக்கொண்டு ம்மஸ்ரீ தீக்ஷதர் அவர்களை "பகவத் ம்" சொல்லும்படி கேட்டுக்கொள்ள டி ப்ரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷதர் அவர் , ஷடி பாலசுப்பிரமணிய அய்யரவர் நடைய அதிதார்மிக குணகணங்களை த்து ஸகஸ்யர்களுக்கு சொல் ம் ஷடி பெரியாரை அறிமுகப்படுத் ம் சற்று பேசிவிட்டு, மந்திரம், உபாஸனை தயம் இதுகளுடைய ப்ராமாணிக்கத்தை னும் நன்கு எடுத்துக்காட்டி, ஸ்ரீ துருவஸ் மியின் அதிஅற்புதமான சரித்ரத்தை ஸ்ரீ பாகவதத்தில் சொல்லியிருக்கிற ப்ரகார ம், நாராயணீயம் என்றும் கிரந்தத்திலிருக் ம் கோட்பாடுகளுடனும் சுருக்கமாகச் சால்லி வெகு அழகாக உபன்யாசித்தார். ற்கு இருவர்களும் உள்ளூர் ராமாயணம் முசாஸ்திரிகளவர்கள் வந்த ஞோபசாரத்தை செலுத்தியபின் மற்றும் அங்கு விஜயம்செய்திருந்த வித்வான்கள்,கிராமஸ்தர்கள் எல்லோருடைய ஆரவாரத்தினிடையே ஷடி உபன்யாஸகர்களிருவரும் விடைபெற்றுக்கொண்டு காரில் சென்றார்கள்.

நமது நிருபர்.

## சுதேச வைத்யமும், வைத்ய இலாகா மந்திரியும்.

சென்ற வெகுதான்ய வருஷம்மாசிமீ 19உ (2-3-39)யில் வெளிவந்த "ஆர்யதர்ம"த்தில் "ஆயுர்வேதாசார்ய" பட்டதாரி ஒருவர் வைத்திய இலாகா மந்திரி அவர்கள் இந்திய வைத்ய முறைகளில் முன்னேற்ற விஷயங்களில் போதுமான கவனம் செலுத்தவில்லை என்று பொதுஜனங்களும் தேசியவைத்யர்களும், பத்திரிக்கைகள் மூலமும்,ப்ரசங்கங்கள் மூலமாக முறையிட்டு வருவதாகவும். ஆனால் இது உண்மையல்ல வென்றும் அவர் பிக்ஷாண்டார் கோவிலில் செய்த உபன்யாஸத்தை நேரில் கேட்டவர்களுக்கு நன்குவ்யக்தமாயிற்றென்றும். ஆகையால் தேசியவைத்தியர்களின் கடமை சர்காரின் கார்யங்களுக்கு உதவிபுரிவதும் ஆலோசனை சொல்வதுமேயாம் என்றும் அதற்கு வேண்டிய சிலயோசனைகளையும் அவருக்கு தெரிந்தவரையில் ப்ரகடனப்படுத்தியிருக்கின்றார்.

ஆனால் இதே வைத்யஇலாகாமந்திரி அவர்கள் ஏலூரில் மார்ச்சுமீ 4உ முனிஸிபல் கௌன்ஸில் வாவேற்புஉபன்யாஸத்திற்கும்மேல் கோதாவரி ஜில்லா எல்-ஐ-எம் சங்கத்தாரின் விண்ணப்பத்திற்கும் சொன்ன மறுமொழியை நேரில் கேட்டவர்களுக்கும் இவ்வாயுர்வேத பட்டதாரி அவர்கள் சொல்வது உண்மையல்ல வென்றேவ்யக்தமாய் தோன்றுகின்றது. மார்ச்சுமீ 8உ வெளிவந்த ஹிந்து மதருஸ் மெயில் பத்திரிகைகளில் ஏலூர் மார்ச்சுமீ 5உ யென்று இலக்கமிட்டு "நமதுநிருபரிடமிருந்து"என்றபத்தியில்வெளிவந்திருக்கும் விஷயத்தைப்பார்ப்பவர்களுக்கு இது நன்கு விளங்கும். அதில் எல்-ஐ-எம் சங்கத்தின் விண்ணப்பத்திற்கு சொல்லிய மறுமொழியில் வைத்ய இலாகா மந்திரி அவர்கள் சொல்லியிருப்பதாவது:—

(ஆங்கிலத்தில் வெளிவந்திருப்பதின்மொழிபெயர்பு) "ஆயுர்வேத,அல்லோபதி,ஸம்பிரதாயங்கள் ஒன்றுக்கொன்று(பரஸ்பரம்)முரண்பட்டவைகள். (விருத்தம்: இவ்விரண்டிற்க்கும் மத்யஸ்தம். செய்பவர் எல்-ஐ-எம்-என்பவர்கள் என்பதே. இதைப்பார்த்தபிறகாவது எந்த உண்மை தேசியவைத்ய ஆசார்யனோ,அபிமானியோ,வைத்ய இலாகாமந்திரி அவர்கள் தேசிய,முன்னேற்றத்திற்கு பாடு படுகின்றவர் என்று ஸ்வப்னத்திலாவது சொல்ல முன்வருவாரு.

ஒருவேளை தங்கள் நிருபர் ஆயுர்வேதமும்.எல்-ஐ-எம்"என்பதும் ஒன்றே யல்லாது வேறில்லை என்று நினைக்கின்றார் போலும் அவ்விதம் மனப்பால் குடிப்பவர்களுக்கு கனம் டாக்டர்.T.S.S.ராஜன் அவர்கள் ஆணித்தரமானதன் பதிலினால் உண்மையை விளக்கிவிட்டார். அவர் பாடு படுவதெல்லாம். ஆயுர்வேதத்திற்கோ சித்த வைத்யத்திற்கோ, யூனானி வைத்யத்திற்கோ அல்ல. பின் என்ன வோவெனில் புதிதாக ஓர்வைத்யம் சிருஷ்டித்து அதற்கு இந்தியவைத்ய மெனப் பெயர் சூட்டி அதையே விருத்தி பண்ணுவதற்காக, அரசாங்க இந்திய வைத்தியக்கல்லூரி நடத்தப்படுகின்றது என்றுதெளிவாக வேவிளக்கி விட்டார். ஆகவே அரசாங்கஉதவி வேண்டுமென்று முறையிட்ட தேசியவைத்திய தலைவர்களின் அபிப்ருயத்திற்கு இணங்குவதுபோல் சுமார் 16வருஷங்களுக்குமுன் அரசாங்கத்தார் நியமித்த "உஸ்மான் கமிட்டி" மறுப்பு வெளியீட்டில்.Dissenting note and dissenting minute)கண்டஉண்மைகளை யெல்லாம்கண்கூடாக ஆயுர்வேத வைத்யர்கள் இப்பொழுது நேரில் கண்டு அதன் விபரீத பலத்தை அநுபவிக்கின்றார்கள்.சுருங்கச்சொல்லின் அரசாங்கத்தாரைப் பிரார்த்தித்துக் கேட்டது ஒன்று, அவர்கள் கொடுக்காதது ஒன்று, என்று உளளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகின்றது. இன்னமும் தேசியவைத்யர்கள் உண்மையை தெரிந்து கொள்ளாமல் இந்திய வைத்ய கல்லூரியைப் பலப்படுத்த வேண்டுமென்றும் இப்போதிருக்கும் வெவ்வேறு வைத்ய சங்கங்களை கலைத்து இந்திய வைத்யத்தின் சென்ட்ரல் போர்டு என்னும் த்ரிசங்கு ஸ்வர்க்கத்தில் எவ்வித ச்ரமப்பட்டும் அங்கத்தினர் ஆகவேண்டுமென்று பத்திரிக்கைகள் மூலமும் ப்ரசங்கங்கள் மூலமும் பலவிதமாய்,உலகத்தைக்கலக்குகின்றார்களே இம்மயக்கத்தின் பெருமையை நாம் என்னனென்று சொல்வது?

(அஹோ மோஹஸ்ய வைபவம்) 'ஆயுர்வேதமும்" "அல்லோபதியும்" ஒன்றுக்கொன்று இருட்டும் வெளிச்சமும் போல் பரஸ்பரம் விருத்தமாயின் எவ்விதமாக எவ்விதம் இவ்விரண்டிற்கும் "எல்—ஐ—எம்" என்பவர் மத்யஸ்தராவர் ? இம்மத்யஸ்தரைக் கொண்டு எதற்காக முரண்படும் சம்பிரதாயங்களை நடத்தவேண்டும். என்பதை மந்திரி அவர்களும் தங்கள் நிருபருமே நன்கு உணர்ந்து விளக்குவார்களென்று வைத்யர்கள் எதிர்பார்க்கின்றார்கள். இன்னும் இந்திய வைத்ய சென்ட்ரல் போர்டு என்னும் கழகத்தில் சேருதவர்கள் எவ்விதமான யோக்யதையுடன் இருந்தாலும் வைத்யம் செய்யக்கூடாது அவ்விதம் செய்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்பது போலுள்ள பயங்கர சட்டங்கள் காங்கிரஸ் அரசாங்கத்தாரால் சமீபத்தில் ஏற்படுத்தப்படும்பொழுது அதற்கு உதவி செய்யவே தங்கள் நிருபர் பரிவுடன் தேசிய வைத்யர்களுக்கு மிகவும் அநுகூலம் செய்பவர்போல் முன்வந்திருக்கின்றார்போலும். இவ்வித அநுகூலிகளின் வலையில் விழாமலிருக்கும்படி ஆயுர்வேதத்தையும், ஆயுர்வேத வைத்யர்களையும் கடவுள் ரக்ஷிப்பாரக- ரிஜிஸ்டர் செய்வதால் ஒரு விதமான நன்மை கிடையாதென்றும் பலவித சங்கடங்களை ஏற்படும் என்றும் இன்னொரு சமயம் தங்கள் பத்திரிகை வாயிலாக தெரிவிக்கிறேன்

கே ஜி நடேச சாஸ்திரி

---

## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றும் பதிப்பு)

பிராம்மணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. ப்ரத்யேகம். கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல் திருச்சிரா.

141

[illegible]

4 12

24 23-3-1939

215225

1447/7

215275

143

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
27 MAR 1939

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 24 | கும்பகோணம் கலி5039 பகுதான்ய-ளு பங்குனி-மீ 10வ 1939-ளு மார்ச்சு-மீ 23வ | வா 12

## ஆர்யதர்மம்.

ஸநாதனதாமத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணு 1.

### விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு. 0 8 0
...கால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு ...ந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## ஸ்ரீ போஸுக்கு நோட்டீஸ்.

பந்த் தீர்மானத்தை ரத்து செய்க.

திரிபுரி காங்கிரஸில் ஸ்ரீமான் கோவிந்த வல்லப பந்துவால் பிரேரேபிக்கப்பட்டு பெருத்த மெஜாரிடியால் நிறைவேறியுள்ள (காந்திஜியின் விருப்பப்படி காரியகமிட்டி அமைக்கபட வேண்டு மென்கிற) தீர்மானமானது சட்ட விரோதமாயிருப்பதால் அதை தலைவரென்ற ஹோதாவில் ஸ்ரீ போஸ் நிராகரித்து விட வேண்டுமென்றும், இல்லையேல் கோர்ட் மூலம் நடவடிக்கை செய்யப்படுமென்றும் வங்காள காங்கிரஸ் மெம்பர் ஒருவர் போஸுக்கு வக்கீல் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்.

பம்பாய் தலைவரான ஸ்ரீமான் நரிமனும் பந்த் தீர்மானம் சட்டப்படி செல்லாதென்று அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்.

## ஹிந்தி எதிரிகள் மன்னிப்பு.

சென்னை ஹிந்தி எதிர்ப்பு இயக்கத்தில் தண்டிக்கப்பட்ட 13 பேர்கள், தாங்கள் தெரியாத்தனத்தால் அதில் கலந்து கொண்டு விட்டதாக மன்னிப்பு கேட்டதால் விடுதலை செய்யப்பட்டார்கள்.

## ஹிட்லரின் மனோதைர்யம்.

ஸமீபத்தில் நடந்த ம்யூனிச் ஒப்பந்தத்தையும் லக்ஷ்யம் செய்யாமல் ஹர் ஹிட்லர் ஸெக் பிரதேசம் முழுவதையும் பிடித்துக் கொண்டுவிட்டார். ஸ்லவேகியா, ருதீனியா முதலிய தேசங்களையும் ஸ்வதந்திர நாடாகச் செய்யப்பட்டு விட்டது.

ஐரோப்பாவில் இதன் பயனாகப் பெரிய குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டன்கூட இச்சமயம் அதிக ஆத்திரத்துடன் ஹிட்லரைக் கண்டிக்க முன் வந்திருக்கிறது.

## உபவாஸ தத்வம்.

மாருத தெய்வ பக்தி வேண்டும்.

காந்திஜியின் கருத்து.

ஸ்ரீமான் காந்தி ராஜ்கோட் விஷயமாக தாம் செய்த உபவாஸ விரதத்தைப்பற்றி எழுதுகையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:-

உபவாஸமென்பது மிகவும் பரிசுத்தம் வாய்ந்தது. முன் காலத்திலும் இதைப் பலர் ஆத்மசுத்திக்காகவும், வேறு உன்னத கார்யங்களுக்காகவும் அநுஷ்டித்துள்ளனர். பகவானை நேருக்கு நேராக தர்சிக்க வேண்டு மென்பதற்காக புத்தர், ஏசு, மஹம்மது ஆகியவர்கள் தவமிருந்தனர்.

ஸ்ரீராமபிரான், தமது வானர ஸைன்யங்களுக்கு ஸமுத்ர ராஜன் வழி விட வேண்டுமென்பதற்காக உபவாஸத்தவமிருந்தார்.

ஸ்ரீ பார்வதி தேவியும் சிவபெருமானைக் கணவனாக அடைய உபவாஸ விரதமநுஷ்டித்தாள்.

ஸத்யாக்ரஹ ஆயுதங்களில் உபவாஸமென்பது அரியதொரு ஆயுதமாகும். யார் வேண்டுமானாலும் இந்த ஆயுதத்தை உபயோகிக்க முடியாது. இதற்கு வெறும் தேக பலமிருந்தால் மட்டும் போதாது.

பகவானிடம் மாறாத பக்தி இருக்கவேண்டும்.

உபவாஸ மென்பது ஆத்மார்த்தமாக இருக்க வேண்டும். போட்டிக்காகச் செய்யக்கூடாது"

காந்திஜியின் மேற்கண்ட அபிப்ராயங்களை காந்தி சிஷ்யர்கள் கவனிக்க வேண்டியது அவசியம்.

## C. S. தீக்ஷிதர் அண்டு கோ., பிரசுரங்கள்.

கும்பகோணம் C. S. தீக்ஷிதர் அண்டு கோ., வால் பிரசுரிக்கப்பட்ட அடியிற்கண்ட ஸம்ஸ்கிருதம், தமிழ் புஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்.

பள்ளிக்கூடங்களுக்கும், வியாபாரிகளுக்கும் வழக்கம்போல் கமிஷன் கொடுக்கப்படும். மேற்படி புஸ்தகங்களுக்கு அங்கீகாரமிருக்கின் ... ...

பண்டிட் S. வேங்கடட்டரும சாஸ்திரிகள் இயற்றிய ஸம்ஸ்கிருத புஸ்தகங்கள் (தேவநாகரம்).

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | கதாகுஸுமமஞ்சரி முதல்பாகம் | 0 | 8 |
| 2. | ஷை இரண்டாவது | 0 | 10 |
| 3. | ஷை மூன்றாவது | 0 | 8 |
| 4. | விக்ரமார்க்க சரித்திரம் | 0 | 8 |
| 5 | ஸுபாஷித மஞ்சரி | 0 | 6 |
| 6. | போஜ சரித்திர ஸங்கிரகம் | 0 | 4 |
| 7. | சப்தமஞ்சரி | 0 | 5 |
| 8. | பிரதமபாடமஞ்சரி | 0 | 5 |
| | தமிழ் புஸ்தகங்கள். | | |
| 1. | உத்தமர் சரித்திரம் மலர் | 0 | 3 |
| 2. | ஷை 2 | 0 | 4 |
| 3. | ஷை 3 | 0 | 5 |
| 4. | ஷை 4 | 0 | 5 |
| 5. | ஷை 5 | 0 | 7 |

பண்டிட் T. R. கிருஷ்ணசாரியர் அச்சிட்ட ஸம்ஸ்கிருத (தேவநாகரம்).

| | | |
|---|---|---|
| மஹாபாரதம் 1செட் 18பர்வமும் | 70 | 0 |
| வால்மீகி ராமாயணம் 1செட் | 25 | 0 |

பண்டிட் S. வெங்கடரும சாஸ்திரிகள் இயற்றிய கதாகுஸுமமஞ்சரி, விக்ரமார்க்க சரித்திரம் இவைகளிலிருந்து 1939-ம்ஞு S. S. L. C. பரிட்சைக்கு 'ஸெலக்ஷன் எடுக்கப்பட்டிருக்கிறது.

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தந அச்சுக்கூடம், லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்,

## உண்மையான பக்தி.

### 2. ஈச்வர தத்வம்.

பக்தர்:—பக்தி விஷயமாக இன்னொரு கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன், கேட்கலாமா?

மஹாஸ்வாமிகள்:—கேளுங்கள். என்ன விஷயம்?

ப:— அநேக பக்தர்கள் சிரத்தையுள்ளவர்களாகவும் ஸாத்விகர்களாகவும் இருந்துவந்த போதிலும், தன்னுடைய உபாஸ்ய தேவதையைத் தவிர வேறு எந்தத் தேவதையையும் தன் காது கேட்க யாராவது ஸ்துதித்தால், உடனே வியவஹாரத்திற்கும் வசவுக்கும் ஆரம்பித்துவிடுகிறார்களென்பதைக் கவனித்திருக்கிறேன். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாமலிருக்கும் மனோபாவம் வாஸ்தவமான பக்தியுடன் பொருந்துமா?

ம:— பொருந்தாது. ஸந்தேஹமேயில்லை. இம் மனோபாவம் நல்ல பக்தர்களிடம் இராது. பக்தியின் ஸ்வரூபம் இன்னதென்று அறியாமலும், தங்களால் உபாஸிக்கப்படுகிறதாய்ச் சொல்லப்படுகிற ஈசுவரனின் ஸ்வரூபம் எப்படியுள்ளதென்று தெரிந்துகொள்ளாமலும் இருக்கிறவர்களிடம்தான் இந்த மனோபாவம் காணப்படும். ஜகந் நியந்தாவாய், ஸர்வேசுவரனாய் இருக்கும் பரவஸ்துவானது எல்லாத் தனித்தனி நாமங்களையும் ரூபங்களையும் கடந்து நிற்கிறது. நாமமும் ரூபமும் அசேதனமான பிரகிருதியைச் சேர்ந்தவைகளே. கொஞ்சமாவது பிரகிருதி ஸம்பந்தம் கல்பிக்காமலிருக்கும் வரை, ஈசுவரனுக்குச் சொந்தமாக ஒரு நாமமும் ஒரு ரூபமும் கிடையாது. புருஷஸூக்தத்தில் சொல்லியபடி, "பாதோ அஸ்ய விச்வா பூதாநி" நாமரூபாத்மகமான ஸகலப் ப்ரபஞ்சமும் அவருடைய பாதமாத்திரம்தான் ஆகும். ஈசுவர தத்வத்தில் இதற்கு மேலாகப் பெரியதாக இருக்கும் பாகத்தை நாம் எப்பொழுதும் நேரில் அறிந்துகொள்ளமுடியாது. அவருடைய பாதம் தான் நமக்குத் தெரியமுடியும். அவருடைய பாதத்தை ஸேவிப்பது மூலமாகத் தான் அவரை ஸேவிக்கவேண்டியிருக்கிறது. பிரபஞ்சத்திலுள்ள தேவர்கள், பிதிருக்கள், மனுஷ்யர்கள், மிருகங்கள் முதலானவையடங்கிய இதாம்சங்கள் விஷயத்தில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும் நம்மையும் எப்படி நடத்திக்கொள்ளவேண்டுமென்றும் சாஸ்திரங்களில் சொல்லியபடி, ஸரிவர நடந்துகொள்வதுதான் கர்மா எனப்படுகிறது. அதுவே ஈசுவரனின் பாதஸேவை. அந்தப் பாதத்தில் ஊக்கத்துடன் இடைவிடாது ஸேவை செய்து, நம் பக்தியினால் ஈசுவரனுக்குத் திருப்தியேற்பட்டு, நம்மைக் கைதூக்கிவிட்டு நிறுத்தி, அவருடைய முகத்தை நேரில் பார்க்கக்கூடிய பதவியைக் கொடுத்தாரேயானால், அப்பொழுது அவர் நெற்றியில் இருப்பது கோபிசந்தனமா, விபூதியாவென்று பார்த்துக்கொள்ளலாம். இப்பொழுது நாம் ஏணியின் அடிப்படியில் இருக்கிறோம். பகவானுடைய பாதத்தின் பிரகாசமே நமக்குக் கொஞ்சமேனும் புலப்படவில்லை. அப்படியிருக்க, அவருடைய முகத்தின் தன்மையைப்பற்றி ஊஹிக்கவும் வியவஹாரம் செய்யவும் எதற்காக நாம் காலத்தையும் பலத்தையும் வீணாகச் செலவழிக்கவேண்டும்? உண்மையான பக்தியுள்ளவன் இந்த வழிக்கு எப்பொழுதும் போகமாட்டான். ஈசுவரன் என்றால் ஜகத்தை ஸ்ருஷ்டி செய்து பரிபாலித்து, உபஸம்ஹாரம் செய்கிறவர் என்ற சுருக்கமான லக்ஷணம் அந்தப் பக்தனுக்குப் போதுமானது. அவருக்கு எந்தப் பெயர், எந்த ரூபம் கொடுத்தாலும் இவனுக்கு ஆக்ஷேபணையில்லை; ஏனென்றால் அவை ஈசுவரனின் தத்வத்தில் சேர்ந்தவையல்லவென்றும், அந்தந்த பக்தர்களின் க்ஷேமத்தையுத்தேசித்து அவை அவலம்பிக்கப்படுகிறவைதான் என்றும், நன்கு அறிவான். தன்னைக் குறித்து பகவானால் கட்டளையிடப்படும் ஆக்ஞைகள் அடங்கியதே வேதம் என்றும், அவ் வேதத்தில் விதிக்கப்பட்ட கர்மாக்களை ஒழுங்காகச் செய்வதே பகவானுடைய அனுக்ரஹத்தை ஸம்பாதிக்க வழி என்றும், பகவதாராதனம் செய்வதற்குத் தன்னால் ஸாத்தியப்படும் மார்க்கம் இது ஒன்றேதான் என்றும், அறிந்திருப்பான்.

ப:— சிவ பக்தனாயிருப்பவன் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கிறவர் சிவனே என்றும், அதேமாதிரி மற்றவர்களும் சொல்கிறார்களே?

ம:— முதல் பார்வைக்கு அவ்விதம் தோன்றலாம். சிவ பக்தனுடைய எண்ணத்தைக் கவனித்தால், ஜகத்தை ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் செய்வது ஒருவர் தான் என்றும் அந்த ஒருவரே சிவன் என்றும் ஏற்படும். ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவாக, விஷ்ணுவோ வேறு யாருமோ இருப்பதாக அவன் ஒப்புக்கொள்ளமாட்டான். அந்த லக்ஷணம் பொருந்திய பரவஸ்து ஒன்றுக்கு மேல் பல உண்டென்றாவது, அப்பலருக்குள் தன் சிவன் உத்கிருஷ்டர் என்றாவது, சொல்வது கிடையாது. அவன் நம்புவதும் சொல்வதும் என்னவென்றால், ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு எல்லாம் ஒரே கர்த்தாவாக இருக்கிறவர் சிவன் என்பதுதான் அநேக ஈசுவரர்களை யாரும் ஒப்புக்கொள்கிறதே கிடையாது. ஒரே ஈசுவரன்தான் உண்டு. அவர் ஜகத்தை ஸ்ருஷ்டி செய்து ரக்ஷித்து உபஸம்ஹாரம் செய்கிறார், அவருடைய பெயர் சிவன், என்றுதான் அபிப்பிராயம்.

ப:— வாஸ்தவம். ஆனால், விஷ்ணு பக்தனும் இதேமாதிரிதானே தன் விஷ்ணுவைப் பற்றி நினைக்கிறான். அப்படியே தான் கணேசர், ஸுப்ரஹ்மண்யர், தேவி முதலானவர்களுடைய பக்தர்களும் பாவிக்கிறார்கள். இவர்களில் யாரை ஸரியென்று ஒப்புக்கொள்கிறது? எல்லாரும் ஸரியாயிருக்க முடியாதென்பது வித்தம்.

ம:— எந்தப் பக்தரும் அநேக ஈசுவரர்கள் உண்டென்று சொல்வதில்லையென்பது ஸரி தானே?

ப:— ஆம்.

ம:— எல்லாருமே ஈசுவரன் ஒருவர் தான் உண்டென்று சொல்கிறார்களல்லவா?

ப:— ஆம்.

ம:— ஈசுவரனைப்பற்றி சொல்லும்போது அவர் ஜகத்தை ஸ்ருஷ்டி செய்து ரக்ஷித்து உபஸம்ஹாரம் செய்கிறாரென்ற லக்ஷணத்தையும் எல்லாரும் ஏகரூபமாக ஒப்புக்கொள்கிறார்களல்லவா?

ப:— ஆம்.

ம:— ஆனால் அந்த ஈசுவரனுக்குப் பெயர் என்ன, ரூபம் என்ன, என்பதில் மாத்திரம் வித்தியாஸப் படுகிறார்கள்.

ப:— அப்படித்தான்.

ம:— அவர்கள் சொல்லும் ஈசுவர லக்ஷணத்தில் தவறுதல் இல்லை. ஸரியாகவே ஏகரூபமாய் சொல்கிறார்களல்லவா?

ப:— ஆம்.

ம:— உங்கள் முன்னிலையில் ஒரு மணி அரிசி இருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். அரிசிக்குள்ள லக்ஷணங்களெல்லாம் அதனிடத்தில் இருப்பதாய் தாங்கள் கவனித்துத் தெரிந்துகொண்டு அது அரிசியே என்று நிர்மானிக்கிறீர்கள். அந்த ஸமயத்தில் தமிழ் தெரிந்தவன் ஒருவன் வந்து அதற்குப் பெயர் அரிசி என்றும், ஒரு கர்னாடகன் அதற்குப் பெயர் அக்கி என்றும், ஸம்ஸ்கிருதம் தெரிந்த பண்டிதர் ஒருவர் அதற்குப் பெயர் தண்டுலம் என்றும், சொன்னால் உங்களுக்கு என்ன பாதகம்?

ப:— பாதகமில்லை தான்.

ம:— நாமங்கள் என்பது பதார்த்தத்தின் ஸ்வரூபத்தில் சேராத பாஹ்யமான அம்சங்கள் என்று தெரியவில்லையா? நாமரூபமயமான பிரபஞ்சத்தில் வியவஹார விஷயத்தில் அந்த நாமங்களுக்கு உபயோகம் இருக்கலாம். அதேமாதிரி, ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தா என்கிற லக்ஷணமிருந்ததேயானால், சிவன் என்று சொன்னால் என்ன, விஷ்ணு என்றால் என்ன, தேவி என்று கூப்பிட்டால் தான் என்ன? பெயர்கள் வித்யாஸப்பட்டாலும், லக்ஷ்யமாயிருக்கிற பதார்த்தம் ஒன்றுதானே. கன்னடம்; ஸம்ஸ்கிருதம் தெரியாத தமிழன் அரிசி என்றுதான் சொல்லவேண்டும், அக்கி என்றாவது தண்டுலம் என்றாவது ஒருக்காலும் பெயர் கிடைக்கவே கிடையாதென்று மிகவும் உறுதியாய்ச் சொல்வான். அவனுக்கு பழக்கமுள்ள தமிழ் பாஷையில் அந்தப் பெயர்கள் கிடையாதினால், அவன் ஸம்பந்தப்பட்டமட்டில் அவன் சொல்வது ஸரியே. ஆலோசனை செய்து செய்து பதார்த்தத்திலிருந்து பெயரைப் பிரித்துப் பார்க்கக் கற்றுக்கொள்ளும்வரை, அவனுக்கு அப்பெயரே அப்பதார்த்தமாகும். அப்பெயரில்லை என்ன நீங்கள் சொன்னால், அப் பதார்த்தையே மறுக்கிறீர்களென்று நினைப்பான். ஈசுவர தத்வத்திலிருந்து ஒவ்வொரு நாமத்தையும் ரூபத்தையும் பிரித்துப் பார்க்க சக்தியில்லாத பக்தன் தான் சண்டைக்கு வருவான். அவன் மனோநிலை[?] அது ஸரிதான். ஆனால் ஈசுவ[?] மான நாமரூபங்களுக்கும் [illegible] குக்கு எட்டாத ஸ்வரூபத்தோடு கூடிய [illegible] வனைக் குறிக்கவே நாமங்கள் ஸாதனங்களாகின்றன, அபரிச்சின்னமாயிருக்கிற ஈசுவர தத்வத்தைப் பரிச்சின்னமாக்கிக் காட்ட உபயோகப்படுவதே ரூபம், என்று உணர்ந்திருக்கிற உத்தம பக்தனுக்கு இவன் எவ்வளவோ கீழேதான்.

---

உ

ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

## ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

மூலம் நாகரத்திலும், தமிழிலும்,

ஸ்ரீமான் G.V. கணேசய்யர், B.A., B.L.

எழுதிய தமிழுரையுடனும், விசேஷ குறிப்புகளுடனும் கூடியது.

ஸ்ரீ வித்யை, ஸ்ரீ பாஸ்கராராயருடைய சரித்திரம், ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷா ச்லோகங்கள் முதலியன அடங்கியவை.

டிம்மி $\frac{1}{8}$ அளவில் சுமார் 1000 பக்கங்கள் கொண்டது. முழு காலிகோ பயின்டு.

ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர், ஸ்ரீ சக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ 4.] [தபால் V. P. P. சிலவு தனி.

---

## மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.

### "கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

தபால் சிலவு வேறு] [விலை அணா 0 8 0

---



145

# வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ, சர்மா.)

அஸம்பத்தப்ரலாபம்!! பிராமணர் பஞ்சமரை தாழ்மையாக நடத்தியதே இந்த எதிர்ப்பிற்கு காரணம். என்று கூறி பார்த்தசாரதி கோயிலை திறந்து விட்டால் எனது எல்லா கார்யமும் முடிந்ததென ராஜாஜி கூறுகிறார் மிக மோசமான காலத்தில் தான் ஸம்பந்தமின்றி பேசுவது பழக்கம்!! காந்திஜி பட்டினி போல் இதை கருதி உடனே ஸகல பிராமணரும் இணங்குவர் என்று எண்ணினால் அளவு கடந்து தன்னை மதித்த வராவர்! எந்த பிராமணரும் இதற்கு ஏமாறமாட்டார்!

மேனாட்டு பித்து போகாதா?:—யார் எதை எடுத்தாலும் மேனாடு! மேனாடு!! இந்திய வைத்ய கலாசாலை தலைவர் மேனாட்டு வைத்யர் இலவசமாக ஸேவை செய்வதாக போற்றுகிறார். வைத்யம் ஜீவனார்த்தம் ஏற்பட்டதல்ல! அப்படி ஜீவிப்பவர் அன்னம் புஜிக்க தக்கதல்ல! என்பது தர்ம நூல் துணிபு!! மேனாட்டு ஸம்பந்தமும் கஷ்டமும் பஞ்சமும் ஏற்படுவதற்கு முன் வரை, இன்றும் சில இடத்தில் வைத்யம் இலவசமே!

ஏதோ ஓர் சக்தி வேலை செய்கிறது!! காங்கிரஸ் பந்தல் வாசற்படி புயலால் வீழ்ந்தது! கடுஞ் ஜ்வரத்துடன் வந்த தலைவர் தலைமை வஹிக்க முடியாமல் போயிற்று!! அவருக்காக தலைமை வஹித்தவரும் வீழ்ந்து எலும்பு முறிந்து படுத்திருக்கிறார்!! காந்திஜியும் பட்டிணியாலங்கு வர முடியவில்லை! என்ன ஹேது!!

[illegible] சேர்ந்த கக்ஷி எப்படி? தற்சமயப் [illegible] ஓர் வைஷ்ணவ ஸபையில் [illegible] பேனாட்டில் கடவுள் பக்தி குறைந்ததால் தான் சண்டை ஓயவில்லை என்றார்!! இவர் சேர்ந்திருக்கும் காங்க்ரஸ் கக்ஷியில் தைவ பக்தி உள்ளவர் எத்தனை பேர்?

வேறு புருஷனில்லையா? சென்னையில் ஓர் கல்வி ஸபை கூடுகிறது. அதற்கு ஓர் பெண்ணைத் தலைவியாக தேர்ந்தெடுத்தது தற்கால கல்வியின் போக்கை காட்டுகிறது!! காலத்தின் போக்கோ இது?

மற்றவரும் கவனிப்பாரா? சேலத்தில் ஹிந்துமதபரிபாலனசபையினர் செய்கையை கண்டித்து ஓர் ஸபை கூடிற்று. தீவ்ரமாக ஒவ்வோர் ஆலயத்திலும் தங்கள் ஆக்ஷியை நிலைநாட்டி வருகின்றனர். பின்னர் பஞ்சமருக்கு விட ஸௌகர்யமாக இருக்கும். ஆதலால் கூடியவரை நாம் கண்டித்து வருவோம். பயன் பரமன் செயல்!!

இரண்டுந் தவறே! வடநாட்டிலே ஓர் மகமதிய பத்திரிகை ஸாமாக்களெனும் மதகுருவைக் கண்டித்தெழுதிற்று! ஆத்திரங் கொண்ட இரு மகம்மதியர் ஆசிரியரைக் கொன்றனர். நமது மதத்தையும் தலைவரையும் தாக்கும் பத்ரிகைகள் பல! ஆனால் அத்தகைய முரட்டு மதாபிமானிகள் நம்மிடை இல்லை. ஸஹநமும் அளவு கடந்தது.

குருவிற்குமிஞ்சிய சீடன்!! திருமங்கல[?] காங்கிரஸ் ஸபை ஆலயங்களுக்கும் வரி போடும்படி சிபார்சு செய்கிறது! இப்படி பொறுப்பில்லாமல் நடக்கும் மேதாவிகள் உள்ளவரை நாட்டிற்கேது நலம்?

காலத்திற்கேற்ற புத்தி? போராத வேளையில்தான் பல பல எண்ணங்கள் தோன்றும்! பாம்பேயில் ஸாமுத்ரிகா லக்ஷண ஜோஸ்யர் பலத்துவருகின்றனர்!! அது போதாமல் ஓர் பசு, கார்யம் ஆகுமா ஆகாதா என்பதற்கு தலையை அசைத்து பதில் கூறுகிறதாம்! ஓர் கேள்விக்கு அரை அணா தக்ஷிணையாம்.

பாடபேயும் கற்றதா? சென்னை மந்திரிகளிடம் பாம்பே அஸத் விஷயத்தை நன்கு கற்றது போலும்!! தீண்டாதாரை விலக்கினால் சிக்ஷிக்க ஓர் சட்டம் செய்கிறதாம்!

வகுப்புவாதப்பேய்!! எது போகவேண்டுமென்று அடிக்கடி [illegible] சொல்லப்படுகிறதோ அதை தான் அதிகம் வற்புறுத்துவது ஸஹஜமாக இருக்கிறது!! எந்தசட்டஸபையிலும் என் ஜாதிக்கு வேலை கொடு என்ற கிளர்ச்சியே அதிகம்!! ஜாதிவாரி வேலையளிக்கும்போது தாழ்ந்தவரைத் தூக்கிவிட யோக்யதையும் குறைக்கப்படுகிறது!! யோக்யதை உள்ளவருக்கே வேலை என்று கூற எவருக்கும் தைர்யமில்லை.

# கும்பகோணம் வர்த்தமானம்.

(நமது விசேஷ நிருபர்)

கும்பகோணம், மார் 21உ

திருக்கல்யாண உத்ஸவம்:— வழக்கப்படி ஸ்ரீ சக்கிரபாணி ஸ்வாமிக்கு இவ்வருடம் திருக்கல்யாண உற்சவம் நடந்தது. சிறப்பாக நேற்று முத்து பல்லக்கில் ஊர்வலமும் நடந்தது. இந்த பல்லக்கு உபயத்தை இந்நகர் ஸ்ரீமான்கள் டி. பி. சாம்பமூர்த்தி ஐயரும், கே. ராமஸ்வாமி ஐயங்காரும் விசேஷ முயற்சியால் நடத்தி வைத்தனர். நாதஸ்வர வித்வான்கள் தங்கள் கானங்களை உற்சவத்தில் செய்தும் இன்புறச்செய்தனர்.

## திரிபுரி காங்கிரஸ்.

இதற்குச் சென்று வந்த அட்வோகேட்டு ஸ்ரீமான் சி. எல். ஆராமுதன் 19உ மாலையில் காந்தி பார்க்கில் ஒரு ப்ரசங்கம் செய்தார் அவர் திரிபுரியில் காங்கிரஸ் நடந்த வைபவத்தையும், தேசீய உணர்ச்சி பெருகி இருந்த பிரபாவத்தையும் விளக்கிக்கூறினார். தஞ்சை ஸ்ரீமான் பூவராக ஐயங்கார்— விற்பனை வரியின் அவசியத்தை வற்புறுத்திப் பேசி அதை ஆதரிக்க வேணுமென்று கூறினார். ஆதரவில்லாமல் போனால், அதிருப்தி இருக்குமானால் சட்ட சபையை விட்டு வெளிவருவதாய் அவர் சொன்னார்.

## புளியமரத்திலிருந்து வீழ்ந்தார்.

தாராசுரத்தில் ஒரு புளிய மரத்திலிருந்து ஸ்ரீமான் ஆராமுதன் என்பவர் கீழேவிழுந்து பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரி சிகிச்சைக்கு கொண்டு வரப்பட்டார். அவர் காலையில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டும்— மாலைவரையில் ஆஸ்பத்திரியில் தக்கவாறு கவனித்துச்சிகிச்சை செய்யப்படவில்லை என்று புகார் செய்யப்பட்டது. ஆயினும், மாலையில் அவருக்கு சிகிச்சை செய்யப்பட்டதென்றும் காலை முதல் "பார்வையில்" வைத்திருந்ததாய் ரிகார்டில் பதிவாயிற்றென்றும், கூறப்படுகிறது. உடனுக்குடன் விபத்துக்களுக்கு ஆளானவர்களை கவனிப்பதில்லையானால் சாதாரண வியாதியஸ்தர்களின் கதி என்ன? ஆஸ்பத்திரியில் குறிப்பிட்ட காலத்தில் வியாதியஸ்தர்களை கவனிக்க இருப்பதே இல்லை என்ற புகார் பலமாக நகரில் நீண்ட காலமாய் இருந்து வருகிறது.

## முனிஸிபாலிடியில் தீர்மானங்கள்

நாளது 23உ கூடும் முனிஸிபல் கூட்டத் தண்ணீர் சாக்கடை வரி உயர்வை ஒத்திவைக்கவேண்டும் என்று கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஸ்ரீமான் கே. ஆர். எம். எஸ் சொக்கலிங்கம் செட்டியாரும், விற்பனை வரி விதிப்பை தள்ளி விடும்படி கவுன்ஸில் பிரதம மந்திரியை கேட்டுக்கொள்வதாக ஸ்ரீமான் S. P. மதுரைவீரன் பிள்ளை கொண்டு வந்த தீர்மானமும் ஆலோசனைக்கு வருமென குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த தீர்மானங்கள் இரண்டும் கவுன்ஸிலின் முந்திய கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்டது. ஆனால் காங்கிரஸ் கக்ஷியின் அனுமதி பெற்ற தீர்மானங்களாகும். இக்கூட்டத்தில் இத்தீர்மானங்கள் என்ன கதியாகும் என்பதைப்பார்ப்போம்!

## ஸ்ரீசரஸ்வதி பாடசாலை தினம்,

இதன் கொண்டாட்டம் 19உ மாலையில் இந்நகர் இம்பீரியல் பாங்கு ஏஜண்டு ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி அய்யரின் மனைவி ஸ்ரீமதி பொன்னம்மாள் தலைமையில் நடைபெற்றது. பாடசாலை சிறுமிகள் மீராபாய் நாடகத்தை நன்றாக நடித்தனர். ந. நி

## "பிராம்மணர்களாக முயற்சிப்போம்"

சென்னை கல்வி மந்திரி கனம் வர்க்கீ பச்சையப்பன் காலேஜ் ஞாபகார்த்தக் கொண்டாட்டத்தில் பேசுகையில் பின் வருமாறு சொன்னார்:—

"இந்தப் பிராம்மண ஸர்க்கார், பிராம்மணரல்லாதாரைச் சேர்ந்த இந்த காலேஜுக்கு தாராளமாக உதவி புரிகின்றனர் இந்த ஸர்க்காரை பிராம்மண ஸர்க்காரென்று யாராவது நினைத்தால் கீதையில் கிருஷ்ண பெருமான் உபதேசித்ததற்கு ஏற்றபடி அதன் அர்த்தம் கொள்ளப்பட வேண்டும்.

சிந்தனையிலும், பேசுவதிலும், நடைமுறையிலும், நாம்யாவரும் பிராம்மணர்களாவதற்கு முயற்சி செய்வோம்"

## விற்பனை வரி.

### மந்திரியின் உறுதி.

சென்னை கவர்ன்மெண்டார் விதிக்க உத்தேசிக்கும் ஸாமான் விற்பனை வரியைப்பற்றி எங்கும் ஆக்ஷேபம் வலுத்திருக்கிறது.

சட்டஸபையில் கனம் பிரதம மந்திரி இந்த வரியைப்பற்றிப் பேசுகையில் "கிராமந்திர பாமர ஜனங்களின் நன்மையே காங்கிரஸ் மந்திரிகளின் பிரதான நோக்கமென்றும், அதற்காகப் பட்டண வாஸிகளுக்கு வரி விதிப்பது நியாயமென்றும் எவ்வளவுபெரிய எதிர்ப்பு ஏற்பட்டாலும் இந்த வரிபோடப்பட்டுத்தீருமென்றும் இதனால் தாம் மந்திரி பதவியை இழக்க நேர்ந்தாலும் தயாராக இருப்பதாகவும் சொன்னார்.

---

ப்ரும்மஸ்ரீ குகதாஸ் S. V. நடராஜய்யர் பிரசுரங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| அத்யாத்மயோகம் or ஆத்மபயிற்சி ராப்பர் | 2 | 8 | 0 |
| காலிகோ | 3 | 0 | 0 |
| சுப்ரமண்ய ப்ரஸன்ன மாலாமந்த்ரம் | 0 | 2 | 0 |
| ஸ்ரீ நாரதபக்தி ஸூத்ரம் | 0 | 12 | 0 |

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்,



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे॥

ஆர்யதர்மம்
பகுதான்யஞூ பங்குனிமீ 10உ

## பொருத்த மற்ற பேச்சு.

சென்னை பிரதம மந்திரி கனம் ராஜகோபாலாசாரியர் சில தினங்களுக்கு முன் திரிபுரா காங்கிரஸ் நிகழ்ச்சிகளைப்பற்றிச் செய்த பிரஸங்கத்தினிடையில், சென்னை மாகாண வகுப்புத்வேஷ நிலைமையையும் ஹிந்தி எதிர்ப்புக் காரணத்தையும், அதைத்தடுக்க வேண்டிய உபாயத்தையும் பற்றிப்பேசியிருப்பது யாவருக்கும் ஆச்சர்யத்தை விளைத்திருக்கும். ராஜ தந்திரி யென்றும், ஸாமர்த்யசாலி யென்றும் புகழப்பட்டு வரும் கனம் பிரதம மந்திரி, பொறுப்புள்ள ஒரு ஸர்க்கார் தலைமைப்பதவியை வஹித்து வருகையில் பிறருக்கு தீங்கு விளைவிப்பதாயும், பொருத்த மற்றதாயுமுள்ள அபிப்பிராயங்களை வெளிப்படுத்திப்பேசினால் இதை விட ஆச்சர்யமானதும், வருந்தத்தக்கதுமான விஷயம் வேறு என்ன இருக்க முடியும்?

கனம் மந்திரி பதவியேற்றது முதல், அதிலும் கட்டாய ஹிந்தியை ஏற்படுத்தியது முதல் இம்மாகாணத்தில் பிராம்மண நிந்தை அதிகரித்துவிட்டதென்பதென்னவோ உண்மை தான். இந்த த்வேஷத்திற்குக் காரணமென்னவென்பதும் ரஹஸ்யமானதன்று.

ஹிந்தி எதிர்ப்புக்கு ராஜீய நோக்கமே காரணமென்றும் தமது "ராஜீய எதிரி"களின் கட்டுப்பாடான விஷமமே இம்மாகாணத்தில் அமளி ஏற்பட்டதற்கு உண்மையான காரணமென்றும் கனம் பிரதம மந்திரி பல தடவைகளில் பஹிரங்கமாகப் பேசியிருக்கிறார். அப்போதெல்லாம் வகுப்புத்வேஷத்திற்கு, தீண்டாமையோ ஆலயப்ரவேச உரிமையின்மையோ காரணமென்று அவர் சொல்லவில்லை. அப்படியிருக்க இப்போது திடீரென ஹிந்தி எதிர்ப்புக்கு வேறு ஒரு காரணத்தையும், அதை நிவர்த்திப்பதற்கு புதிய உபாயமொன்றையும் சொல்லுகிறார். சென்னை மாகாணத்தில் பிராம்மண நிந்தை அதிகரிப்பதற்கு கட்டாய ஹிந்தி காரணமல்லவென்றும், ஆலயப்ரவேச உரிமையில்லாததே உண்மையான காரணமென்றும், ஆதலால் திருவல்லிக்கேணி பார்த்தஸாரதி கோவிலையாவது தீண்டாதாருக்குத் திறந்து விட்டால் ஹிந்தி எதிர்ப்பும், பிராம்மண நிந்தையும் அடங்கி விடுமென்றும், பிராம்மணர்கள் உடனே இதைக் கவனிக்க வேண்டுமென்றும் கனம் மந்திரி கூறுகிறார். இது எட்டிக்கிட்டபோட்டியாகப் பேசப்பட்டுவிதன் [illegible] ஒரு வழியிலும் இதில் உண்மையோ, பொருத்தமோ கிடையாதென்பது விவேகிகளுக்குத் தெரியாததே.

அடங்கியிருந்த பிராம்மண நிந்தையானது கட்டாய ஹிந்தியால்தான் கிளைத்துவிட்டதென்றும், இதற்கு பிரதமமந்திரியே காரணமென்றும் பிராம்மண ஸமூகத்தில் சிலர் மந்திரிமீது குற்றம்சொன்னார்களாம். இதில் மந்திரிக்குக் கோபம் வந்துவிட்டது. பிராம்மணர்கள்; தீண்டாமையும் ஆலயப் பிரவேச எதிர்ப்பும் பாராட்டுவதே அவர்கள் நிட்டப்படுவதற்குக் காரணமென்று கனம் மந்திரி திருப்பிப் பாடிவிட்டார். உண்மையில் ஹிந்தி எதிர்ப்புக்கும், ஆலயப்பிரவேசத்திற்கும் ஸம்பந்தம் உண்டா? ஹிந்தி எதிர்ப்புக்காரர்கள் ஆலயப் பிரவேச உரிமையில்லாததாலேயே அந்தக்கிளர்ச்சியில் இறங்கியிருப்பதாக எங்கும் சொல்லக்காணோம். தமிழ்ப் பாஷையைப் பாதுகாக்கவே ஹிந்தி எதிர்ப்புச்செய்வதாக அவர்கள் கூறுகிறார்கள். அப்படியிருக்க கனம் மந்திரி என்ன ஆதாரத்தைக் கொண்டு பேசினார்? மேலும் ஹிந்தி எதிர்ப்பில் ஸம்பந்தப்பட்டவர்கள் பெரும்பாலும் ஜாதி ஹிந்துக்களான பிராம்மணரல்லாதார்களே. ஆலயப்பிரவேசமோ தீண்டாதாரைப்பற்றியது. தீண்டாதார் ஹிந்தி எதிர்ப்பில் அதிகம் ஸம்பந்தப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே ஹிந்தி எதிர்ப்புக்கும், ஆலயப் பிரவேசத்திற்கும் கார்ய காரணபாவம் கற்பித்து கனம் மந்திரி பேசியது நகைப்புக்கு இடமாயிருக்கிறது.

மேலும், சென்னை மாகாணத்தில் ஜனஸங்கியையிலும், வோட்டர்களிலும் மிக மிகப் பெரும்பாலோராயிருப்பவர் பிராம்மணரல்லாதவர்களேயாவர். அவர்கள் கனம் பிரதமமந்திரியையும், அவருடைய கக்ஷியையும் ஆதரித்து வோட் கொடுத்திருப்பதிலிருந்து வகுப்புவாதப் பிசாசு துரத்தியடிக்கப்பட்டு விட்டதாக மந்திரிகளே பேசிவருகிறார்கள்? மலையாளத்தில் ஆலயப்பிரவேசச் சட்டமும் செய்தாகிவிட்டது. மற்ற இடங்களிலும் செய்யப்படப்போகிறது. மேலும் பிராம்மணர்களைவிட பிராமணரல்லாதாரே ஆலயப்பிரவேசத்தை அதிகம் எதிர்ப்பதாயும் அந்த எதிர்ப்பை ஸமாளிப்பது ஸாமான்யமல்லவென்றும் கனம் பிரதமமந்திரி, கனம் ராஜன் கனம் ரெட்டிபோன்ற அநேக மந்திரிகள் சட்டஸபையிலேயே கூறியிருக்கிறார்கள். மேலும் முஸ்லீம்களும் ஹிந்தி எதிர்ப்பில் ஏராளமாகச் சேர்ந்திருக்கிறார்கள். இவர்கள், தீண்டாதாருக்கு ஆலயப்பிரவேச உரிமை வாங்கித்தரவே இப்படிச் செய்கிறார்களென்று கனம் மந்திரி கூறமுடியுமா? முஸ்லீம்கள் ஸ்வப்பிரயோஜனத்தைக் கருதி மந்திரி ஸபையை எதிர்ப்பதுபோலவே சில, பிராமணரல்லாதாரும் மந்திரிஸபையை எதிர்க்கிறார்களென்பதே உண்மை. ஆலயப்பிரவேசம் கொடுத்துவிட்டால் ஹிந்தி எதிர்ப்பும், பிராம்மண நிந்தையும் மறைந்துவிடுமென்று கனம் மந்திரி நம்புவது ஸ்வப்பமா, உண்மையாமென்று கேட்கிறோம். ஆலயப்பிரவேசம் கொடுத்துவிட்டால் பிறகு வேறு ஒன்றை அவர்கள் பிடித்துக்கொண்டு மந்திரி ஸபையைத் தாக்கமாட்டார்களா? விற்பனை வரிக்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறதே! இதுவும் ஆலயப்பிரவேசமின்மையால் தானென்று கனம் மந்திரி சாதிப்பாரோ! ஹிந்தி எதிர்ப்புக்காக பிராம்மணர்கள் கோவிலைப் பலியிடவேண்டுமென்று கூறும் கனம் மந்திரி, விற்பனை வரி எதிர்ப்புக்காக பிராம்மணர்கள் எதைத் த்யாகம் செய்ய வேண்டுமென்று நாளைக்குக் கேட்பாரோ தெரியவில்லை. மந்திரிஸபை செய்யும் தவறுகளுக்கெல்லாம் பிராம்மண ஸமூகத்தைக் காவுயாக்கும் புத்திபோக்கு என்னவென்பது நமக்கு விளங்கவில்லை. இது என்ன தந்திரமோ? முன்பின் விருத்தமாயும் அர்த்தமற்றதாயும் பொருத்தமற்றதாயும் உள்ள முறையில் கனம் மந்திரி இவ்வாறு பேச முன்வந்திருப்பதைப் பார்த்து அவருடைய நிலைமைக்குப் பரிதபிக்கிறோம்.

## குறிப்புகள்.

### கிறிஸ்தவர் கோவிலில் ஸமத்வமுண்டா?

சென்னை சட்டஸபையில் எதிர் கக்ஷித் தலைவர்களில் ஒருவராக விளங்கும் ஸர். பன்னீர்ச்செல்வத்தின் வாதங்கள் ஆத்திரக்காரனுடைய பேச்சுக்களுக்கு ஸமமாகவே இருந்து வருகின்றன. காங்கிரஸ் மந்திரி ஸபையிடமிருந்தும் அஸூயையாலும், வயிற்றெரிச்சலாலும் அவர் சில ஸமயங்களில் தாறுமாறாகப்பேசி விடுகிறார்.

சில தினங்களுக்கு முன் முதல் மந்திரியையும் வேறு சில மந்திரிகளையும் "பிராம்மணர்கள்" என்று வகுப்புத்வேஷத்துடன் தாக்கினார். கூ-ம- கூட்டங்களில் வரைமுறையற்றுப்பேசும் தோரணை சட்டஸபையில் ஏற்குமா என்ற நிதானம் கூட அவருக்கு இல்லாமல் போய் விட்டது. சட்டஸபைத் தலைவரின் எச்சரிக்கையின் பேல் தமது குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டுபேசினதின் தனிவார்த்தைகளை வாபீஸ் பெற்றார்.

இச் சமயத்தில் அவர் தமது போக்கை வேறு வழியில் மாற்றிக்கொண்டார். திருவல்லிக்கேணிக் கோவிலையாவது தீண்டாதாருக்குத் திறந்துவிட்டு வகுப்பு வேற்றுமையை முதல் மந்திரி நீக்கவேண்டுமென் [illegible] செல்வம் கோரினார்.

கிறிஸ்தவரான இவருக்கு ஹிந்துக் [illegible] களில் ஸமத்வம் ஏற்படவேண்டுமென்ற கவலை உண்டானதன் காரணம் விநோதமானது. இவர் முதலில் தம் இனத்தாரின் நடத்தையைப் பற்றிக் கவலைப்படட்டுமே. பாதிரிகள் ஸமத்வம் கொடுப்பதாக பாமர ஹிந்துக்களை ஏமாற்றி மதமாற்றம் செய்கிறார்கள். ஆயினும் சர்ச்சுகளில் வகுப்பு பேதம் வெகு கடுமை. ஒவ்வொரு ஜாதிக்கும் தனித்தனியாக இடங்கள். தாழ்ந்தஜாதியாருக்கு ஒதுக்குப்புறந்தான். இந்த வித்யாஸத்தைப்பற்றி கிறிஸ்தவத் தீண்டாதாருக்குள்ளேயே பெரிய கிளர்ச்சி இருந்துவருகிறது. அது இன்னும் தீர்க்கப்படவில்லை இந்த விஷயத்தில் பெரிய மதகுருவின் ஆக்ஞைப்படியே நடக்கவேண்டுமென்று மதகுருக்கள்கள் மழுப்பிவிட்டார்கள். இவ்வளவு ஜாதி வித்யாஸம் பாராட்டும் மதத்தைச் சேர்ந்த ஸர் செல்வம் ஹிந்துக்கோவில்களைப் பற்றிக் கவலைப்பட என்ன அர்ஹதையுண்டு? கிரிஸ்தவ தேவாலயங்களைப்பற்றி ஒரு 'ஆலயப்பிரவேச மசோதா'வை இவர் கொண்டு வந்து நிறைவேற்றிவைத்து ஸமத்வங்கொள்கையை ஸ்தாபிப்பாரா?

### தனிக்கோவில் கட்டும் முயற்சியே சிறந்தது

டில்லியில் பிர்லா ஸஹோதரர்களின் முயற்சியால் தீண்டாதாருக்கு உபயோகமாகும்படி ஓர் கிருஷ்ண பகவான் கோவிலும், புத்தர் கோவிலும் கட்டப்பட்டு சில தினங்களுக்கு முன் காந்திஜியால் திறப்பு விழாவும் நடத்தப்பட்டது. இந்த கிருஷ்ணன் கோவிலானது எந்த ஆகம சாஸ்திர விதிப்படி அமைக்கப்பட்டதென்றும் அங்கு பூஜை முதலியவை எந்த நியமத்தை அநுஸரித்து நடைபெறுகின்றன வென்பதும் நாம் விசாரிக்க வேண்



யதில்லை. இது ஒருபஜனைமடம் போன்றதாகயிருந்த போதிலும் தீண்டாதாருக்கு இது மிகவும் உபயோகமுள்ளதென்பதும், இக்கோவிலின் மூலம் அவர்கள் நல்வழிப்படஹேது வுண்டென்பதும் ஆக்ஷேபிக்க முடியாத விஷயம். தீண்டாதார் உண்மையில் தெய்வ பக்தி பெற்று உயர்ந்த நிலைமையில் வரவேண்டுமானால் அவர்களுக்கு இம்மாதிரி தேவாலயங்களை அமைத்துக் கொடுப்பது மிகவும் அவச்யமென்பதில் ஸந்தேஹமில்லை. இதில் எல்லா வகையான அபிப்பிராயமுள்ள ஹிந்துக்களும் பூர்ண உதவி செய்ய முன் வருவார்கள்.

இதைவிட்டு தகராறுள்ள விஷயத்தில் பிரவேசித்து வீண் கிளர்ச்சியும், மனத்தாங்கலும் உண்டாக்குவது தீண்டாதாருக்குத் தீங்கு செய்வதாகவே ஆகும்.

மேற்படி கோவில் திறப்புக்காலத்தில் காந்திஜி தீண்டாமைக்கு ஹிந்து சாஸ்திரங்களில் ஆதாரம்கிடையாதென்று சொல்லியது அவருடைய பழைய பல்லவியே. இதற்கு பதில் கூறவேண்டிய அவச்யமில்லை.

ஆனால் வர்ணாச்ரம முறை உண்டென்றும், அதில் ஒரு வர்ணத்தாரைவிட மற்றொருவர் தாழ்ந்தவரல்லவென்றும் காந்திஜி கூறுவது ஒருவிதத்தில் ஸரியே. நான்கு ஜாதிகளிலும் அவரவர் தர்மங்களைப்பற்றிய வரையில் அவரவர் உயர்ந்தவரென்பதை சாஸ்திரங்கள் மறுக்கவில்லை. மோக்ஷம்போன்ற பாரலௌகிக சிரேயஸ்களும் நான்கு வகுப்பாருக்கும் அவரவர் கர்மங்களுக்கு ஏற்றபடி கிடைப்பதிலும் பக்ஷபாதம் கிடையாது ஆகவே வர்ணாச்ரம முறையானது ஜாதிச் சண்டைக்காக ஏற்பட்ட பிரிவு என்று பிதற்றுவதற்கு இட [illegible] டில்லியில்போல் மற்ற இடங்களி [illegible] மில்சட்டும் வேலை நடந்தால் [illegible] வலக்கு இயக்க வேகம் குறையு மல்லவா?

## நிலவரிச் சட்டம்.

சென்னை சட்டஸபையில் நிலவரிமான்யப் பிரேரணையின்மீது விவாதம் நடந்த ஸமயத்தில் கனம் ரெவின்யு மந்திரி நிலவரி விஷயமாக மந்திரிஸபை செய்ய உத்தேசிக்கும் முறையைப்பற்றி ஸூசனமாகச் சில விஷயங்களைப் பிரஸ்தாபித்தார். மந்திரிகளின் ஆலோசனை ஒருவாறு முடிவடைந்திருப்பதாயும் கூடிய சீக்கிரத்தில் அதற்குச் சட்ட ஸ்வரூபம் கொடுத்து வெளியிட நிச்சயித்திருப்பதாயும் கனம் மந்திரி அறிவித்தார்

கனம் மந்திரி தமது மசோதா வெளிவரும் காலத்தை திட்டமாக அறிவிக்காமல் "கூடிய சீக்கிரத்தில்" என்றே சொல்லியிருக்கிறார். சென்ற வருஷத்திலும் இப்படியே சொல்லப்பட்டது. ஆயினும் இப்போது சில விவரங்களை கனம் மந்திரி வெளியிட்டிருக்கிறார். நெல் விலைக்கு ஏற்றபடி அவ்வப்போது நிலவரியைநிர்ணயிப்பதென்ற முறை ஸாத்யமில்லையென்றும் அதைக் கையாளப் போவதில்லையென்று நிச்சயமாகச் சொல்லிவிட்டார். மார்ஷ்பாங்க் கமிட்டியின் சிபார்சுப்படி 1914ம் வருஷத்திற்கு முன்னிருந்த வரித்திட்டத்திற்கு திருப்புவதைப் பற்றியும் மந்திரிகள் அவ்வளவாக அங்கீகரிக்கவில்லையென்று தெரிகிறது. ஆனால் நிலவரி முறை நிர்ணயத்தை மந்திரிகள் ஏகதேச உத்திரவினால் செய்யப்போவதில்லையென்றும் ஜனப்பிரதிநிதிகளான சட்டஸபை மெம்பர்களின் அதிகாரத்திற்கே அதை விடப்போவதாயும் மந்திரி கூறினார். மந்திரிகளின் சிபார்சு என்னவென்பது மட்டும் வெளியிடப்படவில்லை.

ஆயினும் கனம் மந்திரியின் பேச்சிலிருந்து ரயித்துக்கள் நம்பிக்கையுடன் இருக்கமுடியுமென்று தோன்றவில்லை. ஏனெனில் ஸர்க்கார் விதிக்க உத்தேசிக்கும் ஸாமான் விற்பனை வரியை ஜனங்கள் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கண்டிஷன் சொல்லியிருக்கிறார். மதுவிலக்கினால் ஏராளமான வருமானம் குறைந்திருக்கிறது. மேலும் நிலவரி மூலம் வருமானம் குறைய ஸம்மதிக்கமுடியாது. ஆகலால் விற்பனை வரிமசோதா நிறைவேறுவதைப் பொறுத்தே நிலவரி விஷயமிருக்குமென்று மந்திரி சொல்லியது ரயித்துக்கு விசேஷ ஏமாற்றத்தையே கொடுக்குமென்பதில் ஸந்தேஹமில்லை.

விற்பனைவரி மசோதாவுக்கு ஆதரவுதேட இது உபாயமென்று மந்திரி நினைத்தார் போலும்! எப்படியும் எந்த வியாஜத்தையும் காட்டாமல் நிலவரி விஷயத்தில் ஸௌகர்யமடைய ரயித்துக்கள் முதல் பாத்யம் பெற்றிருக்கிறார்களென்பதை ஜனப்பிரதிநிதிகளான மந்திரிகள் உணர்வது நியாயமாகும்.

## ஸம்ஸ்கிருத பாஷையின் மேன்மை.

### எல்லா பாஷைகளுக்கும் தாய்.

### கல்வி மந்திரியின் புகழுரை.

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் ஸம்ஸ்கிருத ஸங்கத்தின் ஜூபிளிக்கொண்டாட்டம் 13உ நடந்த போது அதில் தலைமை வகித்த கல்விமந்திரி கனம் வர்க்கி ஸம்ஸ்கிருதபாஷையின் மஹிமையைப்பற்றிப் பேசியதாவது:—

"சரித்ர பூர்வமான ஆராய்ச்சிக்கும், ஸாக்ஷ்யத்திற்கும் ஸம்ஸ்கிருத பாஷை ஒரு பொக்கிஷசாலை போன்றது. சரித்திர ஆராய்ச்சிமாணவர்கள் புராதன ஞானமென்னும் தங்கத்தை இந்தச்சுரங்கத்திலிருந்து ஏராளமாக எடுக்கலாம். 1776ல் ஸர் வில்லியம் ஜோன்ஸ், மேற்றிசை வித்தைகளும், ஞானங்களும் விருத்தியாவதற்கு இந்தப் பெரிய ஸம்ஸ்கிருதபாஷையின்மஹத்வத்தைக்கண்டுபிடித்தார்.
சில இடங்களில் ஸம்ஸ்கிருத பாஷை மீது துரதிருஷ்ட வசமாக விரோத உணர்ச்சி இருந்து வருகிறது. இது வருத்தப்படக்கூடியது. உலகத்திலேயே ஸம்ஸ்கிருதத்திற்கு அபாரமான மஹத்வம் ஏற்பட்டிருக்கிறது. நவீன பாஷைகளை ஸம்ஸ்கிருதமே வளர்த்து வந்திருக்கிறது. தேசம் உன்னத நிலைமையிலிருப்பதற்கு ஸம்ஸ்கிருத பாஷையே காரணம். தாய்பாஷைகள் விருத்தியடைய வேண்டுமானால் ஸம்ஸ்கிருத வார்த்தைகளை அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
ஸம்ஸ்கிருதத்திற்கு நாம்நமது பெருத்த நன்றியைச்செலுத்த வேண்டும்"

## ஹரிகதை.

கும்பகோணம் ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் மடத்தில் பிரம்மஸ்ரீ பட்டம் வெங்கடராம சாஸ்திரிகளவர்களால் நடத்தப்பட்டு வரும் ஸ்ரீ ராமாயண ஹரிகதை வரிசையில் 27—3—39 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு 'ஸ்ரீ ராமஜனனம்' என்ற கதை நடைபெறும் அனைவரும்வந்து கௌரவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

பக்தர்கள்.

## திருவாங்கூரில் மீண்டும் கிளர்ச்சி.

### பல தலைவர்கள் கைதி.

### காந்திஜி எச்சரிக்கை.

திருவாங்கூர் காங்கிரஸ் வாதிகள் 25உ முதல் சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்க தீர்மானித்திருக்கிறதை முன்னிட்டு ஸர்க்கார் இப்போதே பல தலைவர்களை கைதுசெய்து விட்டார்கள்.

ஸ்ரீமான் தாணுப்பிள்ளை, ராமசந்திரன் முதலியவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குக் கொண்டுவரப்படுவார்கள்.

காங்கிரஸின் போக்கைப் பரிஹஸித்தும், கண்டித்தும் ஸர். ஸி. பி. வெளியிட்ட அறிக்கைக்குப் பதிலாக காந்திஜி ஒரு எச்சரிக்கை கொடுத்து ஸர் ஸி. பிக்குப் பதில் கூறியிருக்கிறார்.

## ஹைதராபாத் ஸத்யாக்ரஹம்,

ஹிந்துக்களின் உரிமைக்காக ஆர்யஸமாஜிகள் நடத்திவரும் ஸத்யாக்ரஹத்திற்குப் பல ஊர்களிலிருந்தும் கணக்கற்ற தொண்டர்கள் வந்தவண்ணமாயிருக்கின்றனர்.

இச் சமயத்தில், பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாத்து ஓர் புதிய ராஜீயச் சீர்திருத்தம் செய்யப்போவதாக நைஸாம் அரசர் வெளியிட்டுள்ள அறிக்கை விசேஷமாகக் கருதப்படுகிறது.

## ஆரண்யேச்வரம்

### லக்ஷார்ச்சனை பூர்த்தி வைபவம்,

திருவெண்காட்டிற்கு மேல்புறம் மிக ஸமீபமாயுள்ளதும், ஸமயாசார்யர்களால் பாடல் பெற்றதும் ஆகிய இந்த திவ்ய க்ஷேத்திரத்தில் திருக்கோயில்கொண்டு வீற்றிருக்கும் ஆரண்யஸுந்தரேச்வர ஸ்வாமி ஸமேத ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்பிகைக்குச் சென்ற பல வருஷங்களாக நடந்து வருவதுபோல இவ்வாண்டிலும் ஸ்ரீ மஹா சிவராத்திரி புண்யகாலம் தொடங்கி நடைபெற்றுவந்த லக்ஷார்ச்சனையின் பூர்த்தி வைபவமானது நாளது பஹுதான்யஞூ பங்குனிமீ 4உ வெள்ளிக்கிழமையன்றிரவு நன்கு பூர்த்தியாயிற்று.

அதற்காகப் பல அன்பாது வேண்டுகோளின் பேரில் வழக்கம் போலவே இவ்வருஷமும் இலந்துறை "ஸமரஸ குடீர்" பிரம்மஸ்ரீ சிவாசார்ய கங்கா ஜடேச சர்மா அவர்கள் விஜயம் செய்து ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்பிகைக்கு சந்தனக்காப்புதிவ்யாலங்கார கைங்கர்யத்தை நடத்தி விசேஷமாக அர்ச்சனை முதலிய பூஜைகளை மிகவும் சிறப்பாக நடத்தி நிறைவேற்றி வைத்ததைப்பலரும் கொண்டாடுகிறார்கள்.

தர்சனத்திற்காக வந்திருந்த ப்ராம்மணர் முதலிய ஸமஸ்தமானவர்களுக்கும் பல சித்ரான்னங்கள் முதலிய திவ்யப்ரஸாதங்களின் விநியோகங்களும் நடைபெற்றன.

ஸேவார்த்தி.

## புதிய நாணயங்கள்.

இந்தியாவில் பொய் நாணயங்கள் தயாரிக்கப்படுவதைத் தடுப்பதற்கு புதியவகை ரூபாய்களை வெளியிட பம்பாய் நாணயச் சாலையினர் யோஜித்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் விஷேர்மைத் தயாரிப்பது சற்று சிக்கலானதாகவிருக்கும். இது சம்பந்தமான யோஜனை முதன்முதலில் லண்டன் நாணயச் சாலையில் உதித்தது. புதிய நாணயங்கள் இந்தியாவிற்கு இன்னும் அநுமதிக்கப்படவில்லையாயினும் மோரீஷஸ் ஹாங்காங் முதலிய குடியேற்ற நாடுகளில் ஏற்கனவே செலவணியிலிருந்து வருகின்றன.

புதிய ஆறும் ஜார்ஜ் நாணயங்களைத் தயாரிப்பது ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. புதிய ஒரு அணா காலணாக்கள் ஏற்கனவே உபயோகத்திலிருந்து வருகின்றன. மற்றவை மே மாதத்தில் வெளிவரலாம்.

புதிய இரண்டணா நாணயம் இப்பொழுதுள்ளதுபோல் நிக்கலிலேயே இருக்கும். ஆனால் அமைப்பில் சிறிது மாறுதலுண்டு. எழுத்துக்கள் தெளிவாகத் தெரியும்படி விளிம்புகள் ஏற்பாடு செய்யப்படும். இது சம்பந்தமாக நாணயச்சாலையினர் மன்னர்பிரானின் உத்திரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வருஷம் சர்க்கார் புதிய அரையணாக்களை வெளியிடுவரெனத் தெரிகிறது. சதுர வடிவமான இரண்டணா நிக்கல் நாணயங்களைப்போலவே இவைஇருக்கும். அளவு இன்னும் சிறியதாக இருக்கும். இவைகளின் சாம்பிள்கள் டில்லிக்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

(கே. ஆர். வி.)

## ஆண்டாள் திருக்கல்யாண கேஸ்,

### அப்பீலும் தள்ளப்பட்டது,

கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவிலிலுள்ள ஆண்டாளுக்கும் ஸ்ரீசாரங்கபாணிக்கும் திருக்கல்யாண உத்ஸவம் நடத்த சீனு பட்டர் என்கிற கோவில் பூஜகர் ஒருவர் முயற்சித்தார். டிரஸ்டிகள் இந்தப் புதிய ஏற்பாட்டிற்கு ஸம்மதிக்கவில்லை. அதன்மேல் அந்த பூஜகர் டிரஸ்டிகள்மீது வழக்குத் தொடர்ந்தார். டிரஸ்டிகள் ஒப்பந்தப்படி நடக்கவேண்டுமென்றும், விவாஹத்தைநடத்திக்கொடுக்கவேண்டுமென்றும், நஷ்டஈடு கொடுக்கவேணுமென்றும் பிராதில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு ஏற்கனவே முன்ஸீப் கோர்ட்டில் தள்ளப்பட்டது. வாதி ஸப் கோர்ட்டில் அப்பீல் செய்திருந்தார். ஸப் ஜட்ஜ் ஸ்ரீமான் எம். எஸ். நாராயணஸ்வாமி அய்யரவர்கள் இருதரப்பு வாதங்களையும் கேட்டுவிட்டு சென்ற வியாழக்கிழமையன்று கீழ் கோர்ட் தீர்ப்பை உறுதிசெய்து அப்பீலை செலவு தொகையுடன் தள்ளி பூஜகருக்கு விரோதமாக தீர்ப்புச் சொன்னார். டிரஸ்டிகள் எவ்வித ஒப்பந்தமும் செய்து கொடுக்கவில்லையென்றும் ஆண்டாள் திருக்கல்யாணம் இக் கோயிலில் இதுகாறும் வழக்கத்திலில்லையென்றும், ஆண்டாள் பக்த பிம்பமாகையால், பெருமாளுடன் அவளுக்கு விவாஹம் செய்வது நியாயமில்லையென்றும் வேறு பல நியாயங்களையும் ஜட்ஜ் தமது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு நிருபர்.

## நாகப்பட்டிணத்தில் ஸ்ரீமத் ராமாயண உபன்யாசம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய அநுக்ரஹத்தை முன்னிட்டு நாகை ஹிந்து மதாபிமான ஸங்கத்தின் ஆதரவில் சென்ற 27-2-39 திங்கள்கிழமை தினம் ஆரம்பித்து மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களுடைய சிஷ்யரான மன்னார்குடி வேதமூர்த்தி பிரம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை சுமார் 1 மாதத்தில் பூர்த்தி செய்வதென்ற அபிப்பிராயத்துடன் பிரவசனம் செய்து வருகிறார்கள்.

வேதாத்யயன வைபவத்துடனும் திவ்யமான சாரீர சம்பத்துடனும் சகல வ்யாக்யானங்களையும் கிரமபட்டு பரிசீலனை செய்து அவைகளின் ரஸங்களை நிர்மாணம் செய்தும் தங்கு தடையில்லாத வாக் ஜரியுடன் அவர்கள் செய்யும் பிரவசனமானது ஏராளமான ஜனங்களை ஆஹ்வானம் பண்ணுவது போலிருப்பதுடன் சிரவணம் செய்பவர்களுடைய மனதைப் பரவசமாகச் செய்து வருகிறது. சென்ற குருவாரத்தன்று ஜாபாலி மகரிஷியினுடைய வாக்கின் மூல்யம் அவர்கள் நாஸ்திக மதத்தை பூர்வபக்ஷம் செய்த காலத்தில் ஆஸ்திகர்களுக்குக்கூட சார்வாக மதத்தில் கொஞ்சம் ருசியை உண்டு பண்ணுமோ வென்று தோற்றியது. பிறகு ஸ்ரீ ராமனுக்கு வந்த ஆவேசத்தைப்போல் ஸ்ரீராமச்சந்திரன் மூல்யம் நிரூபணம் செய்யப்படும் சித்தாந்த வாக்யங்களைச்சொல்லிக்கண்டித்த காலத்தில் ஆஸ்திகர்களுக்கு த்ருடமான புத்தி ஏற்படுவதுடன் கொஞ்சம் நாஸ்திக வாதத்தில் அபிருசியுள்ளவர்களுக்கு கூட வேதப்ராமாண்யத்தில் நம்பிக்கை ஏற்படாமலிருக்க முடியாதென்றே தோற்றியது.

ஸ்ரீமத் ராமாயண கதை தெரியாதவர்கள் அநேகமாக இந்தக்காலத்தில் இருக்கமாட்டார்கள். ஆனால் இப்படிப்பட்ட புராணசிரவணங்களின் முக்யமான நோக்கத்தைக் கருதியவர்களாய் ஆங்காங்கு தர்மாதர்மவிவேசனங்கள் செய்து அனுஷ்டானம் செய்யப்பட வேண்டியவைகளை சுட்டிக் காட்டி அழகாகவும் தைர்யமாகவும் சாஸ்திரிகளவர்கள் பிரவசனம் செய்துவருவது மிகவும் கொண்டாடத்தக்கதே. ஸ்திரீதர்மங்கள் க்லானி அடைந்து வரும் இக்காலத்தில் பரதேவதையான பிராட்டியினுடைய அவதார ரஹஸ்யங்களை நிரூபணம்செய்து ஸ்திரீ தர்மங்களை நன்றாக விமர்சம் செய்வது மிகுதியான பிரயோசனத்தை உண்டு பண்ணுமென்பதில் எவ்வித ஆக்ஷேபணையும் இல்லை.

சில மாதங்களுக்கு முன் சாஸ்திரிகளவர்கள் பெங்களூரில் ஸ்ரீமத் ராமாயண பிரவசனம் செய்யும்படி நேர்ந்த காலத்தில் அவ்விடம் சிரவணம் செய்த மஹாஜனங்களால் ஸமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கும் உபசாரப்பத்திரத்தைப் பார்க்க அவர்களுடைய உத்ஸாகமானது எவ்வளவு எல்லைகடந்ததென்றுகாட்டுவதுடன் அந்தப்பத்திரத்தில் அவர்கள் சாஸ்திரிகளவர்களை வேதமூர்த்தி என்று அழைத்திருப்பது மிகவும் ஆமோதிக்கத்தக்கதே.

N. சாம்பசிவ அய்யர்.

## திண்டுக்கல்.

### ஹிந்து தர்ம ஸங்கம்.

நிகழும் 19—3—39-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்ரீ ஜகத்குரு மடத்தில் ஷை சங்கத்தின் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் ப்ரம்ஹஸ்ரீ S. ராமஸ்வாமி ஐயரவர்கள் வக்கீல் அக்ராஸனம் வகித்தார்கள்.

1939-ம் வருஷத்திற்கு ஏழு அங்கத்தினர்களடங்கிய "நிர்வாஹ கமிட்டி" யொன்று யேற்பட்டு ஷை சங்கத்திற்கு ப்ரம்மஸ்ரீ V. R. விச்வநாத ஐயரவர்கள், அட்வகேட் அத்யக்ஷராகவும் ப்ரம்மஸ்ரீ R. பாலஸுப்ரம்ஹண்ய ஐயரவர்கள் கார்யதர்சியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; ப்ரம்ஹஸ்ரீ K. தியாகராஜ தீக்ஷிதரவர்கள், B.A. L.T., "ஆடிட்டரா"க நியமிக்கப்பட்டார்.

வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்தது

R. பாலஸுப்ரமண்யன்,
கார்யதர்சி.

## ஸர் பன்னீர் செல்வத்தின் அஸமயம்

### வார்த்தைகளை வாபீஸ் பெற்றார்.

சென்னை சட்டஸபையில் நிர்வாஹச் செலவு மான்ய விவாதகாலத்தில் ஸர் பன்னீர் செல்வம் மந்திரிஸபை வகுப்பு நோக்கத்துடன் நடப்பதாகக் குற்றம் கூறினார். பிரதம மந்திரியும், ரெவின்யூ மந்திரியும் பிராமணர்களாயிருப்பதால் அவர்கள் கீழுள்ள உத்யோகங்களுக்கும் பிராம்மணர்களே நியமிக்கப்படுவதாயும் சொன்னார்.

இதை கனம் ரவின்யூ மந்திரி [illegible] ஆக்ஷேபித்து கவர்ன்மெ[illegible] மாதிரி தாக்குவது சட்டப்ப[illegible] வென்று தலைவரைக் கேட்டார். மேலு[illegible] ரெவின்யூ மந்திரி பேசுகையில், தம்மையும், கனம் ராஜகோபாலாசாரியரையும், பிராம்மணர்களென்று வர்ணிப்பதைப்பார்த்து அதிசயப்படுவதாயும், தங்களுடைய பிராம்மண்யத்தை ஸர் பன்னீர் செல்வத்திற்குக் கொடுத்துவிடத் தயாரென்றும், இந்த வகுப்புபேத வாதத்தை ஆதாரமாகக்கொண்ட கக்ஷியார் இதுவரையில் பொதுஜனங்களை ஏமாற்றி ஜாலம் செய்துவந்தது இனி பலிக்காதென்றும், சென்ற எலெக்ஷனில் இந்த வகுப்பு வாதம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டதாயும் கூறினார்.

கடைசியாக ஸர் செல்வம் தலைவரின் உத்திரவுப்படி தமது வார்த்தைகளை எவ்வித நிபந்தனையின்றி வாபீஸ் வாங்கிக்கொண்டார்.

## காங்கிரஸ் நிலைமை.

### தலைவர்களின் ஆலோசனை.

காங்கிரஸ் மஹாஸபை முடிந்தும் ஸ்ரீ போஸின் தேகநிலை காரணமாக கார்யக் கமிட்டி இன்னும் ஏற்படவில்லை. காங்கிரஸையும் சட்டஸபை வேலைகளையும் கவனிப்பவர் இப்போது ஒருவருமில்லாமல் ஸ்தம்பித்து நிற்கிறது.

டில்லியில் காந்திஜியுடன் தலைவர்கள் இதை யோஜித்து வருகிறார்கள். சுபாஷ் போஸ் இவ்விஷயத்தில் என்ன செய்யப் போகிறாரென்பது தெரியவில்லை. மற்ற தலைவர்களோடு அவர் எவ்வித ஆலோசனையும் செய்வதாகக் காணோம்.



## கும்பகோணம். ஸம்ஸ்கிருத பாஷாபிவர்தனீ ஸபா.

13—3—39 திங்கள்கிழமை மாலை 5-மணிக்கு ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் மடத்தில் ஸம்ஸ்கிருத பாஷாபிவர்தனீ ஸபையின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சாஸ்திர ரத்னாகரம் பிரம்மஸ்ரீ திருவையார் விசுவநாத சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய பண்டித ராஜ R. V. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள் வித்யாஸாகர மஹோபாத்யாய K. L. வியாஸராய சாஸ்திரிகள், வேப்பத்தூர் வைத்தியநாத சாஸ்திரிகளவர்கள், நடேச சர்மா (டவுன் ஹைஸ்கூல் பண்டிட்), ராமச்சந்திர சாஸ்திரிகள் (பாணாதுறை ஹைஸ்கூல் பண்டிட்) முதலிய பிரபல ஸம்ஸ்கிருதபண்டிதர்களும் ஸ்ரீ M K. வைத்தியநாதய்யர், ஸ்ரீமடம் ஏஜண்ட் ஸ்ரீ K. குப்புஸ்வாமி ஐயர் முதலிய பிரபல வக்கீல்களும் திருவிசநல்லூர் பாடசாலையிலுள்ள வித்யார்த்திகளும் கும்பகோணம் வித்யாஸ்தானங்களிலுள்ள வித்யார்த்திகளும் இதர ஸம்ஸ்கிருதாபிமானிகளுமாக அநேகம் பேர்கள் கூடியிருந்தனர். சாஸ்திரரத்னாகரம் பிரம்மஸ்ரீ திருவையார் விசுவநாத சாஸ்திரிகள் அவர்கள் அக்கிராஸனம் வகித்து ஸம்ஸ்கிருத பாஷையை எப்படி விருத்திசெய்வது என்பதைப்பற்றி ½-மணி நேரம் அழகாக ஸம்ஸ்கிருதத்தில் உபன்யஸித்தார்கள். பிறகு வித்யார்த்தி சிரோமணி P. S. அனந்தராம சாஸ்திரிகளவர்களால் பிரௌட விவாஹ கண்டனம் என்பதைப்பற்றி ஸம்ஸ்கிருதத்தில் எழுதிய வியாஸம் படிக்கப்பட்டது. பிறகு பிரம்மஸ்ரீ [illegible] வைத்தியநாத சாஸ்திரிகளவர்களதை ஆத[illegible] பிரம்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரி[illegible] பேசும்படி கேட்டுக்கொண்டார்[illegible]. அவர்களும் பல சுருதி ஸ்மிருதிகளாலும் லௌகிக யுக்திகளாலும் ருதுமதீ விவாஹத்தை கண்டித்து இப்போது ராஜாங்கத்தில் ருதுமதீ விவாஹம்தான் செய்யவேண்டும், பாலிகா விவாஹம்செய்தால் தண்டனை என்று சட்டம் ஏற்படுத்தி நிர்பந்தம் செய்து வருவதால் அந்த பாபங்களெல்லாம் அரசாங்கத்தை சேர்ந்ததென்றும் ஸாதுக்களுக்கு அதனால் தோஷமேற்படாதென்பது தன் அபிப்ராயமென்றும் எல்லோரும் ஸ்வகர்மானுஷ்டானத்தில் சிரத்தையுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்றும் ஸம்ஸ்கிருதத்தில் அழகாக பேசி ஸ்ரீ உப. வே. R. V. கிருஷ்ணமாசார்யஸ்வாமிகளை பேசும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அவர்களும் தனக்கு ஸ்வபாவமாயுள்ள உத்ஸாஹத்துடன், ஸம்ஸ்கிருத பாஷையில் உபன்யஸிப்பது எல்லாராலும் முடியாது. சாஸ்த்ரக்ஞர்களனேகம் பேர்களிருந்தபோதிலும் ஸம்ஸ்கிருதத்தில் பேசுபவர்கள் சிலரே என்றும் அதற்கு காரணம் பண்டிதர்களிடம் ஸம்ஸ்கிருதத்தில்தான் பேசவேண்டுமென்கிற நியமமில்லாமையினால் தான் என்றும் இனிமேலாவது ஸம்ஸ்கிருதக்ஞர்களிடம் ஸம்ஸ்கிருதத்தில் தான் பேசவேண்டும் என நியமம் ஏற்பட்டால் இம்மாதிரி ஆங்காங்கு பதங்களைத்தேடி கஷ்டப்பட்டு பேசவேண்டியசிரமம் ஏற்படாது, பதங்கள் தானாகவே அவர்களிடம் வந்து சேரும் என்றும், இனியாவது பேசும்போது நிஷ்டா, கர்மணி பிரயோகங்களை அறவே ஒழித்து கர்த்தரி ப்ரயோகங்களிலேயே எவர்கள் வ்யவஹாரம் செய்கிறார்களோ அவர்களே ஸம்ஸ்கிருத பாஷாபிக்ஞர்களென்றும், கர்த்தரி ப்ரயோகங்களில் வ்யவஹரிப்பதுதான் மிகவும் ச்ரமமென்றும், தான் கர்த்தரி ப்ரயோகங்களில் தான் பேசுவது என்று ஒரே நியமம் முன்பு வைத்திருந்ததாகவும், வித்யார்த்திகளோ அல்லது உபாத்தியாயர்களோ சிந்தனை செய்யும் போதும் ப்ரவசனம் செய்யும் போதும் ஸம்ஸ்கிருதத்திலேயே வ்யவஹரித்து வந்தால் மிக்க நலமாக இருக்கும் என்றும், காளிதாஸன் நூல்களை தவறாமல் பண்டிதர்களாயிருந்தபோதிலும் நித்யம்படித்து வரவேண்டும், அவைகளில் மிகவும் நுட்பமான பல விஷயங்கள் அடங்கி இருக்கிறதென்றும், தான் தற்சமயமும் ரகுவம்சம் 9-வது சர்க்கம் படித்துவருவதாயும் இவ்விதம் செய்துவந்தால் அவைகளிலிருந்து பல அனுகூலம் ஏற்படும். இது என் சொந்த அனுபவம் என்றும் இன்னும் பாஷாபிவிருத்திக்கு அனுகூலமான பற்பல விஷயங்களையும் ஸம்ஸ்கிருத பாஷையில் எளிய நடையில் உபன்யஸித்தார்கள்.

பிறகு இராஜாங்க கல்லூரி ஸம்ஸ்கிருத புரொபஸர் வித்யாஸாகர மஹோபாத்யாய K. L. வியாஸராய சாஸ்திரிகளவர்கள் கர்த்தரி ப்ரயோகத்திலேயே வ்யவஹரிப்பது இயலாதது என்றும், ஸபைக்கு வரும் பண்டிதர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி ஒவ்வொரு விஷயங்களை உபன்யஸிக்க வேண்டுமென்றும், லௌகிக விஷயங்களைப்பற்றியே உபன்யஸிப்பது பாஷாபிவ்ருத்திக்கு ஹேது வென்றும் இனி மறுமீட்டிங்கு வரும்போது ஒவ்வொருவரும் வெவ்வேறு விஷயங்களைப் பற்றி உபன்யஸிப்பார்களென்றுதான் நம்புவதாயும் அடுத்த மீட்டிங்கில் வித்யார்த்திகளில் ஒருவர் பூர்வபக்ஷ முறையிலும் மற்றவர் சித்தாந்த முறையிலும் உபன்யஸிக்கவேண்டுமென்றும் ஸம்ஸ்கிருதபாஷையில் சொன்னார்கள். பிறகு பிரம்மஸ்ரீ நடேசசர்மா, பிரம்மஸ்ரீ இராமசந்திர சாஸ்திரிகள் இருவர்களும் பேசியபிறகு ஸ்ரீ M. K. வைத்தியநாத அய்யர் அவர்கள் இச்சபையை ஏற்படுத்தியதற்கு காரணம் ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு இந்தியாவிலோ வெளிநாட்டிலோ பிரயாணம் செய்யுங்கால் ஆங்கில பாஷை பொதுபாஷையாயிருப்பதால் வெளி தேசங்களில் உள்ளவர்களுடன் வ்யவகாரம் செய்ய அப்பாஷையானது ஸாதகமாய் இருப்பதுபோல் இந்தியாவில் உள்ள பண்டிதர்களுக்கும் நம் ஸம்ஸ்கிருத பாஷை பொதுபாஷையாக இருக்க அனுகூலமாய் இருக்குமென கருத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. நான் குருவாயூர் சம்மேளனத்திலும் சென்னை வர்ணாச்ரம சம்மேளனத்திலும் பல தேச பண்டிதர்கள் கூடி ஸம்ஸ்கிருத பாஷையில் வ்யவஹரித்ததை கேட்டு ஆநந்தித்தேன். கடந்த 7, 8 வருடங்களுக்கு முன் சென்னையில் மஹாமஹோபாத்யாய காசி த்ராவிட லக்ஷ்மண சாஸ்திரிகள் அவர்கள் ஸம்ஸ்கிருதத்தில் செய்த உபன்யாசமானது இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. ஆங்கில வித்யார்த்திகள் எவ்விதம் ஆங்கில பாஷையினால் வ்யவஹாரம்செய்து அந்த பாஷையில் குசலர்களாகிறார்களோ அவ்விதம் நம் ஸம்ஸ்கிருதம் பயிலும் வித்யார்த்திகள் ஸம்ஸ்கிருத பாஷையினால் வ்யவஹாரம் செய்து சபை கோழையின்றி ஷை பாஷையில் குசலர்களாகவேண்டும் என்ற கருத்துடனும் இச்சபை ஏற்படுத்தப்பட்டது. இச்சபையின் சார்பாக மாதமிருமுறையாவது மீட்டிங் நடத்தப்படவேண்டும். அடுத்த மீட்டிங்கில் த்ரிபுரா காங்கிரஸைப்பற்றி ஒரு வித்யார்த்தி பூர்வபக்ஷரீதியிலும் மற்றொரு வித்யார்த்தி சித்தாந்த முறையிலும் பேசவேண்டும். பண்டிதராஜ ஸ்ரீ உ.ப.வே. R. V. கிருஷ்ணமாச்சாரியஸ்வாமிகளும் இவ்விதமே ப்ரதி மீட்டிங்கும் வந்திருந்து பண்டிதர்களையும் மாணவர்களையும் தன் உபதேசத்தினால் உற்சாகப்படுத்தவேண்டுமென்று சொன்னார்

## UDIPI MUTTS AND THIER WAYS.

SIR,

Allow me the hospitality of your column to give vent to the feelings of a large number of Hindus in general and Madhwas in particular in the matter of the alleged action of the Udidi Matadhipathis during the visit of the Dewan of Mysore to that place recently.

I read in 'The Hindu' dated 4-3-1939 an article by Sri K. Vyasa Rao under the caption "*Sir Mirza Ismail's visit to Udipi–A unique event*" at page 8 therein.

While we all appreciate the merits and qualities of the Dewan of Mysore, it is distressing to note that the Ashṭamadathipathis there, Religious Heads of our sacred institutions, should have been advised to give an address to him and that he should have been requested to unveil a portrait of a Swami.

Praising a human being 'Narastuti' is unthinkable from the point of view of the status that Their Holinesses occupy in the religious mutts. Their Holinesses are next to God and they are worshipped by all human beings as our Gurus.

Sri Vyasa Rao's appreciation of what took place there is much wounding the susceptibilities of religious men like me. His appreciation cannot be considered to be the view of all the Madhwas. He has placed Their Holinesses on the same par and scale as ordinary men. I am sure no other religionists would agree with him in his appreciation.

R. K. Prasanna Venkatesa Rao.
Srirangam.

கள். பிறகு வித்யார்த்தி M. N. ராஜகோபால சாஸ்திரியால் வந்தனோபசாரம் சொல்லப்பட்ட பிறகு சபை கலைந்தது.

P. S அனந்தராம சாஸ்திரி,
ஸபா காரியதர்சி.

## ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி.

### மந்திரியின் சகோதரருக்குத் தண்டனை.

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி சம்பந்தமாய் இன்று மொத்தம் 11 பேர் கைது செய்யப்பட்டு இரண்டாவது மாகாண மாஜிஸ்டிரேட் முன்பு விசாரிக்கப்பட்டனர். ஷை 11 பேரும் 4 தனித்தனி கோஷ்டிகளாகச் சென்று மறியல் செய்தனர். இதில் மந்திரி கனம் எஸ் ராமநாதனின் சகோதரரான ஸ்ரீ. எஸ. சம்பந்தமும் ஒருவர். மற்ற 10 பேரில் 4 ஸ்திரீகள். மாஜிஸ்டிரேட் மேற்கண்ட 4 ஸ்திரீகளுக்கு 6 மாதம் வெறுங் காவல் தண்டனையும், மற்ற ஆறுபேர்களுக்கு 6 மாதம் கடுங்காவல் தண்டனையும், ஸ்ரீ எஸ். சம்மந்தத்திற்கு 6 மாதம் வெறுங் காவல் தண்டனையும் விதித்தார்.

ந. நி.


பிரும்மஸ்ரீ அருட்கவி ந சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ நகர விமர்சனம். | 0 | 12 | 0 |
| ஸ்ரீ குரு விமர்சனம். | 0 | 5 | 0 |
| வரிவஸ்யா ரஹஸ்யம். | 1 | 0 | 0 |
| ஸ்ரீ லலிதாத்ரிசதீ பாஷ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீவித்யாஸபர்யாபத்ததி | 2 | 0 | 0 |

கிடைக்குமிடம்:— ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

## கும்பகோணம்.

### ஸ்ரீ சக்ரபாணி ஸ்வாமி திருக்கல்யாண வைபவம்.

சென்ற (17—3—39) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு மேல் ஸ்ரீ விஜயவல்லித் தாயாருக்கும், ஸ்ரீசக்ரபாணி ஸ்வாமிக்கும் திருக்கல்யாண மஹோத்ஸவம் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. அன்றிரவு, நமது நகர் வித்கலாவல்லப சஹா பாஷி ப்ரும்ம ஸ்ரீ வாதிராஜ பாகவதர் அவர்கள் கல்யாண மண்டபத்தில் "ஸீதா கல்யாண காலக்ஷேபம்" மிகவும் விமர்சையாக யாவரும் ஆனந்திக்கும்படி நடத்தினர். பாகவதர் அவர்கள் வெளியூர் போயிருந்தபடியால், சக்ரபாணி ஸ்வாமி கோவில் நந்தவன கைங்கர்யத்தின் உதவிக்காக ஏற்கனவே ஏற்பாடான இவரது ஸ்ரீமத் ராமாயண ஸீரிஸ் காலக்ஷேபங்களை மறுபடியும் நாளது சித்திரை மீ ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கிறது. முக்கியமாக ஸ்ரீராகவேந்திர ராயர் அவரது ஸஹ டிரஸ்டிகளும், ஸ்ரீ டி. எஸ் ராஜகோபாலய்யங்கார், எஸ். குப்புசாமி அய்யர், டி. பி. சக்ரபாணி செட்டியார், ரா. கிருஷ்ணய்யர், மற்றுமுள்ள பிரமுகர்கள் அவர்களின் முயற்சியேயாகும்.

சனிக்கிழமை மாலை 6 மணி முதல் 9மணி வரையில் கட்டை கோபாலய்யங்கார் மருமான் சோணு அய்யங்கார் பாட்டும், இரவு நமது நகர் ஸ்ரீமதி சாரதாயகி, ஸ்ரீமதி பட்டு பரதநாட்டியமும், ஞாயிற்றுகிழமை இரவு 7 மணி முதல் 11 வரையில் ஸ்ரீ நாகராஜராவ் அவர்கள் வேணுகானமும், 11 மணிக்கு மேல் 12-30 வரையில் சேலம் வாகவி வெங்கட்டராவ்தாஸ் அவர்களால் "கலியாண தாஸர்" என்னும் திவ்ய சரித்திரமும் விரிவாக உரைக்கப்பட்டது. சகலரும் மகிழ்ந்தனர்.

ம-கா-ஸ்ரீ ச. கோபாலக்ருஷ்ண பட்டாசாரியாரின் சிரத்தையும் ஷை கோவில் டிரஸ்டிகள் முதல்கொண்டு கைங்கர்யபரர்கள் வரையில் உள்ள, உத்ஸாஹமும், ஐக்ய பாவமும் சிலாகிக்கத்தக்கது

ஆர். எஸ். சாரங்கபாணி.

## அயோத்தியில் ஸ்ரீராம நவமி மகோத்ஸவம்.

அயோத்தி ஸ்ரீராமர் கோயிலில் ஸ்ரீ ராம நவமி மகோத்ஸவம் 19-3-39ல் ஆரம்பமாய் 29 3-39ல் சம்பூர்ணமாகும். 21-3-39ல் துவஜாரோஹணமாகும். தினசரி வீதிப்புறப்பாடாய் வாஹனங்களில் எழுந்தருளும் காக்ஷி சேவையும் நடைபெறும். எக்காலத்திலுமே அங்குசெல்லும் யாத்ரீக சேவார்த்திகளுக்கு தங்குமிடம் இலவச ஆகாரம் வசதிகள் கோயில் நிர்வாஹஸ்தர்களால் சிரத்தையுடன் அளிக்கப்படுகிறது. வட தேசங்களில் புஷ்கரம் பிருந்தாவனம் அயோத்தி மூன்று முக்ய ஸ்தலங்களிலேயே மதராஸ் சம்ப்ரதாய முறைப்படி கோயில்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. சமீபத்தில் காலஞ்சென்ற காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அனந்தாசார்ய ஸ்வாமியாலும், வானமாமலை மடாதிபதி ஜீயர் ஸ்வாமியாலும், பம்பேயிலும் நைஸாம் ஸெகந்த்ராபாத்திலும் மதராஸ் ஸம்ப்ரதாயப்படி கோயில்கள் ஏற்படுத்தப்பட்டு ரமணீயமாக விசேஷயேற்பாடுகளும் செய்யப் பட்டிருக்கின்றன. அயோத்தி ஸ்ரீராமர் கோயில் காரியாதிகள் 95 வயதுள்ள ஸ்ரீமதி சிங்கம்மாள் (காலஞ்சென்ற யோகவர ஸ்ரீ பார்த்தசாரதி ஐயங்கார் மனைவி) யால் பக்தி சிரத்தையுடன் கவனிக்கப்பட்டு வருகிறது. அம்மாள் பேரன் ஸ்ரீமான் ஏ. ஜி ஸ்ரீநிவாஸாசாரியார் கோயில் நிர்வாக மானேஜராயிருக்கிறார். ஓ—கி,

## ஆழ்வார் திருநகரி ஸ்ரீமந் மணவாளமாமுனிகள் தீர்த்ததினக் கொண்டாட்டம்.

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ மணவாளமாமுனி கோயிலில் மேற்படி விசேஷக் கொண்டாட்டம் சென்ற துவாதசி யன்று அதி விமர்சையாய் நடைபெற்றது, மிராசுதார் பெரியன் வெங்கடாசாரியாரால் ததீயாராதனை வைபவமும் மிக ரமணீயமாய் செய்து வைக்கப்பட்டன. முதல் நாள் தொடக்க விசேஷமும் அழகாக நடைபெற்றன. இவ்விசேஷ கொண்டாட்டம் ஸ்ரீ ரங்கத்திலும் திருநகரியிலும் மட்டுமே நடப்பது வழக்கமெனச்சொல்லப்படுகிறது. ந. வி. தி.

## சிதம்பரத்தில் ஸ்ரீமத் ராமாயண உபன்னியாஸம்.

இவ்வூர் கீழவீதி வேதபாட சாலையில் பிக்ஷாண்டார் கோவில் ஸ்ரீமத் ராமாயண கதாம்ருத வர்ஷக ப்ரசங்க ரத்னம் வேதமூர்த்தி பிரும்மஸ்ரீ பாகவதகௌஸ்துபம் கோபால பாகவதர் அவர்களால் சென்ற வாரத்தில் ஸ்ரீமத் ராமாயணத்தை சிதம்பரம் மகாமஹோபாத்தியாய சாஸ்திர ரத்னம் வித்வான் பண்டிட் பிரும்ம ஸ்ரீ தண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதாவாகள் முன்னிலையில் ஆரம்பம் செய்யப்பட்டது. மகா வித்வான்களும் மற்றுமுள்ள பொது ஜனங்களும் விஜயம் செய்திருந்தார்கள். பிரும்ம ஸ்ரீ தீக்ஷிதர்வாள் அவர்கள் இம்மாதிரி பிராசீன சம்பிரதாயத்துடனும் வேதாத்திய யனசம்பன்னருகவும் உள்ள பாகவதாளை பார்ப்பதே இப்பொழுது சிரமமாகப் போய்விட்டது என்றும் ஷை பாகவதாவர்கள் வைதிக சிரத்தையும் தெய்வ நம்பிக்கையும் திட சித்தமும் இருப்பதால் தான் ஐந்து வருஷமாக மகா திக்விஜயம் செய்துகொண்டு ஒவ்வொரு இடத்திலேயும் சகல பாமரமக்களுக்கும் தெய்வ நம்பிக்கையும் ஆசாரய பக்தியும் தன் தன் கர்மானுஷ்டானங்களைக் குறைவில்லாமல் நடத்தும்படியும் ஸகல ஜாதி மதஸ்தர்களையும் ஒரு ஸமமாகக் கூட்டி கதாசிரவணம் மூலம் இததனையும் கிரஹித்துக் கொள்ளும்படி பிரசாரம் செய்து வரும் பிரும்ம ஸ்ரீ பாகவதாவர்கள் பகவதாக்ஞையால் இப்படிச் செய்துகொண்டு வருகிறாரே அல்லாது வேறில்லை ஷை பாகவதாவர்களிடத்தில் ஆஸ்திக சமூஹம் நன்றி காட்டக் கடமைப்பட்டிருக்கிறது என்றும் அத்துடன் ஒவ்வொரு இடத்திலும் ஆதாரமாக வேதத்தை எடுத்து காட்டுவது ரொம்பவும் அழகாக இருப்பதோடு காலஞ்சென்ற திருவாதி சதாவதானம் பண்டிட் லக்ஷ்மணாசார்வாளுடைய ஞாபகத்தை உண்டுபண்ணுவதாக இருக்கிறது என்றும் அன்னவரின் குமாரர்களின் பின்பாட்டு வெகு பொருத்தமாகவும் கானம் ரொம்ப நன்றாகவும் இருப்பது அவர்கள் செய்த பாக்கியமென்றும் அன்னவர்கள் சிரஞ்சீவிகளாக இருந்துகொண்டு பகவத் குணத்தையே சொல்லுவார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது என்றும் அவர்கள் கானத்தில் எனக்கு பரம சந்தோஷமென்றும் கூறி சிதம்பரம் வாசிகள் எல்லோரும் ஷை ராமாயணத்தை நன்கு நடத்தி வைப்பார்களென்பதில் சந்தேஹமே இல்லையென்றும் பேசி முடித்ததும்

பிரும்ம ஸ்ரீ பாகவதாவர்கள் எல்லோருக்கும் உபசார வார்த்தை சொல்லி இன்றைய தினம் மகா வித்வான் தீக்ஷிதர்வாள் விஜயம் செய்ததாலேயே இதற்கு ஒரு குறைவும் வராது என்றும் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளவர்களுடைய பரிபூரண அனுக்ரஹத்தால் சென்ற வருஷம் கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் ராமாயண ஸீரியஸ் நடந்ததிலிருந்து ஒன்றும் குறைவு இல்லையென்றும் அவாளனுக்ரஹத்தால்த் தான் இப்படி அநேக தேசங்கள் சஞ்சாரம் செய்துவருவதாகவும் சிதம்பரத்திலேயே லோகா சார்யாள் எந்த வித்தியா சாலையில் கொஞ்ச காலம் தாமதித்தாரோ அப்படிப்பட்ட இடத்தில் இந்த ஸ்ரீமத் ராமாயணம் ஆரம்பமாகியிருப்பதாலேயே யாதொரு குறைவுமில்லாமல் பூர்த்தியாகுமென நிதர்சனமாகத் தெரிய வருகிறது என்றும் பேசி முடித்ததும் எல்லோரும் தங்கள் ஆஸ்தானம் சென்றார்கள்.

அன்றைய தினம் இவ்வூருக்கு விஜயம் செய்திருக்கும் சேந்தமங்கலம் தத்தகிரி ஸ்ரீ அவதூதஸ்வாமிகளவர்களுடைய பரமானந்த சிஷ்யாளான துரீயானந்த ஸ்வாமிகள் விஜயம் செய்து பரம சந்தோஷமடைந்தது குறிப்பிடத்தக்கது. [illegible] ந-கி,

## கெர்பஸ்திரி கொல்லப்பட்டள். புருஷனும் தற்கொலை செய்துகொண்டா.

### தனியே சினிமா சென்றதால் ஏற்பட்ட விபரீதம்.

[நமது விசேஷ நிருபர்.]

திருநெல்வேலி ஜில்லா ஆழ்வார் திருநகரி மேலரத வீதியில் 13 3 39 திங்களன்று இரவு 10 மணி சுமாருக்கு சுமார் 25 வயதுள்ள அருணாசலம் என்ற கோனார் வகுப்பு பையன் தனது மனைவியையும் வெட்டிக் கொன்று தானும் தற்கொலை செய்து கொண்டிருப்பதாக செய்தி பரவவே பலரும் வந்து கூடி விட்டனரெனவும் போலீஸார் வந்து ஜன்னலை பெயர்த்து உள் சென்ற பின் இளம்தம்பதிகள் கோரக்கொலை பரிதாப காட்சியை பலரும் கண்டனர் எனவும் சொல்லப்படுகிறது. தனது மனைவி கர்ப்பமாயிருந்தும் நடத்தை பெசகு காரணமாகவே பரிதாபகாமாக வெட்டிக் கொன்று தானும் தூக்கிட்டு கொண்டு இறந்து விட்டதாய் சொல்லப்படுகிறது. ஸ்ரீவைகுண்டத்தில் நடைபெறும் சினிமாவுக்கு புருஷன் அனுமதியின்றி அடிக்கடி சென்றுவிடுவதான தகாரே கொலையில் வந்து முடிந்ததெனவும் சொல்லப்படுகிறது. வயிற்றிற்குள்ளிருக்கும் சிசுவை கவனிக்க ஏற்பாடு செய்வதாயின் ஓர் உயிராவது தப்பலாமென சொல்லப்படுகிறது.

## மனைவியை அடிக்கலாமா?

### ஹைகோர்ட் ஜட்ஜியின் கருத்து.

சென்னை ஹை கோர்ட்டில் [illegible] ஸ்திரீ ஒருவள் தனது புருஷன் [illegible] கொடுமையாக நடத்துவதாகப் பு[illegible] கேஸ் தொடர்ந்தாள்.

அவள் கூறிய விஷயங்கள் கொடுமைகளென்று சொல்லக்கூடியவையல்லவென்று கீழ் கோர்ட்டுகள் தீர்ப்புக்கூறின.

ஹைகோர்ட்டில் ஜஸ்டிஸ் கிருஷ்ணஸாமி அய்யங்கார் அவர்கள் தீர்ப்புக் கூறுகையில், "உயிருக்கோ அல்லது சரீரங்களுக்கோ அபாயம் வரக்கூடியபடி பலாத்காரம் செய்வது கொடுமையாகக் கருதப்படலாமென்றும்,

எப்போதாவது ஒரு ஸமயம் மனைவியை அடிப்பது சட்டப்படி கொடுமையாகாது

என்றும், ஆயினும் தற்கால புத்திப்போக்குக்குத் தக்கபடியே கொடுமை எவையென்பதை நிச்சயிக்கவேண்டுமென்றும், தொடர்ச்சியாகக் கொடுமை செய்வது குற்றமென்றும் குறிப்பிட்டார்.



151

## திருவிளக்கு.

ப. ரெ. திருமலை அய்யங்கார்.

பூவின்கிழத்தி பொன்னியான இலக்குமி.
இன்னமுதத் திருமகளைப் போற்றுதார்
[இவ்வவனியில் இல்லை.

பூமகளின் அவதாரமாகிய திருவிளக்கை இப்புவியோர் தொன்றுதொட்டு வழிபட்டு வருவாராயினர். இன்றும் இவ்வழக்கம் உலகெங்கும் உளதென்பது உற்று நோக்குவார்க்குப் புலனாகும்.

விளக்குகளில் பலவகையுண்டு. தகளி விளக்கு, கிளைவிளக்கு, குத்துவிளக்கு, குடவிளக்கு, பட்டை விளக்கு, பாவை விளக்கு என்பன அவைகளிற் சிலவாகும். மண்ணால் முதன் முதல் செய்யப்பட்டது தாளி. பின்னர் இரும்பு, செம்பு, பித்தளை, பொன், வெள்ளி முதலிய உலோகங்களில் விளக்குகள் செய்யப்பட்டன. ஆலயங்களில் பலவித சித்திர வேலைப்பாட்டுடன் தூங்கா விளக்குகள் அழகுற நின்றன. "யவனர் இயற்றிய வினைமாண்பாவை கை ஏந்து ஐ அகல் நிறைய நெய்சொரிந்து" (நெடுநல்வாடை); "பாகை விளக்கில் பருஉச்சுடர் அழல" (முல்லைப் பாட்டு); "நந்தாவிளக்குச் சுடர் நன்மணி காட்டப்பெற்றே" (சீவக சிந்தாமணி) என்ற பழந் தமிழ்நூல் மேற்கோள்களால் பண்டைக் காலத்து பாவை விளக்குகள் செய்வதில் யவனர் சிறந்து விளங்கினர் என்றும், கண்டவர் வியக்குமாறு வேலைப்பாட்டுடன் விளங்கிய விளக்குகளை நம் முன்னோர் அகத்திலும் ஆலயங்களிலும் வைத்து ஏற்றிப் [illegible] வந்தனர் என்றும். பள்ளியறை [illegible]து விளக்குகள் ஏற்றி வைக்கப் [illegible]கனவென்றும் நன்கு தெரிகின்றது. "குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில் மேல் மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலேறி, கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர் மார்பா!" என்றும்; "தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியதூபம் கமழத்துயிலணை மேல் கண்வளரும் மாமான் மகளே!" என்றும் திருப்பாவையில் வருவது காண்க. "ஆறுசெல் வளியினவியா விளக்கமும்" (பரிபாடல் 8.) (மாறுயியங்கும் காற்றுல் நந்தாத விளக்கு) என்றதும் நோக்கற்பாலது.

நந்தமிழ் நாட்டு நாரியர் மாலை மறுகிற்றென்று அறிந்தவளவில் திருவிளக்குகளை ஏற்றுவது புராதனமானதோர் வழக்கம். முதலில் இப் பெண்கள் தங்களை நன்கு அலங்கரித்துக்கொண்டு இல்லத்தில் தூய தோரிடத்தில் விளக்குகளை நன்கு துலக்கி, எண்ணெயிட்டு, திரிசேர்த்து, குங்குமம் பொட்டிட்டு பூப்புனைந்து, நற்றிசை நோக்கி நின்று, தீபமேற்றி அதனை முறைப்படி தொழுது, அருகுள்ளமுதியோர்களைவணங்கி தோத்திரப்பாக்கள்பாடி, அகத்தை அழகுறச் செய்வர். இதனால் மனமுவந்து திரு அங்கேயே தங்கி நிற்பள். விளக்குகளுக்கு வார்ப்பது ஆமணக்கு எண்ணெய். இதன் சேர்த்தி தனித்து எழுதவேண்டியது. இவ் விளக்கை இடைவிடாது தொட்டிலிலிருந்து உபயோகித்து வந்த காரணத்தால் முன்னோர் வேதநூற்பிராயம் வாழ்ந்தனர். துர் நாற்றமுள்ள இதா விளக்குகளை உபயோகிக்க கண்ணொளி பால்யத்திலேயே மங்கி இளஞ் சிறுர்களும் கண்ணாடியின்று ஒன்றும் செய்ய இயலாது தவிக்கின்றனர். முன்னோர் நல்வாழ்க்கையை அங்ஙனேபின்பற்ற எவ்வளவு நன்மை உண்டு. தேசியம் எனவாய்ப்பறை சாற்றுபவர்களும் இதனைக் கவனியாதிருப்பது விந்தையே. இல்லுறை தெய்வங்களை நம்நாட்டுப் பெண்மணிகள் தொழுதுவந்த வெற்றியை பண்டைத் தமிழ் நூல்கள் போற்றுவதைக் கேண்மின்.

"பூந்தொடிமகளிர் சுடர்தலைக் கொளுவி" (குறிஞ்சிப்பாட்டு); "பெண்மகிழ்வுற்ற பிணை நோக்கு மகளிர் நெடுஞ்சுடர் விளக்கங்கொளீஇ நெடு நகரல்லையெல்லா நோயொடு புகுந்து' (மதுரைக் காஞ்சி); "பைந்தொடி மகளிர் பலர் விளக்கெடுப்ப" (மணிமேகலை); "மாலை மணி விளக்கங்காட்டி கொடியிடையார் தாங் கொள்ள" (சிலப்பதிகாரம்).

கோவில்களில் தெய்வங்கட்குப் பூசனை நடக்குங்காலத்துப் பலவகை விளக்குகளை எடுத்துக்காட்டுவது வழக்கம். இதனைத் 'தீபாராத்தி' என்பர். "சுமந்து மாமலர் நீர் சுடர் தூபம் கொண்டு அமர்ந்து வானவர் வானவர் கோனொடும், நமன்றெழும் திருவேங்கடம்" என்பது காண்க. தேவர்களே விளக்கின் வடிவாகப் போந்து இறைவனைக் கண்டின்புறுவாராம். முற்காலத்து வேந்தர்கள் திருக்கோயில்களில் விளக்கிடுவதற்கென்று ஊர்களை வழங்கியுள்ளனர்; நிலங்களையும் கொடுத்துள்ளனர். சிந்தாமணிச் சீவகன் அருகக் கடவுளுக்கு நூறு ஊர்களைச் சேர்ப்பித்தானும். இங்ஙனம் இறையிலியாகக் கொடுக்கப்பெறும் நிலத்திற்கு "விளக்குப்புறம்" என்று பெயர் வழங்கி வந்தது. தசரத மகாராஜன் புதல்வரைப்பெற்ற அன்று விடுத்த கட்டளையை கல்வியிற் பெரிய கம்பர்,

"ஆலயம் புதுக்குக வந்தணாளர்தம் சாலையுஞ் சதுக்கமுஞ் சமைக்க சந்தியும் காலைமாலையுங்கடவுளர்க்கணி, மாலையுந் தீபமும் வழங்குகென்றனன் ஒன்று கூறியுள்ளதைக் கண்டுகளிமின். மருதம் வீற்றிருப்பதைக் குறிக்குங்காலை "தண்டலை மயில் களாடத் தாமரை விளக்கந் தாங்க" என்பர்.

தூயதான விளக்கு அட்டமங்கலம் பொருள்களில் ஒன்று. "நிதியும் நற்சுண்ணமும் நிறைகுட விளக்கமும், மதிமுக மடந்தையர் ஏந்தினர் வந்தே" என்பது நோக்குக. விளக்கு எதிர்ப்படுவது நன்னிமித்தம். "கதிரொளி தீரம் கலசமுடனேந்தி, சதிரிள மங்கையர் தாம் வந்து எதிர் கொள்ள" என்பது நாச்சியார் திருமொழி. விளக்கு அணைதலைக் கண்டாலும் தீயது. உண்ணுங்கால் இரவில் விளக்கு அணையுமாயின் மறு நாள் மாலை வரை பட்டினி கிடந்து விளக்கேற்றி உண்ணல் வேண்டும். விவாஹ காலத்து மாண்புற பலவகை விளக்குகள் ஏற்றி வைப்பார். சுடர் விட்டெரியும் விளக்கினில் நிமித்தம் காண்டலும் உண்டு. விளக்கு தானம்மிகச் சிறந்தது ஒருவருக்குத் திருமணம் முடித்து வைத்தாலும் அல்லது ஒரு குடித்தனம் நிலைக்கச் செய்தாலும் அதனை 'விளக்கேற்றி' வைத்ததாக இன்னும் கூறுவதைக் கேட்கலாம். 'பேய் வாழும் சுடு காட்டைப் பெருக்கித் தள்ளிப் பெரிய விளக்கேற்றிவைத்தால் வீடதாமோ,, என்பது விவேக சிந்தாமணி. வீடும் விளக்குமாக வைத்தவரை என்றும் மறவாது நன்றியுடன் இருத்தல் வேண்டும்.

இந் நன்னாட்டில்' விளக்கு விழா' கொண்டாடுவதுதொன்று தொட்ட வழக்கு. ஐப்பசி திங்கள் வரும் 'தீபாவளி' யே இது. விளக்குகளை வரிசையாக வைத்து எரியவிடும் சிறிய இக் கொண்டாட்டத்தை அறவே அழித்து தூர்க்கந்தமும் அபாயகாமும் வீண் பணச் செலவுமான பட்டாசுகளில் பாழ் படுத்தி வருவது மிகவும் வருந்துதற் குறியது ,தொன்மைமறவேல்' என்றது முதாட்டியின் அரிய வாக்கு.

உலகிற் நன்றாய்த்தெரியும் படி செய்வதைக் 'குன்றின் மேலிட்ட விளக்கு' என்றும், மறைவாக வெளியாகாதபடி செய்வதைக் 'குடத்திலிட்ட விளக்கு' என்றும் கூறுவது மரபு. புற இருளையோட்டும் விளக்கு. மன இருளை மாய்ப்பது அறிவென்னும் விளக்கு. ஞான விளக்காய் நிற்பவர் குருவெனப்படுவர். மருளற்ற தேசிகர் வானுகப்பால் இந்த வையமெல்லாம் இருளற்று இறையவன் இணையடி பூண்டிட வெண்ணுதலால் தெருளுற்ற செந்தொழிற் செல்வம் பெருகிச் சிறந்தவர்பால் அருளுற்று சிந்தையினுல் அழியா விளக்கு ஏற்றினர். மனத்து எழில் ஞான விளக்கை ஏற்றி இருளைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைமாறு மாயனுங் காணகில்லான். போற்றி உகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்கி புகழ்ச்சாற்றி வளர்ப்பதும்முன்னம் செற்றதற்குக் சற்றே. 'புகழ்துப் புல்குலபவிளக்கே' என்பது பிள்ளை யந்தாதி.

முதலாழ்வார்கள் ஏற்றிய விளக்கு அதி அற்புதமானது, பொய்கையார் பூமியாகிய தகழியில் கடல் நீரையே நெய்யாகக்கொண்டு சூரியனை விளக்காக ஏற்ற, பூதத்தார் அன்பாகிய தகழியில் ஆர்வத்தை நெய்யாகவும், சிந்தையைத் திரியாகவும் கொண்டு ஞான தீபத்தை ஏற்ற, பேயாழ்வார் 'திருக்கண்டேன்' என்று பெருமாளைத் தாம் கண்டமை கூறிய வளவிலே மூவரும் ஆழியஞ் செல்வனுடைய சொரூபத்தை அறிந்து அநுபவித்தனர்.

திருத்தண்காவிலுள்ள எம்பெருமானது திருநாமம் 'தீபப்ரகாசன்' 'விளக்கொளி பெம்பெருமான்' என்று தமிழில் வழங்குவர். 'விளக்கொளியை' என திருநெடுந்தாண்டகத்தில் வருவது காண்க. "நந்தா விளக்கே அளத்தற்கு அரியாய்!" என்பது திருநாங்கூர்த்திருப்பதிகத் தொடக்கம் "வேங்கடவாணன்" என்னும் விளக்கினில் புக ஆசைப்பட்டனள் ஆண்டாள்.

திருவிளக்குத் திருவேயாகும். திருவிளக்கு முறைப்படி ஏற்றித் தத்தம் தெய்வந்தொழ நாடெங்கும் செழிப்படையும். "செந்தாமரைமறையிற் பிறந்தவளே!" என்று தொடங்கும் பாட்டை ஒவ்வோரகத்திலும் நம் மடந்தையர் நித்திரைக்குப் போகுமுன் போற்றிவருவது நாடறிந்தவிஷயம். திருவினைத்தொழுது திருவுக்குந் திருவாகிய செல்வனின் திருவருளைப் பெறுவோமாக.


## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றம் பதிபபு)

பிராம்மணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்.
தர்மசாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல் திருச்சிரை.

புதுக்கோட்டை,
A. ஸ்ரீனிவாஸராகவய்யங்கார் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ சுக்தபாஷ்யம் | 1 | 8 | 0 |
| பதினோரு சில்லரை ரஹஸ்யங்கள் ஸாரஸாரம் முதலியன | 2 | 12 | 0 |

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

215275



163



அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது




அமிர்தாஞ்சனம்

## வெளியூர்ச் செய்திகள்.

சக்ராப்பள்ளி ஸப்தஸ்தானம். வெகுதான்ய பங்குனி 22உ செவ்வாக்கிழமை இரவு 12-மணிக்குமேல் 1½-மணிக்குள் அய்யம்பேட்டைக்கடுத்த சக்ராப்பள்ளி ஸ்ரீ சக்ரவாகேச்வரஸ்வாமி பல்லக்கில் புறப்பட்டு ஸப்த க்ஷேத்ரங்களுக்குச் சென்று வியாழக்கிழமை திரும்ப ஆலயம் வந்து சேரும்.

தேரிழுந்தூரில் கம்பர் விழா. இம்மாதம் 18, 19உகளில் கம்பர் விழாக் கொண்டாட்டம் கொண்டாடுவதாக ஏற்பாடுகள் வெகு சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. அவ்வமயம் ஸ்ரீமான் டி. கே. சிதம்பரநாத முதலியார் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். தமிழ் புலவர்கள் பலர் வருவதாயும் தெரிகிறது.

## உள்ளூர்ச் செய்திகள்.

விடாயாற்று உத்ஸவம். 11—3—39 சனிக்கிழமை தினம் நடந்தது. மாலை 6 மணிக்கே தீபாலங்கார சோபிதாய் விஜயவல்லித் தாயார் சமேத ஸ்ரீ சக்ரபாணிஸ்வாமி வஸந்தமண்டபத்தில் பக்தர்களுக்குக் காக்ஷியளித்தார். இரவு ஸ்ரீரங்கம் ப்ரும்மஸ்ரீ சடகோபாசாரியார் அவர்களால் விபீஷண சரணாகதி என்ற ஸத்கதா காலக்ஷேபமும் நிகழ்த்தப்பட்டது.

சுத்தாபிஷேகம். 13—2—39 ஸோமவாரத்தன்று ஸ்ரீ மங்களாம்பிகா ஸமேத ஸ்ரீ ஆதி கும்பேச்வரஸ்வாமி பஞ்சமூர்த்திகளுக்கும் மந்திர புரஸ்ஸரமான சுத்தாபிஷேகம் வழக்கப்படி V. துரைப்பாக் குருக்களின் விசேஷ முயற்சியால் செய்துவைக்கப்பட்டு இரவு பஞ்சமூர்த்திகளின் அலங்காரம் மனதைக் கொள்ளை கொண்டு விட்டதென்பது மிகையாகாது. ஒவ்வொரு பக்தரின் மனதில் அம் மூர்த்திகளின் பிரதிபிம்பம் தோன்றுமிருது. இரவு ஸ்ரீரங்கம் ஸ்ரீ சடகோபாசாரியாரால் ஸத்காலக்ஷேபம் செய்யப்பட்டது. மாங்குடி கதாகண்டீரவ V. சிதம்பர பாகவதர் அவர்கள் கடந்த வருஷம் வரையில் ஸர்க்கார் வேலையிருந்தபோதிலும் இவ்வுத்ஸவத்தன்று வந்து காலக்ஷேபம் செய்வது வழக்கமாக இருந்ததென்பதை குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை.

மகாமக தெப்போத்ஸவம். பல வருஷங்களாய் நடைபெற்றுவருகிற மகாமகக் குளத்தில் தெப்போத்ஸவம் இவ்வருஷம் பங்குனி மாதத்தில் நடைபெறுமெனத் தெரிகிறது.

கே. ஆர். வி.

## கிராம உத்யோகஸ்தர் நியமனம்.

### ஜஸ்டிஸ் வாட்ஸ்வோர்த் தீர்ப்பு.

தென்னாற்காடுஜில்லாவில் மேழத்தணியாளம்பட்டி கிராமாதிகாரி ஷை ஸ்தானத்திற்கு வேண்டிய யோக்யதாம்சங்களை பெறுததால் திருக்கோவிலூர் ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் அவருக்குப் பதிலாக தகுதியுள்ள ஒருவரை கிராம உத்யோகஸ்தராக நியமனம் செய்தார்.

பழைய கிராம உத்யோகஸ்தரின் வார்ஸான ஒருவர் மனுச்செய்துகொண்டும் அவர் நியமிக்கப்படவில்லை. ஆகவே ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் உத்திரவை ரத்துசெய்ய வேண்டுமென வார்ஸுதார் ரெவின்யூ போர்டுக்கு அப்பீல் செய்தார். ரெவின்யூ போர்டார் ஷை உத்திரவை ரத்துசெய்து வார்ஸுதாரையே கிராம உத்யோகஸ்தராய் நியமித்து விட்டார்கள். ரெவின்யூ டிவிஷன் ஆபீஸரால் நியமனம் பெற்றவர், டிவிஷன் ஆபீஸர் உத்திரவை மாற்ற ரெவின்யூ போர்டுக்கு அதிகாரமில்லை எனத் தீர்ப்பு செய்யுமாறு கடலூர் ஜில்லா முன்ஸீப் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார். சென்னை கிராம உத்யோகஸ்தர் வார்ஸுச் சட்டப்படி பிரஸ்தாப விஷயத்தில் தலையிட ஸிவில் கோர்டுக்கு அதிகாரமில்லை என கருதி ஜில்லா முன்ஸீப் வழக்கை தள்ளிவிட்டார். அப்பீலில் ஸப்ஜட்ஜ் கீழ்கோர்டு உத்திரவை ஊர்ஜிதம் செய்தார். வாதி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். ஜஸ்டிஸ்வாட்ஸ்வொர்த் அப்பீலை அங்கீகரித்து கிராம உத்யோகஸ்தர்களை நியமிக்கும் விஷயத்தில் ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸருக்குச் சட்டப்படி அதிகாரமிருப்பதால் அவர் உத்யோகம் கொடுத்தது சட்டவிரோதமாயிருந்தாலொழிய ரெவின்யூ போர்டு தலையிட முடியாதென அபிப்ராயப்பட்டு அப்பீலை கோர்டு செலவுடன் அங்கீகரித்தார்.

கே. ஆர். வி.

(3-ம் காலம் தொடர்ச்சி)

சிக்க முன்வரவேண்டும். இதன் விலை 0-1-6 தபால் செலவு தனி. வேண்டியவர்கள் ஜம்புநாத சாஸ்திரி நல்லிச்சேரி, அய்யம்பேட்டை என்ற இடத்திலாவது, ஆர்யதர்மம் ஆபீஸிலாவது விலைக்குப் பெறலாம்.

மேலக்காவேரி, 'சிரோமணி'
கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரி.

## மதிப்புரை,

"நல்லிச்சேரி அருணாசல சாஸ்திரிகளின் வெளியீடுகள்" (1) விஷ்ணுஸ்துதி. இந்நூல் ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியாள் அவர்களால் இயற்றப்பட்டது. இது 24 ச்லோகங்கள் கொண்டது. ஸ்ரீ விஷ்ணுவின் பாதாதி கேசங்கள் வரையில் ஒவ்வொரு ச்லோகங்களிலும் ஒவ்வொரு அவயவங்களின் மஹிமை சொல்லப்பட்டிருக்கிறது. இச் சிறு நூல் ஒவ்வொருவரிடமுமிருக்க வேண்டியதவச்யமாகும். வழக்கப்படி ப்ரும்மஸ்ரீ வித்வான் கச்சபேச்வர சாஸ்திரிகளின் கருத்துரையும், அமைக்கப்பெற்று விளங்குகிறது. நமது ப்ராசீன புஸ்தகங்கள் பலர்களுக்கு உபயோகமாகும்படி முன்வந்ததிற்கு நாம் ஸ்ரீ சா... பாராட்டுகிறோம். தற்காலம் ஆங்கிலக் கலாசாலையில் பயிலும் மாணவர்களிடம் இங்கிரந்த லிபி பழக்கமில்லையாதலால் அவர்களுக்கும் உபயோகப்படும் முறையில் தேவநாகர லிபியையும் கூடவே அமைத்தால் அதிக உபயோகமாகுமென கருதுகிறோம். இதன் விலை அணா 0—1—6. தபால் செலவு தனி.

(2) ஸ்ரீ லலிதாஸ்தவராஜம் ஸ்ரீ தேவீ மாநஸிக பூஜை. முதலில் உள்ளது பிரும்மபுராணம் ஹயக்ரீவாகஸ்த்ய ஸம்வாதமான எட்டாவது அத்தியாயத்திலுள்ளது. இது 37 ச்லோகங்கள் கொண்டது. இதில் பரதேவதையான பராசக்தியின் மகிமையே ஒவ்வொரு ச்லோகங்களிலும் கூறப்படுகிறது. பாராயணத்திற்கு மிகச் சிறந்ததென தெரிகிறது.

இரண்டாவது ஸ்ரீ பகவத்பாதாள் அருள் செய்த ஸ்ரீ தேவீமாநஸிக பூஜை. 19 ச்லோகங்கள் கொண்டது. தியான ஸ்வரூபங்கள் அப்படியே உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. இச் செய்யுள்களை ஒவ்வொருவரும் மனப்பாடம் செய்து பகவத் ஸந்நிதியில் பாராயணம் செய்வதுடன், அவரவர்கள் வீட்டிலிருக்கும் இளம் மாணவர்களுக்குப் போதித்து அவர்களையும் அப்படி சொல்லும்படி செய்தால் அவர்களுக்கு எளிதிலே, மதப்பற்றுதல் உண்டாகும். பிற்காலத்தில் மாணவர்களுக்கு மத விஷயமான அபிமானம் உண்டாக இதுவே சிறந்த வழி என நாம் கருதுகிறோம். ஆகவே, மதாபிமானிகள் இச்சிறு நூலை வாங்கி, அதன்மூலம் மாணவர்களுக்குக் கற்பித்தால் மாணவர்களுக்கு பக்தி ஏற்படுவதுடன் சாஸ்திரிகளுக்கும் பெரும் உபகாரமேற்படும். ஆகவே, எல்லோரும் ஆத

(தொடர்ச்சி 2-ம் காலம் பார்க்க)

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

155

ஆசிரியன்மம்

4 ஸ 13
24

30-3-1939

215226

3- APR 1939
215276
157

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்நிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 | 24 — கும்பகோணம் கலி5039 பகுதான்ய-ஹு பங்குனி-மீ 17உ 1939-ஹு மார்ச்சு-மீ 30உ — வால் 13

## ஆர்யதர்மம்.

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## கார்டு விலைக்குறைவு தீர்மானம்.

வைஸ்ராய் நிராகரிப்பு.

இந்தியா சட்ட ஸபையில் வரி மசோதாவைப்பற்றிய விவாதத்தில் காங்கிரஸ் கக்ஷியார் உப்பு வரியையும், கார்டு விலையையும் குறைக்கவேண்டு மென்று கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியது.

ஆயினும் வைஸ்ராய் தமது விசேஷ அதிகாரத்தைக்கொண்டு அதை நிராகரித்து வரி மசோதாவுக்கு ஸர்டிபை செய்து, நிறைவேற்ற அனுப்பினர். அதையும் இந்தியா சட்ட ஸபை நிராகரித்துவிட்டது. ராஜாங்க ஸபைக்கு இனி இது அனுப்பப்படும்.

## சென்னை புதிய கவர்னர்.

தற்போது பார்லிமெண்டு மெம்பராக இருந்து வரும் Mr. காப்டின் ஹோப் என்பவர் சென்னையின் புதிய கவர்னராக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

இவர் கன்ஸர்வேடிவ் கக்ஷியை சேர்ந்தவர்.

## மெமலையும் பிடித்தது.

ஜர்மனியானது மெமல் பிரதேசத்தையும் தனது வசமாக்கிக் கொண்டது. ஹர் ஹிட்லர் அவ்வூருக்குச் சென்று ஜனங்களுக்குப் பிரஸங்கம் செய்தார். விசேஷ வரவேற்பு நடந்தது.

## சென்னையில் சம்பள வெட்டு யோஜனை.

100 ரூபாய்க்கு மேல் பட்ட சம்பளம் வாங்கும் உத்யோகஸ்தர்களுக்கு 5 சதவீதம் சம்பளத்தை வெட்டு செய்ய உத்தேசமிருப்பதாக சட்ட ஸபையில் பிரதம மந்திரி தெரிவித்தார். 13 லக்ஷம் இதன் மூலம் ஸர்க்காருக்கு கிடைக்குமாம்.

## கட்டாய ஹிந்தி தகராறு.

ஸமரஸம் ஏற்படுமா?

சென்னை ராஜாங்க ஸபையில் ஒரு மெம்பர் கேட்ட கேள்விக்குப் பதில் கூறுகையில், கனம் பிரதம மந்திரி கட்டாய ஹிந்தியை மாணவர்களும் பெற்றோர்களும் இது வரையில் ஆக்ஷேபிக்க வில்லையென்றும்,

ஹிந்தியை இஷ்ட பாடமாக வைக்கும் விஷயத்தை ஸர்க்கார் கவனித்து ஸமரஸம் செய்ய யோஜிப்பார் களென்றும் சொன்னார்.

## திருவாங்கூர் சட்ட மறுப்பு நிறுத்தப்படும்.

ஸ்ரீமான் காந்திஜியின் ஆலோசனைக்கிணங்க திருவாங்கூர் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆயினும் காங்கிரஸ் தலைவர்களை கைது செய்யும் விஷயம் நிறுத்தப்படவில்லை. தன் காலத்திலேயே பொறுப்பாக்ஷி ஏற்படுத்த முயற்சி செய்து வருவதாக திவான் ஸர், ஸி. பி. வெளியிட்டிருக்கிறார்.

## சட்ட ஸபையில் தமிழில் பேச ஏற்பாடு.

தலைவர் கட்டளை.

சென்னை சட்டஸபையில் ஆங்கிலம் தெரியாதவர்கள் பலர் இருப்பதால் இங்கிலீஷில் பேசுகிறவர்கள் அதைத் தமிழிலும், அல்லது தெலுங்கிலும் மொழி பெயர்த்துக் கூற வேண்டு மென்று சட்டஸபைத் தலைவர் தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

## காங்கிரஸ் நிலைமை.

ஸுபாஷ் அறிக்கை.

"காந்தியை கண் மூடித்தனமாக பின்பற்ற மாட்டேன்"

அலஹாபாத்திலும், டில்லியிலும் சில காங்கிரஸ் தலைவர் காந்திஜியைக்கலந்து பேசினர். காங்கிரஸில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதையும், காரியக்கமிட்டி ஏற்படாததையும் பற்றி யோஜிக்கப்பட்டது. ஸ்ரீமான் போஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், தனது உடம்பு அஸௌகர்யத்தினாலேயே தாமதமேற்படுவதாயும், திரிபுரி தீர்மானத்தைப்பற்றி காந்திஜியுடன் நன்கு ஆலோசிக்க வேண்டுமென்றும், எப்படியும் காந்தி ஆலோசனைப்படியே நடக்கத் தாம் விரும்புவதாயும் ஆயினும் கண்மூடித்தனமாக காந்தி எதைச்சொன்னாலும் அதை ஏற்பது தமக்குப் பிடிக்காதென்றும், தம்மை காந்திஜி வந்து காணுவதாயிருந்தால் டாக்டர்கள் தடை செய்ய மாட்டார்களென்றும் அதில் சொல்லியிருக்கிறார்.

## ஓம் மண்டலித் தகராறு முற்றி விட்டது.

ஹிந்து மந்திரிகள் ராஜிநாமா.

பலர் கைதியாயினர்.

காராச்சியில் ஓம்மண்டலித்தகராறு முற்றிவிட்டது. மந்திரி ஸபை இதில் தக்க ஏற்பாடு செய்யத்தாமஸிப்பதால் ஹிந்துக்கள் மிக்க ஆத்திரமடைந்திருக்கிறார்கள்.

இரண்டு ஹிந்து மந்திரிகளும் ராஜி நாமா செய்து விட்டனர் மண்டலியை எதிர்த்து பெரிய ஸத்யாக்ரஹம் நடக்கிறது. ஸ்ரீமான் ஸாதுவாஸ்வனி போன்ற பிரபலத் தலைவர்கள் இதில் சேர்ந்து கைதியா யிருக்கிறார்கள். ஸ்திரீகளும் ஸத்யாக்ரஹத்தில் சேர்ந்திருக்கிறார்கள். இதற்கிடையில், மண்டலி ஸ்தாபகரான தாதாலேக் ராஜும், ராதே என்பவரும் மண்டலிக் கட்டிடத்திற்கு வரக்கூடாதென்றும், அங்குள்ள சிறு பெண்களுடன் பேசக்கூடாதென்றும் 144-வது பிரிவுப்படி அவர்களுக்குத் தடையுத்தரவு போட்டிருக்கிறார்கள்.

லிந்து சட்டஸபையிலும் மண்டலியை எடுத்து விடவேண்டிய விஷயமாக உக்ரமான விவாதம் நடைபெற்றது.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

## உண்மையான பக்தி

### 3. மூர்த்தி பேதம்.

பக்தர்:—இது மாதிரி அசட்டு வியவஹாரங்களுக்கே ஸ்ரீ வியாஸரே தான் ஜவாப்தாரியோ என்று தோன்றுகிறது. அந்தந்த தேவதைகளைக் குறித்து, தனித்தனியாக, அநேக புராணங்களை எழுதியிருக்கிறார். ஒவ்வொன்றிலும் அதில் வர்ணிக்கப்படும் தேவதையே பரவஸ்து என்று சொல்லியிருப்பதால், ஸ்ரீ வியாஸருடைய அபிப்பிராயத்தில் யார்தான் பரவஸ்து என்று தீர்மானிக்க எந்த சிரத்தாளுக்கும் கூட முடியாமலிருக்கிறது.

மஹாஸ்வாமிகள்:—ஸ்ரீ வியாஸர் மூடர் இல்லையென்றும், ஜனங்களை ஏமாற்றப் புறப்பட்டவரில்லை என்றும், வைத்துக்கொள்ளலாமா இல்லையா?

ப:— அதில் என்ன ஆக்ஷேபணை?

ம:— எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கிற பரவஸ்து ஒன்றாகத்தான் இருக்கவேண்டுமென்ற ஸாமான்ய நியாயம் அவருக்குத் தெரிந்திருக்குமல்லவா?

ப:— தெரிந்துதான் இருக்கும். அதனாலேதான் எனக்கு சிரமம். ஒவ்வொரு தேவதையையுமே பரவஸ்து என்று அவர் சொல்வது எனக்கு அர்த்தமாகிறதில்லை.

ம:— ஸ்ரீ வியாஸர் ஒவ்வொரு தேவதையும் பரவஸ்து என்று சொல்லவில்லை, பரவஸ்துதான் ஒவ்வொரு தேவதையும் என்று சொல்கிறார், என்று தெரிந்துகொண்டால் சிரமமேயிராது.

ப:— அதெப்படி?

ம:— பரதத்வத்திற்குச் சொந்தமாக நாமமும் ரூபமும் கிடையா. அதுவே உபாஸ்யமாகும்போது ஏதேனும் ஒரு நாமத்தையும் ரூபத்தையும் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. அதற்கு ஸ்வபாவமாக எவ்வித ரூபமும் இல்லாததினால், பரமார்த்த தசையில் அரூபம் என்றே சொல்லவேண்டும். வியாவஹாரிக தசையில் எல்லா ரூபங்களும் அவருடையதேயாகும்.

ப:— இது எனக்கு அர்த்தமாகிறது. ஆனால் ஸ்ரீ வியாஸர் ஒரு வியக்தியை, உதாஹரணமாக சிவனை, பற்றி சொல்லும்போது, பரதத்வத்திற்குரிய விசேஷணங்களையெல்லாம் அம் மூர்த்திக்குக் கொடுப்பதுடன் நிற்காமல், இதர தேவதா மூர்த்திகளுக்குள்ள விசேஷணங்களையும் இவருக்கு உள்ளவை போல சொல்கிறார். பரதத்வத்தின் உபஸம்ஹார அம்சமாகச் சிவனை வர்ணிக்காமல், விஷ்ணுவும் பிரஹ்மாவுமே இவர்தான் என்றும், விஷ்ணுவும் பிரஹ்மாவும் இவருடைய அம்சம் அல்லது ஸந்ததியே யாவர்கள் என்றும் சொல்லிவிடுகிறார்.

ம:— குடும்பத்தில் நடக்கும் ஒரு ஸாமான்ய ஸம்பவத்தைப் பார்ப்போம். ஒரு பிரபுவுக்கு நான்கு குழந்தைகள், ஒரு குழந்தைக்கு பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது, என்று வைத்துக்கொள்வோம். அன்று "உபாஸ்ய" மூர்த்தி அக்குழந்தையே. கிருஹத்தின் நடுக்கட்டில் உயர்ந்த ஆஸனம் போட்டு அக்குழந்தையை உட்காரவைத்திருப்பார்கள்; விலையுயர்ந்த வஸ்திரங்களை யுடுத்தி நகைகளால் அலங்கரித்திருப்பார்கள். அன்று அந்தக் குழந்தையை விசேஷமாக அலங்கரிக்கும் பொருட்டு, தாயாரும் மற்றக் குழந்தைகளும் கூட தாங்கள் நித்தியம் போட்டுக்கொண்டிருக்கிற நகைகளை அன்று தாத்காலிகமாக அக் குழந்தைக்குப் போடுவதும் வழக்கமில்லையா?

ப:— அப்படியும் உண்டுதான்.

ம:— தங்கள் நகைகளைக் கொடுக்கவேண்டியிருக்கிறதே என்று தாயாரும் மற்றக் குழந்தைகளும் கொஞ்சமேனும் வருத்தப்படுகிறதுண்டா? இன்று எல்லா நகைகளையும இக் குழந்தை தரித்துக்கொண்டிருக்கிறதே என்று அஸூயைப்படுகிறதாவது உண்டா?

ப:— கிடையாது.

ம:— தங்களுக்குப் பிறந்தநாள் வரும்போது இக் குழந்தை ஸாதாரணமாகத் தரிக்கும் நகைகள் உட்பட தங்களையும் இதே மாதிரி நகை முதலிய அலங்காரங்களால் அலங்கரிப்பார்கள் என்று அக் குழந்தைகளும் அறிந்திருக்கிறார்களல்லவா?

ப:— ஆம்.

ம:— இன்று தினம் இக் குழந்தை தாயாரிடத்திலிருந்தும் மற்றக் குழந்தைகளிடத்திலிருந்தும் நகைகளைப் பிடுங்கிக் கொண்டதென்று யாரேனும் குற்றம் சொல்வீர்களா? இன்று "உபாஸ்ய" மாக இக் குழந்தை சோபிக்கவேண்டுமென்பதற்காக இதரர்களுடைய நகைகளையும் கழற்றிப்போட்டு இதற்கு இன்று பிரதான்யம் கொடுத்தது பக்ஷபாதமென்று தகப்பனாரை யாரேனும் குற்றம் சொல்வதாவது ஸாத்தியப்படுமா?

ப:— முடியாது.

ம:— இத்தனை நகைகள் இவ்வளவு அலங்காரம் எல்லாம் யாருக்கு சொந்தம்? யாருடைய ஆளுகையிலிருக்கின்றன?

ப.—தகப்பனாருடையதுதான்;

ம.— அப்படியே ஆனாலும், அவர் எப்பொழுதாவது இந்த உடைகளையும் ஆபரணங்களையும் தரிப்பதுண்டா?

ப:— கிடையாது.

ம:— அதாவது, எல்லாம் அவருக்கே பாத்தியப்பட்டிருந்தபோதிலும், அவர் தனக்கு உபயோகித்துக்கொள்கிறதில்லை, அந்த ஸமயத்தில் அவசியம்போல் தன் குழந்தைகளை அலங்கரித்துப்பார்ப்பதிலேயே ஸந்தோஷமடைகிறார்.

ப:— அப்படித்தான்.

ம:— ஆகையால் எல்லா நகைகளுமே அவருக்கே பாத்தியப்பட்டிருந்தபோதிலும் அவர் அவைகளைத் தரிப்பதில்லை.

ப:— ஆம்.

ம:— தன் ஸ்வாதீனத்தில் பத்திரமாக இரும்புப் பெட்டியில் வைத்திருக்கும்போது தானா இந்த நகைகள் அவருக்கு பாத்தியம்? குழந்தை தரித்துக்கொண்டிருக்கும்போது கூட பாத்தியதை அவரையே சேர்ந்தது.

ப.— வாஸ்தவம்.

ம.— இப்பொழுது பிரகிருத விஷயத்தைக் கவனிப்போம். பரம்பொருளாயிருக்கிற ரூபமற்ற பிரஹ்மம் இந்தத் தகப்பனார் போல, தான் ஒரு நாளும் ஒரு விசேஷணத்தையும் ஏற்றுக்கொள்கிறது கிடையாது. ஆனால் ஒவ்வொரு தேவதையும் வஹித்துவரும் ஸகல விசேஷணங்களும் இப் பிரஹ்மத்திற்கே பாத்தியப்பட்டவைகள். ஒரு பக்தனின் சிரேயஸ்ஸை உத்தேசித்து ஒரு புராணத்தில் ஒரு தேவதையை உபாஸ்யமென்று சொன்னால், அதில் அந்த தேவதைக்கே அக்கிராஸனம். குழந்தையைப் பார்த்து ஸந்தோஷித்துக்கொண்டிருக்கிற தகப்பனாரும் ஒதுங்கிப் பின்பக்கம் நிற்கவேண்டியதுதான். இதர தேவதைகளுக்கு ஸாமான்யமாய்ச் சொல்லப்படும் விசேஷணங்களையும் இந்த தேவதைக்கே கொடுத்து அலங்கரிக்கப்படும். ஒரு புராணத்தில் ஒரு தேவதைக்கு பிரதான்யம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதினால் பக்ஷபாதம் என்ற தோஷத்திற்கு கொஞ்சமேனும் இடம் கிடையாது. இதர புராணங்களில் மற்றத்தேவதைகளைப் பற்றிச் சொல்ல ஏற்படும்போது, அங்கே அவர்களுக்கு பிரதான்யம் கொடுக்கப்படும். ஒவ்வொரு புராணங்களிலும் ஸ்ரீ வியாஸருடைய எண்ணம் இப்படியே. பரம்பொருளுக்கு எவ்வித விசேஷணமாவது எவ்வித நாமமாவது, ரூபமாவது கிடையாதென்று அவருக்குத் தெரியும். இருந்தாலும் அந்த பாவனை மிகவும் ஸ்வல்பமானவர்களைத் தவிர மற்றவர்களுக்கு எட்டுவது ஸாத்தியமில்லையென்பதையும் நன்கு உணர்ந்தவராதலால், பக்தர்களின் உபாஸனைக்காக பல தேவதா மூர்த்திகள் இருந்தபோதிலும், தாத்காலிகமாக வியவஹாரத்தில் இவைகளே பரம்பொருள் என்று பாவித்துச் சொல்லியிருக்கிறார். அவர் புராணங்கள் எழுதியிருக்கிற மாதிரியில், ஒரு தேவதையைத் தீவிரமாய்ப் பக்தியுடன் உபாஸித்துவரும் பக்தனுக்கு வேறு தேவதைகளைத் தனித்தனியே உபாஸிக்க அவசியமன்னியில் அவ்வுபாஸனைகளின் பலனையும் சேர்ந்து அடையும்படி ஸௌகர்யம் செய்திருக்கிறார். ஒரு தேவதையை உபாஸிப்பதின் மூலமாகவே அறியும் யோக்கியதையைப் பெற்றுக்கொள்ளலாம். சிரமத்தைக் குறைத்து, பலனை ஜாஸ்திப்படுத்திக்கொடுப்பதிலும், பரம்பொருளின் தத்வத்திற்கு பாதகமன்னியில் பக்தனின் யோக்கியதைக்குத் தக்கவாறு ஸாதனம் கற்பித்துக்கொடுப்பதிலும், ஸ்ரீ வியாஸருக்கு ஸமானம் யாரும் கிடையாது. அவரை நன்கு அர்த்தம் செய்துகொள்ளாமல், நமக்குள் வியவஹாரம் செய்துகொண்டால், குற்றம் நம்முடையதே. அவருடையதாகாது. வாஸ்தவத்தில் நாம் அவருக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

திவான்பகதூர். ராமநுஜாசாரியார்.
அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| திருவாய்மொழி (3 வால்யூம்) | 7 | 8 | 0 |
| கீதார்த்தசங்கிரப் பாட்டுகள் | 0 | 6 | 0 |
| ஸ்ரீமத் கீதாபாஷ்யம் (3 வால்யூம்) | 3 | 0 | 0 |
| யதீந்த்ரமத தீபிகை. | 4 | 0 | 0 |
| ராமாயணசாரம் (பைண்ட்) | 1 | 8 | 0 |
| ஷை (ராப்பர்) | 1 | 4 | 0 |
| சித்திர ராமாயணம் (பூஜையில் இருக்கக்கூடியது). | 1 | 0 | 0 |
| ராமாயணஸாரம், (ராப்பர்), சித்திர ராமாயணம், இரண்டும் சேர்ந்து. | 2 | 0 | 0 |

N. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள். பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிவகீதிமாலா. | 0 | 4 | 0 |
| ராமாஷ்டோத்தரம். | 0 | 1 | 0 |
| சங்கரபகவத்பாதாள். | 0 | 8 | 0 |
| தமிழ் சிக்ஷா | 0 | 4 | 0 |

ஸ்ரீ ஸ்தவம்
மூலம் நாகரத்திலும்தமிழிலும்
சிரோமணி ஸ்ரீநிவாஸராகவாசாரியரால்
எழுதிய உரையுடன்
விலை அணா 0—4—0

பாணி ஸீரீஸ்
சென்னை P. T. பாணி கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்ட சங்காந்தி பூஜை கோ பூஜை முதலிய புஸ்தகங்கள் நல்ல காகிதத்தில் ஸம்ஸ்க்ருத உச்சரிப்புக்கிணங்க தமிழில்உள்ளது. ஒவ்வொரு கிருஹத்திலும் இருக்க வேண்டியது.
எங்களிடமும் கிடைக்கும்.

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.



ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

# மூக பஞ்ச சதீ.

## மந்தஸ்மிதசதகம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

25. மத்யே கர்பித மஞ்ஜுவாக்ய லஹரீ மாத்வீ ஜரீ சீதளா |
மந்தாரஸ்தபகாயதே ஜநநி! தே மந்தஸ்மிதாம்சுச்சடா |
யஸ்யாவர்த்தயிதும் முஹுர் விகஸனம் காமாக்ஷி காமத்ருஹ: |
வல்குர் வீக்ஷண விப்ரமவ்யதிகர: வாஸந்த மாஸாயதே ||

ஜனனி! தாயாரான. காமாக்ஷி! ஏ காமாக்ஷியே. மத்யேகர்பித மஞ்ஜு வாக்யலஹரீ மாத்வீஜரீ- நடுவில் நிறைந்த வாக்குப் பரம்பரையென்கிற தேன் நிறைந்ததாயும். சீதளா- குளிர்ந்ததாயுமுள்ள. தே- உன்னுடைய. மந்தஸ்மிதாம்சுச்சடா- மந்தஹாஸத்தின் காந்தியானது. மந்தாரஸ்தபகாயதே- மந்தாரப்பூங்கொத்தாக விளங்குகிறது. யஸ்யா:- எதனுடைய. விகஸனம்- விகாஸத்தை. முஹு:- அடிக்கடி. வர்த்தயிதும்- விருத்தி செய்வதற்கு. காமத்ருஹ:பரமசிவனுடைய. வல்கு:- அழகுபொருந்திய. வீக்ஷணவிப்ரமவ்யதிகர:- கண் பார்வையின் அழகிய அசைப்பானது. வாஸந்தமாஸாயதே- வஸந்தமாஸகாலமாக விளங்குகிறது.

26. பிம்போஷ்டத்யுதி புஞ்ஜ ரஞ்ஜிதருசிஸ்த்வன் மந்தஹாஸச்சடா |
கல்யாணம் கிரிஸார்வபௌமதநயே கல்லோல யத்யாசுமே |
புல்லன் மல்லி பினத்த ஹல்லகமயீ காமாக்ஷி! மாலேவ யா |
ஸ்ரீ காஞ்சீச்வரி! மாரமர்த்திநு ருரோ மத்யே முஹுர்லம்பதே ||

ஸ்ரீ காஞ்சீச்வரி! காஞ்சி பட்டணத்தின் யஜமானியான. கிரிஸார்வபௌமதநயே- பர்வத ராஜகுமாரியான. காமாக்ஷி! காமாக்ஷியே. யா எந்தப்புன்சிரிப்பானது. புல்லன்மல்லி நிபத்தஹல்லகமயீ மலர்ந்த மல்லிகைப்பூவோடு தொடுத்த செங்கழுநீர் புஷ்பமுள்ள. மாலேவ- மாலை போல். மாரமர்த்திநு:- மன்மத சத்ருவான பரமசிவனுடைய. உரோமத்யே- மார்பு நடுவில். முஹு:- அடிக்கடி லம்பதே- தொங்குகிறதோ. (ஸா- அப்படிப்பட்ட) பிம்போஷ்டத்யுதிபுஞ்ஜரஞ்ஜிதருசி:- சிவந்த உதட்டின் காந்தியோடு கலந்த. த்வன்மந்தஹாஸச்சடா- உனது மந்தஹாஸ காந்தியானது. மே- எனது. கல்யாணம் க்ஷேமத்தை. ஆசு- சீக்கிரத்தில். கல்லோலயது- விருத்தி செய்யட்டும்.

27. பிப்ராணா சரத்ப்ர விப்ரமதசாம் வித்யோதமானாப்யஸௌ |
காமாக்ஷி! ஸ்மிதமஞ்ஜரீ கிரதி தே காருண்ய தாரா ரஸம் |
ஆச்சர்யம் சிசிரீகரோதி ஜகதீமாலோக்யசை நாமஹோ |
காமம் கேலதி நீலகண்டஹ்ருதயம் கௌதூஹலாந்தோளிதம் ||

காமாக்ஷி!. காமாக்ஷியே. தே- உனது. அஸௌஸ்மித மஞ்ஜரீ- இந்த பொன் சிரிப்பானது. சரதப்ரவிப்ரமதசாம்- சரத்கால மேகத்தின் நிலைமையை. பிப்ராணா- வகிக்கிறதாக. வித்யோதமானாபி- விளங்கிக்கொண்டிருந்த போதிலும். காருண்ய தாரா ரஸம்- கருணையென்கிற ஜலத்தை. கிரதி- வர்ஷிக்கிறது. ஜகதீம் உலகை. சிசிரீகரோதி- குளிரச்செய்கிறது. ச- இன்னும். ஏனும் ஆலோக்ய- இதை பார்த்து. நீலகண்ட ஹ்ருதயம்- பரமசிவனுகிற மயிலின்மனதானது கௌதூஹலாந்தோளிதம்- உத்ஸாஹம் நிறைந்ததாய். காமம் கேலதி- நன்றாக விளையாடுகிறது. அஹோ- ஆச்சர்யம்.

28. ப்ரேங்கத் ப்ரௌட கடாக்ஷ குஞ்ஜ குஹரேஷ்வ த்யச்ச குச்சாயிதம் |
வக்த்ரேந்துச்சவி ஸிந்து வீசி நிசயே பேன ப்ரா தாநாயிதம் |
நைரந்தர்ய விஜ்ரும்பித ஸ்தனதடே நைசோள பட்டாயிதம் கல்மாஷம் கபளீகரோது மம தே காமாக்ஷி! மந்தஸ்மிதம் ||

காமாக்ஷி! காமாக்ஷியே. தே- உனது. ப்ரேங்கத்ப்ரௌட கடாக்ஷ குஞ்ஜகுஹரேஷு- மனோஹரமாயும் கம்பீரமானதுமான கடாக்ஷமென்கிற குஹரங்களில். அத்யச்ச குச்சாயிதம்- சுத்தமான பூங்கொத்துப் போன்றதும், வக்த்ரேந்துச்சவி ஸிந்து வீசி நிசயே- சந்திரன் போன்ற முகத்தின் காந்தியாகிற அலைகளில். பேனப்ராதானாயிதம்- நுரையின் கூட்டம் போலிருப்பதும், நைரந்தர்ய விஜ்ரும்பிதஸ்தன தடே- இடையின்றி பெருத்துள்ள ஸ்தனப் ப்ரதேசத்தில். நைசோளபட்டாயிதம்- பட்டு ரவிக்கை போலிருப்பதுமான. மந்தஸ்மிதம்- புன் சிரிப்பானது. மம என்னுடைய. கல்மாஷம்- பாபத்தை. கபளீகரோது- போக்கடிக்கட்டும்.

29. பியூஷம் தவ மந்த்ரஸ்மிதமிதி வ்யர்த்தைவ ஸாபப்ராதா |
காமாக்ஷி! த்ருவமீத்ருசம் யதிபவேதேதத்கதம்வா சிவே |
மந்தாரஸ்ய கதாலவம் நஸஹதே மத்நாதி மந்தாகினீம் இந்தும் நிந்ததி கீர்த்திதேச கலசீ பாதோதி மீர்ஷ்யாயதே ||

சிவே- மங்களமூர்த்தியான. காமாக்ஷி! காமாக்ஷியே. தவ- உன்னுடைய. மந்தாரஸ்மிதம்- மனோஹரமான புன்சிரிப்பானது. பியூஷமிதி- அமிருதமென்ற ஸா- அபப்ராதாபி- அந்த அபவாதமும். வ்யர்த்தைவ- வ்யர்த்தம் தான். ஈத்ருசம் த்ருவம் யதி பவேத்- இப்படி யிருப்பது நிச்சயமானால். கதம்வா- ஏன். மந்தாரஸ்ய மந்தார புஷ்பத்தினுடைய. கதாலவம்- வார்த்தையைக் கூட நஸஹதே- ஸஹிக்கிறதில்லை. மந்தாகினீம்- கங்கையை. மத்நாதி- கலக்குகிறது. இந்தும் -சந்திரனை. நிந்ததி- நிந்திக்கிறது. கீர்த்திதேச- சொல்லும்போதே. கலசீபாதோதிம்- பால் ஸமுத்ர விஷயத்தில். ஈர்ஷ்யாயதே- பொறாமைப்படுகிறது.

(தொடரும்.)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்யஞு பங்குனி-மீ 17உ

## நவீன நாகரிக ஸ்திரீகளின் கிளர்ச்சி

சென்னை ஆசாரத்திருத்தஸ்திரீகளின் கூட்டம் நடந்து வெகுநாளாகிவிட்டது. அவர்கள் கற்ற பாடங்கள் மறந்துவிடுமென்ற பயம். அதற்காக திடீரென நினைத்து ஒரு கூட்டம் போட்டனர். அதில் தங்களுடைய பாடங்களைத் திருப்பிப்பாடினார்கள். இந்த ஸ்திரீகள் கூட்டத்தில் புருஷராகிய ராஜாஜீ தலைமை வகித்தார். தம்மைத் தலைமை வஹிக்கும்படி கேட்டதின் காரணம் அவருக்கே விளங்கவில்லை.

வழக்கப்படி அம்மு சாமிநாதன், முத்துலக்ஷ்மி ரெட்டி முதலிய தலைவிகள் ஆசாரத்திருத்தம் அவசியமென்று பேசினார்கள். நமது ஸ்திரீகள் உரிமையிழந்து அடிமைகளாயிருப்பதாயும் சட்டமூலமான நிர்ப்பந்தத்தால் ஸ்திரீகளை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு ஸம உரிமை வழங்கவேண்டுமென்றும், பால்ய விவாஹத்தை பலாத்காரமாக தடைசெய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள் வேறு சில ஸ்திரீகளும் இதையொட்டி மனதில் தோன்றியதையெல்லாம் பேசிக் களித்தார்கள். ஆயினும் அவர்கள் ஏமாற்றமடைய நேர்ந்தது. தீவ்ர சீர்திருத்தக்காரரான கனம் ஸி. ஆர். தங்களுடைய கக்ஷியை ஆதரித்து ஏதாவது தக்க உறுதிமொழி கொடுப்பாரென்றோ அல்லது ஆதரவு காட்டுவாரென்றோ அந்த ஸ்திரீகள் நினைத்தார்கள். ஆயினும் ஆசாரியார், அவர்களுடைய பேச்சுகளுக்குத் தலையாட்டிவிட்டு, "அவஸரப்படேல்" என்று ஒரே வார்த்தையில் அந்த ஸ்திரீகளின் மனோரதத்தை பங்கப்படுத்திவிட்டார். பிச்சைக்காரர்கள் தொல்லையைப்பற்றி அதிகம் பேசிவிட்டு தப்பிக்கொண்டுவிட்டார். ஆயினும் தமது ஆசார திருத்த நோக்கத்தை மட்டும் கனம் ஆசாரியார் விட்டுக்கொடுத்துவிடவில்லை.

நவீனகால ஸ்திரீகள் மேற்றிசை நாகரிகத்திற்கு அடிமைப்பட்டு நமது பழைய வழக்கங்களைப் பழிப்பதுடன் மேற்றிசை ஸ்திரீகளாகவே ஆகிவிடவும் முயற்சிப்பது தெரிந்த விஷயம், இது துர்ப்புத்தியின் போக்கேயல்லது வேறல்ல. மேற்றிசை மேதாவிகளே தற்போது தங்கள் தேச ஸ்திரீகளின் எல்லைகடந்த அடங்காமையைப் பார்த்து ஸஹியாமல் ஓலமிட ஆரம்பித்துவிட்டனர். இங்கிலாந்து முதலிய தேசத்தைச் சுற்றிவந்த இந்தியப் பிரமுகர்கள் பலரும் இந்த உண்மையை அறிந்து நமது ஸ்திரீகள் மேற்றிசை ஸ்திரீகளைப்பின்பற்றக்கூடாதென்று சொல்ல முன்வந்திருப்பதை அறியாதாரில்லை.

தற்போது இந்திய ஆசாரத்திருத்த வாதிகளுக்குப் பெரும்பாலும் மேற்றிசை நாகரீப்பேயே வழிகாட்டியாயிருந்து வருகிறது. இந்தப் பேயானது இந்துக்களை மட்டும் பிடித்தாட்டுகிறதேயல்லது மஹம்மதியரிடம் அணுகப்பயப்படுகிறது. இவ்விஷயமாக மீரத்தில் கூடிய முஸ்லீம் லீக் கூட்டத்தின் தலைவர் சொல்லியுள்ள உண்மையை மறுப்பது கஷ்டமே. "இந்துக்களான ஆசாரத்திருத்த வாதிகள் மேற்றிசையிலிருந்து போலி தேசிய வாதத்தை விலைக்கி வாங்கிக்கொண்டு தங்களுடைய மதத்திற்கும், ஆசாரத்திற்கும் கலை, நாகரீகம் முதலியவற்றிற்கும் விரோதிகளாகப்புறப்பட்டிருக்கிறார்களென்று" அந்த முஸ்லீம் தலைவர் சொல்லி விட்டு. இத்தகைய மதாபிமானமற்ற வியவஸ்தா நாசகர்களான ஹிந்துக்களுடன் மதாபிமான முள்ள மஹம்மதியர்கள் சேர்ந்து வாழ முடியாதென்றும் சொன்னார்.

இந்துக்களில் சிலருடைய மதாபிமானத்தைப்பற்றி இவர் மேற்கண்டவாறு கேலி செய்தது நியாயமற்றதாக ஆகாதென்று இந்த நவீன ஸ்திரீகளின் பிதற்றலிலிருந்து நிச்சயமாகிறதல்லவா? உன்னத நாகரிகம் பெற்று உலகத்தையே ஆட்டிவைத்துவரும் ஜர்மனியில்கூட ஸ்திரீகளுக்கு பலவித வரையறைகளை ஏற்படுத்தி அவர்களை வீட்டுவேலைகளிலே ஈடுபடும்படி ஹிட்லர் செய்திருக்கும் விஷயம் யாவரும் அறிந்ததே.

நமது இந்திய ஸ்திரீகளுக்கு கிருஹ கார்யங்களில் ஈடுபடுவதே உத்தம தர்மமாக விதிக்கப்பட்டிருப்பதின் நோக்கத்தை விவேசன சக்தியில்லாதவர்கள் அறிவது சிரமமானதே. நம் ஸ்திரீகள் திரவ்ய ஸம்பாத்தியத்திற்காகவோ வேறு எதற்காகவோ, சரீரத்தைக் கொண்டு உழைத்துக் கஷ்டப்பட வேண்டிய நிர்ப்பந்தம் நமது நாகரிகத்தில் கிடையாது. "பார்யை" என்ற பெயரைக் கொண்டே பார்த்தால், நமது ஸ்திரீகள் புருஷர்களால் போஷிக்கப்படவேண்டியவர்களென்ற தர்ம தத்வம் வெளியாகிறது. இது அடிமைத்தனத்தை காட்டுவதாகப் பிதற்றுவதும் பொருந்தாது நமது மனு முதலிய மஹர்ஷிகளே நம் ஸ்திரீகளை கிருஹத்தில் எஜமானிகளாக வர்ணிக்கிறார்கள். "வீட்டுப் பண்டங்களுக்கு பத்நீயே யஜமானியாவாள்" என்று வேதமே மொழிகிறது. கிரஹத்தின் வரவு. செலவுகள், சிசுபரிபாலனம், கிரஹவைத்யம், கிருஹ ஸுகாதாரம் போன்ற எல்லா விஷயங்களிலும் பார்யைக்கு சாஸ்திரத்தினாலும் ஆசாரத்தினாலும் மிகுந்த ஆதிபத்யமிருந்துவருவதை யார் மறைக்கமுடியும்? பரலோகஸாதனமாயுள்ள யாகாதி ஸகல தர்மங்களிலும் ஸ்திரீகளுக்குப் புருஷனைப்போல் ஸம அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்திரீயில்லாவிடில் சில தர்மங்களுக்குப் புருஷன் அதிகாரியல்லவென்றும் ஒதுக்கப்பட்டிருக்கிறான். இப்படி இஹ பர விஷயங்கள் யாவற்றிலும் மஹோன்னதநிலைமையிலிருந்து வரும் நமது குலஸ்திரீகளுக்கு மேற்றிசையை ஆதாரமாகக்கொண்ட நாகரிகாபாஸ ஆசாரங்கள் வேண்டுமென்று முத்துலக்ஷ்மி ரெட்டி போன்ற சிலர் பிதற்றுவதை எந்த விவேகியும் அங்கீகரிக்கமுடியாது. முத்துலக்ஷ்மி ரெட்டி போன்றவர்களின் வாய்வலையில் சிக்குண்டு தடுமாறி நிற்கும் சில வியவஸ்தைவிட்ட ஸ்திரீகள் இருக்கக்கூடுமாயினும் கோடிக்கணக்கான குலமணிகளான ஸ்திரீ ரத்னங்கள், இன்றும், என்றும் இருந்து நம் தேச கௌரவத்தை நிலைநிறுத்தி வருவார்களென்பது நிச்சயமே.

நவீன ஸ்திரீகளின் தற்கால விபரீதப் போக்கை பலமாகக் கண்டித்து ஸமீபத்தில் காந்திஜி வெளியிட்ட அறிக்கையும், தேசத்தில் நடந்து வரும் பல விபரீத ஸம்பவங்களையும் இச்சமயத்தில் நம் ஸ்திரீகள் கவனித்து ஜாக்ரதையுடனிருப்பது அவச்யம்.

## குறிப்புகள்.

### கட்டாய ஹிந்தியை கைவிடயோஜனை?

சென்னைமாகாணத்தில் தோன்றியுள்ள ஓர் சிறிய அமைதியின்மை ஒழிய சென்னை சட்டஸபையில் இரண்டு தினங்களுக்குமுன் ஓர் ஸூசனம் தோன்றியிருக்கிறது. கட்டாய ஹிந்தியை மாணவர்களோ, பெற்றோர்களோ ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லையென்றும் பதினாயிரக்கணக்கான மாணவர்கள் ஹிந்தியை உத்ஸாஹத்துடன் படித்துவருவதாயும் கனம் பிரதம மந்திரி பெருமை சொல்லிக்கொண்டார்.

இதையே வியாஜமாகக்கொண்டு எதிர்கக்ஷி மெம்பர் ஒருவர், ஹிந்தியில் கட்டாய அம்சத்தை நிவர்த்தி செய்யக்கூடாதாவென்று கேட்டார். மாணவர்களும் பெற்றோர்களும் வலுவிலேயே, எவ்விதத் தூண்டுதலுமில்லாமலேயே ஹிந்தி கற்றுவருகையில் அதைக் கட்டாயமாக நிர்ப்பந்திப்பதற்கு அவசியமில்லாமல் போய்விட்டபடியால் "கட்டாய" அம்சத்தை எடுத்துவிடலாமென்று அந்த மெம்பர் கேட்டுக்கொண்டார்,

இந்த வேண்டுகோள் கனம் பிரதம மந்திரிக்கும் பிடித்ததுபோலும்? உடனே அவர் ஸமாஸ யோஜனையை ஸர்க்கார், கவனிக்கக் கூடுமென்றும், ஆயினும், ஹிந்தி எதிர்ப்பை ஒரு ராஜ்ய எதிர்பிரசாரத்திற்கு உபயோகிப்பதில்லையென்று உறுதிமொழி கூறினால் "கட்டாய". அம்சத்தை எடுத்துவிடமுடியுமென்றும் கனம் பிரதம மந்திரி பதில் கூறினார்.

எப்படியும் கட்டாய ஹிந்திக் கிளர்ச்சியை தடுத்து அமைதியை ஏற்படுத்திக்கொள்ள ஸர்க்கார் வழி கண்டுபிடித்துக்கொண்டது வரவேற்கத்தக்கதே. தமது கொள்கைக்கு ஏதோ ஒரு வழியில் ஜயம் கிடைத்துவிட்டதாக ஆத்மதிருப்தியடைந்து பிடிவாதத்தை நழுவவிட கனம் மந்திரி உத்தேசிப்பதும் நமது மாகாணத்தின் அதிர்ஷ்டமே.

ஹிந்தி எதிர்ப்புக்காரர்கள் கட்டாய அம்சத்தை எடுத்துவிடவேண்டுமென்றே கேட்கிறார்கள். அது இஷ்டபாடமாக இருப்பதில் அவர்களுக்கு ஆக்ஷேபமில்லை. ஆகையால் கனம் மந்திரி கட்டாயத்தை எடுத்துவிட்டு, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் அதை இஷ்டபாடமாக வைத்து ஹிந்தியை அபிவிருத்திசெய்ய முயற்சிக்கலாம். இதன் மூலம் ஹிந்தி அதிகம் பிரசாரமடையக்கூடும்.

இந்த நல்ல ஸந்தர்ப்பத்தை இரு கக்ஷியாரும் நழுவவிடாமல் வேலை செய்து தென்னிந்தியாவில் தோன்றியுள்ள வகுப்பு த்வேஷத்தை அடக்கவேண்டியது அவச்யம். ராஜ்ய எதிர்ப்பிரசாரத்திற்கு ஹிந்தியை உபயோகிக்கக்கூடாதென்று கனம் மந்திரி கோரும் உறுதிமொழியும் நியாயமே. எதிர்கக்ஷியாருக்கு ஹிந்தி ஒன்றுமட்டும் ஆயுதமன்று. இன்னும் எவ்வளவோ உண்டு. இதில் ஒரு வழியாக ஸமாதானம் ஏற்பட்டால் கனம் மந்திரி பிராம்மணர்களைக் குறை கூறவும், பார்த்தஸாரதிக் கோவிலை பலியிடவேண்டுவதும் அவச்யமில்லையல்லவா?



161

### தேவஸ்தானச்சட்ட திருத்தம்.

சென்னை சட்டஸபையில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு கனம் ராஜன் பதிலளிக்கையில், தேவஸ்தான சட்டத்தைத் திருத்த காங்கிரஸ் மந்திரிகள் உறுதி கூறியது வாஸ்தவமென்றும், அது விஷயமாக ஒரு திருத்த மசோதாவும் தயாராயிருப்பதாயும், ஆயினும் மதஸம்பந்தமான இந்த விஷயத்தில் ஸர்க்கார் அவஸரப்பட்டு ஒரு கார்யத்தைச் செய்து விடுவது விரும்பத்தக்கதில்லையென்றும், ஆகையால் தாமதம் நேரிடுவது நியாயந்தானென்றும் சொன்னதாகத் தெரிகிறது.

தேவஸ்தானச்சட்டத்தை எதிர்த்த காங்கிரஸ் மந்திரி, சிறுகச்சிறுக அந்த சட்டத்திற்கு ஆதரவு காட்டுகிறவராக மாறிவிட்டதை ஏற்கனவே நாம் எடுத்துக்காட்டியிருக்கிறோம். காங்கிரஸ் ஸர்க்கார் ஏற்பட்ட பிறகு எந்தச்சட்டமும் நினைத்தமாத்திரத்தில் வெகு ஜரூராக நிறைவேற்றப்படுவது வழக்கமாயிருந்துவருகிறது. பொதுஜனங்களைப் பாதிக்கக்கூடியமசோதாக்களை நிறைவேற்றுவதில் இவ்வளவு அவஸரம் காட்டக்கூடாதென்று கண்டனம் தோன்றியிருந்தும் கூட மந்திரிகள் அதை லக்ஷ்யம் செய்யாமலே கார்யம் நடத்திவருகிறார்கள். எந்த மசோதாவையும் அவஸரமாக முடிவு செய்வதே தங்கள் முக்ய கார்யமென்று பிரதமமந்திரி கூறியுள்ளார்.

அத்தகைய புத்திப்போக்குள்ள மந்திரிகள் தேவஸ்தானத் திருத்தமசோதா விஷயத்தில்மட்டும் இவ்வளவு தாமதம்காட்டுவதின் கருத்து என்னவென்பதை ஊஹித்தறிவது கஷ்டமல்ல.

மேலும் இது மதஸம்பந்தமான விஷயமாகையால் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று மந்திரி சொல்லுவது ஒரு வழியில் நியாயமே. ஆயினும் மத உரிமைகளுக்கு பங்கம் ஏற்படக்கூடாதென்கிற கொள்கை இந்த ஸர்க்காருக்கு இருப்பதாகக் காட்டிக்கொள்வது நம்பக்கூடியதா? மலையாள ஆலயப் பிரவேசச் சட்டத்தில் இந்தக்கொள்கை உண்மையென்று காட்டிக் கொள்ளப்பட்டதா?

மேலும் கனம் மந்திரி இம்மாதிரி சொல்லியிருப்பதிலிருந்து ஆஸ்திகர்களிடையில் புதிய பயமும் தோன்றியிருக்கிறது. மதவிஷயங்கள் குறுக்கிடுவதாக மந்திரி கூறுவதால் புதிய திருத்த மசோதாவில் ஏதோ மதஉரிமைக்குப் பாதகம் விளைக்கக்கூடிய அம்சத்தைப் புகவிட மந்திரிகள் உத்தேசிப்பதாக ஊஹிக்கக்கூடியதாயிருக்கிறது. பழைய சட்டத்தைத் திருத்தும் உத்தேசம் மட்டுமிருந்தால் அதில் மதவிஷயம் குறுக்கிடுவதாகப் பேச இடமில்லை. ஆகையால் புதிய மசோதாவில் தேவாலய விஷயமாக பொது ஜனங்கள் விரும்பக்கூடாத பிரிவுகளைப் புகுத்த உத்தேசித்திருப்பது விளங்குகிறது. புதிய மசோதாவிலிருந்து என்னென்ன பூதங்கள் கிளம்பப்போகின்றனவோ தெரியவில்லை.

### திருப்பதிச் சட்டத்தில் திருத்தம்?

தேவஸ்தானச் சட்டத்தைத் திருத்தத் தயங்கும் மந்திரி திருப்பதி தேவஸ்தானச் சட்டத்தைமட்டும் திருத்த ஓர் மசோதாவை விரைவில் கொண்டுவருவாரென்று தெரிகிறது. இதற்குக் காரணம் ஸர்க்காரின் பணமுடையே போலும்? பொது சுகாதார மசோதாவுக்குப் பணம் வேண்டும், மதுவிலக்கு நஷ்டஈடுக்குப் பணம் வேணும். இந்த ஸந்தர்ப்பத்தில் திருப்பதிப் பெருமாள் பணத்தை மறந்துவிடுவது நியாயமா? ஆதலால்தான் அவஸரமாக ஒரு மசோதா வரப்போகிறது. திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து அவ்விடத்திய ஸுகாதார ஏற்பாடுகளை அதிகரிக்க தேவஸ்தான கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்க இந்த மசோதா உத்தேசிக்கிறது. ஸுகாதார ஏற்பாடுகளைக் கவனிக்கவோ, செய்துகொடுக்கவோ அவ்விடத்திய முனிஸிபாலிடி கட்டுப்பட்டிருக்கிறது. ஜனங்களிடமிருந்து இதற்காக வரியும் வசூலிக்கப்படுகிறது. அப்படியிருக்க தேவஸ்தானத்தின் தலையில் இந்தச் செலவைக் கட்டிவிட யோசிப்பது நியாயமா? இந்தக் கொள்கையை காலக்கிரமத்தில் எல்லா தேவஸ்தானங்கள் விஷயத்திலும் அமுலுக்குக் கொண்டுவர முயற்சிக்கப்படலாம். அந்தந்தக் கோவில் உள்ளவிடங்களிலிருக்கவேண்டிய ஸுகாதாரங்களை கோவில் செலவிலேயே நடத்த முற்பட்டுவிட்டால் ஸர்க்காரின் பணமுடைக்கு ஸௌகர்யமல்லவா?

திருப்பதிப் பணத்திலிருந்து குஷ்டரோக ஆஸ்பத்திரி கட்ட ஏற்பாடு செய்வதும் எந்த நியாயத்தில் சேர்ந்ததென்று விளங்கவில்லை. ஸேவார்த்திகள் இத்தகைய ஸம்பந்தமற்ற கார்யங்களுக்காகவா ஸ்வாமிக்குக் காணிக்கை செலுத்துகின்றனர்? இத்தகைய ஆஸ்பத்திரிகளைக் கட்டும் பொறுப்பும் கடமையும் ஸர்க்காரையல்லவோ சேர்ந்தது? காங்கிரஸ் மந்திரிகள் பணமுடைகாரணமாக தேவஸ்தானப்பணங்களின்மீது கண்வைக்க ஆரம்பித்துவிட்டதை ஜனங்கள் கவனித்து ஸரியான ஸமயத்தில் கிளர்ச்சி செய்யாமல் போனால் எல்லாக் கோவில்களுக்கும் இந்தக் கஷ்டம் காலக்கிரமத்தில் ஏற்படப்போவதைத் தடுக்கமுடியாது.

கோவில் பணங்களை ஸர்க்கார் எடுத்துக் கொள்ள பாத்யமிருப்பது நியாயமானால், ஏழையான கோவில்களுக்கு ஸர்க்கார் கஜானாவிலிருந்து பணவுதவி செய்வார்களா!

### எங்கும் ஜாதித்வேஷம்.

ஜாதிபேதத்தையும், ஜாதித்வேஷத்தையும் அடியோடு நீக்கிவிடவேண்டுமென்று உலக நவீன நாகரிகர்களின் கூற்று. இந்தியர்களில் சீர்திருத்தக்காரர்களாகத் தோன்றியுள்ளவர்கள் இந்த விஷயத்தில் தலைதெரியாமல் குதிப்பதைக் காண்கிறோம்.

ஆயினும் உலகத்தில் ஓரிடத்திலாவது ஜாதிபேதமோ ஜாதித்வேஷமோ இல்லாத தேசத்தை பார்க்கமுடியவில்லை. ஐரோப்பா, அமெரிக்கா போன்ற எல்லாவிடத்திலும் ஜாதிபேதத்தை அடிப்படையாகக்கொண்டே தேச நிர்வாஹம் நடத்தப்பட்டுவருவதை மறைக்கமுடியாது. தம் தேசத்தான், தம் ஜாதியான் வாழவேண்டும். மற்றவர்கள் எப்படித் தொலைந்தாலும் கேள்விமுறையில்லை. இதர ஜாதியானுக்கு எவ்விதத்திலும் இடமளிக்கக்கூடாது. இந்த முக்ய கொள்கையுடனே ஐரோப்பிய ராஜ்யங்களும் நடைபெறுகின்றன. பிரஞ்சுக்காரன், ஆங்கிலேயன், ஜர்மானியன், ருஷியன், டச்சுக்காரன், என்றெல்லாம் கணக்கற்ற ஜாதிபேதம் பாராட்டப்படுகிறது.

எல்லோரும் வெள்ளையர்களென்ற ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்போல் தோன்றினாலும் அந்தந்த தேசத்தில் பிறந்தவனென்கிற காரணமாக பிறவி ஜாதிபேதம் அங்கு ஊன்றிக்கிடக்கிறது.

ஒரு ஜாதியான், மற்றொரு ஜாதியானுடைய தேசத்தில் வசிப்பதாயிருந்தால்கூட அதற்குச் சட்டதிட்டங்களும் கணக்கற்ற பந்தோபஸ்துக்களும் செய்யப்பட்டிருப்பதை மறைக்க முடியாது. உலகம் முழுவதும் இன்று இதுதான் நிலைமை.

வெள்ளையர்களாகிய யூதர்களை ஐரோப்பாவிலிருந்தே விரட்டிவிட கிளர்ச்சி நடக்கிறது. ஜர்மனிமீது பழி சொல்லப்பட்டதாயினும் எல்லா ஐரோப்பிய தேசங்களும் மறைமுகமாக யூத ஜாதிக்கு இடமளிக்க மறுத்துவருவது நிதர்சனமானது. பாலஸ்தீனப், இந்தியா முதலிய, சப்பாணிகள் நிறைந்த தேசத்திற்கு யூதர்களைத் தள்ளிவிடுகிறார்கள். அரேபியர்கள் விழித்துக்கொண்டு இதை ஆக்ஷேபிக்கிறார்கள். இந்தியர்களோ தூங்குகிறார்கள்.

இந்தியா உலகத்திற்கு ஓர் திறந்த வீடு. இங்கு யார் வேண்டுமானாலும் எவ்வித நிபந்தனையுமின்றி நுழையலாம். கேட்பாரில்லை. "ஒண்டவந்த பிடாரி ஊர் பிடாரியை விரட்டலாம். ஹிந்துக்களைவிட அதிக உரிமை கூடக்கேழ்க்கலாம்.

தென்னாப்பிரிக்காவில் இது பலிக்கவில்லை. அங்குள்ள இந்தியர்களின் உரிமையை காந்திஜீ ஸத்யாக்ரஹம் செய்து சிறிது ஸ்தாபித்துக் கொடுத்தார். இப்போது மீண்டும் அங்கு இந்தியர் வாஸனையே கூடாதென்கிறார்கள். இந்தியர்கள் வெள்ளைக்காரருடன் சேர்ந்து வஸிக்கக்கூடாது. தனியான இடத்திலேயே வஸிக்கவேண்டும். நிலம், வீடு முதலிய சொத்துக்களை இந்தியர்கள் வாங்கமுடியாது. சிற்சில ரோடுகளில் இந்தியர்கள் நடமாடவும் கூடாது. இம்மாதிரி பலவித நிர்ப்பந்தங்களை மறுபடியும் சட்டமூலமாக ஏற்படுத்த அந்த தேச ஸர்க்கார் முயற்சிக்கிறார்கள். இது விஷயமாக இந்தியாவில் கலக்கம் தோன்றியுள்ளது.

இந்தியாவில் ஹிந்துக்களுக்குள்ளேயே நாம் ஜாதிபேதம் பாராட்டுவதால்தான் வெளிதேசங்களில் நம்மை அன்னியர்கள் கீழ்த்தரமாக நடத்துவதாக இந்திய ஆசாரத்திருத்த வாதிகள் பிதற்றுவதுண்டு. ஆனால் அது இப்போது பத்தாம் பசலிப்பேச்சாக ஆகிவிட்டது. ஸகல தேசங்களிலும் ஸ்வஜாதி அபிமானமும் பிற ஜாதியிடம் த்வேஷமும் பாவிக்கிடக்கையில் மேற்கண்ட வாதம் அர்த்தமற்றதாகிவிட்டது. இந்தியாவைவிட மற்ற நாகரிக நாடுகளிலேயே ஜாதிக்கொடுமை மிகக்கடுமையாயிருக்கிறது. ஆகையால் தென்னாப்பிரிக்கா வியாஜத்தைக் காட்டிச் சிலர் இந்தியாவில் ஜாதிபேதத்தை ஒழித்துவிடவேண்டுமென்று கூச்சலிட எவ்வித நியாயமும் இனிமேல் கிடையாதென்பதை அவர்கள் அறிவார்களாக.

தென்னாபிரிக்கா ஜாதித் வேஷத்திற்கும், ஹிந்துக்களுள் மதஸம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் ஜாதி வித்யாஸத்திற்கும் மிகுந்த தாரதம்யமுண்டு.

நல்ல வேளையாக இந்திய சட்டசபையில் அன்னியர் குடியேற்றத்தை சாச்வதமாகத் தடுக்க ஒரு மசோதா வந்திருக்கிறது. இது நிறைவேறினால் இந்தியர்களின் பௌருஷம் வெளியாகும்.

### கும்பகோணம் டிரஸ்டி நியமனம்.

26உ மாலையில் ஸ்ரீமான் ஆர். கந்தசாமி மூப்பனார் தலைமையில் கூடிய தேவஸ்தான கமிட்டிக்கூட்டத்தில் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி ஆலயத்தின் டிரஸ்டியாக நமதுநகர் பிரபல வக்கீல் ஸ்ரீமான் எம். கே. வைத்திநாத ஐயரை மறுபடியும் நியமனம் செய்தார்கள். மற்றும் அநேக ஆலயங்களுக்கு டிரஸ்டிகளை கமிட்டியார் நியமனம் செய்தனர்.

### அருவானூர்.

சாதுர்மாஸ்ய யாகம்.

சில வாரங்களுக்கு முன்பரித்தியூர் பிரம்ம ஸ்ரீ கோதண்டராமதீக்ஷிதருக்கு அருவனூர் என்னும் ஒரு சின்ன கிராமத்தில் ஐந்து நாள் சாதுர்மாஸ்யம் என்னும் யாகத்தையும் அடுத்த தினத்தில் சாதுர்மாஸ்யாங்கமான பசுபந்தமும் நடத்திவைத்து அதற்காகஅக்னிஹோத்ரம்ஸ்ரீ உபய வே. தாதாசார் முதலிய அநேக வித்வான்களை வரவழைத்து யக்ஞவிரமகாலங்களில் உபன்யாஸங்களையும் நடத்திவைத்து ஷியாகங்களில் இரவும் பகலும் பிராம்மணஸந்தர்ப்பணங்கள் நடத்திவைத்ததும் ரொம்பவும் ஆனந்திக்கத்தக்கது. ஒரு நிருபர்

# கும்பகோணம் வர்த்தமானம்.

[நமது விசேஷ நிருபர்]

கும்பகோணம் மார்- 29

பிரபல சூதாட்ட வழக்கு. இந்நகர் நாகேஸ்வர் ஸ்வாமி கோவில் வடக்கு விதியில் ஓர் வீட்டில் 26 பேர்கள் சூதாடியதாக போலீஸார் எடுத்துக் கொண்ட நடவடிக்கையும், அதன் பேரில் சப் கலெக்டர் முன்பாக விசாரணைக்கு வந்த வழக்கின் விவரத்தையும் வாசகர்கள் அறிவார்கள். இவ்வழக்கை தஞ்சை சப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டார் விசாரணைக்கு ஜில்லா மாஜிஸ்டிரேட் மாற்றி விட்டார். இனி இவ்வழக்கு தஞ்சையில் விசாரணை நடக்கும்.

சைக்கிள் கைபிடியால் அடித்ததாக. உச்சிப்பிள்ளையார் கோவிலருகில் ஸ்ரீ சோமசுந்தரன் என்பவரை சைக்கிளின் கைப்பிடியால் அடித்து மண்டையில் காயம் ஏற்பட்டதாக கன்னையன்மீது போலீஸார் கொண்டு வந்த கிரிமினல் வழக்கை சப்மாஜிஸ்டிரேட்டு விசாரணை செய்து எதிரிக்கு ரூ 50 அபராதமும் கோர்ட்டு கலையும் வரையில் காவல் தண்டனையும் விதித்தார். இச்சம்பவம் சென்ற டிஸம்பர் மாதத்தில் ஹிந்தி எதிர்ப்பாளர் கூட்டம் கலைந்து போகும் பொழுது கூட்டத்திலிருந்த எதிரி ஷியாரைத் தாக்கினதாக வழக்கில் கூறப்பட்டது.

ராஜீய மஹா நாடு. வருகிற ஏப்ரல் மாதம் கடைசீ வாரத்தில் கும்பகோண நகர் இரண்டாவது ராஜீய மகா நாட்டைக்கூட்ட வேண்டி நகர காங்கிரஸ் கமிட்டி உப தலைவர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய பிள்ளையை உபசாரணைக் கமிட்டித்தலைவராக நியமித்தும், ஸ்ரீ சி. எல் ஆராமுதனை பொதுக்காரியதரிசியாகவுநியமம் னம் செய்திருக்கிறார்கள்.

முனிஸிபல் கூட்டம். நகர சபையின் கூட்டம் 23உ நடந்தது. குறிப்பிடத்தக்க ஸம்பவம் இல்லை. என்றாலும் கசுமலங்களை எடுக்கரூ 2975 யில் ஒரு லாரியும், சாக்கடை தண்ணீர் எடுக்க ரூ 3225 யில் ஒரு லாரியும் வாங்குவதென்று வெகு நேரம் வாதிக்கப்பட்ட பின் முடிவு செய்தார்கள்.

பச்சயப்பமுதலி தெரு பொருமை. எல்லை கடந்த பொருமையை பச்சயப்ப முதலி தெரு வாசிகள் அடைந்தவர்களென்று கூற வேண்டும். தர்மபுத்திரர் இத்தெருவார்களிடமிருந்தே பொருமையை கற்றுக்கொண்டார் போலும்! இந்ததெருவில் முனிஸிபாலிடியார் கருணையுடன் இரண்டு முழம் மண் சாச்வதமாக இருக்கும் படி கிருபை புரிந்து விட்டார்கள். இத்தெருவில் வக்கீல்களும், தனிகர்களும் இருப்பதால் வண்டிகள், மோடார்கள், சைக்கிளகள் குறைவின்றி வந்து போகிறது. தெரு வாசிகளை விட ஷி வண்டியில் சவாரி செய்பவர்களும் அதிகப்பொருமை வகிக்க நேரிட்டிருக்கிறது. புழுதிக்கு எல்லையுமில்லை.' இறம்புருக்கி' (டியூபர்குலாஸிஸ்)வியாதியை இத்தெருவிலிருந்து ஜனங்கள் அதிகமாக அடைய தலைநகரமாக இதை ஏற்படுத்திவிட்டார்கள் போலும்! முனிஸிபாலிடியை இதை சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று அபவாதமாய் கூறலாமா? ஒருக்காலும் கூடாது! காங்கிரஸ் கவுன்ஸிலர்களன்றோ ஆட்சி புரிகிறார்கள்!!

---

விற்பனை வரி மசோதாவை எதிர்ப்பதா? விற்பனை வரி மசோதாவை வியாபாரிகள் ஆரம்பத்தில் கன துடியாக கண்டனம் செய்தது சற்று வலுத்து விடப்போகிறதே என்ற கவலை காங்கிரஸ் உலகில் ஏற்பட்டது. உடனே விற்பனை பில்லை ஆதரிப்பதான கூட்டங்கள் நகரங்கள், பின்பு மெதுவாக கிராமங்களிலும் புகுந்து விட்டது. 24ந்தேதி சாத்தனூர், ரத்துரை, நீலத்தநல்லூர், இன்னம்பூர் முதலிய கிராமங்களில் "ஆதரவு" கூட்டங்கள் நடந்ததாக காங்கிரஸ்காரர்களால் பறைசாற்றப்பட்டுவருகிறது. வியாபாரிகளும் தங்கள் கஷ்டங்களையும், கடமைகளையும் உணர்ந்து தீவிரமாய் பிரசாரம் செய்ய வேண்டாமா? சில ஆதரவு கூட்டங்களில் காங்கிரஸ்காரர்கள் சட்ட சபை ஸ்தானங்களை சட்டம் பாஸாகா விட்டால் ராஜினமா செய்வதாய் பூசாண்டி காட்டியும் பேசுகின்றனர். கபிஸ்தலத்தில் வட தஞ்சை காங்கிரஸ் கமிட்டியிலும் விற்பனை வரிக்கு ஆதரவு கிடைப்பதாக உத்திரவாகி விட்டது. இனி என்ன வேண்டும்? வரி வியாதியே போக்காவிடில், தேக வியாதிகள் எப்படி போக முடியும் என்று கேட்கிறது நியாயமே!

வட தஞ்சை ராஜீயக் கூட்டம். பல தடவை கூடியதால் ஏற்பட்ட நன்மையின் பலனாக மறுபடியும் இவ்வருடத்தில் குறைப்பட்டுப்போகாமலிருக்க வேண்டி அய்யம் பேட்டையில் ராஜீய மகாநாட்டைக்கூட்டி விட கபிஸ்தலத்தில் வட தஞ்சை காங்கிரஸ் கமிட்டி முடிவு செய்து விட்டதாம்.

உற்சவம். ஸ்ரீ ராம நவமி உற்சவம் இந்நகரில் வழக்கம் போல் ஸ்ரீ ராமஸ்வாமி கோவிலில் டிரஸ்டிகள் துவக்கி சிறப்பாக நடத்தி வருகிறார்கள். இது போன்ற உற்சவங்களைப் பிரசுரிக்க சிலபத்திரிகைகள் கூச்சப்படுகிறது அது, நாடு முன்னேற்றமடைந்து வருவதை காட்டி விட்டது போலும்!

ஒரு உபயம். ஸ்ரீ ஸீதாபிராட்டியாருக்கு சாற்றப்பட்டிருந்த வெள்ளிக் கிரீடத்துக்கு தங்க முலாம் (ரூ 50 பெறுமானமுள்ள தங்கத்தை) சென்னை அட்வகேட்டு ஸ்ரீமான் கே. எஸ். தேசிகன், அவர் சகோதரர் ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி அய்யங்காரும் (அட்வகேட்டு) செய்து 24-3-39 ல் சாத்தினார்கள்.

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி சாஸ்திரி ஞாபகார்த்தமாக. காலஞ் சென்ற ஸ்ரீமான் R கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரியார் (ரிடயர்டு ரிஜிஸ்டிராரும் தாசில் ஸ்ரீ ஐயாசாமி சாஸ்திரியார் போன்) குடந்தை 'கோபால ராவ்' லைபரிக்கு பல அரிய ஆங்கில வேதாந்த புஸ்தகங்கள் சுமார் 1000 த்துக்கு மேலாக தானம் செய்திருக்கிறார்கள். ஷி யார் வாழ்நாளில் குறிப்பிட்டபடி அவர் சகோதரர் ஸ்ரீமான் R. கோபாலஸ்வாமி சாஸ்திரியார்- காலமானவரின் பெயரை அச்சிட்டு புத்தகங்களை கோபால ராவ் லைபரிக்கு கொடுத்து விட்டார். இதைத் தவிர பல ஓலைச்சுவடிகள் சம்ஸ்கிருத அரிய நூல்கள் ஆயிரக் கணக்கில் தஞ்சை சரஸ்வதிமால் லைபரிக்கும், சென்னை யூனிவர்ஸிடிக்கும் கொடுக்கப் பட்டிருக்கிறது.

ந. வி. நி.

---

# வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா).

ஒரு விதத்தில் நலமே! மாளவ்யாஜீ விரும்பினார்! பிர்லா கட்டினார்! காந்திஜீ திறந்தார்!! இப்படி த்ரிமூர்த்திகள் கூடி ஓர் அதிவிசித்ர கோவிலை கட்டி எல்லாரும் நுழையும்படி ஏற்பாடு செய்தனர்! அப்படி செய்வதைவிட்டு உள்ள கோவிலை ஏன் கெடுக்கவேண்டும்? பொள்ளாச்சியில் பஞ்சமருக்கென தனி கோவில்!

இன்னும் விபரீதமா! டாக்டர் ராஜன் ஹிந்து மதபரிபாலன ஸபையை சீர்திருத்த என்நாமதமென்பதற்கு பதில் கூறும்போது மதத்தையே பாதிக்கும் ஓர் விஷயத்தை எளிதில் முடிக்க முடியாதென்கிறார்? இதிலிருந்தே திருந்திய சபை எப்படியிருக்குமென விளங்குகிறது?

உலகயுத்தமா? ராணுவ பலத்திமிரால் எது வ்யாஜம்? எப்போது யுத்தம் துவக்கலாம்? என உறுமுகின்றன! ஸமாதான புருஷனென்னும் சேம்பர்லேன் த்வனியும் கேட்கிறது. மூலகாரணம் காமமும் க்ரோதமுமே!

அஹிம்ஸோபதேசம்!! வழக்கப்படி காந்திஜீ, அஹிம்ஸையே ஹிட்லரை அடக்கும் வழி என்கிறார். விசித்ரமான உலகில் எது நடக்கும், எது நடக்காதென கூற இயலாது

ஓயாத சண்டை!! தர்ம ஸ்தாபனத்திற்காக ஆக்ஷியை ஏற்றதாககூறும் தேசியஸபை காலத்தில் பலவகையான சண்டைகள் ஓயாமல் நடக்கின்றன!! பல தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்திருக்க, மந்திரிமார்கள் ஊர் சுத்தலைவிடவில்லை!! எதற்கோ?

ஆவந்த்யகண்டம்! பதினெண் ப்ராண ப்ரவசன ஸபை ஆதரவில் மஹாஸ்காந்தம் காசிகண்டம் பூர்ணமாகி அடுத்தவாரம் சென்னை ஸ்ரீ சங்காமடத்தில் ஷி 5 வது கண்டம் உபன்யஸிக்கப்படும் இது 3 அவாந்தா கண்டமும் 387 அத்யாயமுமுளது.

அநச்நங் ஸம்ஹிதா பாராயணம்! உத்ஸவ காலங்களில் பகவானது பின்னே க்ரம பாராயணம் செய்வது எந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வழக்கமென ஊஹிப்பது சிரமமென்றும், தர்மநூல்களில் ஷி பாராயணம் மஹாபலப்ரதமாக கூறப்படுகிறது என்றும் அந்த ஸம்ப்ரதாயம் அடியேனது ஆசார்யனால் அடியேனது ஜன்மபூமியில் பங்குனி உத்திரத்தில் 28 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது.

ஓர் பிரார்த்தனை! அடியேனது ஆசார்யர் பரமபதஞ்சென்றதால் இவ்வாண்டு ஷி பாராயணம் திருவாமாத்தூரெனும் திவ்யக்ஷேத்திரத்தில் அடியேனால் நடத்தப்பட்டு வருகிறது!! உத்தம தர்மத்தில் மனமுவந்து பொருளுதவிசெய்ய விரும்புவோர் வே. ஸோ. சர்மா, 154. தம்புசெட்டி வீதி, சென்னை என்றவிடத்திற்கனுப்பினால் நன்றியுடன் ஏற்கலாகும்.

## டவுன் ஹைஸ்கூல் 75-வது வருஷ கொண்டாடம்.

டவுன் ஹைஸ்கூல் 75-வது வருட பூர்த்தி வைபவம் சென்னை கவர்மெண்டுமந்திரிகனம் C. J. வார்கி தலைமையில் 4-4-39-ல் மாலை 5 மணிக்குநடைபெறும் என்று ஸ்கூல் அதிகாரிகள் அழைப்புக் கடிதம்அனுப்பிருகின்றனர்.

---



163

# சுதேச வைத்யமும் வைத்ய இலாகா மந்திரியும்.

(கே. ஜி. நடேச சாஸ்திரி.)

சென்ற வெகுதான்யஞு பங்குனிமீ 3உ (16—3—39) வெளிவந்த 'ஆர்யதர்ம'த்திலூரில் கனம் வைத்ய இலாகா மந்திரியவர்கள் மார்ச்சுமீ 4உ பேசியதின் ஸாரம், தொன்றுதொட்டு இந்நாட்டில் விளங்கிவரும் ஆயுர்வேத, ஸித்த, யூனானி, வைத்யங்களின் முன்னேற்றத்திற்கு பாடுபடவில்லையென்றும் எல். ஐ. எம். என்னும் ஓர் புதிய வைத்ய முறையை உண்டுபண்ணி அதை நாடெங்கும் பரவச்செய்யவேண்டுமென்னும் நோக்கத்துடன் அரசாங்க இந்திய வைத்ய கல்லூரியை ஆதரித்து பலப்படுத்தவே பிரயத்னம் செய்கிறார் என்று நிரூபித்தேன். இதுவே உண்மையென்பதை விளக்குவது போல் சென்ற திங்கட்கிழமை (13—3—39) மேற்கூறிய இந்திய வைத்ய கல்லூரியில், சென்னை உயர்தர நியாயஸ்தலம் (ஹை கோர்ட்) கனம் நியாயாதிபதி ஸ்ரீஸோமய்யா அவர்களின் தலைமையின்கீழ் நடந்த ஓர் கூட்டத்தில், சென்னை சட்டசபை டிபுடிஸ்பீகர் டாக்டர், லக்ஷ்மீபதி அவர்களின் பார்யை ஸ்ரீமதி ருக்மணியம்மாள் பேசியதில் நன்கு விளங்குகிறது. அவர்கள் பேசியதாவது, "வெவ்வேறு வைத்யங்களையும் ஒன்று சேர்த்து அதிலிருந்து ஓர் புதிய வைத்யம் உண்டுபண்ண வேண்டுமென்பதே" கனம், மந்திரியவர்களின் அபிப்பிராயத்தை சட்ட சபை டிபுடீஸ்பீகாவர்கள் இவ்விதம் விளக்கிக் காட்டும்போது தேசிய வைத்யங்களின் விஷயத்தில் காங்கிரஸ் அரசாங்கத்தாரின் அபிப்ராயம் இதைத் தவிற வேறில்லையென்பதற்கு வேறு என்ன அத்தாக்ஷி வேண்டும்? எவ்விதமிது ஆயுர்வேத, யூனானி, ஸித்த வைத்யங்களின் தொன்றுதொட்ட முறைகளை காப்பாற்றவோ, விருத்தி செய்யவோ, அரசாங்கத்தாரின் வழி உபயோகமுள்ளதாகும்?

மேலும், இவ் வைத்யக் கல்லூரியில் மருந்துகளை பரிசோதிப்பதாகச் சொல்லி அதற்கு உதாரணமாக, தங்கம், கால்ஸியம், இவ்விரண்டையும் ஒன்றுசேர்த்து ஓர் ஆயுர்வேத மருந்து உண்டுபண்ணி நன்றாய் விருத்தியடைந்த "ட்யூபர் குலோஸிஸ்" என்னும் வியாதியில் வாயால் சாப்பிடும்படி கொடுத்து அநேகம் வியாதியஸ்தர்களுக்கு நன்கு குணம் கண்டிருப்பதாக மேற்கூறிய கூட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை கவனிக்கும்பொழுது இம்மாதிரி புதிய மருந்துகளை உண்டாக்குவது இவ்வித புதிய வைத்ய சம்பிரதாயத்திற்கே உடன்பிறந்தஉரிமை என்று யாவரும் வ்யக்தமாய்ச் சொல்லலாம்.

முதலாவது, ஆயுர்வேத யூனானி, ஸித்த, வைத்ய முறைகளில் தங்கமென்பது அநேக விதமாய் உபயோகப்படுத்துவது எல்லோர்க்கும் ப்ரஸித்தமாய் தெரியும். ஆனால், இம் முறைகளில் "கால்ஸியம்" என்னும் ஓர் சாக்கு எனக்கு தெரிந்தமட்டில் இல்லையென்றே சொல்லலாம். "கால்ஸியம்" என்ற சாக்கு சேர்ந்திருப்பதாகச் சொல்லப்படும் முத்து, பவழம், முதலிய சாக்குகள் தனியாகவும், தங்கத்துடனும் சேர்ந்தும், இம் மூன்று முறைகளிலும் உபயோகிப்பது ஸர்வஸாதாரணமே. ஆனால், இச் சாக்குகளின் "வீர்யம்" (Active principal) என்று பெயரிட்டு அதை தாய் சாக்கிலிருந்து வேறுபடுத்தி (Isolation) அதற்கு "கால்ஸியம்" என்று பெயரிட்டு அதைத் தங்கத்துடன் (எந்தரூபமான தங்கத்துடனென்று மேற்கூறிய கூட்டத்தில் விளக்கினதாக தெரியவில்லை.) சேர்த்து உபயோகப்படுத்துவதென்பது. ஸ்ரீமதி ருக்மணியம்மாளின் அபிப்ருயத்தை யனுஸரித்தே புதிய வைத்ய முறையை சிருஷ்டிப்பதற்கு இதுமுதல் அஸ்திவாரம் என்றே சொல்லவேண்டும். இக் கல்லூரியின் தலைமை உபாத்யாயரவர்கள் இதேயபிப்ருயத்தை அனுஸரித்து அதே கூட்டத்தில் பேசும்பொழுது அரசாங்கத்தார், அவர் கேட்டபடி இன்னும் அதிகமாக உதவி செய்திருந்தால் இன்னும் எவ்வளவோ தங்கள் ஸாமர்த்தியத்தை ப்ரகாசம் செய்திருப்போமென்று மிகவும் வருத்தத்துடன் பேசி மேலும் சொல்லுகையில் "இவ்வுலகம் ஞானம் வேண்டும் என்கிற பசியால் துடிக்கும்போது நம் இந்திய சாஸ்திரங்களிலும் வைத்ய ஸம்பிரதாயங்களிலும் எவ்வளவு பொக்கிஷங்கள் மறைந்து கிடக்கின்றன" என்றார். இதைப் பார்க்கும்பொழுது நிதானமாய் யோஜிக்கும் எவருக்கும் தோன்றக் கூடியது ஒன்றுதான். அதாவது, "தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தியில்லாதவன் எங்ஙனம் மற்றவர்களுக்கு உதவி செய்ய முடியும்?" என்பதே. இதனால் நடுநிலைமையிலிருந்து பார்ப்பவர்கள் கனம் வைத்யஇலாகா மந்திரி, ஸ்ரீமதி ருக்மணியம்மாள் அவர்கள், இந்திய வைத்யக்கல்லூரி தலைமை உபாத்யாயரவர்கள், இவர்களின் அபிப்ராயத்தையும் புதுமருந்து சிருஷ்டியையும் ஒன்றாய்ச் சேர்த்து கவனித்துப்பார்த்தால், அமெரிக்கா முதலிய நாகரிக முன்னேற்றமுள்ள வெளிநாட்டார்களின் தாங்கமுடியாத ஞானப் பசிப்பிணியை தீர்ப்பதற்காகவே இச் சென்னையில் ஜீவகாருண்யமுள்ள நமது அரசாங்கத்தார் இப்புதிய இந்திய வைத்யக் கல்லூரியை நியமித்தார்போலும்! என்னே விந்தை!! இம்மாதிரி ஆச்சர்யமான ஸம்பவங்கள் அரசாங்கத்தார் இந்திய வைத்யக் கல்லூரி ஏற்படுத்தி நடத்தினால் கட்டாயம் ஏற்படும் என்று ஸுமார் 16 வருஷங்களுக்கு முன் வெளியான "உஸ்மான் கமிட்டி மறுப்பு வெளியீட்டில்" (Dissenting minute) எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. (மறுப்பு வெளியீட்டின் நான்காவது பக்கம் பார்க்க) அதில் இவ்விதம் கூறியிருக்கிறது. "அரசாங்கத்தார் உத்தேசிக்கும் பள்ளிக்கூடம் எவ்விதம் ஆயுர்வேதத்திற்கும் உதவி செய்யுமென்று எனக்கு விளங்கவில்லை. மேற்திசை வைத்ய முறையை ஆயுர்வேதத்தில் ஒட்ட வைப்பது (ஒட்டு மாமரம் போல்) அதை விருத்திசெய்யாது. ஆனால் 'ஆயுர்வேதத்'தை முன்னேறவிடாமல் ஸ்தம்பனம் செய்வதற்கு மிகவும் உபகாரமாகும். ஆயுர்வேதத்திற்கு விதேச வைத்யத்துடன் ஓர் லௌகிக கல்யாணம் (Civil marriage) ஏற்படும், ஆனால் ஆயுர்வேதியர்களே மிகவும் பரிவுடன் அதை விரும்புகிறார்களா என்பது எனக்கு விளங்கவில்லை" என்பதே.

இதனால் உண்மையான ஆயுர்வேத, ஸித்த, யூனானி, வைத்யர்கள் தங்கள் தங்கள் பரம்பரையான சாஸ்திரீய முறைகளை காப்பாற்றவும், விருத்தி செய்யவும் வேண்டிய உதவி செய்யும்படி அரசாங்கத்தாரை வணக்கமாய் விடாமுயற்சியுடன் கேட்கவேண்டும். அவ்விதம் பிரார்த்தனை செய்வதில் இவ் வைத்தியர்கள் வற்புறுத்தவேண்டியது என்னவென்றால், அரசாங்கத்தாரின் ஸொந்த அபிப்ராயப்படி புதிய இந்திய வைத்யக்கல்லூரியில் புதிய வைத்ய ஸம்பிரதாயமொன்றை உண்டு பண்ணி அதை பிரசாரத்திற்கு கொண்டுவருவதில் எங்களுக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. அல்லோபதி, ஹோமியோபதி, முதலிய வைத்யமுறைகள்போல் இப் புதிய வைத்யமுறையும் விஸ்தாரமான இவ்வுலகத்தில் இருப்பதற்கு யார் ஆக்ஷேபிக்கமுடியும்? ஆனால், நாங்கள் வேண்டுவது எங்கள் உண்மையான வைத்ய முறைகளை காப்பாற்றுவதற்கு அரசாங்கத்தார் தயவுடன் உதவி புரியவேண்டுமென்பதே. இதற்கு மறுமொழியாக அரசாங்க இந்திய வைத்யக் கல்லூரியொன்றுதான் உண்மை தேசிய வைத்யத்தை புகட்டுமிடமென்றும், அதற்கு ஏராளமான பணம் செலவழிப்பதால் வேறு பணம் உங்களிஷ்டப்படி செலவழிக்கமுடியாதென்றும் அரசாங்கத்தார் சொல்வதாயிருந்தால் அது ஒருவிதத்திலும் நியாயமாகாது. ஜனநாயக ராஜ்யம் இப்பொழுது நடைபெறுகிறதென்று பெருமைபேசும் நம் அரசாங்கத்தார் தேசிய வைத்ய ஜனங்கள் கேட்ட உதவிமுறைகளை விட்டுவிட்டு அதற்கு மாறாக தாங்களாக ஓர் முறை சிருஷ்டித்து அது தான் ஜனங்களின் கருத்துக்கு ஒத்ததென்று கூறுவதை பக்ஷபாதமில்லாத ஒரு நியாயவாதியும் ஒப்புக்கொள்ளமாட்டான். ஆகையால் ஜனங்களின் ஸேவகர்கள்போல ராஜ்யபாரத்தை வகிக்கும் மந்திரிகள் தங்களுக்கு யஜமானர்களாக (ஸௌகரியப்பட்ட ஸமயங்களில்) சொல்லிக்கொள்ளும் ஜனங்களின் அபிப்ராயத்தை மறுக்கமுடியாதென்பதை நாம் மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

ஸாமவேத விஷயஸாரக்ஞர்களுக்கு,

## ஓர் விக்ஞாபனம்.

ஸாமவேதிகள் ப்ரதிதினமும் செய்ய வேண்டிய ஔபாஸன கர்மாவின் முடிவில் கௌஷுக்தம் என்ற ஸாமாவை ஸாயங் காலத்திலும், ஆச்வஸுக்தம் என்ற ஸாமாவை காலையிலும் கானம் பண்ணுகிறார்கள். இதற்கு ஆதாரம் கிருஹ்யபரிசிஷ்டத்திலும் கிருஹ்ய பாஷ்யத்திலும் வாமன காரிகையிலும் இவ்விதமே சொல்லப்பட்டிருக்கிறது. ஸாயங்காலத்தில் கௌஷுக்த கானத்தின்

க ரு க க க

ஸுவஉ௺ஹாஉஉருசஉ3 என்றும் ப்ராதக் காலத்தில் ஆச்வஸுக்த கானத்தின் கடைசியில்

க க க க

ஸுவஉ௺யாஉஉருசஉ3 என்றும்,

வெகுவாக கானம் செய்கிறார்கள். இந்த இரண்டு பதம் மாத்திரம் கானம் பண்ண பிரமாணமென்னவென்று அறிய விரும்புகிறேன்.

ஸாமவிதானப் பிரும்மணத்தில் தர்சபூர்ண மாஸ பலத்தையடைய விரும்புகிறவர்கள்

க ரு க க க

ஸுவஉ௺ஹாஉஉருசஉ3 என்ற நிதனம் எந்த ஸாமாவில் வருகிறதோ, அந்த ஸாமா

க

வை பூர்ணமாஸத்திலும், ஸுவஉ௺யா உஉ

க க க

ருசஉ3 என்ற நிதனம் எந்த ஸாமாவில் வருகிறதோ அந்த ஸாமாவை தர்சத்திலும் கானம் பண்ணவேணுமென்றும், இதையுங் கூட யாவஜ்ஜீவம் பண்ணவேணுமென்று ஒரு பக்ஷம் காண்பித்து ஒரு ஸம்வத்ஸரம் அநுஷ்டித்தாலும் போதுமென்றும் இதற்கு சில ஹோமமும் விதிக்கப்பட்டிருக்கிறது. இதைத்தவிர இந்த ஸாமக்களுக்கு விநியோகம் இருப்பதாக என் புத்திக்குத் தோன்றவில்லை இதைத் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவனாயிருக்கிறேன். வித்வன்மணிகளை வினயத்துடன் ஆர்யதர்மம் மூலமாய் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்வாமி சாஸ்திரி.

திருச்சி.

# உபநிஷத்தின் உயரிய உபதேசம்.

## ஸத்யமும் தர்மமும்.

இக்காலத்தில் கலாசாலைப்படிப்பு முடிந்து வெளிவரும் மாணவர்களுக்குத் தகுந்த கௌரவமும், நன்னடத்தையுமுள்ள பெரியவர் எவரைக்கொண்டாவது நல்ல உபதேசங்கள் செய்யச்சொல்லுவது வழக்கமாயிருக்கிறது.

இதற்கு கான்வகேஷன் பிரஸங்கமென்று பிரஸித்தியேற்பட்டிருக்கிறது. இந்த வழக்கமானது நம் தேசத்திய பிராசீன ஸம்பிரதாயத்தை அநுஸரித்த முறைகளில் ஒன்றென்று வைதிகர்கள் ஸுலபமாக அறியக்கூடியது. ஹிந்துக்கள் கொண்டாடும் வேதங்களிலேயே இந்த வழக்கம் காணப்படுகிறது.

தைத்திரீய உபநிஷத்தில், குருகுல வாஸத்திலிருந்து திரும்பும் மாணவனுக்கு ஆசாரியர் உபதேசிக்கும் தர்மங்கள் பலவும் வரிசையாக கூறப்பட்டிருக்கின்றன.

அந்த தர்மங்களை ஒரு மாணவகன் ஸரிவர அநுஷ்டித்து வந்தானால் அவன் பரலோக நன்மைகளை அடைவதுடன், இஹலோகத்திலும், குடும்பவாழ்க்கை, ஸமூக தர்மம், தேவ பித்ரு பக்தி, மாதா பித்ரு பக்தி ஆசார்ய விச்வாசம், பெரியோர்களிடம் மரியாதை போன்ற ஸகல விஷயங்களிலும் அவனுக்கு நல்ல சிரத்தை ஏற்பட்டு உலகவாழ்க்கையே அமைதியாக நடக்க வழியுண்டு. அவ்வளவு உயர்ந்த தத்வங்களுடன் அந்த உபதேசங்கள் விவரிக்கப்பட்டிருக்கிறன.

அந்த உபதேசங்களில் முதல் முதலாக மேற்படி இரண்டு தர்மங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் ஸத்யத்தை அநுஷ்டிக்கும்படி குரு, சிஷ்யனுக்கு முதலில் உபதேசிப்பது முக்யமான விஷயம். ஸத்யமில்லாவிடில் உலகமே நிலைக்காதல்லவா? எல்லாவற்றிற்கும் அதுவே ஆதாரமாக விளங்குகிறது. மேற்சொன்ன ஸத்யம், தர்மம் ஆகிய இரண்டும் வைதிக மதத்தினரன்றி உலகிலுள்ள எல்லா ஜாதி மதஸ்தர்களும் அநுஸரிக்கக்கூடிய பொது தர்மங்களாகையால் உபநிஷத்தின் உபதேசமானது யாவருக்கும் உபயோகப்படக்கூடியது.

தற்போது ஆசாரியர்கள், தங்கள் சிஷ்யர்களுக்கு இந்த உபதேசத்தை எவ்வளவுதூரம் செய்கிறார்களென்றோ, அல்லது சிஷ்யர் இந்த உபதேசத்தை எவ்வளவுதூரம் மதித்து நடக்கிறார்களென்றோ விமர்சிப்பது உசிதமில்லை. உபநிஷத் வாக்யத்தில் ஸத்யம் பேசு, தர்மம் செய், என்று இரு வாக்யங்கள் காணப்படுகின்றன. ஸத்யமும் தர்மத்திலடங்கியதாயிருக்கையில் இங்கு இரண்டையும் தனியாகப் பிரித்துப்பேசியது கோபலீவர்த்த நியாயப்படி ஸரியானதே. இனிஸத்யமென்றால் என்னவென்று தெரியவேண்டும். இதைப்பற்றிப் பலர் பலவித லக்ஷணம் சொல்லுவார்கள். ஆயினும் ஒரு மனிதன், நேரில் கண்டோ, கேட்டோ, அல்லது அநுமானித்தோ உள்ள விஷயமொன்றைத்தனது மனதிற்கும், வாக்குக்கும் ஒத்திருக்கும்படி பேசுவதேயாகும். மனதில் ஒரு மாதிரியாயிருக்க, வாக்கினால் வேறு மாதிரியாகப் பேசுவது ஸத்யமாகாது.

பாரதயுத்த ஸமயத்தில் த்ரோணர், தர்மராஜனைப்பார்த்து "அச்வத்தாமா இறந்துவிட்டானா?" என்று கேட்டார். தமது குமாரனைப் பற்றியே அவர் கேட்டார். இது தர்மபுத்திரருக்குத் தெரியும். ஆயினும் "அஸ்வத்தாமா இறந்து போனான்" என்று தர்மபுத்திரர் பதில் சொன்னார். உண்மையில் அஸ்வத்தாமா இறக்கவில்லை. இதுவும் தர்மபுத்திரருக்குத் தெரியும். இறந்துபோன அஸ்வத்தாமாவென்பது ஓர் யானையென்று தர்மபுத்திரரின் அபிப்ராயமாகும். ஆயினும் இங்கு வாக்கும் மனதும் ஒத்திருக்கவில்லை. அவருடைய மனதானது, இறந்துபோன "அஸ்வத்தாமா" என்பது ஓர் யானையென்று அறிந்திருக்கிறது வாக்கோ, த்ரோணபுத்ரனை அச்வத்தாமாவைக் குறிக்கிறது. வேறு சிலர் இங்கு தர்மபுத்திரன் வாக்கும் மனதும் ஒரேமாதிரியாக அச்வத்தாமாவென்ற யானையையே குறிப்பதால் இதில் அஸத்யம் இல்லையென்று ஸமர்த்திப்பார்கள். ஆயினும் த்ரோணரை ஏமாற்றும் எண்ணமும் அவருடைய வார்த்தையில் கலந்திருப்பதால் அது ஸத்யத்திற்கு புறம்பானதென்றே சொல்லவேண்டியிருக்கிறது.

ஸத்யத்தின் மஹிமையைப்பற்றியே நமது வேத, ஸ்மிருதி, புராணாதிகள் பெரும்பாலும் பிரதிபாதனம் செய்கின்றன. உலகத்தில் ஆஸ்திக, நாஸ்திகாதி பல மதங்கள் இருப்பினும் அவைகளெல்லாம் ஸத்யத்தின் கௌரவத்தை ஒப்புக்கொண்டேயிருக்கின்றன.

நமது மதத்தைப்பற்றிய வரையில் இந்த ஸத்யமே உலக உதாரணத்திற்கு ஆதாரமென்று நினைக்கப்படுகிறது. "ஸத்யத்திலேயே எல்லாம் ப்ரதிஷ்டிதமாயிருக்கிறது" என்று வேதம் மொழிகிறது. பிரம்மமே ஸத்யஸ்வரூபமென்று நமது மதம் கூறுகிறது. இவ்வளவு உயர்ந்த கௌரவம் பொருந்திய ஸத்யதர்மத்தைக் காப்பாற்ற நம் முன்னோர்கள் பற்பல தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். ஸத்யத்தைக் காப்பாற்ற நம் முன்னோர்கள் அடைந்துள்ள துன்பங்களை நினைக்கையில் சரீரம் முழுவதும் மயிர்கூச்சலெடுப்பது ஸஹஜம். மனித வாழ்க்கையில் மிகமிகஉயர்ந்ததாயுள்ள சிறந்த போக போக்யங்களைக்கூட ஸத்யத்திற்காக உதறித்தள்ளியவர்கள் அனேகர் உண்டு.

அறுபதாயிரம் ஆண்டு கழித்து அருந்தவப் பயனாக அவதரித்த ஸுகுமாரமூர்த்தியான ஸ்ரீ ராமசந்திரனை பயங்கரமான வனாந்திரங்களில் பல துன்பங்களுக்கு ஆளாக்கியது இந்த ஸத்யமல்லவோ? ஸத்ய ஹரிச்சந்திரன் முதலான மஹாசக்ரவர்த்திகளும் இந்த ஸத்யதர்மத்தை ரக்ஷிப்பதற்கல்லவோ கணக்கற்ற கஷ்டங்களை ஏற்றுக்கொண்டனர். பிராசீனர்களுக்கு பிராணனைவிட ஸத்யமே பெரிதாகத் தோன்றியது. ஆகையால்தான் எல்லா வழிகளிலும் அவர்கள் மேன்மையுற்று விளங்கிவந்தனர்.

கொடிய கலியின் தாண்டவம் அதிகரித்திருக்கும் இந்நாளில்கூட மேலுக்காவது ஸத்யத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். நியாயஸ்தலங்களில்கூட "ஸர்வ வல்லமையுள்ள தெய்வத்தின் முன் ஸத்யமாகச் சொல்லுகிறேன்" என்றதுபோன்ற உறுதிமொழி இக்காலத்திலும் வாங்கப்படுகிறது. இது முற்காலத்தில் நம் முன்னோர் காட்டிய ஸத்ய உறுதியின் அதிர்ச்சியேயாகும். ஆயினும் தற்போது ஸத்யத்தின் நிலைமையைக் கண்டு ஆஸ்திகர்கள் வெட்கப்படவேண்டியதாகவே இருக்கிறது. தேசத்தின் ஸகல க்ஷேமத்திற்கும் ஆஸ்பதமாயுள்ள ஸத்யத்தின் தற்கால கதியைப்பார்த்து எவர்தான் தூக்கிக்காமலிருக்கமுடியும்? ஸத்யத்தைக் கைவிட்டதாலேயே தேசக்ஷேமம் பாதாளம் நோக்கிச் சென்று மறைந்துவருகிறது. எங்கும் கணக்கற்ற பேதங்களும், மனத்தாங்கலும் அதிகரித்திருக்கிறது. ஒற்றுமை அடியோடு நசித்துவிட்டது; ஸௌக்யமென்பது ஸ்வப்னத்தில்கூட காணப்படுவதில்லை. எங்கு திரும்பினாலும் ஒரே துக்கமயமாகவே இருக்கிறது. இவ்வளவுக்கும் நாம் ஸத்யத்தைக் கைவிட்டதே காரணமல்லவா?

இப்போது மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் அஸத்யமே போதிக்கப்படுகிறது. வயிறுவளர்க்க வேண்டியதற்காக ஸத்யத்தைக் கைவிட்டுவிடுகிறோம். முன்காலத்திலிருந்தவர்களுக்கு இந்த வயிற்றுச் சிந்தை கிடையாதா? அல்லது அவர்களுடைய வயிற்றைவிட இக்காலத்தியவர்களது வயிறு பெரிதா?

ராஜாங்க உத்யோகம், வக்கீல், வியாபாரி, உபாத்யாயர், வைதிகர், தேசாபிமானி, மாணவர் என்ற ஸகலப் பிரிவினரிலும் ஸத்யம் எவ்வளவுதூரம் உயிருடனிருக்கிறதென்று ஆராய்வது தலைகுனிவுக்குக் காரணமாகும். ஸத்யத்தை விரட்டிவிட்டு தேசக்ஷேமத்தை அடைவதென்பது எங்ஙனம்? நமது வித்யார்த்திகளாவது ஸத்யத்தைக் காப்பதில் இனி அதிகக் கவலை எடுத்துக்கொண்டால் தேசம் க்ஷேமமடையும். ஆதலால்தான் நமது க்ஷேமத்தையே நோக்கமாகக் கொண்டதும், ஆயிரம் தாய் தந்தையர்களைவிட நமக்கு ஹிதம் செய்ய முன்வந்ததுமான நமதுவேதமானது "ஸத்யம் பேசு" என்று நிபந்தனையின்றி நமக்கு வெகு தயையுடன் கட்டளையிட்டதென்று அறிவோமாக,

ஆஸ்திகன்.

# விடுமுறையில் மாணவர் கடமை.

இக்காலத்து மாணவர்கள், விடுமுறைவரும், வீடு செல்லலாம்; சுகமாக விளையாடலாம், என்று எண்ணுகிறார்கள். ஆனால் பரீக்ஷையில் பல பாடங்களிலும் தேற்சி பெற வேண்டுமென்ற நிர்ப்பந்தங்களுண்டு ஆகையினால் கஷ்டப்பட்டு சோம்பலை நீக்கி படிக்கவேண்டியது அவச்யம். அப்படி இருந்தாலும் வரப்போகும் விடுமுறைக்காலங்களில் அவர்கள் அறிந்துகொள்ளவேண்டியவை பல உள. என்பது எனது திண்ணமான எண்ணம். அவர்களுக்கு கொஞ்சம் ஊக்கத்தை உண்டு பண்ணவேண்டுமென்ற எண்ணம் என்னைத் தூண்டுகிறது.

இக்காலத்தில், நாங்கள் காலத்தை செலவிடுவதுபோல மாணவராயிருந்த காலத்தில் காலத்தை செலவிடவில்லை. வீண்வார்த்தையாடிய காலத்தில் கிரந்தங்களைப் பார்ப்பதில் செலவிட்டிருந்தால் எவ்வளவு பயனை அளிக்கும் என்று இப்பொழுது மனம் கலங்குகிறோம் இந்த நிலமை மற்றவர்களுக்கு உண்டாகக்கூடாதென எண்ணி இக்கால மாணவர்களுக்கு ஊக்கத்தையளிக்க விரும்புகிறோம். சிறிது காலத்தையும் வீண்போக்கவேண்டாம் என்று அவர்களுக்குக் கூறுவதே எனது விருப்பமாகும்.

உடல் நலத்தையும் கவனியாது பயின்றவர்கள் புத்திக்கு அதிக ஆயாஸத்தைக் கொடுக்கலாகாது என்பதை அறியவேண்டும்; சரீர சுகத்தை அநுசரித்து கிரந்த விஷயத்தில் காலத்தை செலவிடவேணடும். ஆனால் அத்தகைய் மாணவர்கள் இக்காலத்தில் இல்லை என்று சொல்லுவது மிகையாகாது.

காலையிலும் மாலையிலும் குறித்த நேரத்தில் விளையாடவேண்டும். அல்லது வீட்டு

(தொடர்ச்சி 9-பக்கம் பார்க்க).



215276

## கம்பர் திருநாட் கொண்டாட்டம்.

### விண்ணப்பம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கக் காரியதரிசி ஸ்ரீ ப. ரெ. திருமலை அய்யங்கார் எழுதுவது:—

'கல்வியிற் பெரியர் கம்பர்'; 'கம்பர் வீட்டுக்கட்டுத்தறியும் கவி சொல்லும்'; 'விருத்தமென்னுமொண்பாவிலுயர் கம்பன்'; 'சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூருள் வாழ்வோன் காரணக்கொடையான் கம்பன்'; தெய்வப்புலமைக்கம்ப நாட்டாழ்வார்'; 'கம்பநாடுடைய வள்ளல்'; 'கவிச் சக்கிரவர்த்தி'; 'கம்பநாடான்கவிதையிற் போல் கற்றோர்க்கிதயங் களியாதே'; மன்றே புகழுந்திருவழுந்தூர் வள்ளல் முதலியவற்றால் கொண்டாடப்பெறும் கம்பநாடர் இயற்றிய இராமாவதாரம்' என்ற சிறையிருந்தவளேற்றங்கூறும் ஸ்ரீ ராமாயணத்தை ஸ்ரீ நாதமுனிகள் திருவோலக்கத்திலே திருவரங்கனெனத்திகழும் கோயிலில் மேட்டழகிய சிங்கர் சிரக்கம்பஞ் செய்யுமாறு அரங்கேற்றினர் என்பது

"எண்ணிய சகாத்த மெண்ணூற்றே<br>ழின் மேற் சடையன் வாழ்வு<br>நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னி<br>லே கம்ப நாடன்.<br>பண்ணியவிராம காதை பங்குனி யுத்த<br>ரத்திற்<br>கண்ணிய வரங்கர் முன்னே கவியாங்<br>கேற்றினனே" என்ற பாடலால் அறியலாம்.

எம்பெருமானார் கத்யத்ரயம் அருளிச்செய்ததும், திருக்கோவில்களிலெல்லாம் பெரிய திருவிழா நடைபெறுவதும் இப்பங்குனியுத்தரத்தில் என்றால் இதன் பெருமை அளவிடற்பாலதோ! பங்குனி யுத்தரமான பகற் போதில் மிதிலைச் செல்வியின் திருமணம் நடைபெற்றதாகக் கம்பர் குறித்துள்ளார். இத்தகைய சிறப்புடன மைந்துள்ள நன்னாளிற்றான் 'கம்பர் திருநாட் கொண்டாட்டம்' இச்சங்கத்தார் நடத்தி வருகின்றர்.

இத்திருநாள் நாளது வெகுதான்ய வருடம் பங்குனிமீ 21உ (3-4-39) திங்கட்கிழமைவருகின்றது. அன்றுமாலை 6மணிக்கு திருவல்லிக்கேணி ரத வீதியிலுள்ள ஸ்ரீ அஹோபில மடத்தில் இக்கம்பர் திருநாட் கொண்டாட்டம் நடைபெறும். அவ்வமயம் திருமயிலை அட்வொகேட் ஸ்ரீ திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி அய்யரவர்கள் தலைமைவஹிக்க இணங்கியுள்ளனர். ஸ்ரீ குரிச்சி, ஸ்ரீ நிவாஸவேதாந்தாசாரியார், யம். ஏ. யல். டி. "தொல்வழிக்கம்பர்" எனும் விஷயம் பற்றி உபந்யாசம் செய்வர். தமிழறிஞர், கம்பர் கவி நயம், ஆராய்ச்சி முறையில் கம்பர் வரலாறு முதலியவற்றைக் குறித்து கட்டுரைகள் தயாரித்து "42-ஏ, வெங்கடாங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி என்ற விலாசத்துக்கு உரிய காலத்திலனுப்பின் அவை அரங்கத்திற்படிக்கப்பெற்று பின்னர் இச்சங்க வெளியீடான "வகுளமாலை"யில் வெளி வரவும்ஏற்பாடு செய்யப்பெறும். தமிழ்நாடெங்கும் இந்நன்னாளைத் தக்க முறையில் கொண்டாடுமாறு இதன் மூலம் வேண்டுகின்றேன்.

## திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கம்.

### குலசேகராழ்வார் திருநாட் கோண்டாட்டம்

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ அஹோபிலமடத்தில் (2—3—39) வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீ குலசேகராழ்வார் திருநாட் கொண்டாட்டம் ஆரம்பமாகியது. கடவுள் வாழ்த்துக்குப் பின்னர் "குலசேகராழ்வார் வைபவம்" எனும் விஷயம்பற்றி நூதன முறையில் ஸ்ரீ நரஸிம்ஹாசாரியார் அரியதோர் உபந்யாஸம் செய்தார். "கொல்லிகாவலன் கூடல் நாயகன் கோழிக்கோன் குலசேகரன்" என்று இவர் தம்மைக் கூறிக்கொள்வதினின்று இவர் சேர சோழ பாண்டியர்கட்குத் தலைமை பூண்டிருந்தார் என்றும் சரித்திர ரீதியிற் பிரிக்குங்காலை ஆராய்ச்சியாளர் கூறுங்காலத்துக்கு பன்னூற்றாண்டுகட்கு முன்னரே இவரிருந்திருக்கவேண்டுமென்றும் "மயோனை மணத்துணைபற்றி நின்று" என்பது இவரது போரவைக்காட்டுகின்றது என்றும், 'பொருந்தார் கைவேல்நுதிபோல் பால்பாய' என்ற புலம்பல் இவரது இராம பக்தியை வெளிக்காட்டுகின்றதென்றும் கூறினார். சபை இரவு 8 மணிக்கு நிறைவெய்தியது. 3—3—39 மாலை 6 மணிக்கு அதே யிடத்தில் "தூய்ய குலசேகரன்" என்ற விஷயம்பற்றி ஸ்ரீ ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியாரும், முக்கூர் ராஜகோபாலாசரியாரும் பாக்க உபந்யஸித்தனர். அவை இரவு 8-30 மணிக்குக் கலைந்தது.

## ஸ்ரீ அழகியசிங்கர் அடைக்கலபத்து அரங்கேற்றுவிழா.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் 22—3—39உ புதன்கிழமை மாலை 4 மணிகது ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீ ஆர். கேசவய்யங்கார் "சரணாகதி" என்ற விஷயம்பற்றி ஓர் உபந்யாஸம்செய்ய ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி தாஸனால் ஸ்ரீஅஹோபிலமடம் 41 வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடிவாரத்தில் விண்ணப்பிக்கப்பெற்று, சங்கத் தலைவர் முன்னுரையுடன் கூடிய "ஸ்ரீ அழகிய சிங்கர் அடைக்கலப்பத்து" எனும் நூலைச் சபையோர் செவிகளாரப் பருக, ஸ்ரீ கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார், முக்கூர் ராஜகோபாலாசாரியார், குறிஞ்சிப்பாடி துரைசாமி அய்யங்கார் முதலியோர் கவிஞரைச் சிலாகித்துக்கூற, வந்திருந்தோர் கட்கு நூலும் கற்கண்டும் வழங்க, காரியதரிசி வந்தனோபசாரம் அளிக்க, சபை மாலை 6 மணிக்கு இனிது நிறைவேற்று.

ப. ரெ. திருமலை அய்யங்கார், காரியதரிசி.

## விழுப்புரம்.

### தெய்வ நெறி கழகம்- ரிஷீகேசம்.

#### கிளைக்கழகம்.

விழுப்புரம் தெய்வ நெறிக் கழக சபையில் 24-3-39 வெள்ளிக்கிழமை ஸ்ரீ பிரும்மாநந்த சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீமத்ராமாயணத்தை பற்றியும் ஆஸ்திக்யத்தைப்பற்றியும் அரிய பெரிய ஓர் உபன்யாஸம்செய்தார்கள்.

காலஸ்திதியை அனுஸரித்து ஸநாதன தர்ம அனுஷ்டானத்தைப்பற்றியும் நித்தம் செய்ய வேண்டிய கர்மாநுஷ்டானங்களின் அவசியத்தைப்பற்றியும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தது மகாஜனங்களின் மனதில் பசுமரத்தாணி போல் நன்கேபாய்ந்து பரவசப்படுத்தி நல்வழி காண்பித்தது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி கும்பகோணம் ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்கள் ஆக்ஞைப்படி திருச்சினாப்பள்ளி மேல சிந்தாமணியில் ஸ்ரீமத்ராமாயண பக்ஷாஹ நவாஹமஹோத்ஸவங்களை நடத்தினர். ஸ்ரீ பிரும்மாநந்த சரஸ்வதி ஸ்வாமிகளவர்கள் நேற்றிரவு திருச்சிக்குப் புறப்பட்டார்கள்.

S. ஸ்ரீநிவாஸன்.

## ஸ்ரீரங்கம்.

### ஸ்ரீமத் ராமாயண கதோபந்யாஸம்.

ஸ்ரீமதாசார்யேந்த்ராளான சிருங்கேரி ஜகத்குருஸ்ரீ ஸ்ரீச்சிதானந்த சிவாபிநவ நிருஸிம்ஹ பாரதீ ஸ்ரீமஹா ஸ்வாமிகளின் ஜயந்தீ பஹுதான்ய வருஷம் மாசிமீ 26உ (9—3—39) வியாழக்கிழமை முதல் பங்குனி 10உ (23—3—39) வியாழக்கிழமை முடிய பதினைந்து நாட்கள் ஸ்ரீரங்கம் புது அக்ரஹாரத்தில் ஸ்ரீமதாதி சங்கர பகவத் பாதாசார்யாள் ஆலயத்தில் மாயவரம் பிர்ம்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகளால் பிரதி தினம் மாலை 7½ மணி முதல் 10 மணி வரையிலும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண கதோபந்யாசம் செய்யப்பட்டன. பங்குனிமீ 3உ (16-3-39 ஸ்ரீமஹாஸ்வாமிகளின் ஜயந்திமஹோத்ஸவம் மிகவும் விமர்சையாக கொண்டாடப்பட்டது காலையில் மஹாந்யாஸ புரஸ்ஸரம் ஏகாதசருத்ராபிஷேகமும் ஸஹஸ்ரநாமார்ச்சனையும் விசேஷநிவேதனங்களும் தீபாராதனையும் நடைபெற்றன, பங்குனிமீ 4உ (17-3-39) திவான்பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் மஹிமையை உபந்யஸித்தார்கள்.

பங்குனிமீ 9உ (22—3—39) குருபக்த சிகாமணி சாஸ்திர ப்ரசார பூஷண பிர்ம்மஸ்ரீ T. K. பாலசுப்பிரமணியய்யர் அவர்கள் ஸ்ரீமதாசார்யாளின் ஆராதனையை விசேஷமாக நடத்தினார்கள். அன்றைய தினமும் மறுநாளும் சாயங்காலம் 5 மணிமுதல் 6½ மணிவரை மஹாஸ்வாமிகளிடம் விசேஷ பக்தியுடையவரான, திருநெல்வேலி ஜில்லாகளக்காடு பிர்ம்மஸ்ரீK S. ராமநாராயணபாகவதர் அவர்களின்சங்கீதக்கச்சேரியும்நடந்தது ராமாயணஉபந்யாசத்திற்கு ஏராளமான ஆஸ்திகர்கள் வந்து ராமகதையை ச்ரவணம் பண்ணினார்கள். கடைசிநாளாகிய பட்டாபிஷேக தினத்தன்றுஉபந்யாஸம்பூர்த்தியானதும்பிர்மஸ்ரீ T. K. பாலசுப்ரமணியய்யர் பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகளின் அரும்பெருங் குணங்களையும் ராமயணோபந்யாசத்தில் சாஸ்திரிகளுக்கு இருக்கும் நிகரில்லாத சாமர்த்யத்தையும் எடுத்துச்சொல்லி சாஸ்திரிகளை மிகவும் புகழ்ந்து கொண்டாடினார்கள். முடிவில் ஸ்ரீமதாசார்யாளுக்கு கர்ப்பூரஹாரத்தி நடைபெற்று, சாஸ்திரிகளுக்கும் விசேஷமான சம்பாவனைகள் செய்து சபையில் எல்லோருக்கும் சந்தனம் கற்கண்டு ப்ரஸாதம் முதலியன வழங்கப்பெற்று சாஸ்திரிகளிடமிருந்து மந்த்ராக்ஷதை பெற்றுக்கொண்டு ஸபை இனிது கலைந்தது.

K. S. வெங்கடாராம சாஸ்திரி.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

## யதார்த்தமான அஹிம்ஸாதர்மமும், பாரமார்த்திகமான ஸ்வராஜ்ய ஸித்தியும்.

(காக்கழணி கிருஷ்ணமூர்த்தி.)

உலகில் அவரவர்களின் நற்குண நற்செய்கைகளால் நன்மையும், துர்க்குண துர்ச்செய்கைகளால் தீமையையும் அடைகிறார்களென்பது சாஸ்திர ஸம்மதம்.

நன்மையை அடைய ஸாதனமாயுள்ள நற்குணங்கள் எவை எவையென பகவானால் ஸ்ரீமத் பகவத்கீதையில் நன்கு எடுத்துக்காட்டப்பட்டுருக்கிறது. அஹிம்ஸை, சத்யம். க்ரோதமின்மை, த்யாகம், சாந்தி, அபைசுனம், பூததயை, அலோலுபத்வம் ஹ்ரீ, அசாபலம், தேஜஸ், க்ஷமை, த்ருதி, சௌசம், அத்ரோஹம், அதிமாநிதையின்மை, முதலான குணங்கள் நன்மையைத் தருவதென சிலாகித்து, அவைகளை தெய்வ ஸம்பத் என்று புகழவும் படுகிறது.

இவ்வித எல்லா குணங்களிலும் சிறந்ததான அஹிம்ஸையே ஆதி சாதனமாகும். அஹிம்ஸை என்ற ஒரு உத்தம பழக்கம் சித்தித்துவிடின், அதினால் பிர்ம்மாத்மைக்யமென்றும் ஸ்வாராஜ்யஸித்தி சுலபமாய்கிடைப்பதாகிறது, ஒருவருக்குவேண்டிய ஸர்வ பரிசுத்தமும் ஆத்மஞானம் ஒன்றினாலேயே கிடைப்பதாகும் நஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹ வித்யதே ॥ என்றபடி ஆத்ம ஞானத்தைக் காட்டிலும் பரிசுத்தமானது மற்றொன்றில்லை. அத்தகைய ஞானிகளே ஸ்வாராஜ்ய சித்திபெற்றவர்கள்.

ஒரு இராஜ்யத்தை ஆளும் அரசனுக்கு எவ்விதம் தன்பிரஜைகளை அடக்கியாளும் திறமை அவசியமோ அவ்விதமே தனது பொறி, புலன்களை அடக்கி ஆளும் திறமையே ஸ்வாராஜ்ய ஆளுகையாகும். வெகு ஜன்ம பழக்க வாசனையால், அஞ்ஞான தசையில் தன்னரசு செலுத்தும் பொறிபுலன்களை தன் விவேக விர்த்தியால் தனக்கு அடிமையாக்கிக்கொள்ளவல்லவன் எவனோ அவன்தான் ஸ்வாராஜ்யாதிபத்யம் அடைய அருகதையுடையவன். பழய வாசனாவசமாய் உதிக்கும் விர்த்திகளை நசிக்கச்செய்வதற்கு

"வாதனாவசத் தினாலே வருகிற விர்த்தியெல்லாம்
எதினாலடக்கலாதமென்று தான் விசாரஞ்செய்
[யில்
போதமா மிரார்சன் றனாய் புந்தியைம்புலன்களே
[ல்லாம்
தாதாா யிருக்கப் பெற்றுச் சகலமுமடங்குந்தானே'

என்று ஒரு சாதனத்தை ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் தாமருளிய கைவல்ய நவநீதமென்ற நூலில் எடுத்துக்காட்டியுள்ளார். இராஜாதிகாரமமைந்த சுபோதத்தால் இந்திரிய நிக்ரஹம் பெற்று, யாவற்று விர்த்தியை அடக்கி, தான் தலைமைபெற்று விளங்குவதே ராஜ்யசித்தியாம்.

இத்தகைய ஸ்வாராஜ்யசித்திதான் யதார்த்தமான அஹிம்ஸா தர்மானுஷ்டானத்தால் அடையப்படுகிறது. மனோ, வாக்கு, காயம் எனப்படும் திரிகரணங்களாலும் யாதொரு விதத்திலும் ஜீவஹிம்ஸை செய்யாமலிருப்பதே யதார்த்தமான அஹிம்ஸா தர்மமாகும். மைத்திரி, கருணை, முதிதை உபேக்ஷை என்னும் ஸத்வாசனா பழக்கத்தையும் அஹிம்சா தர்மம் எனப்படுகிறது. மோக்ஷம்பெற பல சாதனங்கள் இருப்பினும், உத்தம சாதனமாக உள்ளதில் அஹிம்ஸா தர்மம் சிறந்ததாகும். இம்மார்க்கத்தை "ஜீவகாருண்ய ஒழுக்கம்" எனப் பெயரிட்டு உலகினர் உய்யும்பொருட்டு கருணை வள்ளலாகிய, மஹான் ஸ்ரீ ராமலிங்கஸ்வாமிகள் வெளிப்படுத்திக் காட்டினார். எல்லா உயிர்களுக்கும் எக்காலத்திலும் இதத்தையே செய்யும் ஒரு சத்திய நெறியில் யார் ஈடுபடுகிறார்களோ அவர்கள் இந்த உத்தம உயர் சாதனத்தை பெற்றவர்களாவார்கள். உயிர்களிடம் இரக்கமில்லாதவர்களின் சாதனங்கள் யாவும் அவலமாகுமன்றி சபலமாவதரிது.

'இத்திறனருள்கைபற்றி யுயிர்க்கெல்லா மிதத்தை
[செய்க
சத்திய விரக்கமின்றேல் முத்தியைச் சாரானதும்
பத்தியால் யோகஞ்சாரும் யோகத்தார் பாம
[ஞானத்
சித்தியா மிதர்காதாரஞ் ஜீவகாருண்யமின்றே'

என்று ஜீவகாருண்யத்தின் பெருமையை எடுத்துக்காட்டியிருப்பதே போதிய சான்றாகும்.

பிர்ம்மோபாஸனையைப் பிரதானமாகக் கைக்கொண்டிருக்கும் பிராம்மணர்கள் புலாலை உண்ணக்கூடாதென்ற கட்டுப்பாடும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை வளர்ப்பதற்கேயாகும். ஜீவகாருண்யமுள்ளவன் ஒருவனே உயர்குலத்தோன். ஜீவகாருண்யமுள்ளவர்களைப் போற்றி,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்"

நாம் நல்லவழியில் நடந்து நன்மையடைய ஔவை பிராட்டியாரும்:

"புலையுங் கொலையுங் களவுந்தவிர்"

என்று உபதேசித்தாள்.

மேலும்,

"காமாய்க் கற்பழித்தோர் களவு செய்துடல்
[வளர்த்தோர்
மாமிசந் தின்போரெல்லா மானிட புலையராவார்"

என்ற போதனையையும் நாம் சிந்திக்க வேண்டியதவசியமாகும்.

புலாலுண்பவன் எத்தகைய ஞானானுஷ்டானம் செய்யினும், அவனுக்கு நற்கெதியாதுமில்லையென்பதை.

'கங்கையிற்படிந்திட்டாலுங் கடவுளை பூசித்தாலு
மங்குல்போற் கோடிதன்மம் வள்ளலாய் வழங்கி
[ஐவந்
சங்கையில் லாதஞான தத்துவமுணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால் புசிப்போன் போய் நாகடை
[வனன்றே'

என்ற ஆன்றோர் உபதேசத்தால் அறியக் கிடக்கிறது.

தவிற,

"ஆடுபன்றி கோழி யருந்துவோர்க் கெல்லாம்
வீடில்லையென்றுரைக்கும்வேதங்கள்-நாடுமவர்க்
கின்மையிலுந்துன்ப மறுமையிலு மேழ்நிரையம்
நன்மையிலை யொருபோது நாடு"

என்றும்,

'அம்மாவென வலறவா நுயிரைக் கொன்றருந்தி
யிம்மானிட ரெல்லா மின்புற்றி ருக்கின்ற
ரம்மா வெனுஞ் சத்தங்கேட்டதன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரையமென்றும் புசித்தவர்க்கென்
[சொல்வதோ!'

என்றும் சொல்லப்படும் உபதேசமொழிகளால் புலாலுண்ணும் பழக்கமுள்ளோர்கள் (புலையர்கள்) நாகடைவர்களன்றி நலன் அடையப்போவதில்லை யென்பது நன்கு விளக்கப்படுகிறது. இதனால் ஜீவகாருண்யமுள்ள உயர்குணமுடையவர்கள் மட்டும் ஆத்மஞான ஆராய்ச்சிக்கு அருகதையுடையவர்கள் என்றும், ஜீவஹிம்சையாதி பதிதகுணமுடையவர்களான ஏனையோர்கள் ஞானசாதனம்பெற முற்றிலும் அருகதையுடையவர்களல்லவென்றும் நன்றாய் ஏற்படுகிறது. (தொடரும்)

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி).

வேலைகள், தேவபூஜை; பெரியோர்களுக்கு தொண்டு செய்தல்; கிரந்தங்களை கவனித்தல் ஆகிய இவைகளில் காலத்தைச் செலவிடுதல் நலம். படித்த பாடங்களை பொருளுடன் மனதில் பதியச்செய்தல் வேண்டும். பரீக்ஷைக்குரிய பாடங்களைத் தவிர மற்றுமுள்ள நூல்களைத் தானாகவே படிப்பதால்தான் அறிவுவளரும். ஸௌகர்யமுண்டானால் தன் கிராமத்தில் தோழருடன் சேர்ந்து சாஸ்திரங்களையநுஸரித்தும், உலக வழக்கையை ஒட்டியும்நல்ல முறையில் உபன்யாஸங்கள் செய்ய வேண்டும். தக்க தோழர்கள் இன்றேல் மனதில் விஷயங்களை ஆலோசித்தல் வேண்டும். மனதில்கொண்ட விஷயங்களை எளிய நடையில் எழுதப்பழகுதல் நலம்.

பிரஸித்திபெற்ற அறிவாளிகளிடத்திலும் பரிச்ரமமும், நீண்ட ஆலோசனைகளுமிருப்பதை நாமறிவதால், யாவருக்கும் தனது பரிச்ரமமின்றிப் பாண்டித்யம்பெற முடியாதென்பதை அறிந்துகொள்ளவேண்டும். ஆகையால் கிடைத்தகாலத்தை வீணாக்கி பின் வருந்தவேண்டாமென்று மாணவர்களுக்கு அறிவிக்க முன்வருகிறோம்.

குறிப்பு:—இது வடமொழி உத்யாக பத்திரிகையை அநுஸரித்து எழுதப்பட்டது.

(கே. ஆர். வி.)

---

## ஆயுத பரிஹாரணமே ப்ரிஹாரம்.

காந்திஜியின் கருத்து.

தற்போது ஏற்பட்டுள்ள ஐரோப்பிய நெக்கடிக்கு என்ன பரிஹாரமென்று ஒரு பத்திரிகை நிருபர் காந்திஜியைக் கேட்டதற்கு, எல்லா தேசங்களும் ஆயுத பரிஹாண வேலையில் இறங்கும்படி Mr. சேம்பர்லேன் செய்வாரகில் ஹிட்லரும் அதற்கு இணங்கி விடுவது நிச்சய மென்றும், ஆயினும் இந்த அபிப்பிராயத்தைக் கேட்டு உலகம் சிரிக்குமென்றும் காந்தி பதில் கூறினாராம்.

## திருப்பதி தேவஸ்தானச் சட்டம்.

திருத்த யோஜனை.

திருப்பதி தேவஸ்தானச்சட்டத்தில் சில திருத்தங்களைச்செய்ய சென்னை ஸர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள். ஸாதாரண காலத்திலும், உத்ஸவ காலத்திலும் செய்ய வேண்டிய ஸுகாதார ஏற்பாடு விஷயமாக தேவஸ்தானத்திற்கு அதிகாரம் கொடுக்கப்படுமாம் மிருக வைத்ய ஆஸ்பத்திரி, குஷ்டரோக ஆஸ்பத்திரி, ஏழை விடுதி முதலியவைகளும் தேவஸ்தான பணத்திலிருந்து ஏற்படுத்த மேற்படி மசோதா இடமளிக்கும்.

---

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
" கடாக்ஷ சதகம் "

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.
மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
தால் சிலவு வேறு] [விலை அணா 0 8 0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜநார்தந அச்சுக்கூடம், லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.